T. S. Vijayaraghava

உங்களுக்காகவே
நகரத்தின் மத்தியில்...
விவி
புத்தம் புதிய ஷோரூம்
3

சிந்தாதரிப்பேட்டை,
எழும்பூர், புரசவாக்கம்,
பார்க் டவுன் வாசிகளின்
சௌகரியத்தை
முன்னிட்டு
திறக்கப்பட்டுள்ளது.

சென்ட்ரலுக்கு வெகு அருகில்.
மூர் மார்க்கெட்டுக்கு
எதிரில்.

பின்னி,
மபத்லால்
துணிகள்.
குழந்தைகள், பெரியவர்கள்
ரெடிமேடு ஆடைகள்.

நாளைய நாகரிகப் பாதைக்கு இன்றைய வழிகாட்டி...விவி!

வெங்கடேஷ் வஸ்திராலயா
மூர் மார்க்கெட்டுக்கு எதிரில்,
1, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-3

ADWAVE-VV-90 TAM

DIRECTORATE OF CORRESPONDENCE COURSES
PUNJABI UNIVERSITY, PATIALA

ADMISSION NOTICE

pplications are invited for admission to the following Correspondence Courses :

1. Pre-University ... ... One Year Course
2 B. A. (3-Years Degree Course Parts I, II & III)
3. Gyani ... ... One Year Course
4. Punjabi Praveshika (Elementary Course in Punjabi through English, Hindi and Punjabi Media) ... One Year Course

MEDIUM OF INSTRUCTION for Pre-University & B.A. is both Punjabi and nglish, but English medium will be allowed only to students from States other an Punjab.

So far as Medium of examination is concerned the students can choose either njabi or English or Hindi or Urdu.

It is under the consideration of the University if exemption could be granted om the study of compulsory Punjabi in B.A. (TDC) course to English Medium udents from outside Punjab and to children of Defence personnel. Final decision this regard is yet to be taken by University authorities.

THE LAST DATE FOR ADMISSION IS JULY 31, 1973.

For details ask for the Prospectus and Admission Form which can be had om the Assistant Registrar, Correspondence Courses, Punjabi University tiala on payment of Rs. 2/- (at the counter) or Rs. 2-50 (by post) through dian Postal Orders endorsed in favour of the Registrar, Punjabi University tiala.

DIRECTOR.



டபிள்யூ. ஆர். ஸ்வர்ணலதா
எழுதும் புதிய தொடர் கதை

அழைக்கும் விழிகள்...

1

பாலசந்தர் புகைப்படத்தை வெறித்துப் பார்த்தான். அந்தப் படம் மட்டும் இத்தனை நாளாக அவனுடைய பார்வையிலிருந்து தப்பியிருந்தது. ஆல்பங்களைத் துருவியபோது அது கைக்கு வந்தது. பாலசந்தரும் சந்திரசேகரனும் எடுத்துக் கொண்ட படங்களில் அதுவும் ஒன்று.

ஒரு ஹீரோவின் பெருமிதத்துடன் சேகர், படத்தில் சிரித்துக் கொண்டிருந்தான். ஆல்பத்தின் பல பக்கங்களை சேகர் அடைத்துக் கொண்டிருந்தான். இப்பொழுது எல்லாமே காலி. சேகரின் நிழல் ரேகையே தன் இடத்தில் படக்கூடாது என்ற துடிதுடிப்பில் அத்தனை படங்களையும் கிழித்துப் போட்டு விட்டான், பாலசந்தர்.

அந்தக் கடைசிப் படம் கையில் நடுங்கிக் கொண்டிருந்தது. சேகரின் சிரிப்பு தன்னைச் சித்திரவதை செய்வது போல் அவனுள்ளே தவிப்பு. நெஞ்சு குறுகுறுப்பில் கொந்தளித்தது.

சேகர் போய் விட்டான். மூன்று மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இதே இடத்தில் இருவரும் எதிரும் புதிருமாகவோ, அருகருகிலோ உட்கார்ந்துஎத்தனை விஷயங்களை விவாதித்திருக்கிறார்கள்! எத்தனை வேலைகளை அலுப்பு சலிப்பின்றி செய்து முடித்திருக்கிறார்கள்!

''சேகர், இது கொஞ்சம் சிக்கலான விஷயமாக இருக்கிறதே'' என்பான் பாலா.

''நீ அலட்டிக் கொள்ளாதே பாலா... ஐந்து நிமிஷத்தில் பிராப்ளத்தை 'சால்வ்' பண்ணுகிறேன், பார். இது ஒன்றும் தீர்க்க முடியாத பிரச்னை அல்ல.''— சேகர் சிரித்துக் கொண்டே சொல்வான். ஐந்து நிமிட சிந்தனைக்குப் பிறகு மீண்டும் சிரிப்பான்.

''பாலா, இங்கே பார்...விஷயம் முடிந்து விட்டது!'' என்றவாறு தணிந்த குரலில் அவன் முடிவு கூறுவான். அல்லது காகிதத்தில் எதையாவது எழுதிக் காட்டுவான்.

''சேகர், உனக்கு உடம்பெல்லாம் மூளையப்பா...!''

- பாலா சிரிப்பான். வெற்றிச் சிரிப்பு அந்த அறையில் எதிரொலிக்கும்.

இருவருக்குமிடையே பேதமே கிடையாது. சகோதரர்களைப் போலப் பழகினார்கள். உயிர் நண்பர்களைப் போலவும் உலவினார்கள்.

''நமக்குள் பெயரில்கூட என்ன ஒற்றுமை பார்த்தாயா,சேகர்? நானும் ஒரு சந்திரன். நீயும் ஒரு சந்திரன். இந்த பாலசந்தர் உனக்கு பாலா... சந்திரசேகரன்


மாயா..

எனக்கு சேகர். நாம் எவ்வளவு நெருங்கி வந்திருக்கிறோம்! ஆனால், நீ மட்டும்...''

''சொல்லு பாலா...''

''நீ இன்னும் ஒட்ட வேண்டும்!''

பெரிய தொழிலதிபரான தனக்கு சேகர் ஓர் ஆலோசகனைப் போல் இருந்தாலும், தொழில் விவகாரங்களில் அவன் சில பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பாலா விரும்பினான். சேகரும் ஒரு பங்காளியாக வேண்டும் என்றுகூட பாலா கருதினான். சேகர் பிடி கொடுக்காமல் சிரித்து மழுப்பி விடுவான்.

சேகர் போய்விட்டான். பாலாவின் தொழிலைப் பற்றி, அவனுடைய அந்தரங்கங்களைப் பற்றி அணுஅணுவாகத் தெரிந்து கொண்டு போய் விட்டான். அவன் எங்கே இருப்பான்? என்ன செய்து கொண்டிருப்பான்? பாலாவுக்கு எதுவுமே எட்டவில்லை.

நீண்ட பெருமூச்சு பாலாவின் நெஞ்சை அழுத்திக் கொண்டு வந்தது.

சேகர் ஏன் வெளியேறினான்? அதை நினைத்துப் பார்க்க நடுங்கியது மனம். ''சேகர், நீ போய் விடு'' என்று அவன் கூச்சல் போடவில்லை. ''நான் போகிறேன் பாலா'' என்று சேகரும் சொல்லிக்கொள்ளவில்லை. சில நிமிட உணர்ச்சி நாடகத்தின் உச்சகட்டத்திற்குப் பிறகு, பேச்சின்றி, பார்வையின்றி வெளியேறியவன்தான் சேகர். அந்த நினைப்பைப் புதைத்து வைக்கத் துடித்தான் பாலா.

மீண்டும் புகைப் படத்தைப் பார்த்தான் அவன். அதே சிரிப்பு. அதே பார்வை... கண்ணைப் பொசுக்கும் நெருப்புத் தழலாக பாலாவுக்கு அது தோன்றியது. படத்தை இரண்டாகக் கிழித்தான். ஒரு பாதியில் தன்னுடைய படம். மறு கையில் சேகரின் முகம். அதைக் கசக்கி எறிந்தான். கடைசி



ஸ்டேஷன் மாஸ்டர், மாப்பிள்ளையை ஊருக்கு அனுப்புகிறார்!...

நிழலையும் விரட்டிவிட்டதாக ஒரு நினைப்பு. படபடப்பில் முகத்தில் வேர்வை படலமிட்டிருந்தது.

நிமிர்ந்து பார்த்த பாலா, திடுக்கிட்டுப் போனான். மானேஜர் சங்கரன், எதிரே நின்றிருந்தார். அந்த நேரத்தில் அவர் எதிரே வந்து நின்றால் ஆபீஸ் நேரம் முடிந்து விட்டது என்று அர்த்தம். மாலையில் ஆபீஸ் காலியான பிறகும் அங்கேயிருந்து, மானேஜிங் டைரக்டர் பாலசந்தர் வீட்டுக்குப் புறப்பட்டதும் வெளியேறும் கடைசி நபர் அவர். சரியாக ஐந்து மணிக்கு இடத்தை விட்டு எழுந்து விடுவது பாலாவின் வழக்கம். அதற்குள் அத்தனை பைல்களையும் பைசல் செய்து விடுவான். எல்லாம் மூன்று மாதங்களுக்கு முன்புவரைதான். இப்பொழுது இடையிடையே தேக்கம். நேரத்தில் எழுந்து வீட்டுக்குப் புறப்படுவதில்லை. இதனால் பாலாவுக்கு மட்டுமல்ல, மானேஜர் சங்கரனுக்கும் கொஞ்சம் சிரமம்.

''நீங்கள் இங்கே வந்து நேரமாகிறதா?'' — பாலா சற்றே துணுக்குற்றுப் போய் மானேஜரைக் கேட்டான்.

''கொஞ்ச நாழியாதான் இங்கே...''

'ஓ! அப்படியானால் அந்தப் படத்தை நான் கிழித்து எறிந்ததை இவர் பார்த்துக் கொண்டிருந்திருப்பாரோ... பார்த்தால் தான் என்ன? சங்கரன் அபாயமில்லாத மனிதர். முதல் நபராக ஆபீசுக்கு வந்து எல்லோருக்கும் பின்னால் வீட்டுக்குப் போகும் இவருடைய சுபாவம் எனக்குத் தெரியாதா?' — பாலா தனக்குள் சமாதானம் கற்பித்துக் கொண்டான்.

''இன்னும் பத்து நிமிஷத்தில் நான் கிளம்ப வேண்டும்!''

''யெஸ்...ஸார்!'' — பணிவோடு கூறிவிட்டு சங்கரன் நகர்ந்தார். பத்து நிமிடத்திற்குப் பிறகு வீட்டுக்குக் கிளம்பலாம் என்ற மகிழ்ச்சி அவருக்கு.

ஆபீசில் அமைதி. பாலாவுக்கு அமைதி அங்கே கிடைக்கவில்லை. ஓர் உறையில் இருந்து புகைப் படத்தை உருவினான். ஆவலும் ஆர்வமும் பின்னலிட அந்தப் படத்தைப் பார்த்தான். இமை கொட்டவில்லை. இதமாகத் தென்றல், மேனியைத் தொட்டுச் சிலிர்ப்பு மூட்டுவது போல் மனத்தில் ஒரு சுகம். முகம் நிறைந்த புன்னகை... காந்தம் இழையும் கரு நீல விழிகள்... விமலா சிரித்துக் கொண்டிருந்தாள், ஒரு கதாநாயகியின் பெருமிதத்துடன்!

ஒரு வாரத்தில் அந்தப் புகைப்படத்தை எத்தனை முறை எடுத்து வைத்துப் பார்த்திருப்பான் என்பது பாலாவுக்கே தெரியாது. பத்து நாட்களுக்கு முன்பு ஒரு பார்ட்டியில் எடுக்கப்பட்ட படம் அது. பாலாவுக்கு அருகில் நின்று விமலா பேசிக் கொண்டிருக்கிறாள். பக்கத்தில் மேஜர்

ராம்நாத். அவருக்கு அருகில் தொழிலதிபர் நாராயண். அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது யாரோ எடுத்த படம். போன வாரம் மேஜர் ராம்நாத் அதை அனுப்பியிருந்தார். அந்த 'பார்ட்டி'யை பாலாவினால் மறக்க முடியவில்லை. பம்பாயிலிருந்து வந்திருந்த நாராயணுக்கு ராம்நாத் ஏற்பாடு செய்திருந்த பார்ட்டி. ஆனால் பாலாவுக்காகக் கொடுக்கப்பட்ட பார்ட்டி என்பது போல் எல்லோருமே அவனையே அன்றைக்குச் சூழ்ந்து கொண்டார்கள்.

''மிஸ்டர், பாலா... ஷி இஸ் மை டாட்டர். என்னுடைய ஒரே மகள்...'' என்று ராம்நாத், விமலாவை அவனுக்கு அறிமுகப்படுத்தினார். விழிகள் மலர, இதழ்கள் நெளிய விமலா கை கூப்பினாள். இரண்டு நிமிடம் அவள் மீது வைத்த விழியை வாங்க முடியாமல் திணறிப் போனான் பாலா. பிறகு அவன் பேசினான். அவள் பதில் சொன்னாள். சுகமான உரையாடல் நீடித்தது. பார்ட்டி முடிந்து வீட்டுக்குப் புறப்படும் வரை விமலா அவன் அருகிலேயே இருந்தாள்.

பத்து நாள் ஆகியும் அந்த நிகழ்ச்சி அப்படியே பாலாவின் உள்ளத்தில் நின்றது. விமலாவை மறக்க முடியவில்லை. அவள் நினைவு வரும்போதெல்லாம் புகைப் படத்தை எடுத்து வைத்துக் கொண்டு பார்த்தான். அந்தப் பார்வையில் அப்படி என்ன இருக்கிறது?

விமலாவைப் பார்க்கப் போகிறான். முதல் சந்திப்புக்குப் பிறகு சில முறை அவள் டெலிபோனில் பாலாவுடன் பேசினாள். ஆறு மணிக்கு ஓட்டலில் சந்திக்கலாம் என்று கூறியிருந்தாள்.

பாலா கடிகாரத்தைப் பார்த்தான். 'இப்பொழுது புறப்பட்டால் நேரம் சரியாக இருக்கும்' என்ற முணுமுணுப்புடன் எழுந்தான்.

ஆரவாரமில்லாத இடத்தில், கடற்கரைக்குச் சற்று அருகில் அமைந்திருந்த அந்த ஓட்டலுக்கு மாலை நேரங்களில் இடையிடையே பாலா வருவதுண்டு. ஒரு மாலைப் பொழுதை இனிமையாக விமலாவுடன் கழிக்கும் வாய்ப்பு கிடைத்திருப்பது அவனுக்கு மகிழ்ச்சியளித்தது.

''மிஸ் விமலா, சரியான நேரத்தில் நான் வந்து விட்டேன் அல்லவா?'' என்றான் அவன், சிரித்துக் கொண்டே.

''ஆபீஸ் வேலைகளை விட்டு விட்டு வர உங்களுக்கு மனம் வருமா என்று நினைத்தேன். நீங்கள் வந்ததில் உங்களைவிட எனக்குத்தான் மகிழ்ச்சி!'' என்றாள் அவள்.

விழிகள் மீனாகத் துள்ளிப் புரள, அவள் நெளிய விட்ட புன்னகை மின்னலாய் அவன் நெஞ்சில் கிளை பரப்பியது.

''சதா ஆபீஸ் பைல்களில் மூழ்கியிருக்கும் உங்களைச் சில நேரம் அதிலிருந்து மீள வைக்க முடிந்திருக்கிறதே என்ற மகிழ்ச்சி எனக்கு...!'' — மீண்டும் விமலாவே பேசினாள்.

''ஆனால், நான் ஒரேயடியாக அலட்டிக் கொள்ளக் கூடிய 'டைப்' அல்ல...'' என்றவாறு பாலா சிரித்தான்.

இருவரும் உட்கார்ந்தபடி பேசினார்கள். பானத்தைக் கையில் பிடித்தபடி வானத்தையும் நீலக் கடலையும் பார்த்தவாறு நின்று நின்று பேசினார்கள். இடையிடையே மௌனமும் இடம் பிடித்துக் கொண்டது. பார்வைகள் மட்டுமே சில நேரம் பேசிக் கொண்டன.

பாலாவுக்கு இது புதிய இடம் அல்ல. சேகரும் அவனும் அடிக்கடி வந்திருக்கிறார்கள். மணிக்கணக்கில் எத்தனையோ விஷயங்களைப் பேசியிருக்கிறார்கள். சேகரைப் பற்றிய நினைவு மெதுவாகத் தலை தூக்கிய போது பாலாவின் முகம் இருண்டது. மனத் தவிப்பு முகத்தில் தெரிந்தது. விமலா அவனைக் கவனித்தாள்.

''என்ன சிந்தனை? மறுபடியும் ஆபீஸ், பிசினஸ் என்ற வட்டத்திற்குள் மனம் போய் விட்டதா?'' என்றாள்.

''இல்லை, மிஸ் விமலா...'' என்றவாறு புன்னகையை அவன் வரவழைத்துக் கொண்டான்.

தற்பொழுது கைவசமுள்ள

பிரசுரங்கள்

	விலை	அஞ்சல் கட்டணம்
இதயம் பேசுகிறது I (அமெரிக்கா)	2-50	1-35
இதயம் பேசுகிறது II (ஜப்பான்)	2-50	1-20
இதயம் பேசுகிறது IIa (ஆஸ்திரேலியா)	2-50	1-30
அருணாசல மகிமை பாகம் III	2-50	1-25
ஸ்ரீசைலத்தில் ஸ்ரீசங்கரர்	1-50	1-15
காதலித்தால் போதுமா?	3-00	1-35
சோஷலிச நாடுகளில் மக்கள் தலைவர்	1-50	1-15
மின்னல் மழை மோகினி	8-00	1-40

ஆனந்த விகடன், சென்னை-2

''உங்களைப் பார்த்தால் பொறுமையாக இருக்கிறது. பெருமையாகவும் இருக்கிறது!''

''ஏன்?'' என்றான் பாலா.

''என் அப்பா சொன்னதை அப்படியே சொல்ல வேண்டும் போல் இருக்கிறது!''

''என்ன சொன்னார்?''


''மிஸ்டர் பாலசந்தர் அபாரமான திறமைசாலி. இளம் வயதிலேயே அற்புதமாகத் தொழில்களைப் பெருக்கியிருக்கிறார். லட்சாதிபதியானாலும் எவ்வளவு அடக்கமாக இருக்கிறார்! பாலசந்தர் பிசினஸ் மாக்னெட் மட்டுமல்ல, ஒரு கிரேட் பெர்சனாலிட்டியும்கூட...'' — புன்னகை மலர, விமலா சொல்லிக்கொண்டே போனாள்.

''ஓ! இது அப்பா சொன்னதா, இல்லை; மிஸ் விமலாவின் காம்ப்ளிமெண்ட்ஸா?''

பாலா சிரித்தான், அவளும் சிரித்தாள்.

''உண்மையைத்தானே சொல்கிறேன்... எவ்வளவோ சொல்ல வேண்டும்போல் இருக்கிறது!'' என்றாள் விமலா. ஆனால் அதற்கு மேல் அவள் பேசவில்லை. பார்வைதான் பேசியது. பாலாவும் வாய் திறக்கவில்லை. தேனீயாக அவன் விழிகள் வட்டமிட்டன அந்த முகமலரில். அந்த விழிகள்.. மதுர இதழ்கள்... இழைத்தெடுத்த நாசி.. சங்குக் கழுத்து...!

அவள் சற்றே தலை குனிந்திருந்தாள். மையலூட்டும் அந்த இளமைச் செழிப்பை அவன் கண்கள் அள்ளிக் கொண்டிருந்தன.



''எனக்கு ஜாதின்னாலே பிடிக்காதுப்பா .... ! வேறே பூ ஒண்ணும் இல்லியா?...!''

''இருங்க,என் பெண்ஜாதியைக் கேட்டுச் சொல்றேன்?''

''...?......?......?''

மெல்லத் தலை தூக்கினாள் விமலா. விழிகளில் நாணச் சிவப்பேறி இருந்தது. காற்றில் படபடத்துக் கொண்டிருந்த 'டை', முகத்தில் வீசி அடித்தது. பாலா விழிப்புக்கு வந்தான். நெஞ்சில் இப்பொழுது அழுத்தமோ, சுமையோ கவலையோ இல்லை போன்ற நினைப்பு அவனுக்கு. விமலாவின் பார்வை அவற்றையெல்லாம் விரட்டி விட்டதோ என்று எண்ணினான். உள்ளத்தின் ஓர் ஓரத்தில் புதிதாக ஊற்றுக் கண் ஒன்று வெடித்தது. 'விமலா அருகிலிருப்பது ஆதரவாக அமையுமோ? அவளும் அதை விரும்புவாளோ?'

''நீங்கள் எப்பொழுது எங்கள் வீட்டுக்கு வரப் போகிறீர்கள்?'' — விமலா கேட்டாள். அதில் உரிமை இழைந்தது.

''பெரிய பிசினஸ் மாக்னெட் என்றால் இப்படித்தான். நினைத்த இடத்திற்குப் போகத் தயக்கமாக இருக்கலாம்...'' அவள் செல்லமாகச் சிணுங்கினாள்.

''எனக்கு ஃபார்மாலிடியெல்லாம் பிடிக்காது, மிஸ் விமலா.. அவசியமானால் எங்கும் போய் வருவேன்.''

''ஓ! அவசியம் வந்தால்தான் என் வீட்டிற்கும் வருவீர்கள் என்று சொல்லுங்கள்.''

''இல்லை. அழைத்தாலே வருவேன்!''

உற்சாகத்தில் அவள் மனம் துள்ளியது.

''உங்களுக்காகக் கதவு எப்பொழுதும் திறந்தேயிருக்கிறது... வருவீர்களா?''

அவன்,புன்னகையை பதிலாகப் படைத்தான். அவள் பூவாய் மலர்ந்து போனாள்.

வெயிட்டர் அருகே வந்து ஒரு காகிதத்தை வைத்து விட்டுப் போனான். பாலாவுக்கு வந்த ஒரு டெலிபோன் மெஸேஜ் அது. அவசரமாக அதைப் பிரித்தான். வீட்டிலிருந்து தகவல் வந்திருந்தது. உடனே புறப்பட்டு வரும்படி தெரிவித்திருந்தார்கள்.

பாலாவின் முகத்தில் பதற்றம்.

''என்ன மெஸேஜ்?'' என்றாள் விமலா.

''வீட்டில் ஒரு முக்கிய வேலை...'' — பாலாவின் குரலில் உற்சாகம் இல்லை.

''புறப்படலாம்... உங்கள் நேரத்தை அதிகமாக எடுத்துக் கொண்டு விட்டேன்'' என்றவாறு விமலா விடை பெற்றுக் கொண்டாள்.

கால்மணி நேரத்திற்குப் பிறகு வீட்டிற்கு வந்து சேர்ந்த பாலசந்தர் போர்ட்டிகோவில் காரை நிறுத்திவிட்டு, மாடிப்படிகளைத் தாண்டி அறையை நெருங்கியபோது,'வீல்' என்ற அலறல்... தொடர்ந்து ஒரு பெண்ணின் முனகல்!

ஜன்னல் வழியாக அந்தப் பெண்ணைப் பார்த்துவிட்டு ''ஹேமா!'' என்று கூவினான் பாலா.

— (தொடரும்.)



கனஸ் போட்டியில் வெற்றி பெற - மொனேகோ
பிஸ்கட் ஒன்று-ருசித்துச் சாப்பிடும் விதம் இரண்டு
அப்படியே சாப்பிட
மிகவும்
அருமையானவை
மொனேகோ-கரகரப்புமிக்க
உப்பு பிஸ்கட். தனித்தும்
சாப்பிடுங்கள் அல்லது
மனதிற்கு உகந்த
பொருட்களை அதன் மீது
இட்டு சாப்பிடுங்கள்.
எப்பொழுதும் மொனேகோ
கேட்டு வாங்கி போட்டியில்
வெற்றி பெறுங்கள்.
MONACO
MONACO
மனதிற்கு உகந்த
பொருள்களை இட்டு
சாப்பிடவும்
மிகப்பிரமாத -
மானவை
பார்லே
மொனேகோ
இந்தியாவின் மிக அதிகமாக
விற்பனையாகும் உப்பு
பிஸ்கட்டுகள்.
everest/256c/PP Tam

பதற்றத்தோடு அறைக்கு வந்தான் பாலசந்தர். மங்கிய வெளிச்சத்தில் ஹேமா நின்றிருந்த கோலம் அவன் நெஞ்சைப் பிசைந்தது.

''ஹேமா...!''—சன்னமான குரலில் ஒரு நடுக்கம். பிரமை பிடித்தவள் போல் அவள் இயக்கமின்றி பாலசந்தரைப் பார்த்தாள். இமை கொட்டவில்லை. அந்த இரண்டு விழிகளும் அவன் இதயத்தைத் துளைத் தெடுத்தன.

''ஹேமா, என்ன செய்கிறது? ஏன் அப்படிப் பார்க்கிறாய்?''—பாலா தழுதழுப் போடு கேட்டான். பதில் இல்லை.

வெளியேற விரும்பும் துடிப்புடன் பக்கத்தில் நின்றிருந்தார் டாக்டர் பிரகாசம்.

''எக்ஸ்கியூஸ் மீ, மிஸ்டர் பாலசந்தர்... நான் வெளியே காத்திருக்கிறேன்'' என்றவாறு அவர் நகர்ந்தார்.

பாலசந்தர், ஹேமாவை நோக்கி இரண்டடி நகர்ந்து போனான். விழிகள் மருள மருள அவனைப் பார்த்தாள் ஹேமா. மேனி நடுங்கியது. சற்று முன் ஏன் அலறினாள்? இப்பொழுது வாயடைத்து நிற்கிறாளே, ஏன்?

''ஹேமா...''—மீண்டும் பாலசந்தர் அழைத்தான்.

இலக்கு இல்லாமல் அறையை அவள் வெறித்துப் பார்த்தாள். பாலசந்தர் அருகே வந்தான். ஆதரவோடு தோள்களைப் பற்றினான். ஹேமாவின் கண்கள் கலங்கின. இமைகளை இறுக மூடியவாறு அவள் சாய்ந்தாள், மெது மெதுவாக. கட்டிலில் ஹேமாவைக் கிடத்திவிட்டு நெடுமூச்சு விட்டான். மூடிய இமைகளை அவள் திறக்கவில்லை.

டாக்டர் பிரகாசம் சோர்ந்து போய் வெளியே காத்திருந்தார்.

''ஹேமாவுக்கு எப்படி இருக்கிறது டாக்டர்?''

பாலசந்தர் அவரருகே வந்து அமர்ந்தான்.

''நீங்கள் இப்பொழுது பார்க்கவில்லையா, தினமும் இப்படித்தான். சிகிச்சை என்றாலே ஹேமாவுக்கு நடுக்கம் வந்து விடுகிறது. பக்கத்தில் வந்தால் ஒரே கூச்சல். நானே பயந்து விடுகிறேன்...''

டாக்டர் அவனைக் கவனித்தார். பாலசந்தரின் படபடப்பும், மனக் கலக்கமும் அவருக்குப் புரிந்தன.

''இன்றைக்கு உச்சமாகி விட்டது. ஹேமாவைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால்தான் உங்களுக்கு மெஸேஜ் கொடுக்கச் சொன்னேன்'' என்றார் டாக்டர்.

பிரகாசம் பிரபலமான மனநோய்மருத்துவர். ஹேமாவைக் குணப்படுத்த மனப்பூர்வமாக அவர் முயன்று வந்திருப்பது பாலசந்தருக்குத் தெரியும். ஹேமாவை பழைய படிக்கு இயங்க வைக்க அவரால் முடியும் என்று பாலா நம்பினான். அந்த நம்பிக்கை இப்பொழுது...?

''என்னால் எதையும் சாதிக்க முடியும் என்று தோன்றவில்லை மிஸ்டர் பாலசந்தர். வேறு ஏதாவது முயற்சி செய்து பார்ப்பது நல்லது...!'' என்று அவர் சொன்னார். இது பாலா எதிர்பாராத ஒரு பதில். நம்பிக்கைப் பிடி தளர்ந்தது.

ஹேமாவுக்கு எந்த அபிவிருத்தியும் ஏற்படவில்லை. அவள் இப்படியேதான் இருக்க வேண்டுமா? அவசியமானால் வந்து பார்ப்பதாகச் சொல்லிவிட்டு டாக்டர் பிரகாசம் கிளம்பி விட்டார்.

ஹேமா சிரிக்கமாட்டாளா? சிரிக்கவில்லை. பேசக் கூடாதா? பேசவில்லை. அந்தப் பெரிய பங்களாவைச் சுற்றிச் சுற்றி வருவாளே... சுற்றுவதில்லை. சூன்யம், அமைதி. அறையிலேயே முடங்கிக் கிடந்தாள். சிறகொடிந்த பறவையா அவள்? 'இல்லை, இல்லை' என்று பாலசந்தரின் இதயம் கூவியது.

ஹேமாவுக்கு என்ன வந்தது? நினைத்தால் அவன் நெஞ்சில் சூறாவளி சுழல்கிறது. ஹேமாவுக்கு எல்லாமே வந்திருக்கிறது. அதனால்தான் அவள் அழுகிறாள். அழுகைதான் அவளுக்குச் சிரிப்போ? அடிக்கடி முனகல் வெடிக்கிறது. அதுதான் முறுவலோ? ஹேமாவைப் பார்க்கும்போது அவனுள்ளே பீதி அலை மோதுகிறது.

எத்தனை அழகாகச் சிரிப்பாள் ஹேமா. அளவாகப் பேசினாலும் நெஞ்செல்லாம் அமுதைப் பொழியும் மொழியாக அல்லவா இருக்கும்! இன்னும் ஒரு வருடம் ஆகவில்லை. செல்வத்தோடு செல்வம் சேர பாலசந்தரின் இல்லத்திற்கு வந்தாள். அடக்கமான அழகு. ஆடம்பரமோ செருக்கோ கிடையாது. அவள் அவனுக்கு ஒரு வியப்பாக இருந்தாள். அதனால் அவள் மீது அபாரமான மதிப்பு. கூடவே ஒரு மனத் தாங்கல்.

''ஹேமா, ஒரேயடியாக நீ ஏன் வெட்கப்படுகிறாய்? ஒரு பெரிய இண்டஸ்ட்ரியலிஸ்ட், பிசினஸ் மாக்னெட்

...என்னை எல்லோரும் புகழ்கிருர்கள். ...ந்த் தகுந்தபடி நான் நடந்து ...ள வேண்டியிருக்கிறது. அதனுல் ...ந்த் தகுந்தபடி நீயும்...''

...ன் நிறுத்திய இடத்திலிருந்து அவளு ...நினைவு தொடரும். கணவனுக்கேற்ற ...வீனமாக, பகட்டாக, ஒரு தொழிலதி ...நாகரிக மனைவியாக, தன்னை மாற்றிக் ...ள வேண்டும்... அதுதான் பால...ன் விருப்பம் என்பது ஹேமாவுக்கு ...தும். அவள் செவி சாய்ப்பாள்.

...மாவை வெகு சீக்கிரத்தில் தன் ...த அழைத்து வந்து விட்டான் பால... பணிந்து கொடுக்கும் அவள் சுபா...லாவுக்குப் பிடித்தது. 'என் ஹேமா எத்தனை இனியவள்..!-அவனுக்குப் பூரிப்பு. 'ஒரு பணக்காரப் பெண்ணிடம் இத்தனை பணிவா? இத்தனை அடக்கமா?' என்று பாலாவிடம் வியந்து போயிருக்கிருன் சேகர்.

''ஹேமா, சேகரைப்பற்றி என்ன நினைக்கிருய்?''—பாலா ஒரு நாள் கேட்டான். அவளிடமிருந்து பதில் கிடைப்பது சிரமம்.

''சேகரும் நானும் பிரிக்க முடியாதபடி பழகி விட்டோம். அவன் நம் குடும்பத்தில் ஒருவனைப்போல...நீ அந்நியமாக நினைக்கக் கூடாது. நீ முகம் கொடுத்துப் பேசாவிட்டால் அவன் மனம் வருந்தக் கூடும்..!''

ஹேமா தயங்கினுள். சேகர், பாலாவிடம் பேசுவதற்காக வீட்டுக்கு வரும்போதெல்லாம் அவள் ஒதுங்கிக் கொண்டாள். ஒன்றிரண்டு வார்த்தை பேசுவதோடு நிறுத்திக் கொண்டாள். இதைக் கவனித்தபிறகு பாலா, சேகரைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான். அவனும், சேகரும், அவளுமாக உட்கார்ந்து பேசுவதும், உண்பதும் அதற்குப் பிறகு சகஜமாகி விட்டது.

...பின்யூ.ஆர்.ஸ்வர்ணலதா



மணமாகி பல மாதங்கள் நழுவி விட்டன. ஹேமாவை எங்குமே பாலசந்தர் அழைத்துப் போகவில்லை. தொழிலில் அத்தனை உற்சாகம். வேலையில் இருக்கும் உற்சாகம், வாழ்க்கையிலும் இருக்க வேண்டும் என்று சேகர் சுட்டிக் காட்டிக் கொண்டே இருந்தான்.

''ஹனிமூன் என்று தான் கிளம்பவில்லை. ஓய்வாக ஹேமாவுடன் எங்காவது போய் வந்தால் என்ன?'' என்ருன் சேகர்.

சேகரிடமிருந்து தப்ப முடியவில்லை.

''ஒரு வாரமோ, பத்து நாளோ.... போய் வாருங்கள். இங்கே நான் இருந்து கவனித்துக் கொள்ள மாட்டேனு?'' என்ருன் அவன்.

பாலசந்தருக்கு அது சரியாகவே பட்டது. பகலெல்லாம் ஆபீஸில் போய் விடுகிறது. ஹேமாவுடன் பேசும் நேரம் சொற்பம். தொழிலை மறந்து சற்று

தூரமாகப் போய் விட்டால் ஹேமாவிடம் எவ்வளவோ பேசி மகிழலாமே என்று நினைத்தான்.

''பக்கத்தில் எங்கேயாவது போனால் அடுத்த நாளே கம்பெனியைப் பார்க்க ஓடி வந்து விடுவாய். தூரமாகவே போய் வாருங்கள்'' என்று சேகர் கூறினான்.

ஹேமாவும் பாலசந்தரும் காஷ்மீருக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

நான்கைந்து நாட்களுக்குப் பிறகு பாலசந்தர், சேகருக்கு ஒரு தந்தி கொடுத்தான். சேகர் அதை எதிர்பார்க்கவில்லை. அவனையும் புறப்பட்டு வரச் சொல்லியிருந்தான் பாலா. எதையாவது பேச விரும்பித்தான் பாலா அழைத்திருப்பான் என்பது சேகருக்குப் புரியும்.

சேகரை இங்கே எதற்காக அழைக்கிறார் என்று ஹேமா வியக்கவே செய்தாள்! 'சேகர் மீது இவருக்கு இத்தனை நம்பிக்கையா? ஒட்டுறவா? இந்த நம்பிக்கை இறுதிவரை நிற்குமா? நிலைக்குமா?'— ஹேமா ஏனோ இப்படியெல்லாம் எண்ணிப் பார்த்தாள்.

சேகர் வந்து சேர்ந்தான்.

''இது வெறும் ஓய்வாக இருந்துவிடக் கூடாது. உருப்படியானதாகவும் இருக்க வேண்டும்...!'' என்றான் பாலா.

''அதில் சந்தேகம் வேறு வந்து விட்டதா ஹேமா பக்கத்தில் இருக்கும்போது..?'' என்று கேலிச் சிரிப்பைக் கொட்டினான் சேகர்.

''தொழில் திட்டங்களைப் பற்றியும் சி... திக்கலாம் என்று நினைத்தேன். நீயில்லாமல் ஒரு வாரத்தை ஓட்டியிருக்கிறேனே, போதாதா?''

''ஹேமாவுக்காக ஒரு வாரத்தைத்தான் உன்னால் ஒதுக்க முடியுமோ?'' என்றான் சேகர்.

''ஒரு வாரமென்ன, எப்பொழுதும் அருகில்தானே இருக்கிறோம்!''-பாலசந்தர், ஹேமாவைப் பார்த்தபடி சொன்னான். அவள் புன்னகை புரிந்தாள், நாணத் திரையோடு.

மற்றொரு நாள். சாப்பாட்டுக்குப் பிறகு ஹேமா, ஓட்டல் அறையில் சற்றே கண்ணை மூடி யிருந்தாள். வேறோர் அறையில் சேகர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான். பகலில் பாலாவுக்கு உறக்கம் வருவதில்லை.

அறையில் ஓய்ந்திருப்பதை விட வெளியே நடந்து விட்டு வரலாம்போல் இருந்தது. ஹேமாவை எழுப்பாமல் அவன் மட்டும் ஓட்டலை விட்டுக் கிளம்பினான்.

அவள் உறங்கும் அழகு அவன் உள்ளத்தில் நின்றது. இந்த ஏழெட்டு நாட்களில்

''சுந்தர்... ...

உங்கள் நினைவின் நிழலாக... ...

இந்தப் பத்து ரூபாயில் உங்கள் கையெழுத்தைப் போட்டுத் தாருங்கள்...''

''நானே உன்னுடன் உன் உயிராக இருக்கும்போது, கேவலம் இந்தக் கையெழுத்து எதற்கு நளினி?..''

''நம் காதல் கனவாகிவிடும் நாள் நெருங்கி விட்டது சுந்தர். என் தந்தை உங்களுக்கு என்னை மண முடிக்க மறுத்து விட்டார் ...நீங்கள் ஓர் எழுத்தாளராம்... கற்பனையில் காலத்தைக் கழிப்பவராம்... உருப்படியாக எதையும் செய்யத் தெரியாதவராம்.

'அவருக்கு வரும் மாப்பிள்ளை...அவர் தொழிலை ஏற்று நடத்தும்...சாமர்த்திய முள்ள, எதையும் சாதிக்கும் திறமையுள்ளவராக இருக்க வேண்டுமாம்...''

அந்தக் குளிர்சாதன ஓட்டலில் மெல்லிய வெளிச்சத்தில் அவர்கள் உட்கார்ந்து இருந்தது யாருக்கும் சுலபமாகக் கண்ணில் படாது... மனத்தைச் சுண்டி இழுக்கும் அந்த ஆங்கில இசை, நளினியை மயக்கியதாகத் தெரியவில்லை...

''சுந்தர்''... என்று அவள் வாயில் 'கர்சிப்' புதைத்துக் கொண்டு அழுவதைச் சுந்தரால் தாங்க முடியவில்லை.

தட்டில் 'பில்லை' வைத்துவிட்டுப்போனான் 'வெயிட்டர்'.



பில்லுக்குப் பணம் எவ்வளவு என்றுகூடப் பார்க்காமல் பத்து ரூபாயை வைத்து விட்டு...

''லெட்டஸ் கோ'' என்று எழுந்தான்.

நளினியும் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள்.

சுந்தர் அந்த நிறை சொல்லும் எந்திரத்தின் மீது நின்று ஒரு பத்து பைசாவைத் திணித்தான்.

ஹேமாவும் அவனும் எத்தனை மகிழ்ச்சியாக இருந்திருக்கிறார்கள்! மணமான புதிதிலேயே இப்படி எங்காவது அழைத்துப் போயிருக்க வேண்டுமோ!

இந்த அனுபவம் இனித்தது. அவளுக்கும் தான். ஹேமாவின் மேனியெல்லாம் மலர்ச்சி. முகமெல்லாம் புன்னகைக் கோலம். கண்ணில் எத்தனை மின்னல்கள். பனியில் குளித்த பட்டு ரோஜாவாக அவள் சிரித்து நின்றிருந்தாள்.

''ஹேமா, இது காலங் கடந்த ஒரு தனிலவு. ஆனாலும் இதிலும் ஒரு சுகம் இருக்கிறது, இல்லையா?'' என்றான் அவன்.

அவள் நாணிக் கண் புதைத்து மார்பில் சாய்ந்து கொண்டாள். பாலசந்தர் அவளை அள்ளியணைத்துக் கொண்டான். தினம் ஒரு சுகம்....

தொழில் நினைவாகவே இருந்து இயந்திரமாகிக் கொண்டிருந்த தன்னை அப்படையச் செய்து, வாழ்க்கைச் சுகங்களையும் இந்த இடைவெளியில் ஹேமா தனக்குச் சொல்லித் தந்திருக்கிறாள் என்று பாலசந்தர் நினைத்தான். இத்தனை ரசனைகளை, ரகசியங்களை ஹேமா எங்கே ஒளித்து வைத்திருந்தாள்?

ரோஜாவின் மெல்லிய சுகந்தமாய் ஹேமாவைப் பற்றிய நினைவுகள் மனமெல்லாம் சுகமாகச் சூழ்ந்து கொண்டிருந்தன.

சேகரையும் அவனால் எண்ணாமல் இருக்க முடியவில்லை. அவன் தூண்டியிரா விட்டால் ஹேமாவும் பாலாவும் இங்கே வந்திருக்கப் போவதில்லை. வாழ்க்கைச்சுவைகளை வண்ண வண்ணமாக உணர்ந்திருக்க முடியுமா? தன்னைவிட எல்லா விஷயத்திலும் சேகர் ஒருபடி உயர்ந்துநிற்பவன் என்ற நினைப்பு பாலசந்தருக்கு. 'அப்படியானால் 'இந்த' அனுபவமும் கூட..? எத்தனையோ விஷயத்தில் அனுபவசாலியான அவன், இந்த...' பாலசந்தரின் எண்ணத்தில் ஏனோ இப்படி ஒரு மின்னல் பளிச்சிட்டது. சேகருக்கு மணமாகியிருந்தால் அவனும் தன்னைப் போல் வந்திருக்கலாமே என்று நினைத்தான் பாலா. சிலமுறை சேகரிடம் திருமணப் பேச்சை எடுத்ததுண்டு. சேகர் அக்கறை காட்டியதில்லையே!

ஓட்டலுக்குத் திரும்பினான் பாலசந்தர். ஓசைப்படாமல் ஹேமாவின் அருகில் போய், அவள் கண்ணைப் பொத்தி விளையாட வேண்டும் என்ற ஆசை. துள்ளும் மகிழ்ச்சியுடன் அறைக் கதவை அவன் தள்ளிய போது, மலை முகடு தகர்ந்து தலையில் விழுந்தது போல் நிலைகுலைந்து போனான்.

ஹேமா படுக்கையில் அலங்கோலமாகக் கிடந்தாள்.

அருகில் சேகர்.... (தொடரும்)

'லொட்' என்று கையில் ஒரு சிறு அட்டைத் துண்டு விழுந்தது.

அதில் நிறைமட்டும் எழுதியிருக்கவில்லை. 'உன் விருப்பப்படியே திருமணம் நடக்கும்' என்றும் எழுதியிருந்தது.

''ஹை... நளினி..... பார்த்தாயா? உன் விருப்பப்படியே உன் திருமணம் நடக்கும்'' என்று வந்திருக்கிறது.

''இந்தா... நீயும் உன் அதிர்ஷ்டத்தைப் பார்...'' நளினியும் அந்த நிறை சொல்லும் எந்திரத்தில் நின்றாள். பத்து பைசாவைத் திணித்தாள். அவளுக்கும் நிறையுடன் 'உன் விருப்பப்படியே திருமணம் நடக்கும்' என்று வந்தது.

''பார்த்தாயா.. நளினி... நான் எழுத்தாளன்தான்... எனக்கு இதில் ... இந்த ஜோசியத்தில் எல்லாம் நம்பிக்கை இல்லைதான். இருந்தாலும் ஏதோ ஒன்று நம்மை இணைய வைக்கும்.

''நீயே காரை எடு, நீயே டிரைவ் பண்ணு, நாம் ஆகாயத்தில் பறப்போம்.''

கார், சுந்தரையும் நளினியையும் சுமந்து பறந்தது.

★

''என்ன முதலாளி'' என்ற குரல் கேட்டுத் திரும்பினார் அந்த ஓட்டல் முதலாளி.

வழுக்கைத் தலையும், கடுமையான முகத்துடனும் நின்று இருந்தார் நளினியின் தந்தை.

''அந்த வெட்டிப் பொழுது போக்குபவன்... கற்பனைவாதி... என் பெண்ணை அழைத்து வந்தானா?'' என்று உறுமினார்.

''அழைத்து வந்ததோடல்லாமல்..... நிறை காட்டும் இயந்திரத்தில் நிறை மட்டும் பார்க்கவில்லை, ஜோசியமும் பார்த்தார்கள்.''

''ஜோசியம் என்ன வந்தது?''—கோபம் அடங்கவில்லை அவருக்கு..

'இருவருக்கும் நீங்கள் விரும்பியவரையே திருமணம் செய்வீர்கள்' என்றுதான் வந்தது.

''அப்படியா? ஆச்சரியமாக இருக்கிறதே!''


''இதில் என்ன ஆச்சரியம். சுந்தர் சொல்லி நான்தானே இருவருக்கும் அப்படி வரும்படி அட்டையை அடுக்கி வைத்தேன்...''

ஓட்டல் முதலாளி குழைந்தார், நெளிந்தார்.

நளினி தந்தையின் முகம் மலர்ந்தது. ''இத்தனை சாதுரியம் உள்ள அவன் எழுத்தாளன் மட்டுமல்ல. என் தொழிற்சாலையை நடத்தக் கூடிய திறமைசாலி கூட. சுந்தர்தான் என் மாப்பிள்ளை'' என்றார்.

இனி என்ன, அதோ! சுந்தரும், நளினியும் காரில் 'ஹனிமூனு'க்கு ஊட்டிக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

—பாரேதி.


எந்தப் பெண்ணிற்கு அவள் தாய் இன்க்ரிமின்*
கொடுக்கிறாள் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்!
உங்கள் ஊகம் சரிதான்!
ட்ராப்ஸ்—
2மாதம் முதல் 2 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு.
ஸிரப்—
14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு.
அடேயப்பா!
வளரும்குழந்தைகளுக்கு விசேஷ டானிக்
இன்க்ரிமின்* டானிக்
அதிகப்படி உணவை அதிகப்படி வளர்ச்சியாக மாற்றுகிறது
டாக்டர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர் Lederle
ஸயனமைட் இந்தியா லிமிடெட்டின் ஒரு பிரிவு
* அமெரிக்கன் ஸயனமைட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்
Incremin* syrup
TONIC APPETITE STIMULANT
SISTA'S-INC-1011 TAM


ஐடெக்ஸ்
டீலக்ஸ்
குங்குமம்
பவுடர்
முப்பது வருடங்களுக்கு மேலாக புகழ் பெற்ற ஐடெக்ஸ் கண்மை தயாரிப்போரிடமிருந்து உங்களுக்கு மற்றும் ஒரு அழகு சாதனம்.
ஐடெக்ஸ்
டீலக்ஸ் குங்குமம்
பவுடர்
மெழுகு தேவையில்லை — நேரடியாக இட்டுக்கொள்ளலாம். பிளாஸ்டிக் டப்பிகளில் பன்னிரண்டு கலர்களில் எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.
Aravind Laboratories
MADRAS-33

அலைகளும் விழிகள்.

3

ஹேமா, படுக்கையில் விம்மிக் குலுங்கிக் கொண்டிருந்தாள். தரையில் பறித்துப் போட்ட மலரைப் போல் தலையணையில் முகம் புதைத்திருந்தாள். அந்தக் காட்சியைப் பார்க்கச் சகிக்கவில்லை பாலசந்தருக்கு.

சேகரைத் திரும்பிப் பார்த்தான். அவன் குனிந்த தலை நிமிராமல், உடம்பெல்லாம் குறுகிப் போய் நின்றிருந்தான், ஒரு குற்றவாளியைப் போல். அவனுக்கே உரிய கம்பீரம் எங்கே? கண்ணில் பொங்கும் சுடர் எங்கே? அவன் குற்றவாளியாகத் தான் நின்று கொண்டிருக்கிறானா?

பஞ்சில் தீப்பொறி விழுந்தது போல், பாலசந்தரின் நெஞ்சில் நிமிஷத்தில் ஒரு நஞ்சுத் துளி விழுந்தது. சீற்றம் பொங்கி வழிந்தது. தாபமும் தவிப்பும் மூண்டன. உள்ளுக்குள் ஒரு போராட்டம்.

''ஹேமா...ஹேமா...!''—பாலசந்தரின் கண்டத்திலிருந்து குரல் விம்மி வெடித்தது.

அவள் அசையவில்லை. திரும்பிப் பார்க்கவில்லை.

சேகரின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கக் கூசினான் பாலசந்தர். எந்த முகத்தோடு பாலாவைப் பார்ப்பது என்ற திராணியில்லாதவன்போல் சேகரும் சிலையாக நின்றிருந்தான்.

''ஹேமா...!''—மீண்டும் குரல் கொடுத்தான் பாலசந்தர்.

மௌனம். அந்த மௌனம் பாலாவை ஆட்டி வைத்தது. அதிர்ச்சிக் கனலை மூட்டி விட்டது.

ஹேமா திரும்பிப் பார்க்க மாட்டாளா? பதில் சொல்லமாட்டாளா? அவளை நோக்கி முன்னுக்கு அடியெடுத்து வைத்தான் பாலா. சேகர் ஓசையின்றி பின்வாங்கினான்.

என்ன நடந்தது?

பாலசந்தரின் நெஞ்சில் கலக்கம் கவிந்தது. கண்ணில் கண்ணீர்த் திரையிட்டது. சொல்வதற்கு என்ன இருக்கிறது என்று நினைத்துத்தான் ஹேமா ஊமையாகி விட்டாளோ? அவளுடைய மௌனம் அதை உறுதிப்படுத்துகிறதோ? இல்லையென்றால் சேகர் அங்கிருந்து நழுவியிருப்பானா?

முட்டி மோதிக் கொண்டு ஓலமிட வேண்டும் போல் இருந்தது பாலசந்தருக்கு. தன்னைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு, நெஞ்சை அழுத்தும் சுமையை யாராவது இறக்கி வைக்க வேண்டும்போல் இருந்தது. தனக்கென்று இப்பொழுது யாருமில்லை என்ற வெறுமையில் மனம் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தது.

'தேன் நிலவு' கானலாகிப் போய் விட்டது. வண்ண வண்ணமாக மனத்தில் திரட்டி வைத்திருந்த இன்பக் கோலங்கள் நிமிஷத்தில் அழிந்து சிதைந்தன. 'ஹேமாவுடன் இதற்காகத்தானா இங்கே வந்தேன்?'—ஓலம் அடங்கவில்லை.

'தன்னை எதிர்பார்க்க வேண்டாம்' என்று ஒரு செய்தியை மட்டும் விட்டு விட்டு ஓட்டலிலிருந்து சேகர் போய் விட்டான். கலத்த மனத்தோடு மறுநாளே ஹேமாவுடன் காஷ்மீரை விட்டுப் புறப்பட்டான் பாலசந்தர். ஹேமா பொலிவு இழந்திருந்தாள். தெளிவு மறைந்து போய் விட்டிருந்தது. 'ஹேமாவுக்கு என்ன ஆயிற்று? ஏன் இப்படி இருக்கிறாள்?'—வீட்டில் அடுக்கடுக்காகக் கேள்வி போட்டார்கள்.

''ஹேமாவுக்குப் பயணம் ஒத்துக் கொள்ளவில்லை. உடம்பு சரியில்லை'' என்றான் பாலா. எத்தனை நாள் உடம்பு சரியில்லாமல் இருக்கும்? அன்றைக்குப் படுக்கையில் விழுந்தவள் வெளியே அடியெடுத்து வைக்கவில்லை. அவள் தனக்குள் அழுதாள்; விம்மினாள்; அனிச்சையாக வாய்விட்டுக் கதறவும் செய்தாள்.

ஹேமாவுக்கு மனக் கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்று வீட்டில் முடிவு செய்தார்கள்.



டாக்டர் பிரகாசம் சிகிச்சைக்காக வந்து போய்க்கொண்டிருந்தார். தெருவெல்லாம் இப்பொழுது ஹேமாவைப் பற்றிப் பேச்சு. மூளைக் கோளாறு..சித்தப் பிரமை . ஹிஸ்டீரியா-இப்படி. ஆளுக்கொன்றாகப் பேசினார்கள். ஆனால் அனுதாபம் அவற்றில் தொனித்தது. பாலசந்தர் இவ்வளவையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தான். ஹேமாவைப் போல் அவனும் ஊமையாகிப் போயிருந்தான், யாரிடமும் எதையும் மனம் விட்டுச் சொல்ல முடியாதபடி.

அவனால் இன்னும் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. ஹேமா இப்படி ஆகியிருக்கிறாளே, ஏன்? ஓட்டல் அறையில், அவன் இல்லாத அந்தச் சில நேரத்தில் நடந்தது என்ன? நினைக்கும் போதெல்லாம் நெஞ்சில் ஒரு காட்சி நிழலாடிக் கொண்டிருந்தது. அது நீண்டு கொண்டே போயிற்று..

ஹேமா இமை மூடியபடி அந்த அறையில், படுக்கையில் தனித்திருந்தாள். சுகமான, மெல்லிய உறக்கம். இரண்டு கரங்கள் அவளுடைய தோள்களைப் பற்றிப் பிடிக்கின்றன. முகத்தோடு முகம் வைத்துச் செவியில் இன்ப அலைகளாக எதையோ கிசுகிசுத்தபடி அவளை அள்ளி யணைக்க அவன் முயன்றபோது அவள் திடுக்கிட்டுக்

டபிள்யூ.ஆர்.ஸ்வர்ணலதா



கண் விழிக்கிறாள். வாரிச் சுருட்டிக்கொண்டு எழ முயன்றபோது பிடி இறுகியது. எழ முடியவில்லை. ஹேமாவின் இமைகள் படபடப்பில் சிறகடித்துக் கொள்கின்றன.

''நீங்களா..?'' - நம்ப முடியாத வியப்பில் நடுங்குகிறாள் ஹேமா, விடுபடத் துடிக்கும் வேகத்துடன்.

''ஏன், ஆச்சரியமா? நானேதான் ஹேமா..''

''எடுங்கள் கையை! வெளியே போய் விடுங்கள்.''

''அதற்காகவா நான் வந்தேன்?''

''விளையாடாதீர்கள். உங்களுக்கு வெட்கமாக இல்லை?''

''வெட்கமா? ஹேமாவைத் தீண்டுவதற்கு வெட்கமா?''

''இவ்வளவு கேவலமான மனிதரா நீங்கள்...?''

''அதிசயமான மனிதன். அனுபவிக்கத் தெரிந்தவன்!''

''இல்லை, மிருகம்..''

''மிருகம் இத்தனை நாகரிகமாக ஒரு பெண்ணைத் தொட்டுத் தழுவுமா?''

''விடுங்கள்.போகிறீர்களா, இல்லையா?''

ஹேமா துள்ளுகிறாள். துடிக்கிறாள்.

''ஹேமா, வீண் களேபரம் எதற்கு?'' என்றவாறு அவளை இறுகப் பற்றி எடுக்க முயல்கிறான். பலத்தை யெல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு ஹேமா அவனைத் தள்ள முயன்றும் பலன் இல்லை. அணைப்பு மேலும் இறுக்கமடைய, அவள் திணறுகிறாள். சீற்றத்தின் சிகரத்திற்கு ஹேமா போனாலும் அது, ஆண்மை வெறிக்கு முன்னால் அடியற்று விழுந்து போகிறது.

தரையில் விழுந்த மீனைத் துடிதுடிக்கிறாள் ஹேமா. சில நிமிஷங்களில் அந்தத் துடிப்பு அடங்குகிறது. மஞ்சத்தில் ஒரு மலர் கூம்பிச் சாய்கிறது.

பாலசந்தரின் மனத்திரையில் சதா இப்படி ஒரு காட்சி. அக்கினித் தழலாகத் தலை நீட்டி நெஞ்சைச் சுட்டுக் கொண்டே இருக்கிறது. அந்த அறையில் அன்றைக்கு இப்படித்தான் நடந்ததா?

சேகர் எதற்காகப் போக வேண்டும்? துரோகம் இழைத்து விட்டோம் என்ற குற்ற உணர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாமல்தான் தப்பிப் போய்விட்டானா?

ஹேமாவுக்காக அந்தத் தெருவே இரங்கியது. பெரிய இடத்துப் பெண். மணமாகிக் கொஞ்ச நாளுக்குள்ளேயே அவளுக்கு மனக் கோளாறு வந்திருக்கக் கூடாது என்று அனுதாபப்பட்டார்கள். என்ன நடந்தது என்பது அவர்களுக்குத் தெரியுமா?

ஹேமாவும் சேகரும் பாலாவும் மட்டுமே அறிந்த ஒரு ரகசியம் அது. அந்த ரகசியத்தின் ரகசியம் பாலாவுக்குக் கூடப் புலப்படவில்லையே!

கென்னடி, ஜான்சன், ஐசன் ஹோவர், ரூஸ்வெல்ட் முதலான அமெரிக்க ஜனாதிபதிகள் எப்பொழுதாவது ஒன்று கூடியிருப்பார்களா?

முப்பத்தாறு அமெரிக்க ஜனாதிபதிகளையும் ஒரே இடத்தில் பார்க்க முடியுமா? ஒரு மண்டபத்தில் அத்தனை ஜனாதிபதிகளையும் காணலாம். சிலர் உட்கார்ந்திருக்கின்றனர். மற்றவர்கள், அருகருகே நின்று கொண்டிருக்கின்றனர்.

இவர்களைப் பார்க்க வேண்டுமானால் அமெரிக்காவிலுள்ள புளோரிடாவுக்குப்போக வேண்டும். அங்குள்ள **டிஸ்னி உலகில்** (Disney World) ஜனாதிபதி மண்டபம் இருக்கிறது. 36 ஜனாதிபதிகளும் அங்கே சிலையாயிருக்கிறார்கள்.

அந்தச் சிறிய அறையிலிருந்து டைப்ரைட்டரின் சத்தம் மட்டும் விட்டுவிட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது. சற்று நீண்ட முடியும், ஸைட் பர்ன்ஸும் வளர்த்திருந்த கம்பீரமான இளைஞன் டைப்ரைட்டரின் முன்னால் அமர்ந்திருந்தான். ஒரு நிமிஷம் யோசிப்பதும் மறு நிமிஷம் டைப் செய்வதுமாக இருந்தான். எதற்கும் அலட்டிக் கொள்ளக்கூடிய சுபாவமில்லாதவன் என்ற முத்திரை முகத்தில் தெரிந்தது. ஆனால், ஏதோ சில மாறுதல்களுக்கு சமீபகாலத்தில் ஆளாகியிருக்கிறான் என்பது மட்டும் தோற்றத்தில் ஓரளவுக்குத் தெரிந்தது.

அடுத்த இரண்டு நிமிஷத்தில் டைப்ரைட்டர் அவன் கையில் படாதபாடு பட்டது. இந்த வேகம் யாருக்கு வரும், சேகரைத் தவிர? பாலசந்தரின் உயிர் நண்பனாக சில மாதங்களுக்கு முன்புவரை இருந்த சேகர்தான் ஒரு தனி அறையில் உட்கார்ந்து டைப் ரைட்டரை மிரட்டிக் கொண்டிருக்கிறான். தனக்கென்று உதவியாளரை வேண்டாத சுபாவம் அவனுக்கு. பாலசந்தர் ஏதாவது ஒரு விஷயத்தைக் கோடிகாட்டி விட்டால் போதும். அடுத்த நிமிஷமே சேகர், காரியத்தில் இறங்கி விடுவான். பக்கம் பக்கமாக முக்கிய விஷயங்களை டைப் செய்து பாலாவின் பக்கத்தில் வைத்து விடுவான். 'நான் நினைப்பதை இத்தனை சீக்கிரத்தில்முடித்துக் கொடுத்து விடுகிறானே, இவன்! சேகருக்கு இவ்வளவு திறமையா? சைகாலஜி கூட இவனுக்கு அத்துபடியா?' என்று பாலசந்தர் தனக்குள் பல முறை வியந்து கொண்டிருக்கிறான். வாய்விட்டு அவனிடம் சொன்னதும் உண்டு.

சேகர் பெங்களூருக்கு வந்து இரண்டு மாதத்திற்குமேல் ஆகிவிட்டது. அவனுடைய இயக்கமும் நடமாட்டமும் அநேகமாக யாருக்கும் தெரிய நியாயமில்லை. பாலசந்தருக்கும் தெரிந்திருக்கவில்லை. ஓர்

இந்த டிஸ்னி உலகம் 27,400 ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்பட்டிருக்கிறது. கலிபோர்னியாவில் உள்ள டிஸ்னிலாந்தைப் போல் எண்பது மடங்கு பெரியது இது. இதில் அமைய இருப்பவை இரண்டு நகரங்கள், ஐந்து ஏரிகள், இரண்டு ரயில் பாதைகள், மூன்று கோல்ப் விளையாட்டுத் திடல்கள், 7500 ஏக்கர் பரப்புடைய விலங்குகள் சரணாலயம், இன்னும் ஏராளமானவை...



—எம்.எஸ்.

அடுக்கு மாடிக் கட்டடத்தின் அந்த அறைதான் சேகரின் ஆபீஸ். ஸ்கூட்டரில் வெளியே போகும் நேரம் தவிர மற்ற நேரங்களில் அங்கேயே இருந்தான். எதையாவது சிந்தித்துக் கொண்டிருப்பான். கடிதங்கள் வரும். தந்தி கூட வந்து கொண்டிருந்தது. அவனைத் தேடி வருபவர்கள் சொற்பம். வேலை நேரத்தில் வேலை. பிறகு பொழுது போக்கு. வாட்டமோ வருத்தமோ அவனைச் சூழ்ந்துகொண்டிருப்பதாகச் சுவடேயில்லை.

சேகர் என்ன செய்து கொண்டிருக்கிறான்?

டைப் செய்து முடித்த காகிதத்தைப் படித்து விட்டு உறையில் போட்டான். கைக்கடிகாரத்தைப் பார்த்ததும் சற்றுப் பரபரப்படைந்த மாதிரி தெரிந்தது. அறையைப் பூட்டி விட்டு, படியிறங்கி வந்தான். சில நிமிடங்களில் ஸ்கூட்டர் அங்கிருந்து கிளம்பியது.

பெங்களூர் ரேஸ் கோர்ஸ். அன்றைக்கு முக்கியமான ஒரு கப் ரேஸ். கூட்டமான கூட்டம். சேகர் சரியான நேரத்தில் வந்து விட்டான். ரேஸ் பைத்தியம் அல்ல என்றாலும், ரேஸ் கோர்ஸுக்கு ஏனோ அவன் வந்து கொண்டிருந்தான். எதையோ எதிர்பார்த்து வரும் ஒரு வேட்கை அவனிடம் இருந்தது.

இடையிடையே, சேகர் பைனாகுலரைக் கண்ணில் வைத்துப் பார்த்தான். ஓடும் குதிரைகளையும், உற்சாகத்தில் ஆர்ப்பரித்து நிற்கும் மக்களையும், வண்ண மலர்களாகத் திரண்டு நிற்கும் பெண்களையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தும் மனத்தில் நிறைவு ஏற்படவில்லைபோல் இருந்தது.

எங்கோ ஓரிடத்தில் யாரையோ பார்க்க நேர்ந்த போது, 'அது யாராக இருக்கலாம்?' என்ற கேள்விக்குறியோடு அங்கிருந்து நகரத் துடித்தான் சேகர். அந்த ஆர்வத்தில் யார் யாரையெல்லாமோ முட்டி மோதிக்கொண்டு முன்னேறிப் போய்க் கொண்டேயிருந்தான்.

குறி தவறவில்லை. கூட்டத்தினூடே நுழைந்து அந்த இடத்திற்கு வந்து சேருவதற்குள் வியர்த்து விறுவிறுத்துப் போய் விட்டது. பைனாகுலரில் பார்த்த அதே பெண். அழகாக முறுவலித்துக் கொண்டு எங்கோ கவனத்தைப் பதித்திருந்தாள்.

அருகில் வந்தாயிற்று. ஆனாலும் சேகருக்கு ஒரு சந்தேகம். 'இவள் அவளாகத்தான் இருப்பாளோ? எதற்கும் கேட்டு விடுவோமே' என்ற ஆர்வம்.

''விஜயா..''—அவன் அடக்கமாகவே கூப்பிட்டான். அவள் திரும்பிப் பார்த்தாள்.

''விஜயா, என்னைத் தெரியவில்லை?''—மீண்டும் அவன். அவள் மருள மருளப் பார்த்துவிட்டு, ''நீங்கள் யார்?'' என்றாள்.

''நான்..நான்..'' என்று தடுமாறினான் சேகர்.

''நான் விஜயா அல்ல..!''

அவளுடைய தொனியில் ஒரு நடுக்கம் இருந்தது.

''விமலா, என்னம்மா இங்கே நின்று கொண்டிருக்கிறாய்? நான் எங்கெல்லாம் உன்னைத் தேடுவது? நம்ம குதிரை, அதாவது மிஸ்டர் நாராயண்தாஸின் குதிரை முதலில் வந்துவிட்டதே. அவரைப் பார்த்து கங்கிராட்ஸ் தெரிவிக்க வேண்டாமா? வாம்மா, சீக்கிரம்..'' என்று அவசரப்படுத்தினார் மேஜர் ராம்நாத்.

''போகலாம் டாடி..'' என்றவாறு விமலா அவரைப் பின்தொடர்ந்தாள்.

'விமலாவா? இவள் விஜயா அல்லவா!' என்று வியப்போடு நின்றான் சேகர்.

(தொடரும்)



சென்னை
சாந்தி
கிரௌன்
புவனேஸ்வரி
நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
அளிக்கும்
ஜெகபதி ஆர்ட் பிக்சர்ஸ்
எங்கள் தங்க ராஜா
ஈஸ்ட்மென் கலர்-ஜெமினி
தயாரிப்பு-டைரக்ஷன்: V.B.ராஜேந்திரபிரசாத் B.Sc.,
வசனம்: பாலமுருகன்
பாடல்கள்: கண்ணதாசன்
இசை: K V.மகாதேவன்
ஒளிப்பதிவு: S வெங்கடரத்னம்
கலை: S கிருஷ்ணராவ்


மைக்ரோஃபைன்ட்

ஆஸ்ப்ரோ

அதிவேகமாகக் கரைந்து, அதிவேகமாகக் கிரகிக்கப் படுகிறது. அதனுல்தான் அது அதிவேகமாக வலியைப் போக்கி விடுகிறது–

சாதாரண வலிநிவாரண மாத்திரைகளைவிட இருமடங்கு அதிக வேகத்துடன் வலியைப் போக்கி விடுகிறது.







சாதாரண மாத்திரைகளைப் போலன்றி, ஆஸ்ப்ரோவின் நுண்ணிய அணுக்கூறுகள் அதிவேகமாகக் கிரகிக்கப் படுகின்றன. வலியின் இருப்பிடத்தை அதிவேகமாக அடைகின்றன. உங்களுக்கு அதிவேக நிவாரணம் அளிக்கின்றன.

கீழ்க்கண்டவைகளுக்கு மைக்ரோ:ஃபைன்ட் ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்: தலைவலி • உடல் வலி • ஜலதோஷம் • ஃப்ளு • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவைப் பட்டால் மீண்டும் சாப்பிடவும். குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொற்படி

ஆஸ்ப்ரோ மட்டுமே மைக்ரோ:ஃபைன் செய்யப் படுகிறது, அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக.

நிகோலஸ் தயாரிப்பு

A G.57 TM

இமைக்கும் ஒளிக்கள்...

4

ரேஸ்கோர்ஸ் ஆரவாரத்துக்கிடையே அடித்து வைத்த சிலைபோல் சில நிமிஷம் நின்றிருந்தான் சேகர். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போன்ற ஏமாற்றம். பைனகுலர் மூலம் பார்த்த ஒரு நிலவு முகத்தை, நெருங்கி வந்தும், அந்த அழகைக் கண்களால் அள்ளிப் பருக முடியவில்லையே என்ற தாபமா?

விமலாவும் ராம்நாத்தும் அங்கிருந்து போவதை சேகர் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான். இரண்டு நிமிஷம்கூட அவளுடன் பேச முடியாதபடி ராம்நாத் இடையில் வந்து சேர்ந்தது ஆத்திரத்தை மூட்டியது. அவர் மட்டும் வராமல் இருந்திருந்தால் விமலாவைப் பற்றி எவ்வளவோ தெரிந்து கொண்டிருக்க முடியுமே என்று அவன் நினைத்தான்.

எப்பொழுதோ அவன் சந்தித்த விஜயாவைப் போலவே அவள் இருந்தாள். 'விஜயா இவளைப் போல் இத்தனை வர்ண ஜாலத்தோடு இருக்க மாட்டாளே... ஆனால் தோற்றத்தில் நூற்றுக்கு நூறு ஒற்றுமை. அவளுக்கு அப்பா, அம்மா இல்லை என்று சொல்லியிருக்கிறாள். இந்த விமலாவை நிழலாகத் தொடர தந்தை யிருக்கிறார். 'டாடி' என்று அழைக்கிறாளே!' — எண்ண ஓட்டத்தில் நின்ற சேகருக்குத் திடீரென்று ஒரு யோசனை.

அவன் தயங்கவில்லை. பின்தொடர்ந்து பார்த்து விடுவது என்ற முடிவில் வேகமாக நடை போட்டான். விமலாவின் கருநீலக் கண்களும், கடைப் பார்வையும் அவன் நெஞ்சை ஓய்ந்திருக்க விடவில்லை. இன்னும் நன்றாக அவளைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும் என்ற துடிப்பு அவனுக்கு.

வேகம் வீண் போகவில்லை. ரேஸ்கோர்ஸின் மறு முனை வரை விமலாவைப் பின் தொடர்ந்தான்.



''மிஸ்டர் நாராயண்...!'' — உற்சாக மாக அழைத்துக் கொண்டே அருகில் போனார் மேஜர் ராம்நாத்.

''ஹலோ... கம் ஆன்... கம் ஆன்...!'' என்று எல்லை மீறிய ஆர்வத்தோடு நாராயண் ஆரவாரித்தார். வெற்றிப் பெருமிதம் அவருக்கு. பெங்களூர் ரேஸில் அன்றைக்குத்தான் அவருடைய குதிரையை இறக்கி விட்டிருந்தார். பெரிய வெற்றி கிடைத்து விட்டது.

''கங்கிராட்ஸ்... உங்களை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. எவ்வளவு பெரிய வெற்றி...!'' என்றவாறு கைகுலுக்கினார் ராம்நாத்.

''நானும் அப்படித்தான். உங்களைப் பாராட்ட வார்த்தைகளைத் தேடிக் கொண் டிருக்கிறேன்...'' என்று கொஞ்சும் குரலில் நாராயண்தாஸிடம் புகழ் பாடினாள் விமலா.

சேகர், மூவரையும் மாறி மாறிப் பார்த் தான். கம்பீரமாக நிமிர்ந்து நின்றான். அசாத்தியமான துணிவு வந்த மாதிரி நாராயணிடம் சென்று கைகுலுக்கினான்:

''மிஸ்டர் நாராயண், உங்களைப் பார்த்து பாராட்டுத் தெரிவிக்க வேண்டும் என்பதற் காகவே வந்திருக்கிறேன். பாராட்டு தெரிவிப்பவர்கள் பழகியவர்களாக இருக்க வேண்டும் என்பதில்லை, அல்லவா? உங்க ளுக்குக் கிடைத்திருப்பது சாதாரண வெற்றி அல்ல.''- தனக்கே உரிய எடுப்பான பாணியில் சேகர் பாராட்டியபோது, நாராயண் குளிர்ந்து போனார்: ''தேங்க்யூ மிஸ்டர்...'' என்று இழுத்தார்.



ராம்நாத் விழி கொட்டாமல் சேகரைப் பார்த்தார். விமலாவும் இமைக்கவில்லை. 'இங்குமா, இவன்?' என்பதுபோல் அவனை அவள் பார்த்து விட்டுத் தலை தாழ்த்திக் கொண்டாள்.

அவன் விடவில்லை: ''மிஸ் விமலா...'' என்று அழைத்தபடி புன்னகையை இழைய விட்டான்.

அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

''எக்ஸ்கியூஸ் மீ, உங்களுக்குச் சிரமம் கொடுத்து விட்டேன். விஜயா என்று நினைத்துத்தான் உங்களை சில நிமிஷம் தடுத்துப் பேசினேன்... அது என்னுடைய தவறு, நீங்கள் கோபிக்கமாட்டீர்களே..?'' என்றான் சேகர்.

அவள் ஏதோ சொல்ல முயன்றாள். வார்த்தை வெளிவரவில்லை. சேகரை நேருக்கு நேர் பார்ப்பதற்கு, விமலா கூசுவது போல் இருந்தது.

கொஞ்ச நேரந்தான்.

''விமலா, போகலாமா?'' என்று ராம்நாத் கனைத்தார்.

''யெஸ், டாடி!'' என்றவாறு அவள் நகர்ந்தாள்.

நாராயண், ராம்நாத், விமலா—மூவரும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

'ராம்நாத் யார்? நாராயண் யார்? இந்த விமலா யார்?'

மறுபடியும் கேள்விக்குறியுடன் நின்றான் சேகர்.

★

விமலா எங்கே?

பாலசந்தர் அவளை எதிர்பார்த்தான். டெலிபோனிலாவது பேசுவாள் என்று காத்திருந்தான். இரண்டு, மூன்று நாட்க ளாக எந்தத் தொடர்பும் இல்லாதது கொஞ்சம் ஏமாற்றமாகவே இருந்தது. விமலாவைப் பார்க்க வேண்டும் என்ற வேட்கை இருந்தாலும் வீடு தேடிப் போக விருப்பம் இல்லை. வெட்கம் தடையாக நின்றது.

ஒட்டலில் அவளைச் சந்தித்துப் பேசிய அந்த இனிமையான மாலை நேரத்தை அவனால் மறந்திருக்க முடியவில்லை. மீண்டும் மீண்டும் பார்க்கவும், பழகவும் தூண்டும் நளினமும், கவர்ச்சியும் விமலாவிடம் இருப் பதாக அவன் நினைத்தான். அந்த சக்தி பாலசந்தரின் நெஞ்சில் கொஞ்சம் கொஞ்சமாக இடம் பிடித்துக் கொண்டு விட்டது. இல்லையென்றால், விமலாவின் நினைவாக அவன் ஏன் உட்கார்ந்திருக்க வேண்டும்? அவன் மடியில் அவள் சாய்ந்து கொண்டு விழிகளால் பேசிக் கொண்டிருப் பது போல் ஒரு சுகமான கற்பனை....

தன்னை அழுத்தும் ஒரு சுமையை இறக்கி வைக்கும் சக்தி விமலாவுக்கு இருக்கிறது என்ற ஆறுதல்... வீட்டுக்குப் போக வேண்டுமே என்று நினைத்ததும் பீதி பற்றிக் கொள்கிறது. ஹேமாவைப் பார்க் கும் போதெல்லாம் மனத்தில் புயல்.

ஹேமாதான் இப்பொழுது அவனுக்குப் பிரச்னை. பழைய ஹேமாவாக அவள் மாற முடியுமா? அந்த நம்பிக்கை படிப்படியாகக் குறைந்து கொண்டு வந்தது. டாக்டர் முன்போல் வரவில்லை. வீட்டில் வைத்து மருத்துவம் பார்ப்பதில் பயன் இல்லை என்று கூறிவிட்டார். 'இப்படியே எத்தனை காலத்தைப் போக்கிக் கொண்டிருக்க முடியும்?' இந்தக் கேள்வி பாலசந்தரைக் குடைந்து கொண்டுதான் இருந்தது. விமலாவின் நெருக்கம், தன்னுடைய மன இறுக்கத்தை நெகிழ வைக்கும் என்ற நம்பிக்கை எப்படியோ துளிர்விடத் தொடங்கி விட்டது.

'விமலாவை இன்றைக்கு எப்படியும் சந்திக்க வேண்டும்...' — ஆர்வம் அலை மோதியது. ஆசை வீணாகவில்லை.

டெலிபோன் ஒலித்தது. விமலாதான் பேசினாள். விநாடிப்பொழுதில்பாலசந்தரின் முகம் மலர்ந்தது.

''குட் ஈவினிங்... எப்படி இருக்கிறீர்கள்? ஆபீஸ் நேரத்தில் உங்களுடன் பேசுவதற்குப் பயமாக இருக்கிறது. மன்னித்துக் கொள்ளுங்கள்..'' என்றாள் அவள்.

''பயமா? என்னிடம் பேசுவதற்கா? நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் டெலிபோனில் என்னை அழைக்கலாம், மிஸ் விமலா!''

''டெலிபோனில் மட்டும்தானா? நேரில் பார்க்கக் கூடாதா? அழைக்கக் கூடாதா?''

''பை ஆல் மீன்ஸ்... ஆபீசுக்கு நீங்கள் வர முடியுமானால் எனக்கு மகிழ்ச்சிதான்.''

''முன்பே நான் அழைத்திருக்கிறேன். வீட்டுக்கு எப்பொழுது வரப் போகிறீர்கள்?''

''அவசியம் வரவேண்டுமா?''

''வந்தால் எனக்கு ஆயிரம் மகிழ்ச்சி.''

''அதனால்தான் பேச்சு மூச்சில்லாமல் இருந்து விட்டீர்களோ?''

''நான் இருந்தால் பேசாமல் இருப்பேனா? ஊரில் இல்லை... சொல்லாமல் போய் விட்டேன். ''

''நினைத்தேன், மிஸ் விமலா!''

''என்னை எதிர்பார்க்கவில்லையா?''

''டெலிபோன் வரும் என்று எதிர்பார்த்திருந்தேனே!''

''இப்படி டெலிபோனிலேயே பேசிக் கொண்டே இருந்து விடலாம் என்கிறீர்களா?''

அவன் பதிலின்றிச் சிரித்தான். அவளும் சிரித்தாள்.

''மிஸ் விமலா, நீங்கள் எங்கே போயிருந்தீர்கள் என்று சொல்லவில்லையே?...''

''ஓ! சொல்லத் தயார். சுருக்கமாகச் சொல்ல முடியாதே!''

''ஏன்?''

''நிரம்ப விஷயம் இருக்கிறது. நே
தான் சொல்ல வேண்டும். நீங்கள் இங்
வரக் கூடாதா? வந்தால் என்ன...ப்ளீ
— விமலா கொஞ்சிக் குழைந்தாள்.

பாலசந்தர் யோசித்தான். தயக்
அகலவில்லை.

''இன்னும் மனம் வரவில்லையா
என்றாள் அவள், சிணுங்கலுடன்.

''வருகிறேன் விமலா!'' என்றவா
ரிஸீவரை வைத்தான் பாலா.

★

விமலா காத்திருந்தாள். விழிக
விளக்காக்கிக் கொண்டு பாலசந்தர
வரவேற்றாள். வரவேற்பதில் இத்த
உற்சாகமா என்ற வியப்பு தோன்ற
செய்தது.



பாலசந்தரை உள்ளே அழைத்துச்செ
அமர்த்தினாள். அந்த வரவேற்பு அறை
பாலா கவனித்தான். சிறிய இடம் எ
லும் மிக அழகாக வைத்திருந்தாள் வி
ஒரு பக்கத்தில், ரேடியோகிராமிலிரு
மேற்கத்திய இசை மெல்லலையாக வ
கொண்டிருந்தது. கண்கவரும் ஓவியங்
ஒரு பகுதியை நிரப்பியிருந்தன. கவர்
யான கலை, கைவினைப் பொருட்கள்
இடம் பிடித்துக் கொண்டிருந்தன!

பாலசந்தரின் கவனத்தைக் கலைக்க வி
பாமல், அவனையே பார்த்துக் கொ
மௌனமாக நின்றாள் விமலா. கடைசி
அவளை அவன் ஏறிட்டுப் பார்த்த
'என்னைப் பார்ப்பதற்கு இவ்வ
நேரமா?' என்பதுபோல் காந்தம் இழை
பார்வையை விமலா அவன்மீது வீசி
உயிர்ச் சிற்பமாக அவள் நின்ற

லாவின் நெஞ்சை கூறையிட்ட மாதிரி ந்தது. அவளைப் போலவே அந்த த்தின் ஒவ்வோர் அங்கமும். அழகு ற்றிருக்கின்றன.

ல நிமிஷம் பேச்சின்றி விமலாவையே ர்த்துக் கொண்டிருந்த பாலசந்தருக்கு றிப்பு' வந்தது.

'விமலா, என்னை உட்கார வைத்துவிட்டு கள் நின்று கொண்டிருக்கிறீர்களே... காருங்கள்'' என்றான் அவன்.

கண்ணிலும் இதழிலும் தேக்கி வைத் ந்த புன்னகையை சிந்தித் தெளித்தபடி, ான் உட்கார்ந்து விட்டால் உங்களை ர் உபசரிப்பது? நீங்கள் கெஸ்ட்... ந்தாளி... நான் ஹோஸ்ட்'' என்றாள்.

'நான் அப்படி நினைக்கவில்லை, மிஸ் லா!''



'எக்ஸ்கியூஸ் மீ, ஒரு நிமிஷத்தில் வந்து கிறேன்'' என்றவாறு ஒரு துள்ளலுடன் ளே போன விமலா, ஒரு 'ட்ரே'யை ி வந்து டீப்பாயில் வைத்தாள்.

காஞ்சம் ஸ்நாக்ஸ்... டீ... அவ்வளவு ா. உங்களுக்கு என்னென்ன பிடிக்கும் பதை இன்னும் நான் தெரிந்து வைத் க்கவில்லை.''— அடக்கமாகச் சொல்லிய எதிரே உட்கார்ந்தாள் விமலா.

'அப்பா எங்கே விமலா?'' என்றான் லசந்தர்.

'ஊருக்குப் போனதாகச் சொன்னேன் லவா? அவரும் நானுமாகத்தான் ானோம். இன்னும் அவர் திரும்ப லை.''

எங்கே போயிருந்தீர்கள் என்று ால்லவில்லையே... டெலிபோனில் ால்ல முடியாத விஷயம் போல் க்கிறது!'' என்றான் அவன்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. ஒரு விளையாட்டுக்காகச் சொன்னேன் அப்படி. உங்களை இங்கே அழைப்பதற்கு ஒரு சிறு தந்திரம்! அப்பாவும் நானும் பெங்களூருக்குப் போயிருந்தோம்.''

'ஏன்' என்று அவன் கேட்கவில்லை.

''அங்கே ரேஸ் சீசன் அல்லவா? அதற்காகத்தான்'' என்றாள் விமலா.

''ஓ! ரேஸ் பைத்தியம்கூட உண்டா?''

''இல்லை... அப்பாவுக்கு அந்த ஆசை அதிகம். ஆனால் அவர் எதையும் ரேஸில் இழந்ததில்லை. பந்தயக் குதிரை வைத்திருந்தார். இப்பொழுது அதையும் விட்டு விட்டார். அப்பாவின் சில நண்பர்கள் ரேஸ் பைத்தியங்கள். அவர்கள் அழைத்ததால் தான் போனார். நான் மட்டும் திரும்பி விட்டேன்...''

விமலா பேசிக் கொண்டே போனாள். எல்லாவற்றையுமே செவியில் வாங்கிக் கொண்டாலும் கண்ணும் மனமும் அவள் மீதே இருந்தன. ஒரு பந்தயக் குதிரையின் எடுப்பும் மிடுக்கும், துடிப்பும் துள்ளலும் அவள் பார்வையில் இருந்தன; மேனியில் இருந்தன. பருவச் செழிப்பும், செருக்கும் விமலாவின் அங்கமெல்லாம் படர்ந்திருந்தன.

விமலா அவனைக் கவனித்தாள்.

தேனீரை ஊற்றித் தந்தாள்.

இருவரும் பருகிக் கொண்டே பேசினார்கள்.

''இன்னும் கொஞ்சம்'' என்றவாறு டீ 'பாட்'டை விமலா சாய்த்தாள்.

''வேண்டாம், மிஸ் விமலா'' என்று தேனீர் கப்பை பின்னுக்கு இழுத்துக் கொண்டபோது கொஞ்சம் டீ அவன் மேல் கொட்டிவிட்டது.

''எக்ஸ்கியூஸ் மீ, ஐ ஆம் வெரி வெரி ஸாரி... கோட்டிலும் பாண்ட்டிலும் பட்டு விட்டதா?'' என்றவாறு எழுந்து பாலசந்தருக்குப் பக்கத்தில் போனாள்.

''ஒன்றும் ஆகிவிடவில்லை, மிஸ் விமலா!''

பக்கத்தில் உட்கார்ந்தபடி அவள், அவன் 'கோட்'டைத் தொட்டுப் பார்த்தாள்.

''நனைந்து விட்டது...'' என்றவாறு அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவளுடைய ஒரு கை கோட்டிலும் மறு கை அவனுடைய தோளிலும் இருந்தன. ஒரு நிமிஷம்... இரண்டு நிமிஷம். அவள் அப்படியே இருந்தாள். கைகளை அகற்றவில்லை. பாலசந்தரும் பேச்சின்றி அவளைப் பார்த்தான்.

''விமலா...!'' — பாலசந்தர் முணுமுணுத்தான்.

அவள் இன்ப நெடுமூச்சுடன் கொஞ்சம் கொஞ்சமாக அவனுடைய மார்பில் சாய்ந்து கொண்டிருந்தாள்.

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

(தொடரும்.)



பனாரஸ் புடவைகளை
பொலிவுடன் அளிக்கும்
கலா
மந்திர்
ஆகன்ஸா புடவைகள். புதத்ம் புதிய
தனைச்சோய்'
எண்ணில்லா பட்டுப் புடவைகள்,
நவீன நாகரிக புடவைகளுக்கு
கலா மந்திர்!
'தன் பில்டிங்'
175/1. மவுண்ட் ரோடு.
சென்னை - 600002.
தொலைபேசி: 84983.

சென்னை: பைலட் • மேகலா • பாரத் • கமலா

மற்றும் தமிழகமெங்கும்

அமுதம் பிக்சர்ஸ்

சொந்தம்

திரைக்கதை·டைரக்ஷன்:


A.C. திருலோகசந்தர் M.A.,

தயாரிப்பு


R. வெங்கட்ராமன், K. ஆறுமுகம்



ELEGANT














கனவுலகில் நான்...

நான் வாழ்க்கையைத் தொடங்கியது என்னவோ, பரத நாட்டியக் கலையில் சிறப்பாக முன்னுக்கு வர வேண்டும் என்றுதான். திரைப்பட உலகில் அறிமுகம் ஆனபின், அந்த ஆசைக்கு என்னால் அதிக இடம் கொடுக்க முடியவில்லை என்பதும் உண்மை. இந்த நிலையில் கடல் கடந்த நாடுகளில் பரத நாட்டியத்துக்காக மட்டும் ஆறு வாரங்கள் என்று ஒதுக்க முடிந்தபோது, மற்ற எல்லா 'எங்கேஜ்மெண்ட்டு'களுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு விமானத்தில் ஏறினேன்.

ஆறு வாரங்கள் அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய நாடுகளுக்குப் போய் விட்டு, நடன நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு திரும்பியபோது அதைப் பற்றி என்னிடம் என்ன கேட்கப் போகிறார்கள் என்று ஆவலோடு காத்திருந்தேன். அவர்களுடைய கேள்வி என்ன தெரியுமா? ''நீங்கள் இரகசியமாக சத்ருகன் சின்ஹாவைத் திருமணம் செய்து கொள்ள நிச்சயம் செய்து விட்டீர்களாமே?'' என்பதுதான்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. சத்ருகன் சின்ஹா எனக்கு நண்பர். சில மாதங்களுக்குமுன் ரக்ஷாபந்தன தினத்தன்று என் கையில் 'ராக்கி' கட்டி, சகோதரன் என்ற நட்புரிமையை உறுதி செய்து கொண்டவர். அந்தப் படம்கூடப் பத்திரிகையில் வெளியாகி இருந்தது. இந்த நிலையில் அவருக்கும் எனக்கும் கல்யாணம் என்று ஒரு வதந்தியா? அமெரிக்காவில்கூட இப்படி ஒரு வதந்தியைப் பரப்பும் சாமர்த்தியத்தை நான் பார்க்க முடியவில்லை. போகிறது, இந்தக் 'கலை'யிலாவது நாம் முன்னேறி இருக்கிறோமே!

சரி, இப்போது அமெரிக்காவில் என்னுடைய அனுபவங்களைப் பற்றிச் சொல்லட்டுமா?

கடைசியில் நான்தான் ஜெயித்தேன். கடல் கடந்து அமெரிக்காவுக்குப் போக வேண்டும் என்று நான் சொன்னபோது அம்மா முதலில் ஒப்புக் கொள்ளவில்லை. வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கும் 'சீதா ஔர் கீதா' ஒருபுறம்; தொடர்ந்து வெளியான எனது நாலைந்து படங்கள்; இவற்றுக்கிடையே நானே ஒரு படம் தயாரிக்க ஆரம்பித்திருந்தேன். ஆக, ரொம்ப 'பிஸி'யாக இருந்தேன் நான். இந்த சமயத்தில் நான் இந்தியாவை விட்டு என்னுடைய நாட்டியக் குழுவுடன் கிளம்புவதற்கு அம்மா லேசில் சம்மதிக்கவில்லை.

மே மாதம் பதினைந்தாம் தேதி புறப்படுவதாக ஏற்பாடாகி இருந்தது. புறப்படுவதே முகூர்த்த வேளையாக இருக்க வேண்டும் என்று நினைத்தார்களோ என்னவோ, படத் தயாரிப்பாளர்கள் ஒன்றன்பின் ஒன்றாக முகூர்த்தம் போட்டுத்தான் என்னை வழி அனுப்பினார்கள். பம்பாயில் இரவு விமானத்தில் ஏறினோம். ஆனால் விமானம் மேலே ஏறவில்லை! விமானத்தில் ஏதோ தகராறு இருப்பதாகச் சிலர் சொன்னார்கள். விமானத்துக்குள் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாகச் சந்தேகப்பட்டு, சோதனை போட ஆரம்பித்தார்கள். அம்மாவிற்கு ஒரே கலக்கம்.

என் மனம் என்னவோ தெளிவாகத்தான் இருந்தது. என்னுடைய தாத்தாவுக்கு நான் வெளிநாடுகளுக்குச் சென்று வர வேண்டும் என்று மிகவும் ஆசை. ''கலை என்பது குடத்து விளக்காக இருக்கக் கூடாது'' என்று அடிக்கடி சொல்லுவார். அவர் அந்த நாளில் அம்மாவுக்கு, நிலவு ஒளியில் வீதித் திண்ணையில் உட்கார வைத்து சரித்திரத்தையும், தத்துவத்தையும் கதையைப் போலச் சொல்லுவாராம். நேருஜி தன் மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்களில் எத்தனையோ சரித்திரக் குறிப்புகளை எளிய நடையில் சொல்லியிருப்பதைப் படிக்கும்போது எனக்குத் தாத்தாவின் ஞாபகம்தான் வரும். அம்மாவுக்கும் இதைப் போலப் பிரயாணம் செய்ய வேண்டும் என்ற ஆசை நெடுநாட்களாக உண்டு. பல நாடுகளிலிருந்து அழைப்புகள் வந்தும், நேர நெருக்கடி காரணமாக என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. இப்போதும் அப்படித்தான் இருந்தது. ஆனால் நான்தான் விட்டுக் கொடுக்கவில்லை. அலை ஓய்ந்து கடலில் குளிப்பது என்றால் எப்படிச் சாத்தியம்?

விமானம் ஓடிற்று; கடிகாரம் ஓடவே இல்லை!

இதற்குமுன் இங்கிலாந்துக்குப் பட வெளியீட்டை முன்னிட்டு நான் போக நேர்ந்ததுண்டு. சென்ற ஆண்டு சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்குப் போயிருக்கிறேன். ஆனால் உலகத்தின் மறுபுறம் இருக்கும் அமெரிக்க நாட்டிலும், மேற்கிந்தியத் தீவிலும், அதுவும் நாட்டிய நிகழ்ச்சிக்காகப் போவது இதுதான் முதல் தடவை. முதல் அனுபவம் என்பதாலேயே அதில் ஓர் ஆர்வம் இருந்தது எனக்கு. அதுவும் சுமார் ஆறு வாரங்கள் திரைப்பட வேலைகளிலிருந்து விடுமுறை! பள்ளிக்கூடக் குழந்தைகள், விடுமுறையை நாடிப் போவதைப் போல இருந்தது என்னுடைய மனநிலை.

மறுநாள் காலை எட்டு மணிக்குத்தான் விமானம் புறப்பட்டது. அது ஒரு 'ஜம்போ ஜெட்' விமானம். உள்ளே ஏறி விட்டால் அது ஒரு விமானம் என்ற உணர்ச்சியே ஏற்படுவதில்லை. ஒரு பெரிய வீட்டுக்குள் போவது போலத்தான் தோன்றுகிறது. இப்படி ஒரு பெரிய வீடு, ஆயிரக்கணக்கான மைல்கள், நூற்றுக்கணக்கான பிரயாணிகளுடன் பறக்கப் போவதை நினைத்தாலே எனக்கு வேடிக்கையாக இருந்தது.

பழகிய தெரிந்த மனிதர்களிடமிருந்து கொஞ்ச நாட்கள் விலகி இருக்கப் போகிறோம் என்று நினைத்துக் கொண்டிருந்த எனக்கு, விமானத்தில் ஓர் எதிர்பாராத வியப்பு காத்துக் கொண்டிருந்தது. சுமார் முப்பது பெண்கள் எனக்குப் புன்னகையுடன் வரவேற்புக் கொடுத்தார்கள்! அவ்வளவு பேரும் சென்னை எதிராஜ் கல்லூரி மாணவிகள். அவர்களுடன் பிரயாணம் செய்த நிலையில் ஒரு கல்லூரி மாணவி என்ற உணர்ச்சியே எனக்கும் ஏற்பட்டது!

வழி நெடுக இருட்டையே பார்க்காத பிரயாணம் எங்களுடையது! கிழக்கே போகப் போகக் கடிகாரத்தின் நேரம் குறைந்து கொண்டே வருகிறது. இங்கிலாந்தின் நேரம் இந்தியாவை விட ஐந்தரை மணி நேரம் குறைவு. காலை எட்டு மணிக்குப் பம்பாயிலிருந்து கிளம்பிய நாங்கள், இங்கிலாந்துக்கு வந்தும் முற்பகலைக்கூடத் தாண்டவே இல்லை. விமானம் ஓடிற்றே தவிர, கடிகாரம் ஓடவே இல்லை!

என்னை வியப்பில் ஆழ்த்தினார்!

இரவு பத்தரை மணிக்கு நியூயார்க் வந்து சேர்ந்தோம். இங்கிலாந்திலிருந்து அமெரிக்கக் கடற்கரை வரை விமானப் பயணம் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. மேலே மேகக் கடல்; கீழே நீலக் கடல். மருந்துக்குக் கூட நிலப் பகுதி எதுவும் தெரிவதில்லை. இதைப் போல ஏழரை மணி நேரம் பிரயாணம் செய்வதும் ஒரு வேடிக்கைதான்.

எங்களை அமெரிக்க நாட்டுக்கு அழைத்து, கச்சேரிகளுக்கு ஏற்பாடு செய்திருந்த ஸ்ரீ நோரியும் அவருடைய மனைவி (ஆங்கிலப் பெண்) மரியமும் விமான நிலையத்திற்கு வந்திருந்தார்கள். ஆனால் என்னை வியப்பில் ஆழ்த்தியது இன்னொரு வரவேற்பு. புன்னகை முகமுட

ூச்செண்டுமாக அங்கே வந்து நின்றவர், தென்னிந்திய நடிகை— நடனக் கலை அரசி — பத்மினி!

'ஹாலிடே இன்' என்ற ஒட்டலில் த கிளுலும் சாப்பாடு என்னவோ ஸ்ரீநோரியின் வீட்டில்தான். ஆங்கிலப் பெண்ணுனுலும் எவ்வளவு நன்ருக இந்திய உணவைத் தயாரிக்கிருர்? திருமணம், குடும்பம் என்று ஒரு பொறுப்பு வந்தாலே, பெண்களுக்கு அவர்களுடைய சாமர்த்தி யத்தைப் புது அழகுடன் காட்டத் தெரிந்து விடுகிறது. நாங்கள் பிரயாணம் செய்த களைப்பில் உறங்கி விட்டோம். அம்மா மட்டும் தூக்கமின்றிச் சிறிது நேரம் புரண்டு கொண்டே இருந்தாராம். தாத்தாவின் படத்துக்கு முன் நின்று அவருடைய ஆசிகளை வேண்டிக் கொண் டிருந்தாராம். காலையில் அதைச் சொல்லக் கேட்டபோது என் உணர்ச்சிகள் கண்ணில் நின்றன!

ரசிகர்கள்—இரண்டு விதம்!

இரண்டு நாட்கள் ஓய்வெடுத்துக் கொண்ட பிறகு உலகப் பிரசித்தி பெற்ற பாஸ்டனுக்குப் போக விமானம் ஏறினோம். விமானப் பயணத்துக்கும் எங்களுக்கும் இன்னும் பொருத்தம் சரியாக அமைந்த பாடில்லை. விமானம் கிளம்பியவுடன் ஏதோ என்ஜின் கோளாறு, கதவு சரியாக மூடவில்லை என்று கீழே இறங்கிவிட்டது. எனக்கு ஒரே திகில். சிறிது தூரம் பறந்து சென்றபின், இது போன்ற சிக்கல் ஏற்பட்டிருந்தால் எங்கள் நிலை என்ன ஆகி யிருக்கும்?

பழுது பார்த்த பின்,விமானம் மீண்டும் உயரக் கிளம்பிற்று. இந்தப் பிரயாணத்தில் காற்று அழுத்தம் தூக்கிப் போட்டுக் கொண்டே (Air—Bump) இருந்தது. அதனுல் பயணம் நிம்மதியாக இல்லை. ஆரம்பத்தில் ஏற்பட்ட கலக்கம் வேறு. ஒரு வழியாக பாஸ்டன் நகரை அடைந்து, வட இந்திய நண்பர் ஒருவரின் வீட்டில் பிற்பகல் மூன்று மணிக்குச் சாப்பாட்டிற் குப் போய்ச் சேர்ந்தோம். யாருக்குமே சாப்பிட முடியவில்லை. எல்லோருக்கும் தலைவலி, வயிற்றுப் புரட்டல், தலை சுற்றல்...

இந்த நிலையில் இரவு எட்டு மணிக்கு நாட்டியக் கச்சேரி. எவ்வளவு களையான, உற்சாகமான ஆரம்பம்? இதைப் போன்ற நிலையில் இன்னும் பதின்மூன்று கச்சேரிகள் எப்படிச் செய்யப் போகிருேம் என்று எனக்கு ஒரே கலக்கம். நல்லவேளை, கச்சேரி நன்ருகவே அமைந்தது. ஆனுல், ரசிகர்களைப் பொறுத்தவரை எனக்கு ஏமாற்றம்தான். எல்லோரும் கல்லூரி யில் படிக்கும் வட இந்திய மாணவர்கள்; கலையின் நுட்பத்தை ரசிக்கத் தெரியாத வர்கள். ஆனுலும் ஒரு வியப்புடன் பார்த்துக் கொண்டு அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள்!

மறுநாள் நியூயார்க்கிற்கு வந்து சேர்ந்து விட்டோம். அங்கே தொடர்ந்து இரண்டு நாட்களுக்குக் கச்சேரி நடந்தது. இருப தாம் தேதி கொலம்பியா பல்கலைக் கழகத் தில் கச்சேரி நடந்தது. நல்ல ரசிகர்கள் கூட்டம் இது. எப்படி என்று கேட்கிறீர் களா? நிறையப் பேர் தமிழர்கள். அப்புறம் சொல்வானேன்? எனக்கு உற்சாகம் தந்தவர் குறிப்பாக இன்னெருவர்—



கிழவர் : அந்தக் காலத் திலே நான் ஆபீசுக்குத் 'தொள தொள'ன்னு பேண்ட் போட்டுண்டு போனு கிண்டல் பண்ணுவியே.... இப்ப அதுவே பேஷனுப் போச்சு பார்த்தியா....!

பத்மினிதான் அவர். ரசிகர் வரிசையில் அவரைப் பார்த்தபோது என் மனம் பூரித்தது. அவர் முன்னிலையில் நடனம் ஆடுவதையும், நுட்பமான அம்சம் ஒவ்வொன்றையும் பற்றிப் பின்னர் அவர் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள லாம் என்பதையும் உணர்ந்தபோது எனக்குத் தனியான உற்சாகம் பிறந்தது.


நிகழ்ச்சி முடிந்து அறைக்குத் திரும்பிய போது இந்த உற்சாகம் அப்படியே இருந்த போதிலும், இன்னெரு கவலை எனக்குள் தோன்ற ஆரம்பித்திருந்தது. அதையும் அம்மாவிடம் சொன்னேன்!

(இன்னும் வரும்...)

பாருங்கள் எப்படி ப்யூரிடாஸ் ஃபில்ட்டர்கள் சாதாரணக் குழாய் நீரை வடிகட்டி அசுத்தங்களை நீக்கி நூற்றுக்கு நூறு தீங்கற்ற நல்ல குடி நீராக ஆக்கிவிடுகிறது

நீர்வழிப் பரவும் நோய்களான காலரா, டைஃபாயிடு, சீத பேதி, இரைப்பை-குடல் அழற்சி முதலியவற்றைத் தடுத்துக் காக்க இதைவிட மேலான உத்தரவாதம் எதுவுமில்லை.

3-இணைப்புத் தடமற்ற, இரசாயனப் பொருள்களை எதிர்க்கும் தன்மையுள்ள, கீறல் விழ முடியாத எபாக்ஸி-பூச்சுப் பெற்ற அலுமினியம் அறை.




1-மேற்புற அறைக்குள் ஊற்றப்படுகிறது குழாய் நீர்.

2-ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை பெற்ற கேண்டல் ஃபில்ட்டர் எல்லாக் கிருமிகளையும் நீரிலிருந்து வடிகட்டி ஒதுக்கிவிடுகிறது.

4-கீழ்ப்புற அறையினுள் நூற்றுக்கு நூறு தூய நீர் குடிக்கத் தயாராகத் திரண்டிடும்.

ப்யூரிடாஸ் இலேசானது, உடையவே உடையாது. தூக்கிச் செல்ல வாகானது, துப்புரவாக்க இலகுவானது.



உங்கள் ஆதரவுக்குரியவர்களுக்கு ஆதரவளியுங்கள். இன்றே பெறுவீர் ஒரு ப்யூரிடாஸ்.



இலவசக் கைப் புத்தகத்திற்கு எழுதுக:

பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு
நவீனமான வசதிகள்

CHAITRA-BLS-19 TAM

உ



திருத்தணிகை

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

ஆடி கிருத்திகை தெப்பல் பெருவிழா

24 – 7 – 73 முதல் 26 – 7 – 73 முடிய

24 - 7 - 73 ஆடி கிருத்திகை

ஐந்தாவது படை வீடான தணிகையில் அமர்ந்துள்ள குன்றுதோறாடும் குமரனுக்குப் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மலர்க்காவடி செலுத்துதல் கண்கொள்ளாக் காட்சி. ஆயிரமாயிரம் மக்கள் முடி காணிக்கை செலுத்துதல் இத்தலத்தின் தனிச்சிறப்பு.

வரும் அன்பர்கட்கு இருக்க இடவசதி, மலைக் கோயிலுக்குச்செல்ல வாகன வசதி முதலியன உள்ளன. தணிகை முருகனுக்குத் தங்கக்கவசம் 4-7-1973 முதல் அணிவிக்கப் பெறுவதை அன்றுடம் ஆயிரமாயிரம் அன்பர்கள் கண்டுகளிக்கின்றனர்.

நினைத்ததை அளித்திடும் மனத்தினை உருக்கிடும் வழித்துணை வந்திடும் திருத்தணி முருகனின் இன்னருள் பெற்றிட வாரீர்! வாரீர்!!

திருக்கோயில் நிர்வாகிகள்,
திருத்தணிகை.

திருக்கோயில் நிலையங்களிலேயே முடி காணிக்கை, பிரார்த்தனை முடிப்புகள் ஆகியவை செலுத்த வேண்டுகிறோம்.

2

தஞ்சாவூர் நினைவுக்கு வந்தது!

“தினமும் 'மேக்கப்' போட்டுக் கொள்வது, மேடையில் நடனமாடுவது இப்படியே இருந்தால் நாம் ஊரைச் சுற்றிப் பார்ப்பது எப்போது?” என்று அம்மாவிடம் கேட்டேன். பதிலுக்கு அவர்கள் என்னைப் பார்த்த பார்வை பரிதாபமாக இருந்தது.

“நாம் இங்கே வந்ததன் முக்கியமான நோக்கம் அதுதானே?” என்று கேட்டாள் அம்மா. என்னால் பதில் சொல்ல முடியவில்லை. ஆனாலும் எங்கள் இருவருக்குமே இந்த முயற்சியிலும் ஓர் ஏமாற்றம்தான். நாங்கள் நடன நிகழ்ச்சி நடத்திய இடங்களிலெல்லாம் பார்க்க வந்தவர்கள் பெரும்பாலும் இந்தியர்களே! அயல்நாட்டினர்





நமது கலையை எவ்வளவு தூரம் ரசிக்கிறார்கள் என்று பார்க்கும் வாய்ப்பு மிக அளவாகத்தான் இருந்தது.

அது மட்டுமில்லை. இந்தியர்களிலும் பலர் இங்கு தொழிலுக்காக வந்திருப்பதை மறந்து, தங்களை மிகவும் பெரிய மனிதர்கள் என்று நினைத்துக் கொள்கிறார்கள். தங்களைப் பற்றி உயர்வாகப் பேசிக் கொள்வதிலும், தற்பெருமை அடித்துக் கொள்வதிலும் அவர்களுக்குத் தனியான ஆர்வம்!

இதற்கு விலக்கானவர்களும் சிலர் இருக்கிறார்கள். எங்கள் நண்பர் பார்த்தசாரதி அந்த வகையில் ஒருவர். இந்தியாவிலிருந்து வரும் நண்பர்கள் என்றாலும் மூன்று வேளையும் சாப்பாடு தயார் செய்து வைத்துக் கொண்டு வரவேற்கக் காத்துக் கொண்டிருக்கிறார். பத்மினிக்கு நன்றாக நடிக்கத் தெரியும்; நடனம் ஆடத் தெரியும்; ஆனால் அருமையாகச் சமையல் செய்யவும் தெரியும் என்பதை நியூஜெர்ஸியில் அவர் வீட்டுக்குப் போனபோது தெரிந்து கொண்டேன்.

கனவுலகில் நான்...



பத்மினியுடன் ....

சினிமா ரிகார்டு போட்டு ஆடுவாயா ?

டெட்ராய்ட்டில் ஒரு நடன நிகழ்ச்சி நடந்தது. அங்கிருந்து வாஷிங்டன் போகும் வழியில் பஃபலோ என்ற இடத்தில் இறங்கினேம்; இருபது மைல் தூரத்தில் உள்ள நயாகரா நீர்வீழ்ச்சியைப் பார்த்துவிட்டு வருவதற்குத்தான். அங்கே போன பின், திரும்பவே மனம் வரவில்லை. மூன்றரை மணி நேரம் அவர்களுக்குச் சுற்றிப் பார்க்கும் வேலை. எனக்கு, அவர்களையும் நீர்வீழ்ச்சியையும் படம் எடுக்கும் வேலை. புகைப்படக் கருவிக்கு முன்னுலேயே இருந்து பழகிப்போன எனக்கு, பின்னுல் இருந்து படம் எடுக்கும் இந்த அனுபவம் வேடிக்கையாக இருந்தது!



அமெரிக்க நண்பர்களுடன் ....

அநேகமாகச் சமையல் செய்வது, வீட்டைத் துப்புரவாக வைத்துக் கொள்வது, துணிமணிகளைச் சலவை செய்வது எல்லாம் மின் இயந்திரங்களாலேயே அங்கு நடந்து விடுகிறது. சாப்பாடு பரிமாறுவதும் காகிதத்தட்டில்தான். அதன் பிறகு அதை நாமே எடுத்து எறிய வேண்டும். அந்தச் சமயத்தில் எனக்கு தஞ்சை மாவட்டத்து வழக்கம் நினைவுக்கு வந்தது!

டெட்ராய்ட் ஒரு தொழில் நகரம். நிறைய இந்தியர்கள்; அதுவும் பஞ்சாபிகள் இங்கே வசிக்கிறுர்கள். நடன நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்கள் பெரும்பாலும் அவர்கள் தாம். பரதக் கலை என்றுலே என்னவென்று தெரியாத கூட்டம் அது. ஆகவே, நடன நிகழ்ச்சி முறைப்படி தொடங்கிச் சிறிது நேரம் ஆனவுடனேயே சினிமா நடனம், ரிகார்டு நடனம், இந்திப் பாட்டுகளுக்கு நடனம் என்று கேட்டு ஆர்ப்பாட்டம்

செய்ய ஆரம்பித்தார்கள். ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் நான் ஆடியவை நான்கு விதமானவை. இரண்டு பரதநாட்டிய அம்சங்கள், இரண்டு கூச்சுப்புடி அம்சங்கள், இரண்டு கதக்களி, இரண்டு இந்திப் பாட்டுக்கள்-இப்படிப் பிரித்துக் கொண்டு ஆடி வந்தேன். பரதக் கலை ஞானமே இல்லாத இயந்திர வாழ்க்கை நடத்தும் இவர்களிடம் நம் தெய்விகக் கலை படும் பாட்டை என்னல் தாங்க முடியவில்லை. என்னிடமே வந்து, ''சினிமா ரிகார்டு போட்டு ஆடுவாயா?'' என்று கேட்டார்கள் சிலர். எனக்கு ஒரே கோபம். மேடை மீதேறி காரசாரமாக ஆங்கிலத்திலும் இந்தியிலும் பொரிந்து தள்ளினேன். அப்புறம்தான் அமைதியாக இருந்து பார்த்தார்கள்.


அதிர்ச்சி தந்த 'போன்' செய்தி!

வாஷிங்டன் வந்து சேர்ந்தோம். வாஷிங்டன், நியூயார்க்கைவிடச் சிறியது. கட்டடங்களையும் சாலைகளையும் பார்த்தால் புதுடில்லி நினைவுக்கு வருகிறது. உலகப் பிரசித்தி பெற்ற 'ஒயிட் ஹவுசை' இங்கே பார்த்தபோது எனக்குக் கென்னடியின் ஞாபகம் வந்தது. அவருடைய சமாதி இங்கு அருகாமையில்தான் இருக்கிறது. லட்சக் கணக்கான வெண்ணிறக் கற்கள் நட்டுள்ள சமாதிகளுக்கு நடுவே கென்னடியின் உடல் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அணையாத ஜோதி ஒன்று எரிந்து கொண்டிருக்கிறது. அவரை உலகம் எப்படி மறக்கும்? அன்பு மனைவியாக வாழ்ந்த ஜாக்குலின் உள்பட...?

அன்று இரவு இந்தியத் தூதர் திரு. கஞ்... எங்களைச் சாப்பாட்டுக்கு அழைத்துச் செ... றிருந்தார். அவருடைய செயலாளரே எங்களுக்காக சமையல் செய்திருந்தார். நாங்கள் அங்கே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த போது, இந்தியாவிலிருந்து அவருக்கு 'போன்' மூலம் செய்தி வந்தது. அதைக் கேட்டதும் நாங்கள் அதிர்ந்து போனோம். சென்னையிலிருந்து டில்லிக்குச் சென்ற போயிங் விமானத்துக்கு நேர்ந்த விபத்தைப் பற்றிய செய்திதான் அது!

எனக்குப் பழக்கமான நண்பர்கள் பலரும், எனது மதிப்புக்குரிய மோகன் குமாரமங்கலமும் அதில் உயிர் துறந்ததைக் கேட்டுக் கலங்கிப் போனே... இந்தியாவின் எதிர்காலத்துக்காக ... தொண்டுகள் செய்ய மோகன் ...வளவோ திட்டங்கள் போட்டிருந்தார். அவருடைய மறைவு எங்கள் எல்லோருக்கும் பெரிய அதிர்ச்சி. என் மனநிலையை வெளியே அதிகம் காட்டிக் கொள்ள முடியவில்லை. ஏனென்றல் அந்த இந்தியத் தூதர் வீட்டில் அதைப் பற்றி ஒருவரும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் ஆட்டத்திலும் பாட்டிலுமே கவனமாக இருந்தார்கள்! (இன்னும் வரும்..)

ஏஞ்சலோவின் கன்னிக்கு ஆபரேஷன்



அது நிகழ்ந்த போது உலகமே திடுக்கிட்டுப் போயிற்று. உலகப் பிரசித்தி பெற்ற சிற்பி மைக்கேல் ஏஞ்சலோ வடித்த அந்த எழிற் சிற்பத்தை, கண் மூடித் திறப்பதற்குள், ஓர் ஆஸ்திரேலிய வெறியன் 'பட், பட்' என்று சம்மட்டியால் தாக்கிச் சிதைத்துவிட்டான்.

அழகே வடிவான கன்னி மாடோன்னுவின் மூக்கு, கண், முன்கை எல்லாமே பழுதுபட்டுக் கோரமாகி விட்டதைக் கண்டு உலகமே கண்ணீ... விட்டது.

அப்புறம் அந்தக் கன்னியை அறவே மறந்தும் விட்டது.

என்ன ஆயிற்று அவளுக்கு?

விபத்தில் அங்கங்கள் பழுதுபட்ட மனிதர்களுக்கு என்ன நடக்கிறதோ அதுவே அவளுக்கும் நடந்தது.

6700 பவுண்டு நிறையுள்ள அந்த கன்னியை அவளுடைய பீடத்... லிருந்து கீழே இறக்கி, 'பிளாஸ்டி சர்ஜரி'க்குக் கொண்டு போனார்கள்.

வாடிகனைச் சேர்ந்த பத்து டெ...ஷியன்கள், மார்பிள் தூள், பிளாஸ்... சில ரசாயனங்கள் ஆகியவற்றின் துணை கொண்டு அறுவை சிகிச்சை செய்தார்கள். இழந்த அவயவங்களை சிருஷ்டித்து ஒட்ட வைத்தார்கள். சிதைந்ததைச் செம்மைப்படுத்தினார்கள்.

இப்போது ஏஞ்சலோவின் புகழ் பெற்ற அந்தக் கன்னியின் முன்னு பதினைந்தடி கண்ணாடிச் சுவர் இரு... கிறது. அதைக் குண்டு துளைக்காது; தீ எரிக்காது; நீர் நனைக்காது.

—ஆர். ஏ.

உங்களுக்காகவே நகரத்தின் மத்தியில்...

விவி

புத்தம் புதிய ஷோரூம்

3

சிந்தாதரிப்பேட்டை,
எழும்பூர், புரசவாக்கம்,
பார்க் டவுன் வாசிகளின்
சௌகரியத்தை
முன்னிட்டு
திறக்கப்பட்டுள்ளது.

சென்ட்ரலுக்கு வெகு அருகில்.
மூர் மார்க்கெட்டுக்கு
எதிரில்.

பின்னி, மபத்லால்

துணிகள்.
குழந்தைகள், பெரியவர்கள்
ரெடிமேடு ஆடைகள்.

நாளைய நாகரிகப் பாதைக்கு இன்றைய வழிகாட்டி ... விவி!

வெங்கடேஷ் வஸ்திராலயா

மூர் மார்க்கெட்டுக்கு எதிரில்,
1, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-3

ADWAVE-VV-90 TAM

தலைவலி அல்லது ஃப்ளூவிலிருந்து
விரைவில் நிவாரணம்!



ஸலோஃபென்

வலி நிவாரண மாத்திரை

அமிர்தாஞ்சன் லிமிடெட் தயாரிப்பு

தலைவலி, ஃப்ளூ, பல்வலி, உடல்வலி ஆகியவற்றிலிருந்து ஸலோஃபென் உடனடியாக நிவாரணம் அளிக்கிறது. அது நம்பகமானது. டாக்டர்கள் கையாளும் மருத்துவ முறைப்படி ஸலோஃபென் தயாரிக்கப்படுகிறது.



FDS/AS/1928 TMD



கனவுலகில்

3

எங்கிருந்தோ வந்தான்!

உலகத்திலேயே மிகவும் உயரமான கட்டடங்கள் சிகாகோவில்தான் இருக்கின்றன. இங்கு கடற்கரை ஓரம் கட்டப்பட்டிருந்த அழகான 'ஹாலிடே இன்' என்ற ஓட்டலில் நாங்கள் தங்கியிருந்தோம். நான் கனவு கண்டபடி சிகாகோவில் பிரமாதமான புதுமை எதையும் நான் பார்க்கவில்லை. இது ஒரு பழைய பட்டினம்!

இங்கே இருப்பவர்கள் பெரும்பாலும் பஞ்சாபி, குஜராத்திக்காரர்கள். கொஞ்சம் தெலுங்கர்களும், தமிழர்களும் இருந்தார்கள். தமிழன்பர்கள் அநேகமாக எனக்கு ஏற்கெனவே பழக்கமானவர்கள். நாங்கள் டில்லியில் இருந்தபோது, எங்களுடன் பழகிய குடும்பத்தினர்தான் இவர்கள். அதனால் எங்களுக்குத் தமிழ் நாட்டு உணவிற்கும் தமிழ்ப் பாணியில் சுவையான காபியும் பஞ்சமில்லாமல் கிடைத்தது.

கார்ன்ப்ளேக்ஸ், பழங்கள், ரொட்டி, பால் - இப்படிக் காலம் தள்ளிக் கொண்டு



எங்கிருந்தோ ...தான்...

இருந்த எங்களுக்கு, இந்த அன்பர்களே ...மயத்துக்கு உதவிய நண்பர்களாகத் தான்றினர்கள். நடனமாட உடம்பில் தெம்பு வேண்டுமே முதலில்!

கச்சேரியை நுட்பமாக ரசிக்க வந்தவர்களைக் காட்டிலும் என்னை சினிமா நடிகையாகப் பார்க்க வந்தவர்களே அதிகம். வெற்றிகரமான இந்திப் படங்களில் என்னைப் பார்த்த அனுபவம்தான் அவர்களுக்கு. நாட்டியக் கலை அமெரிக்காவில் அனுபவிக்கக் கிடைக்காது.—திரைப் படங்களை எவ்வளவோ பார்க்கலாம். இதை அவர்களிடம் நயமாகச் சொன்னேன். அப்படியும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த அன்பரே எங்களிடம் வந்து ''சாஸ்திரீயமான (Classical) நடனம் வேண்டாம். கிராமிய நடனங்கள், பஜன், இந்தியில் மெல்லிசை நடனங்கள் இப்படி ஆடிக் காட்டுங்களேன். அது போதும்'' என்றுர்!

நல்ல வேளையாக நான் இப்படி ஒரு நிலையையும் எதிர்பார்த்துக் கொண்டு தான் போனேன். எங்கள் குழுவில் சென்னை எஸ். ஐ. இ. டி. பெண்கள் கல்லூரியில் படிக்கும் குமாரி பத்மினி வந்திருந்தாள். கிராமிய நடனங்களையும் மெல்லிசை நடனங்களையும் அழகாக ஆடி வந்தாள் அந்தப் பெண். கலாமண்டலம் கோபாலகிருஷ்ணன் அவர்கள் எங்களுடன் வந்திருந்தார். என்னுடைய மோகினி ஆட்ட நிகழ்ச்சிகளுக்கு அவருடைய துணையும், பரத நாட்டிய நிகழ்ச்சிகளுக்குப் பந்தணை நல்லூர் திரு. கிட்டப்பாவின் பயிற்சிகளும் உதவியாக இருந்தன. சென்னையில் உள்ள பிரபல வீணை வித்வான் திரு. கல்யாண கிருஷ்ண பாகவதரின் மகள் லட்சுமி ரங்கநாதன் அமெரிக்காவில் இருக்கிறுர்.

நிகழ்ச்சிகளில் வீணை வாசிக்கவும், பத்மினியுடன் சேர்ந்து கிராமிய நடனங்கள் ஆடவும் அந்தப் பெண் உதவியாக இருந்தாள். அமெரிக்காவின் பழக்க வழக்கங்களைப் பற்றி எங்களுக்கு 'டிப்ஸ்' கொடுப்பாள். வாஷிங்டன், சிகாகோ, நயாகரா நீர்வீழ்ச்சி இப்படிப் பல இடங்களுக்கும் எங்களைக் காரில் அழைத்துச் சென்று சுற்றிக் காட்டியதும் அவளே. லட்சுமியே நன்ருகக் கார் ஓட்டப் பழகியவள். அதனுல் எங்களுக்குச் சௌகரியமாக இருந்தது. சுருக்கமாகச் சொல்லப் போனுல் அவளைப் பற்றி எழுதும்போது எனக்குப் பாரதியாரின், 'எங்கிருந்தோ வந்தான்' என்ற கண்ணன் பாட்டுதான் நினைவுக்கு வருகிறது!

அம்மாவுக்குக் கிடைத்த ஆறு டாலர்!

டென்வரிலிருந்து நடனக் கச்சேரியை முடித்துக் கொண்டு லாஸ் ஏஞ்சலஸுக்குக் கிளம்பினேம். வழியில் விமானத்தில் இடம் மாறவேண்டி இருக்கிறது. அந்த ஊர் லாஸ்வேகஸ். இரண்டு மணி நேரம் அங்கே தங்கியபோது உலகத்திலேயே சூதாட்டத்துக்குப் பெயர்போன ஊர் இது என்று தெரிந்து கொண்டோம். பல பெரிய ஹாலிவுட் நடிகர்கள் ஒவ்வொரு வாரக் கடைசியிலும், குதிரைப் பந்தயத்தில் பங்குகொள்ள இங்கே வருவார்களாம். மேடை மீதும் தோன்றி நடிப்பார்களாம். இந்த உல்லாச நகரத்தில் மது, மங்கை இரண்டுக்கும் குறைவு இல்லை!

நாங்களும் இந்த ஊரில் இரண்டு நாட்கள் தங்க நினைத்தோம். ஆனல்

தொடர்ச்சியாக நடனக் கச்சேரி இருந்ததால் நேரம் கிடைக்கவில்லை. ஓர் ஆசைக்காக விமான நிலையத்தில் இருந்த லாட்டரி இயந்திரம் ஒன்றில் அம்மா ஒரு டாலர் போட்டுப் பார்த்தாள். ஆறு டாலர்கள் கிடைத்தன! அம்மாவுக்கு ரொம்ப திருப்தி.

குழந்தை ஆனேன்!

லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து நாங்கள் போய்ப் பார்த்த இடம் டிஸ்னிலாந்து. அமெரிக்காவுக்கு வருபவர்கள் இங்கே போகாமல் திரும்புவதில்லை. சிறிய நகரம் ஒன்றை அமைத்து, அதில் வைத்திருக்கும் பொழுதுபோக்குகளும் சாதனங்களும் பெரியவர்களை மட்டும் அல்ல, குழந்தைகளையும் கவருகிறது. பெரியவர்களும் குழந்தைகளாக மாறி விளையாட்டுப் பொழுதுபோக்குகளில் ஈடுபடுகிறார்கள். நானும் அங்கே அப்படி ஒரு குழந்தையானேன்!



"இதப்பாரு.... புதுசா வைர நெக்லஸை போட்டுக் கொண்டு வந்திருக்கோம்னு சும்மா அடிக்கடி இருமிக்கிட்டே இருக்காதே... பார்ப்பதற்கு தியேட்டர்லே யாருமில்லே... பேசாம இரு!"

எங்கே அந்த ஹாலிவுட்?

திரைப்படம் என்றாலே உலகத்தில் யாரும் அந்தத் துறையின் தலைநகரமாக இருப்பது என்று சொல்வது ஹாலிவுட்டைத்தான். அந்த ஊரைப் பார்க்க வேண்டும் என்று எனக்குத் தனியான ஆவல். கனவுலகம் ஒன்றை எதிர்பார்த்துச் சென்ற எனக்கு எவ்வளவு ஏமாற்றம்?

ஹாலிவுட் இன்று ஓர் அழுக்கடைந்த பழைய நகரமாகத்தான் இருக்கிறது. ஹாலிவுட் நடிகர்களும் லாஸ் ஏஞ்சல்ஸில் தூரத் தூரத் தள்ளி வீடுகளைக் கட்டிக் கொண்டு வசிக்கிறார்கள். திரை உலகின் கவர்ச்சியை டெலிவிஷன் விழுங்கி விட்டது. பல சினிமா ஸ்டூடியோக்களை மூடி விட்டார்கள். டெலிவிஷன் நிகழ்ச்சிகளில் பங்கு பெறும் நடிக நடிகையர் ஓய்வெடுத்துக் கொள்ள பாரீஸுக்கும் ஸ்விட்ஸர்லாந்துக்கும் போய் விடுகிறார்களாம். எம். ஜி. எம்., இருபதாவது செஞ்சுரி பாக்ஸ் போன்ற பட நிறுவனங்கள் மூலமாகவும், ஸெஸில் பி. டிமெல்லி, ஹிட்ச்காக் போன்ற தனிப்பட்ட தயாரிப்பாளர்களாலும் உலகத்தைப் பிரமிக்க வைத்த ஹாலிவுட் இன்று எங்கே? இதில் சென்னை ஸ்டூடியோக்களின் அழகும் அமைதியும் இல்லை; பம்பாய் ஸ்டூடியோக்களின் கவர்ச்சியும் விறுவிறுப்பும் இல்லை!

ரசிகர்களும் மேடையில் ஆடினார்கள்!

அடுத்ததாக நாங்கள் நடன நிகழ்ச்சி நடத்திய இடம் கனடாவில் உள்ள வான்கூவர். இதைப் பார்க்க மிக அழகாக இருக்கிறது. பெரும்பாலான இந்தியர்கள் பஞ்சாபிகள். பலர் கடைகள் வைத்துத் தொழில் செய்யும் தொழிலாளிகள். பரத நாட்டியம் என்ற கலையின் நுட்பம் கொஞ்சங்கூடத் தெரியாதவர்கள். அதை நான் மேடை ஏறிய பின்தான் தெரிந்து கொண்டேன்!

அவர்களும் மேடை ஏறினார்கள். இந்திப் படப் பாட்டுக்களை "ரிகார்ட் போட்டு ஆடு" என்று ரகளை செய்தார்கள். அந்த கலாட்டாவிற்கு நான் மசியவில்லை. இன்னும் மூன்று நிகழ்ச்சிகள் இருக்கும் போதே கச்சேரியை முடித்துக் கொண்டு விட்டேன். 'இத்தனை அழகான ஊரில் இவ்வளவு அற்பமான ரசனை உணர்ச்சியா?' என்று மனம் வருந்தினேன்.

அத்தை ஆனேன்!

ஸான்பிரான்ஸிஸ்கோவில் நடன நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது என் மனம் சென்னையிலேயே இருந்தது. என் சகோதரனின் மனைவிக்குப் பிரசவம் ஆகும் இருக்க வேண்டிய சமயம் அது. அதைப் பற்றிய ஒரு மகிழ்ச்சிகரமான செய்திக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். 'டிரங்க் - கால்' ஒன்றைப் போட்டு விட்டுப் பதில் எப்போது கிடைக்கும் என்று உட்கார்ந்திருந்தவள், அப்படியே தூங்கி விட்டேன். காலை நான்கு மணிக்கு என்னை எழுப்பிய என் தாய், "உனக்கு மருமகள் பிறந்திருக்கிறாள்!" என்று கொஞ்சம் சர்க்கரையை வாயில் போட்டாள். அதைப் போலச் செய்தியும் இனித்தது!

(இன்னும் வரும்)

முதல்தரமான
முதலீடு!
பெண்மணிகள்,
மைனர் குழந்தைகள்,
தரும நிறுவனங்களின்
ஃபிக்சட் டிபாசிட்
தொகைகளுக்கு


13% வட்டி பெற

SAFI - நிறுவனத்தில் முதலீடு செய்யுங்கள்.

குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் ! குறைந்தபட்சத் தொகை ரூ. 1000/-

விவரங்களுக்கும், விண்ணப்ப பாரங்களுக்கும் விசாரியுங்கள்
மேனேஜிங் டைரக்டர்
சதர்ன் ஆட்டோ & ஜெனரல் பைனான்ஸ் பிரைவேட் லிட்.
186/3, மவுண்ட்ரோடு, சென்னை-600002
(எல்பின்ஸ்டன் தியேட்டர் அருகில்)
போன்: 83334 தந்தி: AUTOASSIST

சேர்மன்,
திரு. R. K ஜனகையா செட்டி
வைஸ்சேர்மன்:
டாக்டர் B. ரெங்கராஜன் M.B.B.S., D.C.H.,
மேனேஜிங் டைரக்டர்:
திரு. V. S. நாகப்பன் M.A., D.B.M.,
வாகனங்களை தவணை முறையில் வாங்கச் சிறந்த நிறுவனம் SAFI



M. பாஷா

ஆஸ்த்மா நிரந்தர சுகம்
புதிய நற்சாட்சி
எம். பாஷா,

13, கார்பாடா ஹைரோடு,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-21.

சென்ற 7, 8 வருடங்களாக ஆஸ்த்மா என்னும் இருமல், இளைப்பு நோயால் நான் பட்ட அவஸ்தைக்கு முடிவே கிடையாதா? என ஏங்கிக் கொண்டிருந்தேன். ஆங்கில வைத்திய முறையில் நான் போடாத ஊசியோ, சாப்பிடாத மாத்திரையோ, மருந்துகளோ கிடையாது.

எனக்கு மறுவாழ்வு கொடுத்த "வைத்தியச் செம்மல்" டாக்டர் எஸ். ஆர். பிள்ளை அவர்களைப் பற்றியும், அவரிடம் ஆஸ்த்மா நோய்க்கு மருந்து வாங்கிச் சாப்பிட்டு குணமடைந்த எனது நண்பர் ஒருவர் சொல்லக் கேட்டு அவர்களைச் சந்தித்து பரிசோதனை செய்து ½ மண்டலம் ஆஸ்த்மா மருந்துகள் வாங்கிச் சாப்பிட்டேன். நோய் பூரணமாக நீங்கி புதுவாழ்வு வாழ்கிறேன். மறுபிறவி எடுத்ததைப் போல் மகிழ்ச்சியுடன் வாழ்கிறேன்.

7-2-73 (ஒ-ம்) எம். பாஷா.

இதுவரை ஆஸ்த்மா நோய்கள் 2000 கேஸ்களுக்கு மேல் சுகப்படுத்தியிருக்கிறோம். உங்கள வயது, தொழில், நோய் விவரம் எழுதினால் எமது தலைமை வைத்தியரிடம்பரிசீலித்து மருந்துகள் தீர்மானித்து விலை தெரிவிக்கிறோம். வசதிப்பட்டவர்கள் நேரில் வரலாம்.

தண்டபாணி வைத்தியசாலை,
இரயில்வே ஸ்டேஷன் ரோடு, பழனி (மதுரை மாவட்டம்) போன்: 260

கிளை: 2/63, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. போன் நிர். 85843



4

காதல் சுதந்திரமா?

கலிபோர்னியாவில் ஒரு நடனக் கச்சேரியை முடித்துக் கொண்டு மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிளம்பினேம். அதுதான், அமெரிக்க நாடுகளில் எனது கடைசி நிகழ்ச்சி. விமானத்தில் அமர்ந்த போது என் உள்ளம் அங்கே கழித்த நாட்களைத் திரும்ப எண்ணிப் பார்த்தது.

வேகமாகச் சுற்றும் இயந்திரம் போன்றது இவர்கள் வாழ்க்கை. பெரிய பெரிய நகரங்களிலும் தெருவில் கார்கள் முதல், கடைகளில் இயந்திரங்கள் வரை நாங்கள் ஒரு 'மெஷின்உலக'த்தையேகண்டோம். உயிருள்ள மனிதர்களுக்கு இங்கே உணர்ச்சியோடு பழக நேரம் இல்லை. குழந்தைகள் பெற்றோர்களைப் பொருட்படுத்துவதில்லை. வயது



அமெரிக்காவிலுள்ள இந்திய தூதுவர் திரு. கவுல் அவர்களுடன் ஹேமமாலினி

ஹேமமாலினி

வந்த கன்னிகள் கட்டுப்பாடற்ற சுதந்திரமான வாழ்க்கையைத் தான் விரும்புகிறார்கள். வாலிபர்கள் இஷ்டம் போலத் துணையைத் தேடிக்கொள்கிறார்கள். நம்முடைய நாடு பின்தங்கியதாக இருக்கலாம். ஆனால் இன்னும் மனித குலப் பண்புகளுக்கு நம் நாட்டில் தான் இடம் தந்து மதிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மண்ணில் பிறந்த பெருமையை நினைத்து என் மனம் உயர்ந்தது; விமானமும் உயரே கிளம்பியது!

கேரளத்து ஞாபகம்!

மேற்கிந்தியத் தீவுகளில் டிரினிடாடில் எங்கள் கச்சேரிகள் ஏற்பாடாகி இருந்தன. நான் போய் இறங்கியபோது அங்கே சுமார் மூவாயிரம் பேர் எங்களை வரவேற்கக் காத்திருந்தார்கள். இந்தியத் திரைப் படங்களுக்கு இங்கே நல்ல வரவேற்பு இருக்கிறது. இந்திய நட்சத்திரங்களை நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள். எனக்குக் கிடைத்த அமோகமான வரவேற்பின் இரகசியம் இதுதான்!

கறுப்பர்களாக இருந்தாலும் வெள்ளை மனம் கொண்ட மக்கள் இவர்கள்; கபடு சூதே தெரியாத அப்பாவி மனிதர்கள். பணக்காரர்கள் பலரும், நல்ல வாழ்க்கை நிலையில் உள்ள மற்றவர்களும்தான் குடிமக்கள். பிச்சைக்காரர்களே கிடையாது! ஆங்கிலேயர்களைப் போலவே உடை அணிவது, பேசுவது, நாகரிகம் எல்லாம். நீண்ட கவுன், மாக்ஸி—இவைதான் பெண்களுடைய உடைகள். அமெரிக்க நீக்ரோக்களும், இந்தியர்களும்தான் இந்தப் பகுதியின் மக்கள். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளான இந்தத் தலைமுறையில் இருவருடைய பண்புகளும் இருக்கின்றன.

தென்னை மரங்கள் நிறைந்த கடற்கரையையும், பலா, வாழை மரங்களையும் பார்த்தபோது எனக்குப் பசுமையான கேரளத்து ஞாபகம் வந்தது. ஆனால் கேரளத்தின் அழகான பெண்களைப் போல இங்கே எங்கே பார்க்க முடிந்தது? இவர்களுடைய கலாசாரமே தனி.

செக்ஸ்—மோகம்!

பல நூற்றாண்டுகளாக இங்கே தங்கிவிட்ட இந்தியர்கள் ஒரு பெரிய இனமாக வாழ்கிறார்கள். இவர்கள் சுத்தமான இந்தியர்கள் என்று குறிப்பிட்டார், எங்களை இங்கே அழைத்துக்



கச்சேரி ஏற்பாடு செய்த திரு. ஹிங்கு மகாதேவ். ஆமாம், இந்தியப் பெயர்களும் கூட நம்முடையதைப் போல, கொஞ்சம் மாறுதலோடு இருக்கிறது, அவ்வளவுதான்.

மற்ற ஒரு வகுப்பு, கறுப்பான, உயரமும் பருமனும் கொண்ட நீக்ரோக்களைப் போன்றவர்கள். கோவில், குளம், கடவுள் எதுவும் கிடையாது இவர்களுக்கு. ஏசுவை வழி படுபவர்களும் உண்டு. முகம்மதியர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களும் உண்டு. கலை என்றால் என்ன' விலை என்று கேட்பார்கள்!

ஆங்கிலேயர் ஆட்சி இருந்ததால் கிரிக்கெட் நன்றாக ஆடுகிறார்கள். அவர்களுக்கு மிகவும் பிடித்த இன்னொன்று - செக்ஸ்! ஆண், பெண் மக்கள் இந்த மோகத்துடன் கலந்து பழகுகிறார்கள்; சுற்றுகிறார்கள். எல். எஸ். டி-யும், மற்ற போதை மருந்துகளும் தண்ணீர் பட்டபாடு. அவர்களுடைய வாழ்க்கையில் இந்த அம்சங்கள் எனக்கு அருவருப்பானதாகத்தான் இருந்தன.

கடலில் கண்ணாடிப் படகில்...

பத்து நாட்கள் தங்கி இருந்தோம். தினமும் மாலை, அலங்காரம் செய்துகொண்டு அக்கறையுடன் ஆடினேன், இனிமையான குரலில் வனஜா நாராயணனும், சகுந்தலா ராமச்சந்திரனும் பின்னணி இசைபாட, திரு. சங்கரன், திரு. சீனுவாசன்—புல்லாங்குழல், மிருதங்கம் வாசிக்க, ஆசிரியர் திரு. கிட்டப்பாவின் நட்டுவாங்கத்துடன் கச்சேரிகள் கச்சிதமாக அமைந்தன. இந்தியர்களும், நீக்ரோவினரும் ஆயிரக்கணக்கில் வந்து இருந்து அமைதியாகப் பார்த்தார்கள். கலாரசனை எவ்வளவு தூரம் இருந்ததோ என்னவோ, கண்ணியமாக நடந்து கொண்டார்கள்!

டிரினிடாடில் கவர்னர் ஜெனரலைச் சந்தித்தோம். அந்த ஊர் மக்கள் இனத்தவர்தான் அவர். நியூயார்க், லண்டன் போன்ற ஊர்களில் படித்துப் புகழ் பெற்றவர். பார்ப்பதற்கு நீக்ரோவைப் போலத் தோன்றினாலும் அடக்கமாகவும், மிகவும் நயமாகவும் பேசிப் பழகினார். கட்டாயம் நடனக் கச்சேரியை வந்து பார்ப்பதாகச் சொன்னார்.

டிரினிடாடின் அருகே இருந்த சிறு தீவு ஒன்றுக்குப் போய்க் கடலில் நீந்திக் குளித்தோம். கண்ணாடிப் படகு ஒன்றில் ஏறிக் கடலில் ஆறு ஏழு மைல்கள் சுற்றிப் பார்த்தோம். கண்ணாடியால் செய்ததாகையால் தண்ணீரில் உள்ள பலவித மீன்களையும், செடி கொடிகளையும் பார்க்க முடிந்தது. திருமதி ஹிங்கோர், கடலில் நீந்திக் குளித்தார்கள். எனக்கும் அலாதியான மகிழ்ச்சி. இதைப் போல அமைதியாக என்னால் பம்பாயிலோ, சென்னையிலோ குளிக்க முடியுமா என்ன?

[புகைப்படங்கள்: ஜெயாசக்ரவர்த்தி]

அடுத்த இதழில் முடியும்

ஹிந்தாலியம்

சமையலறை மற்றும் மேஜைப் பாத்திரங்கள இல்லத்தரசிக்கு இனிய வரப்பிரசாதம்

ஹிந்தாலியம் உங்கள் விருந்தினர்களுக்கு பளிச்சென்று, சுடர்விடும் வரவேற்பளிக்கிறது; அந்நியோன்னியமான குடும்பத்திற்குகந்த இனிய சூழ்நிலையை உருவாக்குகிறது. அதை விசேஷ சந்தர்ப்பங்களிலும் உபயோகிக்கலாம், தினசரி உபயோகத்திற்கும் வைத்துக் கொள்ளலாம்; அது எப்பொழுதும் சிறப்பாகத் தோற்றமளிக்கிறது. கேடரிங் டெக்னாலஜியில் நிபுணரான குமாரி திவ்யா படேல் எச்.எம்.சி.டி. அதிகப்படியான இந்த 5 உன்னதமான காரணங்களுக்காக ஹிந்தாலியம் பாத்திரங்களைச் சிபாரிசு செய்கிறார்.



தரம்	வலுவானவை, நீடித்துழைப்பவை, அதுங்காத் தன்மையுடையவை.
விலை	ஸ்டெயின்லெஸ ஸ்டீல் பாத்திரங்களின் விலையில் மூன்றில் ஒரு பங்குதான்.
தோற்றம்	மழமழவென, வெள்ளியைப்போல தோற்றமளிக்கின்றன, நவீன டிஸைன்களில் தயாரிக்கப்படுகின்றன.
சிக்கனம்	சூட்டை நன்றாகப் பரப்புகின்றன, எண்ணெ அல்லது எரி பொருள் குறைந்த அளவில்தான் தேவைப்படுகிறது.
உபயோகம்	கையாள வசதியானவை, சோப் மற்றும் கந்தல் துணியினால் சீக்கிரமாகவும் சுலபமாகவும் சுத்தம் செய்து விடலாம்.

HINDALIUM ®

இவர்கள் தயாரிக்கும் விசேஷ அலுமினிய கலப்பு உலோகத்தின் ரெஜிஸ்டர்ட் டிரேட் மார்க் ஆகும்.

HINDALCO

ஹிந்துஸ்தான் அலுமினியம் கார்ப்பொரேஷன் லிட்,
தபால் ஆபீஸ் ரேணுகூட்
ஜில்லா, மிர்ஸாபூர் (உ.பி.)



ஹிந்தாலியம் பாத்திரங்கள் நிலையான விலைக்கு விற்கப்படுகின்றன. அதிக விலை கொடுக்காதீர்கள். அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகளிடம் உள்ள ஹிந்தாலியம் பாத்திரத் தயாரிப்பாளர்களின் விலைப் பட்டியலைப் பார்த்து வாங்குங்கள்

Sobhagya HAC-606 TAM

5

கார் சத்தம் கேட்டதும் பாலசந்தர் சற்று பரபரப்படைந்தான். உணர்வு விழித்துக் கொண்டது. காரில் யார் வந்திருப்பார்கள்?

''விமலா!'' - மெதுவாகக் குரல் கொடுத்தான் பாலா. அவள் விலகிக் கொள்ள முயன்றாள். விழிகளில் ஒரு மையல் திரை. மேனியில் நெளிவு.

''விமலா, வெளியே யார்?'' என்றான் அவன்.

''தெரியவில்லை!''

விலகியும் விலகாத நிலையில் பாலாவும் விமலாவும் அருகருகே இருந்தபோது உள்ளே மிடுக்காக நடை போட்டு யாரோ வரும் ஓசை கேட்டது. யார்?

பார்வையில் ஓர் எடுப்பு. ஆஜானுபாகுவான உடல் வாகு. ராணுவ அதிகாரிக்குரிய கம்பீரம் தோற்றத்தில் இருந்தது. மேஜர் ராம்நாத்தான் வந்தார். அவர் வருவார் என்று பாலசந்தர் எதிர்பார்க்கவில்லை. பெங்களூரில் அவர் இருப்பதாக சற்று முன்புதான் விமலா சொன்னாள். 'அதற்குள் எப்படி இங்கே அவர்—?' — பாலா திகைப்புடன் குழம்பியபோது ராம்நாத் அருகிலேயே வந்து விட்டார்.

''ஹலோ, குட் ஈவினிங்..ஹவ் ஆர் யூ மிஸ்டர் பாலசந்தர்?'' என்று உற்சாகமாகக் கூவினார் ராம்நாத்.

அவனைப் பேச விடாதபடி அவரே மகிழ்ச்சி ஆரவாரமிட்டார்:

''மிஸ்டர் பாலசந்தர், உங்களுக்கு நூறு வயசு. வரும்போது உங்களை நினைத்துக் கொண்டுதான் வந்தேன். இங்கேயே உங்களைச் சந்திக்க முடிந்தது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது'' என்றவாறு எதிரே உட்கார்ந்தார்.

''டாடி, நீங்கள் பெங்களூரிலிருந்து வருவதாகத் தெரியப்படுத்தவில்லையே, ஏன்?'' என்றாள் விமலா.

''ஆமாம் விமலா, திடீரென்று புறப்பட்டு விட்டோம்..''

''அப்படியென்றால் வேறு யார் வந்திருக்கிறார்கள்?''

''மிஸ்டர் நாராயண் வந்திருக்கிறார்!'' என்றார் அவர்.

''ஓ! அவருமா இங்கே?''—விமலா வியப்புடன் கேட்டாள். அவளுக்குத் தெரியும். நாராயணும் ராம்நாத்தும் சில தினங்கள் சந்திக்கிறார்கள் என்றால் ஒரு முக்கிய திட்டம் உருவாகும். இப்பொழுது என்ன திட்டமோ? எதற்காக வந்திருக்கிறாரோ?

''நாராயண் இங்கே ஏன் வந்திருக்கிறார் தெரியுமா?''—விமலாவையும் பாலாவையும் பார்த்தபடி ராம்நாத் கேட்டார். விமலா விழித்தாள். பாலசந்தர் மௌனமாக அவரைப் பார்த்தான்.

''உங்களைச் சந்திப்பதற்காகத்தான் மிஸ்டர், பாலா!'' என்று ராம்நாத் நிதானமாகக் கூறினார்.

''என்னைப் பார்க்கவா?''—பாலசந்தர் வியப்போடு கேட்டான்.

''ஆமாம். அதற்கென்றேதான் வந்திருக்கிறார். நீங்கள் நம்புகிறீர்களோ, இல்லையோ!''

''எனக்கும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது'' என்று விமலா சொன்னாள்.

''ஒரு முறைதான் பார்ட்டியில் மிஸ்டர் பாலாவை, நாராயண் சந்தித்திருக்கிறார். ஆனால் அதற்குப் பிறகு பல முறை பெருமையாகப் பேசியிருக்கிறார். மீண்டும் சந்திக்க வேண்டும் என்ற ஆவலில் பெங்களூரிலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறார்.''

ராம்நாத் புன்னகையை விரித்தபடி பாலசந்தரைப் பார்த்தார். விமலாவும் பிடிபடாத பெருமிதத்தோடு அவனைப் பார்த்தாள்.

''மிஸ்டர் பாலா, உங்களுக்கு ஆச்சரியமாகக் கூட இருக்கலாம். உங்களைப் பற்றி தொழில் வட்டாரங்களில் எத்தனை பேர் தெரிந்து வைத்திருக்கிறார்கள், தெரியுமா?

அழைக்கும் விழிகள்...

டபிள்யூ. ஆர். ஸ்வர்ணலதா

நாராயண் சொன்ன பிறகுதான் எனக்கும் கூட உங்களின் அசாத்தியமான தொழில் திறமை தெரிந்தது. நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன்'' என்று மேஜர் ராம்நாத் புகழ்ந்த போது, பாலசந்தருக்கு உச்சி குளிர்ந்து போயிற்று.

''மிஸ்டர் நாராயணை இங்கே அழைத்து வரவில்லையா?'' என்றான் அவன்.

''ஏர் - போர்ட்டிலிருந்து நேராக ஓட்டலுக்குப் போய் விட்டார். அங்கிருந்துதான் நான் வந்தேன். நாளைக்கு முதல் வேலையாக உங்களை அவர் சந்திக்கப் போகிறார்!''

எதற்காக அந்தச் சந்திப்பு? பாலசந்தருக்குப் புரியவில்லை.

பாலாவின் கான்பரன்ஸ் ரூமில் நாராயணும், ராம்நாத்தும் அமர்ந்திருந்தார்கள். சொன்னபடி அவர்கள் சரியான நேரத்திற்கு பாலாவைப் பார்க்க வந்து விட்டார்கள். முக்கியமான பேச்சு வார்த்தை, ஆலோசனை என்றால் மட்டும் ஆபீஸிலுள்ள கான்பரன்ஸ் ரூமை பாலசந்தர் திறப்பதுண்டு.

நாராயண் சொன்னார்: ''மிஸ்டர் பாலா, என்னைப் பொறுத்தவரையில் இந்தச் சந்திப்பு மிக முக்கியமான ஒன்று. முதல் முறை உங்களைப் பார்த்ததுமே உங்கள் மீது எனக்கு ஈடுபாடு ஏற்பட்டு விட்டது. நம்மிடையே நல்ல தொடர்புகள் இருக்க



வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். மிஸ்டர் ராம்நாத் ஓரளவுக்கு இதைப் பற்றித் தெரிவித்திருப்பார் என்று நினைக்கிறேன்!''

''ஆமாம், மிஸ்டர் நாராயண். நேற்றே நாங்கள் பேசிக் கொண்டோம்'' என்று இடையில் குறுக்கிட்டுச் சொன்னார் மேஜர் ராம்நாத்.

நாராயணை, பாலசந்தர் கவனித்தான். ஐம்பது வயதுக்கு மேல் மதிக்கலாம், அகன்ற முகம். கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தார். புகைக் குழாயை வாயில் வைப்பதும் எடுப்பதுமாக இருந்தார். எதற்கும் அஞ்சக் கூடியவர் அல்ல என்பதைப் பார்வை உணர்த்தியது.

''நல்லது...விஷயத்துக்கு வரலாமா?'' என்று ஆரம்பித்தார் நாராயண்.

''சொல்லுங்கள்.'' — பாலசந்தர் பச்சை விளக்கு காட்டினான்.

''மிஸ்டர் பாலா, என்னைப் பற்றி உங்களுக்கு எந்த அளவுக்குத் தெரியுமோ, எனக்குத் தெரியாது. பம்பாயில் மட்டுமே தொழில் நடத்திக் கொண்டிருந்த என்னை இங்கெல்லாம் இழுத்து வந்தவர் இந்த ராம்நாத்தான். ஹி இஸ் மை டியரஸ்ட் ஃபிரண்ட். இவர் கிழித்த கோட்டை நான் தாண்டுவதில்லை என்று வைத்துக் கொள்ளுங்களேன்'' என்றார் நாராயண் சிரித்தபடி.

''அதெல்லாம் ஒன்றுமில்லை, மிஸ்டர் பாலா. இருக்கும் தொழிலை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று தான் மிஸ்டர் நாராயணை சில முறை தூண்டியிருக்கிறேன். அதை அவர் விரும்புகிறார்..'' என்று ராம்நாத் கூறியபோது ''ஆமாம்..ஆமாம்'' என்று தலையாட்டினார் நாராயண்.

''அதற்காகத்தான் இப்பொழுது வந்திருக்கிறேன். ஒரு புதிய தொழில் திட்டத்தைத் துவக்க ஆசை. நான் தனியாக அதைச் செய்ய விரும்பவில்லை. திறமையும் சக்தியுமுள்ள நீங்களும் அதில் சம்பந்தப்பட வேண்டும் என்று விரும்புகிறேன்'' என்று ஆரம்பித்த நாராயண், திட்டத்தை நெடுநேரம் விவரித்தார். அவருக்கு அதில் இருந்த தீவிர ஆர்வம் பாலசந்தருக்குப் புலப்பட்டது. இடையிடையே ராம்நாத்தும் விளக்கம் தந்து கொண்டிருந்தார்.

''புளூ பிரிண்ட் சீக்கிரமே ரெடியாகி விடும். உங்களுக்கு வசதியான தேதியில் மீண்டும் நாம் சந்தித்து அந்த நகல் திட்டம் பற்றிப் பேசி முடிவுக்கு வரலாம். என்ன சொல்கிறீர்கள், மிஸ்டர் பாலா?'' என்றார் நாராயண்.

பாலா சில நிமிட சிந்தனைக்குப் பிறகு, ''பார்க்கலாம்'' என்றான்.

அதற்குப் பிறகு மூவரும் தொழிலைப் பற்றியும், பொதுவாகவும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''விமலா வரவில்லையா?'' என்று ராம்நாத்திடம் கேட்டார் நாராயண்.

''வீட்டில்தான் இருக்கிறாள். இங்கே நாம் தொழில் விஷயமாகப் பேசிக் கொண்டிருக்கும் போது விமலா எதற்கு?'' என்றார் ராம்நாத்.

''உங்கள் பெண்ணாயிற்றே.. உங்களைப் போல் தொழில் மூளை இருக்க வேண்டுமே!'' —நாராயண் கேலியாகச் சொன்னார்.

''விமலாவுக்குக் கொஞ்சம் பிசினஸ் இண்டரஸ்ட் இருக்கவே செய்கிறது. எப்பொழுதும் சுறு சுறுப்பாக இருக்கக் கூடிய டைப்!'' என்று ராம்நாத் கூறினார்.

நாராயண், பாலசந்தரைக் கவனித்தார்.

''விமலாவை அழைக்கட்டுமா?'' என்றான் பாலா.

''பரவாயில்லை; நாம்தான் பேசி முடித்து விட்டோமே'' என்று ராம்நாத் சொன்னார்.

நாராயண் ஏதோ கேட்க விரும்பும் ஆவலில் பாலாவைப் பார்த்தார். அதை உணர்ந்து கொண்ட அவன், ''என்ன வேண்டும் மிஸ்டர் நாராயண்?'' என்றான்.

''உங்கள் செகரட்ரி எங்கே?''

''இப்பொழுது இல்லை.''

''ஓ! நீங்கள் வைத்துக் கொள்ளவில்லையா?'' என்று முணு முணுத்துக் கொண்டார் நாராயண். அவனிடமிருந்து பதில் வரவில்லை.

''செகரட்ரி எதற்கு மிஸ்டர் பாலாவுக்கு? அவரே ஒரு கம்ப்யூட்டர் மாதிரி காரியங்களைக் கவனித்து விடுகிறாரே!''- ராம்நாத் சொன்னார்.

''இருந்தாலும், எல்லா பளுவையும் நாமே சுமக்கக் கூடாது பாருங்கள். செகரட்ரி இருந்தால் எவ்வளவோ ரிலீஃப் இருக்கும். மிஸ்டர் பாலா, எனக்கு ஒன்று படுகிறது. சொல்லட்டுமா?''

''ஓ, தாராளமாக!''

''ஒரு வேளை ராம்நாத் கோபிக்கலாம். விமலாவுக்கு 'பிசினஸ் பிரெயின்' இருப்பதாகச் சொன்னீர்கள் அல்லவா?''

''ஆமாம், அதற்கென்ன?'' என்று ராம்நாத் கேட்டார்.

''மிஸ்டர் பாலாவுக்கு விமலா ஏன் உதவியாக இருக்கக் கூடாது? ஒரு செகரட்ரியாக இருந்து உதவ முடியுமே!'' என்று அடக்கமான தொனியில், ஆழமாகப் பதியும்படி, நாராயண் சொன்னபோது பாலசந்தர் ஒரு கணம் வியந்தே போனான்.

''மிஸ்டர் பாலாவுக்கு அப்படி ஒரு அவசியம் இருக்குமானால் எனக்கு ஆட்சேபமில்லை. விமலாவும் சம்மதிக்க வேண்டுமே!'' என்றார் ராம்நாத்.

''விமலா மறுப்பதற்கு என்ன இருக்கிறது? ஒரு பொறுப்புள்ள வேலையை ஏற்றுக் கொள்வது விமலாவுக்கும் கூட

பெருமையாக இருக்கலாம். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று பாலாவை நாராயண் வினவினார்.

பாலசந்தர் புன்னகை புரிந்தான்.

''நாமே கம்ப்யூட்டர் ஆகி விடக் கூடாது. அதை இயக்குவதுதான் நம் வேலையாக இருக்க வேண்டும், இல்லையா?'' என்றவாறு நாராயண் சிரித்தார்.

மூவரும் சிரித்தார்கள்!

தொழில் திட்டம் பற்றி விரைவில் பெங்களூரில் சந்தித்துப் பேசலாம் என்று நாராயண் சொன்னார். நாராயணின் சந்திப்பும் தொடர்பும் ஒரு களையையும் புதிய உற்சாகத்தையும் உண்டுபண்ணும் என்று பாலசந்தர் கருதினான். விமலாவைப் பற்றி அவர் கூறிய யோசனை அந்த நிமிஷமே மனத்தில் இடம் பிடித்துக் கொண்டது. நிம்மதி நெருங்கி வந்தது [illegible]ால் உணர்ந்தான்.

★

விமலாவை வியப்பில் ஆழ்த்த வேண்டும் என்று பாலசந்தர் நினைத்தான். விஷயத்தைச் சொன்னால் அவள் நிச்சயம் வியப்படைவாள். விழிகள் மலர மலர 'அப்படியா?' என்று இதழ் விரிக்கப் போகிறாள். அப்புறம் என்ன, தினமும் அவள் ஆபீஸுக்கு வருவாள். களைப்போ, கனமோ அவன் நெஞ்சில் தோன்றாத வண்ணம் வேலைகளைப் பகிர்ந்து கொள்வாள். குழப்பமில்லாமல், கொந்தளிப்பு ஏற்படாமல் பழையபடி இயங்கலாம். அவனுள்ளே எத்தனையோ எண்ணங்கள்!

அன்று மாலை ஓட்டலில் சந்திப்பதற்கு விமலாவை அழைத்திருந்தான் பாலசந்தர். நாராயண் சமயத்தில்கூறிய அந்த யோசனை எவ்வளவு நல்லதாகப் போயிற்று. விமலா தனக்கு செகரட்ரியாக இருப்பதில் மேஜர் ராம்நாத்துக்கு ஆட்சேபமில்லை என்பதும் தெரிந்து விட்டது. இனி அவளிடம் நேரடியாகப் பேசி விட வேண்டியதுதான். அதற்காகவே அவளைச் சந்திக்க முடிவு செய்தான். ஆபீஸுக்கு அழைத்து அதைச் சொல்லக் கூடாதா? சொல்லலாம். ஏனோ அதை அவன் விரும்பவில்லை.

சனிக்கிழமையாகையால் பிற்பகலிலேயே வீட்டுக்கு வந்து விட்டான். ஹேமா ஒரு வாரமாக பீதியையோ பரபரப்பையோ உண்டு பண்ணாமல் படுக்கையில் ஓய்ந்தே இருந்தாள். வீட்டில் யாருக்கும் உபத்திரவமாக இல்லை. இதனால் டாக்டர் பிரகாசம் வந்து போகவில்லை. ஹேமாவின் மௌனம் அவனுக்கு ஒரு வகையில் ஆறுதலாக இருந்தது.

பாலசந்தர் கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மாலை ஐந்தேகால் மணி. உடை மாற்றிக் கொள்ளத் தயாரானான். ஆறு மணிக்குள் ஓட்டலுக்குப் போனால் விமலாவுடன் சற்று அதிக நேரம் பேசிக் கொண்டிருக்கலாம். அவளுடன் பேச உட்கார்ந்தால் நேரம் எத்தனை இனிமையாகக் கழிகிறது!



''சாட்சிகளைத் தீர விசாரித்துப் பார்த்ததில் குற்றம் சாட்டப்பட்டவர் இரண்டு திருமணங்கள் செய்து கொள்ளவில்லை என்பது ருசுவாகிறது...எனவே, நீங்கள் வீட்டுக்குப் போகலாம்...!''

''எந்த வீட்டுக்குங்க...?''

கண்ணாடியின் முன்னால் ஒரு நிமிஷம் நின்று பார்த்தான். சில நாட்களுக்குப் பிறகு இன்று ஒரு புதிய தெளிவும் மலர்ச்சியும் முகத்தில் படர்ந்திருப்பதாகத் தோன்றியது. தொழிலதிபருக்குரிய பெருமிதக் களை முழுமையாக அவனிடம் இருக்கிறது என்பதையும் கண்ணாடியில் தெரிந்த உருவம் ஊர்ஜிதப் படுத்தியது.

மணி ஐந்தரை.

பாலசந்தர், அறையிலிருந்து வெளியே வந்தான். ஹேமாவின் அசைவோ, சுவடோ தெரியவில்லை. அவளுக்குத் தொல்லை தராமல் கிளம்ப விரும்பிய பாலசந்தர், அரவமில்லாமல் அடியெடுத்து வைத்தான்.

பத்தடி எடுத்து வைத்திருப்பான்.

பின்னால் காலடியோசை கேட்டது.

தொடர்ந்து—

''எங்கே போறீங்க?'' என்ற குரல்.

எதிர்பாராத சூழ்நிலையில் அந்தக் குரல் கேட்டதால் பாலசந்தர் திடுக்கிட்டான்.

திரும்பிப் பார்த்தபோது ஹேமா நின்றிருந்தாள், அவனை வெறித்துப் பார்த்தபடி.

''ஹேமா..''—அவன் முணு முணுத்தான்.

''எங்கே போறீங்க?'' என்று சன்னமான குரலில் அவள் கேட்டது நெஞ்சில் எதிரொலித்துக் கொண்டேயிருந்தது.

ஒரு நிமிஷம் பாலாவுக்கு ஒன்றுமே ஓடவில்லை.

(தொடரும்.)

கனவுலகில் நான்...

5

ஆடுகள் ஆகலாமா?

வெற்றிகரமாக இவ்வளவு ஊர்களில் நடன நிகழ்ச்சிகள் நடத்திவிட்டு வந்த போதிலும் முக்கியமான இடங்களைக் கூட என்னுல் பார்க்க முடியவில்லை என்பது எனக்கு ஒரு பெரிய ஏமாற்றம். நண்பர்கள் ''கொலரேடோவில் கிரேட் கான்யான் பள்ளத்தாக்கைப் பார்த்த போது உனக்கு என்ன தோன்றிற்று?'' என்று கேட்கிருர்கள். ''பார்த்தேனே, 'மெகனஸ்கோல்ட்' திரைப் படத்தில். பிரமாதமாக இருந்தது'' என்று சிரித்துக் கொண்டே பதில் சொல்லு கிறேன்...

இன்னெரு மனக்குறை, வழக்கமான சாப்பாட்டுக்காக ஏங்கும்படி நேர்ந்தது. ஒரு சில நெருங்கிய நண்பர்கள் வீட்டில் விருந்துக்கு ஒப்புக் கொண்டேன். ஆனு லும் நேரம் இல்லாததால் பெரும்பா லும் தங்கியிருந்த ஓட்டலில்தான் சாப் பாடு. சைவ உணவு என்ருல் அவர்கள் திண்டாடிப் போகிருர்கள். காய்கறி சூப்- பழங்கள்-காய்கறித் துண்டுகள்- இலைகள்- இப்படித் தட்டுக்களில் வைப் பார்கள். கூட இருந்து சாப்பிடும் என் நண்பர்களிடம் ''என்ன? ஆடு ஆகலாமா மறுபடியும்?'' என்பேன். எல்லோரும் சிரிப்பார்கள்.

வெளியே போனல் சில சமயம் அப்பா எப்படியாவது கொஞ்சம் தயிர் சாதம் தயார் செய்துகொண்டு வருவார். டிஸ்னிலாந்திற்கும்கூட இப்படித் தயிர் சாதம் கொண்டு போனேம். ஒன்பது மணி நேரம் அங்கே சிரித்து மகிழ்ந்து, குழந்தையைப் போல விளையாட வேண்டியிருந்தது. பசித்தால் என்ன செய்கிறது? ஐஸ்கிரீமும் கோகோ கோலாவும் போதுமா? - ஆமாம், பெரும்பாலும் அந்த இரண்டும்தான் வெளியே எனக்குக் கிடைத்தவை!

புடவைதான் கவர்ச்சி!

''அமெரிக்காவில் புதிதாக ஏதாவது கற்றுக் கொண்டீர்களா?'' என்று கேட்கிருர்கள். உண்மைதான். ஒன்று கற்றுக் கொண்டேன். உங்களுக்கு இரகசியமாகச் சொல்லுகிறேன்: என் விலையுயர்ந்த அழகான நாட்டிய உடைகளை அழகாக மடிக்கவும், அந்த மடிப்புக் கலையாமல் இஸ்திரி போடவும் கற்றுக் கொண்டதுதான் அது!

பெரும்பாலும் 'மேக்கப்'பை நானே கவனித்துக் கொண்டேன். என் விதம்வித மான உடைகளை அம்மா 'டிஸைன்' செய்து



கொடுத்தார்கள். அம்மாவுக்குக் கற்பனை அதிகம். ஒரு பத்திரிகை அவரைப் பற்றி 'ஓவியம் வரையும், இந்தி நாவல்கள் எழுதும், மாலினியின் அம்மா!' என்று அறிமுகம் செய்து எழுதியிருந்தது!

மினிஸ்கர்ட், பெல்பாட்டம் - இப்படியெல்லாம் அணிந்து கவர்ச்சிக்காக மேல் நாட்டுப் பெண்கள் அலையும் நகரங்களில், நான் பட்டுப் புடவையும், நெற்றியில் குங்குமத் திலகமுமாகத்தான் போனேன். அதுதான் பாரதநாட்டுப் பண்பாடு. ஆனால் அதற்கு எவ்வளவு பிரமிப்பு என்கிறீர்கள்? 'லிப்'டில் போகும்போதும், கடை வீதிகளில் நடக்கும்போதும் இளைஞர்கள் கண்களில் அதிசயம் தோன்றப் பார்ப்பார்கள். ஆனால் அவர்கள் யாரும் என்னை அதற்காகத் தொந்தரவு செய்யவில்லை. புடவை தரும் பெருந்தன்மையான; கண்ணியமான தோற்றம் காரணமாக இருக்குமோ?

மேடைகளில் சில சமயம் எனக்கு இந்தப் பெருந்தன்மையான 'ட்ரீட்மெண்ட்' கிடைக்கவில்லை. சீக்கியர்கள் சிலர் வெள்ளி நாணயங்களை மேடை மீது விட்டெறிவார்கள். காயம் படக்கூடாதே என்று எங்களில் சிலருக்கு கவலையாகக்கூட இருந்தது. மூக்குக் கண்ணாடி அணிந்தவர்கள் சிலரும்கூட மேடையில் வாத்தியங்கள் இசைக்க அமர்ந்திருந்தார்களே! என்னுடைய நிகழ்ச்சிகளில் பெருமை தந்த நேரங்களுக்கு நடுவே, இவற்றை நினைத்தால்கூட அருவருப்பாக இருக்கிறது.


வெளிநாடுகளுக்குக் கலைஞர்கள் செல்லும்போது தூதரகங்கள் அவர்களைப் போதிய அளவு கவனிப்பதில்லை என்று சிலர் சொல்வதுண்டு. இதற்கு விதிவிலக்கு அமெரிக்கத் தூதரகம். திரு. கவுல் அவர்கள் எங்களுக்கு அளித்த கவனிப்பையும், செய்து கொடுத்த உதவிகளையும் என்னால் மறக்கவே முடியாது.

காலஞ்சென்ற அமைச்சர் மோகன் குமாரமங்கலத்தின் மறைவைப் பற்றிய அவர் வருத்தமும், விபத்தினால் அடைந்த மனக் கலக்கமும், அவர் எங்களுக்கு அளித்த விருந்தைப் பற்றிய நினைவில், இப்போதும் பின்னணியாக நிற்கிறது.

வங்காளியில் நடிக்க ஆசை!

"வெற்றிகரமான நடிகை என்பது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று ஒரு நிருபர் என்னைக் கேட்டார். "அதை அடக்கத்துடனும் பணிவுடனும் ஏற்றுக் கொள்கிறேன்" என்று நான் சொன்னேன். நான் ராஜ்கபூருடன் நடித்த படம்—முதல் படம்—ஸப்னோன்கா ஸௌதாகர்—தோல்வி அடைந்தது. அதற்காக நான் மனம் கலங்கவில்லை. தொடர்ந்து மன உறுதியுடன் பாடுபட்டேன். இன்று என்னுடைய நிலைக்கு அந்த உழைப்பும் விடாமுயற்சியும்தான் அடிப்படை.

இப்போது சேர்ந்தாற்போல சுமார் இருபது படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறேன். தயாரிப்பாளர்கள் ஒப்பந்தம் செய்து கொள்ள என்னை மேன்மேலும் தொந்தரவு செய்கிறார்கள். இதற்கே நேரம் இல்லாத போது நான் என்ன செய்ய முடியும்? மிகவும் விரும்பினாலும்



பெற்றோருடன் ஹேமமாலினி

ஹேமமாலினி



""இந்த மாதிரி கத்தியை நான் எத்தனையோ பார்த்திருக்கிறேன்.. இதுக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன்?''

''பின்னே எந்த மாதிரி கத்திக் குத்தான் பயப்படுவீங்க?''

தமிழ்ப் படங்களில் நான் நடிக்க முடியாததற்கு இதுதான் காரணம்.

இருந்தும், சத்யஜித்ரேயின் படம் ஒன்றிலாவது நடிக்க வேண்டும் என்பது எனக்கு ஆசை. உத்தம்குமாரைப் போன்ற நடிகருடன் வங்காளிப் படத்தில் நடிக்க வேண்டும் என்று மிகவும் விரும்புகிறேன். எனக்கு வங்காளி தெரியுமா என்று கேட்கிறீர்களா? கற்றுக் கொண்டால் போயிற்று. இந்தி, உருது, தெலுங்கு—இவற்றைத் தெரிந்து கொண்ட போது, இன்னொரு இந்திய மொழியைக் கற்றுக் கொள்வதில் என்ன சிரமம்?

கனவுக் கன்னியா?

மேற்கிந்தியத் தீவுகளில் பிரயாணம் செய்த போது என்னுடைய பரத நாட்டிய நிகழ்ச்சிகளைப் பற்றி எழுதிய பத்திரிகைகளில் ஒன்று, இப்படி எழுதிற்று: 'சிவப்பும் வெண்மையுமான அழகிய பட்டுப் புடவை, இடையிலும் கழுத்திலும் பளிச்சிடும் நகைகள், தலையில் வெண்ணிறப் பூ அலங்காரம் - இப்படி ஹேமமாலினி ஒரு 'கனவுக் கன்னி'யைப் போல மேடை மீது வந்து நிற்கிறார்'—இந்த வருணனை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆனால், 'கனவுக் கன்னி' என்று என்னைச் சொல்வதுதான் பிடிக்கவில்லை. இன்றும் பல பம்பாய் பத்திரிகைகள் என்னை அப்படித்தான் குறிப்பிடுகின்றன. ஆனால் 'ட்ரீம் கேர்ல்' என்ற அந்தச் சொல்லே எனக்குப் பொய்யமையான ஒரு மாயத் தோற்றத்தைத்தான் கொடுக்கிறது. எனக்கு அப்படிப் பொய்மையாக, கற்பனையாக வாழ விருப்பமில்லை. உயிர்த் துடிப்புடன் உண்மையான ஹேமாவாகத்தான் உங்கள்முன் தோன்ற விரும்புகிறேன்.

இரண்டாவது அதிசயம்!

மேற்கிந்தியத் தீவுகளுக்குப் போன போது கவர்னர் ஜெனரல் ஸர் எல்லிஸ் கிளார்க் என்னைத் தமது மாளிகையில் வரவேற்று உபசரித்தார். என்னுடைய கலைத்திறமையைப் பெரிதும்பாராட்டினார். அந்நியர் ஒருவர் நமது கலையைப் புகழ்ந்தது எனக்குப் பெருமையாக இருந்தது. ''எங்கள் விஸிட்டர் புத்தகத்தில் நீங்கள் கையெழுத்துப் போட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார் அவர். கூடவே வந்து நான் கையெழுத்திடும் போது நின்று கொண்டு கவனித்தார். எனக்குக் கொஞ்சம் கூச்சமாகக் கூட இருந்தது அது!

என்னுடைய பிரயாணத்தில் நிறைய ரசிகர் கடிதங்கள் வந்தன. அவற்றில் சில என்னால் மறக்க முடியாதவை. ஒரு சகோதரி எழுதியிருந்தார்: 'இங்கே ரேடியோவில் உங்கள் வருகையைப் பற்றி டிரினிடாட் வானொலி, அறிவிப்புகள் அளிக்கிறது. அதில் அறிவிப்பாளர் இப்படிச் சொல்கிறார் — இரண்டாவது உலக அதிசயத்தை நாம் விரைவில் பார்க்கப் போகிறோம். முதலாவது உலக அதிசயம் இந்தியாவின் தாஜ்மகால் என்பது உங்களுக்குத் தெரியும். நாம் காணப் போகும் இரண்டாவது உலக அதிசயம் இந்தியாவின் ஹேமமாலினி!'

நான் வெளிநாட்டுப் பயணத்துக்காகச் சென்றது என்னவோ ஆறு வாரங்கள் தாம். ஆனால் அதற்காக ஆறு மாதங்களாகக் கடிதங்கள் எழுதத் திட்டம் போட்டு, தொகுத்து ஏற்பாடுகளைச் செய்தவர் என் தந்தை. ''திரு. சக்கரவர்த்தி ஒரு திறமை மிகுந்த அரசாங்க அதிகாரி!'' என்று என் தந்தையின் நண்பர்கள் சொல்லுவது வழக்கம். அதை இங்கே அனுபவ பூர்வமாக உணர்ந்தேன்!

அப்பாடா! இதோ இந்தியா!

ஜூன் மாதம் இருபத்தைந்தாம் தேதி. நியூயார்க்கிற்கு விமானம் ஏறினோம். அங்கிருந்து மறுநாள் இந்தியாவிற்குப் பயணம். அதை நினைத்தபோது எனக்கு மனம் சிறு குழந்தையைப் போலத் துள்ளிற்று. இருபத்தாறும் தேதி, இரவு எட்டு மணிக்கு கென்னடி ஏர்-போர்ட்டில், ஏர்-இந்தியா விமானத்தில் அமர்ந்தபோது சென்னையைப் பற்றி என் மனம் கனவு காண ஆரம்பித்து விட்டது.

என்னதான் பிற நாடுகளுக்குப் போனாலும், கனவுலகில் கழிந்தது போல இத்தனை நாட்களும் பல்வேறு, பலவிதமான ரசிகர்கள் மத்தியில் கழிந்திருந்த போதிலும், சென்னை மக்களிடையே வந்து சேர்ந்தால்தான் என் மனத்துக்கு நிறைவு. எங்கே எப்படிப்பட்ட புகழ் கிடைத்தால் என்ன? தமிழ் மக்களின் ரசிகத் தன்மையே தனிதான். இந்தப் பயணத்தில் எனக்கு முக்கியமாகத் தெரிந்த உண்மை இதுதான்!


(முற்றும்)

பல லட்சம் பேர்கள் உங்களைப் பார்க்கும்போது, வலுவுள்ள வெண்மையான பற்களைப் பெற்றுள்ள நம்பிக்கை உங்களுக்கு ஏற்பட வேண்டும்



ராஜேஷ் கன்னா கூறுகிறார்:

“மக்ளீன்ஸ் ஃப்ரெஷ்மின்டின்
சுவையே எனக்குப் பிடித்துவிட்டது.
அது என் பற்களை வெண்மை
யாகவும் வலுவாகவும்
வைத்திருப்பதை என்னால்
உணர முடிகிறது.
நான் அதை தினந்தோறும்
உபயோகிக்கிறேன்.”



OBM-1496 R Tam

மக்ளீன்ஸ் ஃப்ரெஷ்மின்ட்

பற்களுக்கு வலிவும் வெண்மையும் தரும் ஆற்றலுள்ள பற்பசை

6

ஹேமாவைப் பார்த்தபடி நின்றிருந்தான் பாலசந்தர். தீனமான குரலில் அரைகுறையாக அவள் கேட்ட கேள்விக்கு என்ன பதில் சொல்வது? அவனுக்குத் திகைப்பு.

எத்தனை ஆவலோடு பாலா புறப்பட்டுக் கொண்டிருந்தான்! அடுத்த பதினைந்தாவது நிமிஷத்தில் விமலாவைச் சந்திக்கப் போகிறோம் என்ற வேகமும் துடிப்பும் போன இடம் தெரியவில்லை. 'விமலா என்ற அழகியைச் சந்தித்துப் பேசுவதற்காகக் கிளம்பிக் கொண்டிருக்கிறேன்' என்று ஹேமாவிடம் சொல்ல முடியுமா அவனால்? நெஞ்சு குறுகுறுத்தது.

ஹேமா வாய் திறக்கவில்லை. அவன் மீது வைத்த விழியையும் அகற்றவில்லை. இப்படியே எத்தனை நேரம் நிற்பாள்? ஆறுதலாக ஒரு பதில் சொல்ல வேண்டும் என்றுதான் பாலசந்தர் விரும்பினான். சட்டென்று எதுவும் சொல்ல முடியாதபடி ஓர் அடைப்பு. ஹேமாவிடம் பொய் சொல்லக் கூசினான்.



அடுத்த விநாடி ஹேமாவின் முகம் மேகமாய் இருண்டது. கண்ணில் கண்ணீர்த் திரை. விசித்தாள். விம்மல் அடங்கவில்லை. திரும்பிப் பார்க்காமல் அறையை நோக்கி நடந்தாள்.

''ஹேமா..!''— பாலசந்தர் அழைத்தான். பதில் இல்லை. மறுபடியும் அழைத்தான். குலுங்கிக் குலுங்கி அழுதபடி அவள் அறைக்குச் சென்றதைப் பார்க்கப் பொறுக்காமல் பாலாவும் பின் தொடர்ந்தான்.

கட்டிலில் விழுந்தாள் ஹேமா. கன்னமெல்லாம் கண்ணீர்க் கோடு.

''ஹேமா, இதோ பார்.. ஏன் இப்படி அழணும்?'' என்று பதற்றத்தோடு கேட்டான். அவள் கேவிக் கேவி அழுதபடி முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

'எங்கே போறீங்க?' என்று கேட்டவள் இன்னும் நான்கு வார்த்தை பேச மாட்டாளா என்றுதான் பாலசந்தர் எதிர்பார்த்தான். அவன் பதில் சொல்லியிருந்தால், அவள் பேசியிருப்பாளோ? எதையோ உள்ளுக்குள் மூடி மறைக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டுதான் ஹேமா இப்படி அழுகிறாளோ? மனப் புழுக்கமும், குழப்பமும் அவனை அழுத்தின.

''ஹேமா, நான் எங்கும் போக இங்கேயே இருக்கிறேன். இதோ பார் என்று இதமாகக் குரல் கொடுத்த பாலா.

அவள் நிமிர்ந்தாள்.

''அப்படியே படுத்திரு ஹேமா.. பக்கத்திலேயே உட்கார்ந்திருக்கிறேன் என்றவாறு நாற்காலியை இழு போட்டுக் கொண்டு உட்கார்ந்த ஹேமாவின் இமைகள் படபடத் அவனையே பார்த்துக் கொண்டி இரண்டு விழிகள் மெது மெ அழுந்தின. இதழ் துடித்து அடங் மூடிய கண்களை ஹேமா திறக்கவில்



ஹேமாவுக்கு என்ன வந்தது? இப்படித் தானே நடந்து கொண்டிருக்கிறது!

ஊமையாக நிற்கிறாள். கண்ணீரை உதிர்க்கிறாள். கட்டிலில் முறிந்துவிழுகிறாள். ஏன்? பாலசந்தர் தவித்துப் போனான்.

மனத்தில் மீண்டும் பனிப்புயல். நடுக்கம். சேகரின் உருவம் பாலாவின் நெஞ்சில் வந்தது. அந்த ஓட்டல் அறை.. கட்டிலில் ஹேமா.. அருகில் சேகர்!

நினைவு சுழன்றது. அந்த வேகத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் கைகளால் தலையைத் தாங்கிப் பிடித்தபடி பாலசந்தர் குமுறினான். அவலம் அவனை ஆட்டி வைத்தது. அந்த சேகர் எங்கே?

குனிந்த தலையை நிமிர்த்தாமல் அங்கேயே உட்கார்ந்துவிட்டான் பாலா.

★

சேகர் நிமிர்ந்து உட்கார்ந்தான். ஆனால் நெற்றிச் சுருக்கங்கள் நீங்கவில்லை. உதட்டைப் பற்களால் அழுத்தியபடி இருந்தான். சிந்தனை மூட்டத்தில் இருக்கும்போது, இப்படித்தான் அவன் உட்கார்ந்திருப்பது வழக்கம். சில கேள்விக்குறிகள் கொக்கி போட்டுக் குடைந்து கொண்டிருந்தன.

ஒன்று மாற்றி ஒன்றாகப் பல முகங்கள் அவனுள்ளே தோன்றிக் கொண்டிருந்தன.

'ஹேமா!'—சேகரின் நெஞ்சில் முணுமுணுப்பு! மருட்சி.

அவன் ஹேமாவைப் பார்த்துப் பல மாதங்கள் ஆகிவிட்டன. அவள் எப்படியிருக்கிறாள்? பாலா என்ன செய்கிறான்?

சேகருக்குத் தெரியாமல் போகவில்லை.

டெலிபோனைச் சுழற்றினான் சேகர். மறுமுனையில் யாரோ எடுத்தார்கள். குரல் கேட்டதும் சேகருக்குச் சிறிது உற்சாகம் தோன்றியது.

"நான்தான் பேசுகிறேன்..." என்றான் சேகர். 'நான்' என்று சொன்னால் புரியுமா? புரியும். இடையிடையே அவன் இப்படித்தான் டெலிபோனில் பேசிக் கொள்கிறான்.

"எப்படி இருக்கிறார்கள்?" என்று சேகர் கேட்டான். யாரைப் பற்றி?

"ஒரு மாறுதலும் இல்லை.. சிகிச்சை அளிப்பதில் பலன் இல்லை என்று டாக்டர் சொல்லிவிட்டாராம்!" — ஹேமாவுக்கு என்பது சேகருக்குப் புரியும்.



"ஒரு கத்தரிக்கோல் கொண்டு வா ஆனாலும் காபி ரொம்ப ஸ்ட்ராங்!"

"ஏன்!" — சேகர்.

"அவருக்கும் இதே கேள்விதான். குழம்பிக் கொண்டிருக்கிறார்."

'அவர்' என்பது பாலசந்தர்தான்!

"அப்புறம் ஒன்றும் செய்யவில்லையா?"

"ஒன்றும் நடக்காது போல் இருக்கிறது. 'அவள்' வந்த பிறகு ஒரு மாதிரியாக இருக்கிறார். மனைவியை மறந்துவிடுவார் போல இருக்கிறது!"

"ஓ அப்படியா?" என்று வியந்தான் சேகர். அவளிடம்—விமலா— அத்தனை சக்தியா என்று உள்ளுக்குள் மலைப்பு.

"சந்திப்பு நடக்கிறதோ?"— சேகர்.

"ஆமாம்.. ஓட்டலில், அவள் வீட்டில்.."

"பிறகு..?" என்றான் சேகர்.

"ஒரு பெரிய திட்டம்.. புதிதாகத் தொழில் தொடங்கப் போகிறாராம்."

அந்த டெலிபோன் உரையாடல் மேலும் சில நிமிஷம் நீடித்தது. சேகருடன் பேசியது யார்?

எதிர்பாராத விபரீதமாக இருந்தது சேகருக்கு. [illegible] சந்திக்க நேர்ந்த [illegible]. நாராயணனும் பாலாவையும் சந்தித்திருக்கிறார்கள். அத்துடன் நிற்கவில்லை. நாராயணனுடன் தொழிலைத் துவக்கப் பாலா சம்மதித்திருக்கிறான்.

விமலா [illegible] வந்து கொண்டிருக்கிறாள்.. இவர்களெல்லாம் யார்? சேகருக்குப் புதிராகத்தான் இருக்கிறதே? [illegible] அவன் ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனதாகவும் தெரியவில்லை.

விமலாவை நினைத்துக் கொண்டான். ஒரு முறைக்குப் பலமுறை நினைக்கத் தோன்றும் வசீகரம் அவளிடம் இருக்கிறது. அதுமட்டுமல்ல, அவளிடம் இன்னும் என்னவெல்லாமோ புதைந்து கிடப்பதாக சேகர் நினைத்தான்.

[illegible] சந்திப்பாகக் கூறி அவள் நினைவை ஒதுக்கிவிட முடியவில்லை. துண்டிக்க முடியாத ஒரு தொடர்பைப் போல் அது நின்று கொண்டிருந்தது நெஞ்சில். அப்படித்தான் ஆகியிருக்கிறது. பாலாவின் பழக்கம் அவளுக்குக் கிடைத்திருக்கிறது. இருவரும் சந்தித்துக் கொள்கிறார்கள். வெறும் சந்திப்போடு அது நின்றுவிடுமா?

[illegible] என்கிறார்களே. அவர் [illegible] புரிந்திருப்பாரோ? அவருக்கும் நாராயணனுக்கும் என்ன தொடர்பு? சேகர் எண்ணிப் பார்த்தான்.

இவர்களோடு சேர்ந்து பாலா ஒரு பெரிய தொழிலைத் தொடங்க முடிவு செய்திருப்பது எந்த அடிப்படையில்? பாலசந்தரை அவனைவிட நன்றாகப் புரிந்து கொண்டவர்கள் இருக்க முடியாது. [illegible] முக்கிய விஷயங்களில் சேகரின் யோசனையைக் கேட்ட பிறகுதான் முடிவு செய்வது பாலாவின் வழக்கம். இப்பொழுது அது முடியுமா? பாலாவை அவன் சந்திக்க முடியுமா? முகம் கொடுத்துப் பேச முடியாதபடி ஒன்று நடந்துவிட்டதே!

சேகருக்குக் கொஞ்சம் தவிப்பாகவே இருந்தது.

பெங்களூரிலேயே தொழிலை நிறுவப் போகிறார்கள் என்பதும், நாராயணனுடன் [illegible] பெங்களூருக்கு வரப் போகிறான் என்பதும் அவனுக்குக் கிடைத்துள்ள தகவல். அவர்களைச் சந்தித்துப் பேசப் போவது நிச்சயம். விமலாவும் கூட அப்பொழுது வரக்கூடும்.

சேகர் ஒரு தீர்மானத்திற்கு வந்தான்.

விமலாவுக்குச் சோர்வு தட்டியது. ஆறு மணிக்கு ஒட்டலுக்கு வந்தவள், இன்னமும் பாலசந்தருக்காகக் காத்திருந்தாள். எவ்வளவு நேரம் தனியாக உட்கார்ந்திருக்க முடியும்?

'பாலசந்தர் என்னை எதற்காக இங்கே காக்க வைக்க வேண்டும்? ஏதாவது அவசர வேலை ஏற்பட்டிருக்கலாம். இல்லையென்றால் இத்தனை நேரம் தாமதிக்க மாட்டார். டெலிபோனிலாவது அவர் தகவல் கூறியிருக்கலாம். என்ன ஆயிற்றோ?'—என்னவெல்லாமோ சமாதானம் சொல்லிக் கொண்டாள்.

நேரம் ஆக ஆக மனம் வெறிச்சோடிக் கொண்டிருந்தது. எழுந்து போகவும் மனம் இல்லை. ஒட்டலில் சந்திக்கலாம் என்று பாலசந்தர் கூறியபோது குரலில் துடித்த ஆர்வத்தை அவள் நினைத்துக் கொண்டாள்:

'நீங்கள் அழைப்பதைப் பார்த்தால், ஏதோ முக்கிய விஷயம் இருக்கும் போலத் தெரிகிறதே!' என்றாள் விமலா.

'விஷயமில்லாவிட்டால் விமலாவை அழைக்கக் கூடாதா?' என்று அவன் கேட்டான்.

'இல்லை.. நீங்கள் எங்கு அழைத்தாலும் நான் வருவேன்!' என்று கூறிச் சிரிப்பைச் சிந்தினாள்.

இப்பொழுது அவளால் சிரிக்க முடியவில்லை. பாலா இன்னும் வரவில்லையே என்ற தவிப்புத்தான் மூண்டிருந்தது. ஒரு காரியத்தோடுதான் தன்னை அவன் அழைத்திருப்பான் என்று நிச்சயமாக அவளுக்குப் பட்டது.

ராம்நாத் சொன்னதை விமலா நினைத்துக் கொண்டாள்:

''என்னை இனிமேல் கவனிக்க உனக்கு நேரம் இருக்காது'' என்றார் ராம்நாத்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள், டாடி?''

''உனக்குப் பெரிய பதவி கிடைக்கப் போகிறது!''

''பதவியா! எனக்கா..?''

''ஆமாம்; விமலா.. நீ ஏற்றுக் கொள்வாய் அல்லவா?''

''புரியும்படிச் சொல்லுங்களேன்'' என்றாள் விமலா.

''உன்னை செகரட்டரியாக்கிக் கொள்ள பாலசந்தர் நினைப்பது போல் தெரிகிறது.''

''நீங்கள் ஏதாவது சொன்னீர்களா?''—விமலா துடிப்போடு கேட்டாள்.

''நான் என்ன சொல்ல முடியும்? 'விமலா அல்லவா சம்மதிக்க வேண்டும்' என்று ஜாடையாகச் சொன்னேன். இப்பொழுது சொல், நீ விரும்புகிறாயா, விமலா?'' என்றார் ராம்நாத்.

அவள் புன்னகையோடு ராம்நாத்தைப் பார்த்தாள்.

''நீங்கள் சொல்கிறீர்கள். அவர் சொன்னால்தானே நிச்சயமாக இருக்கும்' என்றாள்.

''பாலா இதற்காக உன்னை அழைக்கலாம். அல்லது அவரே நேராக வரக் கூடும்!'' என்று ராம்நாத் சொன்னார்.

அழைப்பு வந்தது. அவள் வந்து காத்திருக்கிறாள். அழைத்தவன்தான் இன்னும் வரவில்லை.

ராம்நாத் சொன்ன இன்னொரு செய்தியையும் அவளால் மறக்க முடியவில்லை.

''பாலசந்தருக்கு ஒரு நண்பன் இருந்தானாம். செகரட்டரியைப் போலவும், அட்வைஸர் மாதிரியும் நெருக்கமாக இருந்தானாம். ஏதோ மனஸ்தாபம் போலிருக்கிறது. நாலைந்து மாதங்களுக்கு முன் பிரிந்து விட்டானாம்'' என்று அவர் சொன்னார்.

'அது யாராக இருக்கும்?' என்று அறிந்து கொள்ள வேண்டும் போல் இருந்தது விமலாவுக்கு.

ராம்நாத் தொடர்ந்து சொன்னார்: ''பாலாவின் அந்த நண்பன் பெரிய திறமைசாலியாம். சேகர் என்று பெயர். அவன் பக்கத்தில் இருந்தபோது பாலா துளிக்கூட கவலையில்லாமல் இருந்தாராம். இப்பொழுது அவருக்கு உதவியாக இருக்கப் பொறுப்பான ஒருவர் தேவை என்று தெரிய வந்தது!''

விமலா சற்றே யோசனையில் ஆழ்ந்தாள்.

'சேகர்' என்று ராம்நாத் பெயர் சொன்னபோது, யாரையோ மனக்கண் முன்னால் நிறுத்தி வைத்துப் பார்க்கத் துடிப்பது போல் ஒரு உணர்ச்சி அவளுக்கு.

அவள் அந்த நேரம் குழம்பிய மாதிரி இருந்தாள். ராம்நாத் ஏதோ பேசிய பிறகு அவள் நிதானத்திற்கு வந்தாள்.

விமலா நேரத்தைப் பார்த்தாள். இரவு எட்டு மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது.

இதற்கு மேல் காத்திருப்பதில் அர்த்தம் இல்லை என்று தோன்றியது. பாலசந்தர் வருவது நிச்சயமில்லை என்று முடிவு கட்டிக் கொண்டு அவள் எழுந்தாள்.

மனம் கனத்துப் போயிருந்தது. ஏமாற்றம் அழுத்துவதைப் போல் உணர்ந்தாள். நேராக வீட்டுக்குப் போய்ப் படுக்கையில் விழ வேண்டும் போல் இருந்தது.

ஒட்டலுக்கு வெளியே வந்த விமலா, டாக்ஸியை எதிர்பார்த்து நின்றபோது, அவளருகே ஒரு கார் வந்து நின்றது. அவள் ஒதுங்கி நிற்க முயன்றாள்.

''விமலா'' என்ற குரல் காரிலிருந்து வந்தது. அவள் வியப்போடு காரைப் பார்த்தாள்.

(தொடரும்)


அணிந்து
பெருமை
அடையுங்கள்...
கட்டுடல் காளைக்கு கச்சிதமான பனியன்
ராம்ராஜ்
பனியன்கள்.
RAMRAJ
BANIANS.
RAMRAJ KNITTING FACTORY
TIRUPUR-4.

என்று சொல்லவே தரமில்லை! அதனால் நீங்கள் வந்தால்தான் நான் போவதாக இருக்கிறேன்! உங்கள் வரவால் பொறுமைப்படுகிறவர்கள் என் வரவாலும் பொறுமைப்படத்தான் செய்வார்கள்! ஆகையால் அவற்றைப்பற்றி யெல்லாம் பேசிக் கொண்டிருக்க இது சரியான நேரமில்லை! இப்போது நம் இருவருக்குமே தேவை மன்னரின் உயிர்! அந்த உயிரைக் காப்பது ஒன்றுதான் நமது குறிக்கோளாக இருக்க வேண்டும்! வாருங்கள்!'' என்றாள்.

''மன்னிக்க வேண்டும். நான் ஒரு சங்கல்பம் செய்து கொண்டிருக்கிறேன். மன்னரை அவரது அறையில் சென்று பார்ப்பதில்லை என்பதுதான் அந்தச் சங்கல்பம். அப்படி ஒரு சங்கல்பம் செய்து கொண்டதற்குக் காரணம் இல்லாமல் இல்லை! அதைப் பிறகு சொல்லுகிறேன்!''

''இந்த நேரம் எல்லாவற்றையும் கடந்த ஒரு நேரம்! இந்த நேரத்தில் நம்முடைய சொந்த சங்கல்பங்களைப் பற்றி யெல்லாம் சிந்திக்கவே கூடாது! ஏன் தெரியுமா? மன்னர் இப்போது உயிரோடு ஊசலாடிக்கொண்டிருக்கிறார். இந்த ஒரு பயங்கரமான சூழ்நிலையில், நாம் சங்கல்பத்தின் பேரால் ஒதுங்கி விட்டோமானால், பின்னர், மன்னரை எப்போதுமே காண முடியாதவாறு ஓர் அவல நிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம். அதனால், இளையபிராட்டியார் எதையும் நினைக்காமல் என்னுடன் வரவேண்டும்!''

செவ்வந்தியின் எச்சரிக்கையும் அச்சுறுத்தலும் இளைய பிராட்டியின் மன உறுதியைச் சலனப்படுத்தி விட்டன. ''சரி, நானும் வருகிறேன்'' என்றாள்.

அதுவரையிலும் மௌனமாக எல்லாப் பேச்சுக்களையும் கேட்டுக் கொண்டிருந்த அமைச்சர் பெருவுடையார், இளைய பிராட்டி தனது சம்மதத்தைச் செவ்வந்தியிடம் தெரிவித்ததும், அதை ஏற்க விரும்பாமல், ''இளைய பிராட்டி! நீங்கள் இப்போது அங்கு வருவது முறையில்லை! உங்கள் முடிவைச் செவ்வந்திக்காக மாற்ற வேண்டாம்! செவ்வந்தியை மட்டும் அனுப்புங்கள்'' என்றார்.

செவ்வந்தி, ''முடியாது! இளைய பிராட்டி வரவில்லை யென்றால் நானும் வருவதற்கில்லை!'' என்றாள்.

''உனக்காக மன்னர் தன் உயிரோடு போராடிக் கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து புறப்படு!''

''இளைய பிராட்டிக்காக என் உள்ளம் சத்தியத்தோடு போராடிக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்து பேசுங்கள்!''

''நீ மட்டும் அங்கு வரப் போகிறாயா இல்லையா?''

''இளைய பிராட்டியோடுதான் வருவேன்! அதற்கு உங்கள் சம்மதம் உண்டா இல்லையா?''

''என் சம்மதத்தால் எவ்விதப்பயனும் இல்லை! மகாராணியார் சம்மதிக்க வேண்டும்!''

''போங்கள் மகாராணியாரிடம்! சம்மதம் பெற்று வாருங்கள்! எப்படியும் நான் தனித்து வருவதாக இல்லை!'' என்றாள் செவ்வந்தி.

அப்போது ஓர் ஏவலன் பதறியபடி வந்து, ''அரசரின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது! சீக்கிரம் வாருங்கள்'' என்றான் அமைச்சரிடம்.

அமைச்சர் இன்னது செய்வது என்று புரியாமல் தடுமாறினார். செவ்வந்தி, ''சீக்கிரம் உங்கள் மகாராணியாரிடம் சம்மதம் பெற்றுக் கொண்டு வாருங்கள்!'' என்றாள் முடிந்த முடிவாக.

(தொடரும்)



''என்ன சார் இது அநியாயம்.! ரெண்டு ரூமுக்கு வாடகை 200 ரூபாய் கேட்கிறீங்களே! கொள்ளையடிக்க வேண்டியதுதான் !...''

''உங்க இஷ்டம்! நீங்க குடித்தனம் வந்த அப்புறம் என்ன வேணும்னாலும் செய்யுங்க.!...''

அழைக்கும் விழிகள்...

டபிள்யூ. ஆர். ஸ்வர்ணலதா

7

விமலா இன்னும் வியந்து கொண்டு தான் இருந்தாள். அன்றிரவு ஓட்டலில் மணிக்கணக்கில் காத்திருந்ததால் ஏற் பட்ட மனச் சோர்வுடன் அவள் வீட்டுக் குப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது பாலசந்தர், காருடன் எதிரே வந்து நிற் பான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

''எக்ஸ்கியூஸ் மீ, மிஸ் விமலா... எவ்வளவு நேரம் காக்க வைத்து விட்டேன்...'' என்றான் பாலா.

''அதனால் என்ன...இதோ இப் பொழுது நீங்கள் வந்து விட்டீர்களே!'' என்று சற்று மலர்ச்சியோடு விமலா சொன்னாள்.

''நேரமாகி விட்டது. உங்களை வீட்டில் 'டிராப்' பண்ணி விடுகிறேன். நாளைக்குப் பேசிக் கொள்ளலாம் அல்லவா?''—பாலா கேட்டான்.

''உங்கள் விருப்பம்!'' என்றாள் அவள்.

விமலா, காரில் ஏறிக் கொண்டாள். போகும்போது அவளிடம் பாலசந்தர், ''விமலா, நாளைக்கு ஆபீசுக்கு வர முடியும், அல்லவா?'' என்றான்.

''நிச்சயமாக வருகிறேன்.''

''ஆமாம். நான் எதிர்பார்க்கிறேன்'' என்று பாலசந்தர் கூறினான்.

விமலா இறங்கிக் கொள்வதற்காக காரை நிறுத்தியபோது, ''இவ்வளவு நேரம் காக்க வைத்ததற்காக என்மேல் வருத்தம் இல்லையே?'' என்றான் அவன்.

''எனக்கென்ன வருத்தம்?'' என்ற வாறு அவள் இறங்கிக் கொண்டாள்.

பாலசந்தர் வந்திராவிட்டால்கூட 'ஏன் நீங்கள் வரவில்லை' என்று விமலா கேட்டிருக்க முடியாது. 'என்னால் வர முடியாது. நீங்கள் வீட்டுக்குப் போகலாம்' என்று ஓட்டலுக்கு டெலிபோன் செய்து விமலாவுக்கு அவன் தகவல் கொடுத் திருக்கவும் முடியும். அவன் காரை எடுத்துக் கொண்டு ஏன் வந்திருக்க வேண்டும்? தன்னை மதித்துத்தான் பாலா வந்திருக்கிறான் என்று நினைத்துக் கொண் டாள். அதிலிருந்து இன்றுவரை விமலா எத்தனை மகிழ்ச்சியாக இருக்கிறாள்! அடுத்த நாள் பாலாவின் ஆபீசுக்கு அவள் போனாள். அப்பொழுது நேர்முக மாகவே தன் எண்ணத்தை அவள் சொன்னான். அவளும் எதிர்பார்த்தது தானே!

''நீங்கள் விரும்பினால் எனக் சம்மதம்தான். ஆனால் என்னிட அத்தனை திறமை இருக்கிறதா என் சந்தேகம்'' என்றாள் அவள், நாண கலந்த புன்னகையுடன்.

பாலா சிரித்துக் கொண்டான். அ வளவுதான். ஒரு மாதம் போன வேக தெரியவில்லை. அவள், அவனுச் செகரெட்டரி. தினமும் விமலா ஆபீசுக் வந்து கொண்டிருந்தது பாலாவுக் புதிய உற்சாகத்தைத் தந்தது.

பாலசந்தர் யோசனையில் ஆழ்ந்தி தான். பெங்களூரிலிருந்து நாரா சில முறை டெலிபோன் செய்திருந்த மேஜர் ராம்நாத்தும் அங்குதான் இ தார். முன்பு கூறிய தொழில் திட் பற்றிப் பேசி முடிவு செய்வதற் பாலசந்தரை பெங்களூருக்கு அழைத்த நாராயண். சீக்கிரமே பாலசந் வந்தால் வசதியாக இருக்கும் என்று அவர் வற்புறுத்தினார். பெரிய திட்டம். தன்னால் முழு அள வுக்கு அதில் கவனம் செலுத்த முடியுமா என்ற கேள்வி பாலா வுக்கு. ஒரு வழியாக அவன் முடிவுக்கு வந்தான்:



''விமலா, நாராயண் ளூருக்கு அழைத்திருக்கிறார், இல் அங்கே போக வேண்டியிருக்கி என்றான் பாலசந்தர்.

'எப்பொழுது புறப்பட வேண் என்பது போல் அவனை விமலா தாள்.

''நாளைக்குப் புறப்பட வேண்டும். இருவரும் போகிறோம். பயண ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டும், விமலா...'' என்று சொன்னான் அவன்.

''ஆகட்டும்'' என்றாள் விமலா மகிழ்ச்சியுடன்.

*

நாராயண் நெஞ்சை நிமிர்த்தியபடி மேஜர் ராம்நாத்தைப் பார்த்தார்.

''மேஜர் என்றால் நீங்கள்தான் மேஜர். எவ்வளவு மேஜரான ஒரு விஷயத்தை சுலபத்தில் முடித்து விட்டீர்கள்!'' என்று சிரித்தார் அவர்.

''முடிந்த விஷயமாக எப்படிச் சொல்ல முடியும்? பாலசந்தர் இங்கு வந்து பேசிய பிறகுதானே முடிவு தெரியும்'' என்றார் ராம்நாத்.

''இன்னுமா சந்தேகம்...? நீங்கள் ஒரு பக்கம்...விமலா ஒரு பக்கம். பாலசந்தர் மறுக்க முடியுமா? செகரெட்டரி விமலா நினைத்தால் இனி எதையும் சாதிக்க முடியும், அல்லவா?'' - நாராயண் கண்ணைச் சிமிட்டிக்கொண்டு சிரித்தார்.

''மிஸ்டர் நாராயண், உங்களுக்கு எப்பொழுதுமே அவசரம்...எந்த விஷயமும் உங்களுக்கு வியாபாரந்தான். லாபத்தைப் பற்றியே கணக்குப் போடுவீர்கள்...!''

''ஓ...அதில் என்ன தவறு? இன்று வரை எனக்கு எல்லாமே லாபமாகத் தானே இருக்கிறது! அதற்குத் துணையாக நீங்களும் கிடைத்திருக்கிறீர்கள். பாலசந்தரும் சேர்ந்து கொள்ளப் போகிறார்'' என்றார் நாராயண்.

இருவரும் இரண்டு நிமிஷம் மௌனமாக ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''என்ன யோசிக்கிறீர்கள், ராம்நாத்?'' — நாராயண் அமைதியைக் கலைத்தார்.

''பாலசந்தரைப் பற்றித்தான்!'' என்றார் ராம்நாத்.

''அவருக்கென்ன, நாளைக்கு வரப் போகிறார். நாம் பேசப் போகிறோம். நம்முடைய வட்டத்திற்குள் அவரும் இனிமேல் சுற்றி வரப் போகிறார்.''

''பாவம்! பாலசந்தரை நினைத்தால் எனக்கு சில சமயங்களில் வருத்தமாகவும் இருக்கிறது...''

''வருத்தமா? உங்களுக்கா? நமக்கு வேண்டாத விஷயமாயிற்றே அது'' என்றார்நாராயண்.



''மிஸ்டர் நாராயண்...பாலசந்தரின் மனைவியைப் பற்றித்தான் சொல்ல வந்தேன்.''

''தெரிந்ததுதானே! மனக் கோளாறு என்று நீங்கள்தானே சொன்னீர்கள்! புதிதாக என்ன சொல்லப் போகிறீர்கள்?''

''மனைவியைப் பற்றிய கவலை, புது முயற்சிகளில் பாலா இறங்குவதற்கு ஒரு தடையாக இருக்குமோ என்ற சந்தேகம் அடிக்கடி ஏற்படுகிறது'' என்றார் ராம்நாத்.

''விமலா அருகில் இருக்கும்போது தடையா? விமலா சொல்கிறபடி பாலா எதையும் செய்ய மாட்டார் என்று நினைக்கிறீர்கள்?''—நாராயண் கேட்டார்.

''பார்ப்போம்'' என்றார் ராம்நாத்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது ஸ்கிரீனுக்கு அப்பால் யாரோ நிற்பது தெரிந்தது. நாராயணும், ராம்நாத்தும் அந்த உருவத்தைக் கவனித்தார்கள். தங்களைச் சந்திப்பதற்காக அந்த நபர் வெளியே காத்திருக்கக்கூடும் என்று நினைத்தனர்.

''யார் அங்கே?'' — ராம்நாத் குரல் கொடுத்தவாறு எழுந்து போனார்.

''குட் ஈவினிங் சார்!'' என்ற பதிலுடன் ராம்நாத்தை ஏறிட்டுப் பார்த்தபடி நின்றிருந்தான் ஒருவன்.

''என்ன வேண்டும் உங்களுக்கு?'' என்று ராம்நாத் கேட்டார்.

''ஐ ஆம் மிஸ்டர் பிரபு... பிசினஸ் விஷயமாகப் பார்த்துப் பேச வேண்டும் என்று வந்தேன். வெளியே யாரும் இல்லாததால் இங்கே வந்து விட்டேன்'' என்றான் பிரபு.

''யெஸ்... கம் இன்...'' என்றவாறு உள்ளே வர அனுமதித்தார் ராம்நாத்.

''இவர் மிஸ்டர் பிரபுவாம். சந்தித்துப் பேச வந்திருக்கிறாராம்'' என்று நாராயணிடம் அறிமுகப்படுத்தினார் ராம்நாத். பிரபு அவருடன் கைகுலுக்கினான்.

ஒரு நிமிஷத்தில் பிரபுவை அளந்து விட்டார் நாராயண். நல்ல எடுப்பான தோற்றம். நாகரிகமாக உடையணிந்திருந்தான். கண்ணாடியும், தாடியுமாக இருந்ததால் சற்று வயது கூடின மாதிரி ஒரு தோற்றம்...ஆனால் சுறுசுறுப்பாக இயங்கக் கூடிய ஆசாமி என்பதை முதல் பார்வையிலேயே உணர்ந்து கொண்டார் நாராயண்.

''மிஸ்டர் பிரபு...டேக் யுவர் ஸீட்'' என்றார் அவர்.

''ம்...என்ன சொல்ல விரும்புகிறீர்கள், சொல்லுங்கள்'' என்று அவனிடம் விவரம் கேட்க ஆரம்பித்தார் ராம்நாத்.

''சில வெளிநாட்டுக் கம்பெனிகளுக்குப் பிரதிநிதியாக இருந்து வருகிறேன். அந்தக் கம்பெனிகள் சம்பந்தப்பட்ட ஏற்றுமதி இறக்குமதி வேலைகளைக் கவனிக்கிறேன்'' என்று பிரபு சொன்னான்.

''மகிழ்ச்சி. அப்புறம்?'' என்றார் நாராயண்.

''நீங்கள் பெரிய தொழிலதிபராக இருப்பதால் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள விருப்பம்... உங்க[illegible]கு நான் உதவமுடியும் என்று நினைக்கிறேன். எப்படி நான் பயன்பட முடியும் என்று நீங்கள் சொன்னால் உதவியாகஇருக்கும்' —பிரபு நிதானமாக அவர்களிடம் கூறினான்.

உரையாடல் சிறிது நேரம் தொடர்ந்தது.

''மிஸ்டர் பிரபு...நீங்கள் எங்களை சந்திக்க வந்தது பற்றி மகிழ்ச்சி. அடுத்த முறை நீங்கள் வரும்போது உங்கள் உதவி எங்களுக்குத் தேவைப்படும் என்று நம்புகிறோம். சில புதிய தொழில்களைத் துவக்கப் போகிறோம். உங்கள் விலாசத்தைத் தருகிறீர்களா?'' என்றார் ராம்நாத்.

''இப்போதைக்கு எந்த விலாசத்தையும் உங்களுக்குத் தருவது நல்லதில்லை. நான் வர்த்தகப் பிரதிநிதியாக இருப்பதால் பல நகரங்களுக்கும் சென்றுகொண்டிருக்கிறேன். பெங்களூருக்கு வரும்போது நானே உங்களை வந்து பார்க்கிறேன். உங்களுக்கு ஆட்சேபமில்லையே?'' என்றான் பிரபு.

நாராயண் தலையசைத்தார். விடை பெற்றுக் கொண்டான்.

''மிஸ்டர் நாராயண்... ஆள் எப்படி கெட்டிக்காரனாக இருப்பான் போல தெரியவில்லை?'' - ராம்நாத் கேட்டார்.

''ஆமாம். இவன் நமக்குப் பயன்படுவான் போல் தெரிகிறதே'' என்றார் நாராயண்.

*

விமான நிலையத்தில் ராம்நாத்தும் நாராயணும் காத்திருந்தார்கள். இன்னும் சில நிமிஷங்களில் விமானம் வந்து விடும். பாலசந்தரை எதிர்கொண்

அழைப்பதற்காக இருவரும் வந்திருந்தார்கள். விமலாவுடன் வருவதாக பாலசந்தர் தகவல் தெரிவித்திருந்தான்.

விமான நிலையத்தில் பெரிய கூட்டம் இல்லை. அந்த ஃப்ளைட்டில் வருகிறவர்களை எதிர்பார்த்து வந்திருப்பவர்கள் மட்டுமே பாசஞ்சர் டெர்மினலுக்கு வெளியே நின்றிருந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் நாராயணனும் ராம்நாத்தும் வி.ஐ.பி.களைப் போல் தோன்றினார்கள். இருவருமே வாட்டசாட்டமான, 'உயர்ந்த' மனிதர்கள்.

எல்லை மீறிய உற்சாகம் அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதை முகங்கள் உணர்த்தின. அவர்கள் யாரையும் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

ஆனால் இரண்டு கண்கள் மட்டும் அவர்களைத் தொலைவிலிருந்து ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தன.

சேகர்தான் ஓரிடத்தில் ஒதுங்கி நின்றிருந்தான், யாரும் சட்டென்று கண்டு கொள்ள முடியாதபடி. அவர்களுக்கு மத்தியில் அவனும் நிற்க முடியாதே!

பாலசந்தர் அன்றைக்கு பெங்களூருக்கு வரப் போகிறான் என்பது அவனுக்குத் தெரியும். நேற்று டெலிபோனில் தகவல் கிடைத்தது.


விமலா செகரெட்டரியான செய்தியும் சேகருக்குத் தெரிந்திருந்தது. புதிய தொழிலைப்பற்றி நாராயணனுடன் பேசி முடிவு செய்வதற்காக பாலசந்தர் வருவதுபற்றியும் சில விவரங்கள் அவனுக்குக் கிடைத்தன. அதையெல்லாம் அவனுக்கு டெலிபோனில் கூறுவது யார்?

பாலசந்தரைத் தூரத்திலிருந்தாவது பார்க்கவேண்டும் என்ற துடிப்பு சேகருக்கு. பல மாதங்கள் ஓடி விட்டன. இப்பொழுது பாலா எப்படியிருப்பானோ என்ற மனவேகம். விமான நிலையத்திற்கு நாராயணனும், ராம்நாத்தும் வருவார்கள் என்பது அவனுக்குத் தெரியும். அவர்களுக்குத் தெரியாமல் அவனும் வந்து நின்றிருந்தான்.

அடுத்த சில நிமிஷங்களில் விமானம் தரையிறங்கியது. விமலாவும் பாலாவும் விமானத்திலிருந்து வெளியே வந்தார்கள்.

''மிஸ்டர் நாராயண்...அதோ, மிஸ்டர் பாலா... பக்கத்தில் விமலா!'' என்று ஆர்வத்தோடு கூவினார் ராம்நாத்.

''யெஸ்...தே ஆர் கமிங்...'' என்றார் நாராயண்.



''புதுசா வந்திருக்கானே சங்கர், வேலையிலே பம்பரமா சுத்துவான்னு மானேஜர் சொன்னாரே...! இப்ப அந்த டைப்பிஸ்ட் விஜயாவை சுத்தி சுத்தி வந்து கொண்டிருக்கான்...!''

அந்தக் குரல் சேகரின் செவியிலும் மோதியது. பாசஞ்சர் டெர்மினலை நோக்கிப் பாலாவும் விமலாவும் வந்து கொண்டிருந்ததை விழி மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தான் சேகர்.

இருவரும் அருகருகே வருவது அழகாகத்தான் இருந்தது! எத்தனை பொருத்தமான ஜோடி என்று பார்ப்பவர் வியக்கும்படிதான் அவர்கள் தோன்றினார்கள்.

''மிஸ்டர் பாலா, வாருங்கள்... பயணம் சுகமாக இருந்ததல்லவா? விமலா சௌக்கியமா, அம்மா...?'' —மகிழ்ச்சியோடு கேட்டுக்கொண்டே ரோஜா மாலையை பாலாவுக்கு அணிவித்தார் நாராயண்.

விமலாவைப் பார்த்துப் புன்னகை புரிந்தார் ராம்நாத்.

''வண்டி இதோ நிற்கிறது. நாம் புறப்படலாம்'' என்றவாறு நாராயண் பாலசந்தருக்கு வழி காட்டிக்கொண்டு துள்ளல் நடை போட்டார்.

நான்கு பேரும் காரில் ஏறும்வரை சேகர் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

கார் புறப்பட்டதும் ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்தான். கார் தூரத்தில் போய்க் கொண்டிருந்தது. சேகர் பின் தொடர்ந்தான்.

(தொடரும்)



லின்டாஸ்-V-34-77 TM   இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.




கோலாப்பூரில் இருக்கும் மஹாலட்சுமி கோவில் மிகவும் பிரசித்தி பெற்றது. இங்கு தேங்காய் உடைப்பதில்லை. தேங்காயை அம்மன் சந்நிதியில் வைத்து எடுக்கிறார்கள். திருப்பதி வெங்கடாசல சுவாமியின் முதல் மனைவியான மஹாலட்சுமி, சுவாமி மேல் கோபித்துக் கொண்டு கோலாப்பூர் வந்து விட்டதாகச் சொல்கிறார்கள். திருப்பதியிலிருந்து ஒவ்வொரு வருஷமும் மஹாலட்சுமிக்குக் கல்யாண சீர் வருவதாகச் சொல்கிறார்கள். —சரோஜா.

மிக்ஸ்சரோ அல்லது, 'போஹா' எனப்படும் அவல் உப்புமா போன்ற ஏதாவது ஒன்றைச் சாப்பிடுகிறார்கள்.

குழந்தைகளின் படிப்பில் மிகவும் ஆர்வம் கொண்டவர்கள் மராட்டியப் பெண்கள் என்கிறார் குமாரி **சுரேகா போல்.** குழந்தைகள் படிப்பதற்குத் தங்களால் இயன்ற எல்லா உதவிகளையும் பெற்றோர் செய்கின்றனர் என்று பெருமையுடன் சொல்கிறார் இந்த இளம்பெண்.

மாலையில் கணவனுடன் (சில வேளைகளில் குழந்தைகளுடன்) தமக்குத் தெரிந்தவர்கள் வீட்டிற்குச் செல்கின்றனர். நடுத்தர வகுப்பு மக்கள் தம்மால்



திரு. பெட்டே.

முடிந்த மட்டும் கோயிலுக்குச் செல்கின்றனர். பூஜைகளையும் தப்பாமல் சரிவரச் செய்கின்றனர். ஒவ்வொரு நாள் ஒவ்வொரு கடவுளுக்குச் சிறந்தது. திங்கள்-சிவனுக்கும் (சங்கர் என்கிறார்கள் இங்கு), வியாழன் - தத்த தேவருக்கும், வெள்ளி - கௌரிக்கும், சனி-அநுமான், சனி பகவான் ஆகியோருக்கும் உரிய நாட்கள். இந் நாட்களில் உபவாசங்களைக் கிரமப்படி அனுசரிக்கின்றனர்.

கதிரவன் சாயும் அந்தி வேளையில் மீண்டும் 'நிரஞ்சன்' விளக்கு ஏற்றப்படுகிறது. எல்லோரும் நமஸ்கரிக்கின்றனர்.

நாடகம், இசை இவற்றை நன்றாக அனுபவிப்பவர்கள் மராட்டியர்கள் என்று திரு. பெட்டே சொல்கிறார். இவை அநேகமாக இரவில் நடப்பதால், இரவு உணவு உட்கொண்டபின் இவை நடக்கும் அரங்கிற்குச் சென்று விடுகின்றனர்.

இரவு உணவும் பகல் உணவைப் போலவேதான். இசை, நாடகம் இவை இரவு 2 மணிவரை நடந்தாலும் கடைசி மட்டும் அவற்றைப் பார்த்துக் கேட்ட பின்பே வீடு திரும்புவோம் என்கிறார் **திரு. பெட்டே.**

சாதாரண நாட்களில் இரவு 10-30 மணிக்கு மராட்டியப் பெண் உறங்கச் செல்கிறாள். கச்சேரி நாடக நாட்களில் சிவராத்திரிதான். வீடு திரும்பிய பின் எவ்வளவு நேரம் கிடைக்கிறதோ, அவ்வளவுதான் உறக்கம். மீண்டும் நாளை விடிந்து விடுகிறது. 'தமாஷா' எனப்படும் கலை (இது நம் தெருக்கூத்திற்கு இணையானது) மக்கள் கவனத்தை மிகவும் ஈர்க்கிறது இந் நாட்களில். முன்பு ஏழை எளியோரின் பொழுது போக்காக இருந்த இது, இப போது பட்டண மக்களின் கவனத்தையும் ஈர்ப்பது, இதன் உயர்வைக் காட்டுகிறது. கட்டணம் குறைந்த இக் கலையை மக்கள் ஆதரிப்பது 'சிக்கனம்' என்பதாலோ என்னவோ, இவை தாற்காலிகமாக அமைக்கப்படும் கூடாரங்களில் நடக்கின்றன. ஆண், பெண் இருவரும் பங்கெடுத்துக் கொள்கின்றனர்.

—ஜெயலட்சுமி ராம்சந்தர்.

அடுத்த இதழில்:
கணவன் பெயரைச் சொல்லலாமா?

அந்தப் பெரிய ஓட்டலின் ஒரு மூலையில் பல 'காட்டேஜ்'கள் அடுத்தடுத்து இருந்தன. அமைதியான இடம். மரங்களும், மலர்ச் செடிகளும் நிறைந்திருந்தன. ஓர் அழகிய காட்டேஜுக்கு வெளியே கார் நின்றிருந்தது. உள்ளே கலகலப்பும் சிரிப்பும் கலந்த உரையாடல் நடந்து கொண்டிருந்தது. பாலசந்தரும் விமலாவும் அங்கேதான் தங்கியிருந்தார்கள்.

பாலசந்தர், ராம்நாத், நாராயண், விமலா-நால்வரும் பேசிக் கொண்டிருந்தனர். நாராயண் நேரத்தைப் பார்த்தார்.

''சரி, நாம் புறப்படலாமா? ஃபாக்டரி ஸைட், ஆபீஸ், மற்ற இடங்களைப் பார்க்கவேண்டுமே!''என்றார் நாராயண்.

''ஓ! போகலாம்'' என்று பாலசந்தர் தயாரானன்.

''விமலா, நீ இங்கேயே இருக்கலாம். சில இடங்களுக்குப் போய்விட்டு ஆபீஸுக்கு வந்ததும் காரை அனுப்புகிறோம். நீ நேராக ஆபீஸுக்கு வந்து விடலாம். சரி தானே?'' என்றார் ராம்நாத்.

''ஆமாம். விமலா இங்கேயே கொஞ்சநேரம் ஒய்வாக இருக்கட்டுமே'' என்று நாராயணும் சொன்னர்.

மூவரும் வெளியே வந்தார்கள். கார் புறப்பட்டது.

விமலாவின் மனம் துள்ளியது. சில மணி நேரத்தைத் தனிமையில் விரட்ட வேண்டுமே! ஓர் இசையை முணுமுணுத்தவாறு கட்டிலில் விழுந்தாள். ஸ்பிரிங் கட்டிலும், டன்லப்பில்லோ மெத்தையும் அவளைத் தொட்டிலாட்டின. சுகமான முணு முணுப்புடன் அவள் அருகிலிருந்த ரேடியோவை மெதுவாகத் திருப்பினள். இனிய இசை அவள் செவியோடு செவியாய் கிசுகிசுத்துக் கொண்டிருந்தது. விமலாவின் நெஞ்சில் அது மையலைத் தெளித்தது.

சேகருக்குச் சில நிமிஷங்களாகவே ஒன்றும் தோன்றவில்லை. பாலசந்தர் நாராயணின் காரில் புறப்பட்டுப் போனதை அவன் பார்த்தான். அவன் அந்த மரத்தடியில் நின்றிருந்ததை அவர்கள் பார்த்திருக்க முடியாது. மூவரும் போகும் வேகத்தைப் பார்த்தால் இப்போதைக்குத் திரும்பமாட்டார்கள் என்ற முடிவுக்கு சேகர் வந்தான். எங்கே போவார்கள் என்பதையும் அவனுல் நிதானிக்க முடிந்தது.


அடுத்து என்ன செய்வது?

விமலா...!

விமலாவின் முகம் நிலவாய் நெஞ்சில் வந்தது. தனிமையில் அவள் இருக்கிருள். இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்றுதானே சேகர் எதிர்பார்த்திருந்தான்! கைக்கு எட்டும் பொருளாக விமலா இப்போது இருக்கிருள். இனி யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? சேகர் ஒரு நெடுமூச்சு விட்டான். உள்ளத்தில் உரமேறியது.

காட்டேஜை நோக்கி விரைந்தான்.

8



கதவைச் சாத்திக் கொண்டு விமலா உள்ளே இருப்பாள் என்றுதான் எதிர் பார்த்தான். ஏனோ கதவு தாழிடப்படாமலேயே இருந்தது. ஓசைப்படாமல் மெதுவாகக் கதவைத் தள்ளிக் கொண்டு அவன் எட்டிப் பார்த்தபோது—

விமலா கட்டிலில் ஒய்யாரமாகச் சாய்ந்திருந்தாள். கையில் ஒரு கவர்ச்சியான சினிமா பத்திரிகை. அவள் கவனம் பத்திரிகையில் பதிந்திருந்தது; சேகரின் கவனம் அந்த உயிர்ச் சிற்பத்தில் படிந்திருந்தது.

விமலா அசையவோ, புரளவோ இல்லை. எத்தனை நிமிஷம் இப்படிப் பார்த்துக் கொண்டே நிற்க முடியும்? மனத்தில் மின்னல் கீற்றுகள் முறிந்தன. புரியாத [illegible]கத்தில் நாளங்கள் முறுக்கேறிக் கொண்டிருப்பதை சேகர் உணர்ந்தான். இன்னும் சில நிமிஷம் அவளைப் பார்த்துக் கொண்டுநின்றால், தான் தானாக இருக்க முடியாது என்ற எண்ணம் கிளர்ந்தது. அவ்வளவுதான். விமலாவை இனி பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. அருகே போய்ப் பேச வேண்டும்; அடிமனத்தில் வேரூன்றிக் கொண்டிருக்கும் கேள்விகளுக்கு விடை கிடைக்க வேண்டும்.

பார்வையைச் சடக்கென்று திருப்பிக் கொண்டு கதவைச் சாத்தினான். அந்த எதிர்பாராத ஓசையைக் கேட்டுத் துள்ளியவாறு திரும்பினாள் விமலா.

கதவைப் பார்த்தபடி திரும்பாமல் நின்றிருந்தான் சேகர். அவன் முதுகுதான் தெரிந்தது. முகம் தெரியவில்லை. விமலாவுக்கு வியப்பு! பாலசந்தர்தான் திரும்பி வந்து விட்டானோ என்று நினைத்தாள். புறப்பட்டுப் போய் ஒரு மணி நேரம்கூட ஆகவில்லை. அதற்குள் ஏன் திரும்ப வேண்டும்? ஒருவேளை தன்னை அழைத்துப் போவதற்காக வந்திருக்கலாமோ? நினைத்தவாறு அவள் படுக்கையிலிருந்து எழுந்தாள்.

''ஓ, நீங்களா?'' என்றவாறு மகிழ்ச்சியோடு அருகே போனாள்.

அவன் திரும்பவில்லை.

''ஏன் நின்று விட்டீர்கள்?'' என்று மறுபடியும் விமலா குரல் கொடுத்தாள்.

டபிள்யூ.ஆர்.ஸ்வர்ணலதா



அலுவலகப் பணியில் ஆற்றலுடன்
விளங்கிட, மாலை விருந்திலோ
கண்ணுக்கு விருந்தாகிட...

பெண்மை பொலிவு

பின்னி

ஸில்க் புடவைகள்

வெங்கடேஷ் வஸ்திராலயா
பின்னி ஸில்க் புடவைகளை மிகப் பெருமளவில் விற்பவர்கள். மற்றும் மபத்லால், பாம்பே டையிங், லக்ஷ்மி, ஸி.ஸி.எம். மில்களின் புடவைகள்.
நானிய நாகரிகப் பாதைக்கு இன்றைய வழிகாட்டி... விவி!

VV பேஸ்மெண்ட் ஷோரூம்
(ஏர்கண்டிஷண்ட்)
வெங்கடேஷ் வஸ்திராலயா

<u>ஷோரூம் 1 & 2</u>
ஹைகோர்ட் எதிரில்
சென்னை-1
<u>ஷோரூம் 3</u>
சென்ட்ரல்
அருகில்,
மூர்மார்க்கட்
எதிரில்.
1, பூந்தமல்லி
நெடுஞ்சாலை,
சென்னை-3



ADWAVE-W-101

உங்கள் குழந்தைக்கு
3 மாதங்கள் ஆகியிருந்தால்,
உங்கள் பாரெக்ஸ் புத்தகம்
பெறுவீர்

இலவசம்



டாக்டர்கள் கூறுகிறார்கள். 3 மாதங்கள் ஆன பிறகு, முழுமையான வளர்ச்சிபெற உங்கள் குழந்தைக்குத் தேவை, திட உணவு. குழந்தையின் முதல் திட உணவான பாரெக்ஸ் பற்றி முழு விவரங்களும் அறிக.
இக் கூபபனுடன் தபால் செலவுக்காக 20 பைசா தபால்தலை இணைத்து, இன்றே அனுப்புக: டிபார்ட்மென்ட் A-6-B, தபால்பெட்டி 16558, பம்பாய் 18 டபிள்யூ பி. (எந்த மொழியில் வேண்டுமெனத் தெரிவிக்க.)

உங்கள் பெயர் ____________________

____
(கொட்டை எழுத்துக்களில்)
முகவரி ____________________

____
(கொட்டை எழுத்துக்களில்)
குழந்தையின் வயது ________ மொழி ______

CMGF-33-161 TM

சேகர் திரும்பினான். அந்தப் பார்வையைச் சந்தித்த விமலா பதற்றத்தில் நடுநடுங்கிப் போனாள்.

''நீங்களா?''-வியப்போடு அவள் கேட்டாள். படபடப்பு ஓயவில்லை.

சேகர் அவளை நிமிர்ந்து பார்த்தான், 'நானேதான்' என்று பதில் கூறும் பாவனையில்.

''மிஸ் விமலா, என்னைத் தெரிகிறதா?''—அவன் தணிந்த குரலில் கேட்டான்.

''நீங்கள்...?'' — தழுதழுப்போடு விமலா வினவினாள்.

''ரேஸ்கோர்ஸில் என்னைப் பார்க்கவில்லையா?''

அவள் தலையசைத்தாள்.

''அதற்கு முன் என்னை எங்கேயாவது பார்த்ததுண்டா?'' என்றான் சேகர்.

அவள் இமைகள் படபடக்க, வார்த்தையின்றி அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

''பார்த்ததில்லையா?'' — மீண்டும் அவன் கேட்டான்.

பதில் இல்லை.

''நீங்கள் யாரைப் பார்க்க இங்கே வந்தீர்கள்?'' என்றாள் விமலா.

''விமலாவைத் தேடித்தான்!''

''ஏன்? என்னை எதற்காகத் தொடர வேண்டும்?''

சேகர் சிரித்தான். அவள் முகம் சினத்தால் சிவந்தது.

''விமலாவின் உதவி எனக்குத் தேவை'' என்றவாறு மறுபடியும் சிரித்தான் சேகர். அவள் பீதியோடு அவனைப் பார்த்தாள்.

''மிஸ்டர், நீங்கள் யாராக இருந்தாலும் எனக்குக் கவலையில்லை. இப்பொழுதே நீங்கள் வெளியே போக வேண்டும். ஒரு பெண் தனித்திருக்கும்போது திருடனைப்போல் உள்ளே நுழைய உங்களுக்கே வெட்கமாக இல்லை?'' என்று அவள் சீறினாள்.

''சாதாரணப் பெண்ணாக இருந்தால் வந்திருக்க மாட்டேன். ஒரு பெரிய கம்பெனியின் செகரட்டரியாயிற்றே... துணிவான ஒரு பெண் தனிமையைப் பற்றிப் பயப்படமாட்டாள் அல்லவா?''

விமலா அவனை முறைத்துப் பார்த்தாள்.

''நீங்கள் வெளியே போகிறீர்களா, இல்லையா?''

''பயப்பட வேண்டாம் விமலா. இங்கே நாம் இருவரும்தான் இருக்கிறோம். பாலசந்தர் இப்பொழுது வரமாட்டார். கொஞ்ச நேரம் இங்கே நான் இருந்துவிட்டுப் போக அனுமதி கொடு'' என்றான் சேகர்.

அவள் பேசவில்லை. டெலிபோன் அருகே போனாள். ரிசீவரைக் கையில் எடுக்க முயன்றபோது—

''விமலா, நில்..அதைத் தொடாதே!'' என்று அதிர்ந்தான். அவளும் அதிர்ந்து போய் நின்றாள்.

''டெலிபோன் செய்து யாரையும் அழைத்து விடலாம் எனறு நினைக்காதே. ஒரு செகரட்டரியைப்போல் நடந்து கொள், விமலா!''—சேகர் அடக்கமாகச் சொன்னான். அவள் குழம்பிப் போயிருப்பதை முகம் உணர்த்தியது.

''விமலா, ஆத்திரப்படாதே... உட்கார்ந்து பேசுவோம்'' என்றவாறு அவளருகே வந்தான் சேகர்.

''என்னிடம் பேசுவதற்கு நீங்கள் யார்?'' என்று குமுறினாள் அவள்.

''நான்...நான்...'' என்று அவன் ஏதோ சொல்ல நினைத்து, விமலாவைப் பார்த்தபோது மனத்தில் பொறி கிளர்ந்தெழுந்தது. விமலாவின் விழிகள் அவனுள்ளே ஊடுருவித் தடுமாற வைத்தன. அதற்கு மேல் அவனால் நிற்க இயலவில்லை. ''விமலா!'' என்று முனகியவாறு அவளருகே நெருங்கி வந்தான். அவளைப் பற்றிக்கொண்டான். அவள் திமிறினாள். பிடியிலிருந்து நழுவி அவனைத் தாக்கத் துடிக்கிறாள் என்பது அரைகுறையாக அவனுக்குப் புரிந்தது. அது அவளால் முடியாது என்று துணிவோடு அவளை இறுகப்பற்றிய போது அவள் கூச்சல் எழுப்பினாள். எதிர்ப்பு அடங்கவில்லை.

அப்பொழுது—

கதவை யாரோ தட்டினார்கள்.

சற்றே திகைத்தான் சேகர்.

மறுபடியும் கதவு தட்டப்பட்டது.

சேகரின் பிடி தளர்ந்தது.

விமலா வெறுப்போடு அவனை முறைத்துப் பார்த்தாள். வெளியே யாரோ காத்திருக்கிறார்கள். சமயத்தில் உதவி வந்திருக்கிறது. இல்லையென்றால் சேகரிடம் சிக்கி...அவள் நிம்மதி அடைந்தவள் போல் நெடுமூச்சு விட்டாள்!

கதவைத் தட்டுவது யார்?



"உன்னோடு வேலை பார்க்கிற சீனு எனக்கு தூரத்து உறவு... தெரியுமா?"

"அப்படியா!... என்ன உறவு?"

"எங்க அப்பாவுக்கு பிறந்த பதினாலு பிள்ளைகளிலே நான் மூத்தவன். அவன்தான் கடைசி!..."

சேகர் செயலற்றுப் போனான். பாலசந்தர் திரும்பி வந்திருப்பான் என்றே அவனுக்குத் தோன்றியது. விமலா இப்பொழுது கதவைத் திறந்தால்...? பாலசந்தர் உள்ளே வரலாம். சேகர் அவனை ஏறிட்டுப் பார்க்க முடியுமா? எந்த முகத்தோடு அங்கே அவன் நிற்க முடியும்?

உள்ளமும் உடலும் நடுங்கின. எப்படியாவது அங்கிருந்து தப்ப வேண்டும். பாலசந்தரைப் பார்க்கும் துணிவு தனக்கு இல்லை என்று அவன் நினைத்தான்.

விமலா அவனை ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட்டு, கதவைத் திறப்பதற்காக நகர்ந்தாள். தடுமாற்றத்துடன் பின்புறத்திற்குப் பாய்ந்து போனான். கண்கள் நாலு பக்கமும் துழாவின. ஒரு கணம் நம்பிக்கை அவன் முகத்தில் சுடர் பரப்பியது. பின்புறத்திலும் ஒரு கதவு.

விரைவாக அந்தக் கதவைத் திறந்து கொண்டு ஒரே பாய்ச்சலில் பாய்ந்தான். இடறி விழுந்தான். காலில் சிராய்ப்பு. அதைப் பொருட்படுத்தாமல் நிமிஷத்தில் அங்கிருந்து மறைந்து போனான் சேகர்.

விமலா கதவைத் திறந்தாள். பாலசந்தர் அங்கே நிற்கவில்லை. நாராயணின் டிரைவர் பணிவோடு நின்றிருந்தான்.

"உங்களை ஆபீஸுக்கு அழைத்து வரச் சொன்னார்கள்" என்றான் டிரைவர்.

"இதோ வந்து விடுகிறேன்...." என்றவாறு உள்ளே வந்த விமலா கண்ணாடியின் முன்னால் நின்றாள். படபடப்பு ஓய்ந்திருந்தது. மலர்ச்சியை வரவழைத்துக் கொண்டாள். உடை மாற்றிக் கொண்டு புறப்பட்டாள்.

விமலா அங்கே வந்தபோது அவளுக்காகக் காத்திருப்பதுபோல் நாராயணும், ராம்நாத்தும், பாலசந்தரும் அமர்ந்திருந்தார்கள்.

"விமலா, உட்கார் அம்மா" என்றார் நாராயண். அவர் மகிழ்ச்சியோடு காணப்பட்டார். ராம்நாத்தும் அப்படியே!

"மிஸ்டர் பாலா, நம்முடைய திட்டத்தைப் பற்றி இப்பொழுது உங்களுக்கு சரியான ஐடியா ஏற்பட்டிருக்கும் என்று நம்புகிறேன். மேற்கொண்டு நாம் என்ன செய்வது, எப்பொழுது ஆரம்பிப்பது என்பதெல்லாம் உங்கள் கையில்தான் இருக்கிறது" என்றார் நாராயண்.

"ஆமாம், மிஸ்டர் பாலா...இன்னும் இரண்டு நாள் நீங்கள் இங்கே இருந்தால் ஒரு முடிவுக்கு வந்து விடலாம். எவ்வளவு சீக்கிரம் தொழிலைத் துவக்குகிறோமோ அவ்வளவும் நமக்கு நல்லதாக அமையும் என்று நம்புகிறேன்" என்றவாறு ராம்நாத் பாலசந்தரைப் பார்த்தார்.

அமைதியாக இருவரையும் பாலசந்தர் பார்த்தான். அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதை ஆர்வத்துடன் விமலா கவனித்தாள்.

"மிஸ்டர் ராம்நாத் சொல்வதுபோல் நீங்கள் இன்னும் இரண்டு நாள் இங்கேயே தங்கி காரியத்தை முடித்துவிட்டுப் போவது நல்லது என்று நான் நினைக்கிறேன்" என்று நாராயண் மெதுவாகக் குரல் கொடுத்தார்.

ஏதோ சொல்ல நினைத்து பாலா நிமிர்ந்தபோது அட்டெண்டர் உள்ளே வந்தான், ஒரு தந்தியுடன்.

நாராயண் தந்தியை வாங்கிப் பார்த்தார். அது பாலசந்தருக்கு வந்திருந்தது.

பாலசந்தரிடம் அதைக் கொடுத்தார்.

தந்தியைப் பிரித்துப் பார்த்தான் பாலா. அடுத்த நிமிஷம் அவன் அசைவற்றுப் போனான். முகத்தில் பீதி படர்ந்தது.

(தொடரும்)

ஆடிக்குப் போனவள் அடைந்துவிட்டாள்!



கே.சுந்தரம்

கல்யாணமான புது தம்பதிகளை ஆடி மாதம் பிரித்து வைக்க வேண்டும் என்று யார் எழுதி வைத்தானே, (நிச்சயம் ஒரு சாமியாராகத்தான் இருக்க வேண்டும்) அதை மட்டும் சரியாகப் பின் பற்றி விடுகிறார்கள் இந்தக் காலத்திலும். 'ஆடிப் பட்டம் தேடி விதை' என்ற பழமொழியும் இவர்கள் ஞாபகத்தில் இருக்க வேண்டாமோ?

இனிமேல் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகும் பிரம்மசாரிகள் ஆனி மாதம் மட்டும் செய்து கொள்ளவே கூடாது. ஆனி மாதம் உறவு, ஆடி மாதம் பிரிவு என்ற வேதனையை அனுபவிக்க வேண்டும். சுவைப்பதற்குக் கனியைக் கொடுத்துவிட்டு அதைப் பாதியிலேயே பறித்துக் கொண்டு போய் விட்டால் எப்படியிருக்கும்? இஞ்சி தின்ற குரங்கு மாதிரி இருக்கும்.

அந்த நிலையில்தான் இருந்தேன் நானும்.

ஹூம்! இவர்களுக்கு என்ன வந்து விட்டது!

ஆடி மாதம் என்று பிறந்த வீட்டிற்கு அவள் போன பிறகு நான் அல்லவோ அந்த வேதனையை அனுபவிக்கிறேன்.

அவள் பிரிவை மறக்க சென்னையில் எங்கெங்கோ சுற்றினேன்.

இத்தனை நாட்களாக ஏறெடுத்தும் பார்க்காத இந்திப் படக் கவர்ச்சிப் போஸ்டர்களை யெல்லாம் நின்று நிதானித்துப் பார்த்தேன். ஊரில் ஓடும் படங்கள் ஒன்று பாக்கியில்லை.

பிரம்மசாரியாக இருந்தபோது எப்படி சினிமா, ஓட்டல் என்று ஊர் சுற்றினேனே, அதை மீண்டும் கல்யாணம் பண்ணியும் பிரம்மசாரியாகத் தொடங்கினேன்.

போதாக்குறைக்கு என் நண்பன் ஒருவன், ''பாவம்! ஆடி மாதம் தனியா இருப்பே! இந்தா, இந்தப் புத்தகங்களை யாவது பார்த்துத் தீர்த்துக்கோ...'' என்று என் கையில் நாலைந்து 'பிளேபாய்' புத்தகங்களை திணித்துவிட்டுப் போனான்.

சுற்றுப்புறச் சூழ்நிலைதான் ஒரு மனிதனை மிருகமாக்கும் என்பதை முன்பெல்லாம் ஒப்புக்கொள்ளாதவன் நான்.

ஆனால் இப்போதோ அவளின் பிரிவு, என்னுடைய தாபம், பிளேபாய், சினிமா கவர்ச்சி போஸ்டர், கண்ணில்பட்ட கன்னிகைகள் எல்லாமே சேர்ந்து என்னை ஒரு மாதிரியாக்கி விட்டிருந்தன.

என்னுடைய தாபத்தை எப்படித் தணித்துக் கொள்வது? எனக்குத் தெரிந்த, பழகிய ஆண், பெண் அத்தனை பேரும் ஒரு முறை என் நினைவில் வந்து போனார்கள்.

அடேடே! ஸ்டெல்லாவை மறந்து விட்டேனே!

'அடைந்தால் உங்களைத்தான் அடைவேன். இல்லாவிட்டால், நான் கல்யாணமே செய்து கொள்ள மாட்டேன்...' என்று என்னிடம் என் கல்யாணம் ஆவதற்கு முன்புவரை கூறி உயிரை எடுத்துக் கொண்டிருந்தாளே!

அந்த உறவை இப்போது புதுப்பித்துக் கொண்டால் என்ன?

அலுவலகத்திற்குச் சென்றதும் முதல் வேலையாக ஸ்டெல்லாவை அழைத்தேன். ஏதோ பழைய உறவை வைத்துப் பேசுகிற சாக்கில் அவளிடம் என்னுடைய வார்த்தை ஜாலங்களைக் கொட்டித் தினமும் மாலையில் அவள் வீட்டிற்கு நான் விருந்தாளியாகப் போகும் அளவிற்கு அவளை இணங்க வைத்து விட்டேன். (அப்படி என்ன தான் அவளுக்கு என்மேல் மோகமோ!

பாவம், ஸ்டெல்லா!) பிறகு என்ன? ஸ்டெல்லாவோடு சென்னையில் சுத்தாத இடம் பாக்கியில்லே! (என் மனைவி வசந்தாவோடு கூட அவ்வளவு சுத்தி னேனு என்பது சந்தேகம்!)

அன்றும் வழக்கம் போல மாலே ஐந்து மணிக்கே ஆபீஸைவிட்டு அவசரஅவசர மாகக் கிளம்பி வீட்டுக்குப் பறந்தேன். அன்றைய எங்கள் புரோகிராம் 'தாக்' படம் பார்ப்பது!

இரண்டு பக்கெட் நிறையக் குளிர்ந்த தண்ணீரில் குளித்தேன். உடம்பில் சுறுசுறுப்பும், புதுத் தெம்பும் வந்ததை என் வாயிலிருந்து ஒரு பாடல் வெளிப் படுத்தியது.

சீட்டி அடித்துக் கொண்டே பேண்ட் போட்டுக்கொண்டு,ஷர்ட்டையும் 'இன்' பண்ணிக் கொண்டேன். வாசனையா யிருக்கட்டுமே என்று கொஞ்சம் செண்டை யும் மேலே தெளித்துக் கொண்டேன்.

கடைசி முறையாக ஒரு தடவை கண்ணுடி யில் என் அலங்காரத் தைப் பார்த்துத் திருப் திப்பட்டுக் கொண் டேன்.

வீட்டை இழுத்துப் பூட்டிக் கொண்டு, படிகளில் இறங்கிக் கொண்டிருந்தேன்.

''அடடே, மாப் பிள்ளை வெளியிலே கிளம்பிக்கிட்டிருக் காப்லே இருக்கு!'' —குரல் கேட்டு நிமிர்ந் தேன்.

எதிரே என் மாம னர்—

ஒரு நிமிடம் திகைப்பு! சுதாரித்துக் கொண்டேன்.

''வாங்க மாமா! எப்போ ஊரிலிருந்து வந்தீங்க? வீட்டிலே எல்லாம் சௌக் கியமா?'' என்று கேட் டுக் கொண்டே பூட் டைத் திறந்து உள்ளே நுழைந்தேன். பின்னு டியே அவரும் வந்தார்.

''ஒரு கேஸ் விஷயமா மெட்ரா ஸுக்கு அவசரமா வர வேண்டியதாப் போச்சு. அதனுலேதான் உங்களுக்கு லெட்டர் கூடப் போட முடியல்லே. வந்த வேலே முடிஞ்சு போச்சு. ராத்திரி வண்டியிலே ஊருக்குப் போகலாம்னு பார்க்கிறேன். அதுக்கு முன்னுடி உங்களே யும் பார்த்துட்டுப் போயிடுவோம்னு வந்தேன். நல்ல வேளேயா நீங்களும் வீட்டிலே இருந்தீங்க...'' என்று வெற்றிலைக் காவி தெரியச் சிரித்தார் மாமனர்.

'என்னடா இது, பெண்டாட்டியைப் பத்தி ஒரு வார்த்தை சௌக்கியமா இருக் காளான்னு கூடக் கேட்கலேயேன்னு' மாமனர் நெனைச்சுக்கப் போருரேன்னு, ''மாமா, வசந்தா எப்படி இருக்கா...?'' என்று கேட்டு வைத்தேன்.

''அதையேன் கேட்கறீங்க மாப்பிள்ளே, அதையும் உங்ககிட்டே சொல்லிட்டுப் போகலாம்னுதான் வந்தேன்...''



''என்ன மாமா...' என்ன ஆச்சு அவளுக்கு?''—நான் ஆடாவிட்டாலும் என் சதை ஆடியது.

''மாப்பிள்ளை... அழகா தலைவாரிப் பின்னி பூ வைச்சு அலங்காரம் பண்ணிக்க மாட்டேங்கிறா... ராத்திரியிலே ஒரு மணைகட்டையை தலைக்கு வச்சிட்டு தரையிலே படுக்கறா... ஏதோ பேருக்கு சாப்பிடறேன்னு கவளம் கவளமா விழுங்கறா... ஏம்மா இப்படி யெல்லாம் பண்றேன்னு கேட்டா, என்ன பதில் சொல்றா தெரியுமா?''

''என்ன சொல்றா மாமா,..?''

''நான் யாருக்காக அலங்காரம் பண்ணிக்கணும்? என் வீட்டுக்காரரா இருக்காரு பக்கத்திலே இருந்து ரசிக்கிறதுக்கு? என்னுடைய கணவர் ரசிப்பதற்குத்தான் என் அலங்காரமெல்லாம். பாவம், ராத்திரியிலே அவர் என்னை நினைச்சு நினைச்சு ஏங்கறாரோ என்னவோ! நான் மட்டும் இங்கே சுகமா தலையணை வைச்சுக்கிட்டு மெத்தையிலே படுத்துத் தூங்கணுமா? அவர் ஓட்டல்லே சாப்பிட்டு வயிற்றைக் கெடுத்துப்பாரேங்கறதை நினைச்சா, எனக்கு சாதமே இறங்க மாட்டேங்குது...? இப்படியே அவ ஒண்ணொண்ணுக்கும் ஒவ்வொருகாரணம் சொல்றா மாப்பிள்ளை. பொண்ணுங்க, அம்மா வீட்டுக்கு வந்தா, தின்னுப்புட்டு பெருத்துப் போகும்னு சொல்வாங்க. ஆனா இவளோ உங்களை நினைச்சு ஏங்கிக் கிடக்கிறா... நீங்கதான் அவளுக்கு புத்தி சொல்லி ஒரு கடுதாசியாவது போடணும்...''



அவருடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் என் உடம்பில் அம்பாகத் தைத்தன. உடம்பு முழுவதும் வியர்வை வெள்ளம். அவர் கூறிய வார்த்தைகள் விசுவரூபம் கொண்டு என்னுடைய தாபத்தையும், மோகத்தையும் விழுங்கிக் கொண்டிருந்தன.

அவள் அங்கே தூய்மையான வாழ்க்கை நடத்துகிறாள்!

'ஆயிரம்தான் சொன்னாலும் பெண்கள் பெண்கள்தான்' என்பதை அவள் நிரூபித்துக் காட்டி விட்டாளே!

நானோ இங்கே ஸ்டெல்லா, பீச், சினிமா......!


''அப்ப, நான் கிளம்பறேன் மாப்பிள்ளை. இன்னிக்கு கிருத்திகையா இருக்கு...... பக்கத்திலே இருக்கற முருகன் கோயிலுக்குப் போயிட்டு நான் நாளை ஊருக்குக்கிளம்பறேன்.'' என்று எழுந்தார் மாமனார்.

''கொஞ்சம் இருங்க மாமா ... நானும் கோயிலுக்கு வரேன்...''

பேண்ட்டையும், ஷர்ட்டையும் கழற்றி எறிந்தேன்.

இவ்வளவு நாளாக பவுடரையே கண்டிருந்த என் நெற்றியில் விபூதியைக் குழைத்துப் பூசினேன்.

மாமாவின் பின்னால் அடக்கமாகச் சென்று கொண்டிருந்தேன் மாப்பிள்ளையா, லட்சணமா.



கதாசிரியர் தயாரிப்பாளரானால்...

தான் ஏற்கெனவே போட்டு வைத்திருக்கும் பட்ஜெட்டில் எந்தவிதக் கூடுதல் இல்லாமலும், மிகவும் சிக்கனமான முறையிலேயே படத்தை முடித்துவிட வேண்டும் என்ற எண்ணமும், அதே சமயத்தில் படம் நன்ருக ஓட வேண்டுமே என்ற கவலையும் எல்லாத் தயாரிப்பாளர்களுக்குமே உண்டு! ஆனல், தான் சொல்ல வந்த கருத்து அழகாகப் படமாக்கப்பட வேண்டும் என்று நினைக்கும் ஒரு கதாசிரியர், தயாரிப்பாளரானல்...

'பட்டிக்காடா பட்டணமா' படம் எடுக்கப்பட்டுக் கொண்டிருந்த நேரம்! படத்தின் ஆரம்பத்தில் இடம் பெறும், 'அம்பிகையே ஈஸ்வரியே' என்ற பாடலுக்கான படப் பிடிப்பு ஏ. வி. எம்மில் நடைபெற இருந்தது.

அக் காட்சியைப் பற்றி இயக்குநர் திரு. மாதவன் அவர்களிடம் விளக்கிக் கூறிய நான், 'திரளான' கூட்டம் இருந்தால்தான் திருவிழாவுக்கான சூழ்நிலை வரும்' என்று கூறியிருந்தேன்.

காரணம், அப் பாடல் ஒரு மாரியம்மன் திருவிழாவில் இடம் பெற இருந்ததுதான்.

பாலமுருகன் கூறுகிருர்:

படப் பிடிப்பு நாள் வந்தது. செட்டிற்குள் நுழைந்த போது உள்ளே இருந்த கூட்டத்தைக் கண்டதும் திடுக்கிட்டேன். சிவாஜி கணேசன் அவர்கள் கையில் தீச்சட்டி ஏந்தி அப் பாடலுக்கான ஒத்திகையைச் சரி பார்த்துக் கொண்டிருக்க, அவரைச் சுற்றி மிகச் சிலரே இருந்தனர்!

நான், அருகில் நின்று கொண்டிருந்த என்னுடைய நண்பரொருவரிடம் ''திரளான கூட்டம் இருக்க வேண்டும்'' என்று சொல்லியிருந்தேன். ஆனல், இப்போது பார்த்தால் இது ஒரு திருவிழா போலவே தெரியவில்லையே'' என்று எனது மன வருத்தத்தை மெதுவாக வெளியிட்டேன்.

இதைக் கேட்ட டைரக்டர் மாதவன் அவர்கள், ''நீங்கள் இப்போது ஒரு கதாசிரியர்தான். தயாரிப்பாளராக மாறுங்கள். அப்போதுதான் படத்தை எடுப்பதில் உள்ள கஷ்டங்கள் தெரியும்'' என்று சிரித்தபடி கூறினார்.

''நான் என்றுமே தயாரிப்பாளராக மாட்டேன்! இன்று போல் என்றுமே

கதாசிரியன்தான்!'' என்று நான் அவரிடம் கூற, அவர் அதற்கு 'பார்ப்போம்' என்று கூறியபடி படப் பிடிப்பில் கவனம் செலுத்தினர்.

ஆனல், 'என்றுமே தயாரிப்பாளனுக மாட்டேன்' என்று எல்லோரிடமும் கூறி வந்த நான், திடீரென்று ஒருநாள் தயாரிப்பாளராகி விட்டேன்.

கற்பகம் புரொடக்ஷன்ஸ் என்ற திறுவனத்தை ஆரம்பித்து, 'மாணிக்கத் தொட்டில்' என்ற படத்தைக் கன்னி முயற்சியாகத் தயாரிக்க ஆரம்பித்தேன். அப் படத்தில் ஒரு காட்சி:

கதாநாயகன் தனது மனைவியுடனும், குழந்தைகளுடனும் கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடுவது போன்ற காட்சி. அக்காட்சி எடுக்கப்படுவதற்கு முன்பு, இயக்குநர் மாதவன் என்னை அணுகி, ''இக் காட்சியில் கதாநாயகன் தனது உறவினர்களுடனும் நண்பர்களுடனும் சேர்ந்து கொண்டாடுவது போல் காட்டலாமா?'' என்று கேட்க, நான் திடுக்கிட்டு, ''வேண்டாம்! குடும்பத்தோடு மட்டும் கொண்டாடுவது போல் காட்டினல் போதும்'' என்று நான் கூற, அவர் சிரித்தபடி, ''என்ன, ஆட்குறைப்பு செய்கிறீர்கள்? இப்போது உங்களுக்குத் தெரிகிறதா துன்பம்?'' என்று கூறிவிட்டுச் செல்ல— முதன் முறையாகத் தயாரிப்பாளனுக இருப்பதன் கஷ்டத்தை அப்போதுதான் நான் உணர ஆரம்பித்தேன்.

சில மாதங்களுக்கு முன்பு, 'ராஜ பார்ட் ரங்கதுரை' படத்தில் இடம் பெறும் ஒரு பாடலின் ஒலிப்பதிவு நடைபெற்றுக் கொண்டிருந்தது. திரு. கண்ணதாசன் எழுதிய பாடலுக்கு மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன் இசை அமைத்துக் கொண்டிருந்தார். நான் அவரை அணுகி, அப் பாடல் உருக்கமான ஒரு காட்சியில் அமைகிறதென்பதைக் கூறி, எவ்வளவு செலவானுலும் மிகவும் சிறப்பான முறையில் இசையமைக்கும் படிக் கேட்டுக் கொள்ள, அவரும் அதற்கு இசைந்தார். அப் பாடலும் இனிமையான ராகத்தை ஏற்று, மிகவும் சிறப்பாகப் படமாக்கப்பட்டது.

என்னுடைய தயாரிப்பான 'மாணிக்கத் தொட்டிலிலும்', விஸ்வநாதன் அவர்களே இசையமைப்பதால், நான் மெல்ல அவரை அணுகி, ''பாடலை எவ்வளவு சிக்கனமாக முடிக்க முடியுமோ, அவ்வளவு சிக்கனமாக முடியுங்கள்'' என்று கூற, மெல்லிசை மன்னர் மெல்லப் புன்னகைத்தபடி, ''மற்றவர்கள் படத்திற்கு எவ்வளவு செலவானுலும் பரவாயில்லை! உங்கள் படத்திற்குச் சிக்கனம் பார்க்கிறீர்களா?'' என்று கேட்க, நான் சமாளித்தபடி, ''அப்படியில்லை... சிக்கனமாகவும் இருக்க வேண்டும்; சிறப்பாகவும் அமைய வேண்டும்'' என்று கூறித் தப்பித்தேன்.

முன்பெல்லாம் ஒரு நாள் நடக்கும் படப் பிடிப்பை இரண்டு மூன்று நாட்களுக்கு நீடித்தால் நாம் எண்ணிய எண்ணமும், காட்சியும் சிறப்பாக அமையுமே என்றெல்லாம் நினைப்பதுண்டு. ஆனல், இப்போதெல்லாம் ஒரு நாள் நடக்கும் படப் பிடிப்பையே அரை நாளாகக் குறைக்க முடியாதா என்று நினைப்பதும் உண்டு! இது மட்டுமல்ல. 'இன்னும் ஒரு வாரத்திற்குள்ளேயே நாம் எடுக்கும் படம் முடிந்து விடாதா?' என்று நான் சில சமயங்களில் எண்ணிப் பார்த்து, அது இயலாதகாரியம் என்பதை உணர்ந்து மனம் தளர்வதுமுண்டு!

நான் எழுத உட்கார்ந்து விட்டால், சுற்றுப்புறச் சூழ்நிலைகளை மறந்து, அந்தந்த கதாபாத்திரங்களோடு ஐக்கியமாகி, என்னையும் மறந்து நான் எழுதிக் கொண்டிருப்பதுண்டு. ஆனல், இப்போதெல்லாம் பேனவைத் திறந்து எழுத ஆரம்பித்து விட்டால், இரண்டு நிமிடத்திற்கு ஒருமுறை அடிக்கும் டெலிபோனைக் கண்டால் எரிச்சல் வருகிறது.

ஒரு நாள் தொடர்ந்தாற்போல் மணியடித்துக் கொண்டிருக்கவே, ரிஸீவரை எடுத்த நான், ''என்னைத் தயவு செய்து தொந்தரவு செய்ய வேண்டாம்'' என்று எடுத்த எடுப்பிலேயே கூற, மறுமுனையில் பேசிய மாதவன், ''எப்போது போன் செய்தாலும் எழுதுகிறேன் என்று கூறுகிறீர்களே! நீங்கள் இப்போது எழுத்தாளர் மட்டுமல்ல... தயாரிப்பாளரும் கூட'' என்று கூற, எனக்குத்தான் பொறுப்பு அதிகம் என்பதை மீண்டும் நான் நினைவிற்குக் கொண்டு வந்தேன்!

'ஒரு படத்தை முடிப்பதற்குள்ளேயே இவ்வளவு அனுபவங்களா!' என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. படம் தயாரிப்பதில் பல இன்னல்கள் இருந்தாலும், அந்த இன்னல்களை சுவைப்பதிலும் ஒருவகை இன்பம் இருக்கத்தான் செய்கிறது. 'ஸ்வீட் ஆர் தி யூஸஸ் ஆப் அட்வர்ஸிட்டி' (Sweet are the uses of adversity) என்ற ஷேக்ஸ்பியரின் வாசகங்கள்தான் இப்போது என் நினைவிற்கு வருகிறது.

பேட்டி: **சியாமளன்.**

அழைக்கும் விழிகள்...

டபிள்யூ.ஆர்.ஸ்வர்ணலதா

9

அந்தத் தந்தியை மறுபடியும் பார்த்தான் பாலசந்தர். அப்படி ஒரு செய்தி வரும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

ஹேமாவுக்கு ஆபத்தாம்; உடனே புறப்பட்டு வரும்படி தந்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஹேமாவுக்கு என்ன வந்தது? அவன் புறப்படும்போது அப்படி ஒன்றும் மோசமான நிலையில் அவள் இருக்கவில்லையே! பாலசந்தர் குழம்பினான். மௌனமாக உட்கார்ந்திருந்தான். நாராயண், ராம்நாத், விமலா-மூவரும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர். 'தந்தியில் என்ன செய்தி வந்திருக்கும்?' என்ற கேள்வி அவர்களுக்குள்!

பாலசந்தர் தந்தியை மடித்தவாறு நிமிர்ந்தான். 'என்ன செய்தி' என்று வினவுவது போல் நாராயணனும் ராம்நாத்தும் அவனைப் பார்த்தார்கள்.

''நான் உடனே மெட்ராஸ் புறப்பட வேண்டும்...'' என்று பாலசந்தர் முணுமுணுத்தான்.

''என்ன ஆயிற்று என்று நாங்கள் தெரிந்து கொள்ளலாமா?'' என்று தணிந்த குரலில் ராம்நாத் கேட்டார்.

''ஹேமாவுக்கு உடம்பு சரியில்லையாம்...'' - பாலசந்தரின் குரலில் நடுக்கம் இருந்தது. உற்சாகமெல்லாம் ஒரு நிமிஷத்தில் மறைந்து போன மாதிரி விமலா ஓய்ந்து போனாள்.

''அவசரமாகப் போக வேண்டுமா?'' என்றார் நாராயண். அவன் தலையசைத்தான்.

''நான் மட்டுமே போகிறேன். விமலா இருந்து விட்டு வரலாம்...'' என்று பாலசந்தர் சொன்னான்.

''பரவாயில்லை, மிஸ்டர் பாலா. அவசர காரியம். நீங்கள் இப்பொழுது புறப்படுவதுதான் நல்லது. சீக்கிரமே மறுபடியும் நாம் சந்திப்போம். வேண்டுமானால் நாங்களே அங்கு வருகிறோம். அப்பொழுது பேசி முடிவுக்கு வரலாம்'' என்று நாராயண் கூறினார். என்றாலும் ஏமாற்றம் அவர் பேச்சில் தொனிக்கவே செய்தது. அன்றைக்கே ஒரு முடிவுக்கு வந்து விடவேண்டும் என்ற துடிப்பில் தான் நாராயணனும், ராம்நாத்தும் இயங்கிக் கொண்டிருந்தனர். தந்தி, காரியத்தைக் கெடுத்து விட்டதே என்று ஆற்றாமை அடித்துக் கொண்டது.

பாலசந்தர் அதற்கு மேல் அங்கே தங்கியிருக்கவில்லை. விமலாவை மட்டும் இருக்கச் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

*

சேகர் களைத்துப் போயிருந்தான். காலில் அடிபட்டிருந்தது. சிராய்ப்பு ஏற்பட்டு ரத்தம்கசிந்துகொண்டிருந்தது. வலியையும் எரிச்சலையும் பொருட்படுத்தாமல் ஸ்கூட்டரைக் கிளப்பிக்கொண்டு ராட்சஸ வேகத்தில் வந்ததை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. கால் எலும்பு முறிந்திருக்குமோ என்றுகூடப் பயமாக இருந்தது.

ஸ்கூட்டரில் உட்கார்ந்தபடி சுற்றிச் சுற்றி வந்து அலுத்துப் போய்விட்டது. எங்கே போவது என்று புரியாத மயக்கம்.

விமலாவைத் தனியே சந்திக்க நேர்ந்தது எத்தனை நல்ல சந்தர்ப்பம்! அதை நழுவ விட்டு விட்டதாகத் துடித்தது சேகரின் உள்ளம். தான் நடந்து கொண்டது சரிதானா என்று தனக்குள் கேட்டுக் கொண்டான். அவசரப்பட்டு விட்டதாகவே நினைத்தான். விமலாவைப் பார்க்கப் போன நோக்கத்திலிருந்து விலகிப் போய் விட்டதாக ஒரு குற்ற உணர்ச்சி. விமலாவின் கொள்ளை அழகும், கொல்லும் விழிகளும்தான் காரணமா? நிமிஷத்தில் தன்னை வசமிழக்கச் செய்துவிட்டது அவளுடைய வசீகரம். அந்த மின்னல் கோலத்தில் தன்னை மறந்து போய் அவளைத் தாவிப் பிடித்து...

'அப்பொழுது கதவைத் தட்டியது யார்? பாலசந்தர் வந்திருக்கலாம். தப்பி வந்தது எவ்வளவு நல்லதாகப் போயிற்று! தான் வந்ததைப் பற்றிப் பாலசந்தரிடம் விமலா சொல்லியிருப்பாளா? பாலாவுக்கும் தனக்கும் இருந்த தொடர்பு அவளுக்குத்தெரிந்தால்தானே சொல்லித் தெரிய வைப்பதற்கு!' -எண்ண ஓட்டத்தில் மனம் பின்னிக்

கொண்டிருந்தாலும் வலியை அவனல் மறக்க முடியவில்லை.

மெதுவாக ஸ்கூட்டரைச் செலுத்திக் கொண்டு போன சேகரின் பார்வையில் பளிச்சென்று ஒரு 'பெயர்ப் பலகை' பட்டது. 'கமலா கிளினிக்' என்ற பெரிய எழுத்துக்கள். அதற்குக் கீழே 'டாக்டர் மிஸ் கமலா, எம்.பி.பி.எஸ்.' என்ற பெயர்.

ஸ்கூட்டரை நிறுத்தினன் சேகர். உடனடியாக காலுக்கு ஏதாவது சிகிச்சை செய்ய வேண்டும் என்ற வேகத்தில் கிளினிக்கில் நுழைந்தான். வெயிட்டிங் ரூமில் அந்த நேரம் யாரும் இல்லை. உள்ளே யாரோ ஒரு பேஷண்டை டாக்டர் கவனித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

சோர்வாக இருந்ததால் சோபாவில் சாய்ந்து கொண்டான் சேகர். பாலசந்தரின் நினைவுதான் சுழன்று கொண்டிருந்தது. பாலாவை ஏர் - போர்ட்டிலும், ஓட்டலிலும் தொலைவிலிருந்து சேகர் பார்த்தாலும் அந்தத் தோற்றத்தைக் கொண்டு ஓரளவுக்கு பாலாவின் நிலைமையை அவனல் நிதானிக்க முடிந்தது. பழைய கலகலப்பு அவனிடம் இல்லை என்று சேகர் நினைத்தான். பாலா பெங்களூரை விட்டுப் போவதற்குள் இன்னொரு முறை பார்க்க வேண்டும் என்ற ஆசை அடி மனத்தில்.

பாலாவின் நினைப்பைத் தொடர்ந்து ஹேமாவின் நிழலும் சேகரை விரட்டியது. ஹேமாவை அவன் நினைக்காமல் இல்லை. அவள் எப்படி யிருப்பாள் என்ற கேள்வி அடிக்கடி பூதாகாரமாகச் சுழித்து எழுந்து சேகரை அழுத்தவே செய்கிறது.

இப்பொழுதும் ஹேமாவின் நிழல் நெஞ்சில் ஆடியது. இல்லை, அவனை ஆட்டியது. அவ்வளவுதான்...! சேகருக்கு வியர்த்துக் கொட்டியது. சூழ்நிலையை மறந்து எங்கோ பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

''சார்...!'' -குரல் கேட்டதும் திரும்பினன் சேகர். எதிரே நர்ஸ் நின்றிருந்தாள்.

''நீங்கள்டாக்டரைபார்க்கலாம்!'' என்ருள் அவள். ஸ்பிரிங் கதவை இழுத்துக்



கொண்டு உள்ளே சென்ற போது, டாக்டர் கமலா அமரச் சொன்னுள். புன்னகை மாருத இளமை பூத்த முகம். கொஞ்சம் வயதான மாதாக டாக்டர் இருக்கக்கூடும் என்றே சேகர் எதிர் பார்த்தான். வியப்போடு அந்த இளம் டாக்டரைப் பார்த்தான், உடம்புக்கு என்ன என்று கமலாவே கேட்கும் வரை.

''ஸ்கூட்டரில் வரும்போது ஒரு சின்ன ஆக்ஸிடென்ட். ஃபிராக்சர் ஏற்பட்டிருக்குமோ என்று நினைக்கிறேன்...'' என்ருன் சேகர்.

கமலா அருகே வந்து சில நிமிஷம் சேகரைச் சோதித்து விட்டு, ''பயப்படுகிற மாதிரி ஒன்றுமில்லை'' என்ருள்.

''ஃபிராக்சர் இல்லையே?'' என்று சேகர் கேட்டான்.



''இந்தப் புத்தகம் வேண்டாம்பா... என் மனைவி எனக்கு முன்னடியே இதை வாங்கிப் படிச்சுட்டா...!''

''இல்லை!'' என்ருள் டாக்டர் கமலா, புன்சிரிப்போடு.

''வலி இருக்கிறது.''

''சரியாகிவிடும். மருந்து தரச் சொல்கிறேன்.''

வலியைப் பறக்க வைக்கும் இதமும் இனிமையும் அவள் பேச்சிலும், புன்சிரிப்பிலும் இருப்பதாக சேகர் உணர்ந்தான்.

காயத்திற்கு பிளாஸ்டர் போட்டு விட்டு டாக்டர் எழுதித் தந்த மருந்தை சேகரிடம் கொடுத்தாள் நர்ஸ்.

கமலா, சேகரைக் கவனித்தாள். மனத்தில் சற்றுக் குழப்பம் இருந்தாலும் தோற்றத்தில் எடுப்பும் மிடுக்கும் குறையவில்லை. பொறுப்பான பணியிலுள்ள ஓர் அதிகாரியாகவோ அல்லது கம்பெனி எக்ஸிகியூடிவாகவோ அவன் இருக்கக் கூடும் என்று நினைத்தாள்.

''தேங்க்யூ டாக்டர்...நான் பயப்பட வேண்டாம் என்று சொல்லி விட்டீர்கள் அல்லவா?'' என்றவாறு மலர்ச்சியோடு அவன் எழுந்தான்.

''சரியாகிவிடும். ட்ரீட்மென்ட் தேவை என்ருல் இன்னெரு முறை நீங்கள் வரலாம்'' என்ருள் டாக்டர் கமலா.

சேகர் வெளியேறினன்.

*

ஓட்டல் காட்டேஜ் முன்னல் கார் நின்றது. விமலா, காரிலிருந்து இறங்கிக் கொண்டாள்.

விமலாவை ஓட்டலில் விட்டுச் செல்வதற்காக டிரைவருடன் ராம்நாத் மட்டும் வந்திருந்தார்.

''குட் நைட் டாடி...''

''குட் நைட்!''

கார் புறப்பட்டது.

விமலா, காட்டேஜைப் பார்த்தாள். 'வெறிச்'சென்றிருந்தது அந்த இடம். பாலசந்தர் இருந்திருந்தால் எவ்வளவு மகிழ்ச்சியாக இன்றையப் பொழுது கழிந்திருக்கும் என்று ஏனே நினைக்கத் தோன்றியது. தனிமையை நினைத்த போது ஒரு பயமும் தலை நீட்டியது.

விமலா, கதவைத் திறந்தாள். வாசலில் நின்றபடி கண்ணுக்கெட்டிய வரை பார்த்தாள். யாரும் நடமாடவில்லை. விளக்கைப் போட்டாள்.

கதவை இழுத்துத் தாளிட்டுக்கொண்டாள். கொஞ்சம் துணிவு வந்தது. 'கதவைத் திறந்து போட்டிருந்ததால் தானே அவன் அனுமதியின்றி நுழைந்து 'அட்டகாசம்' செய்தான்! இப்பொழுது யாரும் உள்ளே வர முடியாது' என்று நினைத்தபடி நின்ருள். அறையில் அமைதி. 'பாலசந்தர் இருந்திருந்தால்...?'

'சேகர் மீண்டும் உள்ளே நுழைந்தால்?'

மனத்தில் சற்றே நடுக்கம்.

விளக்கை நிறுத்தி விட்டுப் படுக்கையில் சாய்ந்தாள். விழிகளை மூடிக் கொண்டாலும் உறக்கம் வருவது போல் இல்லை.

சேகர் உள்ளே நுழைந்தது, தந்திச் செய்தி கிடைத்துப் பாலசந்தர் புறப்பட்டுப் போனது, நாராயண் அவளிடம் சொன்னது... எல்லாமே நெஞ்சில் சுழன்று கொண்டே யிருந்தன.

'சேகர் யார்?' என்ற கேள்வி துளைத்தெடுத்தது. பதில் தேடுவதில் அவளுக்கு ஒன்றும் சிரமம் தோன்றவில்லை. சேகரை அவளுக்குத் தெரியுமா? தன் பாதையில் ஒரு குறுக்கீடாக அவன் புறப்பட்டிருக்கிறுன் என்று நினைத்தாள். அவன் ஏன் குறுக்கிட வேண்டும்? அவனுக்கும் அவளுக்கும் என்ன தொடர்பு?

'விஜயா' என்று ரேஸ் கோர்ஸில் கூவியபடி அவளை சேகர் தொடர்ந்து வந்ததை மறக்க முடியவில்லை.

இமைகளை இறுக மூடிக்கொண்டு படுக்கையில் புரண்டாள் விமலா.

அந்த நேரம் சேகரின் உருவத்தை உள்ளத்திலிருந்து விரட்டத் துடித்தாள். பாலசந்தரை நினைத்துக் கொண்டாள்.

'ஹேமாவுக்கு ஆபத்து' என்று சொன்ன போது பாலசந்தர் என்ன மாதிரி நெகிழ்ந்து போய் விட்டான். ஹேமா என்றதும் அத்தனை துடிப்பா? இல்லையென்றுல் பெரிய பிசினஸ் பேச்சுக்களை அப்படியே போட்டு விட்டுப் போக பாலாவுக்கு மனம் வருமா?

பாலசந்தரை அனுப்பிய பிறகு நாராயணும் ராம்நாத்தும் அவளிடம் ஹேமாவைப் பற்றிப் பேசினுர்கள்.

''மிஸ்டர் ராம்நாத், நீங்கள் சொன்னபடி ஹேமாதான் நம் திட்டத்திற்குத் தடைக் கல்லாக இருப்பாள் போல் இருக்கிறது'' என்றுர் நாராயண்.

''அவசரப் படக்கூடாது மிஸ்டர் நாராயண். பொறுத்திருந்து பாருங்கள், பலனை...'' என்று ராம்நாத் சொன்னுர்.

''விமலா, உனக்கு இந்த விஷயத்தில், மிக முக்கியமான பொறுப்பு இருக்கிறது என்பதை மறந்து விடாதே. 'ஹேமா ஹேமா' என்று பாலா அடித்துக்கொள்கிறுன் என்றுல் என்ன அர்த்தம்? விமலா இன்னும் பூரணமான செகரட்டரி ஆகவில்லை என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது'' என்றவாறு விமலாவைப் பார்த்தார்.

அதற்குப் பிறகு நாராயணும் ராம்நாத்தும் விமலாவிடம் வெகு நேரம் பேசினுர்கள். அதையெல்லாம் விமலா இப்பொழுது நினைத்தபோது—

உறக்கமின்றி அவள் புரண்டாள்.

டெலிபோன் மணி ஒலித்தது.

நடுக்கத்தோடு ரிஸீவரை எடுத்தாள்.

(தொடரும்.)

'யுவர் ஹானர்'!

முதல் வழக்கின் தீர்ப்பு

வழக்கு டெலிபோன் இலாகாவிற்குச் சாதகமாக முடிந்தது. இருபத்துமூன்று 'ஏ'க்கள் கொண்ட இந்தக் கம்பெனியின் பெயரை டெலிபோன் அகராதியில் சேர்த்துக் கொண்டால் இதைப் பார்த்து விட்டு எல்லாரும் இதே போல் விசித்திரமான பெயர்களைப் பதிவு செய்ய ஆரம்பித்து விடுவார்கள். பிறகு, டெலிபோன் அகராதி ஒரு 'ஜோக்' புத்தகமாக மாறி விடும் நிலைமை ஏற்பட்டு விடும் என்று தீர்ப்பில் குறிப்பிடப் பட்டது.

2-ம் வழக்கின் தீர்ப்பு

கண்ணுயிரத்தின்கூட இருந்த நான்கு கைதிகளும் நல்ல முரடர்கள். அவர்கள் சொற்படி அப்போது கேட்டிராவிட்டால் கண்ணுயிரத்திற்கு ஆபத்துதான். ஆனுல் வெளியே வந்த பிறகு உடனே அருகாமையில் உள்ள போலீஸ் நிலயத்திற்குள் நுழைந்து சரணடையாமல் ஜாலியாக ஊர் சுற்றிக் கொண்டிருந்திருக்கிறுன்! ஆகவே, கண்ணுயிரத்தின் வாதத்தை ஏற்க முடியாது.

3-ம் வழக்கின் தீர்ப்பு

ஒரு பெண்ணை, அவளைவிட அதிக அளவுடைய பலத்தை உபயோகித்தோ அல்லது உதவிக்கு ஆட்களை வைத்துக் கொண்டோ, வாயில், துணி, அடைத்து, குண்டுக்கட்டாகத் தூக்கிக் கொண்டோ போய் அவளைச் செயலிழக்கச் செய்வதைத்தான் 'பலவந்தப்படுத்துதல்' என்று கூறலாம். அப்படி நடக்கவில்லை என்று அந்தப் பெண்ணே கூறுகிறுள். ஓர் ஆணிடம் உள்ள 'கவர்ச்சியையோ', 'வசீகரத்தையோ' பலவந்தப்படுத்தும் சக்தி என்று கூறுவது அபத்தம்.

இந்த வழக்குகள் எல்லாம் அமெரிக்க நீதி மன்றங்களில் முடிவு செய்யப்பட்ட வழக்குகள். 'What is the law' என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை. படிப்பதற்குச் சுவையாக இருக்கும் என்பதற்காகப் பெயர்களை மட்டும் நம்மூர்ப் பெயர்களாக மாற்றி யிருக்கிறேம்!

உங்களுக்குத் தெரிந்த தமாஷான வழக்குகள் ஏதாவது இருந்தால் ஆதாரத்துடன் எழுதி அனுப்புங்களேன்!

ஒவ்வொருவரின் மேனிக்கும் பாதுகாப்பு தேவை



வியர்வை துர்நாற்றத்திலிருந்தும், அதனுல் நுண்ணிய கிருமிகளிட மிருந்தும் உங்களுக்கும். மற்றவர்களுக்கும் ஏற்படும் சங்கடத்தி லிருந்தும் பாதுகாப் பளிக்கிறது.
ஜி-11 கலந்த சிந்தால் டாய்லெட் பவுடர் இந்தப் பாதுகாப்பைத் தருகிறது. அதோடு...அன்றலர்ந்த மலரின் நறுமணத்தையும் தருகிறது.

சிந்தால்— துர்நாற்றத்தை அறவே போக்கிப் பாதுகாப்பளிக்கும் டாய்லெட் பவுடர்.

Interpub/GSP-6/72R Tam

யாமினி கிருஷ்ணமூர்த்தி விரும்பும் காப்பி:





களிப்பளிக்கும் நடன நிகழ்ச்சிக்குப் பிறகு நான் ஆவலுடன் எதிர்பார்ப்பது, எனக்குப் பிரியமான காப்பி... ஆம்! நெஸ்கஃபே புத்துணர்ச்சியளிக்கும் காப்பி!

நெஸ்கஃபே, மற்றைய இன்ஸ்டன்ட் காப்பிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்பதை உண்மையான காப்பி அபிமானிகள் அறிவதுபோல் அவரும் அறிவார். அது அவர் போன்ற காப்பிப் பிரியர்களுக்காகவே, முற்றிலும் சுத்தமான தென்னிந்திய காப்பி விதைகளிலிருந்து தயாரிக்கப்படுகிறது



நெஸ்கஃபே

மிகப்பிரியமானவர்களின் மிகப்பிரியமான பானம்

ACIL-464-1810-TAM.

10

இந்த நேரத்தில் டெலிபோனில் யார் அழைக்கிறுர்கள்?

நிச்சயம் ராம்நாத்தாக இருக்காது. பாலா...? சாத்தியமில்லே. வேறு யார்? விமலாவுக்கு எரிச்சலாக இருந்தது. கூடவே நடுக்கமாகவும் இருந்தது. ஒரு வேளே அவன் - சேகர் - அழைக்கலாமோ என்று நினேத்துக் கொண்டாள்.

ரிஸீவரை அழுத்திப் பிடித்துக் கொண்டு ''ஹலோ'' என்ருள்.

''மிஸ்டர் பாலா, இருக்கிருரா?...'' என்ற குரல் மறுமுனேயிலிருந்து கேட்டது. ஆண் குரல்தான்.

''மிஸ்டர் பாலாவா...!'' என்று விமலா இழுத்த தொனியே, 'அவர் இங்கேயில்லேயே' என்பது போல் இருந்தது.

''பாலா அங்கே யிருக்கிருர் அல்லவா?''

''அவர் இங்கே... இங்கே...'' — விமலாவுக்குத் தயக்கம்.

''இல்லே என்கிறீர்களா?''

விமலாவின் மௌனம் பாலா பக்கத்தில் இருக்கவில்லே என்று எண்ணும்படிச் செய்ததால், மறுபடியும் எதிர் முனேயில் பேசியவன், ''பாலா அங்கே இல்லே?'' என்று வினவினுன்.

''இல்லே...!'' என்ருள் விமலா.

அடுத்த விநாடி ஏன் அப்படிச் சொன்னேம் என்று குழம்பிய மாதிரி ஒரு தவிப்பு. 'யார் என்று கூடக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் பதிலேச் சொல்லி விட்டோமே' என்று நினேத்தாள்.

''பாலா இங்கே வந்திருக்கிருர் என்று கேள்விப் பட்டேன். பார்க்க வேண்டும் என்று விரும்பினேன். இல்லே என்கிறீர்களே?'' என்ருன் அவன்.

விமலாவுக்கு அது புதிய குரலாகத் தோன்றியது. அவள் பயந்தபடி, சேகரின் குரல் அல்ல என்பதை உறுதிப் படுத்திக் கொண்டாள்.

''நீங்கள் யார்?'' என்று துணிவோடு விமலா கேட்டாள்.

''நான் மிஸ்டர் பாலாவுக்குத் தெரிந்த ஒரு ஃபிரண்ட்... பிசினஸ் சர்க்கிளில் இருப்பவன்...நீங்கள்...?''

''மிஸ்டர் பாலாவின் செகரட்டரி.''

''ஓ, வெரி கிளாட்... நீங்கள்தான் மிஸ் விமலாவா? கேள்விப்பட்டேன். பாலாவின் செகரட்டரி என்ருல் நீங்களும் ரொம்ப ரொம்ப நல்லவராகத்தான் இருப்பீர்கள். யூ ஆர் வெரி லக்கி'' என்ருன் அவன். விமலா மகிழ்ந்து போனுள்.

''மிஸ் விமலா, பாலா இப்பொழுது எங்கே இருக்கிருர்?''

''மெட்ராஸ் போய் விட்டார்!''

''ஏன்?''

'என்ன பதில் சொல்வது' என்று தயங்கினுள். பாலாவின் நண்பன் என்று சொல்லிக் கொண்டாலும் டெலிபோனில் பேசும் ஒருவனே நம்பி எதையாவது சொல்லலாமா?

''மிஸ் விமலா, சொல்லுங்கள்!''

''தெரியாது...''

''தெரியாதா? ஆச்சரியமாக இருக்கிறதே'' என்ருன் அவன்.

அவள் பதில் சொல்லவில்லே. சில விநாடிகளுக்குப் பிறகு அவனே பேசினுன்: ''மிஸ் விமலா, எனக்கு ஒரு செய்தி எட்டியது. உண்மையாக இருக்குமா என்று சந்தேகம்.

ஒரு வேளை உங்களுக்கும் தெரிந்திருக்கலாம்...''

''என்ன செய்தி?''

''பாலாவின் மனைவி ஹேமாவுக்கு..'' என்று அவன் ஆரம்பிப்பதற்குள்-

''என்ன ஆயிற்று ஹேமாவுக்கு?'' என்று துடிப்போடு கேட்டாள் விமலா.

''ஹேமாவுக்கு ரொம்ப நாளாக உடம்பு சரியில்லையாமே! இப்பொழுது ஏதாவது கடுமையாக...''— அவன் முடிக்கவில்லை. அவளுக்கு மறுபடியும் மன எரிச்சல்.

''மிஸ் விமலா, எனக்கு ஹேமாவைப் பற்றிக் கொஞ்சம் தெரியும். பாவம், ஹேமா இனிமேல்...''

நிமிர்ந்தது விமலாவின் நெஞ்சு.

''இனிமேல் ஹேமாவுக்கு என்ன?''

''கைவிடப்பட்ட கேஸ்தான்!''— சொல் சுருக்கமாக இருந்தாலும் விமலாவின் உணர்வைச் சுண்டி இழுக்கும் அழுத்தம் அதில் இருந்தது:

''நான் சொல்வது சரிதானே! ஹேமாவினல் பாலாவுக்கு என்ன பயன்? ஏன் பேச மாட்டேன் என்கிறீர்கள், விமலா? ஹேமாவுக்கு ஆபத்தாக இருக்குமோ? அதனல்தான் பாலா போய் விட்டாரோ?''

''ஆமாம்!'' என்று விமலா முணுமுணுத்தாள்.

''புறப்பட்டு வரச் சொல்லி மிஸ்டர் பாலாவுக்குச் செய்தி வந்ததா?''

''ஆமாம்.''

''தந்திச் செய்தியா?''

''ஆமாம்.''



''பாலா ரொம்பக் கவலையடைந்தாரோ?''

''இருக்கலாம்.''

ஹேமாவைப் பற்றி அவன் சொன்னது ஏனே அவளுக்கு இதமூட்டுவதாக இருந்ததால் ஒரு மன வேகத்தில் தயக்கமோ, தாபமோ இல்லாமல் வாய்விட்டு விஷயத்தைக் கொட்டி விட்டாள்.

''மிஸ் விமலா, நீங்கள் மட்டும்தானே ஓட்டலில் இருக்கிறீர்கள்?''

''ஆமாம்'' என்றவள், சற்று விழிப்படைந்து ''உங்கள் பெயர்?'' என்று கேட்டபோது, மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்படும் சத்தம்தான் கேட்டது.

பதில் கிடைக்கவில்லை. பதில் சொல்லாமல் பேச்சை அவன் ஏன் துண்டித்துக் கொள்ள வேண்டும்? ஆரம்பத்திலேயே அல்லவா அவன் பெயரைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்!

விமலா குழம்பினுள்: எங்கிருந்தோ பேசிய ஒருவனிடம் இத்தனை விஷயங்களை அவள் சொல்லியிருக்கலாமா? ஹேமாவைப் பற்றியும், பாலாவைப் பற்றியும் இவ்வளவு தெரிந்து வைத்திருக்கும் அவன் யார்? விமலாவைக் குலுக்கியது இந்தக் கேள்வி. குரலிலிருந்து அவனை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. சேகரின் குரலைப் போல் இருந்தாலாவது அவனைப் பற்றிச் சந்தேகிக்கலாம். அவன் யார்?

*

ஹேமாவிடம் எந்த மாறுதலும் இல்லை. பாலசந்தர் பயந்துகொண்டு வந்தபடி ஒன்றும் ஆகியிருக்கவில்லை. ஆனாலும் ஹேமாவை இப்படியே எத்தனை காலத்திற்கு வைத்திருக்க முடியும்? அவன் நெடுநேரம் மனைவியின் அருகிலேயே இருந்தான். வழக்கம் போல் அவள் மௌனமாக இருந்தாள். பார்வை எங்கெல்லாமோ சுற்றிக் கொண்டிருந்ததே தவிர, பாலாவைப் பார்க்கக் கூசிய மாதிரியே இருந்தாள்.

தான் இல்லாதபோது ஹேமாவின் உடம்புக்கென்ன ஆயிற்று என்று வீட்டில் விசாரிக்கவே செய்தான். ஜுர வேகம் வந்த மாதிரி துவண்டு போயிருந்தாளாம். ஆனல், ஆபத்து ஒன்றும் இல்லை.

பாலசந்தருக்கு மனம் கேட்கவில்லை. டாக்டர் பிரகாசத்தை அழைத்துப் பேசினுன். ஹேமாவின் மன நிலையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்று அவர் உறுதியாகச் சொன்னுர்.

''என்ன செய்யலாம் என்று நினைக்கிறீர்கள், டாக்டர்?'' என்று பாலா கேட்டான்.

''ஒரு முயற்சி செய்து பார்க்கலாம். சாதாரண முயற்சிதான். நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ!'' என்றவாறு பாலசந்தரைப் பார்த்தார் பிரகாசம்.

''சொல்லுங்கள் டாக்டர்!'' -பாலாவுக்குத் துடிப்பு.

''மிஸ்டர் பாலா, ஹேமா இடம் மாறினல் நல்லது என்று நினைக்கிறேன்.''

''எங்கே போக வேண்டும் என்கிறீர்கள்?''

''இந்த இடத்தை விட்டு வேறு இடம். ஒரு 'சேஞ்ச்', அவ்வளவுதான். கொஞ்ச நாள் இருக்கச் செய்து பாருங்கள். ஒரு வேளை மாறுதல் ஏற்படலாம்'' என்ருர் டாக்டர்.

பாலா யோசித்தான். டாக்டர் சொன்னது சரியென்றே பட்டது. 'ஹேமாவை எங்கே அனுப்புவது? தான் இல்லாமல் அவளை மட்டும் அனுப்பி வைக்க முடியுமா?'

பாலா குழம்புவதற்கு அவசியமே இல்லாமல் போய் விட்டது. ஹேமாவின் அம்மாவும் அப்பாவும் அந்த நேரம் ஊரிலிருந்து வந்தது சாதகமாகப் போயிற்று. மகளைப் பார்த்து மனம் கலங்கிப் போனவர்கள் பாலாவிடம் தனியே பேசினுர்கள்.

ஹேமாவின் அப்பாவே பேச்சை ஆரம்பித்தார்:

''ஹேமாவைப் பார்க்கப் பொறுக்கவில்லை. என்ன மாதிரி உடைந்து போயிருக்கிறது குழந்தை...!''

''டாக்டர் எவ்வளவோ முயன்று பார்த்து விட்டார். இன்றைக்கும் கூட வந்து விட்டுத்தான் போனுர்'' என்ருன் பாலசந்தர்.

''ஹேமாவை ஊருக்கு அழைத்துப் போகலாம் என்று நினைக்கிருேம். அங்கே இருந்தாலாவது கடவுள் புண்ணியத்தில் கொஞ்சம் அபிவிருத்தி ஏற்படாதா என்று பார்க்கலாம்'' என்ருர் அவர்.

''ஆமாம். எவ்வளவோ வேண்டுதல் பண்ணிக் கொண்டிருக்கிருேம். ஹேமாவை எங்களுடன் அனுப்பி வையுங்கள். நீங்கள் அடிக்கடி வந்து பார்த்தீர்களானல் ஹேமாவுக்கு

ஆறுதலாக இருக்கும்'' என்றாள் ஹேமாவின் அம்மா.

பாலசந்தர் தடை சொல்லவில்லை.

ஹேமா குணமாக வேண்டும் என்று அவர்களுக்கு எத்தனை துடிப்பு! அவனுக்கு மட்டும் இல்லாமலா? ஹேமாவுக்கு என்ன நோய் என்பது அவர்களுக்குத் தெரியுமா?அந்த விபரீதம் அவர்களுக்குத் தெரிந்தால் இப்படிக் கொஞ்ச நஞ்ச அமைதியுடனாவது இருக்க முடியுமா?

பாலா உள்ளுக்குள் பதறினான். அந்தப் பாழ் நினைவு மனத்தைப் பற்றிக்கொண்டு ஆட்டியது. காஷ்மீரில் அந்த ஓட்டல் அறை...படுக்கையில் ஹேமா...அவளுடைய பதற்றம் ...படுக்கைக்கு அப்பால் சேகர்...அவனுடைய மௌனம்-என்ன நடந்தது?

அது ஒரு கோரப் புயல். ஹேமாவின் தாய், தந்தை மட்டுமல்ல, பாலாவின் வீட்டிலுள்ளவர்களும், மற்ற யாரும் அறிந்திராத மர்மம் அல்லவா? சேகர் இழைத்த 'கொடுமை' தானே அது! அவனை நினைக்கக் கூசினான் பாலசந்தர். கலங்கித் தவித்தான். மாமனாரும் மாமியாரும் வந்திருந்தது சற்றே மனக் குமைச்சலைத் தணித்த மாதிரி இருந்தது. ஹேமாவுக்கு ஒரு மாற்றம் அவசியம் என்று அவன் திட்டமாகக் கருதினான். அவளைத் தாய் வீட்டுக்கு அனுப்பி வைக்கும் யோசனை சிறிது மகிழ்ச்சியையும் அளித்தது.

ஹேமாவை ஊருக்கு அழைத்துப் போக முடிவாயிற்று. அவள் பக்கத்திலேயே அம்மாவும் அப்பாவும் இருந்தார்கள். மன நோய் என்றாலும் இப்படி அடியோடு அவள் மாறிப் போகிற அளவுக்கு என்ன நடந்திருக்கும் என்பது அவர்களுக்குப் புரியவில்லை. தங்கள் வீட்டுக்கு அழைத்துப் போனால் சரியாகி விடக் கூடும் என்ற நம்பிக்கை.

ஹேமா வாய்விட்டுப் பேசவில்லை. சிரிப்பு மறைந்து போய் எத்தனையோ மாதமாகிவிட்டதே! பார்வையில் வழக்கமான விரக்தி மூட்டம்.

''ஹேமா, இன்னிக்கு ஊருக்குப் போறோம்'' என்றாள் அம்மா.

''ஆமாம்மா, இங்கே ஒண்ணும் சரிப்படலை இல்லையா, அதுக்காகத்தான்...'' என்றார் அப்பா.

ஹேமா பதிலின்றிப் பார்த்தாள்.

''என்ன ஹேமா, நாங்க சொல்றது தெரியலை?'' என்றவாறு மகளைப் பார்த்தாள் தாய்.



''என்ன சார் தேட றீங்க...?''

''நீ கொண்டு வந்த காய்கறிக்குள்ளே கட்லெட் எங்கே இருக்குதுன்னு தேடறேன்...!''

''அ...ம்...மா...'' என்ற தீனமான குரல் ஹேமாவிடமிருந்து வந்தது.

''ஹேமா, இதோ பாரும்மா. உன்னை அழைச்சிட்டுப் போகணும்னே தான் வந்திருக்கோம். மாப்பிள்ளையும் சம்மதிச்சிட்டார்'' என்று அப்பா சொன்னபோது ஹேமா மருண்டு போய் இருவரையும் பார்த்தாள்.

''சாயந்திரம் புறப்படணும், சரி தானேம்மா?'' என்று அம்மாகேட்டாள்.

பதில் இல்லை. கண்கலங்கிப் போனாள் ஹேமா. முகம் கறுத்துப் போயிற்று.

''என்ன ஹேமா, யோசிக்கிறே? நம்ம வீட்டுக்கு வர உனக்கு ஆசையில்லையா?'' என்றார் அப்பா.

''இல்லை...'' என்பது போல் தலையை அப்படியும் இப்படியும் அசைத்தாள்.

''ஹேமா...!'' என்று ஆற்றாமையோடு அம்மா கூவினாள்.

''ஆமாம்'' என்பது போல் மறுபடியும் தலையசைத்தாள் ஹேமா. கண்களில் கண்ணீர் பெருகியது.

''ஹேமா, என்னம்மா சொல்றே? ஊருக்கு வர மாட்டேங்கிறயா?'' என்று அழாக் குறையாக அப்பா வினவினார்.

ஹேமாவின் கண்ணீர் அடங்கவில்லை.

பாலசந்தர் அப்பொழுது அங்கே படபடப்போடு வந்து நின்றான்.

(தொடரும்)

சஞ்சீவ்-சாரதா

இரண்டாவது முறையாக 'பாரத்' பட்டம் பெற்றிருக்கும் சஞ்சீவ் குமாரும், இரண்டாவது முறையாக 'ஊர்வசி' பட்டம் பெற்ற சாரதாவும் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ள நினைத்தனர். ஆனால், அதற்கு சந்தர்ப்பமே கிடைக்காமல் தட்டிக் கொண்டு போயிற்று.

அண்மையில் இருவருடைய படப்பிடிப்பும் ஏ. வி. எம். ஸ்டுடியோவில் இருக்கவே, இருவரையும் சந்திக்க வைத்தோம்.

"நான், சாரதாவை மற்ற மொழிப் படங்களில் நடிப்பதையும் காண விரும்புகிறேன். அவர்கள் நடிக்கும் 'ஃப்ளோரு'க்கு நானே வருகிறேன்" என்று சஞ்சீவ்குமார் கிளம்பினர்.

சஞ்சீவ்குமார் அந்த ஃப்ளோருக்குள் நுழைவதற்கும், சாரதா ஒரு சோகக் காட்சியை முடித்துவிட்டு வருவதற்கும் சரியாக இருந்தது.


"வாருங்கள், வாருங்கள். 'பாரத்' பட்டம் வாங்கியதற்கு என் பாராட்டுதல்கள்" என்று கூறிய வண்ணம் சந்தன மாலை ஒன்றை சாரதா, சஞ்சீவ்குமாருக்குப் பரிசாக அளித்தார்.

'செட்'டைப் பார்த்த சஞ்சீவின் முகம் ஒரு மாறுதலடைந்தது:

"இங்கிலாந்தில் இருப்பதைப் போல உணர்வு எனக்கு இருக்கிறது" என்று சஞ்சீவ் திடீரென்று சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேச்சை ஆரம்பித்ததும் அனைவரும் திடுக்கிட்டார்கள். ஆனால், சாரதா மட்டும் 'கல கல'வென்று நகைத்தார்.

"சஞ்சீவ் எப்போதும் படப் பிடிப்பிற்கு மிகவும் 'லேட்'டாக வருவார். 'இங்கிலாந்து நடிகர் போல 'லேட்'டாக வருகிறீர்களே' என்று நான் கேலி செய்வேன். என்னைக் கண்டதும் அவருக்கு அந்த ஞாபகம் வந்து விட்டது போலும்!" என்று கூறினர் சாரதா.





''நான் 'லேட்'டாக வருவதற்குக் காரணம் இருக்கிறது'' என்று கூறிய சஞ்சீவ், அதற்கான காரணத்தை விளக்கமாகக் கூறினார்:

''மற்ற நடிக, நடிகையர் பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாது. ஏழு மணிக்கே படப் பிடிப்பிற்கு வந்துவிட்டு, காட்சியைப் படம் எடுக்கும் போதெல்லாம் கொட்டாவி விட்டுத் தூங்கி வழிவதைக் காட்டிலும், 'லேட்' ஆக வந்தாலும், புத்துணர்வோடு படப்பிடிப்பிற்கு வந்து சுறு சுறுப்பாக வேலைகளைக் கவனித்து படப் பிடிப்பை முடிப்பது என் வழக்கம். 'லேட்டாகப் படப் பிடிப்பிற்கு வருகிறேன்' என்று என்னைக் குற்றம் சாட்டுகிறவர்கள் கூட, 'படப் பிடிப்பில் வேலைகளை எந்தத் தடங்கலும் செய்யாமல் செய்வார், அன்றைய வேலைகளை முடித்துக் கொடுத்து விட்டுத்தான் போவார்' என்றும் கூறுவார்கள். மேலும் ஒரு தயாரிப்பாளருக்கு ஒரு 'ஷெட்யூல்' முடிந்து விட்டால் அவர் தன் வேலைகளைச் சிறிது நாட்கள் மறந்துவிட்டுத் தன் குடும்பத்தாருடன் பொழுதைக் கழிக்கலாம். ஆனால், ஒரு நடிகனுக்கு எப்போதும் வேலை இருந்துகொண்டே இருக்கும்!''

என்று கூடச் கூடப் பேசிய சஞ்சீவ் குமாரிடம், ''காபி சாப்பிடுகிறீர்களா?'' என்று சாரதா கேட்டார்.

''எனக்கு காபி வேண்டாம்மா. குளிர்ந்த தண்ணீர் மட்டும் போதும்'' என்று சஞ்சீவ், தமிழிலேயே பதிலிறுத்தார். இதை ஆச்சரியத்தோடும், அதிசயத்தோடும் கேட்டுக் கொண்டிருக்கும் போது, ''என்னை விட அவருக்குத் தமிழ் நன்ருகப் பேச வரும்'' என்று சாரதா கூறியதும், சஞ்சீவ் உட்பட எல்லோரும் சிரித்தனர்.

''சஞ்சீவ், உங்களுக்கு 'அவார்டு' கிடைத்த செய்தியை முதலில், யாரிடம் கூறினீர்கள்?'' என்று சாரதா கேட்டார்.

'''அவார்டு' செய்தியைக் கேட்டதும், படப் பிடிப்பிலிருந்த நான், உடனே என் தாயாருக்கு 'போன்' செய்து செய்தியைக் கூறினேன். ஆமாம், நீங்கள் என்ன செய்தீர்கள்?'' என்று சஞ்சீவ் கேள்வியைத் திருப்பிக் கேட்டதும், ''நானும் என் தாயாரிடம்தான் முதலில் கூறினேன். நான் படவுலகில் நுழைய முயற்சிக்கும்போது, என்னைப் பார்த்துப் பலர், 'இவளா நடிப்புத் தொழிலுக்கு வரப் போகிருள்' என்று இகழ்ந்தனர். ஆனல், என் தாயார் மட்டுமே எனக்குப் பக்கபலமாக நின்று, இன்று படவுலகில் எனக்கு ஒரு நட்சத்திர ஸ்தானத்தை வாங்கிக் கொடுத்த தோடல்லாமல், இரண்டு முறை 'ஊர்வசி'ப் பட்டத்தையும் வாங்கிக் கொடுத்து விட்டார். இரண்டு முறை 'பாரத்' பட்டத்தைப் பெற்ற நீங்களும் பரிசு வாங்கியவுடன் தாயாரிடம் கூறினீர்கள். நானும் தாயாரிடம்தான் கூறினேன். இந்த விஷயத்திலும் நாம் எவ்வளவு ஒற்றுமையாக இருக்கிருேம், பார்த்தீர்களா?'' என்று சாரதா கூறியதும் சஞ்சீவ் பெருமிதம் கொள்கிருர்.

'''கோஷிஷ்' படத்தைப் பார்த்தவுடன் நீங்கள் அதில் பிரமாதமாக நடித்திருக்கிறீர்கள் என்று பாராட்டினேன். ஞாபகம் இருக்கிறதா? நீங்கள் 'சுயம் வரம்' படத்தைப் பார்த்து விட்டீர்களா?'' என்று சாரதா கேட்க, ''இல்லை'' என்று தலையாட்டினுர் சஞ்சீவ்.

சஞ்சீவ் மீண்டும் சென்னை வரும் போது 'சுயம்வரம்' படத்தைப் பார்க்க ஏற்பாடு செய்வதாக சாரதா கூறினுர்.

'''கோஷிஷ்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் போது ஏதாவது பரிசு உங்களுக்குக் கிடைக்கும் என்று நினைத்தீர்களா?''

''நான் இந்தப் படத்தில் நடிக்கும் போது நிச்சயமாக ஏதாவது ஒரு பரிசு கிடைக்கும் என்று நினைத்தேன். ஆனல், ஆச்சரியப்படத்தக்க வகையில் 'பாரத்' பட்டம் எனக்கே கிடைத்து விட்டது. 'கோஷிஷ்' படத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கும்போது பம்பாய்ப் படவுலகில் பலர், 'ஓர் ஊமையையும், செவிட்டையும் வைத்துப் படமெடுக்கிருர்கள். எப்படி இருக்கப் போகிறதோ?' என்று பயந்தவர்களும் உண்டு'' என்று சஞ்சீவ் கூறினுர்.

''உங்களுக்குப் 'பாரத்' பட்டம் கிடைத்த போது சென்னைக்கருகில் படப் பிடிப்பின்போது உங்களுக்கு அடிபட்டதாகக் கேள்விப்பட்டேன். ஆனல், உடனே வந்து பார்க்க முடியவில்லை'' என்று வருத்தத்துடன் கூறினுர் சாரதா.

''ஆமாம், வேலூருக்கு அருகில், படத்திற்காக ஒரு புலியுடன் சண்டை போடும் போது காயம் ஏற்பட்டு விட்டது. வேலூர் சி. எம். சி. ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக் கொண்டேன்'' என்று புருவத்தின் மேற்புறத்தில் அடிபட்ட இடத்தை சாரதாவிற்குச் சுட்டிக் காட்டினுர்.

''இரண்டு 'பாரத்' பட்டம் வாங்கி விட்டீர்களே? இன்னும் எவ்வளவு வாங்குவீர்கள்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார் சாரதா.

''உனக்கு என்னம்மா, நீ 'ஜாலி'யாக சிரிக்கிருய்! பட்டம் வாங்க வாங்க எனக்குப் பொறுப்பு அதிகமாகிறதே என்று நான் பயப்படுகிறேன். காரணம், பட்டம் வாங்கியவர் எப்படி நடிக்கிருர் என்று மக்கள் ஆர்வத்தோடு என்னுடைய ஒவ்வொரு படத்தையும் பார்க்கிருர்கள். அதனல் நான் கவனமாக நடிக்க வேண்டியதாகிறது. ஆனல், நடிப்பிற்காகச் சில சமயங்களில் நான் சில விஷயங்களை விட்டுக் கொடுக்க வேண்டியதாகிறது. குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்ருல், நீங்கள் தெலுங்கில் நடித்த 'சாரதா' படத்தைப் பாலாஜி அவர்கள் இந்தியில் தயாரிக்கிருர். அந்தக் கதையில் முக்கியத்துவம் கதாநாயகிக்குத்தானே கொடுக்கப்பட்டிருக்கிறது! இருந்தும் பாலாஜி எனது நெருங்கிய நண்பர் என்ற காரணத்திற்காக நான் அந்தப் படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டேன். இந்த மாதிரி சில படங்கள்'' என்று கூறிய சஞ்சீவை ஆமோதித்தார் சாரதா.

''நீங்கள் தெலுங்கு, மலையாளம், தமிழ் ஆகிய பல்வேறு மொழிப் படங்களில் நடிப்பது கஷ்டமாக இல்லை?''

என்று சாரதாவை மிகவும் ஆச்சரியத்துடன் கேட்டார் சஞ்சீவ்குமார்.

''அப்படியொன்றும் இது கஷ்டமில்லை. சில சமயங்களில் ஒரு நாளைக்கு மூன்று மொழிப் படங்களிலும் நடிக்கிறேன். சாதாரணமாகத் தமிழ்ப் படங்களில் நடிப்பதற்கு மட்டும் நிறைய கவனம் தேவை. அதனுல் சற்று 'ரிலாக்ஸ்டாக' வேலை செய்ய வேண்டும் என்பதால் தான், தமிழ்ப் படங்களுக்கு மாலை வேளையில் 'கால்ஷீட்' தருகிறேன்'' என்று கூறிய சாரதாவை, அவருக்குத் தொழில் மீது இருக்கும் மதிப்பை எண்ணிப் பாராட்டுகிருர், சஞ்சீவ்.

திடீரென்று சாரதா, சஞ்சீவிடம், ''ஆமாம், இந்திப் படவுலகில் பல நட்சத்திரங்கள் திருமணம் செய்து



சஞ்சீவ் விடை பெறுகிருர்

கொள்ளும்போது நீங்கள் மட்டும் இன்னும் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கிறீர்களே, என்ன காரணம்?'' என்று கேலிச் சிரிப்புடன் கேட்டார்.

''தகுந்த மனைவியைத் தேடிக் கொண்டிருக்கிறேன்...'' என்று கூறிய சஞ்சீவ், தொடர்ந்து ''நீங்கள் படங்கள் தயாரிப்பதாகக் கேள்விப்பட்டேனே?'' என்று கேட்டதும்தான் தாமதம், சாரதாவிடம் ஒரே பரபரப்பு:

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. என் சகோதரர் ஒரு படத்தைத் தயாரிக்கிருர். அண்ணன் படம்தானே, சற்று கூடுதலாகவே பணம் கேட்கலாமே என்று கேட்டேன். 'முடியாது. தயாரிப்புச் செலவைக் குறைக்க நினைத்திருக்கிறேன். நீதான் சற்று விட்டுக் கொடுக்க வேண்டும்' என்று கூறி விட்டார். உங்களுக்குப் படம் தயாரிக்கும் எண்ணம் இருக்கிறதா?''

''நேரம் வரும்போது படம் தயாரிப்பேன். அப் படத்தின் டைரக்ஷனையும் நானேதான் செய்யப் போகிறேன்'' என்று சஞ்சீவ் கூறியவுடன் ஒரு காட்சியை முடிக்க சாரதா எழுந்து சென்று விட்டார்.

காட்சி முடிந்து மீண்டும் திரும்பி வந்த சாரதா, ''சாரி, உங்களை வெகு நேரம் உட்கார வைத்து விட்டேன்'' என்று சஞ்சீவிடம் மன்னிப்புக் கேட்டார்.

''நோ...நோ...நான்தான் உங்கள் விசிறி ஆயிற்றே! நீங்கள் நடிக்கும் ஒவ்வொரு காட்சியையும் நான் காண விழைகிறேன். நீங்களும், நானும் நடித்த 'அக்னி ரேகா' படத்தின் 'ரஷ்' களைப் போட்டுப் பார்த்துவிட்டு உடனே நான் 'உங்கள் விசிறி' என்று கூறினேனே, ஞாபகமிருக்கிறதா?'' என்று சஞ்சீவ் கூறியதும், சாரதா வெட்கப்பட்டுத் தலைகுனிந்தார்.

பேச்சை மாற்ற வேண்டும் என்று நினைத்த சாரதா, ''இரண்டு 'பாரத்' பட்டங்களை வாங்கி விட்டீர்கள்! உங்களுடைய எதிர்காலத் திட்டம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளலாமா?''

''இந்த 'பாரத்'துக்கு ஏற்ற ஊர்வசி (வருங்கால மனைவி)யைத் தேடுவதுதான் இப்போதைய என் எதிர்காலத் திட்டம்'' என்று சட்டென்று சஞ்சீவ் கூறியதும், சாரதா நகைத்தார்.

''சாரதா, உங்களைச் சந்தித்ததில் மிகவும் சந்தோஷம். மீண்டும் எப்போது பம்பாய்க்கு வருவீர்கள்?''

''இப்போது மிகவும் 'பிஸி'. ஆனுல் கூடிய விரைவில் பம்பாய் வருவேன்'' என்று கூறிய சாரதா, சட்டென்று, ''உங்களுக்கு 'டெலிபோன்' இல்லையென்று கேள்விப்பட்டேன். ஏன்?'' என்று கேட்டதும், நமக்கு இது மிகவும் ஆச்சரியமாகவும், அதிசயமாகவும் இருந்தது. ஒரு பெரிய 'பாரத்' நடிகருக்கு டெலிபோன் இல்லையா?

''டெலிபோன் வைத்துக் கொண்டால் இரவு ஒரு மணிக்கும், இரண்டு மணிக்கும் 'நான் உங்கள் ரசிகை; உங்களைக் காதலிக்கிறேன்' என்று பல பெண்கள் 'போன்' செய்கிருர்கள். 'போன்' தொல்லையே வேண்டாம்'' என்று பரிதாபமாகக் கூறிக் கொண்டே சாரதாவிடம் விடை பெற்றுர் சஞ்சீவ்.

பேட்டி: **சியாமளன்.**
படங்கள்: **ஏ. சுந்தரம்.**

"என் மனைவி எத்தனையோ நீலங்களை உபயோகித்துப் பார்த்திருக்கிறாள்... ஆனால் ராபின் ப்ளூ எங்கள் குடும்பத் துணி-உடைகளை மிகப் பளிச்சிடும் தூய வெண்மை ஆக்குவதை நன்கு காண்கிறாள்"



இதனை லட்சக்கணக்கான குடும்பத் தலைவர்களும் ஒப்புக் கொள்ளுகின்றனர்




வெள்ளைத் துணி-உடைகளை, ஸோப்பு அல்லது டிடர்ஜெண்ட் கொண்டு வெளுக்கச் செய்வது மட்டும் போதாது. மிகப் பளிச்சிடும் தூயவெண்மை ஆக்குவதற்கு அவற்றை ராபின் ப்ளூவில் முழ்கச் செய்தெடுக்க வேண்டும். ஒரு வாளி தண்ணீரில் ஒரு சிட்டிகை ராபின் ப்ளூ அற்புதமாக வேலை செய்யும்.

ராபின் ப்ளூ

வெள்ளைத்துணி-உடைகளை மிகப் பளிச்சிடும் தூயவெண்மை ஆக்குகின்றது

ARBC-37 TAM


உங்கள் உடலுக்குத் தேவை
அத்தியாவசியமான
இதர உணவுப் பானங்கள் இவற்றிலே எத்தனை தருகிறது என்று பாருங்கள்!
காம்ப்ளான்
23 ஊட்டச் சத்துக்களையும் தருகிறது.
குறிப்பைப் படியுங்கள்:
புரதம்
லிப்பிடுகள்
கார்போஹைடிரேட்
கால்ஷியம்
பாஸ்பரஸ்
சோடியம்
குளோரைடு (Cl வடிவில்)
பொட்டாஷியம்
இரும்புச் சத்து
அயோடின்
வைட்டமின் ஏ
வைட்டமின் பி1
ரிபோஃப்ளேவின்
நிக்கோடினமைடு
கால்ஷியம் பென்டோதெனேட்
கோலின்
பைரிடாக்ஸின் (B6)
வைட்டமின் பி12
ஃபாலிக் அமிலம்
வைட்டமின் ஸி
வைட்டமின் டி
வைட்டமின் ஈ
வைட்டமின் கே
இதர சிறுசிறு பொருட்கள்
பருகுவீர் காம்ப்ளான்®
பரிபூரண உணவு
போஷாக்குப் பற்றுக்குறையிலிருந்து பாதுகாக்கவே.



11

ஹேமா ஏன் மறுக்கிறுள்?

வாய்விட்டு அவள் ஒன்றும் சொல்லா விட்டாலும் பாலசந்தருக்கு நிலைமை புரிந்தது. ஹேமாவின் அம்மாவும், அப்பாவும் ஏமாற்றத்தோடு உட்கார்ந் திருந்தார்கள். 'ஹேமா ஊருக்கு வர மாட்டேன் என்கிறுள். நீங்கள் சொல்லக் கூடாதா' என்று முறையிடுவது போல் இருவரும் பாலாவை வெறித்துப் பார்த் தார்கள்!

ஹேமாவின் மௌனத்தைக் கலைக்க வேண்டும்; இதமாகப் பேசி அவளை இணங்க வைக்க வேண்டும் என்று நினைத் தான் பாலசந்தர். ஹேமாவிடம் வந்தான். விழிகள் படபடக்க கணவனைப் பார்த்துவிட்டுத் தலை குனிந்து கொண் டாள் அவள்.

''ஹேமா, மாமாவும் அத்தையும் என்னிடம் சொன்ஞர்கள். உன்னை அழைத்துப் போக ரொம்ப ஆசையாக இருக்கிறுர்கள்...'' என்று பாலா ஆரம் பித்தான்.

அவள் நிமிர்ந்து பார்த்தாள், தனக்கு அது தெரியும் என்னும் பாவனையில்...

''உன்னை அழைத்துக் கொண்டு போவ தற்காகவே வந்திருக்கிறுர்கள். அவர்க ளின் ஆசையைக் கெடுக்கக் கூடாது, அல்லவா?'' — மீண்டும் மனைவியைப் பார்த்தான்.

ஹேமாவிடமிருந்து பதில் இல்லை.

''நீயும் விரும்புவாய் என்று நினைத்து சம்மதித்தேன். ஊருக்குப் போய்விட்டு வந்தால் என்ன ஹேமா? சில தினங்கள் தானே!'' என்ருன் பாலா.

''ஆமாம், ஹேமா... எங்க ளோடு வரக்கூடாதா? பிறந்த வீட்டுக்கு வர ஆசையில்லையா? ரொம்ப நாள் தங்காவிட்டா லும் பரவாயில்லை, அம்மா... மாப்பிள்ளை விரும்பும்போது நீ ஏன் மறுக்கிருய்?'' என்ருள் ஹேமாவின் அம்மா.

''ஹேமா, நீ போய்விட்டு வா. நான் அடிக்கடி வந்து பார்க்கிறேன். அங்கே இருக்கப் பிடிக்காவிட்டால் நானே அழைத்து வந்து விடுகிறேன்'' என்று பாலசந்தர் சொன்ஞன்.

மறுபடியும் அவள் மௌனம் சாதித்தாலும் அதை சம்மதத் தின் அறிகுறியாக அவர்கள் எடுத்துக் கொண்டார்கள்.

*

ஹேமா ஊருக்குப் போய் விட்டாள். மாதக்கணக்கில் அவள் கைதி போல் அடைபட் டுக் கிடந்த அறை வெறிச்சோடிப் போயிருந்தது. சோகப் பதுமையாக ஹேமா, கட்டிலில் ஒய்ந்திருந்தா லும் தினமும் சில முறை அவளை பாலா பார்க்கத் தவறுவதில்லை. ஹேமா இல்லாதது சற்று நிம்மதியைத் தந்தா லும் நெஞ்சத் தவிப்பு தணிந்துவிட வில்லை. அவள் கொஞ்சமாவது குண மடைந்து திரும்பி வரமாட்டாளா என்ற ஏக்கம் இருந்தது. குணம் ஏற்படக் கூடிய நோயா அவளுக்கு வந்திருக்கிறது?



அது பாலாவுக்கே வெளிச்சமாகாத விஷயம் ஆயிற்றே!

ஹேமாவைப் பற்றிய கவலையைச் சிறிது மறந்துவிட்டு ஆபீஸ் வேலைகளில் முனைப்பாக ஈடுபட்டான் பாலசந்தர். அதற்கான சில நல்ல சந்தர்ப்பங்கள் கிடைத்திருந்தன. பெங்களூரில் பேச்சைப் பாதியோடு நிறுத்திக் கொண்டு வந்தது என்னவோ போல் இருந்தது. ஹேமாவுக்கு ஆபத்து என்று தந்தி வந்ததால் பாதகமில்லை என்று இப்போது அவன் திருப்திப்பட்டுக் கொண்டான்.

தந்தி கொடுத்தது யார்? வீட்டிலுள்ளவர்கள் தந்தி அனுப்பவில்லை என்பது அவனுக்குத் தெரியும். ஆபீசிலிருந்து தான் கொடுத்திருப்பார்கள். மானேஜர் சங்கரனை பாலசந்தர் விசாரித்தான். ஹேமாவுக்கு உடம்பு சரியில்லாததால் பெங்களூருக்குத் தந்தி கொடுக்கும்படி டெலிபோனில் தன்னிடம் யாரோ கூறியதால், அப்படியே செய்ததாக அவர் சொன்னார். ''யாரோ என்றால் யார்?'' என்று பாலா கேட்கவே செய்தான். வீட்டிலிருந்து சொல்லியிருப்பார்கள் என்று நினைத்ததாக சங்கரன் கூறினார்.

பாலா அதற்கு மேல் விசாரித்துக் கொண்டிருக்க அவசியமில்லாதபடி மகிழ்ச்சியான ஒருசெய்தி கிடைத்திருந்தது. ஒரு பெரிய ஏற்றுமதி ஆர்டர் வெளிநாட்டுக் கம்பெனியிலிருந்து வந்து இருந்தது. எதிர்பாராத வியப்பை அது தந்தது. தனக்குப் பரிச்சயமில்லாத கம்பெனி அது. அவர்களாகவே வலிய ஆர்டர் தந்திருக்க முடியாது. யாரோ ஒரு ஏஜெண்ட் சிபாரிசு செய்து இருக்க வேண்டும். ஆமாம், அதுதான் நடந்திருந்தது. கடிதத்தைத் திரும்பத் திரும்ப பாலசந்தர் படித்தான்.

பிரபு என்பவரைத் தங்கள் கம்பெனியின் பிரதிநிதியாக நியமித்திருப்பதாகவும், அவர் தெரிவித்தபடி பாலசந்தருக்கு ஆர்டர் கொடுக்கப் பட்டிருப்பதாகவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

'யார் அந்தப் பிரபு?' என்று யோசித்தான் பாலா.

பாலாவின் தொழிலைப் பற்றிப் பிரபு சிறப்பான அபிப்பிராயம் தெரிவித்திருப்பதால் தொடர்ந்து ஆர்டர்கள் கொடுக்க விரும்புவதாகவும் எழுதியிருந்தார்கள்.

பாலாவுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. ஆர்டரை ஏற்றுக் கொண்டதை உறுதிப்படுத்தி உடனடியாகப் பதில் அனுப்ப விரும்பினான். விமலா அப்போதுதான் உள்ளே வந்தாள். நாராயணிடமும், ராம்நாத்திடமும் சொல்லி விட்டு சென்னைக்குத் திரும்பும்படி நேற்றே விமலாவுக்குத் தகவல் கொடுத்திருந்தான். சொன்னபடி அவள் திரும்பியிருந்தாள்.

விமலாவை அழைத்தான் பாலசந்தர். அவள் எதிரே வந்து அமர்ந்தாள்.

டபிள்யூ.ஆர். ஸ்வர்ணலதா

''பயணம் எப்படி இருந்தது? நாராயண் என்ன சொன்னுர்?'' என்று விசாரிக்க ஆரம்பித்தான்.

''நீங்கள் இல்லாமல் என்ன பேச முடியும்? உங்களைச் சந்திப்பதற்காக இன்னொரு முறை இங்கே வர அவர் விரும்புகிருர்!''

''மிஸ்டர் ராம்நாத் என்ன நினைக்கிருர்?''

''ஓ! அப்பாவுக்கும் அதே எண்ணம் தான்'' என்ருள் விமலா.

''நாராயண் பெங்களூரிலேதான் இருக்கிருரா?''

''இல்லை... பம்பாய்க்குப் போவதாகச் சொன்னுர். போயிருப்பார்.''

''அவர்கள் வேறு ஒன்றும் சொல்லவில்லையா?''

''தொழிலைச் சீக்கிரமாக ஆரம்பிக்க வேண்டும் என்று நாராயண் ஒற்றைக் காலில் நிற்கிருர். உங்கள் மீது மிகுந்த மதிப்பு வைத்திருக்கிருர்கள். நாம் அழைக்காவிட்டால்கூட அவரே இங்கு வந்து விடுவார் போலிருக்கிறது'' என்ருள் விமலா.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு பாலசந்தர் சொன்னுன்:

''மிஸ் விமலா, நான் பெங்களூரிலிருந்து அவசரப்பட்டுத் திரும்பியது நல்லதாகப் போயிற்று. ஒரு மகிழ்ச்சியான செய்தி வந்திருக்கிறது!''

அறிந்து கொள்ள விரும்பும் ஆர்வத்தோடு விமலா அவனைப் பார்த்தாள். ஹேமாவைப் பற்றி ஏதாவது சொல்லுவானே என்று அவள் நினைத்தாள்.

''ஒரு பெரிய ஆர்டர் கிடைத்திருக்கிறது...'' என்றவாறு கடிதத்தை அவளிடம் கொடுத்தான்.

விமலாவின் பார்வை கடிதத்தில் பதிந்தது. பாலா அவளையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். மனம் மலர்ந்து கொண்டிருந்தது.

*

ஹேமா ஊருக்குப் போயிருக்கிருள் என்ற செய்தி சேகருக்கு வியப்பைத் தந்தது. டெலிபோன் ரிசீவரைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு ''பாலசந்தரின் வேலைதானே?'' என்று கேட்டான்.

''அப்படித் தெரியவில்லை. ஹேமாவின் அம்மாவும் அப்பாவும் வந்திருந்தார்கள். அவர்களே அழைத்துப் போயிருக்கிருர்கள்'' என்று மறு முனையிலிருந்து பதில் கிடைத்தது.

''பாலாவுக்கு மகிழ்ச்சியாக இருக்குமே?''

''ஆமாம், அப்படித்தான் இருக்கிருர்.''

''ஏன்?''—சேகர் கேட்டான்.

''ஒரு பெரிய எக்ஸ்போர்ட் ஆர்டர் கிடைத்திருக்கிறது!''

''வெளிநாட்டுக் கம்பெனியில் இருந்தா?''

''ஆமாம்...!''

''விமலா எப்படி...?''

''பெங்களூரிலிருந்து திரும்பியாயிற்று.''

''சரி, பிறகு பேசுவோம்'' என்றவாறு ரிசீவரை வைத்தான் சேகர்.

ஹேமாவைப் பற்றி நினைக்கத் தோன்றியது அவனுக்கு. அவள் எப்படி இருப்பாள்? இடம் மாறியதால் ஏதா[வது] மாறுதல் ஏற்படுமா? அதனுல் அவனுக்கு ஏதாவது...

நினைவைத் திருப்புவதற்காக விமலாவை நினைத்துக் கொண்டான்.

பாவம், விமலா... அன்றிரவு ஓட்டலுக்கு டெலிபோன் செய்து வெகு நேரம் அவளிடம் என்னவெல்லாமோ விசாரித்ததை எண்ணியபோது அவனுக்குச் சிரிப்பு வந்தது. தன் குரலை அவள் கண்டுபிடிக்கவில்லை என்பதை சேகர் புரிந்துகொண்டான். பாலாவின் ஒரு நண்பன் என்று சொல்லிக் கொண்டு அவன் பேசினுன். அத்தனை விஷயங்களையும் விமலா கொட்டிவிட்டாளே, ஏன்? அப்படி என்ன பலவீனம்? ஹேமாவைப் பற்றிப் பேச்சை எடுத்து விட்டதன் விளைவுதான் அது. ஹேமாவை விமலாவுக்குப் பிடிக்கவில்லை என்று அர்த்தமா? தன் பெயரைக் கேட்டபோது பதில் சொல்லாமல் ரிசீவரை வைத்து விட்டதை நினைத்துக் கொண்டான். விமலா எப்படிப்பட்டவள் என்பது பற்றி ஒரு முடிவுக்கு அவன் வந்திருந்தான். ஆனுலும், அவளிடம் 'ஏதோ இருக்கிறது, எவ்வளவோ இருக்கிறது' என்[ற] எண்ணத்தை சேகர் மாற்றிக் கொள்[ள]வில்லை. அது என்ன? அவளுடைய அழகா? கவர்ச்சியா? அதற்கும் மேலே ஏதோ ஒன்று...

சேகர் 'சப்பர் கிளப்'பில் உட்கார்ந்திருந்தான். ஒரு பெரிய ஓட்டலின் சாப்பாட்டு ஹால் அது. ஏர்-கண்டிஷன் செய்யப்பட்டிருந்தது. மேற்கத்திய மெல்லிசை ஒலித்துக் கொண்டிருந்தது. மெல்லிய சிவப்பு ஒளி பரவியிருந்தது. மேசைக்கு மேசை மெழுகுவத்தி வெளிச்சம். வசதி படைத்தவர்கள் டின்னருக்காக வரும் இடம் அது. சேகர் சில தடவை மட்டுமே வந்திருக்கிருன்.

வெயிட்டர் இன்னும் அவனிடம் வராததால் அந்த ஹாலை நோட்டமிட்டான். கூட்டம் இல்லை. சில மேசைகள் மட்டுமே நிரம்பியிருந்தன. யாரையோ தேடும் ஆர்வம் சேகரின் பார்வையில் இருந்தது. அது வீண் போகவில்லை...

வாட்டசாட்டமான தோற்றமுடைய ஒருவர் மதுபானத்துடன் ஒரு மேசையருகே உட்கார்ந்திருந்ததை சேகர் பார்த்தான். அவர் யார்? புன்னகை அவன் முகத்தில் படர்ந்தது. ராம்நாத் தான் அங்கே தனியே உட்கார்ந்து பானத்தைப் பருகிக் கொண்டிருந்தார்.

சிறிது நேரம் சிந்திப்பதும், மதுஅருந்துவதுமாக ராம்நாத் இருந்தார். நாராயணும், அவரும் அடிக்கடி இங்கே வருவார்கள். நாராயண் பம்பாய்க்குப் போய் விட்டதால் ராம்நாத் மட்டும் வந்திருக்கிறார் என்று சேகர் நினைத்தான்.

மேற்கொண்டு யோசிக்கவில்லை.

''குட் ஈவினிங்...'' என்று குரல் கொடுத்தபடி ராம்நாத் அருகே சென்று உட்கார்ந்தான் சேகர்.

அவர் பதில் சொல்லியபடி சேகரை நிமிர்ந்து பார்த்தார். ஒரு நிமிடம் வியப்பு அவருக்கு.

''நீங்கள்..? உங்களை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே!'' என்றார் ராம்நாத்.

''ஆமாம். நான் ரேஸ் பைத்தியம். ரேஸ் கோர்ஸில் திரிந்து கொண்டிருப்பேன். உங்களையும் இதற்கு முன் நான் பார்த்த மாதிரி இருக்கிறது...'' என்று சேகர் நீட்டினான்.

''கரெக்ட். ரேஸ் கோர்ஸில்தான் பார்த்திருக்க வேண்டும்'' என்றார் ராம்நாத்.

வெயிட்டர் வந்து நின்றான். சேகர் ஆர்டர் கொடுத்தான். ''நேரமாகிறது. நான் போக வேண்டும்... வெயிட்டர், பில் எங்கே?'' என்றார் ராம்நாத். சற்று அவசரப்படுவது போல் தோன்றியது.

பில் வந்தது. ராம்நாத் பாக்கெட்டில் கையை விட்டார். ஒரு நிமிஷம் அதிர்ந்து போனார்.

''என்ன யோசிக்கிறீர்கள்?'' என்றான் சேகர்.

''பர்ஸைக் காணவில்லை!''


''இவ்வளவுதானா? நான் பக்கத்தில் இருக்கும்போது கவலை எதற்கு? ப்ளீஸ் ஜாய்ன் மீ... இன்னும் ஏதாவது சாப்பிடுங்கள்...'' என்றான் சேகர், புன்னகையுடன்.

ராம்நாத்தின் முகம் இருண்டது.

(தொடரும்)



டாக்ஸி ஸ்டாண்டுகளில் டெலிபோன் வசதி—செய்தி.



என்றும் போலவே ஒரு நாள்... இருப்பினும், வலியையும், அசௌகரியத்தையும், நிம்மதியின்மையையும் போக்கும் வழி சொல்லக்கூடிய தோழி ஒருத்தி கிடைக்கமாட்டாளா, அது எந்த நாள் என்பதை மறக்க உதவ மாட்டாளா, என்று நீங்கள் ஏங்கும் நாள் அது—அப்படிப் பட்ட நாட்களில் மைக்ரோ:ஃபைன்ட் ஆஸ்ப்ரோ வை நாடுங்கள்—சில விநாடிகளில் நிம்மதி பெற!

மைக்ரோ:ஃபைன் செய்யப்பட்டிருப்பதால், ஆஸ்ப்ரோ அதி விரைவாகச் செயல்புரிகிறது. விரைவில் கிரகிக்கப்பட்டு. நீடித்த நிவாரணத்தை அதிவேகமாக அளிப்பதற்கென, ஆஸ்ப்ரோ·விலுள்ள வலிநிவாரணச் சேர்க்கைப் பொருள்கள் 30 மடங்கு நுணுக்கமாக்கப் பட்டுள்ளன. மைக்ரோ:ஃபைன்ட் ஆஸ்ப்ரோ , இப்பொழுது கிடைக்கும் அதிநவீனமான வலி நிவாரணியாகும். கையடக்கமான ரேக்குகளில் கிடைக்கிறது.



மைக்ரோ:ஃபைன்ட் ஆஸ்ப்ரோ
அதிவேகமாக வலியை வெளியே இழுத்து
அசௌகரியத்தைப் போக்குகிறது.

ஆஸ்ப்ரோ இருந்தாலே—
ஆனந்தப்புன்னகைதான்!

நிகோலஸ் தயாரிப்பு

A.G.41 TM (R)


உங்கள் கூந்தலுக்கு, ஒரு துளி
எண்ணெயைக் காட்டிலும்
உகந்தது வேறு உண்டோ?
உண்டு. ஒரு துளி எண்ணெயோடு தேவை—ஒரு துளி ப்யூர் ஸில்விக்ரின்.
ஏன்?
எண்ணெ என்ன செய்கிறது?
ப்யூர் ஸில்விக்ரின் புரியும் புதுமை
பரிபூரணக் கூந்தல் பாதுகாப்புக்கு
தேவையான எண்ணெ, ப்யூர் ஸில்விக்ரின்—
இரண்டும் அடங்கியது ஸில்விக்ரின
ஹேர் டிரெஸ்ஸிங் ஒன்றுதான்
கூந்தல் எழிலோடு செழித்து வளர...
எப்போதும் உபயோகியுங்கள்
ஸில்விக்ரின் ஹேர் டிரெஸ்ஸிங்
Silvikr
Hair
Dressi
mcm/S/11a/tam
உங்களைப் போலவே உங்கள் ...சத்தை நேசமுடன் பாதுகாப்பது.
ஹேர் டிரெஸ்ஸிங்
ஸில்விக்ரின்

"இந்த டவரின் உச்சிக்குச் செல்வதற்காக ஒரு லிப்ட் இருக்கிறது. ஒரு நாள் ஜெர்மன் நாட்டு எஞ்சினீயர் உயரச் சென்றிருந்தார். காற்றின்வேகம்சொல்லி முடியாது. உச்சி டவர்கூட நான்கு அடி இடைவெளியில் இங்குமங்கும் ஆடிக் கொண்டுதான் இருக்கும். அவர் தன் சட்டைப் பையில் நூற்றுக்கணக்கான மதிப்புள்ள ரூபாய் நோட்டுக்களை வைத்திருந்தார். இவை யெல்லாம் 'Mad, Mad, Mad world' படத்தில் வருகிற மாதிரி, காற்றில் பிய்த்துக் கொண்டு

இரண்டு வருடங்கள் பாடுபட்டு உழைத்த, டெலிவிஷன் நிலையத் தலைமை எஞ்சினீயர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, டவரைப் பற்றி சுவாரசியமாக விவரிக்கிறார்.

இத்தனை உயரமான டவரைப் பார்க்கும் நமக்கு வியப்பான வியப்பு!

அவருடைய காதருகே சென்று மெதுவாக "ஏன் சார், இந்த டவரைக் கட்டி முடிப்பதற்குள், குறைந்தது 5, 6 பேர்களாவது கீழே விழுந்து மாண்டிருப்பார்கள்; இதையெல்லாம் நீங்கள்,



டெலிவிஷனுக்கு ஹேமமாலினி பேட்டி யளிக்கிறார்

பறக்க ஆரம்பித்து விட்டன. அவர் முகத்தைப் பார்க்க வேண்டுமே! செய்வது அறியாது, அவை பறந்து செல்லும் அழகைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருந்தார்."


—உலகத்திலேயே உயரத்தில் நான்காவது ஸ்தானம் வகிக்கும் பம்பாய் டெலிவிஷன் டவரை உருவாக்குவதில்,

பீதி ஏற்படும் என்று மறைத்து விட்டதாக வெளியில் பேசிக் கொள்கிறார்களே, இது உண்மையா?" என்று கொஞ்சம் தயங்கியபடியே கேட்கிறோம்.

அவர் சிரித்துக் கொண்டே "இது என்ன சார்! முழுப்

மகாராஷ்டிர சிறப்புக் கட்டுரை





டி. வி-க்கு ஜெயபாதுரி, சஞ்சீவ்குமார் பேட்டி

திரையுலகத் தலைநகரில் டெலிவிஷன்...

பூசணிக்காயை எங்காவது சோற்றுக்குள் மறைக்க முடியுமா? இதெல்லாம் சுவையான வதந்திகள்தான். ஆண்டவன் அருளால், இந்த டவர் ஒரு உயிரைக் கூடக் கேட்கவில்லை'' என்று சொன்னபோது, அவர் முகத்தில் வெற்றிப் புன்னகை தென்பட்டது.

பம்பாய் நகரின் மத்தியிலுள்ள ஓர்லியில் குளிர் சாதன வசதி கொண்ட ஓர் அழகிய இரண்டு மாடிக் கட்டடம். அதை ஒட்டிச் சுமார் ஆயிரம் அடி உயரத்தில் பிரமாண்டமான டவர் — இதுதான் பம்பாய் டெலிவிஷன் நிலையம்.

உள்ளே நுழைந்ததுமே 'ஜில்'லென்று ஓர் இதம். வழ வழப்பான மொசைக் தரையும், கட்டடக் கலை நிபுணர்களின் கைவரிசையும், நுண்ணிய வேலைப்பாடுள்ள அலங்காரமும் நெஞ்சை அள்ளுகின்றன.

லட்சக்கணக்கான விலை மதிப்புள்ள டெலிவிஷன் சம்பந்தப்பட்ட கருவிகளைக் கண்டு அதிசயிக்கிறோம்.

இவை யாவும் மேற்கு ஜெர்மன் அரசாங்கத்தின் அன்பளிப்பு.

இந்த நிலையத்தை உருவாக்க ஆன செலவு 3.2 கோடி ரூபாய்.

மேலே நடக்கிறோம். நிகழ்ச்சி நடக்கும் ஸ்டுடியோ, அறிவிப்பு ஸ்டுடியோ, ஒத்திகை ஸ்டுடியோ - எல்லாமே நவீன அமைப்புடன், நூதனமாகக் காட்சி அளிக்கின்றன. நாட்டின் பல பாகத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் நுட்ப வல்லுநர்கள் பணியாற்றுகிறார்கள்.

டெலிவிஷன், இன்று நகரத்திலும், நாட்டிலும், உலகத்திலும் நடக்கும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் நாம் இருக்கும் இடம் தேடிக் கொண்டு வரும் ஒரு மாயா ஜால வித்தை.

அன்றாடம் நகரத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள், அது ஒரு விபத்தாக இருந்தாலும் சரி, அல்லது அழகுப் போட்டி நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அன்று இரவு டெலிவிஷனில் அது இடம் பெற்று விடும். செய்திகளை உடனுக்குடன் தருவதில் அத்துணை விறுவிறுப்பு.

ஒரு நாள் பகல் முழுவதும் நல்ல மழை. எங்கும் தண்ணீர் தேங்கி, மின்சார ரயில்களின் ஓட்டம் தடைப்பட்டுவிட்டது. பின், ரயில் நிலையத்தில் மக்கள் கூட்டத்தின் தவிப்பைக் கேட்க வேண்டுமா? 6 மணிக்கெல்லாம் டி. வி. கேமராமேன், இந்த நிலையைப் படம் பிடித்து வந்தார். இரவு எட்டு மணிக்குள் டெலிவிஷனில் காட்டி விட்டார்கள். இதன் மூலம் தம் கணவன்மார்கள் இன்னும் ஏன் வீடு திரும்பவில்லை என்ற ரகசியத்தைத் தெரிந்து கொண்டு, மாதர்கள் நிம்மதியாக இருந்தார்கள்.

திரு. பி. வி. கிருஷ்ணமூர்த்தி



பத்திரிகைகளுக்கு முன்பாக, செய்தியைத் தந்த ஒரு நிகழ்ச்சியை, உதவி எஞ்சினீயர் திரு. ரமணன் ஆர்வத்தோடு விவரித்தார்:

''சமீபத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில், எல்லாப் பத்திரிகைகளுக்கும் போல் எங்களுக்கும் மகாராஷ்டிர மாநிலத்தின் எஸ். எஸ். சி. ரிசல்ட் கிடைத்தது. அதிலிருந்து, மாநிலத்திலேயே முதலாவதாகத் தேறிய மாணவன், பண்டர்பூரைச் சேர்ந்தவன் என்பது தெரிந்தது. உடனே, இரவு பத்து மணிக்கு ஒரு காரை எடுத்துக்கொண்டு, பண்டர்பூர் நோக்கிப் புறப்பட்டோம். இரவு முழுதும் பயணம் செய்து, காலை 6 மணிக்கெல்லாம் அந்தப் பையனைத் தூக்கத்தில் இருந்து எழுப்பினோம். டி. வி. கேமரா, ரெக்கார்டர் சகிதமாகச் சென்ற எங்களைப் பார்த்ததும் அந்த மாணவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

'''நீதானப்பா மாநிலத்திலேயே முதலாவதாகத் தேறி இருக்கிறாய். டெலிவிஷனுக்காகப் பேட்டி காண பம்பாயில் இருந்து வந்திருக்கிறோம்' என்று சொன்னபோது, அவன் முகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. பின், அன்று இரவே இந்த நிகழ்ச்சி டி. வி.-யில் காண்பிக்கப்பட்டது. இந்த மாணவனின் போட்டோ, பேட்டி முதலியவை அடுத்த நாள்தான் பத்திரிகைகளில் வந்தன.''

டெலிவிஷனின் முக்கிய ஆதாரமே ஒளி பரப்புச் செய்யும் டவர்தான். இதன் பக்கத்தில் நின்று கொண்டு உயரப் பார்த்தால் தலை சுற்றுகிறது. நமது நாட்டு எஞ்சினீயர்கள், பொறியியல் துறையில் அடைந்துள்ள அதிசயிக்கத்தக்க முன்னேற்றத்திற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும். இதன் அடி மட்டம் 120 சதுர அடி கொண்டது. டவர் எந்த அளவான காற்றின் வேகத்தையும் எதிர்த்து நிற்கும் [illegible] வாய்ந்தது.

இதன் உச்சியில்தான் ஒலி - ஒளிகளை பரப்பும் நுண்ணிய கருவி (Antenna) பொருத்தப்பட்டிருக்கிறது. இது 9[illegible] கிலோ மீட்டர் தொலைவுக்கு இயக்கு[illegible] சக்தி வாய்ந்தது.

இந்த நிலையத்துக்கு முக்கிய தூண்களாக விளங்குபவர்கள், இரு மூர்த்திகள். அதில் மற்றொரு மூர்த்திதான் இயக்குநர் (Director) திரு. பி. வி. கிருஷ்ணமூர்த்தி.

தரமான நிகழ்ச்சிகளை மக்களுக்கு பயனுள்ள வகையில் கொடுக்

வண்டும் என்பதுதான் இவருடைய
றிக்கோள்.

''பம்பாய், முழுக்க முழுக்க ஒரு
காஸ்மோபாலிட்டன்' நகரம். எனவே,
ல்லோரையும் திருப்திப்படுத்தும் வகை
ல் நிகழ்ச்சிகளைத் தொகுத்து அளிப்பது,
ஆரம்பத்தில் ஒரு சவாலாகவேஇருந்தது.

''இந்த ஓராண்டு காலத்தில், ஒருவர்
கலாசாரத்தைமற்றவர் புரிந்துகொண்டு,
விட்டுக் கொடுத்து அனுசரித்துப் போகும்
பரந்த மனப்பான்மை வளர்ந்திருக்
கிறது. டெலிவிஷன், இந்திய ஐக்கிய
ஒருமைப்பாட்டை, வாழைப்பழத்தில்
ஊசி ஏற்றுவது போல் மறைமுகமாக
வளர்த்துக் கொண்டிருக்கிறது.

உதாரணமாக மராத்திய கலாசாரத்
தில் இவ்வளவு செல்வச் செழிப்பு இருக்
கிறது என்பதை, இப்போதுதான் மற்ற
இனத்தவரும் அறியும் வாய்ப்பு ஏற்பட்
டிருக்கிறது. அதே போல் 'செம்மீன்'
படத்தை டெலிவிஷனில் காட்டிய
போது, தென்னாட்டின் கலைச் சிறப்பை
மற்றவர்களும் உணர்ந்து ரசிக்க
முடிந்தது.''

''சரி, மாணவர்களுக்கு ஏதாவது
இதனால் பயனுண்டா?''

''சினிமாப் படங்கள், பொழுது
போக்கு நிகழ்ச்சிகள் இவற்றைத் தருவ
தோடு எங்கள் பொறுப்பு முடிவடைந்து
விடாது. மாணவர்களுக்கு, வகுப்பு
நேரத்தை ஒட்டி, ஆரம்ப கட்டமாக,
வாரத்தில் சில மணி நேரம் ஆங்கிலம்,
புதிய கணிதம், விஞ்ஞானம், ரசாயனம்,
உயிர் நூல் (Biology) இவற்றில்,
முக்கியமான பகுதிகளைப் போதிக்க
இருக்கிறோம். இவற்றின் தரம் மிக
உயர்வாக இருக்கும்.''

''விவசாயத்தில் உங்கள் பங்கு
என்ன?''

''நம் நாடு ஒரு விவசாய நாடுதானே!
நமக்கு உணவளிப்பவர்கள் பிரச்னையை
நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா?
பூனாவில் 300 அடி உயர டவர் உரு
வாகிக் கொண்டிருக்கிறது. இந்த
டவர், பம்பாய் நிகழ்ச்சிகளை அப்படியே
வாங்கி, 100 கிலோ மீட்டர்
சுற்றளவுக்குப் பரப்ப வல்லது.
அப்போது, ஒரு நாளைக்கு அரை மணி
நேரமாவது, இந்த நிகழ்ச்சிக்கு
ஒதுக்குவதாக முடிவு செய்திருக்கிறோம்.
குறிப்பாக, ஒரு பயிரை எடுத்துக்
கொண்டு, விதைகளைத் தேர்ந்தெடுப்
பது முதல், அறுவடையாகும் சமயம்
வரை, அப்போதைக்கப்போது,



திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி

விவசாயிகளுக்கு வழி காட்டிச்
செல்லும் முறையில் அமையும்.''

''நாட்டிய நிகழ்ச்சிகள் எப்படி
வரவேற்கப்படுகின்றன?''

''இந்திய நாட்டின் முக்கிய நடனங்க
ளான கதக், குச்சுப்புடி— மணிப்புரி,
பாங்கரா, பரத நாட்டியம்—இப்படி
எல்லாமே இடம் பெறுகின்றன.
குறிப்பாக, பரதநாட்டியத்தைக் கற்றுக்
கொள்ள வேண்டும் என்ற ஆர்வம்,
மற்ற மாநில மக்களுக்கும் ஏற்பட்டிருக்
கிறது.''

தற்போது தினமும், பம்பாய் டி. வி.
நிலையத்தில் மாலை ஏழு மணியிலிருந்து
பத்து மணி வரை, மூன்று மணி நேர
நிகழ்ச்சிகளே நடைபெற்று வருகின்றன.

டெலிவிஷனின் முக்கிய அம்சமாக
உள்ளது, Live Television. நிலையத்
திற்கு வெளியே நடக்கும் நேரடி
நிகழ்ச்சிகளை உடனுக்குடன் அங்கிருந்த
படியே காட்டுவது இது. சமீபத்தில்
இங்கிலாந்துக்கும் — இந்தியாவிற்கும்
இடையே நடைபெற்ற கிரிக்கெட்
பந்தயத்தை இம் முறையில்தான்
டெலிகாஸ்ட் செய்தார்கள்.

—கனகம்.

அடுத்த இதழில்...
அற்புதத்திற்கு
ஓர் அஜந்தா!

12

சேகர், ராம்நாத்தை நிமிர்ந்து பார்த்தான். உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான். எதிர்பாராத சந்தர்ப்பம் அல்லவா, இது? மேஜர் ராம்நாத்தை சில முறை பார்த்திருந்தாலும் இத்தனை நெருக்கமாக உட்கார்ந்து இப்பொழுது தானே பேச முடிந்திருக்கிறது! அவரிடம் என்னென்ன பேசுவது என்று ஒரு நிமிஷம் யோசித்தான். ராம்நாத் ஏதோ இக்கட்டான நிலைக்கு ஆளானவர் போல் உட்கார்ந்திருந்தார்.

''என்ன யோசிக்கிறீர்கள்?'' என்று சேகர் மெதுவாகக் கேட்டான்.

''ஒன்றுமில்லை.... நத்திங்...'' —ராம்நாத் முணுமுணுத்தார்.

''நீங்கள் வித்தியாசமாக நினைக்கிறீர்கள் போல் இருக்கிறது!''

''நோ...நோ...அப்படி எதுவும் இல்லை...''

''உங்கள் அருகில் உட்கார்ந்துகொஞ்ச நேரம் பேசுவதைப் பெருமையாக நினைக்கிறேன். எத்தனையோ விஷயத்தில் அனுபவம் பெற்ற உங்களைச் சந்திப்பது சாதாரண காரியமா? ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அது என்னுடைய அதிர்ஷ்டம்தான். ஆகையால் இப்பொழுது நான் ஹோஸ்ட்; நீங்கள் என் மதிப்புக்குரிய கெஸ்ட்... விருந்தாளி'' என்று சேகர் அடுக்கிக் கொண்டே போனான்.

ராம்நாத் அசந்து விட்டார். சேகரின் பேச்சும் தோற்றமும் அவரைக் கவர்ந்தன.

''தேங்க்யூ, மிஸ்டர் சேகர். உங்களைச் சந்தித்ததை நானும் மகிழ்ச்சியாகக் கருதுகிறேன், போதுமா?'' என்றவாறு ராம்நாத் புன்னகை புரிந்தார். சேகர் பெருமையோடு அவரைப் பார்த்தான்!

'சியர்ஸ்' கூறியபடி இருவரும் பானம் அருந்தினார்கள். அத்துடன் பேச்சும் தொடர்ந்தது:

''ஒரு முறை உங்களை ரேஸ் கோர்ஸில் பார்த்த ஞாபகம் இப்பொழுது வருகிறது'' என்றான் சேகர்.

''எப்பொழுது என்று நினைவு இருக்கிறதா?''

''யெஸ்... மிஸ்டர் நாராயண் என்பவரின் குதிரை வெற்றி பெற்ற சமயத்தில் உங்களை......''

''யூ ஆர் கரெக்ட்... எவ்வளவு மகிழ்ச்சியான நாள் அது!'' என்று கூறியபடி முகம் மலர்ந்து போனார் ராம்நாத்.

''அன்றைக்கு உங்களைப் பார்த்திருக்கிறேன். உங்களுடன் ஓர் இளம் பெண்ணும், பெரிய மனிதரும்...''

''ஆமாம், மிஸ்டர் சேகர். அவர்தான் நாராயண். அந்தப் பெண் என் மகள். மை ஒன்லி டாட்டர்!'' என்றார் ராம்நாத்.

''உங்களுக்கும் எனக்கும் எவ்வளவு ஒற்றுமை பார்த்தீர்களா? ஒரு ரேஸை விட மாட்டேன். நீங்களும் அப்படித்தான் போல் தெரிகிறது.''

''ஆனால் இப்பொழுது ரேஸ் இன்ட்ரஸ்ட் எனக்குக் குறைந்து கொண்டு வருகிறது'' என்று ராம்நாத் சொன்னார்.

''எனக்கும் கூட அப்படித்தான். ரேஸிலேயே நிறைய சம்பாதித்து விட்டேன். தேவைக்கு மேலாகவே வசதிகள் சேர்ந்த பிறகு ஏன் அலைய வேண்டும்? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' —ராம்நாத்தைக் கேட்டான் சேகர்.

அழைக்கும் விழிகள்...

''நீங்கள் சொல்வது சரிதான். ஆனல்...'' என்று அவர் இழுத்தார்.

''இன்னும் ஏதாவது செய்து கொண்டேயிருக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள் போல் தெரிகிறது. அதுவும் சரிதான். உங்கள் யோசனை எனக்கு உதவியாக இருக்கும். என்னிடம் பணம் இருக்கிறது. உங்களிடம் அபாரமான அனுபவம் இருக்கிறது. நீங்கள் எது சொன்னலும் கண்ணை மூடிக் கொண்டு செய்வேன்.''

''வெரி குட்...இவ்வளவு உற்சாக முள்ள நீங்கள் ஓய்ந்திருக்கக் கூடாது. ஏதாவது தொழில் செய்யுங்களேன்.''

''தொழில் அனுபவம் உண்டு. ஆனல் அங்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது'' என்ருன் சேகர்.

''ஆபத்தா? உங்களுக்கா?''—ராம்நாத் வியப்போடு கேட்டார்.

''ஆமாம். அதை நினைத்தால் நடுக்கமாக இருக்கிறது. எனக்கு பலத்த போட்டி ஏற்பட்டிருக்கிறது.''

ராம்நாத், சேகரை அமைதியாகப் பார்த்தார்.

''பல வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு நான் பிரதிநிதியாக இருந்தேன். ஏராளமான இம்போர்ட், எக்ஸ்போர்ட் ஆர்டர்களை கான்வாஸ் செய்வேன். ஆயிரக் கணக்கில் கமிஷன் வந்து கொண்டிருந்தது. இப்பொழுது எல்லாமே நின்று போய் விட்டது'' என்ருன் சேகர்.

''ஓ, அப்படியா?''

''ஆனல் இதற்காக நான் வருத்தப் படவில்லை. என்னிடம்தான் அதிகமான பணவசதி இருக்கிறதே. எனக்குப் போட்டியாக ஒருவன் முளைத்திருக்கிருன். அவன்தான் ஏகப்பட்ட ஆர்டர்களை வாங்கிக் கொள்ளை கொள்ளையாகச் சம்பாதிக்கிருன். அவனைச் சும்மா விடலாமா? என்னல் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை...''

''மிஸ்டர் சேகர், அவன் யார் என்று சொல்லலாமா?''

''நிச்சயமாக! நீங்கள் தெரிந்து கொண்டுதான் ஆக வேண்டும்...அவன் பெயர் பிரபுவாம். கெட்டிக்காரனும். நல்ல பிசினஸ் மூளையாம். அவனைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்.''



''எதற்காக?''

''பழி வாங்கவேண்டும் என்ற துடிப்பு. அவன் ஒத்து வந்தால் ஒரு பார்ட்னராகச் சேர்த்துக் கொள்ளவும் நினைக்கிறேன். எப்படி என் யோசனை?''

''நல்ல யோசனைதான். அவனை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? சம்மதித்து வரக் கூடிய 'டைப்'தானா அவன்?''

''அதுதான் தெரியவில்லை. ஆளைப் பார்த்தால்தான் தெரியும்.''

''ஓ, அவன் பெயர் பிரபுவா?''என்று ராம்நாத் முணுமுணுத்தார்.

''உங்களுக்குத் தெரியுமா, அவனை?'' என்று ஆவலோடு கேட்டான் சேகர்.



''முதுகிலே அடிச்சா தாங்கிக்கலாம், முகத்திலே அடிச்சா எப்படி சார் தாங்கறது?...''
''அப்படி யார் உங்களை அடிச்சது ..?''
''வெயில் சார்!''

''இல்லை, எங்கேயோ இதற்குமுன் கேட்ட பெயர் போல் இருக்கிறது''—ராம்நாத்சொன்னார். அடுத்த நிமிஷம் அவருடைய நினைவு சுழன்றது: 'பிரபு' என்று கூறிக் கொண்டு தன்னையும், நாராயணையும் சந்திக்க வந்த இளைஞன் அவர் மனத்தில் தோன்றினான். கறுப்புக் கண்ணாடியும் தாடியும் வைத்துக் கொண்டு துடிப்புடன் தொழில் அனுபவங்களைப் பற்றி அவன் கூறியதும், தன்னைப் பயன்படுத்திக் கொள்ளும்படி சொன்னதும் நினைவுக்கு வந்தன. சேகர் குறிப்பிடும் 'பிரபு' நிச்சயம் அன்றைக்கு வந்த இளைஞனாகத்தான் இருக்க வேண்டும் என்று ராம்நாத் முடிவு கட்டினார். பிரபுவைப் பற்றிய சில எண்ணங்கள் உள்ளத்தில் உலவ, சேகரைப் பார்த்தபடி மௌனமாக உட்கார்ந்திருந்தார் அவர்.

''அவனைப் பழி வாங்குவதைவிட அவனைத் தேடிப் பிடித்துபங்காளியாக்கிக் கொள்வதே நல்லது என்று படுகிறது. பிரபு அபாரமான மூளையுள்ளவனாகத் தெரிகிறது. மற்றவர்கள் அவனைப் பயன் படுத்திக் கொள்வதற்குள் நானே முந்திக் கொண்டு அவனை வசப்படுத்திக் கொள்ள நினைக்கிறேன். சரிதானே?'' என்றான் சேகர்.

ராம்நாத் தலையை ஆட்டினார்.

அந்த 'சப்பர் கிளப்'பில் ஒன்றிரண்டு பேரே மிஞ்சியிருந்தனர். ராம்நாத் நேரத்தைப் பார்த்தார். இரவு மணி பதினொன்று.

''அதிக நேரத்தை எடுத்துக்கொண்டு விட்டேன். புறப்படுவோமா?'' என்றான் சேகர்.

''தேங்க்யூ வெரிமச், மிஸ்டர் சேகர்'' என்றவாறு ராம்நாத் எழுந்தார்.

''உங்களை மீண்டும் எங்கே சந்திக்கலாம்?'' என்று அவன் கேட்டான்.

''இங்கே வருவேன். பங்களாவிலும் சந்திக்கலாமே!'' என்றார் ராம்நாத்.

குதூகலத்தோடு அவருக்கு 'குட்நைட்' கூறியபடி ஸ்கூட்டரைக் கிளப்பினான் சேகர்.

பாலசந்தர் மெதுவாகக் காரை ஓட்டினான். மழை பிசுபிசுத்துக் கொண்டிருந்தது. பக்கத்தில் விமலா அமர்ந்திருந்தாள். முன்போல் அவனை பாரங்களும் பிரச்னைகளும் அழுத்திக் கொண்டிருக்கவில்லை. முகத்தில் அலாதியான மகிழ்ச்சிகளை கட்டியிருந்தது.

ஹேமா ஊருக்குப் போயிருந்ததால் அவளைப் பற்றிய கவலை குறைந்திருந்தது. தொழிலில் திருப்திகரமான அபிவிருத்தி ஏற்பட்டிருந்தது. பெரிய ஆர்டர்கள் கிடைத்து ஷிப்மெண்டும் முடிந்திருந்தது. அந்த மகிழ்ச்சியை எப்படிக் கொண்டாடுவது? பாலசந்தர், விமலாவை ஓட்டலுக்கு அழைத்து வந்தான். மாலையில் ஆபீசை விட்டுக் கிளம்பியவர்கள் நெடுநேரம்வரை ஓட்டலில் உட்கார்ந்தபடி பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவள் வந்த பிறகே இவ்வளவு பெரிய ஆர்டர் கிடைத்திருப்பதாகப் பெருமையோடு சொன்னான்.

''விமலா...விமலா...'' என்று நாள் முழுவதும் அவளை அழைத்து, எதிரே

அமரச் சொல்லி, தொழிலைப் பற்றியும் பொதுவாகவும் பேசிக் கொண்டிருப்பது பாலாவுக்கு இதமாகவும், சுகமாகவும் இருந்தது. தன்னுடைய ஆர்வத்தைப் புரிந்து கொண்டு அவள் எத்தனை நளின மாக நடந்து கொள்கிருள் என்று மகிழ்ந் தான் அவன். நாளுக்கோர் உடையுடன் விமலா வந்து கொண்டிருந்தாள். எதை அணிந்தாலும் அவளுக்கு எடுப்பாக இருக்கிறதே என்ற வியப்பு அவனுக்கு!

டின்னருக்குப் பிறகு விமலாவை வீட்டில் கொண்டு போய் விடுவதற்காகக் காரை எடுத்தபோது வானம் இருண் டிருந்தது. மழை வலுத்துக் கொண்டு வரும் போல் தோன்றியது.

விமலாவின் வீட்டை கார் நெருங்கிக் கொண்டிருந்தபோது மழை கொட்ட ஆரம்பித்து விட்டது.

பாலசந்தர் காரை நிறுத்தினன்.

''எப்படி இறங்க முடியும் விமலா? வீட்டுக்குள் போவதற்குள் முழுசாக நனைந்து விடுவீர்கள் போலிருக்கிறதே..''

''பரவாயில்லை...உடை மாற்றிக் கொண்டால் போகிறது. இந்த மழை யில் நீங்கள் எப்படிப் போக முடியும்? நீங்களும் உள்ளே வாருங்கள். மழை விட்ட பிறகு போகலாம்'' என்றுள் விமலா.

அவள் இறங்கினுள். பாலா தயங் கினுன்.

''மழை நிற்காது போல் இருக்கிறது. இறங்குங்களேன்'' என்று அவள் கொஞ்சும் குரலில் இழைந்தபோது பாலா யோசிக்கவில்லை. மழையில் நனைந்தபடி இருவரும் உள்ளே வந்தார்கள்.

''உட்காருங்கள்...!'' என்று அவனை அமர்த்திவிட்டு, அறைக்குள் சென்றுள். அடுத்த நிமிஷமே உடையைக் களைந்த தும் களையாததுமாக அவனிடம் வந்து, ''நீங்களும்கூட நனைந்திருக்கிறீர்கள். உடை மாற்றிக் கொள்கிறீர்களா?'' என்றுள். விமலாவை அவன் பார்த்தான். பதில் வரவில்லை. வேண்டாம் என்பது போல் தலையை ஆட்டினுன்.

புடவை சரிய அவள் நின்ற ஒரு நிமிடத்தில் அந்த மேனியின் மெருகு மின்னலாக அவனுள்ளே ஊடுருவியது. அவன் விழி கொட்டாமல் அவளைப் பார்த்தான். அவளும் அப்படியே...

''இதோ வந்து விடுகிறேன்'' என்ற முணுமுணுப்புடன் விமலா மறுபடியும் அறைக்குள் சென்றுள்.

வெளியே மழை பெய்து கொண்டிருந் தது. பாலசந்தரின் நெஞ்சிலும் ஒரு பெரிய மழை. அறியாத ஒரு மையல், மழையாகக் கொட்டி அவனை நனைத்துக் கொண்டிருந்தது.

விமலா வெளியே வந்தாள். தங்கத் தேராக அவள் அசைந்து குலுங்கி வந்த அழகில் விழிகளைப் பதித்தபடி பாலா அமர்ந்திருந்தான். அரைகுறையான இரவு உடையுடன் அவள் பாலாவின் எதிரே வந்து நின்றுள். இரண்டு விழிகள் அவனை ஊடுருவின. அவன் இமைக்கவில்லை.

''உங்கள் முகத்திலும் தலையிலும் மழைத் துளிகள்...'' என்றவாறு அருகே வந்த விமலா, கைத் துண்டை எடுத்து அவன் முகத்தைத் துடைத்தாள். தலையில் அதைப் பதிய வைத்தாள்.

''பரவாயில்லை, விமலா. ஒன்றும் ஆகிவிடாது'' என்றவாறு கைத்துண்டை அவளிடமிருந்து வாங்கக் கையை நீட்டிய போது இருவரின் கைகளும் பின்ன லிட்டன. தோள்கள் உராய்ந்தன. பார்வைகள் கலந்தன. அவள் அப்படியே உட்கார்ந்தாள்.

''விமலா...!'' என்று முணுமுணுத் தான்.

பதில் இல்லை. பார்வை அகலவில்லை. அந்த விழிகள் அவனை எங்கோ அழைத் தன. கைகள் பிரியவில்லை.

வெளியே மின்னல் வெட்டிய போது விளக்கு அணைந்தது.


(தொடரும்)



''உன் கணவரை கச்சேரிக்கு அழைச்சிண்டு வரலையா...?''

''இல்லே... அவர் வந்தா என்னோட பேசிக்கிட்டே இருப்பார்... நான் உன் னோடு பேசவே முடியாது!''

தலைவலியா? உடல்வலியா? ஃப்ளுவா?



ஸலோஃபென்
வலி நிவாரண மாத்திரை

அமிர்தாஞ்சன் லிமிடெட் தயாரிப்பு

தலைவலி, ஃப்ளு, பல்வலி, உடல்வலி ஆகியவற்றிலிருந்து ஸலோஃபென் உடனடியாக நிவாரணம் அளிக்கிறது. அது நம்பகமானது. டாக்டர்கள் கையாளும் மருத்துவ முறைப்படி ஸலோஃபென் தயாரிக்கப்படுகிறது.



FDS AS 1919 THA

வீகம்ஸீஸ்
ஸ்தாபனம்
தங்க நகைகள்
அரிய ரத்தினங்கள்
வெள்ளிப் பாத்திரங்கள்
ஆகியவற்றுக்கு உங்கள்
நம்பிக்கைக்கு உகந்த ஸ்தாபனம்

G.V.5A-72

வீகம்ஸீ ஜுவல்லர்ஸ்
ஸ்தாபிதம் 1893

112, நேதாஜி ரோடு, சென்னை-1 • போன்: 31406

அலுவலகப் பணியில் ஆற்றலுடன்
விளங்கிட, மாலை விருந்திலோ
கண்ணுக்கு விருந்தாகிட...

பெண்மை பொலிவு

பின்னி

ஸில்க் புடவைகள்

வெங்கடேஷ் வஸ்திராலயா
பின்னி ஸில்க் புடவைகளை மிகப்
பெருமளவில் விற்பவர்கள். மற்றும்
மபத்லால், பாம்பே டையிங், லக்ஷ்மி,
ஸி.ஸி.எம். மில்களின் புடவைகள்.
நாளைய நாகரிகப் பாதைக்கு
இன்றைய வழிகாட்டி... விவி!

பேஸ்மெண்ட்
ஷோரூம்
(ஏர்கண்டிஷண்ட்)
வெங்கடேஷ் வஸ்திராலயா
ஷோரூம் 1 & 2
ஹைகோர்ட் எதிரில்
சென்னை-1





ஐடெக்ஸ்

டிலக்ஸ்
குங்குமம் பவுடர்

மெழுகு தேவையில்லை-நேரடியாக
இட்டுக் கொள்ளலாம். பிளாஸ்டிக்
டப்பிகளில் பன்னிரண்டு கலர்
களில் எல்லாக் கடைகளிலும்
கிடைக்கும்.

பெண்மையின் அழகு பொலிய
ஐடெக்ஸ் அழகு சாதனங்கள்



Aravind Laboratories
MADRAS-33

13

அறையில் இருள். வெளியே மழை விடவில்லை.

ஒருவர் அணைப்பில் ஒருவராக அங்கே அவர்கள் இருந்தார்கள். மெதுமெதுவாக, எங்கோ, தான் போய்க் கொண்டிருப்பது போலவும், தன்னை இழந்து கொண்டிருப்பது போலவும் ஒரு பிரமையில் பாலசந்தர் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தான்.

விமலாவும் அப்படித்தானா? இல்லையென்றால் மௌனம் ஏன்? எல்லாமே சில நிமிஷ நேரந்தான்.

விளக்கு வந்து விட்டது. அந்த வெளிச்சம் பாலாவைத் தடுமாறச் செய்தது. விமலாவைப், பார்க்கவோ, முகம் கொடுத்துப் பேசவோ முடியாதபடி ஒரு தவிப்பு. மெல்லத் தலை தூக்கினான். விமலா குனிந்தபடியே இருந்தாள். அவளுடைய உணர்ச்சியைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏதோ புரிந்த மாதிரியும் அவனுக்குத் தோன்றியது. அடுத்த நிமிஷம்—

மின்சாரம் உடலில் பாய்ந்த மாதிரி உணர்ச்சி அவனுள்ளே முறுக்கேறியது. ஹேமாவின் உருவம் மின்னல் கீற்றாய் மனத்தில் பரவியது. 'ஹேமா...ஹேமா' என்ற முணு முணுப்பு அங்கே மோதியது. அவ்வளவுதான். கைகளை உருவிக் கொண்டு எழுந்தான் பாலசந்தர். இதை எதிர்பார்க்காதது போன்ற துடிப்பில் விமலாவும் எழுந்தாள். தலை குனிந்தபடி நின்றாள்.

''போகிறேன்...'' - என்றான் அவன். குரலில் ஒரு நடுக்கம்.

''இன்னும் மழை...'' என்ற குரல் சன்னமாக அவளிடமிருந்து வந்தது.

''பரவாயில்லை.''

பாலசந்தர் கதவைத் தள்ளிக் கொண்டு வெளியேறினான். மழை முன்போல் பலமாகக் கொட்டவில்லை. கார் கதவை வேகமாக அறைந்து மூடிவிட்டு பாலா வண்டியைக் கிளப்பினான். ஹெட் லைட் வெளிச்சத்தில் மழைச்சரங்கள் தெரிந்தன. கா..., பார்வையிலிருந்து மறையும்வரை பார்த்துக்கொண்டு நின்றாள் விமலா. பி...த அங்கே ஏகாந்தம்.

விமலாவுக்கு ஒன்றும் ஓடவில்லை. நடந்தது என்ன? வியப்பா, விபரீதமா? அவளுக்குப் புரியவில்லை.

மங்கலான இரவு விளக்கைப் போட்டு விட்டுக் கட்டிலில் உட்கார்ந்தாள். ஒன்றுமே நடக்காதது போல் இருந்தாலும் கொஞ்ச நேரத்தில் என்னவெல்லாமோ நடந்து விட்டதாக விமலா உணர்ந்தாள். அவள் நடந்து கொண்ட விதம் அவளுக்குப் புதிராகத் தோன்றவில்லை. ஆனால் நடுக்கத்தை மூட்டியது.

விமலா அதிகமாகச் சிந்திக்க விரும்பவில்லை. என்றாலும் சிந்தனை அவளை விடுவது போல் இல்லை. ஏதோ நடக்க இருந்தது தட்டிக்கொண்டு போய்விட்டது. 'அது நல்லதுதானா?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள் விமலா. மனம் தவித்தது. 'மறு நாள் பாலசந்தரை நிமிர்ந்த நெஞ்சோடு தன்னால் பார்க்க முடியுமா?'

நாராயணையும் ராம்நாத்தையும் விமலா நினைத்துக் கொண்டாள். பால சந்தருக்கு விமலா இன்னும் பூரணமான செகரட்டரி ஆகவில்லை என்று நாராயண் குறிப்பாக சில முறை கூறியிருக்கிறார். அதற்கு என்ன அர்த்தம்? பாலாவை



டபிள்யூ. ஆர். ஸ்வர்ணலதா

வசப்படுத்திக் கொள்ள வேண்டுமா? ஒரு வலை விரித்து வைத்து அதில் அவனை அவள் சிக்க வைக்க வேண்டுமா?

ராம்நாத்தும் அப்படித்தான். காதோடு காதாக அவர் ஏதாவது அவ்வப்போது சொல்வார். எல்லாம் எதற்காக?

விமலாவுக்குத் திணறலாக இருந்தது. கண்ணை மூடிக் கொண்டு தூங்க வேண்டும் என்று துடித்தாள். முடியவில்லை. உறக்கம் இப்போதைக்கு வராது என்பது அவளுக்குத் தெரியும். வெளியே மழை நின்று இலேசாக மின்னல் மட்டும் வெட்டிக் கொண்டிருந்தது. விமலாவின் மனத்திலும் இப்பொழுது மின்னல். நினைவுகள் அவளை அழுத்தின.

சேகரின் உருவம் நெஞ்சில் வருகிறது. அவன் வாய் விட்டுச் சிரிக்கிறான். அந்த ஒலி அவளைச் செவிடாக்கி விடும் போல் இருக்கிறது. 'சேகர்... சேகர்' என்ற முணு முணுப்போடு கண்ணை மூடிக் கொள்கிறாள் விமலா.

ரேஸ் கோர்ஸில் அவளருகே வந்து, 'விஜயா' என்று ஒரு நாள் அழைத்தானே? 'விஜயா' என்று நினைத்து அவளைப் பின் தொடர்ந்து வந்ததாகச் சொல்லி மன்னிப்புக் கோரி விட்டுச் சென்றானே? ஓட்டல் அறைக்குள் அத்து மீறிப் புகுந்து 'தன்னைத் தெரியாதா?' என்று கேட்டானே! அவளைத் தீண்டி அணைக்க முயன்றானே! அடுக்கடுக்காக அவனைப் பற்றிய நினைவுகள். அவனுக்கும் அவளுக்கும் என்ன இருக்கிறது? அந்நியோந்நியமாக எப்பொழுதோ பழகியவன் போல் அவன் பேசுவது ஏன்?

விமலா பதிலைத் தேட முயலவில்லை. பட படப்புத்தான் அவளை ஆட்டியது.

'சேகரை இதற்கு முன்பு அவள் பார்த்ததுண்டா?' இந்தக் கேள்வி மூண்ட போது அவள் மனம் குலுங்கியது. கண்கள் கலங்கின. கண்ணீர் உருண்டது.

விமலா விம்மினாள். படுக்கையில் விழுந்தாள். தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். சேகரின் சிரிப்பொலி அவள் நெஞ்சில் ஒலித்துக் கொண்டேயிருந்தது. அவனுடைய நிழல் தன்னைச் சூழ்ந்து கொண்டு நிற்பது

போன்ற பீதியில் அவள் படுக்கையில் அசையாமல், புரளாமல் கிடந்தாள்.

*

ராம்நாத்தை எதிர்பார்த்து சேகர் ஓட்டலில் காத்திருந்தான். கட்டாயம் ஓட்டலுக்கு வர வேண்டும் என்று அவரை அழைத்திருந்தான். தனக்குப் பிறந்த நாள் என்றும், ராம்நாத் வாழ்த்து கூற வேண்டும் என்றும் சொல்லியிருந்தான். அவர் சம்மதித்திருந்தார்.

ராம்நாத் ஏமாற்றவில்லை. சேகர் மகிழ்ச்சியோடு அவரை வரவேற்று அமர்த்தினான்.

''பர்த் டே என்று சொன்னீர்கள், நீங்கள்மட்டும் உட்கார்ந்திருக்கிறீர்களே! வேறு யாரையும் அழைக்கவில்லையா?'' என்று ராம்நாத் கேட்டார்.

''இல்லை. நீங்கள் ஒருவரே போதும்; நூறு பேர் வந்து வாழ்த்துக் கூறியது போல் மகிழ்வேன்.''

ராம்நாத் சிரித்துக் கொண்டார்.

''உங்கள் நண்பர் மிஸ்டர் நாராயணிடம் நான் பழகியதில்லை. ரேஸ் கோர்ஸில் ஒரு முறை பார்த்ததுதான். அவர் இருந்திருந்தால் அவரையும் அழைத்திருப்பேன்! பரவாயில்லை. நீங்கள் இருப்பதால் எனக்கு எல்லாமே நிறைவாகத் தெரிகிறது'' என்றான் அவன்.

ராம்நாத் அவனுக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்கூறியபடி பானம் அருந்தினார்.

''பிறந்த நாள் வாழ்த்தோடு நீங்கள் என்னை விட்டு விடக்கூடாது. உங்களிடம் இன்னும் எவ்வளவோ எதிர்பார்க்கிறேன்'' என்று ஆரம்பித்தான் சேகர்.

''புதிர் போடுகிறீர்கள் போல் இருக்கிறதே!'' என்றார் அவர் சிரித்தவாறு.

''அப்படி ஒன்றும் இல்லை. என்னைப் பற்றி அன்றைக்கே உங்களிடம் சொல்லி விட்டேன். என்னிடம் இருக்கும் வசதிகளைப் பற்றிக் கூறியிருக்கிறேன். ஆனால் வழி காட்டுவதற்கு யாராவது வேண்டாமா? நீங்கள் கிடைத்திருக்கிறீர்கள். நான் விடுவேனா உங்களை?'' என்றவாறு அவன் பெருமிதத்தோடு சிரித்தான்.

''நான் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?''

''உங்களோடு என்னையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். மிஸ்டர் நாராயணிடம் என்னைப் பற்றி சிபாரிசு செய்ய வேண்டும்'' என்று சேகர் சொன்னான்.

ராம்நாத் மதுபானத்தைப் பருகியபடி தலையை அசைத்தார்.

இருவரும் இடையிடையே பேசிக் கொண்டு உணவருந்தினார்கள். ராம்நாத் உற்சாகமாக இருந்தார். சேகர் அவருடைய மதுக் கோப்பையை நிரப்பிக் கொண்டே இருந்தான்.

''உங்களுடைய தீரமான வாழ்க்கையைப்பற்றி நான் தெரிந்து கொண்டிருக்கவில்லை. ஒரு மேஜராயிற்றே...உங்கள் போர் அனுபவங்களைப் பற்றிச் சொல்லுங்களேன்...'' என்றான் சேகர்.

''அதெல்லாம் பழைய கதை. இப்பொழுது எதற்கு?'' என்று மழுப்பினார் ராம்நாத்.

''உங்கள் பெருந்தன்மை எனக்குப் புரிகிறது. எந்தெந்த போர்முனைக்குப் போனீர்கள் என்றாவது சொல்லலாமா?''

மதுபானத்தை உறிஞ்சியபடி அவனைப் பார்த்தார் ராம்நாத்.

''போராவது போர்...எனக்கு அது பிடிக்காத விஷயம்...''

''உண்மைதான். போரினால் ஏற்படும் இழப்புகளைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதை உணர்ந்தவர்களுக்கு போர் பிடிக்காது இல்லையா?''

''ஆமாம்......'' என்றார் அவர்.

''உங்கள் குடும்பம்...மனைவி மக்கள்?''—சேகர் கேட்டான். ராம்நாத் பதில் சொல்லவில்லை. பதிலாக அவர் ''நீங்கள் ஏன் இன்னும் திருமணம் செய்துகொள்ளாமல் இருக்கிறீர்கள்?'' என்று அவனை கேட்டார்.

''அதற்கு நேரம் வரவில்லை.''—சேகர் நிதானமாகச் சொன்னான்.

''வயதும், வசதியும் இருக்கும்போது ஏன் தள்ளிப் போடுகிறீர்கள்?''

''நான் தள்ளிப்போடவில்லை. தானே தள்ளிக் கொண்டு போகிறது.''

''உங்களிடம் ஒரு காதல் கதை இருக்கும் போல் தெரிகிறதே'' என்றார் ராம்நாத்.

''ஆமாம். இருக்கிறது. காதலித்தேன். அவள் போய் விட்டாள். எங்கே போனாள் என்று தெரியவில்லை. அவளைப் போல் ஒரு பெண்ணைச் சந்தித்தேன்.

அந்தப் பெண் அடைய முடியாத உயரத்தில் இருக்கிறுள்!'' என்று சேகர் சொன்னுன்.

''யார் அந்தப் பெண்?'' - ராம்நாத் கேட்டார்.

''நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்!''

''அப்படியானுல் நீங்கள் சொல்லலாம்!''

''உங்கள் மகள்...விமலா...!''

''என்ன?'' என்ருர் அவர், வியப்பாடு.

ராம்நாத் அவனை வெறித்துப் பார்த்தார்.

''உண்மையாகவா?'' என்ருர் குழறியபடி.

''ஆமாம். உங்கள் மகளின் நல்வாழ்வில் உங்களுக்கு அக்கறை இல்லையா?''

''விமலா கேட்க வேண்டுமே? சில விஷயங்களுக்கு மட்டும்தான் சம்மதிப்பாள்...அவள் சுபாவம் அப்படி...''

''உங்கள் மகள் நீங்கள் சொல்வதைக் கேட்டாக வேண்டும்.''

திலீப்குமாரை திகைக்கவைத்த பில்!



இருபத்தாறுயிரம் ரூபாய்! திலீப்குமார், படத்திற்கு வாங்கும் தொகையல்ல இது; அவருக்கு வந்த டெலிபோன் பில்! அதிர்ச்சியடைந்த அவர், டெலிபோன் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு, தன் பில் ரூ. 800-க்கும் 1200-க்கும் இடையேதான் இருக்க வேண்டுமென்று சொல்ல நினைத்தார். ஆனுல் அதிகாரி, 'தனக்குப் பேச நேரமில்லை' என்று கூறி விட்டார். 'பேச நேரமிருக்கும் மற்ருேர் அதிகாரியிடம் பேசிக் கொள்கிறேன்' என்று திலீப்குமாரும் இருந்து விட்டார். உடனே 4000 ஆக பில் குறைக்கப்பட்டது. இடையே எந்தவித முன்னறிவிப்புமின்றி அவர் டெலிபோன் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

''ஆமாம், ரேஸ்கோர்ஸில் விமலாவை சந்தித்தது முதல் சதா விமலாவின் நினைவுதான். உங்களிடம் எப்படிக் கேட்பது என்று புரியாமல் தவித்தேன்.''

ராம்நாத் பேசவில்லை. நன்ருக மது அருந்தியிருந்ததால் கண்களில் ஒரு மையல் திரை. முகமும் மாறியிருந்தது.

''எனக்கு அந்தத் தகுதியில்லையா? விமலாவை ஓர் அரசியைப் போல் வைத்திருப்பேன். இன்னொருவனிடம் செகரட்ரியாக இருந்து, விமலா சம்பாதிக்க வேண்டிய அவசியம் என்ன? ஆயிரம் ஆயிரமாக விமலாவுக்குத் தந்து அவள் வாழ்வை மலர்விக்க நான் இருக்கிறேன். சொல்லுங்கள்...''

அவர் போதையில் நெளிந்தபடி சிரித்தார்.

''விமலா......விமலா ஒரு தினுசு... அவள்...அவள்...'' என்று அவர் நீட்டினுர்.

''அவள் யார்?'' என்ருன்.

''அவள் யாரோ? நீ யாரோ? நான் யாரோ?'' என்று அவர் என்னவெல்லாமோ உளற ஆரம்பித்தார்.

''மேஜர், இதோ பாருங்கள்...!''

''மேஜராவது, மைனராவது'' என்று அவர் போதையில் சிரித்தார். அவன் திகைத்தான்.

(தொடரும்)

அஞ்சு பைசா கொசுறு!

மூ. பா. எழிலரசு

"அஞ்சு பைசா மொளகா...!''

''ச்சீ... காலங்காத்தாலே... வந்துட்டா...அஞ்சு பைசா மொளகா வாம்... மொளகா... ஹூம்.''

''பின்னே என்ன...அஞ்சு ரூபாய்க்கா வாங்குவாக...?''

''அட போம்மா...இன்னும் 'போணி' கூட ஆகல... இப்பத்தான் கோணியை அவுத்துக் 'காய' பிரிச்சிக்கிட்டிருக்கேன், தெரியுதுல்ல... முதல் சாமானு மொளகா கொடுக்கமாட்டேன், கொஞ்சம் நில்லு.''

''ஹூக்கும்...''—அலுத்துக் கொண்டாள் கிழவி. எந்த வீட்டு வேலைக்காரியோ, அந்த வீட்டுக்குத்தான் வெளிச்சம்.

வேலாயுதம் காய்கறிக் கடை என்றால் அந்தப் பகுதியில் சில பேருக்குத்தான் தெரியாமலிருக்கும். கை வண்டி வைத்து வியாபாரம் செய்தவர் இப்போது கடை போட்டிருக்கிறார். இதுதான் முன்னேற்றம்.

''டேய்...சுப்பு....அந்த அய்யாவுக்கு கொடு. என்னம்மா வேணும்? உருளைக் கிழங்கா... கிலோ, ஒண்ணு எழுபது. முனியா, அம்மா நின்னுக்கிட்டே இருக்காங்க பாரு...! என்ன சார் தக்காளியா. கிலோ, ஒண்ணு எண்பது! முனியா, இன்னிக்கு கத்தரிக்கா கொஞ்சம் சல்சு. ஒரு ரூபாய் போடு. ஆமாடா...கிலோ தான்...!''

கடை, களை கட்டத் தொடங்கியது.

கடையில் இரண்டு தராசுக்குத் தேவையான கூட்டம். இரண்டு பேர் காய் நிறுக்க, ஒருவன் கணக்குப் போட. இவர் கதவின் ஓரத்தில் இருக்கும் 'கல்லா' முன்னால் இருந்து காசை வாங்கிப் போட்டுக் கொண்டிருப்பதே வேலை. அதோடு இடையே... ''அய்யாவுக்கு அதைப் போடு, இதைப் போடு'' என்று கூப்பாடும் போட்டுக் கொண்டிருப்பார். வம்பளப்பதற்கே இவருக்குத் தனிச் சம்பளம் கொடுக்க வேண்டும்.

வேடிக்கைப் பேச்சுக்களாலேயே பல வாடிக்கைகளைத் தன்னிடம் தக்க வைத்திருப்பவர் வேலாயுதம்.

அதோ...

''கடைக்காரரே, அஞ்சு பைசா இஞ்சி. ம்...சீக்கிரம்.''-பெண் குரல்.

''எம்மா! கிலோ இஞ்சி, ஆறு ரூபாயா விக்குதே... அதுலே அஞ்சு பைசாவுக்கு என்னத்தக் கொடுக்க...? அம்பது கிராம் வாங்கிக்கோ... முப்பது பைசா...''

''அட... போரும்யா... ஏதோ குடுக்கிறதைக் கொடு...இந்தா பைசா...''

''பாரேன்... கிடையாதுன்னு...! வேணும்னு இஞ்சியைத் தாரேன். மோந்து பார்த்துட்டு கொடுத்திடு. அதுக்குத்தான் அஞ்சு பைசா...!''

''அடப்பாவி...! மோந்து பார்க்கிறதுக்கா அஞ்சு பைசா... சரி... சரி... கொஞ்சம் மல்லி கறிவேப்பிலை கொடு..''

''அதான் கொடுத்தேனேம்மா...''

''இன்னும் கொஞ்சம்...''

''அட... எம்மா... கொசுறு... கொசுறுன்னு உசுரை எடுக்கற...!''

ஏதோ அடுக்குத் தொடரில் பேசிவிட்டோமென்ற ஆனந்தம். அங்கும் இங்கும் பார்வையைச் சுழற்றுகிறார்.

இதையும் ரசிக்கிறது கும்பல். எது ஆனால் என்ன? வியாபாரம் தோது ஆனால் சரி.

ஆக... ஒரு வழியா வியாபாரம் ஓயும் நேரம். ஒன்பது மணி. ஓரத்தில் உட்கார்ந்து காசையும் எண்ணியாகிவிட்டது. இனிமேல்... மாலையில்தான் கூட்டமாக நிற்கும். ஒன்பது மணிக்கு மேல்தான் வேலாயுதத்தின் சாம்ராஜ்யம். ஏனென்றால் பிள்ளைகள் எல்லாம் வேறு வேலைக்குப் போய்விடுவார்கள்.

இனி மாலைதான். அதுவரை வேலாயுதம் வைத்ததே விலை. நிறுத்ததே அளவு.

ஆனால்...இதிலும் இவருக்கு வாடிக்கை கிராக்கி. இப்படி நேரத்தில்தான் பங்களாவில் பணி புரியும் வேலைக்கார கிழவிகளின் பட்டாளம் படை திரண்டு வரும். அதை மடக்கி அடக்குவதில் இவருக்கு நிகர் இவரே...!

''தாத்தா, என்னவெல்லாம் இருக்கு?''

இந்த மெதுவான குரலின் சொந்தக்காரிக்கு அறுபது வயது.

தாத்தாவான கடைக்காரருக்கு அவளில் முக்கால்தான் இருக்கும் வயசு.

இவர் இதையெல்லாம் கண்டு கொள்வதில்லை. 'எப்படியும் அழைத்து விட்டுப் போகட்டும். என் கடைக்கு வந்தால் சரி.'



''வாம்மா முப்பது.(இது வீட்டு எண்) இந்தா பாரு... உருளைக்கிழங்கு நேத்து கிலோ... ஒண்ணு எண்பது. இன்னிக்கு பத்து பைசா கம்மி. பேசாம ஒரு கிலோ வாங்கிக்கிட்டுப் போ. உனக்கு ஒரு அஞ்சு பைசா... வெத்திலை வாங்க...''

''ம்..அம்மாவிற்கு தெரிஞ்சுதுன்னா!''—கிழவி.

''அட... ஏன்...! நேத்தைய விலையைச் சொல்லு...''

''ம்... சரி... சரி...! போடு. அதோட அரை கிலோ தக்காளி, வெங்காயம், பீன்ஸ்... கோஸ்... சீக்கிரம்!''

''எல்லா சாமான்லேயும் நானூத்தி ஐம்பது கிராம் போடுறேன்! அம்மா கிட்டே அரை அரை கிலோன்னு சொல்லு, புரியுதா?''—ரகசிய பேரம்—கமிஷனாக சில்லறைக் கொசுறு.

''ம்... ஆகட்டும்...'' ஆறு ரூபாய் சரக்கு வாங்கியதில் ஒரு அம்பது பைசா கமிஷன் அவளுக்கு.

காய் வாங்குவதால் கிடைக்கும் 'பத்து காசு' கமிஷனுக்காக பங்களாக்கார வேலையாட்களும், சிறுவர்களும் கூட இவரிடம்தான் சரணடைவார்கள்.

''கடைக்கார்ரே... அம்மா கேரட் வாங்கியாரச் சொன்னாங்க!''-சிறுவனின் குரல்.



''அப்படியா... போடுகிறேன்...! இந்தா, ஒரு கிலோ ஒரு ரூபாய் பத்து பைசா. உனக்கு ஐந்து பைசா எடுத்துக்கோ. மீதி, ஒண்ணு அஞ்சு கொடு.

''ம்... அம்மாவிற்குத் தெரிஞ்சா...'' —சத்தியத்தின் விழிப்பு.

''நான்தான் 'பில்' தர்றேன்னேனே... ஒண்ணு பத்துன்னு.''—பொய்மையின் தாலாட்டு.

கடைக்கு வந்தால் அஞ்சு பைசா தனக்கு என்ற ஆனந்தம் அந்தச் சிறுவனுக்கு...!

சிறுவன் வந்தால் மேலும் அஞ்சு பைசா லாபம் என்ற திருப்தி வேலாயுதத்திற்கு.

விளக்கேற்றும் மாலை நேரம்.

''ஏலே... பாண்டி, 'லைட்டுக்கு' மண்ணெண்ணெய் வாங்கிட்டியா?''

''ஓ... அப்பவே...! இரண்டு லிட்டர் ஒண்ணு ஐம்பது!''— வேலாயுதத்தின் கடைசிப் பையனின் உடனடிப் பதில்.

''என்ன... லிட்டர் 'எழுபத்தைஞ்சு' பைசாவா...?''

''ம்...ஆ...மா...!''

''என்னடா, வண்டிக்காரன் 'லிட்டர்' அறுபத்தாறு பைசான்னுதானே சொன்னான். நீ யாருகிட்டே வாங்கினே...?''

''கோபால்கிட்டே...!''

''அட, அவந்தாண்டா சொன்னான்.''

''அது... இல்லேப்பா... நான் சுப்பையாகிட்டே வாங்கினேன்!''-பத்து வயசான பாலகனின் பச்சைப் பொய்.

''சீ, கழுதை...கழுதை! உனக்கு இந்த வயசிலேயே பொய்யா! யாருகிட்டே வாங்கினே. கோபால்கிட்டேதானே... என்னையே ஏமாத்துறியா? இது எத்தனை நாளா?... ம்...!''


'மகன் பொய் சொல்கிறானே என்ற இதய வேதனையில் எழுந்த கோபமோ..'

'தன்னையே ஏமாற்றுகிறானே என்ற வெறியோ...' தெரியலை.

வேலாயுதத்தின் கைப்பிரம்பு தன் கடைசிப் பையனின் முதுகில் நடனமாடுகிறது...!

''அய்யோ...அம்மா...அப்பா... இனி மேல் செய்யமாட்டேன்... பொய் சொல்ல மாட்டேம்பா...''

''பொய் சொன்ன வாய்க்கு போஜனம் கிடைக்காதுடா... என் வயித்துலே பொறந்துட்டா இப்படி...அதுவும் இந்த வயசுலேயே...ம்...''



இந்த அறிவிப்பை ஆல் இந்தியா ரேடியோவில் சில சமயங்களில் ஒரு நிகழ்ச்சி முடிவுற்றதும் ஒலி பரப்புவதைக் கேட்கிறோம் அல்லவா?

உண்மையில் இந்த அறிவிப்பு ரேடியோ கேட்கும் நேயர்களுக்காகவே அல்ல!



மீண்டும் பிரம்பின் சுழற்சி.

பையன் ஈசலாகத் துடிக்கிருன்.

''சரிப்பா... ஏம்பா...! ஆட்டும்பா... பா...பா...''—இது வேறு மகன்.

''என்னய்யா... கடைக்காரரே...! அப்போ சின்னப் பையனைப் போட்டுக் கொன்னீங்க...! இப்ப நடுவளவனை போட்டு அடிக்கிறீங்களே... என்ன விஷயம்...?''

வேடிக்கை பார்க்க வந்தவர்களின் ஒலி.

''பின்னே என்னங்க...! என் வயித்துலே பொறந்துட்டு இப்படி பண்ணுங்கன்னு வயித்தெரிச்சலா இருக்குதுங்க...! அவன் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் அறுபத்தாறு பைசா வுக்கே வாங்கிட்டு எழுபத்தைஞ்சு பைசாங்கிருன்...!''

''இவன் ...?''— தூண்டுகோல் தொண்டை.

''இது பெரிய கூத்து...! ஏலே... மண்டையிடியா இருக்கு. ஒரு 'சாரிடான்' வாங்கியான்னுசொன்னு, இவன் 'அஞசின்' மாத்திரை வாங்கித் தந்துட்டு 'சாரிடானு'க்குரிய காசை வாங்கிட்டு போறுன்! அதுவும் பாருங்க...மாத்திரையை உரிச்சு...அந்த 'லேபிளை'க் கீழே போட்டுட்டு வரான்... ஏன்? அப்போ நான் சந்தேகப்படமாட்டேனும்...! கடைசியில் கடைக்காரர், 'மண்டையிடி எப்படி இருக்கு? உங்க மகன்கிட்டே அஞசின் கொடுத்தனுப்பினேனேன்னு' சொன்ன பிறகுதான்... இவன் 'குட்டு' உடையுது? எல்லாம்... 'திருட்டு'ப் பயல்கள்...!''

''என்ன 'பாப்பா' வேணும்? என்ன அப்படி பார்க்கிறே? இந்தாப் பெரியவளை பாப்பான்னு கூப்பிடறேன்னு... நான் பெரியவன்தானம்மா...எப்படி கூப்பிட்டால் என்ன?... என்ன வேணும்...?''

''அஞ்சு எலுமிச்சம்பழம்...!''

''நீ புதுசா இருக்கியே...! ஒகோ... அந்த வீட்டு வேலேக்கு வந்திருக்கியா...? சரி... இந்தா பாரு, ஒரு எலுமிச்சம் பழம் பதினேரு பைசா மேனிக்கு அம்பத்தைந்து பைசா ஆவுது! ஆனுல் நீ அம்பது பைசா கொடு. உனக்கு அஞ்சு பைசா எடுத்துக்கோ...!''

''பின்னே, அம்மாகிட்டே...''

''ஒரு பழம் பதினேரு பைசான்னு சொல்லு. என்ன? இனிமேல் நீ இங்கே தான் வாடிக்கையா வரணும்! நானும் உனக்கு ஏதோ என்னுல் முடிஞ்சதை... என்ன... புரியுதா?''

''ம்''—உண்மைக்கு முற்றுப்புள்ளி.

வேலாயுதத்திற்கு ஒரு 'புது வாடிக்கை' பிடித்துவிட்ட குதூகலம்!

கல்லாப்பெட்டிக்கு மேல் இருக்கும் காந்தியார் சிரிக்கிருர்!

எடுத்துக்காட்டாக, சென்னை நிலையத்திலிருந்து அடுத்து வரும் நிகழ்ச்சியை மற்ற திருச்சி அல்லது விஜயவாடா போன்ற ரேடியோ நிலையங்கள் வாங்கி ஒலி பரப்பவோ அல்லது அவை தங்கள் தங்கள் நிகழ்ச்சிகளை ஒலி பரப்ப தயார் செய்து கொள்ளவோ அல்லது அடுத்த நிகழ்ச்சி எந்த நிலையத்தில் இருந்து சென்னை நிலையத்துக்கு வர வேண்டுமோ அந்த நிகழ்ச்சியைத் தகுந்த அறிவிப்போடு அந்த நிலையம் ஒலி பரப்பவோ மற்ற நிலையத்தாருக்காகச் சொல்லப்படும் ஓர் அடையாள அறிவிப்புதான், 'இன்னும் சில விநாடிகளில் அடுத்த நிகழ்ச்சி.....'

—வி. எஸ். எஸ்.



புதிய
எக்ஸோட்டிகா டால்க்
அதன் சொக்கும் மணம்
கம கம கம எக்காலமும்
கம கம கம கம கம கம கம கம கம
லக்மே
HCP LE 1a Tam.

என்பவரால் 'புணே'யில் நடத்தப்பட்டு வருகிறது.

சோம்வார்பேட்டில் தமிழ் மணம் கமழ்கிறது. 'ஸரஸ்வதி வித்யாலயா' உயர்நிலைப் பள்ளி நிமிர்ந்து நிற்கிறது. தமிழ், ஆங்கிலம், வடமொழி, இந்தி, மராட்டி முதலிய ஐந்து மொழிகளிலும் தேர்ச்சி பெற்று வெளிவரும் மாணவ-மாணவிகளை இங்கே காணலாம்.

ஆன்மிகத்தில் ஆர்வம் கொண்ட பல தமிழன்பர்கள் ஒன்று கூடி பஜனை மடம் ஒன்றை, ரஸ்தா பேட்டில் நிறுவியுள்ளனர். சொற்பொழிவுகள், கதா காலட்சேபங்கள், இசை, தியாகராஜ உற்சவங்கள் நடைபெறுகின்றன.

தமாஷா பார்க்க வேண்டுமா?

'ஆரிய பூஷன்' கலை அரங்கில் 'தமாஷா' நடனம் நடைபெறுகிறது. ஒரு குழுவில் நான்கு அல்லது ஐந்து கட்டிளம் கன்னியர் இருப்பர். ஒவ்வொரு குழுவும் அரை மணி நேரம் ஆடும். இரவு எட்டு மணியிலிருந்து இரண்டு மணி வரை 'தமாஷா' நடக்கும். ஆடுகின்ற பெண்கள் ஏதேனும் ஒரு பாடலைப் பாடிக் கொண்டு இஷ்டப்படி ஆடுகின்றனர். கின்னரம், முக்கோண வடிவமுள்ள ஒரு கம்பி, மத்தளம்-இவை பக்கவாத்தியங்கள். ஆட்டத்தை ரசிக்கும் பார்வையாளர்கள், ஆடுகின்ற பெண்களுக்குப் பணம் கொடுக்கின்றனர். பாட்டுக்களில் சிலேடை; ஆட்டத்தில் தளுக்கல் குலுக்கல்; பணம் கொடுக்கும் போதும், வாங்கும்போதும் சேட்டைகள்- அது ஒரு தனி உலகம். இது மராட்டியரின் புராதனக் கலை. அரசாங்கம் இக் கலையினை ஊக்குவிக்கிறது.

பூனாவில் ஒருபெரும் தொண்டினை ஒரு குடும்பத்தினர் செய்து வருகின்றனர். ஆடிட்டரான திரு. இ. எஸ். வெங்கட்ராமனும், வழக்குரைஞரான அவரது தம்பி திரு. டி. எஸ். அய்யரும் மறக்க முடியாதவர்கள்.

யாரேனும் இறந்து விட்டால் முதலில் இந்த இருவரில் ஒருவருக்குச் செய்தியைச் சொல்லிவிட வேண்டியதுதான். இருவரும் நண்பர்களுடன் வந்து இறந்தவரின் இறுதிச் சடங்குக்கான ஏற்பாடு செய்து, எல்லாக் காரியங்களையும் செய்வார்கள். செலவையும் தாங்களே செய்வார்கள். பிறகு உரியவர் பணம் கொடுத்தால் வாங்கிக் கொள்வர். இல்லையேல் கேட்பது கிடையாது.

பூனாவில் முடி திருத்தும் தொழில் வாட்டமில்லாமல் செழிப்பாக நடக்கிறது. மற்ற விஷயத்தில் எப்படி இருந்தாலும், மகாராஷ்டிர மக்கள், முகத்தில் காடு மண்ட விட மாட்டார்கள். அடிக்கடி 'ஷேவ்' செய்து கொண்டு முகத்தைப் 'பளபள'வென்று வைத்துக் கொள்ளுவார்கள். நல்ல பழக்கம்தானே!

ஜங்கிளி மகராஜ் ரோடு தெரியுமா? பூனாவில் இது ஒரு பெரிய சாலை. இதற்கு 'அஸ்ஸிஃபுட் ரஸ்தா' என்று ஒரு பெயரும் வழங்குகிறது. அப்படி என்றால் என்ன? எண்பது அடி சாலை என்று பொருள்.

முன்னொரு காலத்தில் இந்த சாலை தான் பூனாவில் அகலமானது. இப்பொழுது எத்தனையோ சாலைகள் அகலத்தில் இதற்கு இணையாக, எடுப்பாக இருக்கின்றன.

பிச்சைக்காரர்கள் இங்கே அலைந்து பிச்சை எடுக்கிறார்கள்; ஓரிடத்தில் அமர்ந்தும் பிச்சை எடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் கை, கையில் உள்ள பச்சைக் கிண்ணி, தட்டு எப்பொழுதும் காலியாகவே இருக்கும். காசைப் போட்டதும் 'டபார்' என்று எடுத்துப் பத்திரப்படுத்தி விடுகிறார்கள். பொது மக்களிடம் அவர்களுக்கு அத்தனை நம்பிக்கை!

இங்கே சில வார்த்தைகள் அடிக்கடி காதில் வந்து விழும். அவற்றிலே அப்பளக் கடை, அமுக் தமுக் — இவ்விரண்டு சொற் பிரயோகங்களும் அடக்கம்.

அப்பளக் கடை என்றால் 'நம்மிடம், தங்களிடம்' என்று அர்த்தம்; அமுக் தமுக் என்றால் 'அது இது' என்று அர்த்தம்; அப்பளமும் கிடையாது; தமுக்கும் கிடையாது.

புணேயின் நினைவாக ஏதாவது தின் பண்டம் வாங்கிச் செல்ல விரும்பினால். பிரசித்தி பெற்ற 'சூடா - பேடா'வை மறந்து விடாதீர்கள்!

—சரோஜாமூர்த்தி,
கிருஷ்ணசாமி, மயிலன்.

அடுத்த இதழில்:

முப்படையை உருவாக்கும் மூன்றெழுத்து

14


பாலசந்தர் அந்தக் கடிதத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டிருந்தான். பிரபுவிடமிருந்து முதல் நாள் வந்திருந்த கடிதம். பாலசந்தரை சந்திப்பதற்காக இன்று வரப் போவதாக பிரபு தெரிவித்திருந்தான், அதில்.

பிரபுவைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் பாலாவுக்கு ஏற்பட்டிருந்தது. பெரிய ஏற்றுமதி ஆர்டர்களை வாங்கித் தந்தவன் அல்லவா, அவன்? பிரபுவினால் தனது தொழிலுக்கு எவ்வளவோ நன்மைகள் ஏற்படும் என்ற நம்பிக்கை அவனுள்ளே வளர்ந்திருந்தது.

பிரபுவின் வருகைக்காகக் காத்திருந்தான். இந்தச் சமயத்தில் இப்படி யாராவது வரவேண்டும் என்று எதிர்பார்க்கும் மன நிலை தோன்றியிருந்தது. சில நினைவுகளைத் திசை திருப்ப அது உதவும் என்று பாலா எதிர்பார்த்தான். விமலாவைப் பற்றிய எண்ணங்களிலிருந்து கொஞ்சம் விடுபட்டிருக்க வேண்டும் என்ற வேகமே காரணம். என்னதான் முயன்றாலும் அன்றிரவு விமலாவின் அருகே தன்னை இழந்து கொண்டிருந்த சில நிமிஷங்களை மனத்திலிருந்து அகற்ற முடியவில்லை.

மறு நாள் விமலாவைப் பார்ப்பதற்கு சற்றே கூசினான். அவளிடத்திலும் சிறு மாறுதல் ஏற்பட்டிருப்பதாக பாலா உணர்ந்தான். பெரிய தவறு ஒன்றும் நேர்ந்து விடவில்லை என்றாலும், குற்ற

அழைக்கும் விழிகள்..



உணர்ச்சி நிழலாகப் படிந்திருந்தது. பாலசந்தர் குழம்பவே செய்தான். விமலா ஒரு காந்தம். அவனுடைய உணர்ச்சிகளைக் கவர்ந்திழுத்துத் தன்வசமாக்கும் சக்தி அவளிடம் இருக்கிறது. தனிமையில் அவளோடு இருக்கும் போது அவளுடைய பருவமும் உருவமும் பார்வையும் அவனுக்கு அழைப்பு விடுப்பது போல் உணர்கிறான். விமலாவின் வசீகரம் வலையாக விரிகிறது. அதிலிருந்து தப்ப முடியாதது போன்றபிரமை. இப்படி எத்தனை நாள் இருக்க முடியும்? ஹேமா சரியாக இருந்தால் சலனத்திற்கு இடமில்லாமல் போயிருக்கலாம். அதற்கு வழி இருந்தால்தானே...!

இந்த சிந்தனைகளுக்கெல்லாம் ஒரு முடிவு தோன்றாதா என்று பாலா தவித்துக் கொண்டிருந்தான்.

பிரபுவை மகிழ்ச்சியோடு பாலசந்தர் வரவேற்றான். ஒரு பிரபுவைப் போல இல்லாவிட்டாலும் கம்பீரமாக, களையுடன் அவன் இருப்பதாகப் பாலசந்தர் மதிப்பிட்டான். தா[illegible]ம், மீசையும், கறுப்புக் கண்ணாடியும், அடர்ந்த தலைமுடியுமாக அவன் தோற்றமளித்ததால் உருவத்தைக் கொண்டு வயதை நிதானிக்க முடியவில்லை. 'ஆனாலும் இவன் ஒரு நல்ல பர்சனாலிட்டி' என்ற முடிவுக்கு வந்தான் பாலா.

''மிஸ்டர் பாலசந்தர், உங்களைப் பற்றி எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறேன். எல்லாமே நூற்றுக்கு நூறு உண்மை என்பதை உங்களைப் பார்த்ததுமே புரிந்து கொண்டேன். உங்களுடன்

டபிள்யூ.ஆர்.ஸ்வர்ணலதா

பிசினஸ் கனெக்ஷன் ஏற்படுத்திக் கொள்ள முடிந்ததற்காகப் பெருமைப் படுகிறேன்'' என்ருன் பிரபு.

''நானும் அப்படித்தான் மிஸ்டர் பிரபு...முன்னல் பார்த்திராத என்மீது உங்களுக்கு இத்தனை அன்பும் நம்பிக்கையும் ஏற்பட்டிருப்பது என் அதிர்ஷ்டம் தான்.'' - பாலசந்தர் சொன்னுன்.

''நேரில் பார்க்காவிட்டாலும் உங்களைப் பற்றி நிறையத் தெரிந்து வைத்திருக்கிறேன். நீங்கள் பெரிய பிசினஸ் மாக்னெட் ஆயிற்றே...'' என்று கூறியபடி மெதுவாகச் சிரித்தான் பிரபு.

பாலசந்தர் விமலாவை அழைத்தான்:

''விமலா, மீட் மிஸ்டர் பிரபு...'' என்றவாறு அவனை அறிமுகப்படுத்தி விட்டு, விமலாவை அவனுக்கு அறிமுகப் படுத்தினுன். பிரபு,விமலாவைஆவலோடு பார்த்தான். அவளும் கவனித்தாள்.

''விமலா உங்கள் செகரட்ரியாக இருக்கும் விஷயமும் எனக்கு முன்பே தெரியும்'' என்று பிரபு சொன்னுன்.

''ஒன்று விடாமல் தெரிந்து வைத்திருப்பீர்கள் போல் இருக்கிறதே!''—



சிரித்தவாறு பாலசந்தர் கூறியபோது பிரபுவும் சிரித்துக் கொண்டான்.

''அநேகமாக உங்களைப் பற்றி எல்லாமே தெரியும். தெரிந்த பிறகு நான் விலகியிருக்க முடியுமா? நேரடியாக இல்லாவிட்டாலும் வெளியில் இருந்து கொண்டாவது உங்கள் தொழில் அபிவிருத்திக்கு உதவ வேண்டும் என்று நினைத்தேன். முழு மூச்சாக ஒத்துழைக்கத் துணிந்து விட்டேன்'' என்ருன் பிரபு.

பாலாவுக்கு வியப்பாக இருந்தது: 'என் மீது இவனுக்கு இத்தனை நல்ல எண்ணமா? என்னைப் பற்றி எல்லாமே தெரியுமா,இவனுக்கு?'-என்ற யோசனை. பிரபுவை ஒரு சிக்கலான ஆளாக அவன் கருதவில்லை. தெளிவாகத்தான் பேசுகிருன். உதவ வேண்டும் என்ற. ஆர்வமும் ஆதரவும் அவன் பேச்சில் இழைகின்றன. அவன் யார்?

பாலசந்தர் எங்கோ கவனத்தைப் பதித்தவாறு சிந்தித்தான். விமலாவைப் பார்த்தான் பிரபு.

''மிஸ் விமலா, என்னை உங்களுக்குத் தெரியாது. ஆனல் உங்களை எனக்குத் தெரியும்!''—புன்னகையோடு பிரபு கூறியபோது சற்று ஆச்சரியத்தோடு அவனை நோக்கினுள் விமலா.

''ஏன், ஆச்சரியமாக இருக்கிறதா? பிசினஸ் சர்க்கிளில் இருந்து கொண்டு பிசினஸ் மாக்னெட்டுகளைத் தெரிந்து கொள்ளாமல் இருக்க முடியுமா? மேஜர் ராம்நாத்தின் புதல்விதானே நீங்கள்?'' என்ருன்.

விமலா தலையசைத்தாள்.

''மேஜர் ராம்நாத்தை உங்களுக்குத் தெரியுமா?'' என்று பாலா, பிரபுவைக் கேட்டான்.

''நன்ருகத் தெரியும்! சில முறை சந்தித்திருக்கிறேன்!''

பிரபு, விமலாவைக் கவனித்தான். எந்த உணர்ச்சியையும் அவள் காட்டிக் கொள்ளவில்லை.

''மிஸ்டர் பாலா, நீங்கள் புதிய தொழில் திட்டங்களில் ஈடுபடப் போவதாக அறிந்தேன்.''

''ஆமாம்.இன்னும் முடிவாகவில்லை.''

''மேஜர் ராம்நாத் சொன்னுர், சீக்கிரமே முடிவாகி விடும் என்று. முடிவு ஏற்பட்டால் சரிதான்!'' என்ருன் பிரபு

விமலா மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

''மிஸ்டர் பாலா, உங்களுடன் ஒரு விஷயத்தைத் தனியே பேச விரும்புகிறேன்'' என்றான் பிரபு.

''ஓ, நிச்சயமாக! எது வேண்டுமானாலும் பேசலாம்.''- பாலா கூறினான்.

''தொழிலைப் பற்றிப் பேசுவதற்காக மட்டும் நான் வரவில்லை'' என்று பிரபு ஆரம்பித்தபோது, விமலா அங்கிருந்து எழுந்து போனாள்.

''ஆமாம், மிஸ்டர் பாலா. இது உங்கள் சொந்த விஷயம். ஆனால், பேசுவதில் தவறில்லை என்று நினைக்கிறேன்.''

''சொல்லுங்கள், பிரபு.''

''உங்கள் மனைவி நோயுற்றிருப்பது எனக்குத் தெரியும்!''

'ஆமாம்' என்பது போல் பாலா தலையசைத்தான்.

''சிகிச்சைகள் பார்த்தும் பலன் ஏற்படவில்லை, அல்லவா?''

''ஆமாம்.''

''உங்களுக்கு ஆட்சேபம் இல்லையென்றால் நான் ஒரு யோசனை சொல்கிறேன்!'' என்றான் பிரபு.

''மிஸ்டர் பிரபு...'' — பாலாவின் குரல் தழுதழுத்தது.

''உங்கள் சிரமங்கள் எனக்குப் புரியும். நான் டாக்டர் அல்ல என்றாலும் கொஞ்சம் மன நோய் சிகிச்சை தெரியும். உங்கள் மனைவியை நான் பார்க்க முடியுமா? ஒரு முயற்சி செய்து பார்க்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?'' என்று அவன் கேட்டான்.

''ஹேமா இப்பொழுது இங்கே இல்லை.''

''எங்கே யிருந்தாலும் சென்று பார்க்கத் தயாராக இருக்கிறேன்.''


ஸ்கிரீனுக்கு அப்பால் உட்கார்ந்திருந்த விமலாவின் செவிகளில் இந்தப் பேச்சு மோதத் தவறவில்லை. புதிர், மேலும் முறுக்கேறியது. அறியாத மனத் துடிப்பும் சேர்ந்து கொண்டது. ராம்நாத்தையும் நாராயணையும் அவள் நினைத்துக் கொண்டாள். சேகரின் நினைவும் நெஞ்சைச் சூழ்ந்து கொண்டது.

டாக்ஸியை அனுப்பிவிட்டு யோசித்தபடி வாசலுக்கு வந்தான் சேகர். 'காலிங் பெல்'லை அழுத்தினான். கதவைத் திறந்து கொண்டு எட்டிப் பார்த்த விமலா, நிலைகுத்தி நின்றாள்.

''நீங்களா?'' என்ற முணுமுணுப்புடன் சேகரைப் பார்த்தாள். அவனை அவள் எதிர்பார்த்திருந்தால்தானே! அதுவும் இரவு நேரத்தில் வீடுதேடி வந்திருக்கிறான். எதற்காக? விமலா நடுங்கினாள். வார்த்தையின்றி ஒரு நிமிஷம் கதவருகே நின்றாள்.

''மிஸ் விமலா, என்னைத் தெரியவில்லையா?'' என்று அவன் கேட்டான். குரலில் அடக்கம் இருந்தது.

நம்பமுடியாத...



''நான் உள்ளே வரலாமா?'' என்று சேகர் கேட்டபோதுதான் அவனை வாசலிலேயே நிறுத்தி வைத்திருப்பது விமலாவுக்குப் புரிந்தது. தலையை ஆட்டியவாறு அவள் உள்ளே நகர்ந்தாள். சேகர் பின்தொடர்ந்தான்.

சோபா அருகே போய் அவள் நின்றாள். அவனும் நின்றான்.

''உட்காரலாமா?''—சேகர் கேட்டான்.

''உட்காருங்கள்!''

விமலாவுக்கு எதிரே அவன் அமர்ந்தபடி கவனித்தான். கவர்ச்சியும் பகட்டும் இல்லாமல் அவள் உடுத்தியிருந்தது சேகருக்கு வியப்பாக இருந்தது. வண்ண வண்ணமான உடையில் பலமுறை அவளை அவன் பார்த்திருக்கிறானே! இப்போது எ[illegible] வந்தது விமலாவுக்கு?

''நான் இங்கே வந்தது பிடிக்கவில்லை அல்லவா?'' என்றான் சேகர்.

அவள் பதில் கூறாமல் பார்த்தாள்.

''ஒரு நிமிஷத்தில் அதைச் சொல்லி விட முடியாது. மணிக்கணக்கில் உன்னுடன் இருந்தால்தான் அந்தக் காரியம் பூரணமடையும் போல் இருக்கிறது. ஆனால் நீ பயப்படுவது போல் தெரிகிறது'' என்றான் சேகர்.

விமலா தலையைக் கவிழ்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

''விமலா, நான் கேட்கட்டுமா?''


அவள் சம்மதத்திற்கு அறிகுறியாக முகத்தை அசைத்து நிமிர்த்தினாள்.

''என்னைத் தெரிகிறதா?'' என்றான் சேகர்.

இமைகள் படபடக்க அவனைப் பார்த்தாள்.

''சொல், விமலா...என்னைத் தெரிகிறதா?''

''தெரிகிறது...'' என்ற குரல் தாபத்தோடு துடித்து வெடித்தது அவளிடமிருந்து.



''விமலா, என்னை உனக்குப் பிடிக்காது என்பது தெரியும். ஆனாலும் வந்திருக்கி[illegible]ன். ஏன் தெரியுமா?'' என்றவாறு நோக்கினான்.

அவனுடைய பார்வையை எதிர் கொள்ள முடியாமல் விமலா தவிப்பது போல் தோன்றியது.

''பிடிக்காத ஒருவனிடம் பேசுவது உனக்குப் பிடிக்கவில்லைபோல் தெரிகிறது. விமலா, நான் போய் விடட்டுமா?''— சேகர் வினவினான்.

விமலா கலங்கினாள்; குழம்பினாள்.

''நீங்கள்...வந்த காரியத்தை...'' என்று அவள் இழுத்தாள். குரலில் பீதி.

சேகர் பெருமூச்சு விட்டான்.

''விமலா, ராம்நாத் ஒரு மேஜராக இருந்தவரா?''

அவள் பதில் சொல்லவில்லை.

''என்னைத் தெரிந்து கொண்ட பிறகு எனக்குப் பதில் சொல்லத் தயக்கம் ஏன்? சொல், விமலா...அவர் யார்?''

''அவர்...அவர்...'' என்று முனகலுடன் நீட்டிய விமலாவிடமிருந்து எப்படியோ ஒரு பதில் வந்து விட்டது.

அவள் சொன்னதைக் கேட்ட சேகர் துள்ளி எழுந்தான்.

(தொடரும்)



ஆசியர்வில் பெரிய அங்கம்
அது தரத்தில் சிறந்த தங்கம்
மாசில்லா வீரச் "சிங்கம்,"
மற்றவை இதன்முன் மங்கும்
வீசி ஒளியது பொங்கும்
வெடிப்பதில் இல்லை பங்கம்
காசினியோர் மனதில் தங்கும்
கண்டதில்லை இதற்கிணை எங்கும்.

டிப்போக்கள் :

* 5, ஆண்டர்ஸன் சந்து,
மதராஸ் - 1.

* 141, போர்ட் மெயின் ரோடு,
செவ்வாய்பேட்டை, சேலம்-2.

* T. N. சண்முகம்
26, மயிலம் சந்தை, திருச்சி-8.

* 315, கீழ மாசி வீதி,
மதுரை - 1.

போய் விட்டார். பின்னால் விவரமறிந்ததும் நானும் அவரும் பெயர்க் குழப்பத்தை நினைத்துச் சிரித்தோம்.

'வெள்ளிக்கிழமை' நாடகத்தில் அவர் இளம்பெண்ணாக நடித்தார். அந்த நாடகத்திலும் அவரது திறமையான நடிப்புத் திறனை நான் கண்டு ரசித்தேன்.

சீனியர் சகுந்தலாவைப் பற்றி ஜூனியரான நான் வருத்தப்படுவது: 'ஏன் இவருக்கு நிறையப் படங்களில் நடிக்க சான்ஸ் கிடைக்கவில்லை?' என்பது தான்! ஒருகால் ரசிகர்களின் துரதிருஷ்டமா?

பத்மினியைப் பற்றிக் குமாரி பத்மினி:

அப்போது எனக்கு வயது பன்னிரண்டு. நடனக்கலையின் மீது எனக்கு ஏற்பட்ட மோகம் காரணமாக நடனமாடக் கற்றுக் கொண்ட நேரம் அது. அப்போது திருமதி பத்மினி 'கண்ணகி' என்ற நாட்டிய நாடகத்தை



பத்மினி

குமாரி பத்மினி



நடத்திக் கொண்டிருந்தார். அந்த நடனக் குழுவில் சேரும் ஆசையில் அவரிடம் சென்று, ''நான் உங்களுடன் சேர்ந்து நடனமாட விரும்புகிறேன். எனக்குச் சம்பளம்கூட வேண்டாம்'' என்றேன். திருமதி பத்மினியும் எனது ஆர்வத்தைக் கண்டு எனக்கு பாண்டியன் வேடத்தைக் கொடுத்தார். சில நாட்கள் அவரது குழுவில் சேர்ந்து ஆடினேன்.

'தேரோட்டம்' படத்தில் நானும் அவரும் மாமியாரும் மருமகளுமாகச் சேர்ந்து நடித்தோம்.

''நடனமாடிக் கொண்டே திரைப்பட உலகிலும் சுடர் விட்டுப் பிரகாசிப்பவர்கள் மிகவும் குறைவு. நீ 'திருமலை தென்குமரி' படத்தில் சிறப்பாக நடித்திருக்கிறாய். அதைப் போல மற்ற பெரிய நட்சத்திரங்கள் நடிப்பதைப் பார்த்து நடிப்புத் திறமையை வளர்த்துக் கொள்'' என்று அக்கா பத்மினி அறிவுரை கூறுவார்.

திருவருட் செல்வர் படத்தில் அவர் 'மன்னவன் வந்தானடி' என்ற பாடலுக்கு அற்புதமாக அபிநயம் பிடித்து ஆடியதும், தங்கப்பதுமையில் அவரது குணசித்திர நடிப்பும் எனக்கு மிகவும் பிடித்தவை. அவர் குடும்பத் தலைவியாக இப்போது அமெரிக்காவில் இருந்தாலும் திரைப்படத் துறைக்கு அவர் செய்துள்ள சாதனைகளை யாரும் மறக்க முடியாது.

ஜி. வரலட்சுமியைப் பற்றி பி. ஆர். வரலட்சுமி:

நான் சிறிய குழந்தையாக இருந்த போது நகரியில் திருமதி ஜி. வரலட்சுமி நடித்துள்ள பல படங்களைப் பார்த்து ரசித்திருக்கிறேன். கதாநாயகியாக நடித்த போதும் சரி, மிடுக்கான ஜமீன்தாரிணி அல்லது அம்மா வேடத்தில் இப்போது நடிக்கும்போதும் சரி, அவரது நடிப்பில் தனி முத்திரை தென்படும். நான் அவரது விசிறி கூட.

'வாழையடி வாழை' படத்தில் அவருடன் சேர்ந்து நடிக்கும் வாய்ப்புக் கிட்டியது.

''என் பெயரைக் கொண்டவளா நீ! பலே! பழைய படங்களை நிறையப் பார். எல்லோரிடமும் நன்றாகப் பழகு. எவ்வளவு முன்னணிக்கு வந்தாலும் கர்வப்படாதே'' என்று அவர் முதல் நாள் அன்போடு எனக்கு ஆசி கூறி வாழ்த்தினார். அவருக்கும் எனக்கும் பிடித்தது ஒன்று: அது பாகற்காய் கறி.

பேட்டி: மன்னை சௌரிராஜன்.

அழைக்கும் விழிகள்..

டபிள்யூ. ஆர். ஸ்வர்ணலதா

15

மேஜர் ராம்நாத் ஒரு மேஜர் அல்ல. பெயர்தான் அப்படியே தவிர, ராணுவத்தில் அவர் பணி புரிந்திருக்கவில்லை. அவர் யார்? விமலாவை நெருக்கிக் கேட்க வேண்டிய அவசியம் சேகருக்கு ஏற்படவில்லை. அவளாகவே சிலவற்றைச் சொல்லி விட்டாள்.

சேகர் வாய் திறக்கவில்லை. வியப்பும் திகைப்புமாக உட்கார்ந்து விட்டான். விமலாவை நிமிர்ந்து பார்த்தான். அவள் மௌனமாக அவனையே பார்த்தாள்.

அந்தப் பார்வை சேகரின் நினைவைச் சுழற்றியது. ஐந்து வருடத்திற்கு முன்னால் சந்தித்த விஜயாவின் முகம் நெஞ்சில் வந்தது. அப்போது ஒரு நாள்—

''விஜயா, இன்னும் ஒரே வாரம்... அப்புறம் நாம்...''—சேகர் பிடிபடாத பெருமையுடன் அவளைப் பார்த்தான். பூவை மொய்க்கும் வண்டாக அவள் முகத்தில், மேனியழகில் மொய்த்தது அவன் பார்வை.

''எனக்குப் பயமாக இருக்கிறது!'' என்றாள் விஜயா. உள்ளப் படபடப்பு அவள் முகத்தில் தெரிந்தது. மருட்சியோடு சேகரைப் பார்த்தாள்.

''விஜயா, நீ குழந்தையா? ஏன் இப்படிப் பயந்து சாகிறாய்? என் மீது உனக்கு நம்பிக்கை ஏற்படவில்லையா?''

''ஆனாலும் பீதியில் மனம் அடித்துக் கொள்கிறது.''

''அது தேவை இல்லை, விஜயா. அடுத்த வாரமே உன்னை உரிமையாக்கிக் கொள்கிறேன். அதுவரை குழப்பம் இல்லாமல் நீ இருக்க வேண்டும். சரிதானே?'' என்று சேகர் கேட்டபோது நம்பிக்கையோடு அவனைப் பார்த்தாள் விஜயா.

ஒரு மாதமாக அவர்களிடையே பழக்கம் ஏற்பட்டிருந்தது. ரயில் பயணத்தில் அவளை அவன் சந்தித்தான். முதல் பார்வையிலேயே விஜயாவின் மன நிலையை ஓரளவுக்கு அவன் புரிந்து கொண்டான். 'வீட்டை விட்டு அவள் வெளியேறி வந்திருக்க வேண்டும், அல்லது யாருடைய பிடியிலிருந்தாவது தப்பிக் கொள்வதற்காகத் தனியே கிளம்பியிருக்க வேண்டும்' என்ற முடிவுக்கு வந்தவன் ஆதுரத்தோடு அவளிடம் பேச்சுக் கொடுத்தான்.

அவளிடமிருந்து ஆரம்பத்தில் எதையும் வரவழைக்க முடியவில்லை. அந்த அழுத்தம் வெகு நேரம் நீடிக்கவில்லை. சாதுரியமாகப் பேச்சுக் கொடுத்து விஜயாவை நெகிழ வைத்து விட்டான். அவன் நினைத்தபடியேதான் நடந்திருந்தது.

''விஜயா, நீங்கள் ஏன் வீட்டை விட்டு வெளியேற வேண்டும்?'' என்று அவன் கேட்டான்.

''என்னைத் தற்காத்துக் கொள்வதற்காகத்தான்!'' என்றாள் அவள். விஜயாவின் கதையை சேகர் தெரிந்து கொண்டான். தன்னை ஒருவர் துரத்திக் கொண்டிருப்பதாகவும், அவருடைய பிடியில் சிக்கி அவதிப்பட விரும்பாமல் ஓடி வந்து விட்டதாகவும் விஜயா சொன்னபோது, சேகர் மேற்கொண்டு துருவிக் கேட்க விரும்பவில்லை.

''இப்பொழுது தப்பி வந்து விட்டாலும் மறுபடியும் அவன் கண்ணில் படாமல் இருக்க முடியும் என்பது என்ன நிச்சயம்?'' என்று விஜயாவைக் கேட்டான் அவன்.

''எப்படியாவது நான் மறைந்து வாழ விரும்புகிறேன். அதற்கு வழிதான் தெரியவில்லை....''

''நான் சொல்லட்டுமா?''—சேகர் கேட்டான். அவள் ஆர்வத்தோடு அவனைப் பார்த்தாள்.

''ஆமாம் விஜயா... உங்கள் நிலைமை எனக்குப் புரிகிறது. தெரிந்து கொண்ட பிறகு நான் வேடிக்கை பார்க்க முடியுமா?

நானே ஒரு வழி செய்கிறேன்'' என்று மகிழ்ச்சியோடு அவன் சொன்னன்.

பதற்றம் தணிந்தவளாக சேகரை நோக்கினுள் விஜயா.

''வேறு வழியைத் தேடிக் கொள்ளும் வரை நானே ஒரு புகலிடம் தேடித் தர நினைக்கிறேன்.''

''உங்களுக்கு அந்தச் சிரமத்தைக் கொடுக்க நான் விரும்பவில்லை'' என்ருள் விஜயா.

''அழகான ஒரு பெண் பரிச்சயம் இல்லாத ஒரு புது இடத்தில் தனித்து வாழ்வது சிரமம். இப்பொழுது நீங்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அனுபவத்தில் உணர முடியும். அப்படி கசப்பான அனுபவங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காகத்தான் நான் உதவ முன் வருகிறேன். அதற்கு மேல் உங்கள் இஷ்டம்'' என்று சேகர் சொன்னது அவள் மனத்தில் பட்டது.

விஜயா குழம்பினுள்.

''நேராக என்னுடன் வரலாம். சிலநாள் இருந்து ஒரு முடிவுக்கு வந்ததும் சுதந்திரமாக உங்கள் வழியில் செல்லலாம்...''—சேகர் சொன்னன். சிறிது நேர யோசனைக்குப் பிறகு அவள் சம்மதித்தாள்.

அவன் தங்கி யிருந்த ஃபிளாட்டில் விஜயாவுக்கு ஓர் அறை எடுத்துக் கொடுத்தான். அவளுக்குத் தேவையான உதவிகளைச் செய்தான்.

சேகர், ஃபிளாட்டில் தங்கும் நேரம் சொற்பம்..பட்டதாரியான அவன், ஒரு பெரிய கம்பெனியின் பிரதிநிதியாக இருந்து வந்தான். நல்ல சம்பளம் கிடைத்துக் கொண்டிருந்தது. வாரத்திற்கு ஒரு முறையாவது வெளியூருக்குப் போய்க் கொண்டிருந்தான்.

பத்து நாள் ஓடிவிட்டது. விஜயா அவனிடம் பேச்சை எடுத்தாள்: ''என்னல் உங்களுக்குச் சிரமம்..இத்தனை நாள் அளித்த உதவிக்கு நான் எப்படி நன்றி சொல்வது? நான் கிளம்புகிறேன்.''

''எங்கே போக உத்தேசம், விஜயா?''



''எங்கேயாவது...'' என்றுள் அவள் தாபத்தோடு.

''இங்கேயிருக்கப் பிடிக்கவில்லேயா?''

அவளுக்குப் பதில் சொல்ல வரவில்லே.

''என் மீது நம்பிக்கை ஏற்படவில்லே என்று தெரிகிறது. நான் யாரையும் துரத்திப் பிடித்தவன் அல்ல. அந்த ஆசையோ, வெறியோ எனக்குக் கிடையாது. நீங்கள் அப்படி நினைத்தால் இஷ்டப்பட்ட இடத்திற்குப் போகலாம்'' என்று சேகர் சொன்னுன்.

விஜயா வாயடைத்துப் போனுள்.

''என்னைத் தவருக நினைக்காதீர்கள்!'' என்று நெகிழ்ச்சியோடு விஜயா கூறினுள்.

''இல்லே, விஜயா... உயர்வாக நினைத்துத்தான் ஒரு விஷயத்தைக் கூறலாம் என்று விரும்புகிறேன்.''

''சொல்லுங்கள்!''

''நீ எங்குமே போகக்கூடாது!''

''உங்களுக்குச் சுமையாக இருக்க வேண்டுமா?''

''இல்லே. சொந்தமாகிவிட வேண்டும்.''

அவள் திகைத்தாள்.

''ஆமாம், விஜயா... நான் முடிவு செய்துவிட்டேன். என்னை உனக்குப் பிடிக்கிறதா?'' என்று ஆசைத் துடிப்போடு அவன் கேட்டான்.

அவள் நாணப் புன்னகை புரிந்தாள்.

''அந்தத் தகுதி எனக்கு இருக்கிறதா?'' என்று அவள் தயக்கத்தோடு கேட்கவே செய்தாள்.



''உங்க பேரு காவேரியா?.. வீட்டு நெம்பர்?...''

''ஆறு...''

''அதான் வீடு முழுவதும் ஒரே தண்ணியா இருக்கோ!..''

''அது எனக்குத் தெரியும். அலாதியான உன் அழகுக்காக மட்டும் நான் விரும்புவதாக நினைக்க வேண்டாம். அமைதியான, மகிழ்ச்சியான வாழ்க்கையை நீ அளிப்பாய் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டு விட்டது விஜயா. அதை அசைக்க முடியாது.''—சேகர் பெருமிதத்தோடு சொன்னுன். விஜயா உள்ளுக்குள் பூரித்துப் போனுள்.

முதலில் பதிவுத் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தார்கள். அதற்கு ஒரு வாரம் இருந்தது. தலைமை அலுவலகத்திலிருந்து சேகருக்கு அந்தச் சமயத்தில்தான் அவசர அழைப்பு வந்தது. விஜயாவிடம் சொல்லிவிட்டு பம்பாய் புறப்பட்டான். வேலே முடிந்ததும் உடனே திரும்பி வந்து திருமண ஏற்பாடுகளேக் கவனிப்பதாகச் சொன்னுன்.

நான்கைந்து நாட்களுக்குப் பிறகு அவன் திரும்பியபோது அதிர்ச்சி காத்திருந்தது. விஜயா இருந்த அறை காலியாக இருந்தது. விஜயா எங்கே? சேகர் தவியாய்த் தவித்தான்; தடுமாறினுன். 'விஜயா இத்தனே மோசக்காரியா?' என்று குமுறினுன். எவ்வளவோ நிதானத்தோடு எடை போட்டுப் பார்த்த பிறகுதான் சேகர் அவளே மணந்து கொள்ள முன் வந்திருந்தான். தன்னுடைய கணிப்பு அடியோடு தவறு என்று நினைத்துப் புழுங்கினுன்.

அப்பொழுது போனவள்தான் விஜயா. நினைவு பசுமையாக இருக்கிறது. ஐந்து வருடங்கள் ஓடிவிட்டன. அந்த விஜயா எங்கே?

சேகர் பெருமூச்சு விட்டான்.

நெஞ்சக் கலக்கம் கண்ணில் பனித்திரையைப் போர்த்தியது. அந்தத் திரையினூடே விஜயாவின் உருவம் ஒரு நிழலாக, ஒரு படிவமாக எதிரே தோன்றியது ...

விமலா குலுங்கினுள்.

''என்னை மன்னித்து விடுங்கள்...!'' என்றுள் அவள் தீனமாக.

எதிரே உட்கார்ந்திருந்த விமலாவை ஏறிட்டுப் பார்த்தான்.

கண்ணீர் அவள் கன்னத்தில் உருண்டு கொண்டிருந்தது. இதழை அழுத்திக் கொண்டாள், விம்மலே அடக்கிக் கொள்வதற்காக.

''என்னை மன்னிப்பீர்களா?''-விமலா உருகினுள்.

''மன்னிப்பா, எதற்கு?''

"உங்களை நான் வஞ்சித்து விட்டேன், அல்லவா?"

"அது எனக்கு எப்படித் தெரியும்?" என்றான் சேகர், அலட்சியமாக.

"வஞ்சகி என்று நினைக்கலாம். துரோகி என்று அழைக்கலாம்."

"அதற்கு என்ன அவசியம் வந்தது?" -சேகர் சிரத்தையின்றிக் கேட்டான்.

"ரேஸ் கோர்ஸில் உங்களைப் பார்த்ததுமே புரிந்து கொண்டேன்!" என்றாள் விமலா.

"எனக்கும் அப்பொழுதே சந்தேகம்."

"சந்தேகத்திற்குரியவளான பிறகு என்னைக் காட்டிக் கொள்ள முடியாத அவமானத்தில் யாரோ ஒருத்தியாக நடந்து கொள்ள முயன்றேன். அப்படியே வேஷம் போட முடிவு செய்தேன். வேறு எப்படி நடந்து கொள்ள முடியும்?" என்று கலக்கத்தோடு விமலா சொன்னாள்.

அவன் பேசவில்லை.

"அபலை விஜயாவின் கதையை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்" என்று ஆரம்பித்தாள் அவள்.

சேகர் அவசரமாக பம்பாய்க்குப் புறப்பட்டுப் போனது விஜயாவுக்கு ஏமாற்றத்தை அளித்தது. அடுத்த வாரம் அவனுக்கு மனைவியாகி, இன்பமாக வாழ்க்கையைத் தொடங்கப் போகிறோம் என்ற நினைவில் நீச்சல் போட்டுக் கொண்டிருந்தாள். தான் மனைவியாகி விட்டால் தன்னை யாரும் துரத்தி வர முடியாது என்ற துணிவு. சேகரைப் பற்றி மிக உயர்வான எண்ணம் அவளுக்கு ஏற்பட்டிருந்தது.

சேகரின் வருகையை எதிர்பார்த்து ஆவலில் துடித்துக் கொண்டிருந்தாள் விஜயா. அந்தத் துடிப்பு அவலத் துடிப்பாக மாறும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

ஒருநாள் முன்னிரவு நேரத்தில் அந்த அறைக் கதவு தட்டப்பட்டது. சேகர் தான் வந்து விட்டானே என்ற மகிழ்ச்சியுடன் அவள் கதவைத் திறந்தபோது [illegible] உருவம் நின்றிருந்தது.

"என்னிடமிருந்து தப்புவது அவ்வளவு சுலபம் அல்ல, தெரியுமா?" என்று கர்ஜனை புரிந்தான் வந்து நின்றவன்.

அந்தக் கோர ஒலி அவளை நடுநடுங்கச் செய்தது. அவள் மூர்ச்சையுற்றாள். அப்புறம் நடந்தது அவளுக்குத் தெரியாது.

"நான் ஓடிப் போகவில்லை. துரத்திக் கொண்டிருந்தவனால் கண்டு கொள்ளப் பட்டு நீங்கள் இல்லாத சமயத்தில் கடத்திச் செல்லப் பட்டேன்" என்று குமுறி அழுதாள் விமலா.

"விஜயா..." என்று அலறினான் சேகர்.



(தொடரும்)


லக்ஷ்மி மில்ஸ் கம்பெனி லிமிடெட்
கோயமுத்தூர் 641018

தந்தி: 'பத்மம்' ஸ்தாபிதம்: 1963 போன்: 375
ரிஜிஸ்டர்டு நெ. 4997 தபால் பெட்டி எண்: 34

சிட்டுநிதித் தொழிலில் சிறந்த ஸ்தாபனம்

பத்மா இண்டஸ்ட்ரீஸ் & பைனன்ஸ் பிரைவேட் லிமிடெட்.

பதிவு அலுவலகம்: 78, சின்ன இரகலி தெற்குத் தெரு, கொரநாடு, மாயூரம். 609001

1973ம் வருடம் ஜூலை மாதம் 31ந் தேதி முடிய ஸ்தாபனத்தின் செயல்திறன் பட்டியல்

	குருப்புகளின் எண்ணிக்கை	அவற்றின் மதிப்புத் தொகை ரூ.
1. விண்ணப்பங்கள் வரவேற்கப்படும் குருப்புகள்	35	46,81,500
2. ஏலத்துக்கு தேதி வைக்கப்பட்டுள்ள குருப்புகள்	6	3,85,000
3. நடைபெற்று கொண்டிருக்கும் குருப்புகள்	165	2,59,49,400
4. நடத்தி முடிவடைந்த குருப்புகள்	710	4,55,40,600
கூடுதல்	916	7.65,56,500

தற்சமயம் ரூ. 5,000/- முதல் ரூ. 40,000/- வரைக்குண்டான டெண்டர் சீட்டு குருப்புகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் தினசரி, மாத — (நேரில் ஏலம் கேட்கும்) சீட்டுகளுக்கும் எமது கிளைகளில் சேரலாம். —

எங்களது பாய் தொழிற்சாலையில் தயாராகும் தரமிகுந்த தாமரை மார்க் பாய்களையும், சைககிள் தொழிற்சாலையில் தயாராகும் 3 சக்கர சைக்கிள்களையும் வாங்கி — உபயோகிக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறோம். —

விவரங்களுக்கு விண்ணப்பியுங்கள்

K. M. திருஞானம்
அஸிஸ்டென்ட் இன்சார்ஜ் ஆபீஸர்.

K. R. சம்பத்குமார்
இன்சார்ஜ் ஆபீஸர்.



★

எக்காலத்திற்கும் ஏற்றவை

ஸ்பைடர்

பனியன்கள்

★

ஸ்பைடர் நிட்டிங் கம்பெனி, திருப்பூர்-4.

16

விமலாவின் கண்ணில் நீர் வழிந்தது:

''விஜயா என்று என்னை அழைக்காதீர்கள். உங்கள் விஜயாவாக நான் இல்லை. விமலாவாகவே இருந்து விட்டுப் போகிறேன்'' என்ருள் அவள்.

அந்த சோகத்திலும் அவளுடைய அழகு சுடர்விட்டது. அவளைத் தேற்ற வேண்டும் என்று சேகர் விரும்பினுன்:

''விஜயா என்று தெரிந்து விட்டால் பாலசந்தர் வேலையிலிருந்து நீக்கி விடுவார் என்ற பயமா? அப்படி ஓர் ஆபத்து ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறேன். சரிதானே? அதுவரை எனக்கும் நீ விமலாதான்......'' என்ருன் அவன்.

''இல்லை. எனக்கு எந்த வேலையும் வேண்டாம். ஏதாவது தண்டனை கிடைத்தால் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்வேன்.''

இரவு நெடுநேரம் ஆகியும் சேகர் அங்கிருந்து நகரவில்லை. ராம்நாத்தைப் பற்றிய விசாரணையில் அவன் இறங்கினுன். அவர் மேஜர் அல்ல என்று விமலா சொல்லி யிருந்தாலும் பல மேஜரான விவகாரங்களில் அவருக்குத் தொடர்பு இருப்பதை சேகர் முன்பே கணித்திருந்தான். இப்பொழுது அவனுடைய துடிப்பெல்லாம் விமலாவுக்கும் ராம்நாத்துக்கும் என்ன உறவு என்பதை அறிந்து கொள்வதுதான்.

ஐந்து வருடத்திற்குமுன் அவளை ரயில் வண்டியில் சந்தித்து, தன்னுடன் அழைத்து வந்து பல நாள் தங்க வைத்திருந்தபோதுகூட அவளுடைய பெற்ரேரைப் பற்றிச் சேகர் கேட்கவில்லை. யாரோ ஒருவன் தன்னைத் துரத்திக் கொண்டிருப்பதாக அவள் சொன்னபோதும் 'அவன் யார்' என்று விசாரித்திருக்கவில்லை. ஆனுல் 'ராம்நாத் யார்?' என்ற கேள்விதான் அவனை இப்பொழுது குடைந்து கொண்டிருந்தது. 'டாடி' என்று அவள் அவரை அழைப்பதும்



டபிள்யூ. ஆர். ஸ்வர்ணலதா

தன்னுடைய ஒரே மகள் என்று அவளைப் பற்றி அவர் சொல்வதும் சேகருக்குத் தெரியும்.

''ராம்நாத் மேஜர் அல்ல என்பது சரி. அவர் உன் 'டாடி'தானே?'' என்று சேகர் கேட்டான்.

''அப்படித்தான் நினைத்திருந்தேன், பல வருஷம்...பிறகுதான் எனக்கு...'' என்று விமலா தயங்கினாள்.

''என்ன தெரிந்தது?'' — அவன் கேட்டான்.

''எனக்கு அம்மாவும் இல்லை, அப்பாவும் இல்லை என்பதை உணர்ந்து கொண்டேன்.''

''அவர்களுக்கு என்ன ஆயிற்று?'' என்று துடிப்போடு கேட்டான் சேகர்.

''நான் சிறு பெண்ணாக இருந்தபோது அம்மாவை இழந்து விட்டேன். அப்பாவைப் பார்த்ததில்லை'' என்று ஆரம்பித்து விமலா சொன்ன கதை சேகரின் நெஞ்சை உலுக்கியது:



விமலாவின் அப்பா ராணுவத்தில் இருந்தார். விடுமுறையில் வீட்டுக்கு வர இருந்தவர் இறந்து போனார். அப்பொழுது விமலா - விஜயா - குழந்தை. கணவனை இழந்த துயரில் அவள் அம்மா ஆழ்ந்திருந்த போது ராம்நாத் வந்தார். உயிர் நண்பனை இழந்துவிட்ட சோகத்தில் தான் இருப்பதாகவும், அவர்களுக்குக் கைகொடுக்க தான் கடமைப் பட்டிருப்பதாகவும் ராம்நாத் சொன்னார். தன் கணவனுக்கும் ராம்நாத்துக்கும் ஓரளவு பழக்கம் உண்டு என்பது விஜயாவின் அம்மாவுக்குத் தெரியும். கைம்பெண் ஆனாலும் சொந்தக் காலில் நிற்கவே விரும்பினாள் அவள். ராம்நாத் விடவில்லை. அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தார். தன்னுடன் வந்து விடும்படி வற்புறுத்தினார். நண்பனின் மனைவி என்ற பரிவிலேயே உதவத் துடிப்பதாக ராம்நாத் கூறினாலும் அதை அவள் நம்பத் தயாராக இல்லை. ராம்நாத்தின் சுயரூபத்தை ஒரு நாள் அவள் புரிந்து கொண்டாள். 'அவர் வெறி பிடித்தவர். அந்த வெறிக்குத் தன்னை இரையாக்கிக் கொள்ளப் பார்க்கிறார்' என்பது தெளிவாகி விட்டது. களங்கப்பட விரும்பாமல் ராம்நாத்தை எதிர்த்து நின்றாள். எதிர்ப்பு பலனளிக்கவில்லை. உதவுவதற்கு உறவினர் யாரும் முன்வராத நிலையில் ராம்நாத்திடமே ஒதுங்க நேர்ந்தது. விரக்தியும், வேதனையும் அவளை வெகுகாலம் வாழ விடவில்லை. விஜயாவை அநாதையாக்கி விட்டுக் கண்ணை மூடி விட்டாள். ராம்நாத் விஜயாவைப் பள்ளிக்கு அனுப்பினார். பகட்டாக வளர்த்தார். பருவம் வந்த பிறகுதான் தன்னைச் சூழ்ந்துள்ள அபாயம் விஜயாவுக்குப் புரிந்தது.

அவள் நிறுத்தவில்லை. தொடர்ந்து கதையைச் சொன்னாள். சேகர் கலங்கினான். ராம்நாத்தின் உருவம் அவனுள்ளே விசுவரூபமெடுத்தது. மனத்தில் ஒரு வேகம். போராட்டம்....

*


விமலா ஆபீசுக்கு வந்திருந்தாள் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டிருந்த அந்த இடத்தில் உட்கார்ந்திருந்த போதும் கூட வெப்பம் தகிப்பது போன்ற தவிப்பில் இருந்தாள். அன்றைக்கு வந்திருந்த கடிதங்களைப் பிரித்துப் பார்த்தாள். எதிலுமே கவனம் பதியவில்லை. பாலசந்தர் மத்தியானத்திற்குப் பிறகு ஆபீசுக்கு வரவில்லை. அவள் மட்டுமே இருந்தாள்.

காலையில் விமலா வந்ததும் பாலசந்தர் ஏற இறங்கப் பார்த்தான். அவளுடைய தோற்றம் அப்படி இருந்தது. என்னதான் அழகாக உடுத்தியிருந்தாலும் முகம் வெறிச்சோடிப் போயிருந்தது.

''விமலா, உடம்புக்கு என்ன?'' என்று அவன் கேட்டான்.

''ஒன்றுமில்லையே...'' என்று அவள் மழுப்ப முயன்றாள்.

''இல்லை, விமலா...சோர்வாகத் தெரிகிறதே...உடம்பு சரியில்லையென்றால் வீட்டிலேயே ஓய்வாக இருக்கலாம்.





DC.G.49 TM

கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம் வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்... நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள் !

கால்கேட் 10க்கு 7 பேர்களில் வாய் துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப் படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஏனெனில், ஒரே தேய்ப்பில் வாய் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைவிக்கும் கிருமிகளை 85 சதவீதம் வரை, கால்கேட் டென்டல் க்ரீம் அகற்றி விடுகிறது.

-வதல் ...ந்தைமிக்க பெப்பர்மின்ட் சுவையேதனி— கால்கேட் டெ...ல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறுமல் ப...துலக்க ...ரும்புவதில் வியப்பென்ன!

தூய்மையான இனிய மூச்சுடனே, வெண்மையான பற்களையும் பெற்றிடவே...

உலகிலேயே அதிக மக்கள் மற்றெந்த பற்பசையையும் விட, கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்!

பூரண பல்
பராமரிப்பிற்கு
கால்கேட் டூத் பிரஷ்
உபயோகியுங்கள்.
ஒவ்வொருவரின் தேவைக்கேற்றவாறு
அமைய—15 ரகங்கள்.

ஏன் சிரமப்பட வேண்டும்?'' —பாலா பரிவோடுதான் கேட்டான்.

''நன்றாகவே இருக்கிறேன்'' என்றாள் விமலா.

''விமலா, சாயந்திரம் வெளியூருக்குப் புறப்படுகிறேன். நாளைக்கு அநேகமாக வந்து விடுவேன். இல்லையென்றால் அடுத்த நாள்தான் திரும்புவேன்...'' என்று அவளிடம் பாலா சொன்னான்.

'எங்கே' என்று அவள் கேட்கவில்லை. பிறகு அவனாகவே சொன்னான்:

''ஹேமாவைப் பார்க்கவே போகிறேன். மிகவும் அவசியம் அல்லது அவசரம் என்றால் மட்டும் மெஸேஜ் கொடுத்தால் போதும்'' என்றவாறு ஒரு முகவரியை விமலாவிடம் தந்தான்.

அவளுக்குச் சற்று ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஹேமாவைப் பற்றி அவள் முன்னால் பாலா ஒரு வார்த்தை கூடச் சொன்னதில்லை. இப்பொழுது மனைவியைப் பார்க்கப் போவதாகத் தயக்கமின்றித் தெரிவித்தது புதுமையாகவே தோன்றியது. பாலசந்தர் மனைவியைத் தேடிப் போவது ஏன்? பாலாவும் பிரபுவும் அன்றைக்குப் பேசிக் கொண்டிருந்ததை விமலா நினைத்தாள். 'ஒரு வேளை பிரபுவும், பாலாவுடன் புறப்பட்டுப் போயிருப்பானோ? ஹேமாவுக்கு சிகிச்சை பார்க்க ஏற்பாடாகியிருக்குமோ?'

தனிமை விமலாவின் மீது சுமையை ஏற்றியது. வேலையின்றி அங்கே உட்கார்ந்திருப்பது பிடிக்கவில்லை. வீட்டுக்குப் போனால் மட்டும் நிம்மதி கிடைத்து விடுமா? விமலா புழுங்கினாள். நேற்றிரவு வெகு நேரம் சேகருடன் பேசிக் கொண்டிருந்ததால் நல்ல உறக்கம் இல்லை; சோர்வு ஏற்பட்டிருந்தது.

''விமலா, இன்னும் கொஞ்ச நாள் வரை நீ விமலாவாகவே இருக்க வேண்டும்...ஏன் தெரியுமா?'' என்று அப்பொழுது சேகர் கேட்டான்.

அவளுக்குக் குழப்பமாக இருந்தது.

''உன்னுடைய மன நிலை எனக்குப் புரிகிறது. அவசர முடிவுக்கு நீ வந்து விடக் கூடாது. வேலையை உதறித் தள்ளி விட்டு எங்கேயாவது போய் விடலாம் என்றுகூட நினைக்கலாம். அப்படிச் செய்து விடாதே. பாலசந்தரின் செகரட்ரியாக நீ இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. மறுபடியும் உன்னைச் சந்திக்கிறேன். அதுவரை விமலாவாக இரு...'' என்று கடைசியாகச் சொன்னான்.

அவள் மறுத்துப் பேசவில்லை. இரவு ஒரு மணியிருக்கும். அவன் புறப்பட்ட போது அவள் தடுத்தாள்: ''எங்கே கிளம்புகிறீர்கள் இந்த நேரத்தில்?'' என்றாள், ஒருவித அக்கறையுடன்.

''ஏன், நான் போகக் கூடாதா?'' —சேகர் கேட்டான்.

''இந்த நடு இரவில் எங்கே போய்த் தங்குவீர்கள்? இங்கேயே உறங்குங்களேன்......''


''தாங்க்யூ விமலா... எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் 'விமலா' என்ற உன் பெயரை நான் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. நான் தங்குவதற்கு இடம் இருக்கிறது. நீ கவலைப்பட வேண்டாம். நான் வருகிறேன்'' என்றவாறு சேகர் அங்கிருந்து வெளியேறினான்.

சேகரை நினைத்து விமலா ஏனோ பெருமூச்சு விட்டாள்.

*

ஹேமாவின் முகத்தில் ஒரு சிறு புன்னகையாவது மலராதா? வாய் திறந்து ஏதாவது பேச மாட்டாளா? கொஞ்சமாவது மாறுதல் ஏற்பட்டிருக்கும் என்ற மன வேகத்தில்தான்





கண்ணுக்கும் காதுக்கும் விருந்து

சரியாக ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு (அக்டோபர் 29, 1923) ஜெர்மனியில் முதல் ரேடியோ நிகழ்ச்சி நடைபெற்றதாம். அதன் பொன் விழாக் கொண்டாட்டமாக இப்போது பெர்லினில் ஒரு சர்வதேசக் காட்சி நடைபெறுகிறது. அதற்கான பிரசார ஓவியம் இது.

—டி. எஸ். வி.

காரை விரட்டிக்கொண்டு ஹேமாவைக் காண வந்தான். ஏமாற்றமே மிஞ்சியது.

ஹேமா ஒரு கூண்டுக் கிளி போல் காணப்பட்டாள். எதிரிலேயே நெடு நேரம் உட்கார்ந்திருந்தான். அவள் சலனமின்றிக் கட்டிலில் ஒய்ந்திருந்தாள். தாய் வீட்டுக்கு வந்தும்கூட பழைய நிலையிலேயே அவள் இருப்பது பாலாவின் நம்பிக்கையைக் குலைப்பது போல் இருந்தது.

பாலசந்தர் திடீரென்று வருவான் என்று ஹேமாவின் அம்மாவும் அப்பாவும் எதிர்பார்க்கவில்லை. அவனை வரவேற்பதில் மகிழ்ச்சி இருந்தாலும், ஹேமாவைப் பற்றிக் கேட்டதும் கலங்கினர்கள். ஆனுலும் ஹேமாவின் முன்னுல் பாலா ஒரு நம்பிக்கையுடன் தான் அமர்ந்திருந்தான். பிரபுவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இருவரும் சேர்ந்து, காரிலேயே வந்து விடலாம் என்று பிரபுவிடம் பாலா சொன்னுன்.

''எனக்கு ஆசைதான். ஆனுல் சில வேலைகளை நான் ஸிட்டியில் முடித்தாக வேண்டியிருக்கிறது. முக்கியமான கமிட்மெண்ட்ஸ். நீங்கள் முன்னுல் புறப்பட்டுச் செல்லுங்கள். வேலை முடிந்ததும் நேராக வந்து விடுகிறேன்'' என்ருன் பிரபு.

பாலசந்தர் அவனை வற்புறுத்தவில்லை. ஹேமாவைப் பார்த்து, அவள் நிலைமையை உணர்ந்து கொண்டால், தன்னுல் ஏதாவது செய்ய முடியும்என்றுபிரபு உறுதியாகவே கூறினுன். அவனுடைய பேச்சில் பாலாவுக்கு எப்படியோ பிடிப்பு ஏற்பட்டு விட்டது. ஹேமாவை அவன் பார்ப்பதற்கு வசதியாக பாலசந்தர் முன்கூட்டியே வந்து காத்திருக்கிருன்.

பிரபு வந்து சேர்ந்தான்.

வரவேற்பறையில் உட்கார்ந்து பாலாவும் அவனும் பேசிக் கொண்டிருந்த போது ஹேமாவின் அம்மாவும் அப்பாவும் வந்தார்கள். பிரபுவை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினுன். இருவரும் வியப்போடு அவனைப் பார்த்தார்கள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு பாலசந்தரைப் பின்தொடர்ந்து அறைக்குச் சென்ருன் பிரபு.

ஹேமா அவர்களைப் பார்த்தாள். பிரபு ஆவலோடு அவளைக் கவனித்தான்.

''உட்காருங்கள், பிரபு'' என்று நாற்காலியை இழுத்துப் போட்டான் பாலசந்தர்.

ஒரு நிமிட மௌனத்திற்குப் பிறகு ஹேமா படபடப்போடு அவர்களைப் பார்த்தாள். தலையைத் தாழ்த்திக் கொண்டாள். எதுவும் புலப்படாதவன் போல் பிரபு உட்கார்ந்திருந்தான். ஆனுல் இதயத்தில் நெகிழ்ச்சி ஏற்பட்டிருந்தது. பாலசந்தரை நிமிர்ந்து பார்த்தா[ன்]. 'இதுதான் ஹேமாவின் நிலை' என[்று] சொல்வது போல் பதிலுக்குப் பிரபுவைப் பார்த்தான் பாலா.

''ஹே...மா...!'' —பிரபு தயங்கியபடி குரல் கொடுத்தான். பதில் இல்லை.

''ஹேமா!''—மறுபடியும் பிரபு அழைத்தான்.

ஹேமா நிமிர்ந்தாள். பிரபுவை வெறித்துப் பார்த்தாள். கண்ணீரைக் கொட்டினுள்.

பிரபு அதிர்ச்சி யடைந்தான்.

(தொடரும்)

கிறோம். படிக்கும் போதே பகுதி நேர வேலைக்குப் போகிறோம். வேலை செய்யும் பெண்கள் டிப்ளமா, டிகிரி கோர்ஸ் என்று எடுத்துப் படிக்க வசதி இருக்கிறது. முன்னேற வேண்டும் என்ற வேகம். பெற்றோர் இதற்குத் தடையாக இருப்பதில்லை'' என்று விவரிக்கிறார் குமாரி விஜயா.

“மாதுங்கா தமிழர்கள் மற்ற இடங்களுக்கு மாற்றிக் கொள்ள விரும்பமாட்டார்கள். இடத்தின் வாகு அப்படி'' என்கிறார் திரு. சீனிவாசன். வேலை கிடைக்கிறது. குழந்தைகளுக்கு நல்ல கல்வி வசதி கிடைக்கிறது. மற்ற எல்லா வசதிகளும் இருக்கும்போது இன்னொரு இடத்தை நாடமாட்டார்கள், அல்லவா?

எவ்வளவோ வசதிகள் இருந்தாலும் சில அடிப்படை வசதிகள் இல்லை என்று அவர் சுட்டிக் காட்டுகிறார்:

''மன்றங்களுக்கும் சமாஜங்களுக்கும் குறைவில்லை. ஆனால், மாதுங்கா தமிழர்களுக்காக ஒரு நல்ல கல்யாண மண்டபம் கிடையாது. அவசரத்திற்கென்று ஆம்புலன்ஸ் வைத்துக் கொண்டிருக்கவில்லை. பத்தாம் நாள் காரியங்கள் போன்றவற்றை நடத்துவதற்கு இடவசதி கிடையாது. குஜராத்தியரை எடுத்துக் கொள்ளுங்கள். பெரிய ஹால்களைக் கட்டியிருக்கிறார்கள். நமது விசேடங்களுக்கு அவர்களுடைய இடங்களை வாடகைக்கு ஏற்பாடு செய்து கொள்கிறோம். கேரளியர் சமாஜம் இருக்கிறது. அவர்களும்கூட எவ்வளவோ நல்ல காரியங்களைத் தங்களுக்கென்று செய்து கொண்டிருக்கின்றனர்'' என்று திரு. சீனிவாசன் கூறுகிறார்.

ஆயிரம் ஆயிரமாக 'பகடி'ப் பணம் கொடுத்து இடம் பிடித்து வாழ்க்கை நடத்த வேண்டிய பரபரப்பிலும், அதிகாலையிலேயே எழுந்து கடமைகளை முடித்துக் கொண்டு அவசர அவசரமாக ஆபீசுக்குப் போக வேண்டிய பரபரப்பிலும், ஓர் இயந்திரமாக நாளை விரட்டிக் கொண்டிருந்தாலும் கூட அததற்கென்று நேரத்தை ஒதுக்கிக் கொண்டு ரசனையோடுதான் மாதுங்கா தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஞாயிற்றுக் கிழமை, விடுமுறை நாட்கள் இவற்றின் அருமை இவர்களுக்குத்தான் தெரியும்!

திருச்செம்பூர் திருமுருகன் கோயிலைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

பம்பாயிலுள்ள செம்பூர், பக்தர்களிடையே திருச்செம்பூராகி யிருக்கிறது.




திரு. சீனிவாசன் கமலா ராமசாமி

பம்பாயில் முருகனுக்கு ஆலயம் அமைக்கும் பணியை மேற்கொண்டிருக்கிறது ஸ்ரீ சுப்பிரமணிய சமாஜம்.

இருபத்தைந்து லட்ச ரூபாய் செலவில் செம்பூர் முருகன் ஆலயம் உருவாகி வருகிறது.

''முருகன் கோவிலாயிற்றே, ஒரு மலைப் பகுதியில் அமைக்கலாம் என்று முயற்சி செய்தோம். பம்பாயில் அது போன்ற இடம் கிடைக்காததால், மலையைப் போல செயற்கை முறையில் கோவிலை அமைத்து விடலாம் என்று திட்டமிட்டோம். கோபுரத்தோடு கூடிய கோயில் முழுவதையும் சுமார் ஐம்பதடி உயரத்தில் கட்டப் போகிறோம். 108 படிகள் ஏறித்தான் சுவாமி தரிசனம் செய்ய வேண்டும்'' என்கிறார் சமாஜத்தின் செயலாளர் திரு. பி. எஸ். சுப்பிரமணியம்: ''படி ஏறி வர முடியாதவர்களுக்கு லிஃப்ட் வசதி உண்டு.''

இப்பொழுது பாலாலயத்தில் பூஜை நடைபெற்று வருகிறது.

நூற்றுக் கணக்கான பக்தர்களின் ஆவலையும் உழைப்பையும் பார்த்தால் இரண்டே ஆண்டுகளில் செம்பூர் முருகன் ஆலயத் திருப்பணி பூர்த்தியடைந்து விடும் என்று தோன்றுகிறது.

செம்பூர் மற்றொரு மாதுங்காவாக மாறி வருகிறது. இங்கே செம்பூர்த் தமிழ்ச் சங்கமும், கலை வளர்க்கும் செம்பூர் ஃபைன் ஆர்ட்சும் உள்ளன.

மாதுங்காவிலும் செம்பூரிலும் மட்டுமல்ல, பம்பாயின் பல பகுதிகளிலும் தமிழ் மக்கள் இப்பொழுது பரவலாக இருக்கிறார்கள். அங்கெல்லாம் தமிழோடு மண்ணும் மணக்கிறது!

அடுத்த இதழில் :

கலைமாமணிகளின் கலைக்கூடம்

17

அழைக்கும் விழிகள்

ஹேமாவின் அறையில் அமைதி. அவள் படுக்கையில் ஓய்ந்திருந்தாள். இரவு விளக்கின் மெல்லிய வெளிச்சத்தில் அந்த முகம் நன்றாகத் தெரிந்தது. விழிகள் மூடியிருந்தன. சற்று முன்பு தான் அவள் கண்ணயர்ந்திருந்தாள்.

கட்டிலுக்கு அருகில் பிரபு, நாற்காலியில் அமர்ந்திருந்தான். பாலசந்தர்...? ஹேமாவுக்குப் பக்கத்தில் நெடு நேரம் உட்கார்ந்திருந்து விட்டு அப்பொழுது தான் பாலா எழுந்து போயிருந்தான். எல்லாம் பிரபுவின் ஏற்பாடு.

அன்று மாலை ஹேமாவைப் பார்த்த போது ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்தும், பீதியிலிருந்தும் விடுபட்ட பிரபு சிறிது நேரம் யோசித்தான். பாலசந்தரிடம் காதோடுகாதாக எதையோ சொன்னான். பாலா திகைத்தாலும், பிறகு சம்மதம் தெரிவித்தான்.

அதன்படி இதோ, இங்கே, பிரபு ஹேமாவின் அருகில்... பாலசந்தர் எங்கும் போய்விடவில்லை. அறையிலேயே கட்டிலுக்கு அப்பால் வைக்கப்பட்டிருந்த ஸ்கிரீனுக்குப் பின்னால் குறுகுறுக்கும் நெஞ்சோடு நின்றிருந்தான்! ஹேமாவையும் பிரபுவையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். மனப் போராட்டம் நிறைந்த ஒரு மௌன நாடகம் நடப்பது போல் இருந்தது. ஆனால் அது பாலாவை ஓய்ந்திருக்க விடவில்லை. எங்கோ விரட்டிச் சென்றது.

பனிப் புயலாக மறுபடியும் அந்த நினைவு அவனுள்ளே சுழன்று அடித்தது.

இதைப் போலவேதான் அன்றைக்கும் ஒரு நாள்—ஓட்டல் அறை. படுக்கையில் ஹேமா துவண்டு கிடக்கிறாள். பக்கத்தில் சேகர் நிற்கிறான், ஒரு குற்றவாளியைப் போல். அவனிடமிருந்து ஒரு வார்த்தை வரவேண்டுமே... இல்லை. என்ன நடந்தது என்று அறிந்து கொள்ள முடியாத அவலத்தில் பாலசந்தர் நிற்கிறான். தாங்கிக் கொள்ள முடியாத அதிர்ச்சியில் அவன் தவியாய்த் தவிக்கிறான். பிறகு ...சேகர் போய் விடுகிறான். ஹேமா வாய் திறவாமல் மௌனியாகிறாள். சதா படுக்கையில் விழுந்து கிடக்கிறாள்.

அந்தக் காட்சிகள் திரும்பத் திரும்பத் தோன்றி பாலசந்தரை அலைக்கழித்தன. ஆனாலும் ஒரு மீட்சியை எதிர்பார்த்து ஸ்கிரீனுக்குப் பின்னால் நின்றிருந்தான் அவன்.

ஹேமா அசையவோ, புரளவோ இல்லை. விழியிமைக்காமல் பிரபு அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். அடர்ந்த நீண்ட முடி, மீசை, தாடி ஆகியவற்றுக்கிடையே அவனுடைய விழிகள் இரண்டு ஒளிக் கோளங்களாக மின்னிக் கொண்டிருந்தன. பெருமூச்சு விட்டபடி அவன் நிமிர்ந்தான். அறையில் நிசப்தம். ஒரு சிறு டேப் ரிகார்டரை மெதுவாக இயங்க விட்டான். இனிமையான மெல்லிசை கேட்கத் தொடங்கியது.

அந்தச் சன்னமான இசை, பாலாவின் செவியில் நுழைந்தது. ஆனால் ஹேமாவின் காதில் விழவில்லை என்பதை பிரபு உணர்ந்து கொண்டான். அவள் நல்ல உறக்கத்தில் ஆழ்ந்திருக்கிறாள் என்பது தெரிந்தது. வால்யூமை இன்னும் சற்று வேகமாக வைத்தான் பிரபு. பாலசந்தர் திகைத்தான். முன்பு அடிக்கடி அவன் கேட்ட இசை...பரிச்சயமான இசை. இரண்டு நிமிடம்... மூன்று, நான்கு, ஐந்து... திரும்பத் திரும்ப அதே இசை.

ஹேமாவின் உறக்கத்தைக் கலைக்கும் அளவுக்கு அந்த ஒலி இருந்தது. பிரபு அதை எதிர்பார்ப்பவன் போல ஒரு வேகத்துடன்தான் உட்கார்ந்திருந்தான்.

ஹேமா மெல்லப் புரண்டாள். பட்டின் மின்னலாக இமைகள் படபடக்க அவள்



கண்ணை மெதுவாகத் திறந்தாள். அந்த இசையைக் காது கொடுத்துக் கேட்கிறாள் என்பதை பிரபு உணர்ந்து கொண்டான். எல்லாம் ஒரு நிமிடம்தான். வியப்பும், திகைப்பும், மலைப்பும் விரவிய பார்வையை நாலு பக்கமும் பரவ விட்டாள். அருகில் நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் உருவத்தை அவள் நிமிர்ந்து பார்த்ததாகத் தெரியவில்லை. கணவன்தான் அமர்ந்திருப்பான் என்ற எண்ணமாக இருக்கலாம்.

இரண்டு நிமிட அமைதிக்குப் பிறகு, ஹேமாவின் பார்வையில், சூழ்நிலையை உணர்ந்து கொள்ள விரும்பும் துடிப்பு தெரிந்தது. இசையைக் கேட்ட மருட்சியில் அவள் எழுந்து உட்கார முயன்றாள்.

இசை நின்று போயிற்று. பிரபுதான் நிறுத்தினான். அதை எதிர்பாராதவள் போல் அப்பொழுதுதான் ஹேமா நிமிர்ந்து பார்த்தாள்.

'எதிரே உட்கார்ந்திருப்பது யார்?' என்ற கேள்வி அவளைக் குடைய ஆரம்பித்திருப்பதாகப் பிரபுவுக்குத் தோன்றியது. பாலா உட்கார்ந்திருக்கவில்லை என்பதை அவள் கண்டு கொண்டாள். 'மாலையில் பாலாவுடன் .வந்த பிரபு அல்லவா? ஏன் இங்கே உட்கார்ந்திருக்கிறான்? பாலா எங்கே? எத்தனை நேரமாகத் தன்னை

அவன் பார்த்துக் கொண்டிருப்பான்?'— இன்னும் எத்தனையோ கேள்விகள் அவளை மடக்கித் திணற வைப்பதாக பிரபு கருதி ஒன். அவள் பார்வை அப்படித்தான் இருந்தது.

அவளைக் கவனிக்க விரும்பாதவன் போன்ற பாவனையில் மறுபடியும் டேப் ரிகார்டரை இயக்கிய போது, அதே இசை மீண்டும் ஒலிக்க ஆரம்பித்தது.

ஹேமா கண்ணைக் கசக்கிக் கொண்டாள். அப்படியே செவிகளை மூடிக் கொண்டாள். பிறகு தலையைப் பிய்த்துக் கொள்வது போன்ற வேகத்தில் கேசத்தில் விரல்கள் மேவின. கட்டுக் கடங்காத திகைப்புடன் அவள் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந் தாள்

எதிரே இருந்த பிரபுவை ஏறிட்டுப் பார்த்தாள். தான் தனியே இருக்கும் போது இவன் எப்படி அறைக்கு வரலாம் என்று அவள் நினைக்கிறளோ? இந்த இசை எங்கோ, எப்பொழுதோ கேட்டது போல் அல்லவா இருக்கிறது என்று நினைக்கிறளோ? ஆளையே பைத்தியமாக்கி விடுவது போல் திரும்பத் திரும்ப அதே இசை...

ஹேமா செவியை இறுக மூடிக்கொண்டாள். பார்வையில் பீதி. படபடப்பு. 'ஓ'வென்று அழுது ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும் போல் மனத்தில் தவிப்பு. குரல்தான் எழவில்லை. உறக்கத்தில் விழித்துக் கொண்டு விட்டதால் எல்லாம் ஏதோ ஒரு மையலாக அவளுக்குத் தோன்றின.

ஸ்கிரீனுக்கு அப்பால் நின்றிருந்த பாலசந்தர் அங்கே நடப்பதைக் கவனித்தபடி சிலையாகி யிருந்தான்.

டேப் ரிகார்டர் வால்யூமைக் குறைத்து விட்டு ஹேமாவைக் கண் கொட்டாமல் பார்த்தான் பிரபு. ஹேமா அவனைப் பார்க்கக் கூசினாள்.

''ஹேமா...'' என்றான் மெதுவாக.

அவள் வாய் திறக்கவில்லை. ஆனால், மனம் குமுறியது.

''ஹேமா... என்ன பார்க்கிறீங்க?... ஏன் பேசமாட்டேங்கிறீங்க?... என்னைத் தெரியலை?... நான்... நான்... '' என்று சன்னமான தொனியில் அவன் சொன்ன தெல்லாம் ஹேமாவின் செவியில் விழுந்தது.

மறுபடியும் டேப் ரிகார்டரின் ஒலி.

''ஹேமா, இது உங்களுக்குப் பிடிச்ச மியூஸிக் இல்லையா?''-பிரபு கேட்டான்.

மௌனம்.



- ராஜ்கபூருக்குத் தபேலா, டோலக், கபாஷ், ஹார்மோனிகா ஆகிய எல்லா வாத்தியங்களும் வாசிக்கத் தெரியும்.
- அவர் கல்லூரியில் படித்ததில்லை. ஆனால் திரைப்படப் பிடிப்பில் 'கௌரவ' டிகிரி வாங்கியிருக் கிறார்.
- அவருடைய பிறந்த நாளான டிசம்பர் 14-ம் தேதியன்று ஆர். கே. ஸ்டுடியோவில் தொழி லாளர்கள் அனைவருக்கும்

''எனக்குத் தெரியும். இது உங்களுக்கு ரொம்பப் பிடிக்கும். மறைக்காமெ சொல்லணும்... இதை அடிக்கடி கேட் பீங்க இல்லையா? சொல்லுங்க... சொல் லுங்க...'' என்று அவன் குரல் அதிர அதிர அந்த இசையின் வேகமும் அதிகரித்து, அந்த அறையில் எதிரொலி மோதியது.

ஹேமா கண்ணை மூடிக் கொண்டாள். காதை அடைத்துக் கொண்டாள். தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண் டாள். அந்த இசை, அறையில் மட்டு மல்ல, அவள் நெஞ்சிலும் எதிரொலித் தது. அலைக்கழித்தது.

''ஹேமா...''—பிரபுவின் குரல்.

ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது அவளுக்கு. மெதுவாக வாயசைத்தாள்.

''போ... போ... போயிடு...''என்று அலற முயன்றாள். ஆனால் குரல் அடங்கி ஒலித்தது.

''இல்லை...போக மாட்டேன் ஹேமா. ...இங்கேயேதான் இருப்பேன். என்னை ஏன் போகச் சொல்றீங்க?'' என்றவாறு

விடுமுறை தந்து, போனஸும் பரிசுகளும் அளிக்கிறார்.

- ராஜ்கபூர் தரையில் மெத்தையை விரித்துத்தான் படுப்பது வழக்கம். கட்டிலில் படுப்பதே இல்லை. வெளிநாடுகளுக்குப் போனால் கூட ஓட்டல்களில் அப்படித்தான் படுத்துக் கொள்வாராம்!
- மாலை வேளையில் குளித்தபின் அறையில் ஊதுவத்தி கொளுத்தி, கண்மூடி கொஞ்ச நேரம் மௌனமாக இருப்பார். அதுதான் அவர் பிரார்த்தனை.
- அவருடைய அறையில் மூன்று நடிகைகளின் படங்கள்தாம் இடம் பெற்றிருக்கின்றன. அவர்கள்: நர்கிஸ், வைஜயந்திமாலா, பத்மினி.
- இப்போது வெளிவந்துள்ள 'பாப்பி' அவருடைய 13-வது தயாரிப்பு. ஆனாலும் அது அதிருஷ்டகரமானதாகவே இருக்கும் என்று நினைக்கிறார். "'மேரா நாம் ஜோக்கர்' என் வாழ்க்கையின் உழைப்பு. (Life's labour) 'பாப்பி' என் காதலின் உழைப்பு (Love's labour)" என்கிறார் அவர்!

பிரபு எழுந்தான். கொஞ்சம் முன்னேக்கி வந்து நின்றான்.

"போ... வெளியே போ ... போ!" —அவள் குமுறினாள்.

"ஹேமா, இந்தப் பாட்டை நிறுத்தட்டுமா?" என்று கேட்டவாறு டேப் ரிகார்டரை அவன் நிறுத்தியபோது, மருட்சியோடு விழிகளை உயர்த்தினாள் ஹேமா.

இசை நின்றது. ஆனால் ஹேமாவின் எண்ணம் சுழன்றது. அந்த மௌனத்திலிருந்து பிரபு அதைப் புரிந்து கொண்டான்.

சில நிமிட அமைதிக்குப் பிறகு, 'ஹேமா' என்ற அழைப்புடன் இன்னும் அருகில் வந்தான் பிரபு. அவன் நெருங்கி வந்து நிற்பதைக் கண்ட ஹேமா, பதற்றமடைந்தாள்.

"ஹேமா, இதோ பாருங்கள்......" என்றான் அவன்.

பதற்றத்துடன் குழப்பமும் சேர்ந்து கொண்டது. எப்பொழுதோ கேட்ட குரல் போல் இருந்தது. அவள் மயங்கினாள்.

"ஹேமா...!"

"போ... போயிடு..."—சீற்றத்தோடு அவள் எழுந்தாள்.

அவன் இரண்டடி பின்வாங்கி டேப் ரிகார்டரைத் தட்டி விட்டான். திரும்பவும் அந்த இசை.

ஹேமா தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு தடுமாறினாள். பிரபு தயங்கவில்லை. மீண்டும் அவளை அழைத்தான்.

அடுத்த நிமிடம் ஹேமா ஆவேசத்தோடு அவனைப் பார்த்தபடி கையில் கிடைத்தவற்றையெல்லாம் அவன் மீது வீசியெறிந்தாள். பிரபு இதை எதிர்பார்க்கவில்லை. அறை விளக்கைப் போட்டான். பளிச்சென்று வெளிச்சம்பரவியது. அப்பொழுது—

ஹேமா வீசியெறிந்த கனமான ஒரு புத்தகம் பிரபுவின் முகத்தில் மோதியது. அதை அவன் தாங்கிப் பிடித்துக்கொண்டபோது, இன்னொன்றையும் தாங்கிக் கொள்ள வேண்டியிருந்தது. ஆமாம், அவன் வைத்திருந்த தாடி நழுவியிருந்தது.

மூச்சு இறைக்க இறைக்க நின்றிருந்த ஹேமா அவனை வெறித்துப் பார்த்தாள். பிரபு வைத்திருந்த தாடி...?

மருள மருள அவனைப் பார்த்தாள்.

வேறு வழியின்றி அந்தத் தாடியையும் செயற்கைத் தலை முடியையும் அவன் அகற்றினான்.

அப்பொழுது அவள் 'வீல்' என்ற அலறலுடன் கீழே விழுந்தாள்.

ஸ்கிரீனுக்குப் பின்னால் இருந்த பாலசந்தர் அங்கே பாய்ந்து வந்தான்.

"பிரபு" என்று கூப்பிட முடியாதபடி நடுக்கத்தோடு நின்றவனின் வாய், முணுமுணுத்தது: "சேகர்!"

"ஆமாம், பாலா!" என்று தணிவாகக் கூறிவிட்டுத் தலை குனிந்து கொண்டான் அந்த 'பிரபு!'

நம்ப முடியாத வியப்பில் பாலசந்தர் நின்றிருந்தான். ஹேமாவுக்கு என்ன ஆயிற்று என்ற படபடப்புடன் கீழே விழுந்து கிடந்தவளை மெதுவாகத் தூக்கிக் கட்டிலில் கிடத்தினான்.


பாலசந்தர், சேகரை நேருக்கு நேர் பார்த்தான். சேகர் பேசவில்லை. கண் கலங்கியது.

ஹேமா பரிதாபமாகப் படுக்கையில் துவண்டு கிடந்தாள்.

(தொடரும்.)

பாமாலிவ் ப்ரில்லியன்டைன்

உபயோகித்தால் என்ன வித்தியாசம் பாருங்கள்!



... நாள் முழுதும் கலையாத கவர்ச்சியான கேசம்.

பாமாலிவ் ப்ரில்லியன்டைன் உங்கள் கேசத்தைக் கலையாமல் இருக்கச் செய்கிறது. உங்களுக்கு முற்றிலும் புதிய தோற்றத்தை அளிக்கிறது. புத்தம் புதிய, ஆண்மை மிகு நறுமணம் கொண்ட



ப்ரில்லியன்டைன்-இன்றே வாங்குங்கள் பாமாலிவ் ப்ரில்லியன்டைன்.

பாமாலிவ் ப்ரில்லியன்டைன்—ஓர் ஆண்மகனுக்கு உகந்த சிகை அலங்கார சாதனம்.

PSBR.G.2.TM


நீங்கள் காத்திருந்தது இதோ கிடைக்கிறது!
புதிய, அதிக பாதுகாப்பான
மில்லர்
திருட முடியாத அமைப்புடன் கிடைக்கிறது!
மில்லர் விளக்குக்கு அதிக பாதுகாப்பாக இப்போது சங்கிலி ஒன்று கிடைக்கிறது. வேண்டியவர் வாங்கிக்கொள்ளலாம். திருடர்களின் ஜம்பம் இனி பலிக்காது.
மில்லர் விளக்கில் உள்ள டயகான் லென்ஸ் மூலம் வெளிப்படும் நீண்ட, பிரகாசமான ஒளி உங்களைப் பாதுகாக்கிறது
மில்லர் விளக்குக்கு இன்னொரு பாதுகாப்பு, உடைக்க முடியாத இரட்டை பிராக்கெட் அமைப்பாகும். இதற்கென நீங்கள் அதிகப்படியாகப் பணம் கொடுக்க வேண்டியதில்லை.
திருடர் பயம் இனி இல்லை. எண்ணெய்ச் செலவும், பாட்டரிச் செலவும் இல்லை. டயரைத் தேய்க்காமல் அதிக நாள் உழைக்கும் மில்லர் உண்மையிலேயே சிக்கனமானது. பளிச்சிடும் புதிய பெட்டிகளில் கிடைக்கிறது.
MILLER®
டிஐ மில்லர் லிமிடெட்
சென்னை 600 001
திருடமுடியாத அமைப்பு கொண்ட மில்லர்

18

விடிந்து விட்டது.

ஹேமா இன்னும் கண் திறக்கவில்லை. பாலசந்தர் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தான்.

இரவு அவள் மூர்ச்சையுற்று விழுந்ததிலிருந்து விழிக்கவே யில்லை. நேரம் ஆக ஆக பாலசந்தருக்குப் பீதி அதிகரித்தது. ஹேமாவைப் பற்றிய கவலை ஒருபுறம்; இத்தனை நாட்களுக்குப் பிறகு இப்படி ஒரு சூழ்நிலையில் சேகரின் முகத்தில் விழிக்க நேர்ந்ததே என்ற அரிப்பு ஒருபுறம். சேகரும் அப்பொழுது படபடப்புடன்தான் நின்றிருந்தான். அந்த மௌனத்தை நெடு நேரம் நீடிக்க விடாமல் சேகரே பேச ஆரம்பித்தான்:

''எக்ஸ்கியூஸ் மீ பாலா... ஹேமாவுக்கு ஆபத்து ஒன்றும் ஏற்படாது என்ற நம்பிக்கை இருக்கிறது. ஹேமா குணமடைய வேண்டும் என்ற துடிப்பில்தான் இந்த வேஷத்தில் வந்தேன். நானே வேஷத்தைக் கலைக்கு முன், தானே கலைந்து விட்டது....''— தழுதழுப்போடு சேகர் சொன்னான்.

பதில் இல்லாமல் சேகரைப் பார்த்தான் பாலசந்தர். பிறகு, ஹேமாவைக் கவனித்தான். கீழே விழுந்ததில் நெற்றியிலும் தலையிலும் அவளுக்கு அடிபட்டிருந்தது. அடி பலமாகப் பட்டிருக்குமோ என்ற அச்சம் பாலாவுக்கு. அந்த சமயத்தில் ஹேமாவின் அப்பாவும் அம்மாவும் உள்ளே வந்தார்கள். ஹேமாவையும், பாலாவையும், சேகரையும் மாறி மாறி அவர்கள் பார்த்தார்களே தவிர, என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை. சேகர் தாடி மீசையில்லாமல் நின்றது அவர்களுக்கு வியப்பாக இருந்தது.

''ஹேமாவுக்கு என்ன ஆயிற்று?'' என்று அப்பா கேட்டார்.

''ஒரு டாக்டரை உடனே அழைக்க வேண்டும்'' என்றான் பாலா.

''இதோ, இவர்...!'' என்று அவர் சேகரைச் சுட்டிக் காட்டிய போது, ''இன்னொரு டாக்டர் வரட்டும்!'' என்றான் பாலசந்தர்.

டாக்டர் அழைக்கப்பட்டார். ஹேமாவைப் பார்த்து விட்டு 'இஞ்செக்ஷன்' கொடுத்தார்.

''தொல்லை கொடுக்க வேண்டாம். நன்றாகத் தூங்கி எழுந்தால் சரியாகிவிடும்'' என்று சொல்லி விட்டுப் போனார்.

அப்பொழுதுதான் நல்ல மூச்சுவந்தது பாலாவுக்கு.

''நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நான் ஹேமாவின் பக்கத்தில் இருக்கிறேன்'' என்றாள், ஹேமாவின் தாய்.

பாலாவும் சேகரும் அங்கிருந்து நகர்ந்தார்கள். அறைக்கு வந்த பிறகும் தனக்கும் பாலசந்தருக்குமிடையே ஒரு திரை விழுவதை விரும்பாத சேகர், தானாகவே பேச்சைத் துவக்கினான்:

''என் உருவத்தை மறைத்துக் கொண்டு உலவலாம். ஆனால் உள்ளத்தை மறைக்க முடியவில்லை. நெஞ்சில் இருப்பதையெல்லாம் கொட்டித் தீர்க்க நேரம் பார்த்திருந்தேன். அந்த நேரம் வந்து விட்டது'' என்றான் சேகர்.

'சொல்லலாம்' என்பதற்கு அடையாளமாக பாலா முகத்தை உயர்த்தினான்.

''குற்றவாளியாக என்னைக் கருதக்கூடும். நம்பிக்கைத் துரோகம் இழைத்தவனாக நினைக்கலாம். குற்ற உணர்ச்சியோ, கொந்தளிப்போ என்னை ஆட்டிப் படைக்கவில்லை. குற்றம் [illegible]ந்திருந்தால்தானே, [illegible]ழம்புவதற்கு?''— சேகர் நிதானமாகச் சொன்னான்:

பாலா நிமிர்ந்தான். சேகர் சொன்னது இது தான்:

காஷ்மீர் ஓட்டலில் ஓய்வாகச் சாய்ந்திருந்தான் சேகர். பகலில்

தூங்கும் பழக்கம் அவனுக்குக் கிடையாது. ஹேமாவும் பாலாவும் வேறோர் அறையில் இருந்தார்கள். ஓய்வெடுத்துக் கொண்ட பிறகு எழுந்திருப்பார்கள் என்று நினைத்து சேகர் அந்த அறையை நோக்கிச் சென்றான்.

கதவருகே சென்ற போது உள்ளே இசை ஒலித்துக் கொண்டிருந்தது. டேப் ரிகார்டர் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது சேகருக்குத் தெரியும். ஹேமாவுக்குக் கொஞ்சம் இசை ரசனை உண்டு. விருப்பமான இசைகளையும் பாடல்களையும் பதிவு செய்து வைத்திருந்தாள். அவற்றைக் கேட்டுக் கொண்டிருப்பது ஹேமாவுக்கு ஒரு பொழுது போக்கு.

கதவை மெதுவாகத் தட்டினான் சேகர்.

பதில் இல்லை. யாரும் கதவைத் திறக்க வரும் சுவடும் கேட்கவில்லை. வேகமாக விரல்களைக் கதவில் பதித்தபோது தானாகவே அது திறந்து கொண்டது; தாழிடப் பட்டிருக்கவில்லை.

சேகர் உள்ளே எட்டிப் பார்த்தான்.

பாலாவைக் காணவில்லை. படுக்கை காலியாக இருந்தது. ஹேமாவும் பாலாவும் வெளியே புறப்பட்டுச் சென்றிருப்பார்களோ என்ற கேள்வியுடன் அவன் நின்றான். டேப் ரிகார்டர் இயங்கிக் கொண்டிருந்தது. அதை நிறுத்தாமல் போயிருப்பார்களோ?

யோசனையோடு சேகர் நின்றிருந்த போது மெல்லிய முனகல் ஓசை கேட்டது. செவிகளைத் தீட்டிக் கொண்டான். அந்த ஓசை நன்றாக எட்டியது. திடுக்கிட்டுப் போனான். ஹேமாவின் முனகல் அல்லவா? அவள் எங்கே யிருக்கிறாள்? ஒரு வேளை பாத் ரூமில்...?

பதற்றத்தோடு அறைக்குள் வந்தான். கட்டில், சோபா எல்லாமே அப்படி அப்படியே கிடந்தன.

பாத்ரூமை நோக்கி ஓடினான் சேகர். மூடப்படாமல் இருந்த அந்தக் கதவைத் திறந்த போது—

ஹேமா தரையில் விழுந்து கிடந்தாள். தலையில் பலத்த அடி விழுந்து நினைவிழந்து கொண்டிருக்கிறாள் என்பதை நொடியில் உணர்ந்து கொண்டான் சேகர். ஹேமாவுக்கு என்ன ஆயிற்று என்பதுஅவனுக்குப் புரியவில்லை. பாத்ரூம் விளக்கு எரியவில்லை. கதவை விரியத் திறந்தான். அறை வெளிச்சம் அங்கே ஊடுருவியது. அந்த மெல்லிய வெளிச்சத்தில் குளியலறையை நோட்டம் விட்டான். கதவுக்குப் பக்கமாக சுவரில் இருந்த மின்சார ஸ்விட்ச் போர்டு பளிச்சென்று கண்ணில் பட்டது. அவ்வளவுதான்...சேகருக்கு நிலைமை புரிந்து விட்டது. பலமான மின்சார அதிர்ச்சிக்கு ஆளாகித்தான் ஹேமா கீழே



விழுந்து அடிபட்டுக் கிடக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டான். ஸ்விட்சை நிறுத்திவிட்டு ஹேமாவை அவன் தூக்கினான். விழிகள் மூடியும் மூடாமலும் இருந்த ஹேமாவுக்கு கொஞ்சம் நிதானம் இருந்தது. சேகர் தன்னைத் தாங்கிப் பிடித்துக் கைகளில் வைத்திருப்பதை உணர்ந்தவள், விடுபட விரும்பும் துடிப்பில் துள்ளினாள். அவளைக் கட்டிலில் கிடத்தினான் சேகர்.

''ஹேமா...ஹேமா...'' என்று ஆதுரத்தோடு அழைத்தான் அவன். அவளிடமிருந்து பதில் கிடைக்கவில்லை.படபடப்பில் அவளுடைய விழிகள் சிறகடித்துக் கொண்டன. பிரமை பிடித்தவள் போல் அவளுடைய பார்வை இலக்கின்றித் தடுமாறியது. அலங்கோலமாக அவள் படுக்கையில் கிடந்தாள்.

அப்பொழுதுதான் பாலசந்தர் உள்ளே நுழைந்தான். மனைவி படுக்கையில் துவண்டு கிடப்பதையும், பக்கத்தில் சேகர் ஒரு குற்றவாளியைப் போல் நிற்பதையும் பார்த்துவிட்டு நடு நடுங்கிப் போனான்.

நடந்ததை பாலசந்தரிடம் எடுத்துச் சொன்னாலும் அவன் நம்புவானா என்ற இக்கட்டான நிலையில் சேகர் அப்பொழுது தவித்தான். ஹேமா அதிர்ச்சியிலிருந்து மீண்டதும் என்ன நடந்தது என்பதை நிச்சயம் பாலாவிடம் கூறுவாள் என்று சேகர் எதிர்பார்த்தான். ஆனால் ஹேமா பிரமை பிடித்தவள் போல் ஆகியிருந்தாள். மேலும் அவர்களுக்கு மத்தியில் இருப்பதை விரும்பாத சேகர் கிளம்பி விட்டான். நிலைமை தெளிவடையும் வரையில் பாலாவின் முகத்தில் விழிப்பதை சேகர் விரும்பவில்லை. ஆனால் ஹேமாவின் உடல் நிலையையும், பாலாவின் தொழில் நிலையையும் அறிந்து கொள்ளும் துடிப்பு, அவனிடமிருந்து அகலவில்லை. எங்கு சென்றாலும் அதை அறிந்து கொள்ளக் கூடிய ஏற்பாடுகளை சேகர் செய்து வைத்திருந்தான்.

இரவு வெகு நேரம் சேகர், பாலசந்தரிடம் பேசினான். கனத்துப் போயிருந்த பாலாவின் மனத்திலிருந்து [illegible]மை மெல்ல மெல்ல இறங்[illegible]க் கொண்டிருந்தது. சந்தேகத் திரை விலகிப் போயிற்று.

ஹேமா விழித்தாள். மலர மலர சுற்றுமுற்றும் பார்த்தாள். அருகே அமர்ந்திருந்த கணவனைப் பார்த்ததும் விழிகளில் வியப்பு விரிந்தது.

''நீங்களா...?''- முணுமுணுத்தாள்.

''ஆமாம், ஹேமா...!''

''ராத்திரி..'' என்று அவள் எதையோ நினைவுபடுத்த முயன்றாள்.

''ராத்திரியிலிருந்து நீ விழிக்கவே இல்லை. நன்றாகத் தூங்கினாய்...''

''அப்போ பக்கத்தில் யாரோ?...''

படகின் மறைவில்..

மெரீனா. அலை பாயும் கடலும், அதை எதிர்த்து அலை பாயும் மனமும், அலை அலையாய்க் கூடும் கூட்டமும்.

தூரத்தில் தனியாக ஒரு படகு. அதன் மறைவில் இரு உருவங்கள்.

மாதவனின் கரம் லட்சுமியின் கரத்துடன் இணைய முற்படுகிறது.

''கையை விடுங்க!...... யாராவது பார்த்தா சிரிக்கப் போறாங்க.''

''லட்சுமி! இந்த இடத்துக்கு யாரும் வரமாட்டா. நாம இத்தனை நாளா தனியா பேசாம அடைச்சு வச்சிருந்ததெல்லாம் இன்னைக்கிப் பேசிடலாம்''— மாதவனின் கண்களில் குறும்பு தெரிந்தது.

சிறிது நேரம் மௌனம் நிலவுகிறது.

''லட்சுமி, ஏதாவது பேசேன். இத்தனை நாள் பிளான் போட்டு இன்னிக்குத்தான் அரங்கேற்றம் முடிஞ்சுது. நீ என்னடான்னா பேச மாட்டேங்கறியே. பேசு லட்சுமி.''

''பேசட்டா?... உம்... அப்புறம் தப்பா சொல்லக் கூடாது. ஆமாம், நம்ம கல்யாணம் எப்போ?''— சுவாரசியமாகக் [illegible]டாள் லட்சுமி.

''அடேடே! பாத்தியா, சொல்ல மறந்துட்டேனே! அடுத்த வாரம் புதன் கிழமை. இன்விடேஷன் கூட வந்தாச்சு. நான்... சிம்பிளா பண்ணலாம்னு பார்த்தா, எல்லாருமா அமக்களம் பண்றா லட்சுமி.''

''அதுவும் சரிதான்!''

''எதுவும் சரி? விலைவாசியெல்லாம் ஏகமா ஏறிக் கிடக்கு.''

''இதோ,இந்த சேகர்தான்...''என்று அங்கே வந்து நின்ற சேகரை, பாலசந்தர் சுட்டிக் காட்டினன்.

ஹேமாவின் இமைகள் சிறகடித்துக் கொண்டன. அவள் எழுந்து உட்கார முயன்ருள்.

''வேண்டாம், ஹேமா... நீ ஓய்வாக இருக்கவேண்டும்'' என்ருன் பாலசந்தர்.

ஹேமாவிடம் ஏதோ ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. அவள் அதிர்ச்சி யிலிருந்து மீண்டிருக்கிருள் என்பதை பாலாவும் சேகரும் உணர்ந்து கொண் டார்கள். படிப்படியாக அவள் குண மடைந்து விடுவாள் என்ற நம்பிக்கை ...களின் நெஞ்சில் உயர்ந்தது.

''மிஸ்டர் பிரபு...!''- பாலசந்தர் அழைத்தான்.

''பிரபு வேஷம் எப்பொழுதோ கலைந்து விட்டது. இனி நான் சேகர்...!'' என்ருன் சேகர் சிரித்தபடி.

''வேஷம் என்று நம்ப முடியவில்லை, சேகர். அத்தனை பொருத்தம். என்னை நன்ருக ஏமாற்றி விட்டாய்...என்னை மட்டுந்தானு?'' என்று பாலா வியந் தான்.

''யாரையும் ஏமாற்றவில்லை. ஆனல் ஏமாறுவதிலிருந்து சிலரைக் காப்பாற்றி யிருக்கிறேன்!''

''என்னையும் சேர்த்து. இல்லையா சேகர்?''

''உண்மைதான் பாலா. ஒரு பெரிய தொழில் திட்டம் என்ற போர்வையில் உன்னைப் படுகுழியில் தள்ளிவிடச் சதி நடந்தது. சமயத்தில் அதைக் கண்டு பிடித்தேன்.''


''அது எப்படி முடிந்தது, சேகர்?''— பாலசந்தர் வினவினன். விமலாவைச் சந்தித்தது, ராம்நாத்துடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டது, பிரபு வேஷத் தில் அவரையும் நாராயணையும் சந்தித் தது-எல்லாவற்றையும் சேகர் விவரித் தான்.

''இவர்கள் மட்டுமல்ல, உன்னைப்பற்றி யும், ஹேமாவைப் பற்றியும், ஆபீசில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றி யும் உடனுக்குடன் எனக்குச் செய்தி கிடைத்து வந்தது. பிரபு என்ற பெயரில் ஒரு வர்த்தகப் பிரதிநிதியாக நடித்தேன். வியப்பாக இருக்கிறது அல்லவா?''

''ஆமாம், சேகர்...!''

''மானேஜர் சங்கரன் பாவம், மிகவும் நல்லவர். அவருடன் அவ்வப்போது ரகசியமாக டெலிபோனில் பேசிக் கொண் டிருந்தேன். என் மேல் அவருக்கு அத் தனை நம்பிக்கை!'' என்றவாறு சேகர் சிரித்தான்.

''சரியான பிரபுதான் நீ'' என்று கூறியபடி பாலாவும் சிரித்தான்.



''கல்யாணம்கிறது மங் களகரமான நிகழ்ச்சி.அது ...ழ்க்கைல ஒரு முக்கிய ...ன சம்பவம். அதுல, எதையுமே குறைக்கக் கூடாதுன்னு...''

''அது சரி.''

''அப்புறம்... நாம கல்யாணத்துக்கப்பறம் தனிக் குடித்தனம் போயிட லாம்னு...''

''என்ன லட்சுமி?''

''என்னவா?கல்யாணத் துக்கப்பறம், நாம தனிக் குடித்தனம் போயிடலாம் னேன்.''

''கூட்டுக் குடித்தனம் வேண்டாங்கறியா? இந்த விலைவாசியெல்லாம் ஏறிக் கிடக்கறச்சே உன்னலயும் என்னலயும் சமாளிக்க முடியாது லட்சுமி.''

''இன்னும் எத்தனை நாளைக்குத்தான் அவா மேல பாரமா யிருக்கப் போறேள்?''

''எனக்கு அவாளை, அது வும் ரகுவையும், சுமியை யும் பிரிஞ்சு வர முடியாது லட்சுமி.''

''ஆமாம்! எனக்கு மட் டும் பந்தபாசம் இல்லையா? நாம எங்கே போயிடறோம்? இங்கேயே மெட்ராசுலயே தானே இருப்போம்!......

வேணும்னு அடிக்கடிபோயி பார்த்துக்கறது.''

''எனக்கென்னவோ.... லட்சுமி....''

''எதுவானலும் சரி... நாம காலத்தை ஓட்டிக்க லாம். ரகுவையும், சுமியை யும் சந்தோஷமா வச்சுக் கலாம். அதுகளுக்கு நாம ஒரு பாரமா இருக் கலாமா?''

''நீ சொல்றதும் சரி தான் லட்சுமி... சரி, சரி. கிளம்பு.பஸ்ஸைப்பிடிச்சுப் போகணுமே!''

அறுபதாண்டு மண விழாவை நெருங்கிக் கொண்டிருக்கும் லட்சுமி, மாதவன் தம்பதியர் பஸ் ஸைப்பிடிக்க விரைந்தனர்.

—விக்த்.

ராம்நாத் கர்ஜித்தார்.

விமலா நடுநடுங்கி நின்ருள். எதிர் யாராமல் அவர் வந்தார். எதையெல் லாமோ பேச ஆரம்பித்தார். அவள் வாயடைத்துப் போனுள். பதில் சொல்ல முடியாத தவிப்பு.

''உன்னை நம்பினேன். உன்னை மைய மாக வைத்து எத்தனையோ திட்டங்களை உருவாக்கினேன். ஒரு துரோகியைப் போல் அல்லவா நடந்து கொண்டிருக் கிருய்...''—ஆத்திரம். ஆவேசம். விமலாவைச் சுட்டெரிப்பது போல் ராம்நாத் பார்த்தார்.

''விமலா, இப்பொழுதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. இனியாவது நன்ருக நடிக்கக் கற்றுக் கொள். பாலசந்தரைக் கைக்குள் போட்டுக் கொள். அதனுல் உனக்கு மட்டுமல்ல, எனக்கும் நன்மை... உன்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்தவன் நான். மறந்துவிடாதே.''

''போதும், நிறுத்துங்கள். என் வழியை நான் முடிவு செய்துவிட்டேன். என்னை விட்டு விடுங்கள்''—விமலா விம்மினுள்.

''இத்தனை நாள் விட்டு வைத்திருந் தேனே எதற்காக? நான் நினைத்திருந்தால் உன்னைக் களங்கப்படுத்தி, உன்னை வியா பாரப் பொருளாக என்றைக்கோ மாற்றி யிருப்பேன். நீ ஒத்து வராவிட்டால், அதைத்தான் இனி செய்யப்போகிறேன்'' என்று ராம்நாத் முழங்கினுர்.

''அது முடியாது மிஸ்டர் ராம்நாத்!'' என்ற குரல் கேட்கவே அதிர்ச்சியுடன் ராம்நாத் திரும்பினுர்.

சேகர் குறும்புச் சிரிப்புடன் அப் பொழுதுதான் அங்கு வந்து நின்ருன்.

''யார் நீ? இங்கே ஏன் வந்தாய்?''— சீறினுர்.

''என்னைத் தெரியவில்லை? உங்களுக்குச் சில சமயங்களில் என்ன பேசுகிருேம், யாரைப் பார்க்கிருேம் என்பதே தெரிவ தில்லை. இல்லையென்ருல், போதையில் எத்தனையோ ரகசியங்களைக் கொட்டுவீர் களா? பிரபுவை மறந்து விட்டீர்களா? சேகரை நினைவில்லையா? எல்லாம் நான் தான்.''

ராம்நாத் சேகரைப் புரிந்து கொண் டார்.

''சேகர், யு கெட் அவுட்'' என்று அதிர்ந்தார்.

''இல்லை, மிஸ்டர் ராம்நாத். நான் அதற்காக வரவில்லை. விமலாவை அழைத்துப் போவதற்காக வந்திருக் கிறேன்.''

''அவள் என் மகள்!''

''நீங்கள் எதுவும் சொல்லத் தேவை யில்லை. மேஜர் என்ற போர்வையில் நீங்கள் செய்து வந்துள்ள அத்தனை காரி யங்களுக்கும் ஆதாரம் என் கையில் இருக் கிறது. விமலாவிடம் இத்தனை நேரம் பேசிக் கொண்டிருந்தீர்களே, அதுவும் இதோ பதிவாகியிருக்கிறது. நீங்கள் தப்ப முடியாது. நாராயணும் அப்படித் தான். விமலாவை மறந்து விடுங்கள். அவள் இனி என் சொத்து!''

''என்ன உளறுகிறீர்கள்?'' என்ருர் ராம்நாத், குழப்பத்துடன்.

''என்ருே எனக்கு உரிமையாகி இருக்க வேண்டியவள்... உங்களால் கடத்திச் செல்லப்பட்டவள். சேர வேண்டிய இடத்திற்கு வந்து விட்டாள்.''

''ஆமாம் மிஸ்டர் ராம்நாத். விமலா இனி என் செக்ரட்டரி அல்ல. சேகருக்கு மனைவியாகப் போகிறவள்'' என்றவாறு உள்ளே வந்தான் பாலசந்தர்.

ராம்நாத் தலை குனிந்துவிட்டார்.

விமலாவின் கண்களில் நீர் வழிந்தது. இன்ப நெடுமூச்சு இழைந்தது.

*

ஹேமாவை ஆவலோடு அள்ளி அணைத்துக் கொண்டான் பாலசந்தர். மேகத் திரை விலகிய நிர்மலமான ஆகா யத்தைப் போல் அவள் முகத்தில் ஒரு தெளிவும் பொலிவும் தோன்றியிருந்தன. எத்தனையோ நாட்களுக்குப் பிறகு ஏற்பட்ட மாறுதல் அல்லவா?

ஹேமா பூரணமாகக் குணமடைந் திருந்தாள். ஓர் அதிர்ச்சி அவளை எப்படி யெல்லாம் ஆட்டிப் படைத்துவிட்டது!

பாலசந்தரின் அன்புப் பிடி இறுகியது.

''விடுங்கள், யாராவது வந்துவிடப் போகிருர்கள்'' என்ருள் அவள்.

''யாரும் வரமாட்டார்கள், ஹேமா.''

''சேகர்...'' என்ருள் அவள் குறும்பாக.

''சேகர் வரமாட்டான். விமலாவுடன் ஹனிமூனுக்கு அல்லவா போயிருக்கிருன்! பாவம், விமலா, என்ன பாடு படுகிருளோ'' என்றவாறு பாலசந்தர் சிரித்தான்.

ஹேமாவும் சிரித்தாள்.

[முற்றும்]

தென்றலுக்காக ஒரு புயல்

குமாரி பிரேமலதா



சாத்துக்குடிப் பழத்தை உரித்துச் சுளை பிரித்து எடுத்துக் கொண்டு வந்தேன். புத்தகம் படிப்பதில் மும்முரமாக இருந்தார் அவர். நான் குரல் கொடுத்ததும், சிரித்துக் கொண்டே திரும்பினார்.

''நீயே வாயில் போட்டுவிடேன் சுலோ! என்னால் எழுந்து போய்க் கையைக் கழுவிக் கொண்டு வர முடியாது'' என்று வாயைத் திறந்தார். முகத்தைப் பொய்க் கோபமாகச் சுளித்துக் கொண்டு, ஒவ்வொரு சுளையாக வாயில் போட்டேன்.

''இப்படி ஒரு சோம்பலா? ஐந்து நிமிஷம் புத்தகத்தைக் கீழே வைத்து விட்டுப் போனால்தான் என்ன?'' என்று கடிந்து கொண்டேன். அவருடைய கன்னத்தில் ஒரு கிள்ளு. பாக்கியைத் தூங்க வரும் போது பார்த்துக் கொள்ளலாம்.

ஆபீசிலிருந்து திரும்பினால் அவருக்குப் புத்தகம் தான் துணை. நான் எங்கேயாவது போய்விட்டு வரலாம் என்று சொன்னால், ''நீ போய்விட்டு வாயேன்''! என்று செல்லமாகக் கெஞ்சி அனுப்பி விடுவார். வெளியில் கவனிக்க வேண்டிய வீட்டுப் பொறுப்புகள் எல்லாம் — கடைக்குப் போவது, பாங்கிற்குப் போவது, வாடகை கொடுப்பது, டாக்டரிடம் போவது—அவ்வளவும் என் தலையில் தான்.

''நீங்கள் கொஞ்சம் பகிர்ந்து கொள்ளக் கூடாதா?'' என்று கேட்பேன். ''நீதான் எல்லாவற்றையும் கச்சிதமாகப் பார்த்துக் கொள்கிறாயே! நான் என்ன செய்யட்டும், சுலோ? ஆரஞ்சுப்பழம் வாங்கிக் கொண்டு வந்து, சுளை உரித்து நீ வாயில் போட்டால், நான் சாப்பிடத் தயார்'' என்று கண்ணைச் சிமிட்டுவார்.

''வெட்கமாக இல்லை?'' என்று நான் அவருடைய தலையில் குட்டுவேன்.

எங்கள் வீட்டுக்கு எதிரே, மாடியில் ஒரு பகுதி காலியாயிற்று. அங்கு வந்து சேர்ந்தான் அந்த வாலிபன். இளமையின் வனப்பு: களை கட்டும் தோற்றம். சற்று நிமிர்ந்துதான் பார்க்க வேண்டும்; அத்தனை உயரம். டென்னிஸ் பனியன் போட்டுக் கொண்டு காற்றாடத் திறந்த மாடியில் வந்து நிற்பான். தோள் பிடிப்பிலும் கைகளிலும் ஓர் அசாதாரண மெருகு தெரியும்.

வந்து சேர்ந்த இரண்டாம் நாள். எங்கள் வீட்டுக்கு வந்திருந்தான், ஸ்கூட்டர் ரிப்பேருக்காக ஒரு திருப்புளி இருக்குமா என்று கேட்டுக் கொண்டு. அப்படியே உட்கார்ந்து அவரிடம் ஐந்து நிமிஷம் பேசிவிட்டுப் போனான். 'கலகல'வென்று கொட்டும் பேச்சு. பெயர் கிருஷ்ணன். கம்பெனி வேலை.

காலையில் ஸ்கூட்டரில் வேலைக்குப் போய்விடுவான். மாலையில் அறைக்கு

வந்து உடையை மாற்றிக் கொண்டு, டென்னிஸ் ஆடக் கிளம்பிப் போய் விடுவான். எட்டு மணிக்கு மேல் வந்து அவரைப் பிடித்துக் கொண்டு விடுவான். அரை மணி நேரமாவது பேசிவிட்டுப் போகா விட்டால், அவனுக்குத் தூக்கம் வராது போல் இருக்கிறது.

அரசியல், சினிமா, கிரிக்கெட் எல்லாம் பேசுவான். அவரும் புத்தக விரலை எடுக்காமல், ஒரு மரியாதைப் புன்னகையுடன் கேட்டுக் கொண்டிருப்பார். எனக்குக் கூடத் தோன்றும், 'வேலை மெனக்கெட்டு ஒருவர் வந்து இத்தனை சுவாரசியமாகப் பேசி, வம்புக்கு இழுத்தால்கூட, இந்த மனிதர் இப்படி மௌனியாக உட்கார்ந்திருக்கிறாரே!' என்று.

கொஞ்சம் கொஞ்சமாக நானும் வந்து உட்கார்ந்து அவர்களோடு பேசப் பழகி விட்டேன். கிருஷ்ணனுக்குச் சரியாக நானும் வம்படிப்பேன். ''ஓ, என்னைவிட உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரிந்திருக்கிறதே! உங்களுக்கு ஈடு கொடுக்க என்னால் முடியாது'' என்று ஓர் உரிமையோடு பாராட்டுவான். எனக்குப் பெருமையாக இருக்கும்.


அன்று விடுமுறை நாள். ஆபீசில் ஏதோ வேலை என்று அவர் கிளம்பிப் போய்விட்டார். நான் வாசற் கதவைச் சும்மா மூடிவிட்டு உள்ளே குளிக்கப்



போனேன். ஓர் இந்திப் படப் பாட்டை முனகிக் கொண்டே சாவதானமாகக் குளித்தேன். பத்து நிமிஷம் போனது தெரியாது.

உள்ளாடைகள் மறைய ஒரு தேங்காய்ப் பூ டவலைச் சுற்றிக் கொண்டு வெளியே வந்தேன். எதிரே நாற்காலியில் உட்கார்ந்திருந்தான் கிருஷ்ணன். அவன் பார்வை என் தோள் வளைவையும், இடைச் சரிவையும், முழங்காலில் தெரிந்த கால் செழுமையையும் அளப்பது போல் இருந்தது. என் உடல் நடுங்கிற்று. இரு கைகளையும் குறுக்காக மடித்து நன்றாக மூடிக் கொண்டேன்.

சட்டென்று ஸ்கிரீனின் பின்னால் மறைந்து கொண்டேன். ''ஸாரி, அவர் வீட்டில் இல்லையா?'' என்று கேட்டான். நான் பதில் சொன்னதும் வாசற்கதவை மூடும் சப்தம் கேட்டது. என் நெஞ்சில் சிறு கலக்கம்.



அப்புறம், நானே என்னைத் தேற்றிக் கொண்டேன். எல்லாம் வெறும் பிரமையாக இருக்கலாம். அவன் இயல்பாக வந்திருக்கலாம். விடுமுறை நாள்தானே?

இருந்தாலும் அன்று இரவு கிருஷ்ணன் பேச வந்தபோது எனக்குக் கொஞ்சம் கூச்சமாகத்தான் இருந்தது. அவன் என்னைத் தூண்டிப் பேச வைத்தும் அந்த அமைதியின்மை தெளியவில்லை. இரண்டு மூன்று நாட்கள் தேவைப்பட்டன, முன்போலப் பழகுவதற்கு.

''மதுரையில் எங்கள் ஆபீஸ் சம்பந்தமான கேஸ் ஒன்று வந்திருக்கிறது. செவ்வாய்க்கிழமை இரவு நான் போக வேண்டும். வியாழக்கிழமை காலையில் வந்து விடுவேன்'' என்று அவர் சொன்னார், அன்றைக்கு.

'நான் எப்படித் தனியாக இருப்பேன்?' என்று தயங்கினேன்.

''ஒரு நாளைக்குத்தானே? நான் இருந்தாலும் எல்லாம் நீ செய்துதானே வழக்கம்! ஒரு நாள் இல்லாவிட்டால் அப்படி என்ன மூளியாகத் தெரியப் போகிறது?''

''இருந்தாலும்...''

''அப்படி எதுவும் அவசரமானால் எதிர் வீட்டில் கிருஷ்ணன் இருக்கிறான். சொன்னால் கட்டாயம் செய்து கொடுப்பான்.''

ஏனோ அந்த ஆறுதல் எனக்குத் தைரியமாக இல்லை. 'நமநம'வென்று நெஞ்சில் ஏதோ துள்ளிற்று.

மாலையில் அவர் கிளம்பிப் போய்விட்டார். சாப்பாட்டைச் சீக்கிரமாக முடித்துக் கொண்டு வந்துஉட்கார்ந்துரேடியோ கேட்டுக் கொண்டிருந்தேன். சிலோன் நிலையத்தில் 'ஹிட்' ஆன இந்திப் பாட்டு ஒன்று.

''எனக்கும் ரொம்பப் பிடிக்கும் இந்தப் பாட்டு'' என்று சொல்லிக் கொண்டு, உள்ளே வந்தான் கிருஷ்ணன். எனக்கு 'திக்' என்றது. நான் சொல்லாமலேயே சோபாவில் உட்கார்ந்து கொண்டான்.



''இந்த வகுத்தல் கணக்கு பெரிய கஷ்டமா? ஒரு நிமிஷத்திலே போட வேண்டாம்?''

''நானும் பி.ஏ.பி.டியா இருந்தா ஒரு நிமிஷத்திலே போடுவேன் டீச்சர்!''

அவன் பேசிக் கொண்டிருந்தான். நான் பதில் சொல்லவில்லை. ''அவர் ஊரில் இல்லை'' என்று சொல்லிவிட்டு, உள்ளே போக எழுந்தேன். என் முதுகில் விரல்கள் பட்ட உணர்ச்சி. ஏதோ கம்பளிப் பூச்சி ஒட்டி ஊர்வதைத் தள்ளுவதைப் போலப் பட்டென்று தட்டிவிட்டேன்.

விரல்கள் விலகவில்லை. பலவந்தமாக என்னைத் திருப்பிய வேகத்தில் மேலாடை நழுவிற்று. என் மேல் உராய்ந்த உணர்ச்சி. மார்பிலும் தோளிலும் பட்ட விரல்கள்.

''சீ, விடு.''

கிருஷ்ணனின் மூச்சு நெருங்கிற்று. கழுத்து வரையில் ஏதோ நிரம்பித் ததும்புவது போல இருந்தது. கன்னத்தில் உராய்ந்தது. புருவத்தை நெருங்கிற்று. நெற்றி—பிறகு உதடு.

என் விரல்கள் அவனுடைய தோளில் பலம் கொண்ட மட்டும் அழுந்தின. ஆரஞ்சு உரிக்கும் கூரான நகங்கள், இப்போது இரத்தம் வரப் பதிந்து கொண்டு இருந்தன. ''ஆ'' என்று ஒருகணம் தூர விலகினான். கதவு திறந்தது. பெட்டியும் கையுமாக அவர் நின்று கொண்டிருந்தார்.

என்னைச் சுற்றி உலகம் சுழலுவது போல் இருந்தது. துவண்டு கீழே விழப் போன என்னை ஓடி வந்து சட்டென் தாங்கிப் பிடித்துக் கொண்டார். என்னை அவர் மெதுவாகப் பிடித்து அழைத்துக் கொண்டு போய்ப் படுக்க வைத்தது, கனவில் நடப்பது போல இருந்தது.

இரவு பத்து மணி இருக்கும். சூடான பாலை அவரே கொண்டு வந்து பருக வைத்தார். அவர் என்னை விளக்கம் கேட்கவில்லை. நானாக நடந்தவற்றைச் சொன்னேன்.

அவரை நான் ஏதும் கேட்கவில்லை. அவராகவே சொன்னார். கேஸ் தள்ளிப் போடப்பட்டு விட்டதாகத் தந்தி தாமதமாக வந்து சேர்ந்ததாம். ஆபீஸ் அட்டெண்டர் அதை எடுத்துக்கொண்டு ஸ்டேஷனுக்கு ஓடி வந்தாராம்.

இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. எதிர் வீட்டு மாடியில் பூட்டு தொங்குகிறது. போர்ஷன் காலி.

அவர் மாலையில் சீக்கிரம் திரும்பி விடுகிறார். என்னை அழைத்துக் கொண்டு வெளியே போகிறார். பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு பேசுகிறார். என் முகத்தில் தெளிவு திரும்பி இருக்கிறது, மெல்ல மெல்ல.

அன்று இரவு ஆரஞ்சுப் பழத்தை நான் எடுத்ததும் அவரே அதை வாங்கிக் கொண்டார். ''வேண்டாம் சுலோ. உன் நகங்களுக்குஇனிமேல் வேலை இருக்காது'' என்றார், கண்ணில் ஒரு சிரிப்புடன். அந்தப் பேச்சுக்குத்தான் எவ்வளவு உள்ளாழமான அர்த்தம்? இப்படியும் கூடப் பேசத் தெரியுமா இவருக்கு?

எங்கள் வாழ்க்கையில் தென்றல் திரும்புவதற்கு இப்படி ஒரு புயல் தேவைப்பட்டதா என்ன?



வண்ணக் களஞ்சியமாய்,
எண்ணிலடங்கா டிஸைன்களில்
காஞ்சீபுரம், காஷ்மீர்,
பெனரஸ், ராஜஸ்தான்
பட்டுப் புடவைகள்...
நவநாகரிக நங்கையர்க்கேற்ற
லுங்கிகள், குர்த்தாக்கள்...
அத்தனையும்
கண் கொள்ளாக் காட்சி!
இன்றே கண்டு களியுங்கள்,
களிப்புடன் வாங்குங்கள்.

ஹேண்ட்லூம் ஹவுஸ்
9, ரத்தன் பஜார்,
சென்னை 600003

FDS/HH/1939A

ஒழுங்கு தவறிப் போன சினிமா நட்சத்திரங்களுக்கு — கிடைக்கிற மரியாதை - கவர்ச்சிகூட - என் மூல நட்சத்திரத்திற்கு இல்லையாம்! ஜாதகம் செய்கின்ற சாதகம் எனக்கு முழுக்க பாதகம் செய்து விட்டது. பல கட்டங்களை வாழ்வில் காண வேண்டிய பெண்மையைப் பன்னிரண்டு கட்டம் சிறை வைத்துவிட்டது!

'ஆண் மூலம் அரசாளும்
பெண் மூலம் நிர்மூலம்!' - இந்த இரண்டே வரிகள்தான் என்னை-இன்று மீளுக்கி விட்ட தாரக மந்திரங்கள்!

எப்படியோ என் நட்சத்திரம் - சினிமா நட்சத்திரம் போலவே விளம்பரமாகி விட்டது!

'பெண் பார்க்க வருகிறார்கள்!' என்று சொன்னால் இப்போதெல்லாம் என் வீட்டில் - எவ்வித ஆரவாரமும் இல்லை. எனக்கும் எவ்விதப் பதட்ட நிலையும் இல்லை.

அவர்கள் பார்க்க உட்கார்ந்து வைப்பேன்!

அவர்கள் கேட்கப் பாடி வைப்பேன்!

ஆவி பறக்கும் காபி வைப்பேன்!

ஆவி துடிக்க காத்து நிற்பேன்!

பரீட்சை முடிவை - பரீட்சை எழுதும் போதே அறியும் மாணவி நான்! நான் ஏன் பரீட்சையைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்...?

ஜாதகத்தை வாங்கிச் செல்வார்கள்! தபால் போடுவதாகச் சொல்வார்கள்! சொன்னபடியே போட்டும்விடுவார்கள்.. இப்படி:

'எல்லாம் பிடித்திருக்கிறது! வாஸ்தவம்தான்; மூல நட்சத்திரம் என்பதால் தெரிந்தும் செய்து கொள்ள முடியவில்லை! மன்னிக்கவும்!' -தொங்குகின்ற கேள்விக்குறிக் கம்பியில் ஆயிரத்தோராவது கடிதமாக அதுவும் அமர்ந்து கொள்ளும்!

எனக்குப் பிறகு பிறந்த எதிர்வீட்டுப் பெண்கள், கோடிவீட்டுப் பெண்கள்- கல்யாணமாகி அடுத்த ஆண்டே பெற்ற குழந்தைகளை இரவல் வாங்கி அள்ளி அணைத்தும், வாரி முத்தமிட்டும் என் ஆசை வெள்ளம் ஆவியாகிக் கொண்டிருந்தது!

பைத்தியங்களைப் போலவும் - கவிஞர்களைப் போலவும் - வானத்தையும்-மலர்களையும் பார்த்தபடியே - சன்னலோரத்தில் அமர்ந்திருப்பது என் பொழுது போக்காகி விட்டது!

மேய்கின்ற செம்மறியாட்டுக் கூட்டங்களைப் போலவும் - பஞ்சுக் குவியல்கள் போலவும் தெரிகின்ற வானவெளியைத் தவிர - நான் வாழ்க்கை வெளியைப் பார்க்க முடியவில்லை!

என் பாதை நிச்சயமாகி விட்டது!



நான் பதிலாகவே பிறந்து விட்டேன்! என் வாழ்க்கையின் கேள்விக்கு மனிதர்களிடம் பதில் இல்லை!

ஊர்ஜிதம் செய்யப்பட்டுவிட்ட - சுக துக்கமற்ற - சூன்ய வெளிப் பறவையோ நான்!

இப்போதெல்லாம் குழந்தைகளைக் கூட நான் தூக்க அனுமதிப்பதில்லை! என் துயரப் பெருமூச்சின் வெப்பத்தில் அந்த மலர்கள் வாடி விடுமாம்!

செம்பரத்தம் பூப் பறித்துக் கொண்டே வாசலைப் பார்த்துக் கொண்டிருந்தேன்! திரும்பவும் இன்று அதிகாலையிலேயே பழைய படலமோ? இன்னும் முற்றுப் பெறவில்லையா? அம்மாவிற்கு இன்னும் நம்பிக்கை! ப...ய துடிப்போடு படபடக்கிருள்...!

''பாலா! வா யேண் டி! யாரு வந்திருக்கா பாத்தியோ? மாயவரத்திலேருந்து சீனு மாமாடி!''

''வாங்க மாமா!'' - சலனமும் இல்லாமல், சபலமும் இல்லாமல் உள்ளே போகிறேன்!

''மாப்பிள்ளைக்கு நல்ல - காவேரிப் பாய்ச்சலல்ல முதல் மடையிலே ஆறு ஏக்கரா நெலமிருக்கு! ஒண்டிக்கட்டை! நல்ல மனுஷன்! நம்ம பாலாவை அங்கே வச்சுடலாம்னு பாக்கறேன்! நாப்பது வயசு ஆனுலும் நாப்பது வயசா தோணுது!''

''சீனு! நீ பாத்து முடிவு செஞ்சா சரி! ஏதோ அவ வாழ்க்கை - உன்னுலை உண்டானதா இருக்கட்டும்! என்னுலை ஆனத்தை செய்யகாத்துண்டிருக்கேன்!'' சமையல் கட்டுக்கும்-சம்பாஷணை நடக்கும் இடத்துக்கும் ரொம்ப தூர மில்லை! நானும் கேட்டுக் கொண்டு தானிருக்கிறேன்!

''கட்டாயம் இந்த வரனை முடிச்சுட றேன்! மத்தது பகவான் கிருபை!''

''காபி ஆறறது மாமா!'' - எச்சரிக்கிறேன், ஆறிப்போன நான்!

''சூடா சாப்பிட்டு என்னத்தைக் கண்டோம்!'' - அலுத்துக் கொள்கிருர். எடுத்துக் கொள்கிருர்.

நிர்மலம்

— பருத்தியூர் பாலு

''அப்ப, நான் வர்றேன்! மாப்பிள்ளையை நாளைக்கே அழைச்சிண்டு வந்திடறேன்!'' - எழுந்து கொள்கிருர்.

''குனிஞ்சு போ, சீனு!'' -அம்மா வாசல் உயரத்தை வார்த்தையில் வைக்கிருள்!

பெருமூச்சோடு பிரிவுபசாரம்!

மாயவரத்து வரனுவது எனக்கு வாழ்வு வரந் தருமா?... நப்பாசை... நீண்ட நாளைக்குப் பிறகு...மீண்டும்...!

ராகு காலம் கழிகிறது. மாப்பிள்ளையோடு சீனு மாமா வருகிருர்.

இவர் போதும்! இவர் போதும்! இந்தப் பாதையில் மிதிபடும் பசலைக் கொடிக்கு!

ஆத்மாவின் குரல்...!

அடுக்களைக்குள் போக-அன்று அம்மா சம்மதிக்கவில்லை. அலங்கரித்துக் கொள்ள ஆயத்தம் செய்கிருள்!

வெகு பாடுபட்டு - கடைசி - கடைசி என்று ஏதோ ஓர் உள்ளுணர்வு வற்புறுத்த-நம்பிக்கைப் பயிர் வளர்க்க - கண்ணீர்த் தண்ணீர் முகத்திலே ஊற்றப் படுவதை - கண்ணுடி காட்டுகிறது!

ஜாதகம் என் வாழ்வைச் சாம்பலாக்க நின்ருலும் - நான் சாதகம் செய்து வைத்திருந்த - குரல் - சங்கீதம் எனக்காக ஓடோடி ஒத்துழைக்கிறது! பாடிக் காட்டுகிறேன்.

நம்பிக்கையில் நனைந்து வெளியேறும் அந்தக் குரல் நூல்கள் - அப்படியே அவர் இதயத்தைப் பின்னி விடாதா? -தவிப்போடு முடிக்கிறேன்.

''போதும்மா!'' என்ற சீனு மாமா வார்த்தையை ஏற்றுக் கொண்டு - உள்கட்டில் ஒளிகிறேன்!

அவரிடம் சிறு புன்னகை!

கனவுகள் கட்டிக் கலைத்துப் பார்க்கிறேன்! மாலைக்காரர்கள் - மேளக்காரர்கள் எல்லாம் ஒரு முறை - சர்வ சாதாரணமாக வந்து விட்டுப் போகிருர்கள்...போடாத பந்தல்... ஊதாத நாயனம்...வாராத உறவினர் - எல்லாம் வரிசை வரிசையாக - எட்டுத் திக்கிலும் சூழ்ந்து நிற்பதாக ஒரு பிரமை!

வெளியே ஏதேதோ பேசி முடிவெடுக்கிருர்கள். நாளை நானும் குழந்தையோடு நடப்பேன். ஏளனம் செய்தவர்களை - தலை குனிய வைப்பேன். அவ்வளவு வெறுமையிலும் ஆத்மா சூளுரைக்கிறது!

''அப்ப நாங்க வர்ரோம்!'' என்ற வார்த்தையோடு - என் மயக்கம் விழிக்கிறது.

அவர்கள் என் இதயத்திலே - நடந்து செல்வது போலத் துடிக்கிறேன்!

அம்மா எனக்கு முன்னே எழுந்து-தபால்காரனை எதிர்நோக்குகிறாள். அவன் கைராசியை - நான் தோற்கடித்து விட்டதால் - அவன்கூட - என்னை ஏளனமாகத்தான் எண்ணி வருகிறான்! ஏனென்றால் அவன் கொடுத்த அத்தனை கவரை உடைத்த போதும் - அது என் நம்பிக்கையைத்தான் உடைத்திருக்கிறது! இன்றும்...அதோ...அவன்......

கடிதம் வாய் விடுகிறது...

''உங்கள் பெண்ணைப் பொறுத்தவரை பூரண திருப்திதான். நான் நாற்பது வயது வரை- இன்றளவும் எவ்வித இன்னலுமின்றி - தனிக் கட்டையாக வாழ்ந்து விட்டேன்! ஆனால் ஜோஸ்யர் சொல்வது போல தங்களின் பெண் ஜாதகத்தால்- நான் நிர்மூலமாகத் தயாராயில்லை என்று கூறிக் கொள்கிறேன். தவறு இருந்தால் மன்னிக்கவும்...நண்பர் சீனுவுக்கு இது விஷயம் மெத்த வருத்தமே... நான் என்ன செய்யட்டும்...அவர் பெரிதும் முயற்சித்தார்...''

பழைய கவர்களைப் போலவே இந்தக் கவரும் என் வாழ்க்கையின் - கடைசித் துளி நம்பிக்கையையும் உடைத்து, தரை மட்டமாக்கி விட்டது! உலகத்தின் பார்வையற்ற பார்வைக்காக - வருந்தி அம்மா அழுவாளே என்று நானும் - நான் அழுவேனே என்று அவளும் - சம்பவத்தை 'தம்' கட்டிக்கொள்கிறோம்!



மனைவி: சமையல் கத்துக்கிற கிளாஸ்லே சேர்ந்திருக்கேன். இது என்னுடைய 'ஹோம்—வொர்க்!'

அம்மா ஆத்ம சாந்திக்காக- எங்கோ கதை பேசப் போய்விட்டாள் என்று தெரிகிறது! நான் மட்டும் முற்றத்து வெயிலில் - அப்பளம் காய வைத்துக் கொண்டிருக்கிறேன்.

''பாலா!''

திடுக்கிட்டுத் திரும்புகிறேன்!

''சீனு மாமா!''

துயரம் குலுங்க, ''மாமா!'' என்பதோடு மரணமடைகிறது வார்த்தை.

''எல்லாம் தெரியும் பாலா! அவனுக்கே முடிச்சிடலாம்னு ஆசைப் பட்டேன்! உன் நல்ல காலந்தான் அவனே வேண்டான்னு எழுதிட்டான்... அவன் பத்து வருஷமா போராடுற-மூல வியாதியைவிட அவன் பெரிசா நெனைக்கலே...உன்னோட மூல நட்சத்... அவனுக்கு பெரிசாப் போச்சு! ஆனா, அது என்னோட கண்ணைத் தெறந்திடுச்சிம்மா!''

சிரிக்கவும் அழவும் முடியாத சிலையாக நிற்கிறேன் நான்!

''மத்தவங்க குறையைக்கூட மறைச்சு, பெருமையாகவே சொல்லி - நல்லது பண்ணி வைக்கிற உத்தியோகம் என் உத்தியோகமுன்னு எல்லார்க்கும் புரியும். அவனோட வியாதியையும் நான் மறைச்சேன்! தன் மூலத்தை எண்ணிப் பார்க்காத அந்த ஜடம் - உன் மூலத்தை எண்ணிப் பாத்துது! நான் உயிர் மூலத்தையே நாள் எண்ணிப் பார்த்தேன்! அவனை விட ஒரு வயசு மூத்த நானும் தனிக் கட்டைதான்! சொத்து பத்துன்னு எனக்கு ஏதும் இல்லேம்மா! கொஞ்சம் கஷ்ட ஜீவனமாத்தான் இருக்கும்! பிறத்தியானை மாலை மாத்த வச்சு- அதைப் பாத்தே சாந்தியடைஞ்ச நான் என்னையும் மாத்திக்கிட்டேன்... ஒரு முடிவோடதான் புறப்பட்டு வந்தேன்.. உனக்கு மனப்பூர்வமாக... சம்மதமிருந்தா... நானே...!''

''நானே!'' என்ற ஒரு சொல் ... காதில் விழுவதற்கு முன்னாலே - நான் சீனு மாமா காலில் விழுந்து விடுகிறேன்!

அந்த ஒரு சொல்லை உச்சரிக்க துணிந்த பசும்புல்லைக் கூட-நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு - என்னை ஒப்படைக்கத்தானே - தவமா த... மிருந்தேன்!

என் இதயப் பரப்பின் மலை வெ... களில் 'நானே...நானே...!' - என் சொற்கள் மோதி மோதி - எதிரொ... யாகி... இமைத் துளிகளாக அவ... மார்பில் உதிர்ந்து கொண்டிருந்தன!



கோடையிலே இளைப்பாற...

— விஸ்வப்ரியா

“என்ன அண்ணாச்சி, சுகமாயிருக்கியளா?”

—குரல் கேட்டு, முகத்தை மறைத்த தமிழ்ச் செய்தித்தாளைச் சற்றுத் தாழ்த்திப் பிடித்தபடி மூக்குக் கண்ணாடியின் மேற்புறமாகக் கண்களை உயர்த்திப் பார்த்தார் மாணிக்கம் பிள்ளை.

“ஐயா, வாங்க-எங்க இன்னும் வரக் காணலையேன்னு பாத்துகிட்டு இருந்தேன்.”— உற்சாகமான குரலில் வரவேற்றுத் திண்ணையின் ஒரு பக்கமாக நகர்ந்து கொண்டு நண்பர் அமர இடங் கொடுத்தார் மாணிக்கம் பிள்ளை.

“பேப்பர்ல என்ன போட்டிருக்கான் அண்ணாச்சி?”-ஆரம்பித்தார் மூப்பனார். காசு கொடுத்து செய்தித்தாள் வாங்காமல் தினமும் மாணிக்கம் பிள்ளையின் கணக்கில் ‘உலக ஞானம்’ பெறும் நண்பர் அவர்.

“என்ன போங்க - இங்கே பிளேன் விழுந்துது... அங்கே ரயில் கவுந்துது— இப்படித்தான் ஏதேதோ போடறானுவ- நல்ல செய்தி எங்கே வருது? அதுல பாத்தியளா! இந்த இளம்நடிகன் பரதன், கல்யாணம் கட்டிக்கப் போறானும்— பொண்ணுகூட அவனுக்குச் சொந்தந் தானும். இவனுக எல்லாம் பெரிய நடிகன்னு பேர் வாங்கிட்டாங்க— ‘தோடி’ல ஒரு பாட்டு வருமா? சாவேரில இரண்டு ஸ்ூரம் பிடிக்க முடியுமா. இவனுகளாலே... அந்தக் காலத்திலே காம்போதியை மணிக்கணக்கிலே அள்ளி வீசி-அலசிப் பிழிவாரே நம்ம ராஜப்பா.. நினைவிருக்குதா அண்ணாச்சி! அவங்க மாதிரி நடிச்சவங்களையும் பாத்துட்டு இன்னிக்கு சூட்டும் கோட்டும் போட்டுக்கிட்டு இங்கிலீசு பேசிப் பிட்டதால மட்டும் இந்த இளவட்டங்களை நடிகன்னு ஒத்துக்கிட முடியுமா-நீங்களே சொல்லுங்க” — தன் கட்சியின் நியாயத்தை உணர்ந்து தீர்ப்புக் கூறப் போகும் நீதிபதியாக நண்பரை எண்ணிக் கேட்டார் மாணிக்கம் பிள்ளை.

“ஆமா அண்ணாச்சி-அந்தக் காலத்து பாட்டெங்கே - நடிப்பெங்கே — இப்ப அது மாதிரி பாக்க முடியாது அண்ணாச்சி. காலம் ரொம்ப மாறித்தான் போச்சு.” ஒப்புக் கொள்ளாவிட்டால் விட மாட்டார் என்பது போல் நண்பரை ஆமோதித்தார் மூப்பனார்.

“அண்ணாச்சி, அந்தக் காலத்திலே பவளக்கொடி நாடகத்திலே ‘கோபியர் கொஞ்சும் ரமணா’ன்னு பாடுவார் நம்ம ராஜப்பா. ஸ்வரம் எலலாம் பாடி, பாட்டு முடிய ஒரு மணிக் கூறு ஆகும்- கேட்டயளா... அந்தப் பாட்டைக்

கேக்கறத்துக்காகவே நம்மூர்லேருந்து அம்பாசமுத்திரத்திற்கு எட்டு மைல் நடந்து தினமும் போயிடுவேன். எனக்கு நாடகத்திலே இருந்த ஆசைக்கு நான் ஒரு பெரிய நடிகனு ஆகி இருக்கணும். ஏதோ என் கிரக நிலைமை சரியில்லே. ஆர்மோனியம் வாசிச்சி என் காலத்தைக் கடத்திட்டேன்.''-தன் சிறு வயது நினைவு களில் தன்னை மறந்து லயித்து விட்ட மாணிக்கம் பிள்ளை, பாதி பேசிக் கொண் டிருக்கும்போதே இலேசாகக் கண்களை மூடிக் கொண்டார்.

கடந்த கால நிகழ்ச்சிகள் நிழலாடும் அவர் மனத்திரையில், நிகழ்காலச் சம்ப வங்கள் படிய இயலாது என்பதைப் பழக்கத்தினுல் நன்கு உணர்ந்திருந்த அவர் நண்பர், ''அப்போ நான் வரேன் அண்ணுச்சி'' என்று கூறி எழுந்து சென்ருர்.

நாடகங்களைப் பார்த்துக் களிக்கும் சாதாரண ரசிகனுக மட்டும் மாணிக்கம் இருந்திருந்தால் கவலைகள் எதுவுமற்ற நிம்மதியான வாழ்க்கை அவனுக்குக் கிட்டி யிருக்கும். ஆனுல் நாடகத்தில் நடித்து நல்ல நடிகனுகி விட வேண்டும் என்ற அளவுக்கு மீறிய துடிப்பு, அவனை அல்லல்களுக்கு ஆளாக்கியது. சிறு வயது முதலே நடிப்புத்துறைக்குத் தேவையான தகுதிகள் தன்னிடம் பொருந்தி இருக்கின்றனவா என்று சிந்திக்கா மலே நாடகக் கம்பெனி ஒன்று விடாமல் சுற்றி அலைந்தான். குட்டையான கருத்த உருவ அமைப்பு-அம்மை நோயால் தழும்புகள் ஏறிய பரந்த பட்டை யான முகம். தான்தோன்றியாக வரிசையில் சேராமல், உதடு களுக்கும் அடங்காமல் வெளியே தலை காட்டும் முன்பற்கள், தடித்த புருவத்தின் கீழ் பள பளக்கும் இரு சிறு விழிகள்.. மாணிக்கத் தின் இந்த 'சாமுத்ரிகா லட்சணங்கள்' அவனது இதயக் கனவுகளுக்கு எதிரியாக இருந்தன.

''நாங்க போடற நாடகத்திலே யமன் வேசம் வரலை தம்பி. அடுத்த வருஷம் 'சத்தியவான் - சாவித்திரி' போடப் போருேம். அப்பொ உனக்குச் சொல்லி அனுப்பறேன்.''— இப்படிக் கிண்டலும் கேலியுமாகப் பலர் கூறியும் மாணிக்கத்தின் நாடகப் பித்து அவனை விடவில்லை. தன்னுல் நடிகனுக முடியாது என்ற உண்மையை மிகுந்த வருத்தத் துடன் அரைகுறையாக உணர்ந்த மாணிக்கம், நாடகங்களுடன் ஒன்றி இணைந்துவிட்ட தன் மனத்திற்கு அமைதி தரும் தொழில் அத்துறையின் எல்லைக் குள்தான் என்று தீர்மானித்துவிட்டான். இயற்கையாக அவனுக்கு அமைந்திருந்த சங்கீத ஞானத்துடன் ஓரளவு பயிற்சியும் பெற்று நாடகங்களில் ஹார்மோனியம் வாசித்துப் பின்பாட்டும் பாட ஆரம்பித் தான்.

''ஏலே! கூத்தாடிகளோட சேர்ந்து கூத்தடிச்சுக்கிட்டு ஊர் சுற்றியாத் திரிய றயே-உங்க அத்தை உன்னை நம்பி உனக் குப் பொண்ணு குடுக்க தயங்கரு-வழியா வாய்க்காலா நமக்கு இருக்கிற வாழத் தோட்டத்தைப் பார்த்துக்கிட்டு வேலை வெட்டி எதுவும் செய்துகிட்டு இருந்தா தான் உனக்கு முறைப்பொண்ணு வரும்; இல்லேன்னு அவ்வளவுதான்- உன் தலை விதி எப்படியோ அப்படி நடக்கட்டும்'' —மூப்பின் பிடியில் அவதிப்படும் அவன் தந்தை மனம் நொந்து முறையிட்ட



பொழுது, ''அப்பா, நான் திருடலே. பொய் பேசலே. நீங்க நினைக்கிற மாதிரி குடிச்சுப்புட்டு கண்ட பெண்களோட சுத்தறவனும் இல்லே-நாடகக் கம்பெனியிலே எத்தனையோ பெண்களைப் பார்க்கிறேன். ஆனா அக்கா தங்கச்சி மாதிரி தான் பழகறேன்—என் தொழில்ல எனக்கு நிம்மதி இருக்கு. அதை விட்டு விட்டு என்னாலெ விவசாயம் பாக்க முடியாது. உங்களை யெல்லாம் விட என் குணத்திலேயும் ஒழுக்கத்திலேயும் அத்தை மக காந்திமதிக்கு நம்பிக்கை இருக்கு. இதை யெல்லாம் புரிஞ்சுகிட்டு என்னை நம்பி அத்தை, முறைப் பொண்ணைக் குடுத்தா குடுக்கட்டும்''—ஆணித்தரமாக மாணிக்கம் கூறிய வார்த்தைகளில் இருந்த நேர்மையின் தெளிவு தந்தையின் நம்பிக்கைக்குப் போதுமானதாக இருந்தது.



“என்னங்க இது? காலை நேரத்திலே பலகாரம் கூட சாப்பிடாமெ தூங்கிக் கிட்டு''—அன்பும் பரிவும் இழையோடும் குரல் கேட்டுக் கண் திறந்து எதிரே நோக்கினார் மாணிக்கம் பிள்ளை. மஞ்சள் பூச்சில் மினுமினுத்த முகத்தில் விபூதிக் கீற்றும் குங்குமமும் துலங்க நிற்கும் மனைவி காந்திமதியை உற்று நோக்கினார். கடந்த நாற்பது வருடங்களாக அவரது இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு வந்திருக்கும் அந்த முகத்தில் முதுமையின் சாயல் கூட ஒரு கம்பீரமான அழகைத்தான் தந்திருக்கிறது. கணவரின் பார்வையின் தீவிரத்தில் சற்று நாணம் அடைந்து விட்டவளாக, ''என்னங்க, இப்படிப் பார்க்கிறீங்க—ஏதாவது நாடக நினைப்புங்களா—'பவளக்கொடியா', 'வள்ளித் திருமணமா?'' என்று கேலியாகக் கேட்டாள் காந்திமதி.

''வயசாகி விட்டாலும் உன்னை விட்டு இந்தக் கிண்டல் பேச்சுப் போகலே பாத்தியா ... நாடகத்து மேல என் மனசிலே வைச்சிருந்த ஆசையை நீயும் உன் மகனும் என்னைக்குமே புரிந்து கொண்டதில்லையே!''

''நீங்களும் தலைகீழாத்தான் நின்னு பாத்தீங்க- நம்ப மகனை நடிக்க வைக்கணும்னு. அவனுக்கு அந்த நினைப்பு துளிக்கூட இல்லாமப் போச்சு. அவனுக்குப் பிடிக்காத விசயத்திலே அவனை எப்படிங்க கட்டாயப்படுத்த முடியும்?''

''நீ என்னதான் சொல்லு காந்திமதி-என் மகன் நல்லா நடிச்சு நடிகனாயிருந்தா என் சந்தோசமே தனிதான். எனக்குத்தான் தெய்வம் அழகைத் தரலே. ராஜா மாதிரி மகனைக் கொடுத்துதே, அவனாவது நடிக்கக் கூடாதா...ம்...என் ஆசை பாளாத்தான் போகணும்னு இருக்கு. யார் என்ன செய்திற முடியும்!''

''ஏன்தான் இப்படி சும்மாச் சும்மா மனச் சங்கடம் படுதியளோ-நடிக்காட்டா என்ன? நம்ம மகன்

நல்லா படிச்சுட்டு பெரிய கம்பெனியிலே ஆபீஸர் வேலை பார்க்கிறானே, அது போதாதா? நம்ப பேர் சொல்லிக்கிட்டு நியாயமான தொழில்ல, நல்லபடியா, ஒழுக்கமா குடும்பம் நடத்திக்கிட்டுத் தானே இருக்கான். வயசு காலத்திலே நம்ம அவன் கூடவே போய் இருக்கலாம். நீங்கதான் பிடிவாதமா பிள்ளைகிட்ட முடியாத காலத்திலே போய்ச் சேர்ந்து தொந்தரவு குடுக்கக் கூடாதுங்றீக. பாடுபட்டு மரத்தை வளர்க்கிறோம். கோடையிலே அதன் நிழல்ல கொஞ்சம் தங்கினா தப்பாகாதுங்க.''

''சரி, சரி! அந்தப் பேச்சை இதோட விட்டுடு. எனக்கு வயிறு பசிக்குது, பலகாரம் வை''— கூறிய மாணிக்கம் பிள்ளை, செய்தித்தாளைக் கையில் சுருட்டிக் கொண்டு எழுந்தார்.

இலையில் விழுந்த ஆறி உலர்ந்துவிட்ட இட்டிலிகளைத் தொட்டுப் பார்த்த மாணிக்கம் பிள்ளை, ''என்ன காந்தி, இன்னிக்குப் பலகாரத்துக்கு இடியாப்பமும் சொதியும் செய்யச் சொல்லியிருந் தேனே, மறந்திட்டயா?'' என்று கேட்டார். களைப்பிலும் மலர்ந்திருந்த காந்திமதியம்மாளின் முகம் சட்டென்று வாடியது. மெலிந்த குரலில்,

''நீங்கதான் மறந்துட்டீங்க, மளிகைக் கடை பாக்கி குடுக்கலேன்னு சாமான்



கலி:.போர்னியாவிலிருந்து....

கலிஃபோர்னியாவில் ஒரு வீடு. ஓர் அழகான டீன் ஏஜ் அமெரிக்கப் பெண், சோபாவில் கண்களை மூடிய படியே படுத்துக் கொண்டிருக்கிறாள். பக்கத்து 'அபார்ட்மெண்ட்'டில் ஓர் இந்தியத் தம்பதி தங்களது 'காஸட்'டிலிருந்து கர்நாடக சங்கீத 'எல். பி.' ரிகார்டைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இனிமையான அந்த இசை அமெரிக்கப் பெண்ணின் மனத்தில் ஒருவித கிளர்ச்சியை உண்டாக்குகிறது. சோபாவில் படுத்துக் கொண்டிருக்கும் அவள் எழுந்து உட்காருகிறாள். கல்யாணியின் குழைவு அவளைக் கிறங்கச் செய்கிறது. மத்யமாவதியில் மனத்தைப் பறி கொடுக்கிறாள். அவளுடைய 'ஸ்கர்ட்'டை அட்ஜெஸ்ட் செய்து கொண்டவாறே இந்தியத் தம்பதியின் வீட்டுக்குச் சென்று தோழியாகிறாள். நட்பு வளருகிறது. அவளுக்கிருந்த சங்கீதப் பைத்தியமும் அதிகமாகிறது. சிறிதுநாட்களில் கிழக்கு நோக்கிப்

தரமாட்டேன்னு செட்டியார் சொல்லி அனுப்பிட்டாருன்னு நேத்தே உங்க கிட்ட சொன்னேனே-பக்கத்து வீட்டுச் செல்லம்மா கிட்ட இட்லி மாவு கொஞ்சம் கடனு வாங்கினேன்...'' என்றாள்.

பதிலேதும் கூறத் திறனற்றவராகக் குனிந்தபடி வேண்டா வெறுப்பாக உண்ண ஆரம்பித்தார் மாணிக்கம் பிள்ளை. ''சொன்னா கோவிக்க மாட்டீயளே. கொஞ்ச வருசமாகவே வரும்படி இல்லே. இருந்த தோப்பு, துரவை வித்து மகனைப் படிக்க வைச்சாச்சு. ஊரெங்கிலும் கடன் ஏறிப் போச்சு. வீட்டை வித்துக் கடனடைச்சுட்டு, பையன்கூட பட்டணத்திலே போய் இருந்துடலாம்னு உங்களுக்கு அது பிடிக்கலே. என் கல் வளையலேயும், தங்க அட்டியலேயும், வித்து கடனடைச்சுடுங்க. இந்த வயசிலே எனக்கு ஏதுக்குங்க நகை''—பிரச்னைக்குத் தீர்வு காணத் துடிக்கும் திறந்த மனத்துடன் கூறிய மனைவியை நிமிர்ந்து நோக்கினார்.

''காந்தி, நாற்பது வருசமா என்கூட நான் ஆடின ஆட்டத்துக்கெல்லாம் ஈடு குடுத்துட்டு வரவ நீ. இன்னிவரைக்கும் ஒரு திருகாணி நான் உனக்கு வாங்கித் தரலே. அது போதாதுன்னு உங்கம்மா காலத்திலே உனக்குப் போட்ட நகையையும் வித்துச் சாப்பிட எனக்கு மனசு கேட்கலே. ம்... எப்படி எப்படியோ வாழணும்னு ஆசைப்பட்டேன். எப்படியோ வாழறேன்'' என்று தன்னையே நொந்து கொண்டார்.

கணவனின் மன சஞ்சலத்தைக் கண்டு கலங்கிவிட்ட கண்களில் துளிர்த்த நீரை, சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்ட காந்திமதி, ''எதுக்கும் ஒரு நடை பட்டணத்துக்குப் போய் நம்ம சோமுவையும் மருமகளையும் பார்த்துட்டு வரலாமே...ரெண்டு வருசமாகுது — கல்யாணம் கட்டின உடனே பட்டணம் போனவன்தானே...'' என்றாள்.

''அதுக்கும் பணம் வேணுமே காந்தி.''

''உங்க சிநேகிதர் மூப்பனார் நீங்க கேட்டா தட்டாமெ கொடுப்பார். கடனாகத்தானே கேட்கப் போறோம். நம்ம சோமுவைப் பார்த்துட்டு வரும்போது அவன் ஏதாவது குடுக்கமாட்டானா— அப்ப அவருக்குத் திருப்பிக் கொடுத்துடலாம்.''

''சரி, உன் ஆசையைக் கெடுப்பானேன். ஏற்பாடு செய்யறேன். நாளைக்குப் பட்டணம் புறப்படத் தயாராகிக்க.''

வெகு நாட்களுக்குப் பிறகு சென்னையில் காலடி வைத்த மாணிக்கம் பிள்ளையும் முதன் முறையாகப் 'பட்டணப் பிரவேசம்' செய்யும் அவர் மனைவி காந்திமதி அம்மாளும் ஒரு சைக்கிள் ரிக்ஷாவை அமர்த்திக் கொண்டார்கள். ''வெங்கடரத்னம் நகருக்குப் போகணும் ஐயா'' என்றார் மாணிக்கம் பிள்ளை.

பொழுது சாயும் நேரம். அண்ணா சாலையில் சென்று கொண்டிருந்த சைக்கிள் ரிக்ஷா, போக்குவரத்து நெரிசலில் சற்று நேரம் நின்றது. ரிக்ஷாவிலிருந்த காந்திமதி, ''இதோ பாருங்க, நம்ப சோமு. அதோ அங்கே நிக்கறானுங்க'' என்று உற்சாகமாகக் கூறினாள். மனைவி காட்டிய திசையில் பார்வையைச் செலுத்தினார் மாணிக்கம் பிள்ளை. பெரிய ஓட்டல்

பயணமாகிறாள். ஒரே பெண் எனினும், அவளுடைய எழுத்தாளர் தந்தை தன் மகளின் பயணத்தில் குறுக்கிடாமல் ஆசி கூறியனுப்புகிறார்.

கலாட்சேத்திராவின் பக்கத்தில் ஒரு சிறிய வீடு. அந்த கலிஃபோர்னியமங்கை காஸ் அடுப்பில் சைவ உணவை சமைத்துக் கொண்டிருக்கிறாள். பச்சை நிற நைலக்ஸ் புடவை அவளுடைய அழகை இரட்டிப்பாக்குகிறது. டாபி ஹால்பெர்ன் (Toby Halpern) என்ற அவளது பெயரைத் தவிர, மற்றபடி அவள் ஓர் இந்திய மாதுவாகவே காட்சி தருகிறாள்!

கலாட்சேத்திராதான் டாபியின் பள்ளிக்கூடம். வாய்ப்பாட்டு மட்டுமே கற்றுக் கொள்ள ஆரம்பித்தவள், வீணையும் பயில வேண்டும் என்று விரும்பினாள். நாளாவட்டத்தில் வாய்ப்பாட்டை விட வீணையிடமே விருப்பம் அதிகமாகியது. வகுப்பில் கற்றது போக சனி, ஞாயிறு கிழமைகளில், குரு, திருமதி ராஜேஸ்வரி பத்மநாபன் வீட்டில் பிரைவேட் டியூஷன் வேறு!

டாபி ஹால்பெர்ன், மாலை நேரங்களில் எந்த சபாவில் யாருடைய கச்சேரி என்று தெரிந்து கொண்டு அங்கு போய் விடுகிறாள். ஒவ்வோர் ஆண்டும் தியாக பிரும்மத்தின் ஆராதனையில் பங்குபெற திருவையாறுக்குப் போகவும் தவறுவதில்லை.

இதோ, இப்பொழுது இவர் மாலியின் புல்லாங்குழல் கச்சேரிக்கு கிளம்பிக் கொண்டிருக்கிறாள். முதல் வரிசையில் உட்கார்ந்து கொண்டு கர்நாடக சங்கீதத்தை வளர்க்கிறோம் என்று மார் தட்டிக் கொள்வதற்காக அல்ல; மூன்றாவது வரிசையில் உட்கார்ந்து கொண்டு தன்னுடைய சங்கீத ஞானத்தை வளர்த்துக் கொள்வதற்காகத்தான்!

ஒன்றின் உள்ளே செல்வது... 'ஆமாம்; அது சோமுவேதான். கூட யாரு? மருமக சம்பாவா... இல்லேயே; வேற பொண்ணு மாதிரி தெரியுதே... சீ...சீ... அப்படி யெல்லாம் இருக்காது'—தான் கண்ணுல் கண்ட காட்சிக்கு மனத்தால் விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தார். அந்தப் பெண்ணின் அலங்கோலமான அலங்காரமும், அவனும் அவளும் இணைந்து நின்ற விதமும் அவரது மன விளக்கம் பொய் என்று அவர் உள்ளுணர்விற்கு உணர்த்தியது.

''ஐயையே..இது என்னங்க.. யாரோ ஒரு பொம்பளை கையைக் கோத்துக்கிட்டு நிக்கருன் நம்ப சோமு. சட்டுனு இறங்கிப் போய் இரண்டு வார்த்தை கேட்டாத் தான் என் மனசு ஆறுங்க.''

தான் கண்ட காட்சிக்கு உண்மை விளக்கம் தந்தது மனைவியின் பதறல்.

''வாயை மூடு—இந்த அசிங்கத்துக்கு நம்ம வேறே சாட்சியா போய் நிக்க வேண்டாம். முதல்லே அந்தப் பய வீட்டுக்குப் போகலாம்''—அதட்டல் போட்டு மனைவியின் பேச்சை நிறுத்தி விட்ட அவரால், ஒழுக்கத்தின் உறைவிடமாகத் தன்னுல் வளர்க்கப்பட்ட மகனின் இந்தச் செயலால் தாக்குண்டுச் சிதறிவிட்ட தன் மனத்தின் ஓலத்தை அடக்க முடியவில்லே.

மகனின் வீட்டையடைந்ததும், மருமகள் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்ருள். மாணிக்கம் பிள்ளே, ''உங்களே யெல்லாம் பாத்து நாளாச்சேன்னு வந்தோம்...உன் உடம்பு ரொம்ப இளேச்சுப் போயிருக்கே அம்மா...'' என்ருர் பரிவுடன். ''உங்க மகன் ஆபீஸ் விஷயமா பெங்களூர் போயிட்டு நாளேக்குக் காலேயிலேதான் வருவேன்னு சொன்னுரு. கொஞ்சம் இருங்க, பலகாரம் கொண்டு வரேன்...''—கள்ளம் இல்லாமல் கூறிவிட்டு உள்ளே செல்லும் மருமகளேக் கண்டு கண் கலங்கினர் மாணிக்கம் பிள்ளே.

சற்று நேரம் மருமகளுடன் பேசிக் கொண்டிருந்த காந்திமதி, ''ஏம்மா! சம்பா, நீ ஏன் நகை எதுவுமே போட்டுக்கிடலே; பட்டணத்திலே படிச்ச பொண்ணுங்க நகை எதுவும் போட்டுக்கக் கூடாதா?'' என்று கேட்டாள். சம்பா, சற்றுத் தயங்கிவிட்டு, ''உங்க மகன் ஒரு நண்பரோட கூட்டுச்சேர்ந்து சுயமா ஒரு கம்பெனி ஆரம்பிச்சு இருக்காரு. அதுக்கு மூலதனம் போட கையிலே இருந்த பணம் பத்தலே. நகைகளே அடகு வைச்சோம். கம்பெனி நல்லா நடந்தா போதுமே, பின்னுடி எத்தனே நகை வேணும்னுலும் செய்துக்கலாமே...'' என்ருள்.

இதைக் கேட்டதும் 'திக்'கென்றது மாணிக்கம் பிள்ளேக்கு. மாலேயில் தான் கண்ட காட்சியையும், மருமகள் கூறும் மகனின் தொழில் திறமையையும் கூட்டிக் கழித்துப் பார்த்த அவருக்கு உண்மை பளிச்சென்று விளங்கி விட்டது. 'தன் மகஸ இந்த நிலேக்கு இறங்கியிருக்கிருன்; உத்தமனுக வளர்ந்த பிள்ளே எப்படி அத்தனே ஊதாரியாகி விட்டான்?' —இவரால் நம்ப முடியவில்லே.

மறுநாள் காலே. களேத்த தோற்றத்துடன் வீட்டிற்குள் வந்த சோமசுந்தரம், எதிர்பாராமல் தாயைக் கண்டுவிட்டு, ''என்னம்மா, எனக்குத் தகவல் குடுக்காம வந்திட்டீங்க. அப்பா எங்கே?'' என்று பரபரப்புடன் கேட்டான். ''ஆமாடா! தகவல் குடுத்திருந்தா, எங்களுக்குப் பூர்ண கும்ப மரியாதையோட வரவேற்பு குடுத்திருப்பே—இப்ப அது கெட்டுப் போச்சு'' — விரக்தியாகப் பிடிப்பின்றிப் பேசும் தாயை வியப்புடன் நோக்கினுன் தனயன்.

''மாமாவும் அத்தையும் நேத்தே வந்துட்டாங்க. நீங்க பெங்களூருக்குப் போயிருக்கீங்கன்னு தெரிஞ்சதும் அவங்களுக்குக் கொஞ்சம் ஏமாத்தமா போயிட்டது. அதுதான் இப்படிப் பேசருங்க'' —'கலகல'வென்று பேசும் மருமகளேப்



''நீங்க எடுத்திருக்கிற போட்டோவிலே எல்லாம் அத்தனே பேரும் சிரித்த முகமாவே இருக்காங்களே, அது எப்படி?''

''போட்டோ எடுக்கறத்துக்கு முன்னுலே பாதி சார்ஜைத்தான் சொல்லுவேன்!''

பார்த்து வேதனைப்பட்டுக் கொண்டு பக்கத்து அறையிலிருந்து வெளிவந்த மாணிக்கம் பிள்ளை, 'கணவனின் நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ளாத வெகுளித்தனமா, புரிந்தும் புரியாதவள் போல் நடக்கும் பெருந்தன்மையா' என்று மனத்திற்குள் மறுகினார்.

''என்ன தம்பி! ஆபீஸ் வேலை யெல்லாம் எப்படி இருக்குது, வசதியா இருக்கியா?''-எடுத்த எடுப்பில் தந்தை கேட்ட இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கத் தயங்கிய சோமு, ''நல்லாத்தான் இருக்குது வேலை யெல்லாம். பண வசதிதான் போறலை அப்பா. அது சரி, நீங்க கொஞ்சநாள் இங்க இருப்பீங்க இல்லே?'' என்றான்.

''இல்லை தம்பி, பார்க்கணும்னு வந்தோம். பார்த்தாச்சு. ராத்திரி ரயில் லேயே ஊருக்குப் போறதா முடிவு பண்ணிட்டேன்.''

''ஆமாப்பா. நம்ம கிராமத்திலே இருந்து பழகிட்ட உங்களுக்கு இந்தப் பட்டணத்து சந்தடி யெல்லாம் ஒத்துக் காதுதான். ம்... நான் குளிச்சிட்டு வரேம்பா''—கூறிவிட்டுத் தன்னறைக் குள் சென்றான் சோமசுந்தரம். அவன் மனைவியும் அவனைத் தொடர்ந்து சென்றாள்.

ஹாலில் அமர்ந்திருந்த மாணிக்கம் பிள்ளை உச்சி முகட்டை வெறிக்கப் பார்த் துக் கொண்டிருந்தார். திடுமென சோமு வின் அறையிலிருந்து கேவல் ஒலி ஒன்று வெளிப்பட்டது. தொடர்ந்து சம்பாவின் குரல் தீனமாக ஒலித்தது: ''நமக்குள்ள என்ன வேணும்னா இருக்கட்டும். அது பெரியவங்களுக்குத் தெரிய வேண்டாம். அவங்க மனசு உடைஞ்சுடுவாங்க. உங்க நடவடிக்கை அவங்களுக்குத் தெரிய வேண்டாம்னு நீங்க பெங்களூர்போனதா சொல்லி யிருக்கேன். அவங்க எதிரிலே என்கிட்டே சரியாக நடந்துக்குங்க. எனக்கு அது போதும். மத்த நாள்ல உங்க இஷ்டம் போல நடந்துக்குங்க...''

சற்று முன்பு புரியாத ஒரு புதிரும் இப்போது புரிந்து விட்டது மாணிக்கம் பிள்ளைக்கு. தான் பெற்ற மகன் நல்லவன் என்று நம்பிக் கொண்டிருக்கும் தந்தையிடம், குணம் கெட்ட மகனை நல்லவனாகவே நடிக்கச் சொல்லும் மருமகளின் உயர்ந்த உள்ளப் பண்பு அவர் மனத்தை உலுக்கி விட்டது.

சிறிது நேரத்திற்குப் பிறகு குளித்து மாற்றுடை உடுத்திக் கொண்டு வெளி வந்த சோமசுந்தரம், ''அப்பா, சாப்பிட லாமா? நீங்க 'சம்பா' சமையல் செய்து



ஆண்களை அழகுபடுத்தும் பெண்கள்

கல்கத்தாவில் ஆண்களின் தலை முடியை அழகுபடுத்தி, வாரி, வளைவுகள் அமைத்துக் கொடுக்கும் 'சலூன்'கள் இருக்கின்றன. இப்படிச் செய்து விடுபவர்கள் பெண்கள்! சார்ஜ் இருபது ரூபாயாம்!

சாப்பிட்டதில்லையே! உங்க மருமக ரொம்ப நல்லா சமையல் செய்யறுப்பா. என்ன சம்பா... அப்பாவுக்கு இடியாப் பம்னா உயிர். அதுதானே செய்திருக்கே. அம்மா, சம்பா உடம்புக்கு இந்த ஊர் ஒத்துக்கலை. ரொம்ப இளைச்சுப் போறும்மா...''— போலியான அன்புப் பூச்சுடன் ஆர்ப்பாட்டமான வார்த்தை கள் பிரவாகமாய் அவன் வாயிலிருந்து பெருக ஆரம்பித்தன. மௌனமாக உண்டு முடித்தார் மாணிக்கம் பிள்ளை.

ரயில் வண்டி ஓடிக் கொண்டிருந்தது. சீராகத் தாளமிட்டுச் செல்லும் அந்த வண்டியின் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் எதிரும் புதிருமாக அமர்ந்திருந்தனர் மாணிக்கம் பிள்ளையும் அவர் மனைவியும். மகனுடன் சீராட வந்த அந்தப் பெற்றோர், ஒரே நாளில் வேதனையையும் வெறுப்பையும் சுமந்து கொண்டு மேலும் பல ஆண்டுகள் மூப்படைந்து விட்டவர்கள் போல் தோற்றமளித் தார்கள்.

''ம்...என்னதான் சொல்லு காந்தி... என் மகன் நல்லாவே நடிக்கிறான்.'' —வேதனை, கண்ணீரில் கரைந்து பெருமூச்சுடன் வெளிப்பட்டது.

''என்ன போங்க. ஆலமரம் நட்டா, கோடையிலே அது நிழல்ல தங்கலாம்— நாம நட்டது கருவேல மரம்தாங்க'' —விம்மலாக வெளிப்பட்ட அத் தாய் மனத்தின் தாபம், தந்தையின் பெருமூச்சில் கலந்தது.

நோகா
அளிக்கிறது!
வருடம் முழுவதும் புதுமை குன்றுமல் இருக்கும் பழங்களும் காய்கறிகளும்!

புத்தம் புதிய பழத்தின் நற்சுவையை உங்களுக்குத் தருகிறது நோகா! நாவில் நீர் ஊறச் செய்யும் நாகபுரி ஆரஞ்சுகளின் இயற்கையான இனிப்பும், மனங்கவர் மாங்கனிகளின் மட்டில்லா நற்சுவையும் நீங்கள் பெறலாம். நோகா தயாரிப்பு ஒவ்வொன்றிலும் புதுமை குன்ருத அசல் நோகா நற்சுவையைப் பெற்று மகிழலாம். ஏனெனில் தயாரிப்பின் ஆரம்பத்திலிருந்தே அதன் தரத்தை உறுதி செய்கிறது ஒரு மகாராஷ்டிர அரசாங்கக் கார்ப்பொரேஷன்

நோகாவின் விதவிதமான தயாரிப்புகளின் மூலம் வருடம் முழுவதும் உங்களுக்குப் பிரியமான பழங்கள் மற்றும் காய்கறிகளைச் சுவைத்து மகிழுங்கள்: ஆரஞ்சு ஜூஸ், ஸெக்மெண்ட்ஸ், ஸ்குவாஷ் மற்றும் மார்மலேட்; டொமேட்டோ ஜூஸ், சூப், கெச்சப் மற்றும் ப்யூரி; மேங்கோ ஜூஸ், நெக்டார், ஸ்குவாஷ், ப்ல்ப், ஸ்லைஸெஸ், டிட்பிட்ஸ் மற்றும் ஜாம்; பேக்ட் பீன்ஸ் இன் டொமேட்டோ ஸாஸ், ஃப்ரெஷ் கார்டன் பீஸ், விதவிதமான ஜாம்கள்—மிக்ஸெட் ஃப்ரூட், ஆப்ரிகாட், ஸ்ட்ராபெர்ரி, குவாவா ஜெல்லி, பைனப்பிள், மற்றும் பல ஸிரப்புகள்.



நோகா: நற்சத்துக்கள் நிறைந்தது, நற்சுவையில் சிறந்தது

Grant 3 TM

சர்க்கரை வழங்கியது ஏன்?

''கல்யாணம் என்று யாரும் எண்ணி விடவேண்டாம்'' என்று பிரும்மானந்த ரெட்டி சொன்னவுடன் அங்கே சிரிப்பு அலை மோதியது.

பாவம்!

சென்னைக் கோட்டையில் உள்ள சம்பளக் கமிஷன் அலுவலகத்தில் வேலை செய்வோருக்குத் தீர்க்க முடியாத பிரச்னை ஒன்று உண்டு. 'வௌவால்கள் பிரச்னை' தான் அது. அங்கே குடியிருக்கும் வௌவால்களை விரட்டுவதற்கு வழி தெரியாமல் இவர்கள் தவிக்கிறார்கள். காலையில் ஆபீசுக்கு வந்தவுடன் முதல் வேலையாக ஃபைல்களைத் தட்டிச் சுத்தம் செய்வதற்குள் இவர்களுக்குப் போதும் போதும் என்றாகி விடுகிறதாம்!

தேறாத கட்டை

சீரணி சார்பில் நடந்த அண்ணா பிறந்த நாள் விழாவில், அமைச்சர் நெடுஞ்செழியன், சீரணி அமைச்சர் என். வி. நடராசன், அமைச்சர் ப. உ. சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டனர். என்.வி. நடராசன் பேசும்போது, ''நெடுஞ்செழியனின் குணம் பெரியாரைப் போன்றது. சிக்கனமும் கஞ்சத்தனமும் அவருக்கு அதிகம். ஆகவே, எவ்வளவுதான் திறமையாக ஒருவர் காரியத்தைச் செய்தாலும் வெளிப்படையாக அவரைப் பாராட்ட மாட்டார். ப. உ. சண்முகம் அப்படி இல்லை'' என்று கூறினார்.

நெடுஞ்செழியன் பேசும் போது, ''நான் பாராட்டுவதே இல்லை என்றார் என். வி. நடராசன். பாராட்ட வேண்டிய அளவு காரியம் நடந்தால் நான் பாராட்டாமல் இருந்ததே இல்லை. எவ்வளவு மருந்து சாப்பிட்டாலும் என். வி. என். உடம்பு தேறுவதில்லை. இனிமேல் இந்தக் கட்டை தேறாது. அதுபோல, நான் எவ்வளவு பாராட்டினாலும் அவருக்குப் பயன்படாது'' என்று என். வி. நடராசனைப் பார்த்துக் கூறினார்!

திடீர்ப் பரிசு

சென்னையில் நடந்த வள்ளலார் விழாவில் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவுக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்கள். அப்போது அவரைப் பாராட்டிப் பேச வந்த திருமதி சௌந்திரா கைலாசம், ''சாதாரணமாக கதை, கவிதை எழுதுவதற்கு ஓட்டல்களைத் தேடிப் போவார்கள். வள்ளியப்பா, வீட்டிலேயே குடும்பச் சூழ்நிலையில் எழுதி வருகிறார். இதற்கு அவருடைய மனைவி மிகவும் உதவியிருக்க வேண்டும். அவரைப் பாராட்டாமல் இருப்பதா?'' என்று கூறி, யாரும் எதிர்பாராதவிதமாகத் தான் கையோடு கொண்டு வந்திருந்த ஒரு புடவையை திருமதி வள்ளியப்பாவுக்குப் பரிசாகக் கொடுத்தார்.



''பாதி பாலம் கட்டத்தான் நிதி வசதி இருந்ததாம்!...''

மதுரை நகரானும் மேயர்...

மதுரை மாநகராட்சிக் கட்டடத்தில், மேயரின் அறை. 'முதலமைச்சரைச் சந்திக்காதது ஏன்? முத்துவிடம் அமைச்சர் மாதவன் கேள்வி' என்று ஒரு காலைப் பத்திரிகையில், கொட்டை எழுத்துக்களில் வெளிவந்த செய்தியைச் சற்று உரக்கப் படித்துக் கொண்டிருந்தார், தி.மு.க. கவுன்சிலர் கருணைதாசன்.

மேயர் முத்து அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. உதவியாளர் நீட்டிய ஃபைலில் 'விறுவிறு'வென்று கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந்தார் அவர்.

மதுரை முத்து—

அவரைப் பற்றித்தான் எத்தனை வதந்திகள்—வர்ணனைகள்! அவரைச் சந்திக்க முடிவு செய்த போது, மதுரை நகர வீதி ஒன்றில், பத்துப் பதினைந்து பேர்களுக்கு நடுவில் சுழன்று சுழன்று சிலம்பம் ஆடிக் கொண்டிருப்பார் என்றோ, பிரம்மாண்டமான தமிழர் படை அணிவகுப்பு ஒன்றைப் பார்வையிட்டுக் கொண்டிருப்பார் என்றோ, அந்த வதந்திகளை வைத்துக் கற்பனை செய்து கொள்வதைத் தவிர்க்க முடியவில்லை! இடுப்பில் சத்தியமாக ஓர் அரிவாளோ, கத்தியோ எப்போதும் இருக்கும் என்று வேறு நினைக்கத் தோன்றியது! இந்த அழகில் அவருக்குத் திடீர் திடீரென்று கோபம் வந்துவிடும் என்றும் வேறு சிலர் கூறித் தொலைத்தார்கள்! ஆகவே, அவரிடம் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே பழக வேண்டும் என்று முடிவெடுத்தோம்...! ஆனால், மதுரை முத்து கூச்சப்படுகிறார் என்றால்



'விறுவிறு'வென்று கையெழுத்து...

நம்ப முடிகிறதா? ஆமாம்! உண்மையில் 'கூச்ச சுபாவ'மும் 'பாசமும்' கலந்த மனிதராகத்தான் 'மதுரை முத்துவை'ச் சந்தித்தோம். அவ்வப்போது ஆவேசமாகப் பேசும்போது அவருடைய இ[...] புருவங்களும் 'பளிச் பளிச்'சென்று கூரிய அரிவா[...] போல் நெற்றியில் ஏறி இறங்கியதே தவிர, அவரிட[...] வேறு எந்த ஆயுதமும் இல்லை!

ஒரு 'நோவால்ஜி'யை எடுத்து, காபியுடன் விழுங்கினார் மதுரை முத்து. ''அம்மாவுக்கு உடம்[...] எப்படி இருக்குங்க?'' என்கிறார் ஒருவர்.

மேயரின் கண்கள் கலங்குகின்றன. ''அ[...] (மனைவி) உடம்பு பற்றித்தான் கவலையாக இ[...]க்கிறது. தொண்டையிலே ஏதோ 'வலி' வருகிறது என்கி[...] 'வெயிட்'டைக் குறைக்கணும்னு டாக்டர்கள் சொ[...]றாங்க! காலையிலே ஒரே ஒரு இட்லி. மத்தியான[...] காய்கறி அதிகமாகவும், சாதம் கொஞ்சமாகவும் சா[...]பிடறா. ராத்திரி ஒரு தோசைதான். அப்படியிருந்து[...]

உடம்பு இளைக்க மாட்டேங்குது. நான் அவளைக் கல்யாணம் கட்டிக்கிட்ட போது, அவ ரொம்ப சின்னப் பொண்ணு....''

''நாங்க இருக்கிறச்சே வரி அப்பீல் கமிட்டியிலே நீதிபதிக்கு என்ன வேலே?''

உருக்கமான பேச்சுடன் மேயரின் முதல் அறிமுகம் கிடைக்கிறது. குடும்பப் பாசம் நிறைந்த மேயரைப்பார்த்தவுடன் அவரைப் பற்றிய நீண்ட நாள் வதந்திகள் மீண்டும் நம் முன் தூளாகின்றன.

மூன்றாவது முறையாக மதுரை மாநகரின் மேயராக இருக்கிறார் அவர். அதற்கு முன்பு இரண்டு ஆண்டுகள் அதன் தலைவராக இருந்திருக்கிறார். முத்து, மேயராக ஆவதற்காகத்தான், மதுரையே மாநகராட்சியாயிற்று என்று சொன்னவர்கள் உண்டு! அப்படி, நினைத்ததைச் சாதிக்கும் துணிச்சல் கொண்டவர் அவர்.

''நான் 1969-ல் போட்டியிட்டது எனக்கு அறிமுகமே இல்லாத புதிய தொகுதி. படித்த மத்தியதர வகுப்பினரும், உத்தியோகம் பார்ப்பவர்களும் அதிகமாக இருக்கும் தொகுதி. பழைய காங்கிரஸ் ஆதரவு உள்ள சொக்கிகுளம் பகுதி அது. நம்ம கூட இருந்தவங்க எல்லாம் 'இந்த இடம் வேணும் அண்ணே! நாங்க சொல்றதைக் கேளுங்க'ன்னு சொன்னாங்க. சரிதான், இந்த மாதிரி இடத்திலே நமக்கு ஓட்டுப் போடுவாங்களான்னு பார்க்கலாம் என்று துணிச்சலோட இறங்கிட்டேன். பழைய காங்கிரஸ் பிரமாதமாப் பிரசாரம் பண்ணிச்சு! இதுலே இன்னொரு தமாஷ்



நான் சொன்னால் சொன்னதுதான்...

"எதுக்குங்க நகரசபையிலே கட்சி அடிப்படை?"

பாருங்க, வெற்றி பெற்றால் நான்தான் சேர்மன் என்று அடித்துப் பேசினேன். வெற்றி பெற்றேன். சேர்மனாகவும் ஆனேன். நான் சொன்னால் சொன்னதுதான்!''

—திடமாகச் சொன்னார் மேயர். இந்தத் தேர்தல் சமயத்தில் ஆறு வாக்குறுதிகளைக் கொடுத்தாராம். ஐந்து வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டார்!

மாநிலத்தை ஆளுவது தனது சொந்தக் கட்சிதானே என்று, கோட்டையில் ஆளுவோருடன் எதையும் விட்டுக் கொடுக்காமல் நினைத்ததைப் போராடிச் சாதித்திருக்கிறார் இவர். அதற்கு ஒரு பெரிய உதாரணம்—வரி அப்பீல் கமிட்டியில், நீதிபதிக்கு இடம் தர மறுத்தது.


முத்து கூறினார்:

''இந்தியாவிலேயே எங்கேயுமே செய்யாததுங்க அது! நகரசபை போடும் வரியைப் பற்றி ஜனங்க செய்யும் 'அப்பீலை' கவனிக்கும் கமிட்டியில் ஒரு நீதிபதிதான் தலைவராக இருக்கணுமாம்! அவர் சொல்லும் முடிவுதான் இறுதியானதாம்! நீதிபதிங்க மேலே எனக்கு ஒரு குறையுமில்லீங்க. ஆனா, நாங்க இருக்கிறச்சே இங்கே நீதிபதிக்கு என்ன வேலை? எங்களுக்குன்னா தொகுதியிலே இருக்கிற ஒவ்வொரு மனுசனும் தெரியும். யார் யார் என்ன மாதிரி, எவ்வளவு வீடு வெச்சிருக்கா, என்ன வாடகை வாங்கிண்டு எவ்வளவுக்கு ரசீது தருகிறாங்க என்பதெல்லாம் கவுன்சிலருக்குத் தானுங்களே தெரியும். நீதிபதிக்கு ஊரிலே யாரைத் தெரியும்? அதோட, எல்லாப் பிரச்னைகளையும் சட்டப்படியே பார்த்துக்கிட்டிருந்தா மட்டும் பிரயோசனம் இல்லீங்க. 'மனச்சாட்சி'யையும் கேட்கணும். அதனாலேதான், வரி அப்பீல் கமிட்டியிலே பேப்பரை வெச்சு முடிவு செய்யற நீதிபதி தேவையில்லை என்றேன். மேயரே தலைவராக இருப்பதுதான் சரி என்றேன். அரசாங்கமும் ஒத்துக் கொண்டது.''

சற்று நேரத்தில், மேயர் தலைமையில் கூடிய வரி அப்பீல் கமிட்டியின் கூட்டத்தையும் நேரில் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. தி. மு. க-வைச் சேர்ந்த கவுன்சிலர்களான, ராமாச்சாரி, பூவலிங்கம் ஆகியோரும், ஆளும் காங்கிரசைச் சேர்ந்த கிருஷ்ணமாச்சாரியும், அ.தி.மு.க-வைச் சேர்ந்த சந்தானமும் கமிட்டி உறுப்பினர்களாக, மேயருக்கு மிக நெருக்கமாக அமர்ந்திருக்கிறார்கள்.

அப்போது ஜனசங்க உறுப்பினர் சேஷாச்சாரி உள்ளே வருகிறார். ஏதோ ஒரு ஃபைலில் சுவாரசியமாக மூழ்கியிருந்த மேயர் அவரைக் கவனித்ததாகத் தெரியவில்லை. ஆனால் திடீரென்று தலையைத் தூக்கி நம்மைப் பார்த்து''இரண்டு ஜனசங்க மெம்பர் இருந்தாங்க! ஒருத்தரை நான் நம்ப பக்கம் இழுத்துக்கிட்டேன்'' என்று சிரிப்பை அடக்கிக் கொண்டு கூறுகிறார்.





பொய் சொன்னு வரியை இரண்டு மடங்கு ஆக்கிடுவோம்...

மேயர் ஒவ்வொருவராகப் பெயர் சொல்லி அழைக்க, வெளியில் காத்திருப்பவர்கள் உள்ளே வருகிருர்கள். ஒரு பெரியவர், செருப்பை வாசலில் கழற்றி வைத்துவிட்டு, மேல் துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு உள்ளே வருகிருர். உடனே, ''ஐயா, செருப்பை முதல்லே மாட்டிக்கோங்க! துண்டையும் உங்க தோள்லே போட்டுக்கிட்டு நில்லுங்க! இதென்ன சுயமரியாதை இல்லாமே!'' என்று சீறுகிருர் மேயர்.

(நமது அருகில் அமர்ந்திருக்கும் பழைய காங்கிரஸ் கவுன்சிலர் மகாமணியிடம் மெதுவாக, ''மேயர் இப்படி எப்போதும் கூறுவாரா? இல்லே, நாங்கள் வந்திருக்கிறேம் என்று 'பப்ளிசிடி'க்காக இப்படி...'' என்று இழுக்கிறேம்.

மகாமணியின் முகம் 'சீரியஸாகிறது.' ''சே, சே! இந்த விஷயத்திலே மட்டும் மேயர் எப்பவுமே கண்டிப்பாத்தான் இருப்பாரு'' என்கிருர் அவர்.)

வரி அதிகம் என்று வாதாடுகிறவர்களிடம், துருவித் துருவிக் கேள்விகள் கேட்கிருர் மேயர்: ''எவ்வளவு பேர் குடி இருக்காங்க? ஒருத்தர்தானு? எண்பது ரூபாய்தான் வாடகை வாஙகறீங்களா? உள்ளதைச் சொல்லுங்க! பொய் பேசாதீங்க! நேரில் வந்து பார்ப்போம். பொய் சொன்னதாத் தெரிஞ்சா வரியை இரண்டு மடங்காக ஆக்குவோம்''—என்றும், ''உமக்கு என்னய்யா குறைச்சல்? தாவா போடகாரைப் போட்டுக்கிட்டு மெட்ராஸ் போறதைவிட, கார்ப்பொரேஷனுக்கு வரி கட்டினு, புதுசா நாலு ரோடு போடலாம் இல்லையா?'' என்றும் வருகிறவர்களை எல்லாம் குடைந்து எடுத்தார். ஆனல், சிலர் கூறுவதை மட்டும் 'டக்'கென்று நம்பினர். அவர்களிடம் ''சரி, போங்க!'' என்ருர்.

மற்ற கமிட்டி உறுப்பினர்கள் 'மேயர் வார்த்தைக்கு மேல் எதுவும் இல்லை' என்பது போல் 'கம்'மென்று இருக்கிருர்கள்.

''என் வார்த்தைக்கு நகரசபைக் கூட்டத்திலும் மதிப்பு உண்டுங்க. நான் பதவியில் இருக்கும் இந்த ஐந்தாண்டு காலத்தில், நூத்துக்குத் தொண்ணூத்தொன்பது பிரச்னை வோட்டுக்கு வந்ததேயில்லே. மேயர் சொன்னச் சரிதான் என்று ஒப்புக் கொள்ளுகிருர்கள். வார்டு வேலைகளைப் பொறுத்தவரையில், எது அவசரம், எதைத் தாமதிக்கலாம் என்ற அடிப்படையில்தாங்க பிரச்னைகளைச் சந்திக்கிறேன். கட்சி அடிப்படையில் எதுவும் நான் பார்ப்பது இல்லே. எதுக்குங்க நகரசபையிலே கட்சி அடிப்படை? எனக்கு உண்மையிலேயே நகரசபை, கட்சி அடிப்படையிலே செயல்படுவதே பிடிக்கலீங்க!'' என்ருர் மேயர் முத்து.

(அடுத்த இதழில் முடியும்)


யார் எங்கே. எப்போது?

அண்ணா சாலையில் இருக்கும் அறிஞர் அண்ணாவின் சிலைக்குப் படிகளில் ஏறி மாலையிடுவதைப் பார்க்கிறோம் அல்லவா? இதேபோல ரோம் நகரிலுள்ள ஸ்பானிஷ் சதுக்கத்தில் உயரமான கன்னிமேரியின் சிலை இருக்கிறது. கத்தோலிக்கர்கள், திருநாட்களில் அதற்கு மாலை இடுவதற்குத் தீயணைப்பு அதிகாரிகளிடமிருந்து மிக நீளமான ஏணியை வாங்கிக் கொண்டு வந்து, பூமாலை அணிவிக்கிறார்கள்!


''உலகத்திலேயே மிகவும் நேர்மையும் நாணயமும் கொண்டவர்; பார்க்க அழகும், பாராட்டத் தகுந்த பொறுமையும் கொண்டவர்....''— இப்படி பாரதப் பிரதமர் இந்திரா காந்தியைப் பற்றி அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள் ஆஸ்திரேலிய மக்கள். ஆஸ்திரேலியாவில் நடத்தப்பட்ட கருத்து தெரிவிக்கும் ஓட்டளிப்பு ஒன்றில், ஒன்பது உலகத் தலைவர்களைப் பற்றிய அபிப்பிராயம் மக்களிடம் கேட்டுத் தொகுக்கப்பட்டது. அதில் கிடைத்த முடிவு இது. அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனைப் பற்றிய கருத்து: ''கெட்டிக்காரர்—ஆனால் நாணயமில்லாதவர். கண்டிப்பானவர். — ஆனால் மோசமான தந்திரக்காரர்!''

கிஸ்ஸிஞ்சர், பள்ளிக்கூடத்தில் படித்த போது முதல் பெஞ்சில் படித்த மாணவர்களோடு உட்கார மாட்டார். கடைசி பெஞ்சில் அமர்வது அவருக்குப் பிடிக்கும். அவரது 'பிராக்ரஸ் ரிப்போர்ட்'டின்படி பல சப்ஜெக்ட்டுகளில் மிகக் குறைந்





கிஸ்ஸிஞ்சர்



புட்டோ

மார்க்குகளை வாங்கினர். இங்கிலீஷ், பாட்டு இவற்றில் மட்டும் ஏதோ கொஞ்சம் சுமார்! அப்போதெல்லாம் காப்பி அடிப்பது அவருக்குக் கைவந்த கலை!

மாணவப் பருவத்திலும் பாக் அதிபர் புட்டோ சும்மா இருந்ததில்லை. 1950-ல் அமெரிக்காவில் புட்டோ படித்துக் கொண்டிருக்கும்போது செனட் தேர்தலில் போட்டியிட்ட டக்ளஸ் என்பவரை ஆதரித்து, முழு மூச்சுடன் தேர்தல் பிரசாரம் செய்தார். பாவம்! அவர் ஆதரித்த அபேட்சகர் வெற்றி பெறவில்லை. அவரை எதிர்த்து வெற்றி வாகை சூடியவரின் பெயர் ரிச்சர்ட் நிக்ஸன்.— இன்றைய அமெரிக்க ஜனதிபதி!

அமெரிக்க வீடுகளின் உள்ளேயும் வெளியேயும் உள்ள சுவர்களில் பென்சில், லிப்ஸ்டிக், பெயிண்ட் முதலியவற்றல் கிறுக்கும் பழக்கம் அதிகமாகி விட்டது. இப்போது ஓர் அமெரிக்க கம்பெனி புதிய 'திரவம்' ஒன்றை உருவாக்கி விற்பனைக்குக் கொண்டு வந்திருக்கிறது. இதை வெறுமனே சுவர்களில் அடித்து வைத்தால் போதும். எந்தக் கிறுக்கலையும் ஒரு துணியைக் கொண்டு சுலபமாக அழித்து விடலாம். நம் ஊரில் சுவர்களில் தாரினல் எழுதி அலங்கோலப் படுத்துகிறார்களே! அதனிடம் இந்தப் பார்ச்சா பலிக்குமா?



தொடர்கதை

ஜெயகாந்தன் எழுதும்

குருக்களாத்துப் பையன்


சிறப்புச் சிறுகதை

மற்றும்

திரையுலகில் இளைய தலைமுறை...

புதிய பகுதி

ஒரு போலீஸ் கமிஷனரின் கதை



ஆர். ரகுநாதன், மதுரை.

சட்ட சபையில் பஸ் தேசிய உடைமையாக்கும் சட்டம் வந்தபோது, வலது கம்யூனிஸ்ட் உறுப்பினர் ஒருவர் முதலாளிகளுக்கு ஆதரவாகப் பேசினார் என்று சுப்பு எம். எல். ஏ-யும்; முதலமைச்சர் கருணாநிதியும் கூறியிருக்கிறார்களே?

எம். கல்யாணசுந்தரம்:

இது சுத்தப் பொய். கம்யூனிஸ்ட் கட்சி, முதலாளித்துவத்தை ஆதரிக்கின்ற கட்சியுமல்ல— கருணாநிதி, முதலாளித்துவத்தை ஒழிக்க அவதாரம் எடுத்தவரும் அல்ல. பஸ் போக்குவரத்தை அரசுடைமையாக்குவதில் சிறு உடைமையாளர்கள் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்ற அடிப்படையில் கருத்துத் தெரிவிக்கப் பட்டிருக்கலாம்; அவ்வளவு தான். கருணாநிதி, பஸ்ஸை தேசிய உடைமையாக்கிய முறையால், சில பெரும் பஸ் உரிமையாளர்கள் லட்சக் கணக்கான ரூபாயை நஷ்ட ஈடாகப் பெற்ற விஷயம் ஊர் அறிந்த ஒன்று. இதை மறைக்கவும், கோடிக் கணக்கான கறுப்புப் பணம் வைத்துள்ள முதலாளிகளுடன் தங்களுக்குள்ள உறவை மறைக்கவும், தான் ஏதோ முதலாளித்துவத்தை ஒழிப்பவர்போலவும், கம்யூனிஸ்ட் கட்சி முதலாளிகளை ஆதரிப்பது போலவும் ஒரு போலிக் கற்பனையை கருணாநிதி செய்து பார்க்கிறார்.



அரங்கண்ணல்
கல்யாண சுந்தரம்





எஸ். தங்கராசு,
சென்னை-10.

'இந்தியன் மெடிகல் அசோசியேஷன்' என்ற சங்கத்தின் கீழ் மருத்துவ நிலையம் ஒன்றை இராம அரங்கண்ணல் திறந்து வைத்தார். அதற்கான அழைப்பிதழில் அவர் பெயருடன் 'எம். ஏ.' பட்டம் சேர்த்திருந்தார்கள். ஆனால் சட்டமன்றத்துறை வெளியீடான 'யார்-எவர்' புத்தகத்தில் அரங்கண்ணல் 'இண்டர்'வரை படித்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் எது சரி?

அரங்கண்ணல்:

சட்ட மன்றத்துறை வெளியீட்டில் இருப்பது தான் சரியானது. நீங்கள் குறிப்பிட்ட அழைப்பிதழில் என் பெயருடன் 'எம். ஏ.' பட்டத்தை அவர்களாகவே இணைத்திருக்கிறார்கள்.





சாலையின் குறுக்கே வெட்டிப் போட்டு விட்டுப் போனது சரி செய்யப் படாமலே இருந்தது. அது அவருடைய காரின் டயர்களை வெட்டி இருக்கிறது. இந்த நஷ்டஈட்டுக் கோரிக்கையை நீதிபதி [illegible] வென்று நகராண்மைக் கழகத்துக்குச் சிபாரிசு செய்திருக்கிறார்! இனிமேல் மற்ற [illegible] நகரங்களிலும் இதைப்போல நடக்குமோ என்னவோ? சாலைகளைப் பராமரிப்பவர்கள் ஜாக்கிரதை!

ஒரு மேம்பாலம் (ஃப்ளை-ஓவர்) கட்டுவதற்கு எத்தனை காலம் ஆகும்? 'இரண்டு ஆண்டுகள் ஆகும்' என்று சொல்வோம், சென்னை நகரவாசிகளான நாம். பெல்ஜியத்தில் சுமார் 1500 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட மேம்பாலம் ஒன்றை, 42 மணி நேரத்தில் அமைத்திருக்கிறார்கள்! அஸ்திவாரம் தவிர மற்றவை யாவும் எஃகினால் செய்தவை. எல்லாவற்றையும் முன்கூட்டியே தனியாகத் தயார் செய்து, சாலைக்குக் கொண்டு வந்து 'மளமள'வென்று பொருத்தியிருக்கிறார்கள்!

குமாரி பிரேமலதா எழுதும்
இளந்தளிர்
- இளமைத் தொடர் கதை



ஜெயகாந்தன் எழுதும்
குருக்கள் ஆத்துப் பையன்
- சிறப்புச் சிறுகதை

மற்றும்
திரையுலகில் இளைய தலைமுறை
- புதிய பகுதி
ஒரு போலீஸ் கமிஷனரின் கதை



மதுரை நகராளும் மேயர்...

மேயரின் அறைக் கதவு திறக்கிறது. ஒரு பெண்மணி—குப்பை கூட்டுகிறவர் என்று தெரிகிறது, உள்ளே வருகிறார்.

''வாங்கம்மா, என்ன விஷயம்?'' என்று மூக்குக் கண்ணாடியைக் கழற்றிய படியே அந்தப் பெண்மணியை விசாரிக்கிறார் மேயர் முத்து. அந்த அம்மாளின் குறையைத் தெரிந்து கொண்ட பிறகு, உடனே டெலிபோனை எடுத்து டயல் செய்கிறார்:

''நான் மேயர் பேசறேன்— வணக்கங்க! என்னங்க.....அந்த அம்மாவோட கணவரை எங்கேயோ டிரான்ஸ்பர் பண்ணிட்டிருக்கீங்க! இத்தனை தூரம் தூக்கிப் போட்டா இந்த ஏழை அம்மா என்ன செய்வாங்க? கொஞ்சம் பாருங்க!'' என்கிறார்.

இன்னொரு ஏழைப் பெண்மணி உள்ளே வந்து ஏதோ காகிதத்தை நீட்டுகிறார். மேயர் படித்துவிட்டு, மீண்டும் டயல் செய்கிறார்:

''என்னங்க... ஆபீசா! ஏழைப்பெண்களுக்குத் தையல் மிஷின் தர்றீங்களாமே! நான் ஒரு ஏழைப் பெண் பெயர் தர்றேன். முடிஞ்சா கொடுங்க!'' என்கிறார்.

சில நிமிடங்களில் முடிவு எடுக்கிறார். அடுத்த சில விநாடிகளில் காரியத்தில் இறங்குகிறார் அவர்.

அந்த ஏழைப் பெண்மணிகளின் முகத்தில் திருப்தியால் முறுவல் பூக்கிறது. மாநகராட்சி அலுவலகத்தில் யாரும் எளிதில் கதவைத் திறந்து கொண்டு மேயரின் அறைக்குள் நுழைய முடிகிறது. நியாயமான கோரிக்கைகளைக் கொண்டு வரும் எவருக்கும் சம்பந்தப்பட்டவர்களிடம் உடனடியாகத் தொடர்பு கொண்டு, 'அதிகார தொனி'யில்லாமல் சிபாரிசு செய்கிறார் மேயர்.

இதை எல்லாம் பார்த்த பிறகு நமது உள்ளத்தில் நீண்ட நேரமாக உறுத்திக் கொண்டிருக்கும் எண்ணம் கேள்வியாக உருவெடுக்கிறது:

''ஆமாம்! வெளியூர்களில் உங்களைப் பற்றி எப்படி வேறு மாதிரியாக பேசுகிறார்கள் என்று புரியவில்லையே?''

''என்ன சொல்றாங்க? நான் பொல்லாதவன், ரௌடின்னுதானே? ரௌடின்னு ஏன் சொல்றாங்கன்னு சொன்னா, ஒரே ஒரு காரணம்தான் தோணுது. அப்போவெல்லாம் அரசியலில் போட்டி, எதிர்ப் போட்டி, அடி, வெட்டு- இப்படி இருந்தது. எல்லாக் கட்சியிலுமே சட்டையை மடக்கி விட்டுக் கொண்டு அதை எதிர்த்துச் சமாளிச்சவர்கள் இருந்தாங்க. கழகத்தில் மதுரை முத்து பெயர்தான் பெரிசா விளம்பரமாயிருக்கு. அதனாலே என்னை 'ரௌடி'ன்னு சொல்றாங்க போலிருக்கு.''

—மதுரை முத்து இப்படிக் கூறினார். பிறகு மூக்குக் கண்ணாடியைக் கழற்றி வைத்து விட்டு ஆவேசமாகக் கூறினார்:

''ஆனால் ஒண்ணு மட்டும் சொல்றேங்க! நான் பிறந்ததிலேந்து என் ரத்தத்திலே துளி அளவு கோழைத்தனம் கூட கிடையாது. பயம்னா என்னன்னே

"எதுக்குமே 'கண்டிஷன்' போடறது எனக்கு பிடிக்காத விஷயங்க..."

தெரியாது! 'ஏன் தெரியாது'ன்னா அது அப்படித்தான்! எனக்கே புரியலீங்க! ஐயாயிரம் பேர் கூடியுள்ள பொதுக் கூட்டத்தின் நடுவிலே நான் வந்தேன்னு வெச்சுக்கோங்க! மேடையில் பேசறவன் என்னைப் பத்தி மட்டமா கன்னா பின்னான்னு பேசினா, கூடியிருக்கிற கூட்டத்தைப் பார்த்து அசந்துட மாட்டேன். 'டேய், —யார்ரா அவன்! என்னைப் பத்தி கேவலமா பேசறது'ன்னு பாய்வேன். எத்தனை கூட்டம் இருக்கட்டுமே! அத்தனையும் சிதறிப் போயிடுங்க... ஒரு சமயம் நான் காரில் போறச்சே, ஆறு குதிரை வண்டியிலே வந்த முப்பது நாப்பது பேரு என்னைப் பார்த்து'டேய் முத்து!' அப்படி இப்படீன்னு கேவலமாக் கூச்சல் போட்டாங்க! நான் கண்டுக்காமெ நேரா போயிருக்கலாம்... செய்வேனா? காரை நிறுத்திட்டு, ஒரு குதிரை வண்டி மேலே பாஞ்சேன்! குதிரையைப்



மாடிக்குப் போக காரா?

பிடிச்சு நிறுத்திக்கிட்டு, 'எவண்டாவன் கூச்சல் போட்டது'ன்னு கேட்டேன். அவ்வளவுதான்; அத்தனை பேரும் மொத்தமா, 'அண்ணே! தெரியாமெ சொல்லிட்டோங்க! விளையாட்டுத்தனமாப் பேசிட்டோங்க'ன்னு காலில் விழுந்தாங்க! 'சரி! போங்கடா'ன்னு விட்டுட்டேன்னு வெச்சுக்குங்க...... எதுக்குச் சொல்றேன்னா 'இந்த ஆளு உண்மையாவே எதுக்கும் பயப்படமாட்டான். எதையும் துணிச்சலா எதிர்த்து நிப்பான்'னு தெரிஞ்சு போயிடுச்சுன்னா எப்பேர்ப்பட்டவனும் பயப்படுவான்! அதனாலே, முத்து ரௌடின்னு சொன்னா சொல்லிக்கிட்டுப் போகட்டுமே ... அது கூட ஒருவிதத்திலே நமக்கு நல்லது தான்னு விட்டுட்டேன்...''

சாத்தமங்கலத்தில் உள்ள மேயரின் புதிய வீட்டைப் பற்றித்தான் எத்தனை விதமான 'பேச்சுக்கள்' மதுரையிலேயே உலாவுகிறது! நேராகக் காரிலேயே அந்த வீட்டின் மாடிக்குப் போகும்படி அந்த வீடு அமர்க்களமாகக் கட்டப்பட்டிருப்பதாகக் கூறினார்கள்! அந்த வீட்டை வைத்துத்தான் தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. அக்னிராஜ், முத்துவைத் தாக்கிப் பேசியதாகவும், அதை அடுத்துதான் முத்து கோபமாக வெளியேறியதாகவும் சொன்னார்கள்.

வீட்டில் குடும்பத்தாருடன் சேர்ந்து இருப்பது போல மேயருடைய புகைப்படத்தை எடுக்க வேண்டும் என்று சொன்னபோது, மனைவி, மகன் எல்லோரையும் போட்டோவில் நிற்பதற்காகப் பல முறை அழைத்தார் மேயர். ஒருவராவது சீக்கிரத்தில் வரவேண்டுமே! மனைவி ரஞ்சிதம் அம்மாள் கடைசியாக வந்து, முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு கணவர் அருகில் அமர்ந்தார்.

''அங்கே பார்த்தா போட்டோவில் முகம் விழுமா?'' என்று மனைவியின் முகத்தைக் கையால் திருப்பிய மேயர், ''சார்! ரௌடி குடும்பம்னு சொல்றீங்களே! பார்த்தீங்களா? எத்தனை வெட்கமும், தயக்கமும்.... ஒண்ணு நிக்குதா பாருங்க போட்டோவுக்கு... ஒரே 'ஷை'யுங்க' என்று சொல்லிக் கொண்டே மனைவியின் நெற்றியில் விழுந்திருந்த முடி ஒன்றைக் கோதி விட்டுச் சரிப்படுத்தினார்.

''உங்களைப் பற்றி வெளியே பேசுவதில் நிறைய வதந்திகளும் இருக்கும் போல் இருக்கிறது! நீங்கள் கட்டியிருக்கிற இந்தப் புது வீட்டைப் பற்றிக்கூட மதுரையிலேயே?...'' என்று நாங்கள் இழுக்கிறோம்.

''தெரியுங்க. அப்படியே காரில் மாடிக்குப் போகறாப்பலே வழி வெச்சு கட்டியிருக்கேன்னு பேசிக்கிறாங்க! எங்கே சார் அப்படியிருக்கு? நீங்களே பார்க்கறீங்களே? கார் ரோடிலே தானுங்களே நிக்குது? அதோட, இந்த வீட்டு மேலே எண்பதாயிரம் ரூபாய் கடன் இருக்குங்க...''

அரசியலில் நீண்ட பின்னணி அவருடையது. ராமனாதபுரத்தில் பெரும்பச்சேரி கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில்

''நான் மனம் உடையவும் இல்லை. விரக்தி அடையவும் இல்லை...''

பிறந்த அவர், இரண்டரை வயதில் தந்தையை இழந்தார். செட்டியார் வீட்டில் கணக்குப் பிள்ளை வேலை பார்த்து வந்த தாய்மாமன் வீட்டில் வளர்ந்திருக்கிறார். பதின்மூன்று வயதிலிருந்து பர்மாவுக்குப் போவதும் திரும்புவதுமாக இருந்தவர், 1937-ல் 'ஹார்வி' மில்லில் தொழிலாளியாக வேலையில் சேர்ந்தார்.

''அப்போது எஸ்.ஆர். வரதராஜுலு நாயுடு, தொழிற்சங்கத் தலைவராக இருந்தார். அவரோடே எல்லோரும் ஒத்துப் போகணுங்க! சுதந்திர மனப்பான்மை [illegible] சாமி' போட முடியல்லே. 1942-ல் ஒரு தொழில் தகராறிலே 200 பேர் என்னை சூழ்ந்து கொண்டு ஒரேயடியாகச் சேர்ந்து தாக்கினாங்க. கத்தியால் வெட்டினாங்க. ஏறி மிதிச்சாங்க. என் கூட இருந்தவங்க எல்லாம் ஓடிப் போக, நான் மட்டும் ஆவறது ஆவட்டும்னு தன்னந் தனியாக எதிர்த்தேன். நான் செத்துப் போயிட்டேன்னு நினைக்கும் வரையில் நொறுக்கினாங்க. இதோ பாருங்க.........''

நாற்காலியைத் தள்ளிவிட்டு எழுந்து நின்ற மேயர், தன் சட்டையையும் பனியனையும் கழற்றி, உடலெங்குப் உள்ள காயங்களைக் காட்டினார். வலது கையில் மட்டும் ஏழு வெட்டுகள்! நரம்புகள், சதைகள் அறுந்ததால், தொடையிலும், புஜத்திலும் சில இடங்கள் சூம்பிப் போய்க் காட்சி அளித்தன. உடலெங்கும் விதவிதமான டிசைன்களில் வெட்டுக் காயங்கள்! வெட்டுப்பட்ட இடங்களிலெல்லாம் மரவட்டை வடிவங்களில் தையல்கள்!

பிறகு இவர், டீ ஹோட்டல் நடத்தியிருக்கிறார். அங்கேயும் ஒரு நாள் இவர் செய்திப் பத்திரிகை படித்துக் கொண்டிருக்கும்போது திடீரென்று இவரைத் தாக்கி, கொளுத்தும் வெயிலில் பாய்லர் தண்ணீரை அப்படியே மேலே கவிழ்த்து விட்டார்களாம். ''முகமெல்லாம் குஷ்டரோகம் பிடித்தவன் போலக் காட்சி அளித்தது. ஏன்? குஷ்டரோகர் என்றே நினைத்து மதுரையில் பல ஹோட்டல்களில் என்னை ஏற விடலேங்க. ஒன்றரை வருடம் வெளியே தலை காட்டாமல் வெட்கத்தோடு வீட்டிலேயே அடைந்து கிடந்தேன்'' என்றார் முத்து.

நடுவில் கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் சதி செய்ததாகப் பதினேரு மாதம் சிறையில் இருந்தார்.

''பிறகு திராவிடக் கழகத்தில் சேர்ந்தேன். 1949-ல் தி.மு.க. ஆனேன். 'மாலை மணி' ஏஜெண்டாக, டவுன் ஹால் ரோடில் கடை வைத்தேன். தி.க., தி.மு.க. போராட்டங்களில் சிறை சென்றேன். கட்சிப் போராட்டத்தையும் இல்லறத்தையும் ஒரே சமயத்திலே நடத்திக்கிட்டுப் போகும் படியான நிலைமை இருந்ததுங்க எனக்கு! தி.மு.க. பெரிய போராட்[illegible]. அந்தச் சமயத்தில் மனைவி கர்ப்பமா இருப்பாள். ஒரு சம[illegible] தி.மு.க.போராட்டத்தில் கலந்துண்டவங்களுக்கு நாலு மாதச் சிறைத் தண்டனை கொடுத்தாங்க. அந்த சமயத்திலே என் மனைவி ஆறு மாத கர்ப்பம். [illegible] உடனே போராட்டத்தில் இறங்கி சிறைக்குப் போனால் நாலு மாதம் கழித்து, மனைவி பிரசவத்திற்கு, வெளியே வரலாம்னு நினைச்சேன். அண்ணாவிடம் அனுமதி வாங்கிண்டு போராட்டத்திலே குதிச்சேன். என் ராசிங்க! எனக்கு மட்டும் ஒன்றரை வருடம் ஜெயில் தண்டனை கிடைச்சதுங்க'' என்று விவரித்தார் முத்து.

1948-ல்தான் திருமணம் நடந்தது. தாய்மாமன் மகளை இவர் காதலித்திருக்கிறார். எட்டு ஆண்டுகள் அவளுக்காகக் காத்திருந்தார். தாய்மாமன், மத ஆசாரங்களில் நம்பிக்கையுள்ளவர். இவர் தி.க-வில் இருக்கிறார். ''மனம் மாறினால் பெண் தருவேன்'' என்று கூறியிருக்கிறார்.

''[illegible] இந்தக் 'கண்டிஷன்' போடற பழக்கமெல்லாம் எனக்குப் பிடிக்காத விஷயங்க! அதுவரைக்கும் அவளுக்காகக் காத்துக்கிட்டிருந்த நான், தி.க.விலே இருக்கற ஒரே காரணத்துக்காகப் பெண் கொடுக்கலேங்கிற விஷயம் தெரிஞ்ச உடனே அவளை மறந்துட்டு இவளைக் கட்டிக் கொண்டேன். ரஞ்சிதம் எனக்கு எல்லா விதத்திலும் துணை நிக்கறா! ஒவ்வொரு பிரச்னையிலும் பக்கபலமா இருக்கிறா!'' என்று ஒருவித பெருமிதத்துடன் மனைவியைப் பார்த்தபடி கூறினார். அவர். ஐந்து பெண்கள், இரண்டு பையன்கள் இவருக்கு! இரண்டு பெண்களுக்கு மணம் முடித்திருக்கிறார்.

''பையன்களுக்கு நல்லதம்பி, கருணாநிதி என்று பெயர்! நல்லதம்பி என்ற பெயர், அண்ணா வெச்சது. நல்லதம்பிக்கும்,

கடைக்குட்டி கருணாநிதிக்கும் குணத்தில் ரொம்ப வித்தியாசம்! ஊருக்கெல்லாம் உதவணும்னு நல்லதம்பி நினைக்கிறான். தினம் யாரையாவது சிபாரிசுக்கு அழைச்சுக்கிட்டு வந்து, 'பாவம்! செய்யுங்கப்பா'ன்னுவான். ஆனா இந்தக் கருணாநிதி இருக்கானே! படு கஞ்சன்! ஒரு பைசாக்கூட தானம் பண்ண மாட்டான். இப்பவே ஸ்டேட் பாங்கில் பணம் சேர்த்துக்கிட்டு வர்றான்!''

—சிரிக்கிறார் முத்து!

மதுரை முத்து என்றவுடன் நினைவிற்கு வரும் முக்கியமான விஷயங்களில் தமிழர்ப் படையும் ஒன்றாயிற்றே! அது பற்றி ஒரு வார்த்தை கூடக் கேட்காமல் முத்துவுடன் ஒரு பேட்டியா? ஆனால் தமிழர்ப் படையைப் பற்றிக் கேட்டவுடன் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டார் முத்து: ''அதுக்கு அடிப்படையே இல்லீங்க!... என் வீட்டுக் கல்யாணத்துக்கு முதலமைச்சரா யிருந்த அண்ணா வந்தபோது காங்கிரஸ்காரங்க கறுப்புக்கொடி காட்டறதாச் சொன்னாங்க! எனக்கு நிசமாவே கோபம் வந்துடுத்துங்க. 'என்னடா இது, 'பர்சனல்' விஷயம்... நம்ம கல்யாணத்துக்கு வரும்போது கூடவா எதிர்ப்பு' அப்படின்னு நானும் நம்ம ஆளுங்களைத் திரட்டி எல்லோருக்கும் 'தமிழர்ப்படை' ன்னு 'பாட்ஜு' வேறு செய்து கொடுத்து மாட்டிக்கச் சொல்லி, கறுப்புக் கொடி காட்டறதை எதிர்க்கச் சொன்னேன். பிறகு இதுவே நல்ல டெக்னிக்கா தோணிச்சு. தேவைப் படும்போது உபயோகிச்சுக்கிடறது. வேறே அதிலே ஒண்ணும் அரசியல் கிடையாதுங்க.''

முத்து பேசியதாகச் சொல்லப் படும் பிரிவினைப் பேச்சு பற்றிக் கேட்டிருந்தால் கூட,

''அது ஒண்ணும் பிரமாதமான விஷயமில்லீங்க'' என்று ஆரம்பித்து அவருக்கே உரித்தான 'முத்துச் சிரிப்பு' உதிர்த்திருப்பாரோ என்னவோ!

''அரசியலைப் பத்தி ஒண்ணும் கேட்காதீங்க'' என்றார் அவர்.

''கேட்கவில்லை. ஆனால் நீங்க சமீப காலமாக மனம் உடைந்து போயிருக்கீங்க. விரக்தி அடைந்து இருக்கீங்கன்னு சொல்றாங்களே......''

''நான் மனம் உடையவும் இல்லே; விரக்தி அடையவும் இல்லே. என் ஜன்மத்தில் அப்படி நடக்காதுங்க. எதுக்கும் உடனே பதில் சொல்றவன், சவால் விடுபவன், '**இதுக்கும்**' பதில் சொல்வான்னு எல்லாரும் எதிர்பார்த்திருப்பாங்க! சரி ... இப்போதைக்கு இந்த விஷயம் வேண்டாங்க. விட்டுடுங்க...''

முத்து இல்லாமல் சென்ற மாதம் தி. மு. கழகம் மதுரையில் நடத்திய ஊர்வலம் மிகப் பெரிதாகத்தான் இருந்தது என்று எல்லோரும் கூறுகிறார்கள். ஆனால் முத்து இல்லாததால் தொண்டர்கள் சோர்வுடன் இருந்ததையும் கூடவே ஒப்புக் கொள்கிறார்கள்.


அரசியலில் மதுரை முத்துவைப் பற்றிச் சிலர் தாக்கிப் பேசினாலும், மேயர் என்ற முறையில் அவர் மிகுந்த செல்வாக்குடன், எதிர்க் கட்சிகளின் மரியாதையையும் பெற்றவராய்த் திகழ்கிறார் என்பதை யாரும் மறைப்பதற்கில்லை. அதை நிரூபிக்கும் நிகழ்ச்சிகளை அன்று பல முறை நேரிலேயே பார்த்தோம்.

''முதல் நாள் மாலையில் பொதுக் கூட்டத்தில் மேயரை கடுமையாகத் தாக்கிப் பேசிய போதும், மறுநாள் மேயரை சந்திக்க நேர்ந்தால், அதைப் பற்றி ஒரு வார்த்தை கேட்காமல் வழக்கம் போல அன்போடு பேசுவார்'' என்று மனம் விட்டுக் கூறினார்கள், சில பழைய காங்கிரஸ் கவுன்சிலர்கள்.

ஓர் அரசியல்வாதியைப் பற்றி அவருடைய பேச்சுக்கள், அவரைப் பற்றிப் பரப்பப்படும் பிரசாரங்கள் இவற்றை வைத்து நாம் உருவாக்கிக் கொள்ளும் எண்ணங்கள் எல்லாம் அந்த அரசியல்வாதியை நேரில் சந்தித்துப் பழகும் போது தவிடு பொடியாகி விடுவது உண்டு. 'அப்படிப்பட்ட அரசியல்வாதிகளில் மதுரை முத்துவும் ஒருவர்' என்ற எண்ணத்துடன்தான் அவரிடம் விடை பெற்றோம்.

—ராவ்

''முதுகிலேயும் பாருங்க..''



தீபாவளி விசேஷ விற்பனை !

NALLI SILKS
- SILK SAREES -



1973
தீபாவளிக்கு
புதிய தினுசுகள்!

புதிய கலர்கள்: கிரிஜா • கங்கா
புதிய டிசைன்கள்: ஜெயந்தி • சிருங்கார்
புதிய கட்டம்: ராணி

வண்ணச் சேர்க்கையில் உருவாக்கிய இப்புதிய கலர்கள்
ஒன் - சைட் & டபுள் - சைட் பார்டர்களில் கிடைக்கும்.

முந்திய தீபாவளி கலர்களுக்கு இந்த தீபாவளி
புதிய கலர்கள் ஜோடியாக இருக்கும்.

பட்டுச் சேலைகளுக்கு மட்டுமே பிரத்யேகமான
ஒரே ஷோரூம் — இப்பொழுது முழுவதும்
ஏர் - கண்டிஷன் வசதி செய்யப்பட்டுள்ளது

தீபாவளி புதிய கலர்களை அறிமுகம் செய்யும் முன்னோடிகள்

நல்லி சில்க்ஸ்

பட்டு சேலைகள்

82, ராயப்பேட்டை ஹைரோடு, லஸ், மயிலாப்பூர், சென்னை-4.
(போன்: 74862)

தீபாவளி வரை எல்லா ஞாயிற்றுக் கிழமைகளிலும் விற்பனை உண்டு!

எமது தயாரிப்புகள் அனைத்தும் கல்கத்தாவில்
கிடைக்குமிடம்:
கணேஷ்ராம் சில்க் பாலஸ்,
2-A, பிபின் பால் ரோடு, கல்கத்தா-26.



வெளிச்சம்

— ஜே.எம்.சாலி —

சபாபதிப் பிள்ளை ஆடிப போயிருந்தார். ஆற்றில் அலறக் குளித்துவிட்டு வந்து அகம் உருக அருட்பாவை முணுமுணுத்த போதும் கூட மன வெப்பம் அடங்கவில்லை.

அந்தச் செய்தி எட்டிய பிறகு அண்ணாமலையை நிமிர்ந்து பார்க்கக் கூசினார். அவன், அவருக்கு ஒரே பிள்ளை. அப்பாவும் பிள்ளையும் ஒன்றாகச் சாப்பிடுவார்கள். மனம் விட்டுப் பேசுவார்கள். காலையில் ரைஸ் மில்லுக்குப் போகும் போது அவரிடம் சொல்லி விட்டுப் போவது அண்ணாமலையின் பழக்கம்.

அவன் இன்னும் புறப்படவில்லை.

''மீனாட்சி... பலகாரம் எடுத்து வை. மில்லுக்குப் போகணும்...'' என்று அவர் காதில் விழுகிற மாதிரி, மனைவியிடம் சொன்னான் அண்ணாமலை.

''ஏன் இவ்வளவு அவசரப்படுறீங்க? மாமா இன்னும் ஆத்தங்கரையிலேருந்து வரலியே...''—மீனாட்சி சொன்னாள்.

''வர்றபடி வரட்டும். நான் ரெடியாயிட்டேன். யாருக்காகவும் காத்திருக்க முடியாது'' என்றான் அவன்.

''சரி, உட்காருங்க!''

சபாபதிப் பிள்ளை வீட்டுக்கு வந்து, அருட்பாவைப் பிரித்து வைத்துக் கொண்டிருப்பதை மீனாட்சி பார்க்கவில்லை.

பத்து நிமிடம்கூட ஆகவில்லை. அண்ணாமலை சைக்கிளில் புறப்பட்டுப் போனதைக் கவனித்தார் சபாபதி. அவரிடம் சொல்லிக் கொள்ள வேண்டுமே, இல்லை! அண்ணாமலை இவ்வளவு சீக்கிரமாகப் போய் ஆக வேண்டியது ஒன்றுமில்லை. அரவைக்காகப் பதினைந்து இருபது வாடிக்கை வரும். பத்து மணிக்கு ஆலையைத் திறந்தாலே போதும். 'அவசரப்பட்டுக் கொண்டு ஏன் ஓடுகிறாய்?' என்று அவர் மகனைக் கேட்க முடியும். கேட்கவில்லை. கேட்க முடியாதபடி ஒரு திரை விழுந்திருப்பதாகக் குறுகுறுப்பு. சில தினங்களாக ஒரு மாறுதல். சீக்கிரமாகக் கிளம்பிப் போவதும், இரவில் நேரம் கழித்து வருவதுமாக இருந்தான் அண்ணாமலை.

சபாபதிப் பிள்ளை அருட்பாவில் லயிக்க முயன்றார்; முடியவில்லை.

''சாப்பிட வாங்க...'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தார். மீனாட்சி...காற்றில் நெளியும் கருப்பந்தோகை மாதிரி கண்ணிலும் கன்னத்திலும் இதழிலும் புன்னகை குலுங்க, அந்தக் காலை நேரத்திலேயே பளிச்சென்று நின்றாள் மீனாட்சி. ஒரு நிமிடம் மருமகளைப் பார்த்துவிட்டு, ''அண்ணாமலை...?'' என்று ஒப்புக்காகக் கேட்டார்.

''அவசரமாம். சித்த முந்தித்தான் சாப்பிட்டுவிட்டுப் போனார்.''

சபாபதி எழுந்தார். அவன் புறப்பட்டுப் போனதுதான் தெரியுமே...

சபாபதி, மில் பக்கம் போவதில்லை. அதற்கு அவசியம் இருக்கவில்லை. வீடு, ஆற்றுப்படுகை, கோயில், ராமலிங்கர் மடம்—இந்த வட்டத்திற்குள் அவருடைய் பொழுது கழிந்து கொண்டிருந்தது சுகமாக.

இப்படிச் சுகமாக இருக்க விட்டு வைப்பார்களா? அடியார் என்றும், தொண்டர் என்றும் அவருடைய அருமை பெருமைகளைப் பேசினார்கள். அது ஒரு கட்டம். அவருடைய வயதைப் பற்றியும் 'வாலிபம்' பற்றியும் சர்ச்சைகள். ''எம்பளது வயசானலும் சபாபதி இளசாகத்தான் இருப்பார் போலத் தெரியுது. என்னமோ ரகசியம் இருக்கு, இந்த ஆசாமிகிட்டே'' என்று கிசுகிசுத்தார்கள்.

அது என்ன ரகசியமோ?

'சமாதி பழசாகி விட்டது; சபாபதி கிழமாகவில்லை' என்று பேசுவதும் சகஜமாகிவிட்டது. அவர் காதில் விழாமல் இல்லை, 'நான் என்ன செய்யட்டும்? அழைப்பு இன்னும் வரவில்லையே' என்று நினைத்துத் தனக்குள் சிரித்துக் கொள்வார். சபாபதிப் பிள்ளை என்ற பெயர் போய் சமாதிப் பிள்ளை என்பதே நிலைத்து விட்டது. ஆனல் அவர் முன்னிலையில் யாரும் இப்படி அழைப்பதில்லை.

அவர் சமாதி கட்டிய கதை இருக்கிறதே...!

நாற்பத்தெட்டு வயதில் அவருக்கு ஓர் எண்ணம் உதித்தது. அது ஞானமோ, இல்லை, கனவோ! அதிக காலம் இருப்போமோ, மாட்டோமோ என்று நினைத்துக் கொண்டு அப்பொழுதே மறுமைக்கு அஸ்திவாரம் போட ஆரம்பித்து விட்டார். தான் கண்ணை மூடிய பிறகு அடங்குவதற்கென்று ஒரு சமாதி மண்டபத்தைக் கட்டத் தொடங்கினர்.

ஆற்றங்கரையில் அவருக்குப் பெரிய தோட்டம். தென்னையும், மாவும் நிரம்ப உண்டு. ஓய்வு கொள்வதற்கு அதைவிடச் சிறந்த இடம் இல்லை என்ற முடிவில் வேலையை ஆரம்பித்தார் சபாபதி. யாரிடமும் பிரஸ்தாபிக்கவில்லை.

தோட்டத்திற்குள் அந்தச் சிறு கட்டடம் எழுந்து நின்ற பிறகுதான் அது என்ன என்பது ஊரில் பலருக்குத் தெரிந்தது. 'நாற்பத்தெட்டு வயதில் ஞானம் வந்து விட்டதாக்கும்! சமாதி எதற்கு? சாமியாராக சஞ்சாரம் போக வேண்டியதுதானே' என்று சிலர் சிரித்தார்கள்.

அவருக்கு ஞானம் பிறந்ததோ இல்லையோ, பல விஷயங்களில் ஞானம் உண்டு. திருமுறைகளில் பிரியம் உண்டு. அருட்பாவில் உயிர் வைத்திருந்தார்.

முதலில் சிரித்தது அவர் மனைவி பார்வதிதான்:

''நீங்க செய்யறது கொஞ்சங்கூட நல்லா இல்லீங்க. நரை, திரை, மூப்பு கண்டு, நடக்க முடியாமெ கிழங்கட்டையாகிப் போனவங்ககூட கடைசிக் காலத்தைப் பத்திக் கவலைப்படலே. இன்னும் கொஞ்ச காலம் வாழணும்னுதான் ஆசைப்படறாங்க. நீங்க என்னடான்னு நல்லா இருக்கிற நாள்லேயே கோயில் மாதிரி சமாதி கட்டி வச்சிருக்கிறது அதிசயமாத்தான் இருக்கு, போங்க. இன்னிக்கும் புது மாப்பிள்ளையாட்டம் இருக்கிறீங்க...''— அதற்கு மேல் பேச முடியாதபடி பார்வதிக்கு வெட்கம் வந்து விட்டது.

''என்னமோ ஒரு உதிப்பு பார்வதி. எதுக்கும் தயாரா இருக்கணும், இல்லையா? அப்பத்தான் அச்சம், ஆபத்து எதுவும் தொத்தாது, இல்லையா?'' என்றார் சபாபதி.

''நீங்க நினைக்கிறபடி ஒண்ணும் நடக்காது. இன்னிக்கு நான் சொல்றேன்.''

''என்ன சொல்றே?''

''நான் உங்களை முந்திக்குவேன்...''

''சீ, இன்னொருதரம் சொல்லாதே!''

''நீங்க பார்க்கத்தான் போறீங்க...''





''இல்லே. நீதான் பார்க்கப் போறே.''

பார்வதி 'இடி இடி'யென்று சிரித்தாள்:

''நீங்க ஒரு பைத்தியம். நான் சின்னப் பொண்ணு இருக்கிறப்பவே கேள்விப் பட்டிருக்கேன்...''

''என்ன கேள்விப்பட்டே?''

''உலகத்திலே ரொம்ப காலம் வாழணும்னு உயிரோட இருக்கறப்போ ஒரு சமாதி கட்டி வச்சிப்பிடணுமாம்...'' என்றாள் பார்வதி, குறும்பாக.

''உனக்கு எல்லாம் கேலியாகத்தான் இருக்கும்.''

''இல்லீங்க ...... இது கேள்வி அனுபவம்.''

''அதெல்லாம் சுத்தப் பொய். முடிவு எப்போ வரும்ங்கிறது சில பேருக்கு முன்னாடியே தெரிஞ்சிடும்.''

''ஆனா, உங்களுக்கு அதெல்லாம் தெரியாது'' என்றாள் பார்வதி.

சபாபதி அந்த சமாதிக் கட்டடத்தை முடித்து இரண்டு வருடம்கூட ஆகவில்லை. சிரித்தபடியே பார்வதி சுமங்கலியாகப் போய் விட்டாள். அது அவரைக் குலுக்கி விட்டது. ஒருவழியாகத் தேறினார்.

அவருக்கு அறுபதுக்கு மேல் ஆகி விட்டது. பார்வதி போய் ஒரு மாமாங்கம் ஓடிவிட்டது. நரை, திரை, மூப்பு, பிணிக்கு அப்பாற்பட்டவர் போல் இருக்



கிறார் சபாபதிப் பிள்ளை. வெயில், மழை, பனி எல்லாவற்றுக்கும் ஆளாகி அந்த சமாதி மண்டபம் கூடப் பாசியும் கருமையும் பிடித்து விட்டது. அவர் அப்படியே தான் இருக்கிறார். சபாபதியும் அண்ணாமலையும் தோற்றத்தில் அண்ணன் தம்பி மாதிரி இருக்கிறார்கள் என்று கூடப் பேச்சு உண்டு. வேர்ப் பலா மாதிரி ஏதோ

ஒரு ரகசியம் அவரிடம் புதைந்து கிடக்கிறது என்கிறார்கள். அது என்ன? அவர் காதுக்கு எட்டிய அந்தச் செய்தி மீனாட்சிக்கும் எட்டியிருக்குமோ?

ஓய்வு கொள்ள முடியாதபடி சபாபதிக்குத் துடிப்பு.

ரைஸ் மில் இரைச்சல் ஓய்ந்துவிட்டது. இரைச்சலெல்லாம் இப்போது அண்ணாமலையின் உள்ளத்தில்தான் இருந்தது. நெற்றியை அழுத்திப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். நிமிர முடியாதபடி நெஞ்சில் நலிவு; மெலிவு.

இனி இரண்டு மணிக்கு அப்புறம் தான் 'மெஷின்' ஓடும். வீட்டுக்குப் போய் சாப்பிட்டு விட்டு வரலாம். அண்ணாமலைக்கு விம்பு, வெறுப்பு. மில் பொடியன் சிங்காரம் சாப்பாடு எடுத்து வர வீட்டுக்குப் போயிருந்தான். மெஷினில் நிற்கும் 'டிரைவர்' நடேச படையாச்சியும்சாப்பிடப்போயிருந்தார்.

'அண்ணாமலைக்கு ரைஸ் மில்தான் உலகம்' என்று மில்லுக்கு வருகிறவர்கள் சொல்வார்கள். அதில் உண்மை இருந்தது. அண்ணாமலை பேப்பர் படிப்பது, கடிதம் எழுதுவது, நில விஷயங்களைக் கவனிப்பது எல்லாமே அங்கே இருந்தபடிதான்.

''பிள்ளையாண்டானுக்கு மில்தான் பொண்டாட்டி; பொண்டாட்டிக்குத் துணை, மாமனார். நல்ல கூத்தய்யா...'' என்று மில் ஓரத்தில் சாலைப் பக்கம் யாரோ ஒரு நாள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டபோது கூட அண்ணாமலைக்கு விகற்பமோ, வித்தியாசமோ தோன்றவில்லை. 'அப்பாவைப் போல் உண்டா' என்ற பெருமை அவனுக்கு.

''அடியார் வேஷம் போடுகிறார். ஆசையும், மீசையும் நரைக்கவில்லை. அழகான பெண், பக்கத்தில் இருக்கறப்போ என்னய்யா குறைச்சல் அவருக்கு?'' என்று இன்னொரு நாள் குரல் கேட்டது.

''பகலெல்லாம் அங்கே அவர்கள் அடிக்கிற கூத்து அண்ணாமலையாருக்குத் தெரியுமோ?''—இப்படி ஒரு பேச்சு.

மில்லுக்கு வரும் ஒவ்வொருவரின் பார்வையும் ஏளனப் பார்வையாக அவனுக்குத் தோன்றியது. கண்ணை மூடிக் கொள்ள முயன்றான். மனத்தை மூட முடியுமோ? ஓய்வு ஒழிவு இல்லாதபடி இழை இழையாக எண்ணங்கள் நீண்டு பின்னலிட்டுக் கொண்டிருந்தன.

மீனாட்சியிடம் சில தினங்களாக அவன் முகம் கொடுக்கவில்லை. சபாபதிப் பிள்ளையிடமும் பேச்சுக் கொடுக்கவில்லை.

''அண்ணே, சாப்பாடு வச்சிருக்கேன்'' என்று குரல் கொடுத்தான் சிங்காரம்.

கையை நனைத்துவிட்டு இரண்டு நிமிஷத்தில் எழுந்து விட்டான் அண்ணாமலை.

''சிங்காரம்!''

''என்னங்க அண்ணே?''

''வீட்டிலே ஐயா இருக்காரா?''

''இருக்காங்க...''

ஏதோ கேட்க வேண்டும் என்ற துடிப்பு.

''சின்னம்மா?'' என்றான்.

''ஐயாவும் அவங்களும் உள்ளே பேசிக்கிட்டிருந்தாங்க ...''

அதற்குமேல் அண்ணாமலை கேட்கத் தயாராயில்லை.

நடேசப் படையாச்சி திரும்பி யிருந்தார். சில அரவைக் கிராக்கிகள் வந்துவிடவே மறுபடியும் மில்லில் இரைச்சல்.

ஒரு கூண்டு வண்டி மில் வாசலில் வந்து நின்றதை ஜன்னல் வழியாக அண்ணாமலை கவனித்தான். வண்டிக்காரன் நெல் மூட்டைகளை இறக்கிக் கொண்டிருந்த சமயம், அந்த வண்டியில் வந்த மாது உள்ளே வந்தாள். ஐம்பது வயது மதிக்கலாம். நடேசப் படையாச்சி அந்த அம்மாளைக் கவனித்தார்.

''என்ன நடேசு, சௌக்கியமா இருக்கிறீங்களா?'' என்றவாறு அவரருகே வந்தாள்.

''ஒவ்வொருத்தன் காரையும், ரயிலையும் ஓட்டறான். நீங்க மில்லுக்குத்தான் டிரைவர். நல்ல உத்தியோகம் போங்க'' என்று அவள் வேடிக்கையாகப் பேசியது அண்ணாமலையின் காதிலும் விழுந்தது.

''அதோ, தம்பி யிருக்காங்க... கொஞ்சம் மெதுவா பேசுங்க தங்கம்மா'' என்று பட்டும் படாமலும் நடேசன் சொன்னார்.

''ஓ, தம்பியா...அதுதான் இதுக்கு பேனெத்தொண்டா?'' என்றவாறு அண்ணாமலை இருந்த இடத்தைத் திரும்பிப் பார்த்தாள்.

அரவைப் பணம் கொடுப்பதற்காக அண்ணாமலையிடம் வந்த அவள், ''சவுக்கியமா இருக்கீங்களா, தம்பி?'' என்றாள்.

அவன் தலையை அசைத்தான். நல்ல களையான முகம். ஐம்பதிலும்கூட ஒரு வசீகரம். இளமையில் மூக்கும் முழியுமாக நல்ல எடுப்போடு இருந்திருக்கவேண்டும். அவனுக்குத் தெரியாவிட்டாலும் அவனை நன்றாகத் தெரிந்தவள் போல் தங்கம் பேசினாள்:

''கிராமத்துக்கு நான் வந்து வெகு காலம் ஆயிப்போச்சு. குத்தகைக்காரர் சரியா நெல் அளக்கறதில்லே. நேரா வந்திட்டுப் போகலாம்னு கிளம்பி வந்தேன். கொஞ்சத்தை இங்கேயே அரைச்சிட்டுப் போகறதுக்காக மில்லுக்கு வந்தேன். வந்தது நல்லதா போச்சு...'' என்றாள் அவள். ஒரு நிமிஷம் ஆவலோடு அண்ணாமலையைப் பார்த்தாள்.

''அப்பா சவுக்கியமா இருக்காங்களா?'' என்று அவள் விசாரித்தபோது அண்ணாமலை திகைப்படைந்தான். கவனித்தான். விழியில் சுடரும், வெற்றிலைச் சிவப்பேறிய இதழில் குறுநகையுமாகச் சற்றே நாணச் சுழிப்போடு நின்றிருந்தாள் தங்கம்மாள். அவனுக்குப் பதில் சொல்ல வரவில்லை.

''அப்பா சவுக்கியமான்னு கேட்டேன்'' என்றாள் மறுபடியும்.

''இருக்காங்க...''

தங்கத்தின் முகத்தில் அலாதியான ஒரு மலர்ச்சி:

''பணம் எடுத்துக் கொள்ளுங்க தம்பி. பன்னெண்டு கலம் நெல்லு...'' என்றவாறு பணத்தை நீட்டினாள். பணத்தை எண்ணும் போதே, அக்கறையோடு அப்பாவை விசாரிக்கும் இந்தப் பெண்மணி யார் என்று அவன் மனம் எண்ணியது.

சீட்டை வாங்கிக் கொண்டு நடேசப் படையாச்சியிடம் போனாள்.

மீனாட்சியும் சபாபதியும் இருந்த இடத்தில் தங்கம்மாளையும் சேர்த்துப் பார்த்தான் அண்ணாமலை. மில் இரைச்சலுடன் மன இரைச்சலும் சேர்ந்து கொண்டது. சூழ்நிலை மறந்தது. ஒரு போராட்டத்தில் உள்ளம் குதித்திருந்தது. எத்தனை நேரமோ...

''தம்பி, வரட்டுங்களா?''-தங்கத்தின் குரல். அண்ணாமலை விழிப்படைந்தான்.

நிறைந்த பார்வையை வீசிவிட்டு நகர்ந்தாள் தங்கம். அந்த முகம் நெஞ்சிலேயே நின்றது.

ஆறு மணிக்கு மேல் ஆகிவிட்டது. நடேசப் படையாச்சி வீட்டுக்குக் கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்தார்.

''இங்கே வாங்க நடேசு...''—அண்ணாமலை அழைத்தான்.

அவர் வந்து நின்றார்.

''அரவை போட ஒரு அம்மா வந்திச்சே, அது யார்?''

''அதுங்களா?'' என்றவாறு அசட்டுச் சிரிப்போடு அண்ணாமலையைப் பார்த்தார்.

''சொல்லுங்க.''

''அவங்க வேண்டியவங்கதான்!''

''யாருக்கு?''

''அப்பாவுக்குங்க...''



''ஏண்டி, அந்த சேகர் உன்னையே சுத்திண்டிருந்தானே... இப்ப எங்கே காணோம்?''

''என்னைக் கல்யாணம் செய்துக்கிறயான்னு போன வாரம் கேட்டேன்... அதுக்கப்புறம் ஆளேயே காணோம்!''

''எனக்குத் தெரிஞ்சி அப்படி யாரும் உறவுக்காரங்க இல்லையே'' என்றான் அண்ணாமலை.

''இப்பத்தி உறவு இல்லே. பழசு...''

''அதாவது...''

''வாலிப வயசிலே!'' என்றார் நடேசப் படையாச்சி. மறுபடியும் மிஷினைத் தட்டி விட்ட மாதிரி அவனுள்ளே இரைச்சல்.

'அப்படியும் உண்டா? வாலிப வயசில் ஆட்டம் போட்டவர்தானா அப்பா? இப்பொழுது மட்டும் எப்படி இருக்கப் போகிறார்? இத்தனை அக்கறையோடு அப்பாவின் சுகம் விசாரிக்க ஆள் இருக்கிறதே! தங்கம் அன்றைக்குத் தங்கமாக இருந்திருக்க வேண்டும். ஐம்பதில்

தீபாவளி பண்டிகைக்கு

மணி பேப்ரிக்ஸ்

பீனு பட்டுப் புடவைகள்

மற்றும் பாவாடைகளை தேர்ந்தெடுங்கள்!

மலிவான விலை ○ உயர்வான தரம்
உன்னதமான உழைப்பு ○ உறுதியான வண்ணம்
நேர்த்தியான டிசைன் ○ மென்மையான தன்மை

இத்தனை சிறப்புகளும் ஒருங்கிணைந்தது.

பீனு பட்டுப் புடவைகள் உங்கள் பட்டாடை தேவைகளை நிறைவு செய்வதுடன் உங்கள் பணத்தில் பெரும் பகுதியையை மிச்சப்படுத்துகிறது.

பீனு பட்டு புடவைகள் வாங்கும்போது "மான்" முத்திரையை கவனித்து வாங்குங்கள்.

இதுதவிர எங்களிடம் எல்லாவிதமான நைலக்ஸ், டெரி வாயில், டெர்லான், கிரேப், புல்வாயில், 2x2, புருசோ, மற்றும் மதுரை சுங்குடி புடவைகளும் சகாயமான விலையில் நிறைந்த டிசைன்களில் கிடைக்கும்.

இது மணி பேப்ரிக்ஸாரின் ஓர் பிரத்தியேக தயாரிப்பு

உங்கள் உளம் நிறைந்த தேர்வுக்கு எங்கள்
விற்பனை நிலையங்களுக்கு வருகை தாருங்கள்.

சின்னாளபட்டி

K. S. M. S. மணி & பிரதர் சேல்ஸ் டிப்போ

6/2-A, நாகேஸ்வர ராவ் ரோடு, **தி. நகர், சென்னை-17.**

H. O.
தபால் பெட்டி எண்: 16
சின்னாளப்பட்டி P.O.
மதுரை மாவட்டம்.

கிளைகள்:
64-D, லஸ் கார்னர்,
மைலாப்பூர், சென்னை-4.
போன் (PP): 76424

தேவாங்கர் சத்திரம்,
98-A, தெற்கு மாசி வீதி, மதுரை-1.
போன்: 25381

Beena Stockists at Bombay: M/s. Solanki Cloth Stores,
J. Bhivandiwala Building, L. Napoo Road,
Matunga, Bombay-19 (CR.)

" " at Singapore: M/s. P. Govindasamy Pillai, Singapore (PTE)
Ltd., 48/50, Serangoon Road, Singapore-8.

இப்படி யென்ருல் இருபதில் பூரணமான அழகுச் சிலையாக...' - அண்ணுமலைக்குப் புரிகிறது.

மீனுட்சியை நினைத்துக் கொண்ட போது அடிபட்ட குருவியாக மனம் துடித்தது. சபாபதிப்பிள்ளையைச் சமாதிப் பிள்ளையாக்கி, பட்டும் படாமலும் கண்டும் காணுமலும் பேசுகிருர்களே... புகைச்சல் இருக்கும்போது நெருப்புப் பொறியும் இருக்கத்தானே வேண்டும்!

நடேசு மௌனமாக நின்றிருந்தார்.

''அந்த அம்மாவைப் பத்தி...'' என்று அண்ணுமலை ஆரம்பித்த போது, நடேச படையாச்சி, பிள்ளையாண்டானின் மன நிலையைப் புரிந்து கொண்டார்.

''தங்கம்மா, தஞ்சாவூரோட போய் இருபத்தஞ்சு, முப்பது வருஷம் ஆயிட்டது. எப்பவாச்சும் இங்கே வர்றதுண்டு.''

''அங்கே போறதுக்கு முன்னுடி?''

''தம்பி, நீங்க என்னைத் தப்பா நினைக்கக் கூடாது. அந்தக் காலத்திலே நம்ம ஐயாவையும் தங்கம்மாவையும் இணைச்சி ஏகப்பட்ட பேச்சு. தங்கம்மாவுக்கு ஐயா பேர்லே அபாரமான ஆசை.''

''அப்பாவுக்கு...?''

''ஒத்து வராதுன்னு ஐயா விலகிக்கிட்டார். தப்பு, தண்டா எதுவும் கிடையாதுன்னு தங்கம்மா ஒரு சமயம் எங்கிட்டே சொல்லியிருக்கு...'' — நடேசப் படையாச்சி கிளம்பி விட்டார்.

ஒன்பது மணிக்கு வீட்டுக்கு வந்தான் அண்ணுமலை. வாசலுக்கும் உள்ளுக்குமாக மீனுட்சி பரபரத்துக் கொண்டிருந்தாள்.

அண்ணுமலை நிமிர்ந்து பார்த்தான். கழுத்திலும், காதிலும், மூக்கிலும் பளிச்சென்று நகைகள். பூவும் பொலிவுமாக வித்தியாசமாக இருந்தாலும் முகத்தில் மருட்சி தெரிந்தது:

''அப்பாவைப் பார்த்தீங்களா?''

'புருஷன் இவளுக்கு முக்கியமில்லை. மாமனுரைப் பற்றித்தான் பேச்சும் மூச்சும் ... என்ன ஜென்மம் இது?'— மனத்தில் கடுகடுப்பு.

''பார்க்கலை...''

''இல்லையா... அவங்க இன்னும் வரலையே...''

''வர்ற நேரத்திலே வருவார். பகல் பூரா இங்கே அடைஞ்சி கிடந்தவர் வெளியே போனு உடனே திரும்பணுமோ?'' — அவன் சீறினுன்.



சாப்பிடுபவர்: என்ன, சாபி இவ்வளவு மோசமா இருக்கு? கூப்பிடு உங்க மானேஜரை?

சர்வர்: அவர் காபி சாப்பிடமாட்டார் சார்!

''அதுக்கில்லீங்க... எனக்கு இப்ப ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கு...''

''எனக்கும் அது எப்பவோ ஏற்பட்டாச்சு...''

அண்ணுமலை அவளுடைய அலங்காரத்தைப் பார்த்தான். இது என்ன கோலம்? யாருக்காக ஒப்பனை?

''எனக்குப் பயமா இருக்குங்க'' என்ருள் மீனுட்சி படபடப்புடன்.

''அவர் எங்கே போயிடப் போருரோன்னு பயமா?''

''ஆமாங்க. அப்படித்தான் தோணுது. ரெண்டு மணிக்கு என்னை அழைச்சாங்க. உள்ளே போனேன். பக்கத்திலேஉட்காரச் சொன்னுங்க. அப்போ...'' - மீனுட்சிக்குத் தொண்டையை அடைத்தது; கண் கலங்கியது.

''சொல்லேன்'' என்ருன் அவன் ஆத்திரமாக.

அவள் நடந்ததைச் சொன்னுள்.

அப்பொழுது—

எதிரே உட்கார்ந்திருந்த மீனுட்சியை சபாபதி நிமிர்ந்து பார்த்தார்.

''மீனுட்சி ரொம்ப நாளா எனக்கு ஆசை'' என்ருர்.

அவளுக்குப் புரியவில்லை.

''இப்பத்தான் நேரம் வந்திருக்கு'' என்றவாறு ஒரு சிறு பெட்டியை எடுத்தார்.

மீனுட்சியைப் பார்த்தார்.

''இது உனக்குச் சேர வேண்டியது. குடும்பப் பரம்பரை நகை நட்டுக. எல்லாம் நீ போட்டுக்கவேண்டிய சொத்து'' என்றார்.

''இப்ப எதுக்குங்க... பெட்டியிலேயே இருக்கட்டும்.''-மீனாட்சி சொன்னாள்.

''இனிமே இதுகளுக்கு இடம் பெட்டியல்ல. உன்னுடைய உடம்புதான். இந்தா மீனாட்சி... இப்பவே உடம்பிலே பூட்டிக்க...''

மருமகளிடம் எடுத்துத் தந்தார். அவள் விழித்தாள்.

''ஏன், பிடிக்கலையா மீனாட்சி?''

அவளுடைய தயக்கம் நீங்கியது! அவர் முன்னாலேயே சில நகைகளை அணிந்து கொண்டாள்.

இரண்டு நிமிஷம் பார்த்து விட்டு சபாபதிப் பிள்ளை எழுந்தார்:

''மீனாட்சி, நான் வர்றேம்மா'' என்று சொல்லிவிட்டு அவர் எழுந்து போனார், வழக்கமாக வெளியே புறப்பட்டுச் செல்கிறவரைப் போல்.

அவ்வளவுதான்; இன்னும் திரும்பவில்லை.

பத்து மணிக்கு மேல் ஆகியிருந்தது. மீனாட்சி சோர்ந்து போயிருந்தாள்.

''நகை நட்டுகளை அவங்க எங்கிட்டே ஒப்படைச்சப்போ ஒண்ணும் தோணலை. இப்பத்தான் புரியுது'' என்றாள் மீனாட்சி,

அண்ணாமலையின் மனசில் ஒரு மூலையில் அகல் விளக்கு ஏற்றிய மாதிரி ஒரு வெளிச்சம். மீனாட்சியைப் பார்த்த போது அனுதாபம் சுரந்த மாதிரி இருந்தது. இயல்புக்கு மீறிய உணர்ச்சியில் உருகிப் போய் சபாபதி ஏதோ முடிவுக்கு வந்திருக்கிறார். அது என்ன?

''மாமா எங்கே போயிருப்பாங்க?'' —மீனாட்சி.

அவன் மௌனமாக நின்றான்.

''ஆத்தங்கரை மண்டபத்துக்குப் போய்ப் பார்த்தால்...''

''சரி...நான் போறேன்'' என்றான்.

''நானும் வர்றேன்!''

மீனாட்சி பின்தொடர்ந்தாள்.

தோட்டத்துக் கதவைத் திறந்து கொண்டு அண்ணாமலையும் மீனாட்சியும் உள்ளே வந்தார்கள். நல்ல இருட்டு. டார்ச் லைட்டைத் தட்டினான் அண்ணாமலை.

சமாதி மண்டபத்தில்—

கண் மூடிச் சிலையாகி விட்டிருந்தார் சபாபதிப் பிள்ளை. மீனாட்சி துடித்துப் போனாள். பீதியோடு கணவனைப் பார்த்தாள். இருவரும் நெருங்கிச் சென்றார்கள்.

டார்ச் லைட் கண்ணாடியின் ஒரு பகுதியைக் கையால் மறைத்துக் கொண்டு ஸ்விட்சைத் தட்டினான். மெல்லிய வெளிச்சம் பரவியது.

''அப்பா...''—அண்ணாமலை அழைத்தான்.

பதில் இல்லை.

''அப்பா...'' என்றாள் மீனாட்சி. மாமா என்று அவரை அவள் கூப்பிடுவதில்லை.

சபாபதிப் பிள்ளை கண் திறந்தார்.

''அப்பா, வீட்டுக்கு வாங்க...'' —அவன்.

''எழுந்திருங்க... இந்த இருட்டிலே இங்கே நீங்க...''—அவள்.

''இங்கே ஏன் வந்தீங்க?''-அடங்கிய தொனி சபாபதியின் கண்டத்தில் இழைந்தது.

''உங்களை அழைச்சிட்டுப் போகத்தான், அப்பா!'' என்றான் அண்ணாமலை.

''வரவேண்டிய இடத்துக்கு நான் வந்திட்டேன்!''

''இல்லே...நீங்க இருக்க வேண்டிய இடம் நம்ம வீடு'' என்றாள் மீனாட்சி.

''இல்லை, தாயே... அழைப்பு வருகிற வரைக்கும் எனக்கு இடம் இதுதான். இந்த இருட்டுதான் வெளிச்சம்.''

''வெளிச்சம் நிறைஞ்ச வீட்டை விட்டுட்டு நீங்க, இங்கே...'' - மீனாட்சி அழாக் குறையாக நீட்டினாள்.

''உனக்கும் எனக்கும்தாம்மா அது வெளிச்சம். மற்றவங்க கண்ணுக்கு அது இருட்டு...'' என்றார் சபாபதிப் பிள்ளை.

அண்ணாமலைக்கு 'சுருக்'கென்றது.

''அப்பா எழுந்திருங்க'' என்று அவன் அரற்றினான். அவளும் கெஞ்சினாள்.

''போய் வா, தாயே...இந்த இடத்தின் சுகம் எனக்குத்தான் தெரியும். இங்கேதான் எனக்கு அமைதி'' என்றார் சபாபதிப் பிள்ளை.

மீனாட்சி பொங்கினாள்.

அண்ணாமலை விழித்தான்.



ஜனுப் ஹாஜி அப்துல் கரீம் ராவுத்தர் அவர்கள் சமூகத்திற்கு:

வெ. குடிக்காடு இஸ்மாயில் 'சலாத்துடன்' எழுதிக்கொண்டது. இப்பவும் கடந்த பத்து நாளாக, ஓயாமல் பெய்த மழையின் காரணமாக எனது மண் குடிசை விழுந்து விட்டபடியால், நான் ரொம்பவும் சிரமதசையிலிருக்கிறேன். தாங்கள் ஒவ்வொரு ரம்ஜானுக்கும், தர்மமாகப் பணம் அனுப்பி வைப்பதில் - இந்தத் தடவை இருபத்தைந்து ரூபாய்க்குப் பர்த்தியாக, ஐம்பது ரூபாயாகவே அனுப்பி உதவினல் - மறுபடியும் எனது குடிசையை எடுத்துக் கட்டிக் கொள்ளவும் - மண் சுவர் வைத்துக் கொள்ளவும் எனக்கு சௌகரியமாக இருக்கும் என்று நினேக்கிறேன். ஆகவே நீங்கள் தயவு செய்து, இந்த வருஷம் எனக்கு ரம்ஜான் அன்பளிப்பாகக் கட்டாயம் ஐம்பது ரூபாய் அனுப்பி வைக்குமாறு, அல்லாவின் பேரால், பணிவோடு கேட்டுக் கொள்கின்றேன். தங்களது தங்கமான மனத்துக்கு எந்தக் குறைவும் வராமல் அல்லா எல்லா சுகமும் தந்திடுவார். இப்படிக்கு, மணியார்டரை எதிர்பார்த்துக் காத்திருக்கும்- 'இஸ்மாயில் - வெ. குடிக்காடு போஸ்டு' - சொன்னபடி எழுதியது, ரஹீம் — பத்தாம் வகுப்பு.

மூக்குக் கண்ணுடியை, மேலுக்கு இழுத்து விட்டுக் கொண்டு கடிதத்தில் பார்வையைக் குவித்தார், கணக்கப்பிள்ளே குமாரவேல். அந்தக் கடிதத்திற்குள், ஒரு குடிசையின் சரித்திரமே அடங்கியிருந்தது. வருஷா வருஷம், கடிதம் எழுதுகிற அதே இஸ்மாயில்தான் - அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாததால், எவனே ஒரு பையனே விட்டு, எழுதிப் போட்டிருக்கிறுன். ஆனல், எந்த வருஷமுமில்லாமல் இந்த வருஷம் அதிகத் தொகை கேட்டிருப்பதுதான் புதுமை.

குமாரவேல், கடிதத்தை மடித்து வைத்து விட்டார், கூட்டுக்குள்ளே.

அவர் மனசு, இப்போது இஸ்மாயிலின் லெட்டரில் இல்லே. அது இந்த இடத்திலே, சற்று நேரத்துக்கு முன்னல் நடந்து முடிந்த, ஒரு சம்பவத்தில் தோய்ந்து நின்றது. ராவுத்தரின் ஏக புத்திரி - சலீமா வந்திருந்தாள், சற்று முன்பு. கடையின் பிற்பகுதியில் வியாபித்திருந்தது, வீடு. சலீமாவின் மென் மலர்க்கரங்களில் இரண்டிரண்டு தங்க வளேயல்கள். அவள் கைகளில் வளேயல் அணிந்திருப்பது கூடத் தெரியவில்லே. அவள் மேனியின் நிறமும், அந்த வளேயல்களின் நிறமும் ஒன்றே!

அவளுக்குக் கணக்கப்பிள்ளே குமாரவேலிடம் பேசுவதில் சங்கோஜம் ஏதுமில்லே. அவர் கடந்த இருபத்தைந்து வருஷத்துக்கு மேலாக அங்கே சேவகம் செய்து வருகிருர். வித்தியாசங்களேக் கடந்த அந்நியோன்னியம் அவருக்கு, ராவுத்தர் குடும்பத்தாரோடு! அந்த வீட்டில் - அந்தக் குடும்பத்தில் - குமாரவேலுவும் ஓர் உறுப்பினர் ஸ்தானம் வகித்து வந்தார்... ராவுத்தரின் சம்சாரமும் சரி, பிள்ளேகளும் சரி, அவர்கள் குமாரவேலுவிடம் எந்தவொரு விஷயத்தையும் லஜ்ஜையின்றிச் சுமுகமாகப் பேசுவார்கள்! இன்னும் சொல்லப் போனல், சலீமாவுக்கு, தன் தந்தையோடு பேசுவதற்கு - குமாரவேல் ஒரு 'பாலம்' மாதிரி அமைகிற ஆசாமி. அதுதான் — குமாரவேல் இருக்கிற சமயமாகப் பார்த்து வந்திருக்கிருள், சலீமா!

வெற்றிலேயைக் குதப்பியவாறே ஃபோனில் யாருடனே சம்பாஷணேயைத் தொடர்ந்தார், ஜனுப் ஹாஜி அப்துல் கரீம் ராவுத்தர்.

தாம்பூலம் தரித்திருந்த போதிலும் கூட - அவருடைய விசாலமான பெரிய

முகத்தில், மாலை மசக்கலாக ஒரு வருத்தம் இருள் பரப்பி இழையோடி நின்றது. ஆனால், அவருடைய பேச்சோ, அந்த உள்ளார்ந்த விசனத்தை ஓடஓடவிரட்டி யடிக்கிற பாணியில் ,வழக்கம் போலவே காம்பீரியத்துடன் வெளி வந்தது. பெரிய மனுஷக் குரல் - பெருங் குரல் தான்! அவருக்கு, எப்பவுமே மெதுவாகப் பேசத் தெரியாது. பேச வேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் ஆளானதில்லை!

தன் ஒரே மகள் சலீமாவின் பிரசன்னம் - ராவுத்தருக்கு, மனத்திற்குள் பலமான யோசனைகளை மூட்டி விட்டது. அவருக்குத் தெரியாத விஷயமா? குமாரவேல், தனது காதில் விழுந்து மறைத்த நரை முடியை இடது கை விரலால், லேசாக நீவி விட்டுக் கொண்டே சலீமாவை முறுவல் தவழ நோக்கினார். அவரது மூக்குக் கண்ணாடிக் குள்ளிருந்து, தீட்சண்யமாகப் பரவும் பார்வையில் — அன்பான குசல விசாரிப்புகள்; தொகை தொகையாக அடங்கும்!

குடும்ப விஷயந்தானென்றாலும் கடையில் வேற்று ஆள் ஏது? சலீமா, குமாரவேலை சாதாரணமாகவே 'கணக்கப் பிள்ளை மாமு' என்றுதான் கூப்பிடுவாள்—ஃபோனை வைத்துவிட்டு, ராவுத்தர் தமது புத்திரியின் பக்கம் தனது பெரிய விழிகளை உருட்டினார். அவளுக்கு என்ன தேவை என்பதை அவர் மனம் கணக்கிட்டது. மாமூல்தான்! வருஷா வருஷம், ஐந்நூறு ரூபாய்க்குக் குறைந்து வாங்கிக் கொள்ள மாட்டாள். ஒவ்வொரு ரம்ஜானுக்கும், டிரஸ்ஸுக்கு மாத்திரம் அவளுக்கு அந்த ஐந்நூறு பற்றுமற் போகும். இதில்லாமல் அவள் தனிச் சேமிப்பு- அம்மாவிடம் வாங்குவது...அது இது என்று, ஒரு ஜவுளிக் கடையையே வாங்கிக் கொண்டு வந்து விடுவாள்.

ராவுத்தரின் முக மண்டலத்தில் மங்கலாகப் படிந்து கிடந்த மனோ விசாரம், அதற்கான பின்னணிகள் எல்லாம் சலீமா அறியாதவையல்ல! என்றாலும், கால் கடுக்க நிற்கிறாள். ராவுத்தர், சிறிது நேரத்தில், பார்வையை இந்தப் பக்கம் திருப்பிக் கொண்டு அவளைக் கவனிக்காத பாவனையில் - பேரேட்டுக்குள் முகம் புதைக்க முயன்றாலும் - குமாரவேல் மாமு, சும்மா இருந்தால்தானே?

''என்ன சலீமா... ரம்ஜான் வந்துருச் சுங்கறியா?'' என்றார், குமாரவேல். -இப்படி வார்த்தை எடுத்துக் கொடுக்க ஆள் வேண்டுமென்றுதான் சலீமா இந்நேரம் காத்திருந்தாள். எனினும் 'கணக்கப்பிள்ளை மாமுவுக்குக் குறும்பு எப்பவும் போகாது' என்கிற மாதிரி சலீமா, தனது அழகான முகத்தில் சிறுபிள்ளைத்தனமான சிணுங்கலைக் காட்டினாள்.

ராவுத்தர் ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்ட மாதிரிப் பேச ஆரம்பித்தார். அவர் கையிலிருந்த பாக்குவெட்டியில் பச்சைப் பாக்குகள் ஒரே நறுக்கில் துண்டு இரண்டாக விழுகிற மாதிரி அவருடைய வார்த்தைகள் கச்சிதமாக வந்து விழுந்தன! அவர் ஏதாவது பேசினால், அருகிலிருக்கிறவர்கள் - தமக்கு இஷ்டமிருந்தாலும், இல்லாவிட்டாலும் — 'ஆமாம்' என்று சொல்லுகிற மாதிரியான அதிகார தோரணையில்தான், ம...யடிக்கிற மாதிரிப் பேசுவார்.

''சலீமா! இந்த வருஷம், நமக்கு ரம்ஜானும் இல்லே-ஒண்ணுமில்லேம்மா! அடுத்த வருஷத்துக்கு அல்லா நம்மை நல்லா வெச்சிருந்தா...இதை விடப் பிரமாதமா ரெண்டு பங்கு கூடுதலா கொண்டாடிக்கலாம். போ, உள்ளே!''

வாணலியில் போட்ட கத்தரிக்காய் மாதிரி சலீமாவின் முகம் வதங்கிச் சுருங்கிச் சாம்பிக் கூம்பிவிட்டது, இந்த வார்த்தைகளைக் கேட்டதும். அவளுக்குள்ளே கோபமான கோபம். 'இப்ப என்ன குறைச்சலா இருக்கு?' என்கிற மாதிரி ஒரு பார்வை வீசினாள்— அவள் அங்கலாய்ப்பு, அவளுக்கு!

ஆனால், ராவுத்தருக்கல்லவா தெரியும் லாப நஷ்டங்கள்?அவள், அந்த இடத்தை விட்டு, இன்னும் அசையவில்லை—அகலவில்லை. தயங்கித் தயங்கிக் கொண்டு நின்றாள்.

சிறிது நாழிகை நேரம், ஊமையாகக் கழிந்தது!

ராவுத்தரும் ஒன்றும் பேசவில்லை— சலீமாவும் மௌனியாகி விட்டாள்.

இருவருக்கும் இடையே, 'பாலம்' கட்டுவதற்குக் குமாரவேல் என்கிற என்ஜினீயர் தேவைப்பட்டார். அடுத்த நிமிஷம் குமாரவேல், ஒரு தரம் கனைத்துக் கொண்டார்! அவர் இப்போது, சலீமாவிற்காகப் பரிந்து கொண்டு ஏதாவது பேசப் போகிறார்!

''நான் சொல்றதை தப்பா எடுத்துக்காதீங்க...'' என்று குமாரவேல் பூர்வபீடிகை போட ஆரம்பித்தார். ராவுத்தருடைய முகத்தில் இந்த சமயம் கோபம் பொறி பறந்தது!

''தப்பாவும் வேணும்... ரைட்டாவும் வேணும்! வெவரம் புரிஞ்சுக்காம

பேசாதேயுங்காணும்! சித்த நாழி சும்மா இரும்! நான் படற புணக் கஷ்டம் எனக்கில்ல தெரியும்?'' என்று தாளித்துக் கொட்டிய ராவுத்தர், ''சலீமா, நீ இன்னும் போகலியா?'' என்றவாறே, அவள் நின்ற இடத்தை நோக்கி முகத்தைத் திருப்பினார். சலீமா எப்பொழுதோ போய்விட்டாள், அந்த இடத்தை விட்டு... குமாரவேலை நோக்கி ராவுத்தர், ஒருநாளுமில்லாத திருநாளாகக் கோபாவேசமான வார்த்தைகளைக் கொட்டத் துவங்கிய கணமே, அவள் ஓடி மறைந்து விட்டாள்-உள்வீட்டுக்குள்ளே!

குமாரவேல் மௌனத்தில் புதைந்து போனார்!

அவர் மனத்திற்குள் சிரிப்பு! ஒரே [illegible]-செல்ல மகள்-என்றாலும் முடியாதென்று கூறி விட்டாரே? குமாரவேலின் ஆச்சரியம் அளவற்றது! அவரது சர்வீசில் இந்த மாதிரி ஒரு ரம்ஜானும் கழிந்ததில்லை. எத்தனை கஷ்டமானாலும், சலீமாவுக்கென்றால் ராவுத்தர் சலுகை வழங்கத் தவறியதில்லை! அந்த அளவிற்கு அவள் பேரில் உயிரையே வைத்திருந்தார் அவர்.

இந்த மாதிரியெல்லாம் கேட்டுத் தாங்கிக் கொள்கிற மகராசியா அவள்? சரியான ரோஷக்காரி!... ஹூம்-எப்படியோ அவள் போய் விட்டாள்!

ராவுத்தரும் வாசலில் வந்து நின்ற குதிரை வண்டியில் ஏறிக் கொண்டு மரக்கடைக்குக் கிளம்பிச் சென்று விட்டார்!

குமாரவேலின் சிந்தனைகள் மீண்டும் இப்போது இஸ்மாயிலின் கடிதத்தில் பதிந்தது. அவர் முன்னே, அந்தக் கடிதம் மரியாதையாகக் கைகட்டி வாய் பொத்தி நின்றது! ஆனால் ராவுத்தருக்கு இப்போது ஏற்பட்டிருக்கிற கஷ்டமும், நஷ்டமும் பெரியவை!

போன மாதத்தில், அவரது மரக்கடை எரிந்து சாம்பலாகி விட்டது! மிச்ச சொச்சமிருந்த வற்றுள் விறகுக் கானவை போக அந்த தீ விபத்தில் அவருக்குப் பராபரியாக சுமார் ஒண்ணரை லட்ச ரூபாய் நஷ்டம்! கடைக்கு இன்ஷ்யூரன்ஸ் எதுவும் பண்ணி



வைக்கவில்லை! அதோடு அவருக்கு இரும்பு வியாபாரமும் சேர்த்தி-அதில் வேறு, சமீபமாகப் பணம் புரள்வதற்கே வழியில்லாமல் முடங்கிக் கிடந்தது, நிறைய முதல்! இதனால் அவர் இடிந்து போயிருந்தார் என்பது வாஸ்தவமே!

ராவுத்தரின் பிசினஸ் மாதிரி அவர் மனதும், உறுதியில் இரும்பாக இருந்ததோ... பிழைத்ததோ? எப்படியோ நஷ்டம் நஷ்டம்தான்! ஆனால், நல்ல நாளும், பெருநாளும், சொல்லி வைத்துக் கொண்டா வருகின்றன? எந்தக் கஷ்ட நஷ்டமானாலும் — ரம்ஜான்பாட்டுக்கு வந்து விடுகிறது! இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், குமார வேலுக்கு மாத்திரம், தீ விபத்துக்கு முன்னதாகவே தீபாவளிக்குத் துணியெடுத்துக் கொள்ளவும்—குடும்பச் செலவுக்கும் சேர்த்து, இருநூறு ரூபாயை ராவுத்தர் கொடுத்து விட்டார்!

ஒவ்வொரு வருஷமும் வியாபாரத்தில் கிடைக்கக் கூடிய லாபத்தில் குறிப்பிட்ட சதவிகிதத்தை ஏழை எளியவர்களுக்குத் தான தர்மம் வழங்குவதென்று பிரதிக்ஞை பண்ணியிருந்தார் ராவுத்தர். அதை இத்தனை வருஷமாகவும் இம்மியும் பிசகாமல், செயல்படுத்தியும் வந்திருக்கிறார். சாட்சி, குமாரவேல்!

காலையில் ராவுத்தர், மரக் கடைக்குப் புறப்பட்டுப் போன அரை மணி நேரத்தில் வந்த கடிதங்களில், இந்த இஸ்மாயிலின் தபால்தான் குமாரவேலுக்கு அதிகமான எரிச்சலைத் தந்த கடிதம். ராவுத்தரின் ஏகபுத்திரி சலீமாவுக்கு அந்த கதி? 'காலம் நேரம் தெரியாமல் கடுதாசி எழுதிடறானுங்க! ஹூம்... எல்லாம் பொல்லாத நேரம்!' என்று நொந்து கொண்டார் குமாரவேல்.

சற்று நேரம் கழித்து—வியாபாரக் கடிதங்களை எடுத்து ஒவ்வொன்றுக்குமாகப் பதில்களை எழுதி எழுதிக் கையெழுத்துக்கு ஆயத்தமாக வைத்துக் கொண்டு வந்த குமாரவேல், இஸ்மாயில் —வெ. குடிக்காடு போஸ்டுக்கும் ஒரு சுருக்கமான பதிலை எழுதி வைத்தார்: மொத்தத்தில் ஐம்பது ரூபாய் அனுப்ப இந்த வருஷம் சாத்தியமில்லை என்பதே பதிலின் சாராம்சம்! அல்லாவின் தயவிருந்தால் அடுத்த வருஷம் நல்ல விதமாகச் செய்யலாம்— என்று இறுதியாகக் குறிப்பிட்டு ராவுத்தர் கையெழுத்திற்காக இடம் விட்டிருந்தார் குமாரவேல்!

'இந்த சலீமாவுக்குத்தான் எத்தனை ரோஷம்—அப்போ போனவள், இன்னும்



அது என்ன கூட்டம் என்று பராக்குப் பார்க்க நின்றேன் நான். ஒரு நாடகக் கொட்டகை வாசல். காந்தி பள்ளிக் கட்டட நிதி என்று ஒரு கரும்பலகையில் எழுதிப் போட்டிருந்தது. பத்து இருபது பேர் நின்று கொண்டு பலமாக வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்கள்.

''உள்ளே விடுய்யா! குழந்தையைக் கூட்டிக்கொண்டு போயிடறேன்.''

''உள்ளே இப்ப விட முடியாது சார். நாடகம் முடிஞ்சதும் குழந்தையை அழைச்சுண்டு போங்க.''

''இப்பவே மணி ஒன்பது. பத்துக்கு முடியுமோ, பதினொண்ணுக்கு முடியுமோ! குழந்தை நாடகம் பார்த்தது போதுமய்யா.''

''உள்ளே போக முடியாது சார்.''

இதைத் தொடர்ந்து கூட்டத்திலிருந்து பல குரல்கள்: ''என்னய்யா நாடகம், பெரிய நாடகம்! இன்னிக்குக் கட்டட நிதி, நாளைக்குப் பெஞ்சு நிதி! எல்லாம் பிஸினஸ்.''

''டிக்கெட் வாங்காட்டி டீச்சர் அடிக்கிறாங்கன்னு என் பிள்ளை சொல்லிச்சி.''

''இப்ப விடப் போறியா, இல்லையா?''

இதற்கு மேலும் சும்மா இருந்தால் சரிப்படாது என்று தோன்றியதோ என்னவோ, காவல்காரன் ''விட முடியாதையா. அப்படிக் குழந்தையைத் தனியா விட முடியாட்டி, நீங்களும் டிக்கெட் வாங்கிட்டுப் போயிருக்கலாமே!''

அங்கே நின்று கொண்டிருந்தவர்களுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. தங்களுக்குத் தெரியாததை இவன் சொல்கிற விஷயம் என்று எரிச்சல் வந்தது. மீண்டும் பல குரல்கள்.

''ஆமாம் ஐயா, பத்து டிக்கெட் வாங்குவாங்க? குழந்தையைப் பள்ளிக் கூடத்திலே படுத்துகிற தொல்லே பொறுக்காம ஒரு டிக்கெட் வாங்கினேம். வேளையா... ஒரு ரெண்டு மணி மூனு மணிக்கு டிராமா போட்டா என்னய்யா?''

''சும்மா எங்கிட்ட கூச்சல் போடா தீங்க. நான் மானேஜரைக் கூட்டி யாறேன்.''

'கேட்'டைத் தாழ்ப்பாள் போட்டு விட்டு அவன் உள்ளே போனுன்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் நெட்டையாய் ஒரு மனிதர் வந்து 'கேட்'டைத் திறந்து கொண்டு சுற்று முற்றும் பார்த்தார்.

''யாரு சார், உள்ளே போகணும்னு கலாட்டா பண்றது?''

யாரும் பதில் சொல்லவில்லே.

அவர் திரும்பினுர்.

''நான்தான்.''-கூட்டத்தில் ஒரு குரல். அந்த மனிதர் முன்னல் வந்தார். ''நான் தான் உள்ளே போகணும்னேன்.''

மானேஜர் கேட்டார்: ''நீங்க போய் இருட்டிலே உங்க குழந்தையைப் பார்க்க முடியுமா?''

''ஏன், டிராமான்னு நடு நடுவிலே வெளிச்சம் வராதோ?''

''சரி, நீங்க கண்டு பிடிச்சுக் கூப்பிட் டாலும் உங்க குழந்தை வருமா? பாதி நாடகத்திலே எந்தக் குழந்தையாவது வருமா? ஏன் சார் இந்தப் பேச்சு எல்லாம்? உங்களுக்கு ஓசிலே நாடகம் பார்க்க ஆசை. நான் விடறேன். அதைப் பத்தியில்லே. நாடகம் முடியப் போறது. நீங்க கடைசி நேரத்திலே இலவசமாப் பார்க்கிறதிலே எனக்கு ஆட்சேபணேயில்லே. ஆனு, ஒண்ணு. குழந்தையைக் கூட்டிண்டு போறதுக் குன்னு மட்டும் சொல்லாதீங்க.''

''எங்களுக்கு ஒண்ணும் டிராமா வேண்டாம். அநாவசியமாப் பேசா தீங்க.''

'கேட்'டைத் திறந்து கொண்டு அந்த மானேஜர் சொன்னுர். ''எனக்குத் தெரியும், போங்க. ஆனு நீங்க யாரும் நாடகம் முடியாம திரும்பிவரப் போற தில்லே.''

நான் சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றேன். ஐந்து நிமிடம், பத்து நிமிடம், பதினேந்து நிமிடம். ஊஹூம்... உள்ளே போன யாரும் திரும்பவில்லே.

—ஸரஸ்காந்தன்.

எட்டிப் பார்க்கவில்லே கடைப் பக்கம்! ராவுத்தர்தான் போய்விட்டாரே, வந்து சொல்லக்கூடாதா வருத்தத்தை? ஹும், பாவம்! அந்தக் குழந்தை மனது இந்நேரம் எப்படி வேதனேப்படுமோ?' குமாரவேல் மனத்துக்குள் மறுகினுர்.

மாலே சுமார் மூன்று மணி இருக் கும், ராவுத்தர் திரும்பி வருகையில்!

அன்றைய தபாலில் சேர்க்க வேண்டிய கடிதங்களுக்கெல்லாம் கையெழுத்துப் போடுவதற்காக உட்கார்ந்தவர், ஒவ் வொன்றுகக் கையெழுத்துப் போட்டுக் கொண்டே வந்து, கடைசியில் இஸ்மாயி லுடைய கடிதத்தையும்— அதற்குக் குமாரவேல் எழுதி வைத்திருந்த பதிலே யும் படித்து முடித்தார். அவரது நெற்றியில் சிந்தனேச் சுருக்கங்கள்! குமாரவேலே ஏறிட்டு நோக்கினுர் ராவுத்தர். அவர் கையில் லெட்டர் பேடிலிருந்த இஸ்மாயிலுக்கான பதில், படபடத்தது!

''ஏன் குமாரவேலு, இஸ்மாயில் எழுதியிருக்கிறதெல்லாம் வாஸ்தவம்னு தான்னு நினேக்கிறீயா? இல்லே, ஒரு சமயம், பொய்யா இருக்குமோ?''

—பேனுவின் அடிக்கட்டையால் மோவாயைச் சொறிந்தவாறே கேட்டார் ராவுத்தர்.

குமாரவேலுக்குக் காலேயிலிருந்தே ஒருவிதக் குழப்பமும் படபடப்பும்— ''சேச்சே... இஸ்மாயில் தங்கமானவ னுச்சே, ஒரு போதும் பொய் எழுதமாட் டாங்க!'' என்றுர் குமாரவேலு. இஸ்மா யில் கஷ்டவாளியாக இருக்கக் காரணமே அவனது நேர்மைதானே?

ராவுத்தர், ஜட்ஜ்மெண்ட் கொடுக்கிற மாதிரிப் பேசலானுர்: ''அப்போ ஒண்ணு செய். அவனுக்கு அம்பது ரூவா மணியார்டரு பண்ணிடு. பாவம், வீடு கட்டிக்கத்தானே கேட்கிருன். நமக்குப் பெரிய நஷ்டம் வந்திருக்கலாம்—பெரு நெருப்புக்கு ஈரமில்லே... ஆனல்... அவன், சின்ன நெருப்பாட்டமிருக் கிறவன்; தாங்க மாட்டான், பெரு மழையை!''— என்றவாறே, பதிலேக் கிழித்தெறிந்தார் ராவுத்தர். சலீமாவின் ஆடம்பரத் தேவையைவிட, இஸ்மா யிலின் அத்தியாவசியத் தேவை, உடனடி யாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தென்பது, ராவுத்தருக்குத்தான் தெரியும்! அவருடைய நெஞ்சின் ஈரத்தை நினேத்துக் குமாரவேலுவின் நெஞ்சம் சிலிர்த்தது!

ஒரே பெயர் கொண்ட இரண்டு நட்சத்திரங்கள் ஓரிடத்தில் இருப்பது சிறிது குழப்பத்தைத்தான் ஏற்படுத்தும். இவருக்குச் சேர வேண்டியது அவருக்குப் போகும்; அவருக்குப் போக வேண்டியது இவருக்கு வந்து விடும். அப்படி ஒரே பெயர் கொண்ட சில நட்சத்திரங்கள் தங்கள் அனுபவங்களை இங்கே கூறுகிறார்கள்:

படஉலகில் ஒரு பெயர்ப் பிரச்னை!..



எம். பானுமதி



பி. பானுமதி

விஜயநிர்மலாவைப் பற்றி வெண்ணிற ஆடை நிர்மலா:

சில மாதங்களுக்கு முன்பு 'கத்துல ரத்தையா' என்ற தெலுங்குப் படத்தின் வெளிப்புறப் படப் பிடிப்புக்காக திரு. கிருஷ்ணாவும் நானும் கொச்சிக்குப் போயிருந்தோம். திரு. கிருஷ்ணாவுடன் அவரது மனைவி விஜயநிர்மலாவும் வந்திருந்தார்.

அங்கே எடுக்கப்பட்டது ஒரு பாடல் காட்சி. கிருஷ்ணா ஒரு டாலர் செயின் அணிந்து நடித்தார். அந்த செயின் நன்றாக இருக்கிறது என்று அவரது மனைவி விஜயநிர்மலா வாங்கி வைத்துக் கொண்டார். மீண்டும் படப் பிடிப்பு சென்னையில் நடந்தபோது காட்சியின் தொடர்ச்சிக்காக அதே செயின் தேவைப்பட்டது. கிருஷ்ணா, ''நிர்மலாவிடம் அதைகொடுத்தேன்'' என்று கூறவும், வேறொரு படப் பிடிப்பில் இருந்த என்னிடம் அப் படத்தின் உதவி டைரக்டர் அவசரம் அவசரமாக ஓடி வந்தார்; ''அம்மா! அந்த செயின் அவசரமாக வேண்டும்'' என்றார் பதட்டத்துடன்.

''செயினாவது, டாலராவது? யாரிடம் யார் கொடுத்தார்கள்?'' என்று திடுக்கிட்டு அவரிடம் எரிந்து விழுந்தேன். பிறகுதான் அதை விஜயநிர்மலா வைத்திருப்பது தெரிந்து வாங்கிக்கொண்டார்கள். ஒரே பெயரால் வந்த குழப்பம் இது. நான் விஜயநிர்மலாவுடன் பழகியதில்லை; சேர்ந்தும் நடித்ததில்லை. அவர் நடித்த 'பணமா பாசமா' படம் பார்த்திருக்கிறேன். அவர் ஒரு திறமையான நடிகை. அத்துடன் அவர் சிறந்த பெண் டைரக்டர் ஆகவும் விளங்குகிறார்.

ஜி. சகுந்தலா



அந்தரங்கத்தில் ஒரு தவறு

—தா. பி. வரதராசன்—

தசரத மகா சக்கரவர்த்தியைப் போன்று எந்த நாட்டுக்கும் சக்கரவர்த்தி அல்லாத என் தலையிலும் ஒரு நரைத்த முடி......நேற்றோ, இன்றோ, நேற்றைக்கும் முன்போ...எப்பொழுதோ பழுத்து விட்டிருக்கிறது.

அது தன் உடையவனாகிய என் கண்ணிலாவது பட்டிருக்கலாம். நித்தியப்படி தவிச் சீவிப் படிய வைக்கின்ற என் கண்ணில் படாமல், நண்பர் பிலிப்ஸ் கண்ணில் பட்டு விட்டது: ''என்ன மேன், உன்க்கு இன்னா வயசாச்சி? நாப்பது இர்க்குமா?'' என்று கிண்டலுக்குப் பிள்ளையார் சுழி போட்டார்.

''யார், பாபுவுக்கா?'' என்று அதில் வந்து தொத்திக் கொண்ட ரங்கநாதன், ''அவுருக்கா நாப்பது? நல்லா சொன்னே போ... அவுருக்கு நாப்பத் தெட்டை எட்டியாச்சிய்யா'' என்றார்.

அதோடு விட்டதா கிண்டல்? ''நம்ப முடியலியே? ஒரு வேளை 'டை' போடறாரா...?''

''ஆ... இர்க்கலாம்... இர்க்கலாம். ஆனா அவரோட இந்த நாப்பத்தெட்டு வயசைக் காட்டிக் குடுக்கிற துரோகி, இந்த முடியைத் தவிர வேற ஒண்ணும் அவுரு ஒடம்பிலே இது வரைக்கும் தோணலே...நான் சொல்றது புரியுதா பிலிப்ஸ்?'' என்று கூறி, நமட்டுச் சிரிப்புச் சிரித்த ரங்கநாதன் மறுபடி, ''அப்பிடி ஏதாவது முதல் தடவையா ஒரு அஞ்சாம் படை மொளேச்சா, அதை முளையிலேயே கிள்ளி எறியறாப் போல டை போட்டுச் சாகடிக்கிறதுக்கு அவருக்கு உரிமையிருக்கு... இல்லியா?'' என்று மேலும் பிலிப்ஸின் ஒப்புதல் கேட்டுச் சிரித்தார்.

ஆபீசில் இப்படி நண்பர்களுக்கிடையே என்னைக் கிண்டலுக்காளாக்கிய என்னுடைய ஒரே நரைத்த முடி, வீட்டில் நித்த நித்தம் என் தோளுக்குச் சுகமளிக்கும்— மன்னிக்கவும், சுகமளிக்க வென்றே உள்ள என் மனைவி ராஜிக்குத் தென்படாமல் போகுமா?

அவள் அதைப் பார்த்து ''ஐயோ, மனுஷன் தலையிலே வர்ற நரைச்ச முடி 'உனக்கு வயசாச்சு; இனியும் நீ விளையாடிக்கிட்டிருக்காமே புண்ணிய காரியங்கள்லே ஈடுபட்டு பிறவிப் பயனைச் சம்பாதிச்சிக்கோ'ன்னு காதுகிட்டே நெருங்கி வந்து ரகசியம் சொல்றதாக நினைக்கணும்னு உபன்யாசத்திலே வாரியார் சொன்னாரே! நீங்க என்னடான்னா இப்பிடி யிருக்கீங்களே'' என்று கூறினாள்.

மற்ற நேரமாக இருந்திருந்தால், அவள் இப்படிச் சொன்னதற்காக ஆபீசில் ரங்கநாதனும் பிலிப்ஸும் சிரித்தார்களே, அதை விடப் பத்து மடங்கு பெரிதாகச் சிரித்து விட்டு, என்னுடைய பதினைந்து வயதுப் பையனும், பன்னிரண்டு வயதுப் பெண்ணும் இன்னும் பள்ளிக்கூடம் விட்டு வரவில்லையென்று நிச்சயப்படுத்திக் கொண்டு, ராஜியின் முதுகில் ஓங்கி அழகாக ஒரு ஷொட்டுக் கொடுத்திருப்பேன். அவளும் ''ஸ்...என்ன இது! இன்னும் குழந்தைன்னு ஞாபகம் போல்ருக்கு'' என்று முகம் சுளித்திருப்பாள்.

ஆனால், இப்படிச் சொன்னபோது அவள், 'லில்லி ரோஸ் கிளினிக்' பெட் ஒன்றில் படுத்துக் கொண்டல்லவா இருந்தாள்! நானும் அவள்முன் கவலை தோய்ந்து முக்காலியில் உட்கார்ந்தல்லவா இருந்தேன்!

அது மட்டுமா?

அவள் அமைதியாகப் படுத்துக் கொண்டிருந்தாலும் பரவாயில்லையே!

பத்து நிமிடத்திற்கு ஒருமுறை 'அப்பப்பா'... என்று பல்லை இடுக்கிக் கொண்டு கத்துவதும், படுக்கையில் படுத்தவாறே தன் இரண்டு பக்கங்களிலும் தன்னிரு கைகளை முஷ்டியாக மடக்கிக் கொண்டு ஓங்கி ஓங்கிக் குத்துவதுமாக அல்லவா இருந்தாள்!

அவள் எதிரில் அமர்ந்திருந்த நானும் சரியான 'மூடில்' இல்லை. எப்படியிருக்க முடியும்? டாக்டர் என்னவோ, இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள்ளாக ராஜிக்கு 'விடுதலை' கிடைத்து விடுமென்றும், பயப்படுவதற்கு ஒன்றுமில்லையென்றும் உறுதியாகச் சொன்னாலும் கூட



அவள் படுகின்ற துயரைப் பார்க்கின்ற போது என்னுல் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.

நான் மிக மெதுவாக, மிக மிக மென்மையாகக் குனிந்து, அவள் தலையை மெல்லத் தடவிக் கொடுக்கலாமென ... அவள் அதற்குள் பதறிக் கொள்கிருள்.

தன் இரண்டு கைகளையும் எடுத்துக் கும்பிட்டு, ''தயவு பண்ணி என்னைத் தொடாதீங்க...தொடவே தொடாதீங்க இனிமே'' என்று சொல்லுக்குள் அடங்காத விரக்தியோடு கூறுகிருள்.

''ராஜி, மை மை மிஸ்டேக்...மை மை மிஸ்டேக்... ஒரு நாள்... ஒரே ஒரு நாள்... ஒரே ஒரு நாள்...''

''ஒரே ஒரு நாள்தான். அதுக்குத் தண்டனையைப் பாத்திங்களா?''

''என் தவறுதான் அது, ராஜி.''

நான் மறுபடி மென்மையாகத் தொடங்குகிறேன்: ''இதுக்காகத்தான் நான் சொன்னேன். அந்த மருந்து இ...ரு...க்...கே ..''

''உக்கும். நீங்களும் உங்க மருந்தும். தயவு பண்ணி இனிமே என்னைவிட்டுடுங்க நீங்க... அன்னிக்கு ரேடியோவிலே 'தலையிலே வர்ற நரைச்ச முடி, உனக்கு வயசாயிடுச்சு, இனிமேயும் நீ மண்ணிலே புரளாமே பகவத் விஷயங்கள்லே ஈடுபடுன்னு காதுகிட்டே வந்து ரகசியம் சொல்றதுக்காக முளைச்சிருக்கிற தூதாக நினைக்கணும்'னு வாரியார் சொன்னப்போ என்னமா ரசிச்சீங்க .. அதெல்லாம் கேக்கறதோட சரிதானு?''

நான் என்னிடத்திலேயே இருந்தேன்: ''நம்ப ரங்கநாதன் மிஸஸ் கூட அதைத் தான் யூஸ் பண்ரு...அஞ்சு வருஷமா சாப்பிடரு... ஒரு தொந்தரவும் இல்லே...''

''யாரு... ரங்கநாதன் பொண்டாட்டி தானே! அந்தச் சண்டாளிக்கு எல்லாப் பாவமும் ஒத்துக்கும். எனக்கு

வேண்டாண்டியம்மா, இந்தப் பாவமெல்லாம்!''

நான், மாலே வீடு திரும்பி வந்த போது, வீட்டில் புத்தகங்களே எடுத்து வைத்துக் கொண்டிருந்த உஷா கேட்டாள்: ''ஏம்பபா, அம்மா என்னிக்கு வர்ருங்க 'டூர்'லேருந்து?''

''நாலாந் தேதி.''

''நாலு நாள் டூரா... இன்னிக்கு ஒண்ணு ... இன்னும் மூ ணு நா ள் இருக்கா?''

''உம்...''

''அப்பாடா... மூணு நாளேத் தள்ளியாகணும். இந்த ஒரு நாள்லேயே எனக்கு போரடிச்சுப் போச்சு...அம்மா அடிக்கடி இந்த மாதிரி வெளியிலே போய் வர்றவங்களா இருந்தா பரவாயில்லே. இந்த 'போர்' தெரியாது.ஆமா, எதுக்காகப்பா, இந்த மாதிரி திடீர்னு டூர் கிளம்பிட்டாங்க? அதுவும் முந்தாநாள் வாந்தியும் கி ந் தி யு மா இருந்த நெலேயிலே!''

''என்னவோம்மா... நானும் அதுக்காகத்தான் தடுத்துப் பாத்தேன். அவ கண்டிப்பா போகணும்னு...''

இதைப்பற்றி நான் அடுத்த நாள் காலே ராஜியைப் பார்க்கப் போனபோது ராஜி கேட்டாள்: ''குழந்தைங்க எப்படியிருக்காங்க?''

''உம்...நல்லா இருக்காங்க...''

''உஷா கண்ணு கேட்டாளா?''

''உம்... கேக்காம இருப்பாளா?''

''என்ன கேட்டா?''

நான் விஷயத்தைச் சொன்னேன்.

ராஜியுடன் பேசிக் கொண்டிருக்கும்போது, அந்த அறை வாயிற்படிக்கு வெளியே வந்து நின்ற நடுத்தர வயதைக் கடந்த ஒருத்தி: ''ஏம்மா, காபிக் கடைக்குப் போறேன்.எதனுச்சும் வோணுமா?''

''வாணும்மா'' என்று அவளுக்குப் பதில் சொன்னள் ராஜி.

''இவ யாரு...?'' என்று கேட்டேன்.

''இவ மக இங்கே பேஷண்ட்...''

''மகளா?''

''ஆமா ... அது ஒரு துக்கமான கதை. இந்த அம்மாக்காரி நேத்தே அதைச் சொல்லிட்டா. கேக்கக் கேக்கப் பாவமாயிருக்கு...!''

''என்னவாம்...?''

''இவங்க ஊரு...என்னவோவாம்... அரக்கோணம் பக்கத்திலே இருக்காம். சின்ன கிராமம். பாவம், ஏழை ஜனங்க. அந்த ஊருக்குக் கால்நடை வளர்ச்சி பற்றிஜனங்களுக்கு எடுத்துச் சொல்றதுக்காக யாரோ அரசாங்க உத்தியோகஸ்தனு ஒரு பையன் வருவான் போலிருக்கு. அப்படி வரப் போக இருந்தவனேடை இவ மகளுக்குப் பழக்கமாகி யிருக்கு ..''

''பாதியிலே பயல் கை கழுவி விட்டுட்டான். அவன் மூலமா அவளுக்கு நேர்ந்த பாவத்தைக் கரைக்க இங்கே வந்திருக்கா...''

''அது பாவமா?''

''பின்னே, பாவமில்லாமெ புண்ணியமா? அவ கல்யாணமாகாதவதானே?''

''ஆமா... அதுக்கு! எதுக்கு எந்த முடிவுன்னுதெரியாமெ செய்தது பாவமாயிருந்தாக்கூட, மன்னிப்புக் கிடைக்கலாம் க ட வு ள் கி ட் டே... ஆனு, தலேயிலே முளேச்ச நரைமுடி காதண்டை நெருங்கிச் சொல்ற 'டாப்சீக்ரெட்'டை மதிக்காம, தப்பு செய்தா, அதுக்குப் பேரு புண்ணியமா? புண்ணியமான்னு கேக்கறேன்...?''

''சரி, சரி... நான் ஏதோ கதை சொல்றயேன்னு கேக்கவந்தேன். கடைசியிலே எனக்குப் புத்தி சொல்ற விஷயம்னு தெரிஞ்சிருந்தா முன்னுடியே வெட்டிட்டிருப்பேன்... ம்... சரி, சரி... என்ன ஆச்சு, அந்தக் கேசு இப்போ?''

''குழந்தை பிறந்திருக்கு...!''

''குழந்தையா?''

''ஆமா... குழந்தை பிறந்திருக்கு!... நம்ம மாதிரி கிழடுகளா இருந்திருந்தா, ஆரம்பத்திலேயே பிரம்மஹத்திக்கு ஆளாகி யிருப்பாங்க...!''

''அதல்ல காரணம். நாட்டுப்புறங்க தானே! விஷயம் தெரியாது. முத்தவச்சுகிட்டு வந்திருக்குதுங்க...''

''ஆமாம். நாட்டுப்புறங்க... அறிவு கெடையாது. பாவத்துக்குப் பயப்படுதுங்க. அறிவிருந்தா பாவத்தைக்கூட ஜீரணிச்சுடுவாங்களே, நம்ம மாதிரி...''

''அது கெடக்குது... இப்போ, என்ன செய்யப் போருங்களாம், அந்தக் குழந்தையை எடுத்துக்கிட்டு?''

''அதுக்குத்தான் நான் இதைச் சொல்ல வந்தேன். குழந்தை ஆம்பிளேப் பிள்ளே ... பொறந்தது என்னிக்குத்

தெரியுமோ? நேத்து முதல் தினம்... அதைக் கேட்டதுமே எனக்கு ஒரு சந்தேகம். உடனே, அந்த நர்சுகிட்டே கேட்டு, பஞ்சாங்கம் இருந்தா கொண்டாரச் சொல்லி நல்லா பாத்தேன். பயல், பரணியிலே பொறந்திருக்கான்.. தரணி ஆளுவான்.''

''அவன் தரணி ஆண்டா என்ன? அந்தச் சந்திரமண்டலத்தையே ஆண்டா என்ன? அவன் பிறப்பு பாவப் பிறப்பு தானே?''

''ஏன் இப்படி நீங்க நம்ம குத்தம் தெரியாம பிறத்தியாரையே பழிக்கிறீங்க?''

''பழிக்கலே...பாராட்டறேன்...உம், சரி, சொல்லு, அந்தக் குழந்தையை என்ன செய்யப் போறுங்களாம்?''

''அதுக்கு இந்த டாக்டரே ஒரு ஏற்பாடு பண்ணப் போறுர்.ஒரு அநாதை ஆஸ்ரமத்துக்கு இந்தக் குழந்தையைக் குடுத்திடப் போறுர்...''

''அவ்வளவு சின்ன வயசிலேயேவா?''

''ஆமாம். இந்த மாதிரி கேஸ்களுக்கு இங்கே இப்பிடிதான் நடக்கிறதாம்.அந்த நர்சு சொல்லச் சொல்ல, இந்த கிளினிக்கைப் பத்தி நல்லபடியாவே நெனேக்க முடியலே என்னுலே...''

''அது ஊரறிஞ்ச ரகசியம்தானே..!''

''அந்த ரகசியங்களேவிட மகா பயங்கரமா யிருக்கு இங்கே நடக்கிறதைப் பார்த்தா! இந்த மாதிரி கேஸ்களுக்கு பீஸ் மாத்திரம் ஐந்நூறு ரூபா... பிறந்த குழந்தையை அந்த ஆஸ்ரமத்திலே ஏத்துகிட்டா, குழந்தைக்கு அஞ்சு வயசு ஆகிறவரையிலும், மாசம் அம்பது ரூபான்னு கணக்குப்பண்ணி முன்பணமா மெய்ன்ட்டனென்ஸ் முழுக்கத் தரணுமாம்.. ''

''ஐயோ...!''

''ஐயோன்னு போதுமா? அப்புறமா சொல்றேன் நான்... அந்த லேடி 'புவர்' லேடி... என்ன செய்வா? எங்கெங்கியோ யிருந்து புரட்டி பீஸை மாத்திரம் குடுத்துட முடியுமாம் அவளால... ஆஸ்ரமத்திலே மெய்ன்ட்டனென்ஸ் எப்படித் தர்றதுன்னு தவிக்கிரு...!''

''...........''

''உங்களுக்குத் தெரிஞ்சவங்க யாராவது பெரிய மனுஷங்க புள்ளே யில்லாம...இருந்தா சொல்லுங்கம்மா, நான் தத்தா குடுத்திடறேங்கரு...''

''.........''

''அவ அப்படிச் சொன்னதுமே பட்டுன்னு எனக்கு நம்ம தங்கம்மா ஞாபகம்தான் வந்துது...''

''யார் தங்கம்மா...? சீனிவாசன் சம்சாரமா?''

''ஆமா...!''

''உனக்கென்ன பைத்தியமா புடிச்சிருக்கு? இந்த மாதிரி விஷயங்கள்லே எல்லாம் நாம் ரொம்ப எச்சரிக்கையா இருக்கணும்... நாளேக்கு ஒண்ணுன்னு, நாமும் போய் கோர்ட்டுலே சாட்சிக்கு நிக்கணும், தெரியுமில்லே...?''

''ஐயோ... பிள்ளே எப்பிடி யிருக்கான் தெரியுமா? பிறந்த நட்சத்திரமும் அப்பிடிப் பொருந்தி யிருக்கு...''

''அதுக்காக...?''

''இப்பிடிப்பட்ட ஒரு புத்ர செல்வத்தை அவங்களுக்குத் தேடித் தந்தா அது நமக்கும் நல்லதுதானே?''

''நல்லதுதான். அது நமக்கு வம்பா வந்து முடியும். வேணும்னு, அவங்க அட்ரஸ் குடுத்து இவளேயே போய்ப் பாத்துக்கச் சொல்லு...''

''நானும் அப்பிடித்தான் மொதல்லே நெனேச்சேன்... ஆனு அது பலிக்காது... பிள்ளேயோட பிறந்த நாள், அது இது பத்தி யெல்லாம் நாம சொன்னுத்தான் அவங்களுக்கு நம்பிக்கை ஏற்படும்...''

''உனக்கென்ன பைத்தியமா புடிச்சிருக்கு ராஜி? அப்பிடியே சொல்றேம்னு வச்சுக்க... நமக்கு அது எப்பிடித் தெரிஞ்சுது, நாம ஏன் இந்த கிளினிக்குக்கு வந்தோம். இந்த விஷயங்களெல்லாம் பத்தி தெரிஞ்சிடாதா! நாம என்னடான்னு பெத்த குழந்தைங்களுக்கும், மத்தவங்களுக்குமே தெரியக்கூடாதுன்னு வந்திருக்கோம்... இது போய் அவங்களுக்குத் தெரிஞ்சாகணுமா?''

''தெரிஞ்சா என்னவாம்? 'இது ஒண்ணும் பாவமில்லியே! நம்ம சௌகரியத்துக்காகச் செய்துக்கிற தடுப்பு நடவடிக்கைதானே?'''

''அதுக்காக...அது நமக்குத்தெரியுது. ஊர்லே இருக்கிறவனெல்லாம் இது பாவம்னு நெனேக்கிறபோது, நாம ரகசியமா இருக்க வேண்டியதுதானே? நான் நமக்கு மட்டுமே இருக்கட்டுமேன்னுசௌகரியத்துக்கான தடுப்புன்னு என்னிக்கோ சொன்னு, அதையே கிண்டலா நீ எனக்குத் திருப்பிச் சொல்றயா?''

''கோவிச்சுக்காதீங்க... நான் சும்மா தமாஷுக்குச் சொன்னேன்...நாம எதுக்காக இங்கே வந்தோம்ங்கறதை

அவங்களிடத்திலே சொல்லாமெ, வேறே ஏதோ உடம்பு சரியாயில்லே, அதுக்காக வரப்போக, இந்த டாக்டர் இதைச் சொன்னர் அப்படீன்னு சொன்ன என்னவாம்?''

''அதென்னவோ, அதுகூட எனக்குச் சரியாப்படலே!''

''நீங்க கவலேயே படவேணும்... உங்க கவசத்துக்குப் பழுது வராமெ நானே முடிச்சு வெக்கிறேனே, இந்தக் கதையை... இப்போ, ரெண்டாம் நாள் இல்லியா? நான் வெளிலே வந்து, இன்னும் ஒரு வாரம் ரெஸ்ட் எடுத்து கிட்டு, அதுக்குப் பிறகு, தங்கம்மாவைப் போய்ப் பாக்கறேனே!''

''.........''

''நான் ஏன் இவ்வளவு தூரம் சொல்றேன்னு... கோவிச்சுக்காதீங்க... அந்தத் தங்கம்மாளே ஒரு தடவை 'உங்க உறவிலே ஏழையா யாராவது இருந்தா இப்படித் தத்து ஏதாவது பாரேன்'னு சொல்லி யிருக்காங்க...!''

''இது உறவா?''

''ஆஸ்பத்திரி உறவாயிருக்கட்டுமே!''

''சீ... ஐ டோன்ட் லேக் திஸ் ரப்பிஷ் திங்க்ஸ்...''

ராஜி சொன்ன ஒரு வாரம் கழிந்து, அந்த நாளும் வந்தது.

தங்கம்மாளேப் போய்க் கண்டு, தீர்க்க மாகக் கலந்து கொண்டு, மேற்கொண்டு ஆக வேண்டியவற்றுக்கும் ஏற்பாடு செய்யத் தொடங்கினுள் ராஜி.

தங்கம்மாளும், அவள் கணவனும், 'கிளினிக்' சென்று குழந்தையைப் பார்த்து விட்டு வந்தார்களாம். பிள்ளே யின் தேஜஸில் மயங்கி விட்டார்களாம்.

அடுத்து, அவளும், அவள் பிடுங்கலேத் தாங்க முடியாமல் நானும்தான், எனக்கு நன்கு பரிச்சயமான ஒரு ஜோதிடரை அணுகி, குழந்தையின் பிறந்த நேரத்தை யும், நாளேயும் தந்தோம்.

மிக அற்புதமான எதிர் காலத்தைப் பற்றி விவரித்த அவர், கடைசியாக ''ஆனல்'' என்று தயங் கினர் ஒரு நொடி.

''என்ன...?''— நாங்கள் இரண்டு பேருமே பதறினேம்.

''ஜாதகனுடைய பத்தாவது வயதிலே இவன் தகப்பனுருக்கு மரணம் சம்பவிக் கலாம். இதை நான் சொல்லாம இருக் கணும்... இருந்தாலும் வேண்டியவாளா இருக்கிறதனலே சொல்றேன்...''

நானும் ராஜியும் வெளியேறி வரும் போது, வழியில் அவள் கலவரத்துடன் இது பற்றிக் கேட்டாள்.

''இதிலே பயப்படுவதற்கு என்ன இருக்கு? இவன் பத்தாவது வயதிலே சாகப் போகிறவன், அந்த ஓடிப் போன வன்தானே...'' என்றேன் நான்; ''இந்த ஜாதகத்திலே ஒரு விசேஷம்: இவனுக்கு நடக்கப் போகிற நல்லதெல்லாம் அந்தத் தங்கம்மாளுக்கும், அவள் புருஷனுக்கும் கிடைக்கும். இவனலே பெத்தவங்களுக் குக் கிடைக்கப் போற கெட்டதெல்லாம் வேற யாருக்கோ கிடைக்கப் போகுது... ரொம்ப நல்ல ஜாதகன்...!''



''நேற்று காலட்சேபம் முடிந்து வீட்டுக்கு போன உடனே 'ஏன் என்னேயும் காலட்சேபத்திற்கு அழைத்துப் போகலே'ன்னு ஒரு பெரிய காலட்சேபமே நடத்தி விட்டாள் என் மனேவி!...''

என் கிண்டலே ராஜி புரிந்து கொண் டாள். என்னேச் சுட்டெரிப்பது போல் ஒரு பார்வை பார்த்தாள்.

அடுத்து ஜாதகப் பலன்களே யெல்லாம் தங்கம்மாள் தம்பதியரிடம் எடுத்துச் சொல்லி, டாக்டரை அணுகினேம்.

அதுவரை தங்கம்மாளின் கணவர் சீனிவாசன் புத்திசாலி. ஆசிரமத்தி லிருந்து குழந்தையை ஏற்றுக் கொள்வது போல் ஏற்பாடுகளே அமைத்து, நாளே மறுநாள் குழந்தையின் உறவினர் யாரும் குழந்தையைப் பார்க்கிறேன், கீர்க்கிறேன் என்று சொல்லித் தொந்தரவு படுத்தக் கூடாது என்று கண்டிப்போடு விதித்து, டாக்டர் போட்ட தொகைக்கும் மேலாகவே ஓர் இருநூறு ரூபாயை அள்ளிக் கொடுத்தார்.

அடுத்து, குழந்தையை என்றைக்கு எடுத்துச் செல்வது என்று முடிவு செய்து கொண்டிருந்த நேரம்.

டாக்டரின் 'கன்ஸல்ட்டிங்' அறையில் நான், ராஜி, தங்கம்மாள்-சீனிவாசன் தம்பதி, டாக்டர், பெண்ணின் தாய் ஆகியோர் இருந்தோம். உள்ளே ஓர் அறைக்குள்ளிருந்து 'ஓ'வென்று ஓர் அழுகுரல் கேட்டது.

உடனே, ''ஒண்ணுமில்லீங்க...அந்தப் பேய் கத்துதுங்க. நான் பாத்துக்கிறேன் அவளை...'' என்றாள், எங்களோடு நின்றிருந்த தாய்க்காரி.

அடுதது, நாங்கள் மறுபடி வாய் திறந்து பேசு முன்பே, திரும்பவும் அழு குரல்'ஓ'வென்று முன்னைவிடப் பலமாகக் கேட்கவும், நாங்கள் எல்லோருமே— டாக்டரைத் தொடர்ந்து, அவரை மீறி முன்னேறும் தாய்க்காரியைத்தொடர்ந்து அந்த அறையை நோக்கி நடந்தோம்.



''ஏண்டா கண்ணு! உன் வீட்டுக் கணக்கை போட்டுக் கொடுத்தேனே, உங்க வாத்தியார் என்ன சொன்னார்?''

''உனக்கு முதலில் ட்யூஷன் வைக்கணும்னு சொன்னார்!''

தன் குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டு, படுக்கையின் மேலே அமர்ந்து, சுவரின் மேல் சாய்ந்திருந்த 'அவள்' எல்லோரையுமே பார்த்து, ஆறுகப் பெருகும் கண்ணீருடன், ''ஐயா, ஐயா... உங்களையெல்லாம் கும்பிட்டுக் கேட்டுக்கறேன் ஐயா... எங்கிட்டே யிருந்து என் குழந்தையைப் பிரிச்சுடாதிங்கய்யா'' என்ற கதறலுடன் அழுதாள்.

''உம்... பிரிக்காதிங்க... இவ எடுத்து வளக்கப் போரு... மூஞ்சைப் பாரு'' என்று வெறுப்போடு திட்டினுள் தாய்.

''ஏன் வளக்க மாட்டேன்... நல்லா வளப்பேன். நல்லா வளத்துக்குவேன் என் ராஜாவை.''

''ஆமா, ராஜா... இந்த ராஜாவுக்கு யார்றீ தகப்பன்? காட்ட' முடியுமா உன்னுலே?''

''ஏன், என்னைப் பெத்தியே நீ... எனக்குக் காட்ட முடிஞ்சுதா என் தகப்பனை உன்னுலே?''

''காட்ட முடியலேன்னு, அது அவன் விதி. நீ பொறக்கறதுக்குள்ளறேயே செத்துட்டான். அவன் கட்டின தாலி இருந்துதே என் கழுத்திலே. உனுக்கு இன்னு இருக்கு?''

''இதோ இருக்கே... இதோ இருக்கே. இதான் என் ராஜா... என் ராஜா...''

அவள் குழந்தையைக் கைகளில் ஏந்தி எங்கள் முன் நீட்டினுள்:

''ஐயா, நீங்க தர்மவானுங்க.... நீங்களே சொல்லுங்கய்யா... நான் பொறக்கறபோது எங்கப்பன் உயிரோட இல்லே. அப்பன் எங்கேன்னு காட்ட ஆளில்லே...ஆனுலும் இந்தப் பொம்பளை என்னை எடுத்து வளக்கலே? அவளால வளக்க முடியலெ? அப்பிடியா என்னுல மாத்திரம் ஏன் என் குழந்தையை வளக்க முடியாது? 'தாலி கட்டனுன், தாலி கட்டனுன்'னு சொல்ருளே, கட்டன தாலி எத்தினி நாளுக்கு நின்னுது? கட்டனவன் போனதுமே போயிடலையா? ஆளை உட தாலியா தொரை பெரிசு? இவ பேச்சை நம்பாதிங்க தொரைங்களே.... நான் என் கொழந்தையைக் குடுக்க மாட்டேன்; குடுக்கவே மாட்டேன்.''

டாக்சியில் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது ராஜியை நான், அவளால் விளைந்த குழப்பத்தை யெல்லாம் முக்கியமாக,சீனிவாசன் தம்பதிக்கு ஏற்பட்ட சங்கடங்களையும், ஏமாற்றங்களையும்குறிப்பிட்டு,அவள்பேதைமையை எடுத்துச் சொன்னேன்.

ஆனல், ராஜியோ மோனத்தில் ஆழ்ந்தவள் போல் அமர்ந்திருந்தாள். எங்கோ பார்த்தபடியே சொன்னுள்:

''இப்போ கத்தினுளே, அந்தச் சின்னப் பொண்ணு, 'நான் குடுக்க மாட்டேன்,நான் குடுக்க மாட்டேன்'னு அவளை மாதிரி எங்க பாட்டி இருந்திருப்பா... ஏன், எங்கம்மாவும் இருந்திருப்பா... என்னுல இருக்க முடியலியே. என் தாயே, அகிலாண்டேஸ்வரி, எங்க பாட்டிக்கும், எங்கம்மாவுக்கும் குடுத்த நேர்மையையும் துணிச்சலையும் எனக்கு மாத்திரம் ஏண்டியம்மா குடுக்காமெ போயிட்டே...? ஐயோ, நான் பாவம் பண்றேனே, பாவம் பண்றேனே...' என்று வெறி பிடித்தவள் போல அலறிக் கொண்டே என் மடியில விழுந்து புலம்பினுள் ராஜி.

டாப் சீக்ரெட் என் மனத்துள் நிமிண்டியது.

வாய்நாற்றம் உங்களை விலகி நிற்கச் செய்கிறது...




கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம் வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்... நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!

கால்கேட், 10க்கு 7 பேர்களில் வாய்துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப்படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஏனெனில், ஒரே தேய்ப்பில் வாய்துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைவிக்கும் கிருமிகளை 85 சதவீதம் வரை, கால்கேட் டென்டல் க்ரீம் அகற்றி விடுகிறது. அதன் விந்தைமிக்க பெப்பர்மின்ட் சுவையேதனி— கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறுமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பென்ன!

தூய்மையான இனிய மூச்சுடனே, வெண்மையான பற்களையும் பெற்றிடவே...

உலகிலேயே அதிக மக்கள்மற்றெந்த பற்பசையையும் விட, கால்கேட் பற்பசையையே வாங்குகிறுர்கள்!



பூரண பல் பராமரிப்பிற்கு கால்கேட் டூத் பிரஷ் உபயோகியுங்கள். ஒவ்வொருவரின் தேவைக்கேற்றவாறு அமைய— 16 ரகங்கள்.

DC-G.50 TM

கன்னடத்தில் இன்றைக்கு முன்னணியிலிருக்கும் நடிகை ஆர்த்தி. அவரைச் சந்தித்தபோது—

நான் சினிமாத் துறைக்கு வருவேன் என்பதைக் கனவில்கூட நினைத்தது கிடையாது. தற்போது ஏறக்குறைய 10 கன்னடப் படங்களில் நடித்துவருகிறேன். 12 படங்களில் ஏற்கெனவே நடித்து முடித்துவிட்டேன். தொடக்கத்திலிருந்து என்னுடைய அதிருஷ்டமோ என்னவோ படங்களில் மிக நல்ல ரோல்களே எனக்குக் கிடைத்து வருகின்றன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமெனில் 'நாகரஹாவு' படத்தில் நான் நடித்ததைச் சொல்லலாம்'' என்று உற்சாகமாகப் பேச ஆரம்பித்து விடுகிறார் ஆர்த்தி:

சினிமாவுக்கு வந்த பின்புகூட ஒரு 'ஸ்டார்' ஆக வேண்டும் என்று நான் விரும்பவில்லை. பல பேர் 'லட்சியம் இருக்கிறது. அப்படி இப்படி' என்றெல்லாம் சொல்வார்கள். என்னைப் பொறுத்தவரை எனக்கு இருக்கும் ஒரே லட்சியம், 'ஆர்ட்டிஸ்ட்' ஆவதுதான். 'நட்சத்திரம்' ஆவது இல்லை.

பெற்றோர் எனக்கு வைத்த பெயர் ஆர்த்தி. ஆனால் ஆகஸ்ட் பதினைந்தில் பிறந்ததனால் வீட்டில் எல்லாரும் பாரதி என்று கூப்பிடுவார்கள். வீட்டில் நான்தான் கடைசிப் பெண். அதனால் எனக்குச் சுதந்திரம் அதிகம். சின்னப் பிள்ளையிலிருந்தே எப்போதும் ஏதாவது குறும்பு செய்து கொண்டே இருப்பேன். அதிகம் சொல்வானேன்? நான் நடிக்க வந்தது எப்படி என்று சொல்கிறேன். அதிலிருந்து நீங்களே புரிந்து கொள்ளுங்களேன்.

பிரபல கன்னடப் பட டைரக்டர் புட்டண்ணா இருக்கிறாரே, அவரும் நாங்களும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். கனகால்தான் எங்களின் ஊர். ஆதலால் சிறிய வயதிலிருந்தே புட்டண்ணாவைத் தெரியும். அவர் எங்களின் குடும்ப நண்பர். அப்போது நான் பெங்களூரில் தங்கி பி. யூ. சி. படித்துக் கொண்டிருந்தேன். பி. யூ. சி. முடித்து விட்டு, டாக்டராக வேண்டும் என்று எனக்கு விருப்பம் இருந்தது. எழுபது சதவீதத்திற்குக் குறையாமல் மார்க் பெற்றிருந்தால்தான் மெடிகல் காலேஜில் இடம் கிடைக்குமென்று சொல்லிவிட்டார்கள். ரொம்பவும் வருத்தமாகப் போய்விட்டது. கடைசியில் வேறு வழியில்லாமல் பி. எஸ்சி-க்குப் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது 'கெஜ்ஜெபூஜே' என்ற படத்தை புட்டண்ணா டைரக்ட் செய்து கொண்டிருந்தார். கல்லூரி விடுமுறை நாட்களில் ஊருக்குச் சென்றிருந்தேன். ஊரிலேயே ஓர் இடத்தில் படத்தின் ஷூட்டிங் நடந்து கொண்டிருந்தது. தினந்தோறும் சாப்பாட்டு வேளைக்கு எங்கள் வீட்டிலிருந்துதான் டைரக்டர் புட்டண்ணாவுக்குச் சாப்பாடு போவது வழக்கம். அதுவும் நான்தான் கொண்டு செல்வேன். அன்றைக்கும் வழக்கம்போல் பகலில் சாப்பாடு கொண்டு சென்றிருந்தேன். ஷூட்டிங் மிக மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரே காட்சி மட்டும் 'ஓகே' ஆகாமல் திரும்பத் திரும்ப 'ரீடேக்' ஆகிக் கொண்டிருந்தது. இத்தனைக்கும் மிகச் சாதாரணக் காட்சி ஒரே ஒரு சின்னஞ் சிறு வசனம் வரும் காட்சி. அதைச் சரிவர உச்சரிக்கவும் முடியாமல், அதற்கேற்ப நடிக்கவும் முடியாமல் அந்த நடிகை திணறிக்கொண்டிருந்தார். (அவர் பெயரைச் சொல்ல மாட்டேன்) டைரக்டர் எத்தனை முறை சொல்லியும் அவர் செய்ததையே



திரையுலகில் இளைய தலைமுறை

ஆர்த்திக்குப் பிடித்தவர் நாகேஷ்..

திரும்பத் திரும்ப செய்து கொண்டிருந்த தைப்பார்த்தபோது எனக்கு சிரிப்பு வந்து விட்டது. 'குபீர்' என்று வாய்விட்டே சிரித்துவிட்டேன். என்னுடைய செய்கை யைக் கண்டதும் டைரக்டருக்கு—இவ்வ நேரம் அந்த நடிகையின் மீது இருந்த கோபம், சட்டென்று என் மீது திரும்பி விட்டது: ''நீ ஏன் சிரிக்கிறாய்? இங்கே செய்து பார்த்தால்தானே கஷ்டம் தெரியும்!'' என்றார். ''பூ, இதைப் பேசுவது ஒரு கஷ்டமா?'' என்றேன். ''நீ செய்வாயா?'' என்றார்.

''ஓ, எஸ்'' என்றேன்.

'மேக்கப்' போட்டு வந்து காமிரா முன்னால் நிறுத்தி, சொல்லச் சொன்னார். விளையாட்டுக்காகத்தானே, எனக்கென்ன வந்தது? அந்த வசனத்தையும் இன்னும் இரண்டு காட்சியையும் அவர் சொன்ன மாதிரியே செய்து விட்டு, வீட்டுக்கு வந்துவிட்டேன்.

அவ்வளவுதான்; இதை அதற்குப் பிறகு மறந்துவிட்டேன். ஆனால் அடுத்த ஞாயிற்றுக்கிழமை பேப்பரில் வந்திருந்த செய்தியைக் கண்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. நான் நடித்த அந்தக் காட்சியின் 'ஸ்டில்'லைப் போட்டு, கீழே படத்தில் நான் நடிப்பதாகவும் போட்டிருந்தார்கள். என் வீட்டில்கூட யாருக்குமே இந்த விஷயம் பற்றித் தெரியாது. விளையாட்டுதானே, அதை எதற்குச் சொல்ல வேண்டுமென்று இருந்து விட்டேன். என் தந்தைக்குக் கோபம் இவ்வளவு அவ்வளவென்றில்லாமல் வந்துவிட்டது. நான் விழித்துக் கொண்டிருந்தேன். நல்ல வேளையாக, அன்றைக்கு மத்தியானம் டைரக்டர் புட்டண்ணாவே வீட்டிற்கு வந்து விஷயத்தைச் சொல்லி, என் அப்பாவைச் சமாதானப்படுத்தினார்.

அப்பாவுக்கென்ன, எனக்குக்கூட அப் போதெல்லாம் இந்த சினிமாக்காரர்கள் என்றாலே கொஞ்சம்கூடப் பிடிக்காது.

நடிக்க வந்ததற்குப்பின்னால் இப்போது ஏறக்குறைய எல்லாப் படங்களையுமே பார்த்து விடுகிறேன். ராஜேஷ் கன்னா படங்களும், சத்யஜித்ரே படங்களும் என்றால் தவற விடவே மாட்டேன். தமிழில் எனக்குப் பிடித்த டைரக்டர் கே. பாலசந்தர்.

தெலுங்கிலும், கன்னடத்திலும் நிறைய நடித்து வருகிறேன். 'மகனே எனக்கு வேண்டி' என்ற மலையாளப் படத்தில் எனக்கு நல்ல ரோல் கிடைத்திருந்தது. தமிழில் நடிக்க வாய்ப்புச் சரியாக அமையவில்லை. திரு. சிவாஜி அவர்களின் நடிப்பைச் சிறப்பித்துச் சொல்வது கூடக் கஷ்டம். அவ்வளவு பெரிய நடிகர் அவர். அவரைப் பற்றி என்னால் கருத்துச் சொல்ல முடியுமா என்ன? வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமெனில் நடிகர்களிலேயே எனக்குப் பிடித்த நடிகர் நாகேஷ் தான். இவர் நடித்த நீர்க்குமிழி படத்தை இரண்டு மூன்றுதரம் பார்த்தேன். சில காட்சிகளில் குலுங்கிக் குலுங்கி அழுதுவிட்டேன். காமெடி நடிகர்களிலேயே நம்மை அழவும் வைக்கக்கூடிய காமெடியன், நாகேஷைத் தவிர யாருமில்லை என்றே நினைக்கிறேன். 'நீர்க்குமிழி' பார்த்த பிறகு இவரைச் சந்திக்க வேண்டுமென்றிருந்து கடைசியில், சென்னையில் புட்டண்ணா டைரக்ஷனில் 'இருளும் ஒளியும்' ஷூட்டிங் நடைபெற்றபோது செட்டில் அவரைப் போய்ச் சந்தித்தேன். மிகச் சிறந்த கலைஞர் அவர். I am loving Nagesh (தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள்).

'நாகரஹாவு' படத்தை தற்போது, இந்தியில் தயாரிக்கிறார்கள். கன்னடத்தில் நான் செய்த அதே ரோலை இந்தியிலும் செய்யுமாறு அழைத்தார்கள். ஆனால், இந்தி சரியாக வராது என்பதால் மறுத்து விட்டேன். தமிழ் வரும். கடந்த இரண்டரை வருடங்களாக சென்னை, அசோக்நகர் வாசியாயிருக்கும் எனக்கு, தமிழ் வருவதில் என்ன கஷ்டம் இருக்கப் போகிறது? இப்போதெல்லாம் நியூவேவ் படங்கள் நிறைய வருகின்றன. நியூவேவ் என்ற பெயரை இந்த புரொட்யூஸர்கள் ரொம்பவும் மிஸ்யூஸ் பண்ணுகிறார்கள். நியூவேவ் என்றாலே செக்ஸ்தான் என்பதாகப் பண்ணிவிட்டார்கள். மவுண்ட் ரோடில் நியூவேவ் படம்னு ஒரு பானர்: ஒரு பெண், மேலே வெறும் பிராவும், கீழே டைட்டாக பாண்டும் போட்டு நின்றிருக்கிறாள். இதுவா நியூவேவ்?

—அமுதவன்.

குற்றமே குணமானால்

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

சிறிது நேரத்துக்குள் பரபரப்பாக உள்ளே நுழைந்தார் பசுபதி.

''வாருங்கள்! வாருங்கள்...உட்காருங்கள்'' என்று அவரை முகமலர்ச்சியுடன் வரவேற்றார் வாஞ்சிநாதன்.

''உட்காருவதற்கில்லை!''- பசுபதியின் கால்கள் நிலைகொள்ளாமல் தவித்தன. முகத்தில் மிதமிஞ்சிய கலவரத்தின் இழையோடல்.

'என்ன விஷயம்?' என்பதுபோல் வாஞ்சிநாதன் அவரைப் பார்த்தார்.

''கொஞ்ச நேரத்திற்கு முன் எனக்கு ஒரு போன் வந்தது!''

''யாரிடமிருந்து வந்தது?''

''உங்களுடைய பிள்ளையிடமிருந்து.''

''என் பிள்ளையிடமிருந்தா?''

''ஆமாம்.''

''என்ன சொன்னான்?''

''இந்தக் கல்யாணத்தில் அவருக்கு விருப்பமில்லையாம்! உடனே எல்லா ஏற்பாடுகளையும் நிறுத்தி விடச் சொன்னார்.''

''என்ன!...என்ன! கல்யாணத்தை நிறுத்தி விடுவதா, ஏன்? எதற்காக அப்படிச் சொன்னான்? இன்னும் ஒரு வாரம் கூட இல்லையே கல்யாணத்திற்கு?''

''அதுதான் ஏன் என்று எனக்குப் புரியவில்லை. உங்களிடம் நேரில் வந்து கேட்டுக் கொண்டு போகலாம் என்றுதான் ஓடி வந்தேன். இதனால் எனக்கு எவ்வளவு ரூபாய் நஷ்டம் ஏற்படும் தெரியுமா?... அப்புறம் நான் எப்படி வெளியில் தலை காட்ட முடியும்?''—பசுபதியின் நிலை மிகப் பரிதாபமாக இருந்தது.

''நான்சென்ஸ்... முரளி, டேய் ... முரளி!''—மாடிப் பக்கம் பார்த்துச் சத்தம் போட்டார் வாஞ்சிநாதன்.

மௌனமாக மாடிப் படிகளில் இறங்கி வந்தான் முரளி.


''இவருக்கு கொஞ்ச நேரத்திற்கு முன் நீ போன் செய்தாயா?''

''ஆமாம்.''

''என்ன சொன்னாய்?''

''கல்யாணத்தை நிறுத்தி விடும்படிக் கூறினேன்.''

''யாரைக் கேட்டுக் கொண்டு நிறுத்தி விடச் சொன்னாய்?''



பேசாமல் நின்றான் முரளி.

''சொல்லேண்டா!''

''செய்து கொள்ளப் போகிறவன் நான். யாரைக் கேட்க வேண்டும்?''—கொஞ்சம் தயக்கத்துடனேயே பேசினான் முரளி.

''இதை நீ ஆரம்பத்திலேயே சொல்லியிருக்க வேண்டுமடா. இப்போது சொல்கிறாயே! அதனால் இவருக்கு எவ்வளவு சிரமம்? எவ்வளவு நஷ்டம்?''

''நஷ்ட ஈடு கொடுத்து விட்டால் போகிறது.''


''பொருளுக்கு வேண்டுமானால் நஷ்ட ஈடு கொடுத்து விடலாம். அந்தப் பெண்ணின் மன வேதனைக்கு உன்னால் நஷ்ட ஈடு கொடுத்துச் சரி செய்துவிட முடியுமா?''

''இந்தக் கல்யாணம் நடந்துவிட்டிருந்தால் அவள் இதைவிடப் பெரிய மனவேதனைக்கு ஆளாக வேண்டியிருக்கும் அப்பா.''

''முரளி!''—ஆத்திரம் தாங்காமல் கத்தினார் வாஞ்சிநாதன்.

''மன்னித்துக் கொள்ளுங்கள் அப்பா.''

''இதனால் இரண்டு குடும்பங்களுக்கும் எவ்வளவு தலை குனிவு ஏற்படும்



கே.ஜெயலக்ஷ்மி

தெரியுமா?'' என்று நயமாகவே கேட்டார் பசுபதி.

''மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். என்னை இருவருமே மன்னித்துவிட வேண்டும். வேறு வழியில்லை''—இருவரையும் பார்த்து ஒரு கும்பிடு போட்டுவிட்டு, மாடிக்குப் போய்விட்டான் முரளி.

சிம்மமாக உறுமிக் கொண்டிருந்தார் வாஞ்சிநாதன்.

''என்னால் நம்பவே முடியவில்லையே. நம்ப முரளியா இப்படிச் செய்துவிட்டான்?'' என்று அரற்றினாள் அலமேலு.

''அவனே ஒப்புக் கொண்டு விட்டான். நம்ப முடியவில்லையாவது?''

''என்ன காரணமாம்?''

''காரணம் எதுவாக இருந்தால் என்ன? கல்யாணம் நிறுத்தப்பட்டது தான் முக்கியம். அதனால் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் நாமோ, நம் பிள்ளையோ அல்ல. பெண்ணும் அவர்களும்தான். புரியவில்லையா உனக்கு?''

''நன்றாகப் புரிகிறது.''

''உனக்குஅவன் செல்லப் பிள்ளையாச்சே! அவனிடம் பக்குவமாகப் பேசிக் கல்யாணத்தை நிறுத்தாமலிருக்க ஏதாவது செய்ய முடியுமா என்று பார்!''

''இதற்கு என்ன காரணமாக இருக்கும்?''

''என்னைக் கேட்டால்...?''

''வேறு எந்தப் பெண் மீதாவது...'' —அலமேலு முடிப்பதற்குள் குறுக்கிட்டார் வாஞ்சிநாதன்:

''ஏன் இருக்கக் கூடாது! இந்த காலத்தில் பெண் குழந்தைகளே எப்படி எப்படியெல்லாமோ இருக்கிறார்கள். ஆண் பிள்ளைகள் இருக்கக் கேட்பானேன்?''

இடிந்து போய் உட்கார்ந்துவிட்டாள் அலமேலு.

'இவர் சொல்வது உண்மையாக இருக்குமா? அப்படியிருந்துவிட்டால் அந்தப் பெண்ணைக் கைவிட்டு விட்டு, இந்த ராகினியை மணப்பதும் பாவமல்லவா?' —அலமேலு சிந்தனையின் வழியில் தொடர்ந்து செல்ல முடியவில்லை. சோர்ந்து போனாள்.

''என்ன, ஊமையாக உட்கார்ந்துவிட்டாய்?''—வாஞ்சிநாதன் மனைவியை மீண்டும் சீண்டினார்.

''ம்... கேட்டுப் பார்க்கிறேன்....'' என்ற அலமேலுவின் உள்மனம் 'இவர் சொல்வது போலிருந்தால் நாம் எந்தப் பெண்ணுக்காகப் பரிந்து பேசுவது' என்று தெரியாமல் தவித்தது.

"என்னடா முரளி, இப்படிச் செய்து விட்டாய்?'' என்றாள் அலமேலு அழாத குறையாக.

''மன்னித்துக் கொள் அம்மா. தயவு செய்து என்னை ஒன்றும் கேட்காதே!'' —கெஞ்சினான் முரளி.

''எப்படியடா ஒன்றும் கேட்காமல் இருக்க முடியும்?''

''சரி, கேள்...''—என்று தயங்கியபடி ஆரம்பித்தான் அவன்:

''ஒரு பெண்ணின் மனத்தை வாழ் நாள் பூராவும் துன்பத்தில் ஆழ்த்த வேண்டாம் என்றுதான் அம்மா இந்தக் கல்யாணத்தை நிறுத்தச் சொன்னேன்.''

''இதை நீ ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கக் கூடாதா? இந்தப் பெண்ணின் அம்மா, அப்பாவுக்குத்தான் இதனால் எத்தனை சிரமங்கள்?''

''உண்மைதானம்மா. சந்தர்ப்பங்கள் அப்படி அமைந்து விட்டன. அம்மா, என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?''

''போகட்டும்! நீ விரும்புகிற பெண் யார்? அதையாவது சொல்லு.''

''அப்படி யாரும் இல்லையம்மா!''

''அப்படியானால் ராகினியை ஏன் உனக்குத் திடீரென்று பிடிக்காமல் போயிற்று?''

''தயவுசெய்து அதை மட்டும் கேட்காதே அம்மா''— கெஞ்சினான் முரளி.

''இங்கேதான் நீ என்னிடமிருந் ஏதோ ஒரு உண்மையை மறைக்கிற அது என்னவென்று இந்த நிமிஷமே எனக்குத் தெரிந்தாக வேண்டும்.''

''இந்தக் கல்யாணம் நடக்காமல் இருந்தால்தான் எனக்கும் நல்லது. அந்த ராகினிக்கும் நல்லது. இவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்.''

''முரளி! இந்தக் கல்யாணம் நடக்க தான் வேண்டும். எழுந்திரு. பெண் வீட்டாருக்கு நீயே போன் செய்.''-மகனின் கையைப் பற்றி இழுத்தாள் அலமேலு.

''முடியாது! இந்தக் கல்யாண நடக்கக் கூடாது''—உரத்த குரலி கத்தினான் முரளி.

''இந்தக் கல்யாணம் நடந்தே தீரு ஓர் இளம்பெண்ணின் வாழ்க்கையுட நீ விளையாட நினைக்கிறாய். அதற்கு நா ஒருபோதும் இடமளிக்க மாட்டேன்''- வேகமாக டெலிபோன் அருகில் சென்றா

ரிசீவரைக் கையில் எடுத்துக்கொண் அவள் எண்களைச் சுழற்றினாள். அந் கையை மேற்கொண்டு அசைக்கமுடியா படி தன் கையால் அழுத்திப் பிடித் கொண்டான் முரளி. அவனுடை இடது கை தன் பாண்ட் பாக்கெ லிருந்து ஒரு கடிதத்தை எடு அம்மாவிடம் கொடுத்தது:

''இதைப் படித்துப் பார்த்துவிட் பிறகு போன் செய் அம்மா.''


ஒன்றும் புரியாத நிலையில் அந்தக் தத்தைப் பிரித்துப் படித்தாள் அலமே

'ஸ்ரீ முரளீதரன் அவர்களுக்கு,

நமஸ்காரம். இந்தக் கடிதம் த ளுக்கு மிகுந்த ஆச்சரியத்தைக்கொ கும். இதைவிட்டால் வேறு வழியி என்கிற நிலையில்தான் பெருத்த ந கையோடு இதை எழுதுகிறேன்.

இரவில் நடைபாதையில் படுத்துத் தூங்குபவர்கள் பம்பாயில்தான் மிக அதிகம்; 59000 பேர் இப்படி வாழ்கிறார்கள். கல்கத்தாவில் 41000 பேர். சென்னையில் 9000 பேர். டில்லியில்தான் மிகக் குறைவு; 7000 பேர்தாம்!

அக்கரைப் படங்களில் அக்கறை!



ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து இப்போது வெளி வந்திருக்கும் படம் 'பாபி'. இது 'லவ்-ஸ்டோரி' என்ற ஆங்கிலப் படக் கதையின் 'டீன்-ஏஜ்' உருவமாம்!

ஆங்கிலப் படக் கதைகளில் பல, இந்தித் திரையில் வந்து வெற்றி அடைந்து கொண்டிருக்கின்றன கொஞ்ச நாட்களாக. 'தாக்' படத்தின் கருத்து: Sun flower, 'பரிச்சய்' படத்தின் மூலம்: Sound of music, 'தோ-சோர்' படத்தின் அடிப்படை: How to steal a million. 'ராஜா ஜானி' படத்தின் 'ஐடியா': My fair Lady, 'ஸன்ஜீர்' படத்துக்கு ஆதாரம்: Death rides a horse. எல்லாம் இப்படி அமைந்ததுதானும்! பிரபல இந்திப் படத் தயாரிப்பாளர் ஒருவர், இன்னும் ஒரு படி மேலே போய், பிரபல இந்தித் திரைப் படக் கதாசிரியர் ஒருவரை, கதை கொண்டு வருவதற்காக இங்கிலாந்திற்கு ஒன்றரை மாதம் அனுப்பி வைத்திருக்கிறாராம்!

தங்களிடம் நான் எந்தவிதமான குறையையும் காணவில்லை. ஆனால், பெண்ணுள்ளத்தின் முதல் மலர்ச்சி தெய்விகமான ஒன்றல்லவா? பட்டம், பதவி, பொருளாதார அந்தஸ்து, உருவம் போன்ற எல்லா விஷயத்திலுமே ஒருபடி குறைவானவர்தான் என் மாமா பிள்ளை. ரொம்ப ஏழையும் கூட. அவரையே என் கணவராக நினைத்து விட்டேன். தகப்பனார் அவரை மறந்துவிடச் சொல்கிறார். அது என்னால் முடியவே முடியாத காரியம். என்னை வீட்டினுள்ளே கௌரவமாகச் சிறைப்படுத்தி வைத்துவிட்டு, என் விருப்பத்திற்கு விரோதமாகத் தங்களை எனக்கு நிச்சயித்து விட்டார்.

இதை ஆரம்பத்திலேயே தெரிவித்திருக்கலாமே என்று கேட்கலாம். அப்படி நான் இந்தக் கடிதத்தை ஆரம்பத்திலேயே தங்களுக்கு எழுதியிருக்க முடியும். ஆனால் என் தகப்பனார் லேசுப்பட்டவர் அல்ல. வேறு மாப்பிள்ளை தேட ஆரம்பித்து விடுவார். அதனால் தான் இவ்வளவு தாமதமாக இதை எழுதுகிறேன். கல்யாணத்திற்கு இன்னும் ஐந்து நாட்கள்தான் இருக்கின்றன. இந்தக் குறுகிய காலத்தில் வேறு மாப்பிள்ளை தேடிக்கொண்டு வர முடியாதே! என் அப்பா கௌரவத்தையும் செலவழித்ததையும் வீணாக்க மாட்டார். வேறு வழியில்லாத நிலையில் என் மாமா பிள்ளைக்கே என்னைக் கல்யாணம் செய்துகொடுத்து விடுவார். ஏன் என்றால் அவர் எங்கள் வீட்டோடு இருந்து வருகிறார்.

இப்போது உங்களுக்கு எல்லாம் புரிந்துவிட்டிருக்கும். இந்தக் கல்யாணம் நடந்தால் மூன்று பேர்களின் வாழ்வும் பாழாகும். தயவு செய்து, தாங்கள் ஏதேனும் ஒரு தந்திரத்தைக் கையாண்டு இந்தக் கல்யாணத்தை நிறுத்திவிட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் என்னைக் காட்டிக் கொடுத்து விடக் கூடாது. இந்த உதவிக்கு என் வாழ்நாள் பூராவும் கடமைப்பட்டிருப்பேன். செய்வீர்களா?

இப்படிக்கு,
ராகினி.'

அலுமேலுவின் கையிலிருந்த கடிதம் நழுவிக் கீழே விழுந்தது.



என்றும் போலவே ஒரு நாள்... இருப்பினும், வலியையும், அசௌகரியத்தையும், நிம்மதியின்மையையும் போக்கும் வழி சொல்லக்கூடிய தோழி ஒருத்தி கிடைக்கமாட்டாளா, அது எந்த நாள் என்பதை மறக்க உதவ மாட்டாளா, என்று நீங்கள் ஏங்கும் நாள் அது—அப்படிப் பட்ட நாட்களில் மைக்ரோஃபைன்ட் ஆஸ்ப்ரோ வை நாடுங்கள்—சில வினாடிகளில் நிம்மதி பெற!

மைக்ரோஃபைன் செய்யப்பட்டிருப்பதால், ஆஸ்ப்ரோ அதி விரைவாகச் செயல்புரிகிறது. விரைவில் கிரகிக்கப்பட்டு, நீடித்த நிவாரணத்தை அதிவேகமாக அளிப்பதற்கென, ஆஸ்ப்ரோ·விலுள்ள வலிநிவாரணச் சேர்க்கைப் பொருள்கள் 30 மடங்கு நுணுக்கமாக்கப் பட்டுள்ளன. மைக்ரோஃபைன்ட் ஆஸ்ப்ரோ , இப்பொழுது கிடைக்கும் அதிநவீனமான வலி நிவாரணியாகும். கையடக்கமான ரேக்குகளில் கிடைக்கிறது.



மைக்ரோஃபைன்ட் ஆஸ்ப்ரோ
அதிவேகமாக வலியை வெளியே இழுத்து அசௌகரியத்தைப் போக்குகிறது.

ஆஸ்ப்ரோ இருந்தாலே—
ஆனந்தப்புன்னகைதான்!

நிகோலஸ் தயாரிப்பு

A.G.41 TM (R)



நியாயத்திற்காகப் போராடத் தன் பதவி தடையாக இருக்கிறது என்பதால், பதவியை உதறிவிட்டு சாட்சிக் கூண்டுக்கு இன்ஸ்பெக்டர் வருவதிலும், கற்பு பறிக்கப்பட்டவள் என்று தெரிந்தும் லட்சுமியை மனைவியாக்கிக் கொள்வதிலும் அர்த்தம் இருக்கிறது. இது ஒரு புதிய அலை; 'நியூ வேவ்' அல்ல!

மாமூல் சங்கதிகள் என்று சொல்லும்படி ஒன்றிரண்டு இருக்கின்றன. இன்ஸ்பெக்டர் - வில்லன் சவுக்கடி-பெல்ட் சண்டை அதிகப்படியாகவே தோன்றுகிறது. ஏர்க்காட்டு மலையில் கதாநாயகன், கதாநாயகியைப் பார்த்துப் பாட ஆரம்பிக்கும் போது, எங்கே 'டூயட்' ஆகிவிடுமோ என்று நினைக்கிறோம். நல்லவேளை இல்லை.

அலை அலையாகக் கேள்விகள்—

அபலைப் பெண் டிக்கெட் இல்லாமல் [ரயி]லில் பிரயாணம் செய்கிறாளே, ஏன்?

விபசார விடுதிக்குள் அவள் தள்ளப் [படு]கிறாளே, ஏன்?

சாலையிலும் டீக்கடையிலும் 'ரவுடித் [தன]ம்' செய்கிறாள். செய்யாத குற்றத்திற் [கா]க்ச் சிறைக்குப் போகிறாள். கொலையும் [செ]ய்கிறாள். ஏன்? இதற்கெல்லாம் [மே]லாக இன்னொரு கேள்வி: கற்பழிக்கப் [பட்]ட அந்தப் பெண்ணுக்கு யார் வாழ்வு [தரு]வது?

அபலைப் பெண்களின் ஒரு பிரதிநிதி [தா]ன் கதாநாயகி லட்சுமி. அலை அலை[யா]ன சமூகப் பிரச்னைகளின் பிடியில் [சி]க்கித் தவிக்கிறாள். ஒரு கேள்விக் குறி[யா]ன பாத்திரம். டிக்கெட் இல்லாமல் [அவ]ள் ரயிலில் ஏறியபோதும் சரி, [அவ]ளுக்கு டிக்கெட் வாங்கித் தந்து விட்டு [கதா]நாயகன் தன் வழியில் போய் [விடு]ம்போதும் சரி, அடுத்து என்ன என்ற [வே]கத்தோடு ரயில் வேகத்தில் கதையை [ஆர]ம்பித்து, அந்த வேகத்தோடு [க]தையை நடத்தியிருக்கிறார் டைரக்டர் [ஸ்ரீத]ர். ஒரு பிரச்னையைத் தொட்டு விட்டு [க]தையைக் கதம்பமாக்கி விட்டு தப்பி [வி]டுவாரோ என்று நினைக்கிறோம். இந்[த]..ய, தர்க்கவாதங்களுக்கு நிரம்ப [இட]ம் இருக்கிறது. சில வாதங்களும் [சம்ப]வணிகளும் செயற்கையாக இருப்பது [போ]ல் தோன்றினாலும், நியாயம் கற்பிக்[கு]ம் முறையில் அவை அடிபட்டுப் [போ]ய் விடுகின்றன.

குழந்தைத்தனமாக நடிக்கும்போதும், குமுறி வெடிக்கும் சமயங்களிலும் கதாநாயகி சந்திரகலா பிரகாசிக்கிறார். நயமான நடிப்பு. இன்ஸ்பெக்டரோடு (விஷ்ணுவர்த்தன்) தனித்திருக்கும்போது செய்யும் குறும்புகள் இதமானவை.

புதுமுகம் என்ற சாயல் தோன்றாதபடி கம்பீரமாகக் காட்சி தர முயன்றிருக்கிறார் விஷ்ணுவர்த்தன். மற்றொரு புது முக நடிகரான செல்வகுமார் வில்லனாக அங்கீகாரம் பெற முடியும்.

சமூக சேவகி என்ற போர்வையில் மருந்துக் கலப்படம் புரியும் மனோரமா நேரத்திற்கொரு மொழி பேசுவது நல்ல தமாஷ். மனைவிக்கு அடங்கிய கணவராக 'சோ'வை எத்தனை முறைபார்ப்பது? இன்ஸ்பெக்டருக்கு லஞ்சம் கொடுக்க அவர் முயல்வது ரசிக்கும்படி இருக்கிறது.

சில சமூகப் பிரச்னைகளை அணுகிவிட்டு அரைகுறையாக விட்டுச் சென்று விடாமல் பரிகாரம் கண்டிருக்கிறார் ஸ்ரீதர். வாதங்கள் சற்று அதிகமாகத் தோன்றினாலும் சுமையாக இல்லை.

அசை போட்டுச் சிந்திப்பதற்கு விஷயம் இருக்கிறது. பொருள் உள்ள புதிய அலை.


வெள்ளித்திரையின்
அந்த நாள் முதலாய்
நாங்கள் பெருமளவில் மாறிவிட்டோம்
நீங்கள்?
பின்னி
ஷர்ட்டிங்குகளும்,
சூட்டிங்குகளும்:
விண்வெளி-
யுகத்தின்
எண்ணற்ற
வகைகள்
முற்றிலும் மாறுபட்ட
டிசைன்கள். புதுமைப்
பாணிகள் ...தீர கம்பீர
திறுசுகள்.
பின்னி
TERENE இழைந்தது
Interpub/BB/41/73 Tam

நாலு முழம் பூ

—இறைவன்—

“மறந்து விடாதே. ஓட்டல் கல்பனு.''

''கட்டாயம் வந்து விடுவேன். கவலைப் படாதீர்கள், ரமேஷ்''—ராதிகாவின் உதட்டோரத்தில் ஒரு சிரிப்பு.

வெங்கடேசன் இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்



தார். ராதிகா, அவள் இவள் என்று 'ஜாலி'யாகச் சுற்றிக் கொண்டிருக்கும் ரமேஷைப் பார்க்கப் பார்க்க பொருமையாக இருந்தது. இருபத்துமூன்றும் வயதில் திருமணமாகி இந்த நாற்பது வயதுக்குள் நான்கு குழந்தைகளுக்கு 'அப்பா' ஆகி.......

சென்ற ஐந்து வருடங்களுக்கும் மேலாக ரொம்பக் கட்டுப்பாட்டுடன் 'பல்லைக் கடித்துக் கொண்டு' வாழ்ந்தாகிறது.

''காண்டீனில் அல்வா போட்டிருக்கிருன். ரொம்பப் பிரமாதம். வாங்கிண்டு போய் வீட்டுக்காரியிடம் கொடுத்து...''

யாரோ, யாரையோ கிண்டல் செய்கிருர்கள். அவர் இதெல்லாம் வாங்கிச் சென்று ஐந்து வருடங்களுக்கும் மேலாக....

''வெங்கடேசன், நான் கொஞ்சம் முன்னுடி போறேன். ஒய்ஃப் ஏதோ 'பர்ச்சேஸ்' செய்யணும்னு சொன்னுள்''—ராமசாமி புறப்பட்டு விட்டார். அடுத்த வருடம் 'ரிடையர்' ஆகப் போகிருர். நாள் தவருமல் இரண்டு முழம் பூ வாங்கிப் போகிறவர்.

'ஒரு முழம் பூ வாங்கிப் போய் எத்தனை நாட்களாகி விட்டன! ஏதோ அசட்டுத்தனமான பயத்தில் எதற்காக இப்படி நம்மை நாமே கஷ்டப்படுத்திக் கொண்டு மனசின் ஆசைகளைப் பொசுக்கிக் கொண்டு....

தீர்மானித்து விட்டார் வெங்கடேசன்.

நாலு முழம் பூ, இரண்டு ரூபாய்க்கு அல்வா வாங்கிக் கொண்டாகி விட்டது. மங்களத்தை நைஸாகத் தனியே கூப்பிட்டு, விஷயத்தைச் சொல்லி...அவள் முதலில் திகைப்பாள். இருந்தாலும், அவளுக்கு மட்டும் 'தாபம்' இருக்காதா என்ன? குழந்தைகள் தூங்கியதும் அவள் தலையில் நானே பூச்சூட்டி, இந்த அல்வாவை அவள் வாயில் ஊட்டி... மெல்லப் பேசிப் பேசி......

''**வா**ங்கோ... வாங்கோ. என்ன பொட்டலம்? தெரியுமா சேதி?''

''சேதியா? என்ன விஷயம்?''—வெங்கடேசன் புரியாமல் விழித்தார்.

''அட, பூப் பொட்டலம், அல்வா. அடியே, ஹேமா, அப்பாவுக்கு யாரோ ஆபீசிலேயே போய் சொல்லிட்டாப் போலே இருக்கு.''

வெங்கடேசன் உள்ளே பார்த்தார். மூத்த பெண் ஹேமா, கோலம் போட்ட பலகையில், குனிந்த தலை நிமிராமல் வெட்கத்துடன் தனியாக உட்கார்ந்திருந்தாள்!

ஸ்ரீவித்யா
எதிர்பார்க்கவுமில்லை-ஏங்கவுமில்லை...

ஒரே படத்தில் பல பிரபலங்கள் நடித்தால், யார் பெயரை முதலில் போடுவது என்பது தயாரிப்பாளருக்குத் தலைவலி!

'திரையுலகில் இளையதலைமுறை' என்ற சப்ஜெக்டை எடுத்துக் கொண்டு, இளம் நடிகைகளை அணுகிய எங்களுக்கும் அந்தக் கதிதான்!


''நான்தான் 'ஃபஸ்ட்'டா? எனக்கு முன்னாடி யாரையாவது பேட்டி கண்டீங்களா?''

இந்தக் கேள்வியை சுபாவைப் பேட்டி காணும்போது அவரும் கேட்டார்; இப்போது இரண்டாவதாக ஸ்ரீவித்யாவைப் பேட்டி காணச் சென்ற போது அவர் கேட்ட முதல் கேள்வியும் இதுதான்.

சுபாவை முதலில் பேட்டி கண்டதாகச் சொன்னவுடன், ''சுபாவா! அவ ரொம்ப 'போல்'டா சொல்லியிருப்பாளே! அவ எதுக்கும் பயப்பட மாட்டா...!'' என்றார் ஸ்ரீவித்யா.

''உங்களிடமும் அதையேதான் எதிர்பார்க்கிறோம்!'' என்றோம்.

''எனக்கும் அப்படி சொல்லணும்னு ஆசை தான். ஆனா அப்பா கோவிச்சுக்குவார்.''




''இதோ பார், யங் ஸ்பிரிட்லே எதை ாவது கன்னுபின்னுன்னு சொல்லி வைக் ாதே...ஜாக்கிரதை...'' என்று எச்சரிக் ிறார், பக்கத்தில் அமர்ந்திருந்த ரீ வித்யாவின் அம்மா எம். எல். வசந்த ;மாரி.

''நீ ஒண்ணும் பயப்படாதேம்மா... ள்ளே போய் டிரஸ் பண்ணிண்டு வா... மத்தோல்லியோ...'' — பேசுவதற்கு வசதியாக அம்மாவை நைஸாக 'கட்' பண்ணி அனுப்புகிறார் ஸ்ரீவித்யா.

ஸ்ரீவித்யாவுக்கு நல்ல சுருள் முடி. பின்னிக் கொள்வது அவ்வள வாகப் பிடிக்காது போலிருக்கிறது. இடப்புறத்தில் கொத்தாக ஒரு 'மினி'முடியைத் தொங்க விட்டு, அலை அலையாய் உள்ள மீதிக் கூந்தலை முன்பக்கம் மார்பில் குற்றால அருவியைப் போல் தவழ விட்டுக் கொண்டிருக்கிறார். வீட்டில் 'பொமரேனியன்' போன்ற நாய்கள் வளர்க்காத காரணமோ என்னவோ, பேசும்போது தன் கூந்தலை மார்பில் சாய்த்துக்கொண்டு இரு கைகளாலும் கொஞ்சுவதைப் போல் கோதி விட்டுக் கொள்கிறார். கண்களில் ஒரு சமயம் ஜாக்வீலேன் பிஸ்ஸட்டின் சாயல் இருக்கிறது. சில சமயம் அவருடைய தாய் எம். எல். வி-யின் முத்திரையும் பளிச்சிடுகிறது.

எட்வர்ட்எலியட்ஸ்ரோடில் இவர்கள் பத்மினி வீட்டிற்கு எதிரே குடியிருந்த போது அடிக்கடி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் ஸ்டூடியோக்களுக்குப் போய் வருவது ஸ்ரீ வித்யாவின் வழக்கம். அம்மா, சினிமாவிலே பின்னணி பாடியவர். அப்பா கிருஷ்ணமூர்த்தி, பிரபல விகடகவியாக இருந்தவர். அதனால் இவருக்குப் படவுலகைப் பொறுத்தவரை எந்தவிதப் பயமும் இருந்ததில்லை.

ஸ்ரீவித்யாவின் முழுத் திறமையைக் காட்ட ஏன் அவருக்குத் தமிழில் சந்தர்ப்பங்கள் வரவில்லை!



''பேக்கிரவுண்டை ஸ்பாயில் பண்ண விரும்பலை...''

''தமிழ்ப் படங்களிலே எனக்கு சான்ஸ் தர தயாரிப்பாளர்கள் ஏன் தயங்கறாங்கன்னு தெரியலை. மலையாளத்திலே கிடைச்ச 'பிரேக்' தமிழிலே கிடைக்கலை. 'நூற்றுக்கு நூறு' படத்திலே நல்ல பேர் கிடைச்சுது. அதுக்குப் பிறகு நான் குண்டா இருந்ததாலே சான்ஸ் வரலைன்னு சொன்னாங்க. 'சரி'ன்னு கஷ்டப் பட்டு என் எடையைக் குறைச்சேன்! எடையைக் குறைச்ச பிறகு மட்டும் என்ன அப்படி சான்ஸ் வந்து குவிந்து விட்டது? ஒண்ணும் வரலை. இதைப் பார்த்த பிறகு தமிழைப் பொறுத்த வரைக்கும் ஒரு 'ஆம்பி'ஷனும் இல்லே. 'பிரஸ்ட்ரேஷன்' தான் அதிகமாயிருக்கு. அதனாலே இப்போல்லாம் நான் தமிழ்ப் படங்கள்லே சான்ஸ் எதிர்பார்க்கவும் இல்லே... கிடைக்கலையேன்னு ஏங்கவும் இல்லே...

''தயாரிப்பாளர் ஒப்பந்தம் பண்ண வரும்போது, 'அம்மா, நீங்க இந்தப் படத்தில் பண்ணப் போற ரோல், 'த்ரூஅவுட் ரன்னிங் ரோல்' என்று சொல்லி 'புக்' செய்வார்கள். ஆனால் நடிக்கும்போது 'குட்டு' வெளியாகும். அந்த ரோல் மூன்று, நான்கு சீன்கள் தான் வரும். இதைப் போலவே 'ரன்னிங்'ரோல், 'சிம்பதடிக்' ரோல்,

''த்ரூ அவுட் ரன்னிங் கேரக்டர்'னு புதுசு புதுசா வார்த்தைகளைப் போட்டு மயக்கிடறாங்க......''

பாதி பேசிக் கொண்டிருக்கும்போது மலையாளத்தில் பிரபல ஹீரோவான ராகவன், கையில் திருமணப் பத்திரிகையுடன் அடக்கமாக உள்ளே நுழைந்து வித்யாவுடன் சில நிமிடங்கள் பேசிவிட்டு வந்த சுவடு தெரியாமல் போகிறார்.

''இவரைப் பார்த்தா, ஒரு ஹீரோ மாதிரியா இருக்கு...? இப்போ இவர் கையிலே பதினேழு படங்கள் இருக்கு... வெரி டீசன்ட் மேன்... மேன் ஆஃப் பிரின்ஸிபிள்ஸ். தமிழ்லேயும் இருக்காங்களே... ஆனா இப்போ 'எஜுகேடட் பீப்பிள்' நிறைய வந்துட்டதாலே அவ்வளவா டிரபிள் இல்லே...சில பழைய நட்சத்திரங்களெல்லாம்அன்பாத்தான் இருக்காங்க. இப்போ வந்திருக்கிற புது நடிகைகளோ 'எனக்கு ஏன் கார் அனுப்பலே?என் பக்கம் ஃபேனைத் திருப்பு' அப்படின்னு 'சில்லி'யா பிஹேவ் பண்றாங்க ...

''நான் பாலசந்தர் டைரக்ஷன்லே நாலு படம் நடிச்சிருக்கேன். இப்போ 'சொல்லத்தான் நினைக்கிறேன்'லேயும் நடிக்கிறேன். அவர் என்ன 'எக்ஸ்பிரஷன்ஸ்'எதிர்பார்ப்பார்ங்கிறது எனக்குத் தெரியும். சில சமயம் அவர் என்கிட்டே வந்து ஏதாவது ஒரு இடத்தைச் சொல்லி அதை 'மத்த ஆர்ட்டிஸ்டுங்களுக்கு எப்படி பண்றதுன்னு சொல்லிக் கொடு' என்பார். அவர் சொல்லுக்கு மதிப்புக் கொடுத்து நான் விளக்கப் போனா, 'இவ என்ன எனக்குச் சொல்லிக் கொடுக்கிறது'ன்னு மனசிலே நினைச்சுக்கிட்டு, 'எல்லாம் எனக்குத் தெரியும்'னு முகத்தைத் திருப்பிக்கிட்டுப் போவாங்க...'' என்கிறார் ஸ்ரீவித்யா.

'மேக்கப்' விஷயத்தைப் பொறுத்த வரையில்கூட தமிழுக்கும் மலையாளத்திற்கும் ஒரு 'நீண்ட' வித்தியாசம் இருப்பதைப் படம் பிடித்துக் காட்டினார் ஸ்ரீவித்யா:

''மலையாளப் படங்களைப் பொறுத்த வரை, தயாரிப்பாளர் ஒரு மேக்கப் ரூம், ஒரு டிரஸ்ஸிங் ரூம்தான் வாடகைக்கு எடுப்பாங்க. அந்த ஒரு மேக்கப் ரூமுக்குள்ளேயேதான் சீனியர் ஆர்ட்டிஸ்ட் பிரேம் நசீர்லேருந்து, ஜூனியர் ஆர்ட்டிஸ்டான வித்யா வரைக்கும் (மலையாளத்திலே இப்போ நான்தான் ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்) மேக்கப் போட்டுக்கணும். ஆனா தமிழ்லே அப்படியில்லையே. எல்லாருக்கும் தனித் தனி மேக்கப் ரூம் இருக்கணும். இல்லேன்னா சண்டை வந்துடும்.

''என் மேக்கப்புக்காக நான் 'ஸ்பெஷல் திங்க்ஸ்' வச்சிருப்பேன். செல்ஃப் மேக்கப் மேனும் வச்சிருப்பேன். அதைப் பார்த்துச் சிலருக்குப் பொறாமை. நான் வச்சிருக்கிற மேக்கப் பொருள்களை அவங்களுக்கும் கொடுக்கணும்னு எதிர்பார்க்கிறாங்க...''

''ஏன்? மத்தவங்க ஆசைப்பட்டா கொஞ்சம் கொடுக்கறதிலே தப்பில்லையே?''

''ஹை... நான் ஏன் கொடுக்கனு உக்கும்...!''

மரியாதையை ரொம்பவும் எதிர்பார்க்கிறவர் இவர். யாருக்காவது இவர் 'விஷ்' பண்ணி, அவர்கள் திருப்பிச் செய்யவில்லையென்றால், 'நீங்க ஏன் பண்ணலே?' என்று நேருக்கு நேராகக் கேட்டு விடுவாராம். வேறொரு நிகழ்ச்சியையும் குறிப்பிட்டார் ஸ்ரீவித்யா:

''ஒரு நாள் ராத்திரி தமிழ் நடிகர்—தயாரிப்பாளர் ஒருத்தர் திடீர்னு டெலிபோன் பண்ணி,'உடனே ஆபீசுக்கு வாங்க'ன்னு கூப்பிட்டாரு. நான் எதுக்குன்னு கேட்டேன். அதுக்கு அவர், 'கதை டிஸ்கஸ் பண்ணணும்' னு சொன்னார். நான் காலையிலேயே பண்ணிக்கலாமேன்னு திருப்பிச் சொன்னேன். உடனே அவர், 'இதெல்லாம் உங்களுக்குத் தெரியாதுங்களா, வந்து... போயி'ன்னு போன்லேயே இழுக்க ஆரம்பிச்சுட்டாரு...''

இவராக சான்ஸ் தேடி எங்கும் போனதில்லையாம்.

''தேடிப் போய் சான்ஸ் கேட்டு, எங்க ஃபாதர் மதர்க்கு இருக்கற ஒரு நல்ல 'பேக்கிரவுண்'டை 'ஸ்பாயில்' பண்ண நான் விரும்பலே.......'' என்கிறார்.

ஸ்ரீ வித்யா—

இதுவரை இருபத்தேழு படங்களில் நடித்திருக்கிறார்.

ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு முன், தான் நடிக்கவிருக்கும் பாத்திரத்தின் தன்மையைக் கேட்டுத் தெரிந்து கொள்கிறார்.

குறுகிய காலத்தில் நல்ல நடிகை என்ற பெயரெடுத்து, வாழ்க்கையில் 'செட்டில்' ஆகிவிடவும் விரும்புகிறார்.

—கே. சுந்தரம்.

வாசகர் கருத்து



குன்னக்குடி குறை கூறுகிறர்...

அப்சரஸ் சுப்ராவுக்காக நடத்திய இசை நிகழ்ச்சியில் நான் வயலினில் 'வாதாபி கணபதிம்' என்ற தீட்சிதர் கிருதியை இருபது நிமிடங்களுக்கு மேல் வாசித்து விட்டே, சினிமா பாட்டுகளை வாசிக்க ஆரம்பித்தேன். அன்றுடம் புதுமையை நோக்கி உருவாகி வரும் இசை உலகில், வயலினில் சினிமாபாட்டு இசைப்பது தவறல்ல. நான் கர்நாடக சங்கீதத்தை என்றும் கைவிடமாட்டேன்.

குன்னக்குடி வைத்தியநாதன்,
சென்னை-28.

'மண்மணக்கும் மாதுங்கா' கட்டுரையில் சவுத் இந்தியன் கன்சர்ன்ஸ் 135 ரூபாய்க்கு சாப்பாடு போடுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது சரியல்ல. 80 ரூபாய்தான் வாங்குகிறர்கள். வெங்காய சாம்பார், உருளைக்கிழங்கு கறி-வியாழக்கிழமை இரவில்தான் கிடைக்கும்.

பம்பாய்-19. நடராஜன்.

ஆறு ரூபாய்க்குக் கிடைக்க வேண்டிய மலரை 45 காசுக்கு ஒரு ஜனதர் மலராகக் கொடுத்த தங்களின் பெருந்தன்மையை எப்படிப் பாராட்டுவது?

அருப்புக்கோட்டை. என். சுந்தரராஜன்.

மாலி, ரமணி இருவரும் சேர்ந்து வாசித்த கச்சேரி பற்றிய விமரிசனம் மிகவும் கவர்ச்சியாக, சரியாக, சிறப்பாக அமைந்திருப்பதை நாங்கள் படித்து ரசித்தோம்.

வயலினில்லாமல் தாளவாத்யங்களின் துணையுடன் அவர்கள் செய்த அந்த கச்சேரியில், எங்கள் பொறுப்பும், பங்கும் என்ன என்பது விகடன் விமரிசகரின் கவனத்திற்கு வராததுதான் ஏன் என்று தெரியவில்லை.

சென்னை-28. தஞ்சாவூர் உபேந்திரன்,
காரைக்குடி ஆர். மணி.

கச்சேரியின்போது ரசிகர்கள் பகுதியில் விளக்கை அணைப்பதால் 'டிஸ்கஸ்' செய்ய முடியவில்லையாமே! ஆமாம். நிறைய வெளிச்சமும் 'டிஸ்கஷ'னுக்கு நிறைய வாய்ப்பும் தேவைதான்—வீயெஸ்விக்கு, இசை ஞானத்தில்! மாலி-ரமணி கச்சேரியில் நீலாம்பரியையும் ஆனந்த பைரவியையும் குழப்பிக் கொண்டிருக்கிறரே!

சென்னை-28. டாக்டர் எஸ். ஜகதீசன்.

"நான் பாச்சுலர் இல்லை. அன்மாரீட் மேன். இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது."

'ரகசிய'த்தின் ஆரம்பமே இளம் உள்ளங்களைத் தொட்டுவிட்டது.

அலவாக்கோட்டை. 'மீரா'.

கொத்தமங்கலம் சுப்புவின் கவிதையே தீபாவளிச் சிறப்பிதழின் உன்னதத்திற்கு முதற்படி.


காட்பாடி. கோ. தீபா.

ஜெயகாந்தனின் 'குருக்களாத்துப் பையன்' கதை என் உள்ளத்தைத் தொட்டு விட்டது.

சேலம்-6. கே. எஸ். தாஸ்.

ஓர் அரசியல்வாதியின் அந்தரங்க உணர்வுகளுக்கும் அர்த்தமுண்டு என்பதை திரு. முத்து அவர்களுடன் நடத்திய பேட்டி தெளிவாக்கியது.

மேட்டுப்பாளையம். மனோகர்.



விகடனில் மேயர் முத்துவின் வாய்க்கு 'பிளாஸ்திரி' ஒட்டியிருப்பது போன்று கருத்துப்படம் போட்டு விட்டு, முத்துவைப் பேட்டி கண்டு, பேச வைத்து நீங்களே 'பிளாஸ்திரி'யை வெட்டி விட்டீர்களே!

கீழநீலிதநல்லூர். வெ. கோவிந்தசாமி.

கௌரவம்

கதை என்று பார்க்கப் போனால், உடைசல்களும், தடுமாற்றங்களும் ரொம்ப அதிகம். நீதியை இந்தப் படத்தில் 'கேலி' செய்திருக்கும் அளவு வேறு எந்தப் படத்திலும் கேலி செய்திருப்பதாகத் தெரியவில்லை.

உண்மையிலேயே கொலை செய்த ஒருவனை, சிவாஜி (பெரியவர்) தன் வாதத் திறமையால் தண்டனையிலிருந்து தப்புவித்து விடுகிறார். அதே மனிதன் நிரபராதியாக இருந்த போது, அவனுக்குத் தண்டனை வாங்கித் தருகிறார் சிவாஜி (சின்னவர்). 'நீதி என்பது உண்மையின் அடித்தளத்தில் உருவானதல்ல; வக்கீல்களின் வாதத் திறமையால் உருவாக்கப்படுவதுதான்' என்று சொல்லியிருக்கிறார்கள்!

அது போகட்டும். சிவாஜி (பெரியவர்) பாராட்டும் கௌரவம்தான் என்ன? தான் எந்த கேஸ் எடுத்தாலும் சரி, (அது தவறானதானாலும் சரி) அது வெற்றி பெற்றே தீரவேண்டும் என்று பிடிவாதமாக நினைப்பது உண்மையான கௌரவமா, வறட்டு கௌரவமா?

ஆனால்,இந்தப் படத்தைப் பொறுத்த அளவில் இரண்டு காவியங்களில்தான் மெய்மறந்து போய் விடுகிறோம். ஒன்று, சிவாஜி படைத்திருக்கும் நடிப்புக் காவியம். அடுத்து, வின்ஸெண்ட் தன் காமிராவினால் படைத்திருக்கும் வண்ண ஒளிப்பதிவுக் காவியம்.

பாரிஸ்டர் ரஜனிகாந்தை சித்திரித்துக் காட்டியிருப்பதில் கோபுரமாக நிற்கிறார் சிவாஜி.

இன்ஸ்பெக்டர் 'சோர்ட்டில் சந்திப்போம்' என்று திருப்பிச் சொல்வது, குமுறலுடன் 'கண்ணன், முவ் பெய்ல்' என்று வெகுண்டெழுவது, 'எனக்கு டைம் கொடுக்கிறானா?' என்று பொருமுவது, பூனையைக் கண்டு 'நான் சென்டிமெண்டலா மாறிட்டேனா' என்று ஆதங்கப் படுவது.. இப்படி எவ்வளவோ!

கண்ணனாக வரும் சிவாஜி 'பெரிய சிவாஜி'யை வித்தியாசப்படுத்தி உயர்த்திக் காட்ட உதவுகிறார்.

நாகேஷ் ரசிக்கிறாற் போல் செய்திருக்கிறார். கொஞ்ச நேரமே வந்தாலும் மகேந்திரன் மனத்தில் நிற்கிறார்.

கதையில் காட்டாத கவனத்தை வசனத்தில் காட்டியிருக்கிறார் சுந்தரம்.

சுவர் பழுதாக இருந்தாலும், சித்திரம் பளபளப்பாக இருக்கிறது.

நத்தையில் முத்து

முத்து என்றுதான் சொல்லலாமா? இல்லை, மாணிக்கம் என்று சொல்லலாமா?

ஊஹூம்; பட்டை தீட்டிய வைரம் என்றுதான் சொல்லலாம், விஜயாவின் நடிப்பைப் பற்றி.

அவ்வளவு உழைத்து நடித்து, தன் நூறாவது படத்தில், நடிப்பில் நூற்றுக்கு நூறு வாங்கியிருக்கிறார்.

''பாவாசம் எங்கே?'' என்று அவர் வரலட்சுமியிடம் சண்டை போடும் அழகென்ன, மாட்டுக்கொட்டிலில் முத்துராமனை முதன் முதலாகச் சந்திக்கும் போது அவர் வெளிப்படுத்தும் வசியப் பார்வைகளென்ன, கோவிலில் அங்கப் பிரதட்சிணம் செய்யும் உருக்கம் என்ன, மாமியார் அன்பின் மிகுதியால், தான் தொடக் கூசும் குழம்பையே எடுத்து வந்ததைக் கண்டு மனம் நெகிழ்ந்து போகும் காட்சி என்ன — ஒவ்வொரு காட்சியிலும் அழகாக நடித்திருக்கிறார்.



கதையம்சம்: கலப்பு மணம்; தீண்டாமை ஒழிப்பு.

வசனம்: பிரசாரம்.

இருந்தும் படத்தைக் கூடியவரை அலுப்புத்தட்ட விடாமல் தயாரித்திருப்பது, டைரக்டரின் திறமை.

விஜயா-முத்துராமன் திருமணம் வரை 'ஜே ஜே' என்று போகும் படம், அப்புறம் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு பிரசாரம் செய்து கொண்டிருக்கிறது. அந்தப் பிரசாரத்தில் சில பகுதிகள் கதையோடு ஒட்டவில்லை. ஒட்டிய சில பகுதிகள் அளவுக்கு மீறிய காலட்சேபமாக இருக்கின்றன.



படத்தில் நம்மைக் கவரும் இன்னொருவர் பிராமண விதவையாக வரும் சந்திரகாந்தா. அவருக்குத் தாராளமாக வாய்ப்பளித்திருக்கிறார். அவரும் கிடைத்த வாய்ப்பைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

மொத்தத்தில் சொத்தை இல்லை.

பூக்காரி

வாழ்வைத் தேடிப் பட்டணத்திற்கு வந்து பணக்காரர் ஒருவரால் உயர்த்தப்படும் கதாநாயகனைச் சுற்றித் தொடுக்கப்பட்ட கதம்பச் சரமே பூக்காரி.

பூக்காரியின் அடக்கமான காதல், வில்லனால் மாசுபடுத்தப்படும் தங்கையின் அவலம், ஆளாக்கிவிட்ட முதலாளியின் மகளை மனைவியாக்கிக் கொள்ள முடியாத நெருக்கடி—இந்தப் பின்னணியில் கதையைச் சுலபமாக நடத்தியிருக்கிறார்கள்.

கிளப் டான்ஸ், கனவுக் காட்சி, ஆடல் பாடல், சண்டைகள், சாகசங்கள் ஆகிய மாமூல் மசாலாக்கள் இல்லாமல் கதையா? ஆனால் அளவாக இருக்கின்றன.

கிராமத்துக் கந்தனாக அறிமுகமாகும் போதும் சரி, அந்தஸ்து உயர்ந்த பட்டணத்து இளைஞனாக மாறியபோதும் சரி, கதாநாயகன் முத்துவைச் சற்று முன்னேறிய முத்துவாகச் சந்திக்கிறோம்.

பட்டண வாழ்க்கையைப் பார்த்து, வாய் பிளக்கும் அப்பா கப்பையாவும், புரோக்கர் தேங்காய் சீனிவாசனும் தங்களுக்குரிய முத்திரையைப் பதித்திருக்கிறார்கள். பண நோட்டுக்களைக் கீழே போட்டு, ஆளை ஆழம் பார்க்கிறாரே வி. கே. ராமசாமி, சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

பூக்காரி மஞ்சுளா ஏழைப் பெண் என்பதாலோ என்னவோ, அடக்கமாகத்தான் வருகிறார், கனவுக் காட்சி ஒன்றைத் தவிர. நிர்மலா வந்து போகும் நேரம் சொற்பம். பட்டணத்துப் பிரமிப்பில் அடக்க முடியாத ஆசைகளை மனத்தில் தேக்கிக் கொண்டு, அதற்குப் பரிசாக வாங்கிக் கட்டிக் கொண்டது போல் வில்லனிடம் மாசுபட்டு, ஊமையாகி, உணர்ச்சியைக் கொட்டும் ஜெயசித்ராவின் நடிப்பு நிமிர்ந்து நிற்கிறது.

மணம் குறைவேயானாலும் வண்ணம் நிறைந்த கதம்பம்.



நிழல்

மணி, திருமங்கலிய சரடு தயாரித்துக் கொண்டே மனைவி சுந்தரியைக் கவனித்தான். சுந்தரி உற்சாகமாக சமைத்துக் கொண்டிருந்தாள். அவள் இனிமையான குரலில் மெதுவாக ஒரு ராகத்தை இழுத்தபடி பாடியது அவனுக்குப் புதுமையாக இருந்தது. கல்யாணமாகி இந்த ஏழெட்டு மாதங்களில் ஏக்கமும், சலிப்பும், பொருமலும்தான் சுந்தரியிடம் அவன் கண்டவை. இன்று என்ன விசேஷம்? அவன் கேட்கவில்லை. அவளாகவே சொன்னாள்:

''எங்க ஊர் பெண்...நிர்மலா, எங்க அக்காவோடு படித்தவள், வந்திருந்தாள்.''

''ஓ! அப்படியா...அவா ஏங்கே குடியிருக்கா? அவ ஆத்துக்காரர் என்ன பண்றார்?''—மணி சகஜமாக வினவினான்.

சுந்தரி சிரித்தாள்.

''அவளுக்குக் கல்யாணம் ஆகவில்லை. யார் தெரியுமா? சினிமாவில் நடிக்கிறாளே நிர்மல், அவளேதான்.''—சுந்தரியின் விழிகளில் மகிழ்ச்சி பொங்கியது.

''அவளா, இங்கு வந்தாளா...?''

''ஏன், வரக்கூடாதா என்ன?''—சுந்தரி வெடுக்கென்று கேட்டாள்.

மணி பதில் கூறவில்லை.

''நான் மத்தியானம் கடைக்குப் போனபோது நிர்மலா காரில் வந்து அங்கு இறங்கினாள். கடையில் இருந்தவங்க, தெருவில் இருந்தவங்க எல்லோரும் கூடி விட்டார்கள். நிர்மலா என்னைப் பார்த்தாள். அப்புறம் அவளே வேகமாக வந்து என்னிடம், 'நீ சுந்தரிதானே? வனஜாவின் தங்கைதானே...?' என்று கேட்டாள். அப்புறம் அக்காவைப் பற்றி ஊரைப் பற்றி எல்லாம் பேச ஆரம்பித்தாள். அங்கே இருந்தவங்க எல்லோரும் என்னையே பார்த்தாங்க...சட்டுனு என்னைக் கைபிடித்து காரில் ஏற்றித் தானும் ஏறிக் கொண்டாள். அப்புறம் இங்கு வந்தோம். ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தோம்.''

''இங்கிருக்கிறவாகூட வேடிக்கை பார்த்திருப்பார்களே...!''

''அதை ஏன் கேட்கிறேள். எல்லாரும் எட்டி எட்டிப் பார்த்தா. நிர்மலா போன பிறகு வீட்டுக்கார மாமி, கூடத்து மாமி எல்லாரும் என்னைத் துளைக்க ஆரம்பித்து விட்டாளாக்கும்.''

சுந்தரி பெருமை தாங்காமல் முகம் பூரித்துப் போனாள். மணி சாப்பிட்டுவிட்டுப் பாயைப் போட்டுப் படுக்காமல், ''சுந்தரி...நான் கோயில் வரை போயிட்டு வரேன். நாகு சாஸ்திரி வரச் சொல்லியிருக்கார்'' என்று வெளியே கிளம்பினான்.

சுந்தரி, கிராம கர்ணம் குமாரசாமியின் ஐந்தாவது பெண். கிராமத்துப் பெண்ணாக இருந்தாலும் பட்டணத்து நாகரிகம் அவளுக்கு மனப்பாடம்.

சுந்தரி விதம் விதமாக ஆடை அணிவதில், தலை அலங்காரம் செய்வதில் நேரத்தைக் கழித்தாள். பட்டணத்தில் பிறக்காவிட்டாலும் அங்கு வாழ்க்கை நடத்தும் அதிருஷ்டமாவது வேண்டும் என்று விரும்பினாள்.



அவள் விருப்பப்படி சென்னையிலிருக்கும் வரனைப் பார்த்தனர்.


சென்னை மாப்பிள்ளை என்றதும் சுந்தரியின் உள்ளம் மகிழ்ச்சியில் எத்தனை உயரத்தில் சிறகடித்துப் பறந்ததோ, மணி ஒரு புரோகிதர், வைதிக கர்மங்களைச் செய்து வைப்பவர் என்று அறிந்ததும் சிறகிழந்த பறவையாகி விட்டது.

மணி கற்றிருந்த வேத சாஸ்திரங்களை சுந்தரி படிப்பாக எண்ணவில்லை. ஸ்பஷ்டமாக மந்திரங்களை உச்சரித்து, நேர்மையோடு நடந்து பல பிரமுகர்களைக் கவர்ந்து, அவர்கள் வீட்டு 'வாத்தியார்' என்று அந்தஸ்து பெற்றிருப்பதை சுந்தரி பெருமையாகக் கருதவில்லை.

புரோகிதரின் மனைவி ஒரு நைலக்ஸ், ஷிபான், ஜார்ஜெட் என்று கனவு காண முடியுமா? சுந்தரி குமுறிக் குமுறி அழுதாள்.

மணி, சுந்தரியை உள்ளங் கையில் ஏந்துவது போல் தாங்கினான். பட்டணத்து நாகரிக மோகம் அவளைக் கவர்ந்திழுக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு, அவளுக்கு நயமாகப் புத்தி கூறினான். சுந்தரி லட்சியம் செய்யவில்லை.

அவர்கள் குடியிருந்த வீட்டில் மற்றும் மூன்று குடித்தனக்காரர்கள் இருந்தனர். அக்கம் பக்கத்துப் பெண்கள் அவளை 'சாஸ்திரிகளாத்து மாமி' என்று அழைப்பார்கள். குடித்தனம் வந்த புதிதில் ஒருநாள் குடத்துடன் குழாயடிக்குச் சென்றாள் சுந்தரி.



ரத்னா

அதே சமயம் அங்கு ஓடிவந்த குழந்தையை மற்றொரு குடித்தனக்காரி, ''டேய் பாபு... சாஸ்திரிகளாத்து மாமி, மேலே பட்டுடாதேடா... அந்த மாமி 'மடியா' ஜலம் பிடிக்க வந்திருக்கா...'' என்று அதட்டல் போட்டாள்.

''ஒன்பது கெஜம் புடவை கட்டிக் கொண்டு விட்டால் மாமியாகி விட்டேனா? அரைக் கிழவிகள் ஆறு கெஜத்தைக் கட்டிக் கொண்டு என்னை மாமியாக்குகிறார்கள். மாமியாம் ...மாமி'' — மணியிடம் எரிச்சலோடு கூறினாள்.

''மாமி என்பது மரியாதைச் சொல்... தெரியாதா உனக்கு?'' என்றான் மணி.

''நீங்கள் சாஸ்திரிகள். அதுக்காக நான் மாமியாகி விட்டேனா?'' — படபடவென்று பொரிந்தாள் சுந்தரி.

மணி சிரிக்கவில்லை. மனைவியை அனுதாபத்தோடு பார்த்தான்.

'ஆசாரமாம், மடியாம்...... மற்றவர்கள் விரதத்தின் போதும், திதி திவசத்தின் போதும் மட்டுமே நியமமாக இருக்கிறார்கள். இந்தப் புரோகிதர்களின் தலைவிதி, தினமும் ஆசார நியமமுமாக இருக்க வேண்டும். ஏன்...ஏன்?'

நிர்மலின் சந்திப்பினால் சுந்தரியின் ஆத்திரம் சிறிது தணிந்தது. இந்த ஒரு மாதத்தில் இரண்டு முறை நிர்மல், சுந்தரியின் வீட்டுக்கு வந்து அரட்டை அடித்து விட்டு, சுந்தரியைத் தன் பங்களாவுக்கும் வரச் சொல்லி வற்புறுத்திச் சென்றது அவளுக்கு மிகப் பெருமையாக இருந்தது. அவளுடைய உற்சாகத்தைக் கண்டு மணி கூடச் சிறிது நிம்மதி அடைந்தான். ஆனால் உள்ளூறப் பயமும் இருந்தது.

நிர்மல் ஒரு நாள் சுந்தரியைத் தன்னுடன் காரிலேயே தன் வீட்டுக்கு அழைத்துப் போனாள். சுந்தரிக்கு பட்டுப் புடவையைக் கொசுவம் வைத்துக் கட்டிக் கொண்டு நடிகையின் வீட்டுக்குப் போவது ஏதோ அவமானமாகத் தோன்றியது. ஆனாலும் அன்று அவள் தழையத்தழைய பட்டுப் புடவை உடுத்தி, முத்துக் குஞ்சலம் வைத்து நீளமான பின்னலைப் பின்னிக் கொண்டு, தலை நிறைய மல்லிகையையும் கனகாம்பரத்தையும் சூட்டிக் கொண்டு, மெட்டி ஒலிக்க, நிர்மலுடன் காரில் கிளம்பிப் போன போது, அந்தத்

தெருவே வாயைப் பிளந்து கொண்டு பார்த்தது.

மறு மாதம் நவராத்திரி கொலுவுக்கு நிர்மல், சுந்தரியை அழைத்துவிட்டுப் போனாள். நவராத்திரியின் போது சுந்தரிக்கு 'அம்மாமி' வேஷத்தோடு போகப் பிடிக்கவில்லை. நாகரிகமாக அலங்கரித்துக் கொண்டாள்.

கண்ணாடிக்கு எதிரில் தன்னையே பார்த்துக் கொண்டு ஆனந்தப்பட்டாள்.

அதற்குப் பிறகு பல முறை இருவருடைய போக்கு வரத்தும் நடந்தது. இப்போதெல்லாம் சுந்தரி ஜார்ஜெட், ஒட்டியிருந்த வெளிவராந்தாவில் பேசும் குரல் கேட்டது:

''ஏண்டி, நீலா... நீ வீட்டைக் காலி பண்ணப் போறியாமே... ஏண்டி?''— எதிர் வீட்டு அம்மணியின் டமாரக் குரல் அது.

''ஆமாம் அம்மு! இங்கே சினிமாக் காரியும் டிராமாக்காரியும்வந்துபோயிண்டிருக்கா. யார் குடியிருப்பாளாம்?''

அதற்குள் கூடத்து மாமியும், ''நான் கூட வயசு வந்த பெண்களை வைத்துக் கொண்டிருக்கிறேன். அம்மு! ஏதாவது நல்ல வீடாகத் தெரிந்தால் சொல்லேன்'' என்றாள்.



நைலக்ஸ், ப்ரூஸோ புடவைகளும், ரூபியா, ஹகோபா ஜாக்கெட்டுகளும் அணிந்து கொண்டுதான் நிர்மலின் வீட்டுக்குப் போவாள்.

குடித்தனக்காரர்களும், மற்றும் பழக்கமானவர்களும் அவளை ஏளனமாக, அசட்டையாகப் பார்ப்பதையும் தங்களுக்குள் சாடை காட்டி, குசுகுசுவென்று பேசிக் கொள்வதையும் சுந்தரி கவனிக்காமல் இல்லை. 'பொறாமைப் பிண்டங்கள்' என்று மனத்துள் கூறி, அலட்சியமாகப் போய்விடுவாள். ஒரு நாள் நிர்மல் காரில் வந்திறங்கி, சுந்தரியின் அறைக்குச் சென்று ஏதேதோ பேசிக் கொண்டிருந்தாள். அந்த போர்ஷனை

சுந்தரியின் முகம் ஜிவுஜிவுத்தது. சட்டென்று எழுந்து கதவைச் சாத்தினாள்.

''நிர்மல், மன்னிச்சுக்கோ. கொஞ்சங் கூட மரியாதை தெரியாத ஜனங்கள். கோபித்துக் கொள்ளாதே'' என்றாள்.

நிர்மல் மணி சிதறினாற் போல் சிரித்தாள்: ''சுந்தரி! நீ கதவை அடைக்கலாம். ஆனால் ஊர் வாயை உன்னால் அடக்க முடியாது.''

''நிர்மல்! சினிமா நடிகை வருகிறாள் என்றால் எப்படிப் பறந்து கொண்டு வந்து பார்க்கிறார்கள்! ஆனால் இந்த ஜனங்கள் ஏன் இப்படி வம்பு பேசணும்?''

கே.சுந்தரம்

சந்தேகத்திற்கு ஆபரேஷன் நடக்கிறது!



இரண்டு நாட்களாக அந்த வீட்டில் சந்தேக வியாதி ஒன்று சுற்றிக் கொண்டிருக்கிறது. அது 'ஆபரேஷன்' செய்யும் அளவுக்கு இப்போது முற்றியிருக்கிறது!

'டைனிங் ஹால்'.

ராம் சாப்பிட உட்காருகிறுன். தட்டில் கொதிக்கக் கொதிக்க சாதத்தைப் பரிமாறுகிறுள் ராதா.

''நானும் இரண்டு நாளா பார்க்கிறேன்... நீ கொதிக்கக் கொதிக்க சாதத்தைப் போடறியே... எப்படிச் சாப்பிடறது...? நான் என்ன நெருப்புக் கோழின்னு நினைச்சியா...?''

''மனுஷாளுக்கு சாதம் கொதிக்கிறது மட்டும் தெரியறது... ஆனு மனசு கொதிக்கறதைக் காட்ட ஆண்டவன் எந்த வழியும் வைக்கலே...''

''மனம் விட்டுப் பேசினு உள்ளுக்குள்ளே புகையறது எல்லாம் தானு வெளியே வருது...''

''புகையாச்சே...அதனுலே உள்ளேயே மூச்சு விட முடியாம திணறிக்கிட்டிருக்கு...''

''புகைக்குக் காரணமானது எதுன்னு தெரிஞ்சு அதை வெளியே எறிஞ்சா, தானே திணறல் சரியாப் போயிடாதா?''

''புகைக்குக் காரணம் டெல்லியிலிருந்து வந்த ஒரு போட்டோதான். அதுதான்கண்ணை உறுத்திண்டிருக்கு...''

''போட்டோவுக்கும் அதுக்கும் என்ன சம்பந்தமோ?...''

''போட்டோவிலே சம்பந்தப்பட்டிருக்கிறது ஒரு ஆணும், ஒரு பெண்ணும். அந்த ஆண் நீங்க; அந்தப் பெண் உங்க செகரட்டரி விமலா...''

''ஒரே புழுக்கமா இருக்கு... ஃபேனைப் போடறதுக்கு மறதியா? இல்லே, அதுவும் சந்தேகமா?...''

ராதா ஃபேனைப் போட்டாள். காற்றின் வேகத்தில் பறக்க இருந்த அப்பளத்தின் மேல் ஒரு சாதக் கட்டியை 'வெயிட்' வைத்து விட்டு, லேசாகத் தொண்டையை இருமிக் கொண்டான் ராம்.

''டில்லி கான்ஃபரன்ஸிற்கு நீங்களும் விமலாவும் ஒண்ணுத்தானே போனீங்க?''

''ஆமாம்...''

''ஒரே ஓட்டல்லே, ஒரே ரூம்லேதானே தங்கினீங்க...''

''அதுலே ஒரு சின்ன மாற்றம். ஒரே ஓட்டல்லே, பக்கத்து பக்கத்து ரூம்லே தனித்தனியாகத்தான் தங்கினேம்...!''

''நீங்க டில்லி போன அன்னிக்கு ராத்திரி எட்டு மணிக்கு என்ன பண்ணிக்கிட்டிருந்தீங்க...?''

''அடுத்த நாள் கான்ஃபரன்ஸிற்கு வேண்டிய முக்கியமான குறிப்பையெல்லாம் நானும் விமலாவும் எடுத்துக்கிட்டிருந்தோம்...!''

''அந்தச் சமயத்திலே டில்லியிலே நல்ல இடி, மழை இருந்ததுன்னு பேப்பர்லே படிச்சேன்...!''

''ஆமாம், நாங்க டில்லிக்குப் போனு இடி மழை பெய்யக் கூடாதா...?''

''நல்ல மழை பெஞ்சுக்கிட்டிருக்கு... டில்லி குளிர் வேறே... 'அந்த விமலா

இல்லாம எனக்கு ஒரு காரியமும் ஓடா து'ன்னு நீங்க அடிக்கடி சொல்வீங்க... பஞ்சும் நெருப்பும் பக்கத்துப் பக்கத்திலே உட்கார்ந்திருக்கு. அது பத்திக்கலேங் கிறதுக்கு என்ன நிச்சயம்...?''

''இது அனாவசியமான கற்பனை... சினிமாவிலே வர்ற இது மாதிரி பேத்தலை யெல்லாம் பார்த்துப் பார்த்து உன் மனசிலே ஒரு வீணான கற்பனையை உருவாக்கிக் கிட்டிருக்கே......!''

''அது உங்களுக்குக் கற்பனையா இருக்கும்... ஆனா எனக்கு வந்திருக்கிற போட்டோ அது உண்மைன்னு சொல்றாப்பிலே இருக்கே...?''

''போட்டோ...... போட்டோ...... எங்கே அந்த போட்டோ...?''—உறுமினான் ராம்.

''கத்திட்டா உண்மை பொய்யாகுமா? இதோ போட்டோ...''

போட்டோவைப் பார்த்தான் ராம்.

அதில் விமலா அலங்கோலமாக சோபாவில் படுத்திருந்தாள். எதிரே ராம் அவளைப் பார்த்துக் குனிந்திருக்கிறான்.


''என்ன... இப்போது போட்டோ பொய் சொல்கிறதா...?''

''ஹூம்... உன்னை நினைத்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது... எவனோ ஒரு பிளாகாட் விஷயம் புரியாமல் இதை போட்டோ பிடித்து உனக்கு அனுப்பியிருக்கிறானே...!''— ராம் இடி இடியெனச் சிரித்தான்.

''உம், நான் கூடக் கேள்விப் பட்டிருக்கிறேன்... சில பேர் உண்மை தெரிந்து விட்டால் அதை மறைப்பதற்கு இப்படிச் சிரிப்பார்களென்று...''

ஒரு விநாடி ராமின் முகம் மாறியது. ராதாவை வெறுப்போடு பார்த்தான்:

''உன் சந்தேகத்திற்கும் ஒரு காரண காரியம் வேண்டாமா..? நானும் அவளும் மழை பெய்த போது ஒன்றாக இருந்தது உண்மை. ஆனால் உன் கற்பனையைப் போல் ஒரு விகார எண்ணத்தில் அப்போது நாங்கள் இல்லை. அவள் இப்படி விழுந்து கிடப்பது களிப்பால் அல்ல; வலிப்பால். ஆம். நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போது அவளுக்கு காக்கை வலிப்பு வந்து விட்டது. அப்போதுதான் கைகால்கள் இழுத்து



கொண்டு கிடந்தன. நான் அவளுக்கு உதவி செய்ய எண்ணிக் குனிந்தேன். இதை யாரோ படுபாவி புகைப்படம் எடுத்து, வியாபாரமாக்கி இருக்கிறன்... இந்த போட்டோவுக்காக எவ்வளவு கொடுத்தாய்...?''

''நான் எவ்வளவு கொடுத்தேன் என்பது கிடக்கட்டும். நிறையக் கதைகளைப் படித்துப் படித்து என்னிடமே ஒரு கற்பனை 'காக்காய் வலிப்பு'க் கதை விடுகிறீர்களா? நானும் அதை நம்ப வேண்டுமா?''

''அப்படியென்றால் நான் கூறியதையெல்லாம் கட்டுக் கதை, கற்பனைக் கதை என்கிறயா...?''

''நான் கூறுவது உங்களுக்குக் கற்பனையாக இருக்கும் போது, நீங்கள் கூறுவதை நான் கதை என்று சொல்லக்கூடாதா?''

''ராதா...'' என்று கத்தினன் ராம்.

''ஏன் இப்படிக் கத்துகிறீர்கள்? நீங்கள் ஆண்கள். என்ன வேண்டுமானலும் செய்யலாம். அதைப் பெண்கள் முழுக்க முழுக்க சந்தேகப்படாமல் நம்ப வேண்டும். ஆனல் இதே ஒரு பெண் தவறு செய்து விட்டால் அப்பப்பா... ஒராயிரம் சொல் அம்புகள் அவளை நோக்கிப் பாயும்...நீங்கள் அடிக்கடி பாராயணம் செய்கிறீர்களே இராமாயண சுலோகங்கள், அதிலே கூட ஒரு பாவமும் அறியாத சீதையை யாரோ சந்தேகப்பட, அவளை 'அக்கினிப் பிரவேசம்' செய்ய வைத்தார் அந்த இராமபிரான். பெண்கள் விஷயத்தில் இப்படி எத்தனையோ உதாரணங்களைக் காட்டலாம். ஆனல், ஆண்கள் மீது சந்தேகப்படவும் கூடாது... சந்தேகப் பட்டாலும் ஒன்றும் செய்யவும் கூடாது. அப்படித்தானே...?''

''இப்போது என்னை என்ன செய்யச் சொல்கிறய்... யாரோ ஒருவரின் சந்தேகத்தைப் போக்க சீதை அக்கினிப் பிரவேசம் செய்தாள்...இப்போது உன் சந்தேகத்தைத் தீர்க்க நான் அக்கினிப் பிரவேசம் செய்ய வேண்டுமென்கிறயா ..?'' என்று எரிச்சலுடன் கேட்டான்.

''அது அவரவர் இஷ்டம் ..'' என்று எதையோ எடுக்கும் சாக்கில் குனிந்தாள் ராதா.

ஒரு நிமிடம் கழித்து, பதில் வராமல் போகவே, தலையை நிமிர்த்திப் பார்த்தாள் ராதா.

ராம் அங்கு இல்லை.

*

மீண்டும் மூன்று நாட்களை சந்தேகம் விழுங்கியது.

நான்காம் நாள்.

டெலிபோன் மணி அலறியது...

ராதா டெலிபோனை எடுத்தாள்.

''ஹலோ... நான் டைரக்டரோட பி. ஏ. பேசறேன். ஐயா உங்களை வீட்டிலே இரண்டு மணிக்கெல்லாம் தயாரா இருக்கச் சொன்னருப் எங்கேயோ வெளியூருக்குப் போகணுமாம்...'' என்று சொல்லி வைத்து விட்டான்.

ராதாவுக்கு ஒன்றும் புரியவில்லை. 'இப்போது எங்கே, எந்த ஊருக்குப் போகப் போகிறேம்...? ஒருவேளை அவர் என் மீது கோபப்பட்டுக் கொண்டு என் அப்பா இருக்கும் கிராமத்திற்கே கொண்டு போய் விட்டு விடுவாரோ!'—

அவளுக்கு உள்ளூற பயம் தோன்ற ஆரம்பித்தது.

*

வாசலில் கார் ஹாரன் சப்தம் கேட்டது. 'ராம் வந்து விட்டான்' என்ற பரபரப்பில், ஒரு சிறிய பெட்டியை எடுத்துக் கொண்டு வாசலை நோக்கி, காரின் முன் பக்கக் கதவைத் திறக்கப் போனவள், திடுக்கிட்டாள்!

அங்கே—

ராமுக்குப் பக்கத்தில் விமலா உட்கார்ந்து கொண்டிருந்தாள்!



'இவள் எங்கே வந்தாள்?' என்று அவள் மனம் ஓலமிட்டதோடு, 'இவளும் கூட வரப் போகிறுளோ' என்பதை நினைத்து உள்ளூற கலங்கினுள் ராதா.

''விமலா... இப்போது எல்லாம் எது எதுக்கு சந்தேகப்படறதுன்னு சில பேருக்குத் தெரியமாட்டேங்குது...... அதனுலே நீ பின்சீட்டிலே போய் உட்கார்ந்துக்கோ...?''

'என்ன தைரியம் இருந்தால் என் கூடவே அவளை உட்கார வைக்கிறுர்! சக்களத்தி ஆக்க நினைக்கிறுரோ...?' என்று குமைந்தாள் ராதா.

கார், சென்னையின் எல்லையை விழுங்கி, பல மணி நேரம் கழித்து ஒரு கிராமத்திற்குள் நுழைந்தது.

அந்தக் கிராமத்தில் நுழைந்ததுமே ராதாவுக்கு வியர்வை கொட்டியது.

காரணம், அந்தக் கிராமம்தான் அவள் பிறந்த மண். அவள் புறப்படும் போது என்ன நினைத்தாளோ, அதை இந்த விமலாவை வைத்துக் கொண்டே, எக்காளத்தோடு நிறைவேற்றப் போகிறுனே?

கார், ராதா வீட்டு வாசலில் போய் நின்றது.

வாசலில் மேல்துண்டு சகிதம் இருந்த ராதாவின் அப்பா சதாசிவம், ''வாங்க...மாப்பிள்ளை வாங்க... உங்க பிரயாணம் எல்லாம் சௌகரியமா இருந்ததா...?'' என்று கேட்டுக் கொண்டே விமலாவைப் பார்த்தார்.

அந்தப் பார்வையைப் புரிந்து கொண்ட ராம், ''இவதான் என்னுடை செகரட்டரி விமலா. மாமா... நான் ஆள் மூலம் சொல்லி அனுப்பிச்சேனே... எல்லாம் தயாரா இருக்கா...?''

''எல்லாம் ரெடி மாப்பிள்ளை...... வாங்க,குளிச்சிட்டு கிளம்பறதுக்கு சரியா இருக்கும்...'' என்று அவர்களை உள்ளே அழைத்துச் சென்றுர் சதாசிவம்.

ராதாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அப்பாவே இவர்களுக்கு உடந்தையா இருக்கிறுரா?

குளித்துவிட்டு ஈரத் தலையுடன் சொட்டச் சொட்ட வந்த ராமைக் கண்டு திகைத்தாள்.

''இந்தாங்க, மாப்பிள்ளை... இதைக் கட்டிக்கிங்க...''

புட்டியா, பொம்மையா ?



'புட்டி' என்று குரல் கொடுக்கும் ஆசாமி, மயிலாப்பூர் நாகரத்தினம் காலனிப் பக்கம் போவதே இல்லை. காரணம், திருமதி வேணி ராமமூர்த்தி தான்.

கொட்டாங்கச்சி, புட்டிகள், சீமைச் சாராயப் புட்டிகள், கண்ணுடிக் குவளைகள், யூடிகொலோன் பாட்டில், இஞ்செக்ஷன் வயல்கள்(Vials) இவற்றை யெல்லாம் பார்த்தால் கற்பனை பீறிட்டுக் கொண்டு வருகிறது திருமதி வேணிக்கு.

பெங்களூரில் படித்துக் கொண்டிருந்த திருமதி வேணிக்கு, சிறு வயதிலிருந்தே ஓவியம், சிற்பம் இவற்றில் ஆசை. ''என் தாயார் ஊக்குவித்தார்! இப்பொழுது என் கணவர் உற்சாக மூட்டுகிறுர்'' என்கிறுர் இவர்.

ஒரு காலி ஒயின் பாட்டில். அதில் சாயத் தண்ணீர். பாட்டில் மேல் கொட்டாங்கச்சி. அதில் அழகான வர்ணப்பூச்சுக்களுடன் முகம். பொம்மையின் தலைமுடிக்கு இவர் உபயோகிப்பது என்ன தெரியுமா? சோளக் குஞ்சம். ''பாட்டில்களில் தினமும் வெவ்வேறு வர்ணத் தண்ணீர்

திருமதி வேணி



சதாசிவம் கொடுத்த வேட்டியை எடுத்துச் சுற்றிக் கட்டிக் கொண்டான் ராம். வேட்டியின்மேல், துண்டை எடுத்துக் குறுக்கே 'பெல்ட்' போலக் கட்டினன்.

ராதாவுக்கு எல்லாமே ஏதோ ஒரு நாடகம் போலக் காட்சி அளித்தது.

ராதாவை ஓரக் கண்ணுல் பார்த்த வாறே, ''நானும் விமலாவும் முன்னடி போறேம். நீங்க பின்னடி வாங்க மாமா...'' என்று கிளம்பி, வாசலுக்கு வந்தான் ராம்.

ராமும் விமலாவும் கிளம்பிப் போய் விட்டார்கள்!

ராதாவுக்குத் தலை சுற்றியது...

''என்னப்பா இதெல்லாம்...? எல்லாரும் எங்கே போறீங்க...? இதெல்லாம் என்ன...? எனக்கு ஒண்ணுமே புரியலே.'' —படபடத்தாள் ராதா.

''உம்... உனக்கு எப்ப, எதுதான் புரிஞ்சுது...? எல்லாமே ஒரே சந்தேக மயம்... அதுக்காகத்தானே உன்னை இங்கே வரவழைச்சதே...என் கூட வா.. எல்லாத்தையும் புரிய வைக்கிறேன்'' என்று கூறிவிட்டு, சதாசிவம் நடந்தார்.

ராதா பின்தொடர்ந்தாள்.

அந்தக் கிராமத்தைத் தள்ளி ஒரு பெரிய மைதானம்.

அந்த மைதானம் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது!

ஆம். அன்று அந்த கிராமத்துத் தேவதையான திரௌபதி அம்மனுக்கு தீ மிதித் திருவிழா. மைதானத்தின் நடுவில் மணலால் துரியோதனன் சிலை செய்து வைக்கப்பட்டிருந்தது.

அதற்குப் பக்கத்தில்—

கணகணவென்று நெருப்புத் துண்டுகள் பிரகாசிக்க, அங்கே ஓர் அக்கினிப் பாதை உருவாக்கப்பட்டிருந்தது.

அக்கினிப் பாதையின் ஒரு பக்கம் மஞ்சள் ஆடை அணிந்த அனைவரும் நின்று கொண்டிருந்தனர். அந்த வரிசையிலே ராமும், விமலாவும் நின்று கொண்டிருந்தனர்.

ஒரே ஒரு கணம்—

ராதா அவர்களைப் பார்த்துப் பதறிப் போய் விட்டாள்!

''என்னப்பா... இதெல்லாம்...... எனக்குத் தலையே சுற்றுகிறது...'' என்றுள் ராதா.

''நீ வீணு மாப்பிள்ளை மேலே சந்தேகப்பட்டு எல்லார் தலையையும் சுத்த வெச்சே. சீதை அக்கினிப் பிரவேசம் செய்தாள்னு ஒரு உதாரணம் காட்டினே... மாப்பிள்ளை இப்போ உனக்காக அக்கினிப் பிரவேசம் செய்யறுர்...'' —பொரிந்து தள்ளினுர் சதாசிவம்.

ராதா வெலவெலத்துப் போய் விட்டாள். அடுத்த நிமிடமே ராமை நோக்கி ஓடினுள்:

''அத்தான்... வேண்டாம் இந்தப் பரீட்சை ... சந்தேகப் பேய் பிடித்த நான் கேட்ட ஒரு கேள்வி இவ்வளவு தூரம் கொண்டு போய் விடும்னு நான் நினைக்கலே... இந்த அக்கினிப் பாதையிலே நடக்காதீங்க... வந்துடுங்க...'' என்று கதறினுள் ராதா!

ஊற்றினுல் பொம்மை தினமும் உடை மாற்றுவது போல் இருக்கும்'' என்கிறுர்.

மெழுகு, களிமண் முதலியவற்றிலும் சாயம் பூசி பொம்மைகள் செய்கிறுர். நாம் தூர வீசி எறியும் கொட்டாங்கச்சி, பாட்டில் இவற்றுல் அழகுறப் பொம்மைகள் செய்வதில் தான் இவருடைய தனித் தன்மை பளிச்சிடுகிறது.

ஜப்பானிய முறைப்படி காகிதப் பூ வேலை செய்வதிலும் இவர் வல்லவர். இவர் பொம்மை செய்யும் போது கூடவே இவருடைய மகனும் உட்கார்ந்து விடுகிருனும். திருமதி வேணி, அழகாக வீணை வாசிக்கிறுர். வானெலியில் பல முறை கச்சேரிகள் செய்துள்ளார். பெண்களுக்கான ஆங்கிலப் பத்திரிகைகளில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். சென்னை மெமோரியல் ஹாலில் நடந்த பொம்மை, கல்விக் கண்காட்சியில் இவருடைய படைப்புக்கள் இடம் பெற்றிருந்தன.

—சரஸ்காந்தன்.

ராதாவை நேருக்கு நேராகப் பார்த்துப் பேசினுன் ராம்:

''ராதா, எந்தப் பேயோ, அது உனக்குத் தெரிந்துதான் பிடிச்சதோ, அல்லது தெரியாமல்தான் பிடிச்சதோ, எனக்குத் தெரியாது! இந்தப் பாதையிலே ஊராருக்காகவோ அல்லது உனக்காகவோ நான் நடந்துதான் தீரணும்... சீதையை உதாரணத்திற்குச் சொல்ற உங்க பெண் வர்க்கத்திற்குப் பதில் சொல்லும்படி, இந்த ராமுடைய கதையும் பதில் சொல்லட்டும் ... ஆண்களுக்கும் கற்பு உண்டுன்னு உலகத்திற்கு நிருபிக்கத்தான் இந்த அக்கினியிலே நான் பிரவேசிக்கப் போகிறேன். என்னைத் தடுக்காதே...வழி விடு...'' என்றபடியே ராம் அக்கினியில் இறங்குவதற்குத் தயாரானுன்.

''விமலா...... நீ ஏம்மா இந்த அக்கினிப் பாதையில் இறங்கணும் ...? தன்னுடை கணவன் இன்னொரு பெண்ணுடை இருக்கிறதைப் பார்த்தா சாதாரணமா எல்லாப் பெண்களுக்கும் வர்ற சந்தேகம்தானம்மா என்னையும் பிடிச்சி இவ்வளவு தூரம் ஆட்டிடிச்சு... என்னை மன்னிச்சு, நீயாவது இதிலே இறங்காம இரேன் ...!'' என்று சுருதி இறங்கிய குரலில் கேட்டாள் ராதா.

''சந்தேகத்திற்கு இலக்கானவர் உங்க கணவர். அந்த சந்தேகம் எழும்பக் காரணமாயிருந்தது, நான் அவர் கூட இருந்தது! அவர் தன்னைக் குற்றம் இல்லாதவர்னு நிரூபிக்கறப்போ, நானும் கற்புள்ளவள்தான்னு நிரூபிக்க வேண்டாமா? எனக்கும் ஒரு கல்யாணம் கார்த்தி நடக்கவேண்டாமா...?என்னைத் தடுக்காதீர்கள் மிஸஸ் ராம்...'' என்று சொல்லி, ராமை ஏறிட்டுப் பார்த்தாள் விமலா.

மேளம், தாளம், தப்பட்டை எல்லாம் காது தவிடு பொடியாகும் அளவுக்கு முழங்கின. 'பூம்...பூம்...' சங்கு வேறு ஒலிக்க ஆரம்பித்து விட்டது.

''அம்மா...தாயே! திரௌபதியம்மா தேவி... காத்து ரட்சிக்கணும் அம்மா'' என்று கூவிக் கொண்டே அக்கினியில் இறங்கினுர்கள்.

ராமும் விமலாவும் ஒவ்வோர் அடியாக எடுத்து அக்கினிப் பாதையில் நடந்தார்கள்.

அதைப் பார்த்த ராதாவின் உடலெல்லாம் நடுங்கியது!

ராதாவைப் பார்த்துச் சிரித்தபடியே ஒவ்வோர் அடியாக நடந்தான் ராம்.

ராமின் சிரிப்பு, ராதாவைச் சித்திரவதை செய்தது!

அவன் ஒவ்வோர் அடி வைக்கும் போதும் தான் எங்கோ அதலபாதாளத்தில் விழுந்து கொண்டிருப்பதை உணர்ந்தாள் ராதா.

அவன் வைத்த ஒவ்வோர் அடியும் தன் நெஞ்சில் விழுவதைப் போல நெளிந்தாள் ராதா. நெஞ்சிலிருந்து ஏதோ கிளம்பி அவளைத் திணற அடிப்பது போல உணர்ந்தாள். ஒரே ஒரு நிமிஷம்! அவள் கண்கள் செருகிவிட்டன!

மயக்கமடைந்து விட்டாள் ராதா!

*

''நல்ல பொண்ணும்மா நீ...அக்கினியிலே நடக்கறவங்ககூட பயப்படலே...நீ மயக்கம் போட்டு விழுந்திட்டியே...'' என்று சதாசிவம் அவள் முகத்தில் தண்ணீர் அடித்துக் கொண்டே கேட்டார்.

ராதா கண்களைத் திறந்தாள்.

அவளுக்கு எதிரில்—

அதே போஸ் —

டில்லியிலிருந்து வந்த போட்டோவில் பார்த்தாளே, அதே போஸ்!

அலங்கோலமாக விமலா கிடந்தாள்!

ராம் அவளை நோக்கிக் குனிந்திருந்தான்...!

''அங்கே என்ன அப்பா ஆச்சு'' என்று அவசர அவசரமாக எழுந்தவாறு ராதா கேட்டாள்.

''அதுவாம்மா... தீ மிதிச்சுட்டு வந்த உடனே விமலாவுக்கு திடீர்னு காக்கா வலிப்பு வந்திடிச்சு ... மாப்பிள்ளைதான் முதலுதவி செய்துக்கிட்டிருக்காரு...!''



''அம்மா! மார்க்கெட்டில் கறிகாய்கள் எல்லாம் பழசாப் போய் மிஞ்சி விட்டால், கடைக்காரர் அதை என்ன அம்மா செய்வார்?''

''உங்கப்பாவிடம் விற்று விடுவார்!''

ராதா

டாக்டரை மணந்து கொண்ட ராதா முதல் இரவிலேயே கணவனைப் பறி கொடுக்கிறாள். பிரசவம் பார்க்க அவசரமாகப் புறப்பட்டுப் போன கணவன், ஆற்றில் மூழ்கி இறக்கிறான். செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்து விழுந்தவள் விடிந்ததும், ''அவர் இன்னும் வரவில்லையா?'' என்று கேட்கிறாள். (புத்தி பேதலித்து விட்டதாம்.) கணவன் 'வருவான் வருவான்' என்று காத்திருக்குங்காலத்தில் கணவனின் முகச் சாயலுடன் மற்றொரு டாக்டர் கிராமத்திற்கு வருகிறார். ராதா நெருங்கி நெருங்கிப் போகிறாள். அவர் விலகி விலகிப் போகிறார்; அந்த டாக்டரிடமே ராதா சிகிச்சைக்குக் கொண்டு வரப்படுகிறாள். மணமான அந்த டாக்டர், தன் கணவனல்ல என்று தெரிந்த பிறகு...? வெண்ணிற ஆடை! ஆமாம், விதவைக் கோலத்துடன் வெளியேறுகிறாள் ராதா.

கதையின் மையமாக ராதா இருக்கும் போது, பிரமிளாவின் நடிப்புக்குக் கேட்கவா வேண்டும்? ஆனால் கதையைக் கொண்டாட முடியவில்லையே! அதிர்ச்சி வைத்தியத்தின் மூலம் டாக்டர் முத்துராமன் (இரண்டு டாக்டரும் அவர்தான்) பிரமிளாவுக்குச் சிகிச்சை யளிக்க முயல்கிறாரே, எதற்காக? விதவை என்பதை உணர்த்துவதற்காகவா? இந்த வேலையை ராதாவின் அண்ணனே (சுந்தரராஜன்) செய்திருக்க முடியுமே! கடைசியில் அவர்தான் அதைச் செய்கிறார். ராதா அத்தனை பலவீனமான பெண்ணாகப் படைக்கப் பட்டிருக்க வில்லையே!

கண்ணாடி டாக்டரான முத்துராமன், ஜெயந்தியுடன் கொஞ்சுவதும், குறும்பு செய்வதும் குஷியான விளையாட்டாக இருக்கிறது. ஹைதராபாத் தமாஷ் பிரமாதம்! அறையில் பிரமிளாவிடம் சிக்கிக் கொண்டு, தப்ப முடியாமல் தவிக்கும்போது தனக்குள் சிரித்தாலும், நம்மால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

கௌரவ நடிகை என்றாலும் ஜெயந்தியின் நடிப்பில் ஒரு டாக்டரின் மனைவி என்ற கண்ணியமும், கலகலப்பும் போட்டி போட்டுக் கொண்டு இழைந்திருக்கின்றன.

தங்கைப் பாசத்திலும், அவலத்திலும் சிக்கி உள்ளுக்குள் குமுறி வெடிக்கும் அண்ணனாக வரும் சுந்தரராஜன் நிறைவாகச் செய்திருக்கிறார்.

சோ, தங்கவேலு, சுருளி ராஜன் பட்டாளம் எதற்கு? இவர்கள் கதையில் ஒட்டாதவர்கள். பிரமிளா, முத்துராமன், ஜெயந்தி —மூவரும் வழங்கும் நகைச்சுவையே போதுமே!


வெளிப்புறக் காட்சிகள் சிறப்பாகப் படமாக்கப்பட்டிருக்கின்றன. 'கண்ணா' என்ற பாட்டு மனத்தில் பதிகிறது.

நவரசங்கள் எப்படி இருக்குமோ, இதுதான் நவரச நாடகம் என்று உணர்ச்சிகளைக் கொட்டிக் குவிக்கிறார் பிரமிளா. நொடிக்கு ஓர் உணர்ச்சி, முகத்தில் தெறிக்கிறதே, எப்படி? ராதாவின் பாத்திரம் அப்படி!



அந்த நேரத்திலும்...

சு.சத்தியமூர்த்தி



"சார்! உங்களைத் தேடிக் கொண்டு யாரோ வந்திருக்காங்க.''— லாட்ஜின் வாட்சுமேன் அப்துல் காதரின் குரல் கேட்டது. நல்ல தூக்கம். மணி பதினொன்று ஆக ஐந்து நிமிடம். இந்த நேரத்தில் யார் என்னைத் தேடி வருவது என்று ஓரளவு வியப்பு கலந்த எரிச்சலுடன் கதவைத் திறந்தேன். ஒல்லியாக ஒரு வாலிபர் நிற்பது தெரிந்தது:

''சார்! உங்கள் பெயர்தானே மூர்த்தி?''

''ஆமாம். என்ன வேணும்?''

''என் பெயர் சாம்பசிவம். இரண்டு நாட்களுக்கு முன் பஸ்ஸில் மார்வலி ஏற்பட்ட ஒருவரை ஆஸ்பத்திரியில் சேர்த்தீர்களே, ஞாபகமிருக்கிறதா?''

''ஆமாம்! இரண்டு நாளுக்கு முன்னலே...''

''அவர் உங்களைப் பார்க்க விரும்புகிறார். நான் அவருடைய ரிலேடிவ். நீங்கள் அட்மிட் செய்துவிட்டுப் போன பிறகு அவர் உடம்பு இன்னும் மோசமாகி விட்டது. இன்று மாலையிலிருந்து ஒரே மயக்கமாக இருக்கிறார். இரவு பத்து மணி சுமாருக்குக் கொஞ்சம் நினைவு திரும்பியிருக்கிறது; ஆனாலும் பேச முடியவில்லை. 'என்னை ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து சேர்த்தவரைப் பார்க்க வேண்டும்' என்று எழுதிக் காண்பித்தார். நீங்கள் கொடுத்திருந்த விலாசத்தை விசாரித்துக் கொண்டு உடனே இங்கு வந்தேன்'' என்று ஒரே மூச்சில் கூறி முடித்தார்.

அந்தச் சம்பவம் இரண்டு நாட்களுக்கு முன் பஸ்ஸில் நடந்தது. பகல் இரண்டு மணி யிருக்கும். பஸ் காலியாக இருந்தது. திடீரென்று என் முன்னல் உட்கார்ந்திருந்தவர், நெஞ்சைப் பிடித்துக் கொண்டு நெளிய ஆரம்பித்தார். நெஞ்சு ரொம்ப வலிப்பதாகச் செய்கையிலே காண்பித்தார். அவருக்கு ஐம்பது வயதிருக்கும். கொஞ்சம் பெருத்த சரீரம். ஆளைப் பார்த்த உடனேயே பசையுள்ள ஆசாமி என்று கூற விடலாம். நான் உடனே கண்டக்டரிடம் பஸ்ஸை நிறுத்தச் சொல்லி அவரை மெதுவாக இறக்கி ஒரு டாக்ஸி பிடித்து, ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்த்தேன். அவருடைய பர்சில் இருந்து, வீட்டு விலாசத்தை

என்ன ஒற்றுமையோ?

சஞ்சீவ ரெட்டி, ஆந்திர அமைச்சரவையிலிருந்து விலகக் காரணமாக இருந்தது — புகார். மதியழகன் தமிழக அமைச்சரவையிலிருந்து விலகக் காரணமாக இருந்தது—புகார்.

சபாநாயகர் ஆவதற்குமுன் அமைச்சராக இருந்தவர் சஞ்சீவ ரெட்டி. மதியழகனும் அப்படித்தான்.

சஞ்சீவ ரெட்டி சபாநாயகராக முழுப் பதவிக் காலமும் இருக்கவில்லை. பாதியிலேயே விலக வேண்டியதாயிற்று. மதியழகனும் அப்படித்தான்.

தரிந்து கொண்டு, அதே டாக்சியில் அவர்கள் வீட்டுக்குச் சென்று விஷயத்தைத் தெரியப்படுத்தினேன். பிறகு எனக்கு வேலை இருந்ததால் மீண்டும் ஆஸ்பத்திரி பக்கம் போக முடியவில்லை. இப்போது அவர் மரணப் படுக்கையில் என்னைப் பார்க்க விரும்புகிறாராம்.

அந்த வாலிபர் வந்த டாக்சியிலேயே புறப்பட்டோம். அவர் பெயர் கணபதியாம். கட்டடக் கான்ட்ராக்டர். வண்டலூர் பக்கம் ஒரு சிறிய தொழிற்சாலை ஆரம்பிக்கப் போகிறாராம். மனைவி காலமாகி ஐந்து வருடமாகிறது. ஒரே ஒரு பெண் மட்டும் கல்லூரியில் படிக்கிறாளாம். எல்லாவற்றையும் சுருக்கமாகக் கூறி முடித்தார். அறிமுகமே இல்லாத மனிதர், ஆஸ்பத்திரியில் மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கிறார். அவருக்கு இந்த நேரத்தில் என்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை ஏன் வர வேண்டும்?

ஆஸ்பத்திரியை அடைந்த போது அநேகமாக எல்லா விளக்கும் அணைந்திருந்தன. கணபதியின் அறைக்கு சாம்பசிவம் என்னை அழைத்துச் சென்றார். கணபதி படுத்திருந்தார். கண்கள் மூடியிருந்தன. படுக்கையைக் கொஞ்சம் தள்ளி ஒரு பெஞ்சில் நாலைந்து பேர் உட்கார்ந்திருந்தார்கள். சாம்பசிவம் கணபதியின் அருகில் சென்று—

''மூர்த்தியை அழைத்து வரச் சொன்னீர்களே! இதோ வந்திருக்கிறார்'' என்று மெதுவாகக் கூறினார். அவர் கண்களை இலேசாகத் திறப்பது போல் இருந்தது. என்னைப் பார்த்தவுடன் கண்களில் ஒரு மலர்ச்சியைக் கண்டது ஒருவேளை என் கற்பனையாகக் கூட இருக்கலாம். ஆனால் ஏதோ சொல்ல வேண்டும் என்று அந்தக் கண்கள் துடித்தது உண்மை.

''நான்தான். என்னைப் பார்க்க வேண்டும் என்று கூறினீர்களாமே?''

அவரால் பேச முடியவில்லை. அவரது அத்தனை சொத்துக்கும் என்னை வாரிசாக்கப் போகிறாரா? அவரது பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளச் சொல்லப் போகிறாரா? அல்லது ஏதாவது மாபெரும் ரகசியத்தை என்னிடம் கூறப் போகிறாரா? தலையை இலேசாகத் தூக்கிப் பேச முயன்றார்; முடியவில்லை. நாலு வார்த்தைகள் சொல்வதற்குள் உயிர் பிரிந்து விடுமா? என் உடல் முழுவதும் பரபரத்தது. கடைசியில் நாலு வார்த்தை பேசினார். தலை சாய்ந்தது. கண்கள் என்னையே வெறிப்பது போல் இருந்தது. வாய் லேசாகத் திறந்தது. எந்தக் கற்பனையாலும் அவர் அவ் வார்த்தைகளைக் கூறுவார் என்று எதிர் பார்க்க முடியாது:

''பர்சில் நூறு ரூபாய் குறைகிறதே?''

காங்கிரஸ் கட்சி பிளவு அடைந்த போது அதன் காரணமாகவும் முக்கியப் பிரமுகராகவும் இருந்தவர் சஞ்சீவரெட்டி. தி.மு.க. பிளவின் போது மதியழகனும் ஒரு முக்கியப் புள்ளியாகவும், ஓரளவு காரணமாகவும் இருந்தவர்.




மதியழகன்

கட்சிப் பிளவுக்குப் பிறகு சஞ்சீவ ரெட்டி, ஆளும் கட்சிக்கு எதிராக இருந்தார். தேர்தல்களில் பிரசாரம் செய்தார். மதியழகனும் அப்படித்தான்.

சஞ்சீவ ரெட்டி எதிர்க் கட்சியிலிருந்து மீண்டும் விலகி, ஆளும் கட்சியின் பக்கமே வந்து விட்டார். மதியழகனும் அப்படித்தான்.

சஞ்சீவ ரெட்டி இன்று அரசியலில் எங்கே இருக்கிறரோ? யாரும் கேள்விப்படுவதேயில்லை. மதியழகன்......???

இது என்ன ஒற்றுமையோ!



சஞ்சீவ ரெட்டி

நல்லி சில்க்ஸ் பட்டு சேலே–சேமிப்பு அனுகூல திட்டத்தின்மூலம்

இதுவரை எமது சந்தாதாரர்களுக்கு **6,000** பட்டு சேலைகளை வழங்கியுள்ளோம்!

அடுத்த **தீபாவளி, ரம்ஜான், பொங்கல்** பண்டிகைகளுக்கு **இப்பொழுதே** நல்லி சில்க்ஸ் பட்டு சேலை சேமிப்பு - அனுகூல திட்டத்தில் சந்தாதாரராகச் சேர்ந்து நல்லியின் பிரசித்தமான பட்டு சேலைகளை **சிரமமின்றி, சுலபமாக** வாங்கி அணியுங்கள்!

அதிர்ஷ்டசாலிகள் இன்னும் முன்னதாகவே பெற வாய்ப்பு உண்டு.

முழு விபரங்களுக்கு இன்றே எழுதுங்கள் :


நல்லி சில்க்ஸ்

பட்டு சேலைகள்

82, ராயப்பேட்டை ஹைரோடு, லஸ், மயிலாப்பூர், சென்னை–4.

(போன்: 74862)


வெளி ஊர்களில் உள்ளவர்களும் இத்திட்டத்தில் பங்கு கொள்ளலாம்.



கண்ணுடியின்றி கண் பார்வை பெறலாம்

உங்களுக்கு இதைவிட மட்டற்ற மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியும் வேறு உண்டோ!

'காண்டாக்ட் லென்ஸ்'களை உபயோகியுங்கள்.



இந்த 'காண்டாக்ட் லென்ஸ்'கள் கிட்டப்பார்வை, தூரப்பார்வை மற்றும் அஃபாகிக் (காடராக்ட் ஆப்ரேஷனுக்குப்பின்) கொராடோ கோனஸ், அனிஸோமெட்ரோபியா, அனிஸிகோனியா, பாலியோபியா, போன்ற பார்வை குறைபாடு உடையவர்களுக்கு மிகவும் சிறந்தது.

'காண்டாக்ட்லென்ஸ்'களை வெகுசுலபமாக நீங்களே உங்கள் கருவிழிகளில் பொருத்திக்கொள்ளலாம். . . கழற்றியும் விடலாம்—சில நாட்கள் பழகிய பின்! உங்கள் விழிகளில் பொருத்தப்பட்ட இச்சிறு 'காண்டாக்ட்லென்ஸ்'கள் மற்றவர்கண்களுக்கு தெரியாது. ஆகவே உங்கள் எழில் மிகு முகத் தோற்றத்தில் எவ்வித மாறுதலும் இல்லை!

உங்கள் கண் வைத்தியரை ஆலோசனைக்கு அணுகுங்கள்

மற்ற விபரங்களுக்கு: **ஆசியா காண்டாக்ட் லென்ஸ் லாபரெட்டரி**
லாபரெட்டரி : 13, கிலகிரிஸ்ட் அவென்யூ, ஹேரிங்டன் ரோடு, சென்னை - 31
அலுவலகம் : 5-G, வீரபத்ர அய்யர் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-34

போன்கள் :
662600 82722 82595

மலர்களிலே அவள் மல்லிகை!



மலர்களின் ராணி, மல்லிகை! இளமைப் பூங்காவில் பூரிப்புடன் பூத்துக் குலுங்கும் இந்த இளமங்கை, அழகு ராணியாகத் திகழ்கிருள். அந்த புத்தெழில் என்றுமே நிலைத்திட அவள் ஜெய் அழகு சாதன சோப் உபயோகிக்கிருள். மல்லிகை மணம் வீசும் ஜெய் சோப் மேனியை மிருதுவாக்கி, பொன்னெளி வீசச் செய்கிறது.

மல்லிகை
மணம் கமழும்
ஜெய்
அழகுசாதன
சோப்

டாடா தயாரிப்பு

OBM 7002 TM

சித்திரை வெயில் தீயாய்க் கொளுத்த—தார்ச் சாலைகள் நெய்யாய் உருகுகின்றன.

காலில் கோணியைச் சுற்றிக் கொண்டுள்ள இருவரால், அந்த வேகாத வெயிலில் ஒரு தள்ளுவண்டி, தார்ச் சாலையில் உருளுகிறது. அது உருண்டால்தான் முன்னால் இழுப்பவனுடைய வயிறும், பின்னால் தள்ளுபவளுடைய வயிறும் நிரம்பும்.

அந்த வண்டிக்கு முன்னால் ஒரு நாகரிக ஜோடி, இடுப்பில் கைகோத்துக் கொண்டு வெயிலையோ, பாதையில் போவோர் வருவோரையோ இலட்சியம் செய்யாது, தமது அந்தரங்க அனுபவங்களை சுவாரஸ்யமாய்ப் பேசிச் சிரித்துக் கொள்வதன் மூலம் சுகானுபவம் பெற்றவாறு போய்க் கொண்டிருப்பதை சொக்கி உன்னிப்பாய்க் கேட்டவாறு பின்னால் தள்ளுவதை மறந்து போனாள்.

முன்னால் இழுப்பவனுக்கு 'சுரீர்' என்று கோபம் வந்து விட்டது!

கல்யாணமாகவில்லை; செய்து வைக்கவும் அவளுக்கு யாருமில்லை.

தான் அழகி என்பதில் எப்போதுமே அவளுக்கு ஒரு பெருமை-கர்வம் உண்டு. 'ம்... என்ன அளகிருந்து என்னத்துக்கு ஆவுது?' என்று சலித்துக் கொள்கிற சமயங்களும் அவளுக்கு நேர்கிறது.

பொழுதுக்கும் வண்டி தள்ளி விட்டு சாயந்திரம் கூலி வாங்குவாள். பாதை ஓரத்தில் அடுப்பு. அங்கேயே பொங்கித் தின்று விட்டுப் படுத்துக் கொள்வாள். வீடும் இல்லை; வாசலும் இல்லை. ஆறுமுகம்தான் அவளுக்குக் காவல்.

ஆறுமுகம் வெளியூர்க்காரன். கல்யாணமாகி ஆறு மாசம்தான் ஆகிறது. புது மனைவியை ஊரில் விட்டு விட்டுப் பிழைப்புத் தேடி சென்னை வந்திருக்கிறான். பொழுதுக்கும் சம்பாதிப்பதை டீயும், பன்னும் சாப்பிட்டு மிச்சம் பிடித்து ஊருக்கு அனுப்புவான். அவனுக்கும் பிளாட்பாரம்தான் கதி.

''யோவ்! அடுப்புல அரிசி கொதிக்குது. கொஞ்ச நேரம் கிளறி

தர்மங்கள்

''இன்னும்மெ கயிதெ, பெருக்கு? முன்பாரம் நெஞ்சை ஒடிக்குது...... ஜோரா தள்ளி வுடும்மே...'' என்று கடிந்து கொண்டான் அவன்.

''இன்னய்யா பெருக்கு பாத்தாங்க? இன்னாத்தையோ கண்டுகினமாரிதான் பேசறது? வலிக்க சத்தில்லேன்னா குத்தம் எம் மேலையா? 'தம்' புடிச்சி இஸ்தா தானே? 'சாவு கெராக்கி'யாட்டம் இஸ்தா, நவுருமா வண்டி?'' என்று பதிலுக்கு அவளும் சாடினாள்.

''இன்னா 'கைராத்' புடிச்ச வேலையோ போ'' என்று சலித்தவாறே அவன் 'தம்' பிடித்து இழுத்தான். அவள் தள்ளினாள். வேர்வை ஆறுகப் பெருக்கெடுத்தது. இருவருக்கும்'

ஹார்பரிலிருந்து வெளிவரும் சரக்கு மூட்டைகளைத் தள்ளு வண்டியில் வைத்து, ஆறுமுகம் முன்னால் இழுக்க, பின்னால் தள்ளுபவள் சொக்கி.

சொக்கி கறுப்புத்தான் என்றாலும், பார்த்தவர் சொக்கிப் போகும்படியிருந்தாள். வயது பத்தொன்பது ஆகிறது.

விட்டுகிட்டிரு. நா போயி அந்த 'கொழா'யண்டெ தண்ணி வூத்திகினு நொடியிலே ஓடியாந்துடறேன்!'' என்று அவள் எழுந்து போனாள்.

'சரி' என்று சொல்லி, அவள் போவதைப் பார்த்தவாறே அடுப்பு மீதிருந்த சட்டியில் அகப்பையை விட்டுத் துழாவி, வேகிற சோற்றை எடுத்துப் பதம் பார்த்தான் ஆறுமுகம். பாதியளவு வெந்திருந்தது.

சொக்கி, குழாயடியில் அமர்ந்து இடுப்புச் சீலையை ஒரு சுற்று சுட்டிக் கொண்டு உடம்பு குளித்தாள்.

அவள் உடம்பு கறுப்பா யிருந்தாலும் 'கொழு கொழு'வென்று சதைப் பிடிப்போடு இருந்தது. முதுகை ஆறுமுகம் இருந்த பக்கம் திருப்பிக் கொண்டு அவள் குளித்தாள்.

மஞ்சளைக் கல்லில் தேய்க்கக் குனிந்த போதும்—மேனி முழுக்க அதைப் பூசிக் கொண்ட போதும்—இடுப்புச் சீலையைத் தளர்த்தித் தொடை, முழங்கால், பாதம் என்று கீறித்தேய்த்துக் கொண்டபோதும் அவளை அவன் கவனிக்க வேண்டியதாயிற்று. அவள் அதுபற்றியெல்லாம்

கொஞ்சமும் பொருட்படுத்தியதாய்த் தெரியவில்லை.

ஒரு வழியாய்க் குளித்து முடித்து, 'கொசுவி' வைத்திருந்த சேலையை இடுப்பில் சுற்றிக் கொண்டு முந்தியை 'மாராக்கு'ப் போட்டவாறு வெளிச்சத்திற்கு வந்தாள் சொக்கி.

அழுக்கு நீங்கிய அவள் மேனியில் இப்போது ஒரு மலர்ச்சி தோன்றியது. கறுத்துக் கிடந்த முகம், சோபை பெற்றுப் பிரகாசித்தது.

அவள் அவனை நோக்கி வந்த போது, அவன் மேனி மின்சார அதிர்ச்சிக்கு உள்ளானது போல் மெல்ல நடுங்கிற்று.

''**யோ**வ், இன்னாயா குளிர் காஞ்சினு நடுங்கறே! நவுரு... நவுரு... சோத்தெ வடிக்கணும்'' என்று அவள் துரிதப்படுத்தவும், அவன் சற்றுத் தூர நகர்ந்தான். பின்னர், சோற்றை வடித்தவாறே ''இன்னாயா ஒடம்புக்கு?'' என்றாள்.

''இன்னான்னு சொல்லட்டும், சொக்கீ ......பொளப்புத்தனம்னு இன்னா? புருசனும் பொஞ்சாதியும் சேந்திருந்து கஷ்டமோ—சுகமோ அனுபவிக்கிறது தானே? மத்தியானம் வண்டி இளுத்துக் கிட்டு போனப்போ, ஒரு ஜோடி பேசிகினு போச்சே... அத்தெ நீ கேட்ட மாரி நானும்தான் கேட்டேன். அதுலெயிருந்தே மனசு கெட்டுப் போச்சி...''

''ம்... ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு கவலெ... கல்யாணமாயி ஆறு மாசமாகலே, இப்பிடியிருக்கறமேன்னு நீ கவலெப்பட்டறே...என்னெ ஆரு வந்து கட்டுவாங்க, எப்ப நாமளும் குடியும் குடித்தனமுமாகறதுங்கறது ஏங்கவலே.''

அவள் வாயாலேயே அவள் வசமாகத் தன்னிடம் மாட்டிக் கொண்டாள் என்று அவன் இப்போது நினைத்தான்.

அவர்கள் இருவரும் ஒரே இடத்தில் வேலை செய்து, ஒரே இடத்தில் வாழ்ந்தும் இதுவரை அவர்களுக்குள்ளே ஒரு கல்மிஷமும் நிகழ்ந்ததில்லை.

இன்று...

எச்.ஆர்.சென்னகிருஷ்ணன்



பேசும் தபால் தலை!



TALKING STAMPS

அவன் அவளைப் பார்ப்பதிலும், பேசுவதிலும் பல அர்த்த பாவங்களை, சொக்கியால் புரிந்து கொள்ள முடிந்தது.

''சரி... இப்ப இன்னா செய்யப் போறதா உத்தேசம்?'' என்று அவன் நோக்கத்தை வெளிப்படையாய் அறிந்து கொள்ள வேண்டுமென்கிற கருத்துடன் கேட்டாள் சொக்கி.

''இன்னா செய்யிறதுன்னு நா ஒருத்தன் மட்டும் தீர்மானம் பண்ணிட்டா முடிஞ்சி போற விஷயமில்லையே'' என்றான் ஆறுமுகம்.

''...ம்...ஹூ...ம்...'' - என்று கறுவி விட்டு அவனை ஒரு மாதிரியாய்ப் பார்த்தாள் சொக்கி. அவளுள்ளே ஒரு தீர்மானம் வலுத்திருந்தது: ''யோவ்... நா பொங்கிப் போட்டு ஏங் கையிலே ஒரு வேளை சோறு துண்ணுகிறயா நீ...? எளு... எளு... எளுந்து கையெ களுவு. துண்ணுட்டு எத்தெ ஒணும்னாலும் பேசலாம்...''

''நீ துண்ணு சொக்கி... கடையிலே நாஷ்டா துண்ணுட்டேன்.''

''அட, எந்திரிய்யான்னா, படா நாஷ்டா துண்ணுட்டே! மீனு கொளம்பு வச்சி, பச்சரிசி சோறு வடிச்சிக்கீறேன். எளுந்து கையெ களுவு, ஒரு வா துண்ணுக்குவே!''

''வவுத்துக்கு மட்டும் போட்டுட்டா பத்துமா...?''-ஆறுமுகம் இருபொருள் படப் பேசினான்.

''அது இருந்தாதான்யா எல்லாம்!''

''சொக்கீ...நீ அன்னிக்கு சொன்னியே, அத்தெ நெனச்சுப்பாரு...''

''என்னிக்கி, எத்தெ சொன்னேன்?''

''நெதம்தான் சொல்றே! 'எந்த கயிதெ வந்து என்னெ கண்ணாலம் பண்ணிக்கப் போவுது'ன்னு... ஓசிச்சி ஓசிச்சிப் பார்த்தேன். எந்த 'பேமானி'யும் பண்ணிக்க வாணாம்...நாமளே பண்ணிக்கிட்டு, சொக்கி ஆசையை பூர்த்திபண்ணி வச்சுடலாம்னு தீர்மானத்துக்கு வந்துட்டேன். ஒனக்கு இதிலே சம்மதம் தானே?''

சொக்கி, ஆறுமுகத்தை இப்போது அர்த்தத்துடன் பார்த்தாள்.

''அங்கே இங்கே தடவிப் பாத்துட்டு கடேசிலே அடி மடியிலியே கை வைக்கலாம்னு முடிவுக்கு வந்துட்டே, இல்லே? நல்லா கீதுய்யா நீ சொல்ற நாயம்.

தபால் தலை பேசுகிறது; பாடுகிறது.

வியப்பாக இருக்கிறதல்லவா?

பேசும் தபால் தலைகளை பூடான் நாடு வெளியிட்டிருக்கிறது. பூடானின் தேசிய கீதத்தைக் கேட்கலாம். அந்த நாட்டின் சரித்திரத்தைக் கேட்கலாம். பூடான் நாட்டுப் பாடல்களைக் கேட்கலாம். இசைத் தட்டு போல் வட்டமாக தபால் தலையை அமைத்திருக்கிறார்கள். ரிகார்ட் பிளேயரில் இவற்றை வைத்து விட்டால் போதும். ஒரு நிமிடம் பாடக் கூடிய தபால் தலையும் இருக்கிறது; சுமார் இரண்டரை நிமிடம் பாடக் கூடிய தபால் தலையும் உண்டு.

'டாக்கிங் ஸ்டாம்ப்ஸ்' என்ற பெயருடன் இவ்வித தபால் தலைகளை, உலகிலேயே முதல் முறையாக, பூடான் அண்மையில் வெளியிட்டிருக்கிறது. ஏழு தபால் தலைகள் இதுவரை வெளி வந்துள்ளன.

பூடான் பிலாடலிக் பீரோவில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளவர்களுக்கு மட்டுமே இவை கிடைக்கும். ஒரு செட்டின் விலை சுமார் 40 ரூபாய்.

—ஏ. எம். பாரூக்.

யோவ்... நா, தெரியாம கேட்டேங்கறத்துக்காக கோவிச்சுக்க மாட்டியே? கோச்சுகினாலும் சரி... நானும்பொண்ணு தான் — உம் பொண்டாட்டியும் பொண்ணுதான். அவகிட்டே கெடைக்காத அப்பிடி என்னா சொகம்யா ஏங் கிட்டே கெடைக்கப் போவுதுன்னு இப்பிடியொரு நெனப்பு ஒனக்கு வந்துச்சி!''

''நீ, அவளெ விட நல்லா கீறே?''

''...ம்...ஹூம்! எத்தெ பாத்து நல்லாகீறேன்னு சொல்றே? ஒடம்பையா? தூ!...எனக்கு கீற ஒடம்புதான்யா ஓம் பொண்டாட்டிக்கும் கீது. மனசும் மூஞ்சியும்தான் வேற வேற. ஒடம்பு மேலே வெக்கிற ஆசை கீதே, அதெல்லாம் கொஞ்ச நாளைக்கிதான்...அப்பிடித்தான் நீ ஆசைபட்டுகீறேன்னு தெரியிது. இப்பேர்ப்பட்ட நெனப்பு கீற ஒனக்கு நா கூட கொஞ்ச நாளைக்கெல்லாம் சலிச்சுப் பூடுவேன். ஓம் பொண்டாட்டி கதிதான் எனக்கும்.''

''அப்பிடியெல்லாம் ஒன்னெ வுட்டுட மாட்டேன் சொக்கி...படவேட்டம்மனுக்கு முன்னாலே சத்தியம் பண்ணிக் குடுன்னு கேளு...குடுக்கறேன்...''

அவள் சற்று நேரம் ஏதோ யோசிப்பது போல் பாவனை செய்தாள்: ''...சரி... நீ சோத்தெ துண்ணு; அப்புறம் பேசிக்கலாம்'' — என்று அவனுக்கு இலை போட்டாள். அவனும் என்றைக்குமில்லாத உற்சாகத்தோடு நிறையச் சாப்பிட்டான்.

இருவரும் சாப்பிட்டுக் கை கழுவிய பின், ''வெத்தலெ பாக்கு இருந்தா குடேன்; போட்டுக்கிட்டே பேசலாம்'' என்றான் அவன். தந்தாள். போட்டுக் கொண்டான்.

''யோவ்!...ரெண்டு மூணு மாசமா நாம ஒண்ணாயிருந்தும் நானும் ஒனக்கு சோறு போடலே - நீயும் துண்ணலே.. இன்னிக்கிதான் ஏங் கையாலே நீ சோறு வாங்கித் துண்ணுக்கீறே...இல்லே...?''

''ஆரு இல்லேன்னா...! இன்னிக்கி மாதிரியே என்னிக்கும் நீ போடணும்... அதான் என் ஆசை...''

''உண்ட வூட்டுக்கு ரெண்டகம் நெனைச்சா போற வழிக்கிப் புண்ணியம் கெடைக்காதுன்னு பெரியவங்க சொல்லிகீறாங்க இல்லே?''

''அத்தெப் பத்தி இப்ப இன்னா...?''

''...யோ!... நா ஒரு வேளையாச்சும் ஓம் பசியாற சோறு போட்டு கீறேனே. எனக்கு ரெண்டகம் செய்ய நெனைப்பியான்னு கேக்கறேன்...?''

அவள் தனது கோரிக்கைக்குச் செவி சாய்த்து விட்டாள் என்கிற பூரிப்பு அவனுக்கு.

''இன்னா சொக்கி இப்படிக் கேட்டுட்டே!... என்னெப் பத்தி ஒனக்குத் தெரியாது...? நா குடுத்த 'வாக்கெ' காப்பாத்தறவன்... நம்பு...''

''...நீ வாக்கெ காப்பாத்துவேன்னு தான்யா உங்கிட்டே சத்தியம் கூட கேக்கப் போறேன்...''

''கேளு, சொக்கி...நீ கேக்காம வேற யாரு கேப்பாங்க... வெத்தலெ கீதா? குடு...அதும் மேலே சத்தியம் பண்ணிக் குடுக்கறேன்...ம்...குடு...''

கொடுத்தாள். அதன் மீது அவன் கையடிச்சு சத்தியம் செய்தான். ''சத்தீமா உண்ட வூட்டுக்கு நா ரெண்டகம் நெனைக்க மாட்டேன்... உட்டேன்னு சொல்லு...''

''கிட்டும்!...ஒனக்கு கண்ணாலமாயி ஆறு மாசம் ஆவலே!...அதுக்குள்ளே பொண்டாட்டியெ தனியா வுட்டுபுட்டு சம்பாரிக்க இங்கே வந்துகிறே...! அவளும் தன் விதியெ நொந்துகிட்டு, 'நம்ம புருசன் போன இடத்திலே ஒளுங்காத்தான் இருப்பார்'னு ஒன்னப் பத்தி பெரிசா நெனெச்சிகிட்டிருப்பா...? நீயும், அவளெப்பத்தி 'தப்பு தண்டாவா' நெனெக்காம 'யோக்கியமாத்தான் இருப்பா'ன்னு நென்ச்சிகினு இருப்பே... நெசந்தானே?''

அவன் ''ஆமா'' என்றான்.

''ஒனக்கு இப்ப வந்து கிதே நெனப்பு, அந்த நெனப்பு உன் பொண்டாட்டிக்கும் வந்தா, அவளெப் பத்தி நீ என்ன சொல்லுவே...?''

அவள் இப்படிக் கேட்கவே, ஆறுமுகத்திற்கு நெஞ்சில் அறைபட்ட மாதிரி ரோஷம் பொத்துக் கொண்டது: ''கயிதே! கயிதே! இன்னா கேய்விம்மே கேக்கறே... அவ 'பத்தரை மாத்துத் தங்கம்'மே! அவளெப் பத்தி மனசாலே தப்புத் தண்டாவா நெனச்சாக் கூட நீ அயிஞ்சி போயிடுவேம்மே...''

''அப்பிடி வா, வளிக்கி...உம் பொண்டாட்டி மேலே ஒனக்கு எவ்வளோ நம்பிக்கை கிதோ, அதே நம்பிக்கை என்னெக் கண்ணாலம் கட்டிக்கிறவருக்கும் இருக்குமா, இல்லேயா!...அவுரு எங்கே கீறாரோ — எப்போ வருவாரோ, வரட்டும். ஆனா, அவரு என்னா நென்ச்சிகினு இருப்பாரு...? 'நாம கண்ணாலம் கட்டிக்கப் போறவ உத்தமியாத்தான் இருப்பா'ன்னுதானே? அதாவது, நீ கண்ணாலம் பண்ணிக்கின பொண்டாட்டி மேலே ஒனக்கு நம்பிக்கை இருக்கிற மாதிரி தானே, என்னெக் கண்ணாலம் பண்ணிக்கிறவருக்கும் ஏம் மேலே நம்பிக்கை இருக்கும்! அப்பேர்ப்பட்டவர் வந்து ஏங் களுத்துலெ தாலி வுளுகற வரிக்கும் நா எப்பிடிய்யா இருக்கணும்? நீயே நென்ச்சிப் பாத்துச் சொல்லு!''

அவன் எதுவும் பேசாமல், ஆழ்ந்த அர்த்தத்துடன் அவளைப் பார்த்தான். அவளை மடக்கி விட்டோம் என்றுஉற்சாகமாய் இருந்த அவனுக்கு, தன்னை அவள் இப்படி மடக்குவாள் என்கிற நினைப்பே வந்ததில்லை. அவள் கேள்வி அவனை ஊமையாக்கி வைத்து விட்டது.

அவள் போய்ப் படுத்து விட்டாள்; அவனும்தான். ஆனால், அவனுக்கு உறக்கம் வரவில்லை.

சொக்கியை எந்தக் கோலத்தில் கண்டு ரசித்து அவள் மீது ஆசைப்பட்டானோ, அந்தக் கோலம் கூட அவன் மனத்திரையில் நிழலாடவில்லை. அப்படி நினைத்துப் பார்ப்பதே கூட 'உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைத்ததாகி விடும்' என்று அவன் பாமர உள்ளம் எண்ணியது.

தர்மங்கள் எதுவுமே காக்கப்படுவதல்ல—நிகழ்வது. அந்த உண்மை, அவளுக்கு எப்படித் தெரியாதோ, அதுபோல் அவனுக்கும் தெரியாது



How to approach a man's heart — through his stomach?
How to make delicious desserts?
How to make a low budget meal?
How to cut out calories without cutting out flavour?
How to make continental delicacies?

Indian Cookery, the first magazine solely devoted to cooking contains the answers to such questions and other interesting information as well. Have an exciting time with Indian Cookery whether you are cooking vegetarian or non-vegetarian food.



HOW TO INCREASE YOUR COOKING POWER?

SAVE 37½%
Subscribe today and pay only Rs. 15 instead of Rs. 24 for 12 issues.
Pre-publication offer open upto February 28, 1974.

To **SUBSCRIPTION COUPON** IC11

The Indian Cookery
114, XII Cross, Shastri Nagar, Madras 600020

Please send me my first issue of INDIAN COOKERY

Name (Block letters) ....

Address (Block letters) ....

....

☐ One year subscription at only Rs. 15/- instead of Rs. 24.

☐ Three year subscription at only Rs. 40/- instead of Rs. 72. I am enclosing my cheque/DD/M.O.Receipt No..............date..............for Rs........ Postage Free. Add Re. 1/; for bank charges on all cheques drawn outside Madras.

☐ Please despatch by V.P.P. I agree to honour the V.P.P. when the postman delivers it.

Overseas subscription £ 1 plus seamail postage 25 Pence. Airmail charges extra.

Signature ....

SP/7721





வள்ளி

தோட்டத்தில் அமர்ந்து தேர்வுக்குரிய பாடத்தைப் படித்துக் கொண்டிருக்கிறேன்.

எதிரில் யாரோ வந்து நிற்பது தெரிகிறது. நிமிர்ந்து பார்க்கிறேன். முரளி! என் சின்ன எஜமான்!

இரு வாரத்துக்கு முன்புதான் கல்லூரியிலிருந்து இங்கு வந்தார். நானும் அவரை ஜாடைமாடையாகக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். இந்தச் சில நாட்களாக அவர் என்னையே சதா சுற்றிக் கொண்டிருக்கிறார்!

மெல்லிய புன்னகை அவரிடம்! ''என்ன வள்ளி, பரீட்சைக்காகத் தயாராகிக் கொண்டிருக்கிறாய் போலிருக்கிறது?'' என்று கனிவாகக் கேட்கிறார்.

பெரிய எஜமான் போலவேதான் இவரும். அப்பாவுக்குப் பிள்ளை, தப்பாமல் பிறந்திருக்கிறார்! அவரும் என்னை ஒரு வேலைக்காரியின் மகள் என்று நினைப்பதே கிடையாது. ஏன்? இப்போது நான் படிப்பதெல்லாம்கூட அவரது கருணையால்தான். என் அம்மாவைக்கூட வேலைக்காரியாக அவர் நினைத்ததில்லை.

''ஆமாங்க'' என்கிறேன்.

அவர் பார்வை என் முகத்தை ஏன் இமைக்காமல் பார்க்கிறது? என்னை ஏன் வெட்கம் தழுவுகிறது?

சிவந்த முகத்துடன் தலை குனிகிறேன்.

சற்றுத் தள்ளி எனக்கும் என் அம்மாவுக்குமாகப் பெரிய எஜமானால் கொடுக்கப்பட்டிருந்த வீடு இருக்கிறது. அவுட்-ஹவுஸ். அதைக் காட்டியபடியே,

''உன் அம்மா உள்ளேயா இருக்கிறாள்?'' என்று கேட்கிறார் அவர்.

அம்மா அங்கே இல்லை. அவரிடம் சொல்கிறேன்.

''அப்படியானால் உன்னைத் தனிமையில் சந்திக்க விரும்பி நான் இங்கே வந்தது நல்லதாகப் போய்விட்டது. ஏன் தெரியுமா வள்ளி? நான் உன்னை.......''
—முடிக்காமல் நிறுத்துகிறார்.

உண்மைதானா? என்னால் நம்ப முடியவில்லையே!

''விரைவிலேயே என் பெற்றோரிடம் சொல்லி, நம் திருமணத்துக்கு ஏற்பாடு செய்யச் சொல்கிறேன் வள்ளி. அடிக்கடி நாம் இப்படிச் சந்தித்துக் கொள்ள வேண்டும். விளங்குகிறதா?''

அப்படியே ஆகாயத்தில் பறப்பது போல் பிரமை.

முரளி

நடிப்புக் கலைக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறேன் நான்.

பல்வேறு காரணங்களால், பெற்றோரைப் பார்த்து வருடங்கள் மூன்றாகி விட்டன. ஒரு மாத விடுமுறை எடுத்துக் கொண்டு ஊருக்கு வந்து விடுகிறேன்.

இங்கு வந்த சில தினங்களில்—

உறவு

மு.திருஞானம்

என் கவனம் வள்ளியிடம் திரும்புகிறது. அழகாகத்தான் இருக்கிறாள். நான் சின்ன எஜமான் என்பதால் அவளுக்கும், அவள் தாய்க்கும் என்மீது அபார மதிப்பு, மரியாதை.

இதையெல்லாம் எண்ணி நான் சிரித்துக் கொள்கிறேன்.

அப்பாவின் இரக்க சுபாவம் எனக்குத் தெரிந்ததுதான். வேலைக்காரர்களாகிய தங்களிடம்கூட அவர் ரொம்ப பாசமாக இருப்பதாக வள்ளியின் மூலம் நான் அறிந்து என் உள்ளம் குளிர்கிறது. கூடவே வேதனையும் உண்டாகிறது.

வள்ளியை இன்று சந்திக்கிறேன், தோட்டத்தில் உட்கார்ந்து அவள் படித்துக் கொண்டிருக்கும் போது.

என் மனத்தில் கொண்டிருந்த காதலை அவளிடம் வெளியிடுகிறேன். மலைக்கிறாள்.

அமிர்தம்

என்ன? என் மகள் சொல்வது உண்மைதானா?

சின்ன எஜமான் இவளை விரும்புகிறாராமே? இவளிடம் வாய்விட்டுச் சொன்னாராமே?

பெரிய பணக்காரரின் பிள்ளையான அவருக்கு, என் மகள்—? கடவுளே! இது நடக்கக் கூடியதா?

இல்லை... இல்லை... நடக்கக் கூடாது.

''கூடாதடி வள்ளி. இது தவறு. நீ அவரைச் சந்திப்பதற்கு ஒப்புக் கொள்ளாதே! அவரைக் கண்டால் இனி நீ ஒரு வார்த்தை கூடப் பேசாமல் ஓடி வந்து விடவேண்டும்'' என்று, கண்டிப்புடன் கட்டளை யிடுகிறேன்.

வள்ளி மிரள்கிறாள்.

நாட்கள் சில கழிகின்றன. நான் அன்று கரடியாய்க் கத்தியும், வள்ளி கேட்கவில்லை. தினமும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சின்ன எஜமானும் இவளைத் தேடி வந்து விடுகிறார்.

பெரிய எஜமானுக்கு இது தெரியுமோ, என்னவோ? சிறுசுகள் அப்படித்தான் இருக்கும். பெரியவர்களாகிய நாம் தானே கண்டிக்க வேண்டும்!

முரளி

விடுமுறை முடிய சரியாக இன்னும் ஒரு வாரம்தான் இருக்கிறது. அதற்குள்-

நான் நினைத்ததை முடித்துவிட வேண்டும்.

தினமும் நானும் வள்ளியும் சந்தித்துப் பேசிக் கொண்டுதானிருக்கிறோம், அமிர்தத்தின் எதிர்ப்பு இருந்த போதிலும்!

அன்றொரு நாள். இரவு ஏழு மணி.

''வள்ளி!'' என்று கூப்பிட்டுக் கொண்டே அவள் வீட்டுக்குச் செல்கிறேன். ஆர்வம் மேலிட அவளும் வெளியே வருகிறாள்.

அச்சமயம்—

எங்கிருந்தோ ஓடி வந்து அமிர்தம் எங்கள் இருவருக்குமிடையே நிற்கிறாள்:

''சின்ன எஜமான்! நாங்கள் ஏழைகள். நீங்கள் தயவுசெய்து என் மகளை விட்டு விலகிப் போய்—''

இப்படியெல்லாம் அமிர்தம் சொல்வாள் என்று நான் ஏற்கெனவே எதிர்பார்த்ததுதானே!

நான் சொல்லுகிறேன்: ''அது மட்டும் என்னால் முடியாது!''

அமிர்தம்

சின்ன எஜமான், வள்ளியை மணப்பதில் இவ்வளவு உறுதியாக இருப்பார் என்பதை நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும்—

இத் திருமணம் நடைபெறக் கூடாது. நடைபெறவே கூடாது. ஏனெனில், எனக்குத் தெரிந்த அந்த ரகசியம்... ஓ! அதை நான் இனியும் மறைத்து வைப்பதில் பிரயோசனமில்லை. அதைச் சொன்னால்தான் இத் திருமணத்தை நான் நிறுத்த முடியும்.

''சின்ன எஜமான்! நீங்கள் வள்ளியை மணக்கக் கூடாது என்று நான் ஏன் சொல்கிறேன் தெரியுமா? நன்றாகக்

கேட்டுக்கொள்ளுங்கள். அவள்...அவள் ...உங்கள் தங்கை... ஆமாம்! பெரிய எஜமான் மூலம் எனக்குப் பிறந்தவள் தான் வள்ளி!''

சொல்லிவிட்டுக் குலுங்கிக் குலுங்கி அழுகிறேன். வள்ளி அசையாமல் நின்று விடுகிறாள்.

சின்ன எஜமான் ஓரடி பின்வாங்குகிறார். அவருடைய முகம் வெளிறிப் போய் விடுகிறது. அப்படியே தலை குனிந்தவாறு வாசலை நோக்கிச் செல்கிறார்.

அங்கிருந்தவாறு சொல்கிறார்: ''அமிர்தம்! இந்த மாதிரி எதையாவது சொல்லி நடித்து என்னை ஏமாற்ற நினைக்காதே! எப்படியும் எனக்கும் வள்ளிக்கும் திருமணம்தான். நீங்கள் யாருமே சம்மதிக்கா விட்டாலும், எனக்கு இருக்கவே இருக்கிறது ரிஜிஸ்தர் ஆபீஸ்!''

அந்தக் குரலில்தான் எவ்வளவு உறுதி!

முரளி

சபாஷ் முரளி! கடைசியில் உன் திட்டத்தை நீ வெற்றிகரமாக முடித்து விட்டாயே!

அமிர்தம் தன் மகள் வள்ளியுடன் இரவோடு இரவாக எங்கேதான் போய் விட்டாளோ தெரியவில்லையே!



''மற்றவர்களை சிறைக்கு அனுப்பும் நீதிபதிகள், தாங்களும் கொஞ்ச நாள் சிறையில் கழிக்க வேண்டும். நான் 30 நாள் சிறையில் இருந்திருக்கிறேன்.''

—சுப்ரீம் கோர்ட் நீதிபதி கிருஷ்ண அய்யர்.

ஆமாம், சார்! நான் விடுமுறையில் இங்கு வந்த இரண்டொரு நாளிலேயே எனக்குத் தெரிந்து விட்டது, என் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் சரியான உறவில்லை என்பது. காரணம், வேலைக்காரி அமிர்தம்!

என் சிறு வயது முதலே அமிர்தம் எங்கள் வீட்டில் வேலைக்காரியாக இருந்து வந்தபடியால், எப்படியோ அவளுக்கும், என் அப்பாவுக்கும் கள்ளத் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது!

அப்பாவைத் தேடி அன்றொரு நாள் ஏதோ காரியமாக அவருடைய அறைக்குச் சென்ற போது, அவருக்கும் அம்மாவுக்கும் நடந்த சூடான விவாதங்கள் என்னை வெளியிலேயே நிற்கச் செய்து விட்டன. பேச்சின் மொத்தத்தையும் பார்த்தால்—

அம்மா, அப்பாவை எத்தனையாவது தடவையாகக் கெஞ்சுகிறாளோ, அமிர்தத்துடன் அவருக்குள்ள தொடர்பை விட்டு விடும்படி. ஆனால் அப்பாவாவது, விடுவதாவது?..அமிர்தத்தை வீட்டை விட்டுத் துரத்தவும் அம்மாவால் முடியவில்லை.

வள்ளியின் வளர்ச்சியிலும் படிப்பிலும், அப்பா கொண்டுள்ள அக்கறைக்குக் காரணம் தெரிந்து விட்டது. ஒரு வேலைக்காரிக்கும், அவளுடைய மகளுக்கும் இவ்வளவு செல்லம் எந்த எஜமான் தான் கொடுப்பார்?

அம்மாவுக்கு விடிவு காலம் வேண்டும்! அவள் வாழ்வு மலர வேண்டும்! அதற்கு இனி நான்தான் உதவ வேண்டும். எப்படி? திட்டம் தீட்டினேன்.

வள்ளி—என் சகோதரி என்றுதான் என்னால் யூகித்துக்கொள்ள முடிந்ததே—என் கண்ணில் பட்டாள்.

அவளைக் காதலிப்பது போல் நடித்தேன். மணக்கப் போவதாகப் பிடிவாதமும் பிடித்தேன். அமிர்தத்திடமிருந்து ரகசியம் வெளிவந்த போது, திடுக்கிட்டவனாக நின்றேன்.

நான் நடிப்புக் கல்லூரியில் படிப்பவன் ஆயிற்றே! எனக்கு நடிக்கத் தெரியாதா என்ன?

எப்படியோ—

அம்மாவின் வாழ்வுக்கு எதிரியாக இருந்தவள் போய் விட்டாள்.

பெண்ணை நம்புங்கள்



முழுக்க முழுக்க எம். ஆர். ஆர். ாசுவை வைத்து ஒரு படம் எடுத்தால் ப்படி இருக்கும்? உதாரணம்—'பெண்ணை நம்புங்கள்.'

தனக்குக் கிடைக்காத பெண்ணின் ாழ்க்கையில் புயலைக் கிளப்பிவிடும் ல்லனாக வருகிறார்.

மனைவியை நம்பாத சந்தேகப் ராணியாக வருகிறார். மகள் மீது யிரையே வைத்திருக்கும் தந்தையும் வர்தான். மாமனார் ஆடியபாதமும் வரே!

ஆரம்பத்திலிருந்து கடைசிவரை ாசுவின் ஆட்சி. அவருடைய செகரட்ரி ாடிமுத்து—தேங்காய் சீனிவாசன்—ட்டி போட்டுக் கொண்டு அமளியும் காசமும் செய்கிறார்.

சந்தேகப் புயலில் சிக்கி, மனைவி ஜெயந்தி)யை வீட்டை விட்டு வெளி யற்றுவதும், குடிப்பதும், சாமியாராக ஞ்சாரம் போவதும் ராஜனுக்குப் பழக்கமாகி விட்டது. அவசரக் கோலம்!

முதல் பாதியை விட இரண்டாவது பாதியில் வேகம் இருக்கிறது. சிவகுமார், மாமனார் வாசுவைப் பழி வாங்கும் படலத்தில் சூடு இருக்கிறது. 'பள்ளம், பெட்டி' என்ற சொல்லை வைத்துக் கொண்டு ஆடியபாதத்தை அவர் ஆட்டி வைப்பதில் சுவை இருக்கிறது.

கதையையும் கருத்தையும் விட்டுத் தள்ளுங்கள். சிரிப்பதற்கு நிறைய இருக் கிறது, நம்புங்கள்!

தலைப் பிரசவம்



சாபம், சபதம், பிரசவம், தற்கொலை-

இதுதான் தலைப் பிரசவம்.

வெகு சாதாரணமான பாப்பா கதையாக ஆரம்பமாகி, ஒரு பாப்பா பிறந்தவுடன், ஒரு தற்கொலையுடன் கதை முடிகிறது.

ஜமீன்தார் குடும்பத்திற்கு ஒரு சாபம்: அந்தக் குடும்பத்தில் பிள்ளை பிறக்கும்; ஆனால், தொட்டில் ஆட்ட தாய் இருக்க மாட்டாள். தலைப் பிரசவத் திலேயே செத்து விடுவாள்.

நாலாவது தலைமுறையின் நாயகன் முத்து ராமனுக்கு இப்பொழுது அந்தச் சோதனை. குடும்ப சாபம் தெரிந்தும் ஒரு டாக்டர் - லட்சுமி - அவரை மணக்க முன்வருகிறாள். திருமணம் நடக்கவில்லை.

ஒரு மருமகளை மாளிகைக்குக் கொண்டு வருவதாக சபதம் போட்டு அதை நிறைவேற்றுகிறார் பெரிய ஜமீன்தார் (பகவதி). வேலைக்காரி (பிரமிளா) ஜமீன்தாரின் மருமகளாகிறாள்.

பங்களாவும், காரும் வந்தாலும்கூட நாலு தலைமுறைக்கு முந்திய கதை போன்ற பழமைதான் தோன்றுகிறது.

தியாகக் கதையாக உயர்த்த முயன்றாலும் தற்கொலைக் கதைதானே! நிறைவு தெரியவில்லை!

நவ யுக மிர்ராபோ ராணி

நீங்களும் மிர்ராபோ ராணியாகத் திகழ வேண்டுமா? உங்களுக்காகவே மிர்ராபோ ஃபுல் வாயில் புடவைகள். 2/120 x 2/120. வாஷ் அன் வேர்.

இதர தயாரிப்புகள்:
ஸ்டேலாங்கர்,
ஸ்ட்ரேஞ்சர் ஷர்ட்டிங்குகள்,
எலகன்ஸா சூட்டிங், லவ்லின் ஷர்ட்டிங்
சில்வர்லைன், சில்வர்கிங் வேஷ்டிகள்,
மல், காடா.

தி கோயம்பத்தூர் காட்டன் மில்ஸ் லிமிடெட்

மார்க்கெட் செய்பவர்கள்:
வெங்கடேஷ் வஸ்திராலயா





பச்சிள மேனியைக் காப்பதற்கே
பாப்பா காட்டும் வழி உனக்கே

-ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர் -



உங்கள் புசத்தின் சருமம் பச்சிளம் குளிர் போன்ற ...க்கோ பாதுகாக்கத்தக்க பவுடர் எது? பாப்பாவின் மேனியைக் காப்பாற்றும் பூப்போன்ற மென்மையான பவுடரே தேவை. மழமழ மென்மையோடு குளுமையாக வைத்திருப்பது ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்.

பிறந்த நாளைப் பிஞ்சு மென்மையோடு உங்கள் மேனி மிளிரப் பேருதவி

Johnson & Johnson*

* Trade Mark

© Johnson & Johnson

லிண்டாஸ்-J&J-2-77 TM

ஒரு வருஷம் மட்டும்...

அன்னம்

கீதாவிற்கு அது ஒரு விசித்திரமாகப் பட்டது.

இரவு அவளும் அவள் மாமியாரும் சாப்பிடும் சமயம் ராகவன் ஒரு தரமாவது சமையல் அறைக்குள் எட்டிப் பார்க்காமல் இருக்கமாட்டான்.

''மாமியாரும் மருமகளுமாகப் பகல் முழுவதும் பேசியதெல்லாம் போதவில்லையா? சாப்பிடும்போது கூட என்ன பேச்சு வேண்டிக் கிடக்கிறது?'' என்று அதட்டுவான்.

அவர்கள் தங்கள் உணவை முடித்துக் கொண்டு வரச் சற்று தாமதமானால், மீண்டும் சமையல் அறைக்குள் நுழைந்து விடுவான்:

''என்ன காரியம் செய்கிறீர்கள்? வீட்டில் இருப்பவர்கள் நான்கு பேர் மட்டும் தானே? இதற்கு இத்தனை பாத்திரங்களா? அப்பப்பா! எப்பொழுதுதான் நீங்கள் காலத்திற்குத் தகுந்தபடி மாறப் போகிறீர்களோ?'' என்று அலுத்துக் கொள்வான்.

ராகவனால் இரவு பத்து பத்தரை மணிக்கு மேல் விழித்துக் கொண்டிருக்க முடியாது. கீதா தாமதமாக வரும் நாட்கள் எல்லாம் வாழ்வு எனும் புத்தகத்தில் வீணடிக்கப்பட்ட பக்கங்கள் என்பது அவன் எண்ணம்.

எட்டு மணிக்கெல்லாம் அவன் அப்பா, வாசல் அறையில் படுக்கப் போய் விடுவார். மாமியார், கூடத்தில் ஒரு மூலையில் ஒடுங்கிக் கொள்வாள். அவர்கள் தனி அறையில் ஒரே சிரிப்பும் கும்மாளமும்தான்.

கைகளைக் கழுவிக் கொண்டு கூடத்திற்கு வந்த கீதா, ராகவன் ஏதோ ஆபீஸ் ரிகார்டுகளைப் புரட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். தூக்கத்தில் முனகிய அவர்கள் ஒரு வயதுக் குழந்தையைத் தூளியை ஆட்டிச் சமாதானப் படுத்தியபின் திரும்பினாள். அன்றைய வேலைகள் அத்தனையையும் முடித்துக் கொண்டு அவள் திரும்பியபோது கூட, அவன் தன் வேலையில் மூழ்கியிருந்தான்.


''கீதா! இவையெல்லாம் ரொம்ப முக்கியமானவை. நான் படுத்துக் கொள்ளச் சற்று நேரமாகும். நீ போய்ப் படுத்துக் கொள்!'' என்றான்.

அவன் எப்போது வந்து படுத்தான் என்று கீதாவுக்குத் தெரியாது. காலையில் பால்காரன் வந்து குரல் எழுப்பியபோது தான் கீதா எழுந்தாள். அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த ராகவனை அவள் எழுப்பவில்லை.

இரண்டாம் நாளும் அப்படியே.

மூன்றாம் நாளும் ஆபீஸ் வேலை தொடர்ந்தது.

நான்காம் நாள் அவன் வீடு வரும் போதே மணி பத்து. சோர்வுடன் வந்தவன் பேசாமல் படுத்து விட்டான்.



அதற்கும் மறுநாள்... நண்பர்கள் கூப்பிடுகிறார்கள் என்று கடைசி ஆட்டம் சினிமாவிற்குப் போய் வீடு திரும்பும் போது இரவு இரண்டு மணி.

மறுநாள் ஏதோ ஆங்கிலப் புத்தகத்தைப் பரீட்சைக்குப் படிக்கும் மாணவனைப் போல் ஊன்றிப் படித்துக் கொண்டு இருந்த போது கீதா, பால் எடுத்துக் கொண்டு வந்தாள். அவளை ஏறிட்டுப் பார்க்காமலேயே பாலை 'மடக் மடக்' என்று குடித்துவிட்டுத் திரும்பி வைத்தான்.

மறுநாள் காலை அவன் அலுவலகம் புறப்படும் போது, கீதா அவனை மடக்கினாள். மாமனார் முதலில் புறப்பட்டுப் போயிருந்தார். மாமியார், குருவிற்கு எண்ணெய் போடக் கோவிலுக்குப் போயிருந்தாள்.



''இது உங்களுக்கே நன்றாக இருக்கிறதா?'' என்று கேட்டாள் கீதா.

அவள் கையிலிருந்த தன் சட்டையைப் பார்த்த ராகவன், ''உன் செலக்ஷன் தானே! நன்றாக இல்லாமல் போகுமா?'' என்று கேட்டான்.

''பேச்சை மாற்றுகிறீர்கள்! நீங்கள் இப்போது எப்படி நடக்கிறீர்கள்?''

''வழக்கம் போல்தான்.'' — நடை மாறினாற்போல் தெரியக் காலில் என்ன, முள்ளா குத்தியிருக்கிறது?''

''இந்த இடக்கெல்லாம் வேண்டாம். நீங்கள் எப்போதும் போல்தான் இருக்கிறீர்களா?''

''இல்லை..மாறித்தான் இருக்கிறேன்'' என்று ஒப்புக் கொண்டான் ராகவன்.

''என்ன காரணம்? ஏன் இந்தத் திடீர் மாற்றம்?''

''வயது ஆகவில்லையா? காதோரம் கொஞ்சம் நரைத்து இருக்கிறது...... இதற்குப் போய்ப் பெரிதாக...''

கீதாவின் கண்களில் நீர் துளித்தது.

''என் மேல் உங்களுக்கு ஏன் இத்தனை கோபம்? என்னை ஏன் சித்திரவதை செய்கிறீர்கள்?''

''போடி, பயித்தியம்!... உன் மேல் கோபமா? எதையாவது நீயாகக் கற்பனை செய்து கொண்டு......''

''ஒரு நாளைக்கு எத்தனை முறை 'கீதா கீதா' என்று கூப்பிடுவீர்கள்? இப்போதெல்லாம் ஓசைப்படாமல் வந்து, உங்களுக்கு வேண்டியவற்றை நீங்களே செய்து கொண்டு...... எனக்குத் தெரியாதா?''

''நீயாக எதையாவது கற்பனை செய்து கொள்ளாதே! நான் எப்போதும் போலத்தான் இருக்கிறேன்!'' என்று நகர்ந்தான் ராகவன்.

கீதா சமாதானம் அடையவில்லை.

''இல்லை... நிச்சயம் இல்லை... என்னை நீங்கள் ஒதுக்குகிறீர்கள். என்னைக் கண்டால் உங்களுக்குப் பிடிக்கவில்லை. என்னோடு பேசப் பிரியம் இல்லை. பழகக்கூட இஷ்டம்


அவள் மென்மையானவள்... அவள் ஒரு புதிர்...
அவள் மிருதுவானவள், உறுதியானவள்...
தீப்போன்றவள்... அவள் பெண்மையே உருவானவள்...
பட்டுப் போன்ற டால்க்... அன்பைப்போல மிருதுவானது. உங்கள் மேனியைத் தழுவி அரவணைப்பது. உங்களை மோகன லாகிரியில் ஆழ்த்தும் அருமையான புது நறுமணம் கொண்டது. அதுவே வில் ஆ:ப் லவ். ஹேலோ மட்டுமே அளிப்பது. அதைத் தாராளமாக மேனியெங்கும் தூவிக் கொள்ளுங்கள். ஹேலோவிற்கெனவே பிரத்யேகமாக உருவான அதன் நறுமணம் நீண்ட நேரம் உங்களைத் தழுவி, உங்களைச் சுற்றிலும் கமகமவென வீசிக் கொண்டிருக்கும். வில் ஆ:ப் லவ் உங்களை அலங்கரிக்கட்டும். ஹேலோ மட்டுமே அளிக்கும் வாசமுள்ள அன்புத் திரை அது.
ஹேலோ வில் ஆ:ப் லவ் டால்க்
வாசமுள்ள அன்புத்திரை...
அன்பைப் போல மிருதுவானது.
அவளுக்கு உகந்தது
ஹேலோ
வில் ஆ:ப் லவ்
டால்க்
NEW
Halo
TALC

HT.G.I.TM

இல்லை. என்னைத் தொடக்கூட இல்லை'' என விசும்பினாள் அவள்.

''ஆமாம். அப்படித்தான்...விருப்பம் இல்லை. என் ஆபீசில் புதிதாக ஒரு ஸ்டெனோ வந்திருக்கிறாள். பெயர் மோகனா. அழகு... அப்பப்பா!...பேச்சு? கிளி கொஞ்சும்... நடையை இன்று முழுதும் பார்த்துக் கொண்டிருக்கலாம். அவளுக்கும் எனக்கும் சிநேகம்... போதுமா?... இப்போது திருப்தியா?'' என்று 'படபட'வென்று சொன்னான் ராகவன்.

''நிஜமாக அப்படியா?'' என்று அதிர்ந்து போய் உட்கார்ந்தாள் கீதா.

''ஏன் இப்படி வாயைத் திறக்கிறாய்? எப்படியோ உன் அப்பா ஏமாந்து போய் உன்னை எனக்குக் கட்டி வைத்தார். வேறு எந்தப் பெண் இந்த முகரக்கட்டையைத் திரும்பிப் பார்ப்பாள்? நான் சொன்ன மாதிரி யெல்லாம் நாடகத்திலும் சினிமாவிலும்தான் வரும். என் ஆபீஸ் ஸ்டெனோவுக்கு வயது நாற்பது. கல்யாணத்திற்கு ஒரு பெண் இருக்கிறாள்.''

''அப்படியானால் நீங்கள் இப்படிப் பற்றில்லாமல் இருப்பதற்குக் காரணம்...?'' என இழுத்தாள் கீதா.

''காரணம், ரொம்ப 'ஸிம்பிள்'!'' என்ற ராகவன், தன் டயரியை எடுத்தான். ஒரு பக்கத்தில் சிவப்புப் பென்ஸிலால் ஒரு சிறிய முக்கோணத்தைத் தலைகீழாக வரைந்து காட்டினான்.

''இதற்கு என்ன அவசரம் இப்போது? நமக்கு இருப்பது ஒரு குழந்தைதானே?'' என்று கேட்டாள் கீதா.

''அடுத்தது இப்போது வேண்டாம்!'' என்றான் ராகவன்.

''ஏன்! உங்களிடம் பண வசதி இல்லையா? இரண்டு குழந்தைகளை நம்மால் காப்பாற்ற முடியாதா?'' என்று கேட்டாள் கீதா.

''பண வசதியும் இருக்கிறது...கடன் தொல்லையும் உண்டு. உன் நாத்தனார் கல்யாணத்திற்கு நான் வாங்கிய கடனில் பாதிக்கு மேலே அப்படியே நிற்கிறது. அது கிடக்கட்டும், உன் உடம்பைக் கண்ணாடியில் பார்த்தாயா?''

''ஏன், எனக்கு என்ன? ஒரு சுற்றுப் பருத்துதானே இருக்கிறேன்!''

''அப்படி நீ நினைத்துக் கொண்டிருக்கலாம். நம் கல்யாண போட்டோவைப் பார். மலர்ந்த புஷ்பம் போல் எப்படி நீ சிரிக்கிறாய்! இந்த ஒரு குழந்தை பிறந்த



“நாசிக் போகலாம்னு சொல்றீங்களே?...அங்கே என்ன ...தேர், திருவிழாவா?...''

நீங்க ஒண்ணு!... அங்கேதான் காசு அச்சடிக்கறாங்களாம்...!''

வுடன், தோள் சரிந்து, முகம் ஒட்டி, நடை தளர்ந்து... கீதா... எனக்கு நீ வேண்டும்... வேறு எதுவும் முக்கியம் இல்லை...'' என்றான் ராகவன் உணர்ச்சி வசப்பட்டு.

கீதா மௌனமாக இருந்தாள்.

''டாக்டர் என்னிடம் என்ன சொல்லியிருக்கிறார், தெரியுமா? நான் ரொம்பக் கவனமாக இருக்க வேண்டுமாம்....... அதனால்தான்...''

''இப்படிக் கல்யாணமாகியும் பிரம்மசாரியாக இருக்கப் போகிறீர்களா?'' என்று கேட்டாள் கீதா சோகத்துடன்.

ராகவன், கீதாவின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

''கீதா, இது நமக்கு ஒரு சவால். காந்திஜியும் கஸ்தூரியும் போல் நாம் இருப்போம். நமக்குக் காவல் நம் மனம் மட்டும்தான். இன்னும் ஒரு வருஷத்திற்கு நீ என்னுடன் ஒத்துழைக்க முடியுமா?''

''ஒரு வருஷமா?'' என்று மலைத்துப் போனாள் கீதா.

''என்னால் உறுதியாக இருக்க முடியும் ...நீ கை கொடுத்தால்...!''

''நீங்கள் உண்மையில் அப்படி விரும்பினால் நான் தடை சொல்ல மாட்டேன்!'' என்றாள் கீதா.

''என் கீதா என்றால் கீதாதான்!...'' என்று அவளைக் கட்டி அணைக்க விழைந்த தன் கைகளைச் 'சட்'டென்று பின்னுக்கு இழுத்துக் கொண்டான் ராகவன்.

கீதா சிரித்தாள்.

அவர்கள் போட்ட திட்டம் வெற்றிகரமாக முடிந்தது. கீதா ஒன்பது மணிக்குப் படுக்கப் போய் விடுவாள்.

இரவு பத்து மணிக்கு மேல் தூக்கம் கண்களை அழுத்த, தனியாகப் போடப்பட்டிருந்த கட்டில் ஒன்றின் மேல் விழுவான் ராகவன்.

இந்தச் சில மாதங்களாக அவன் சினிமா, நாடகங்களைத் தவிர்த்தான். தத்துவப் புத்தகங்கள் நிறையப் படித்தான். சுவாமி சிவானந்தா என்ன சொல்லியிருக்கிறார் என்பது அவனுக்குத் தலைகீழ்ப் பாடம். பகவான் ராமகிருஷ்ணரைப் பற்றிப் பத்து சொற்பொழிவுகள் நிகழ்த்த அவனுக்குச் சரக்கு சேர்ந்தது.

கீதாவின் உடலிலும் ஒரு பொலிவு தெரிந்தது. வற்றிக் கிடந்த கன்னங்களில் ஒரு சோபை படர்ந்தது. அவன் முயற்சி வீண் போகவில்லை. டாக்டர் கொடுத்த மருந்துகளும் இயற்கையும் அவளைப் புதுமணப் பெண்ணாக்கிக் காட்டின.

ராகவனும் மனிதன்தானே! சில சமயம் எல்லாவற்றையும் மறந்து ஆவேசமாகக் கீதாவைப் பார்க்க அவன் ஓடுவான். அவள் தலைமாட்டில் மாட்டப்பட்டிருந்த காந்திஜியின் படம் அவனை நிறுத்தும்.

பால் டம்ளருடன் வரும் கீதாவிற்கு நாற்காலியில் உட்கார்ந்து இருக்கும் ராகவனை அப்படியே பின்புறமாகக் கட்டி அணைத்தால் என்ன என்று தோன்றும். ஆனால் அவன் மேஜையின் மேல் வைக்கப்பட்டிருந்த ராமகிருஷ்ணரும் சாரதா தேவியும் அவளைச் சாந்தப்படுத்துவார்கள்.

நான்கு மாதங்கள் முடிந்தன.

ஒரு நாள் மாலை ராகவன், ஆபிசிலிருந்து வந்ததும், கீதா அவனைத் தன் தனி அறைக்கு அழைத்தாள்.

''பிடியுங்கள் சர்க்கரையை!'' என்று நீட்டினாள்.

''என்ன விசேஷம்?'' என்று கேட்டான் ராகவன்.

''நல்ல சமாசாரம்தான்! நம் வீட்டு ஜனத்தொகை ஒன்று கூடப் போகிறது!'' என்றாள் அவள்.

''என்ன உளறுகிறாய்?'' என அதட்டினான்.

''என்ன விழிக்கிறீர்கள்? விளக்கைப் பெரிதாகப் போட்டுக் கொண்டு நீங்கள் படித்துக் கொண்டிருந்தால் அம்மாவிற்குத் தூக்கம் வருமா? வாயிற்புறம் உள்ள அறைக்குப் போய்ப் படுத்திருக்கிறார்கள். ரிசல்ட்... உங்களுக்குத் தம்பி பிறக்கப் போகிறான்!'' என்றாள்.





வியக்கவைக்கும் உங்கள் அழகை
வெளிப்படுத்திக் காட்டும் ஜரிகைப் புடவைகள். இப்பொழுது
ஹேண்ட்லூம் ஹவுஸில் வந்து குவிந்துள்ளன.
உங்கள் அழகை
சிறப்பாக எடுத்துக்காட்ட
காஞ்சிபுரம், பெனாரஸ், ராஜஸ்தான்
புடவைகள்.
ஹேண்ட்லூம் ஹவுஸ்
9, ரத்தன் பஜார், சென்னை-600003

நர்ஸ், தனியறையில் சியாமளாவைப் பரிசோதித்து விட்டு வந்து அந்தச் செய்தியை ஊர்ஜிதப்படுத்தியவுடனே டாக்டர் சிவபாதத்துக்கு மனம் விழுந்து போயிற்று. நடைப் பிணம் போல் முகம் வெளுத்துப் போய் ஒல்லியாக, எதிரில் போட்டிருந்த நாற்காலியைப் பிடித்துக் கொண்டு நின்ற சியாமளாவைப் பார்த்தார்.

பேதை முகம். சோகச் சித்திரம் போல் நிற்கும் அந்தப் பெண்ணிடம் என்ன பேசுவதென்று அவருக்கு விளங்கவில்லை. வாழ்க்கை தலைகீழாக மாறிப் போய் விட்டதை அவர் நிறையப் பார்த்துச் சலித்து விட்டார். இன்பங்களை லயம் தவறி, நிதானம் கெட்டு, முறை பிசகி எல்லாம் ஓடி ஓடி அனுபவித்து விட்டு அவஸ்தைப் படுபவர்களை அவர் தொழிலில் சந்தித் திருக்கிறார் ஏராளமாக.

தொட்டால் நொறுங்கி விடும் கண்ணாடிச் சிற்பம் போல் நிற்கும் சியாமளாவின் அழகில் மாசுமறுவற்று இதயத்தைத் தொடும் ஏதோ ஒரு மின்சாரம் தெரிந்தது. இவள் கூடவா? யாரை நொந்து கொள்வது?

'வெளியே, வாயில் துண்டைப் புதைத்துக் கொண்டு கண்கள் சிவந்து கண்ணீர்க் குளமாக சாம்பமூர்த்தி உட்கார்ந்திருப்பான்! மூன்றையும் பெண்ணாகப் பெற்று மடியில் நெருப்பைக் கட்டியவன் போல் தவிக்கும் அவனிடம் என்ன சொல்வது?


'ஹைபர்க்ரோமிக் அனிமியா இருப்பதால் டி அண்ட் ஸி செய்ய முடியாது' என்று சொல்லி விடுவது சுலபம். அதன் பொருள் சியாமளா நிர்ப்பந்தமாகத் தாயாக வேண்டும் என்று கட்டாயப் படுத்துவதுதான். அதை வாய் விட்டுச் சொல்வதா? நானா... சாம்பமூர்த்தியிடமா?

சாம்பமூர்த்தி எவ்வளவு மானஸ்தன்! பந்தர் தெரு ஸ்டேஷனரி ஒன்றில் நூற்றைம்பது ரூபாய்ச் சம்பளத்தில் தையப்ப முதலித் தெருவில் அறையென்ற பொந்துச் சிறையில் குடும்பம் நடத்தி வருகிறான் பத்து வருஷங்களாக. பச்சையப்பாவில் ஒன்றாகப் படித்தோம் என்ற உரிமையைக் கொண்டாடிக் கொண்டு ஒரு நாள்கூடத் தலைவலி என்று அவன் மருந்துக்கு வரவில்லை; கைமாற்றுக்கு வரவில்லை. கிரகப் பிரவேசத்துக்கு வந்தவன், சாப்பாட்டுக்குக் கூட நிற்கவே யில்லை.

காரில் சிவபாதம் போகும் போது பார்த்தால் கூட ஒதுங்கி நின்றுவிடுவான். அவராக நிறுத்திக் குசலம் விசாரித்தால் கூட, புன்னகையோடு நாலு வார்த்தை பேசிவிட்டுக் கைகூப்பி விடுவான்.

வறுமை. அது வெட்டிய அதலபாதாளத்தில் சாம்பமூர்த்தியின் டிபன் கேரியரில் ஒன்றாகத் தான் சாப்பிட்டதையும், கிரவுண்டில் ஆறு மணி வரை 'புல்அப்ஸ்' எடுத்துவிட்டு, எம்.ஐ.ஏ. மைதானத்தில் ஏழரையாகும் வரை கதை பேசியதையும், ஒருவனுக்காக உயிரைக் கொடுக்கும் தோழமையையும் சாம்பமூர்த்தி தன்மானத்தோடு மறந்து போனது அவருக்கு அடிக்கடி நினைவு வரும். மனம் ஓர் இழப்பை உறுத்தலோடு உணர்த்தும்.

செல்வம் வந்தது. புதிய உறவுகள் வந்தன. ஆனால் சாம்பமூர்த்தி போன்ற



ஒரு நண்பன் இல்லை. மனைவியும் போய் விட்டதால் டாக்டர் சிவபாதம் அனுபவித்த தனிமைக்கு மாற்றுக மனமொத்த நேசம் கிட்டவில்லை. அப்போதெல்லாம் சாம்பமூர்த்தியின் எட்ட நின்று பேசும் தன்மானத்தைக் கண்டு மனம் பொருமும்.

'அடேய் சாம்பு!' என்று அடிமனத்தில் ஒரு மெல்லிய அலறல் கிளம்பும். ஆனல் அவனது ஒதுக்கத்திற்கு ஒரு மரியாதை கொடுத்து விலகியே நின்று விடுவார் சிவபாதம்.

இன்றுதான் சாம்பமூர்த்தி, டாக்டர் சிவபாதத்தை நாடி வந்திருக்கிறுர்.... ஆனல், இருபத்தைந்து வருஷம் இடைவெளி விட்டு தான் அவனுக்கு அளிக்கப்போகும் தலைக் குனிவு எப்போர்ப் பட்டது என்று நினைக்கும்போது அவருக்கு நெஞ்சை அடைத்தது.

''உட்காரம்மா!'' என்று சியாமளா விடம் சொன்னுர். கண் இரப்பைகளை நீக்கி, மீண்டும் பரிசோதித்தார். பி.பி. எடுத்துப் பார்த்தார். அந்த முகத்தில் செல்வக் களை படிந்தால்,அது எவ்வளவு ஜீவனேடு சுடர் விடும் என்று நினைக்கும் போது, தனக்கு ஒரு பெண்ணில்லை என்ற குறை உறுத்திற்று.

ஒரு வேளை பெண் இருந்திருந்தால், அவளும் இப்படித்தான் இன்னெரு டாக்டரிடம் ஓடியிருப்பாளோ!

''நீ வருத்தப் படாமெ, மனசைத் தைரியமா வச்சுட்டு எங்கிட்டே சில உண்மைகளைச் சொல்லணும்'' என்று ஆதரவாக ஆரம்பித்தார்.

அவள் கண்களிலிருந்து மாலை மாலையாக இடைவிடாது நீர் உருண்டு கொண்டிருந்தது.



பரிகாரம்

விவேகி

''அவன் யாராயிருந்தாலும் எனக்குச் சொல்லம்மா! நான் உங்கள் கல்யாணத்தை, அவன் கழுத்திலே துண்டைப் போட்டு முறுக்கி இழுத்துட்டு வந்து நடத்தி வைக்கிறேன்.''

அவள் மெதுவாக விம்மினாள்.

''டி அண்ட் ஸி செய்ய முடியாது. நீ ரொம்ப அனீமிக்கா இருக்கிறே! யூ ஹேவ் டு அண்ட் மஸ்ட் டு கேரி தி சைல்ட்...''

சியாமளா அவரை நிமிர்ந்து பார்க்கவே கூசிக் கொண்டு மேஜை விளிம்பை விரலால் தடவிக்கொண்டே சொன்னாள்:

''அவர் பெயர் ப்ராஸ்கர். அவர் பிரண்ட்சுகள்ளாம் அவரைப் பாலுன்னு கூப்பிடுவாங்க.''

டாக்டர் சிவபாதத்தின் புருவம் லேசாக நெரிந்தது.

''ஸ்டான்லி ஸ்டாப்பிங்கிலே நான் வேலைக்குப் போக பஸ்ஸிற்கு நிக்கறப்ப முதல்லே பார்த்தேன். ஒரு செவப்பு ஹெரால்ட் வச்சிருக்கார், டாக்டர்! எந்தக் கெட்ட எண்ணத்தோடும் அவரோட நான் பழக ஆரம்பிக்கலே. ஒரு நாள் மத்தியானம் எனக்குத் தெரிந்த சாப்பாட்டுக்கார ஆயா மேலே சைக்கிள் ரிக்ஷா ஏறிட்டுது. அப்போ, அவர் கார்லே வந்தார். அதை நிறுத்தி ஆயாவை ஆஸ்பத்திரிக்கு ஏத்திக்கிட்டுப் போனேன். அவர் என்னை ரொம்ப 'அட்மயர்' பண்ணினார். ரெண்டு வாரம் அடிக்கடி என்னைப் பார்த்துச் சிரிச்சிட்டுப் போவார். நல்லவர்னு நெனச்சேன். பழக்கம் வளர்ந்தது. நாலைந்து தடவை லிப்ட் கொடுத்திருக்கார். அப்புறமா... அப்புறமா ஒரு நாள் சாந்தோமுக்குப் போவோமான்னு கூப்பிட்டார். நான் மறுத்திட்டேன். ரொம்ப கட்டுப் பெட்டியா இருக்கியே என்றார். கல்யாணம் பண்ணிக்கறேன்னார். என்னென்னவோ சொன்னார். பத்து நாள் கழிச்சு அவர் மறுபடியும் கூப்பிட்டப்போ நம்மை மீறி என்ன நடந்துடும்னு நான் போனேன். டாக்டர்... அது... அது... என்னை மீறி, வலுக்கட்டாயமா நடந்தது டாக்டர்... அப்புறமா அவரை நான் பார்க்கவே இல்லை.''



''அன்பே! நான் உன்னைக் காதலிக்கிறேன்! காதலிக்கிறேன்! காதலிக்கிறேன்!''

''ஏலக் கடையிலே நீங்க வேலை பார்த்தா அதுக்காக இப்படித்தான் எதையும் மூணு தரம் சொல்லணுமா?''

டாக்டர் சிவபாதம் ஆழ்ந்த பெருமூச்செறிந்தார். அவர் முகம் சிந்தனை வசப்பட்டிருந்தது.

''சிவப்பு ஹெரால்டா? நம்பர் தெரியுமா?''

''டி.ஓ.டி. 7373 டாக்டர்.''

''சுருட்டைத் தலை. சிரிச்ச முகம். செவப்பா, அகலமான நெற்றியோட இருப்பானே, அந்தப் பையனா?''

சியாமளாவின் முகம் பிரகாசம் அடைந்தது:

''ஆமாம், டாக்டர்! உங்களுக்கு அவரைத் தெரியுமா?''

''தெரியும்மா... அவன் முரடனாச்சே! நெறய விஸ்கி குடிப்பான். வாராவாரம் ரேசுக்குப் போவான். மனுஷன்னா, பெண்கள்னா மரியாதை இல்லாதவன்.''

''டாக்டர்!'' என்று அவள், சேலைத் தலைப்பை வாயில் புதைத்துக் கொண்டு விம்மினாள். சியாமளாவின் தலைவிதியை நினைத்து டாக்டர் சிவபாதம் உள்ளுக்குள் மறுகினார். சாம்பமூர்த்தியின் குடும்பம் சிதைந்து சீரழிவிற்குச் சமீபமாகப் போய் விடுமோ என்று அவரது நெஞ்சு நடுங்கிற்று.

ஒரு பெருமூச்சு விட்டு விட்டு டெலிபோனை எடுத்து ஒரு நம்பரை டயல் செய்தார்.

யாரோ பேசினார்கள்.

''பாஸ்கர்?'' என்றார்.

சியாமளாவின் மனம் துடித்தது. அவரா பேசுகிறார்? ஆவல் அலை பாய்ந்தது.

டெலிபோனின் வாயை மூடிவிட்டு, ''நீ உள்ளே போய் உட்காரும்மா! அந்தப் பயல் வரும்போது இங்கே இருக்கவேண்டாம்'' என்று சொன்னார். சியாமளா எழுந்து உள்ளே போனாள்.

சரியாகக் கால் மணி நேரம் கழித்து வெளியே மேல்துண்டால் வாயைப் பொத்திக் கொண்டு உட்கார்ந்திருக்கும் சாம்பமூர்த்தியின் உருவம் ஒரு கணம் தெரிந்து மறைய, சுழல் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தான் பாலபாஸ்கர்.

''ரொம்ப ஸல்டிரியா இருக்கே இன்னிக்கு!''என்று எதிரில் உட்கார்ந்தான்.

''எஸ், பாஸ்கர்... இன்னிக்கு ரொம்ப புழுக்க மான நாள்தான்'' என்று புழுக்கத்திற்கு ஒரு விசேஷ மான கசந்த அழுத்தத்தைக் கொடுத்தார்.

அவன், அவரைக் கேள்விக் குறியோடு நிமிர்ந்து பார்த் தான்.

''இன்னிக்கு ஒரு விசித்திர மான கேஸ்! வெளியே உட்கார்ந்திருக்காரே அவரு டைய பெண்ணை யாரோ ... உல்லாசப் பேர்வழி ... ஏமாக்கிட்டான். அவள் தான் மூத்த பெண். அவ ளுக்கே தெரியாமெ அவள் நான்கு மாதம் தாயாகி விட்டாள். ஷி ஈஸ் அனீமிக். வேற எந்த விபரீதம் நடந்தாலும் அவள் சாக வேண்டியதுதான். விட்டுட் டாலும் அவமானத்தி னாலே அவள் தற்கொலை பண்ணிட்டுச் சாவாள். பையன் யாருன்னு அடையா ளம் காட்ட முடியும்னு சொல்ரு. போலீஸ், கோர்ட் இதெல்லாம் பெண் ணின் மானத்தையும் வாழ்க்கையையும் மீட்டுத் தர்றதுக்கு நாளாகலாம். இல்லாட்டி, முடியாமெ கூடப் போயிட லாம்.''

அவர்,பாஸ்கரைக் கண்களால் அளந்து கொண்டே நிறுத்தினார். அவன் முகம் படிப்படியாக மாறிக்கொண்டே வந்து, தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான அடையாளம் போல் சிவந்தது.

''அதனாலே நான் ஒரு முடிவு பண்ணி யிருக்கேன். சியாமளா...'' என்று உள்ளே திரும்பிக் கூப்பிட்டார் டாக்டர் சிவபாதம்.

சியாமளா நிதானமாக நடந்து வந்தாள்.

''இவள்தான் அந்தப் பெண். ஸீ, ஹௌ இன்னொஸன்ட் ஷி ஈஸ்... ஹௌ டிவைன்லி இன்னொஸன்ட்... இந்த மாதிரி ஒரு பெண்ணை வாழ விடணுமா, இல்லையா? நீயே சொல்லு.''

''ஊம்...ஊம்''என்று மென்று விழுங் கியவாறு பரபரப்போடு தலையை வேண்டா வெறுப்பாக அசைத்தான் பாஸ்கர்.



''நம்ம பசங்க சுத்த சோம்பேறியா இருந் தாங்க... 'எறும்புகளைப் பாருங்கடா, எத்தனை சுறுசுறுப்பா இருக் கு'ன்னு சொல்லி வச்சேன்.''

''இப்போ சுறுசுறுப்பா ஆயிட்டாங்களா?''

''அதானே இல்லை!... நாள் பூரா எறும்புகளைப் பார்த்துக் கிட்டே சோம் பேறித்தனமா உக்காந் திருக்காங்க!''

''நானே இவளை ரெண்டாவது கல்யாணம் பண்ணிக்கலாம்னு பார்க்க றேன். யாரோ செஞ்ச கொடுமைக்கு யாருமே பரிகாரம் பண்ணலேன்னு உயிர்கள் புளியம்பூக்கள் மாதிரி உதிர்ந்து வீணு யிடும்...''

''டாக்டர்'' என்று திக் பிரமையோடு சியாமளா கூவிய அதே நேரத்தில் பாஸ்கரும் அதிர்ச்சியோடு ''அப்பா'' என்று கூவினன்.

சியாமளா அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி அடைந்து இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''என்ன சொல்றே பாஸ் கர்...ஆம் ஐ நாட் கரெக்ட்? நான் தீர்மானமா முடிவு பண்ணிட்டேன்.''

''அப்பா... அப்பா'' என்று சற்று நேரத்துக்கு முன்னிருந்த உதாசீனமும் அலட்சியமும் போன இடம் தெரியாமல் கதறிக் கொண்டே அவரது கைகளைப் பிடித்துக் கொண்டு அழுதான், டாக்டர் சிவபாதத்தின் மகன் பாஸ்கர்.

''என் தவறை ஒத்துக்கறேம்பா...... சியாமளாவை நானே கல்யாணம் பண்ணிக்கறேம்பா'' என்று அவன் மனம் கரைந்து சொல்லும்போது, டாக்டரின் முகம் நிம்மதியினல் பிரகாசித்தது.


'சாம்பசிவம்...இருபத்தைந்து வருஷம் கழித்து என்னிடம் ஓர் உதவி கோரி வந்திருக்கிருயே, உன்னை ஏமாற்ற மாட் டேன்! உன் வீட்டு விளக்கை என் வீட்டில் ஏற்றி வைக்கிறேன்' என்று அவர் மனம் முனகிற்று.

''நான், உன்னைக் கட்டாயப்படுத் தலே பாஸ்கர்! தலைக்கு வந்த சொமை என நெனச்சு நீ இவளை இப்போ ஏத்துக் கிட்டு, அப்புறமா ஒதறித் தள்ளிடறதா இருந்தால் நீ கல்யாணம் பண்ணிக்க வேண்டாம்!''—'நீ' என்ற வார்த் தையை அவர் விசேஷமாக உச்சரித்தார்.

''அப்பா...''என்று அவன் உதட்டைக் கடித்துக் கொண்டு கண்ணீர் விட்டான். சியாமளா முகம் மலர்ந்து விகசிக்க, தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.



நின்னைச் சரணடைந்தேன்!
பேருக்கும் புகழுக்கும் பேராசைப் படவில்லை.. ஐயா!
தமிழக அரசின் சாதனைகள்.
• பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம்
• சைக்கிள் திட்டம்.
காணக் கண் கோடி வேண்டும்...!


யல் மேடையில்
சக்
சேரி!
அலைபாயுதே....
என் மனம்
அலைபாயுதே..!
தி.மு.க.
இந்திரா
காங்கிரஸ்
எனக்கும் உனக்கும்..
இசைந்த பொருத்தம்...
என்ன பொருத்தமோ...?


சங்கீத சபா
கச்சேரி எப்படி
இருந்தது?
எனக்கு என்னவோ
ரேடியோவிலே
கேட்கத்தான் பிடிக்-
கிறது.
ஏன்?
'போரடிச்சா'
உடனே
நிறுத்திடலாம்!

தீட்சிதர் சுப்ரமணியத்தைப் பற்றிக் கிராமத்தில் எத்தனையோ விமரிசனங்கள். அந்த ஒழுக்க சீலர், தன் மனைவியால் 'கல்லுளி மாங்காய்' என்றும், 'பரப் பிரும்மம்' என்றும்தான் கோபக் கொந்தளிப்புகளில் விமரிசிக்கப்பட்டார். கடும் ஆசார அனுஷ்டானங்களில் ஈடுபட்டு, தன்னைத் தனது பூஜை அறையிலேயே சிறைப்படுத்திக் கொண்டவர்.

இரண்டு குழந்தைகளுக்குப் பிறகு, கடும் பிரம்மசரியத்தை அனுசரித்ததால், அவர் முகத்தில் தனிக் களையொன்று குடிகொண்டிருந்தது. ஊரிலுள்ள கோயிலுக்குப் போவதை அவர் என்றோ நிறுத்திவிட்டிருந்தார். 'அங்குள்ள குருக்கள் சரியாக சமஸ்கிருத மொழியைப் பாடம் செய்யவில்லை' என்ற கோபம். தனது வீட்டையே கோயிலாக மாற்றிக் கொண்டு, வெளியே வந்து மாறிக் கொண்டு வரும் சமூகத்தைப் பார்க்க மாட்டேன் என்ற வைராக்கியம். ஏனெனில் சமூகத்தின் மீதும் அவருக்குக் கோபம்.

பிழைப்புக்காக வைதீகம் நடத்த அவர் விரும்பவில்லை. ஆத்ம திருப்திக்காகத்தான் அதைச் செய்து கொண்டிருந்தார். ஆனால் அதையும் நிறுத்தி விட்டார். சடங்குகளின் மீதும் அவருக்குக் கோபம்.

'உயிருடன் இருக்கும் மகனை, இறந்தவனைக் கருதி, காவிரியில் தர்ப்பணம் பண்ணி, எள்ளையும் தண்ணீரையும் இறைத்து விட்டுக் கடமை தீர்ந்து விட்டது' என்று தீர்மானம் பண்ணிக் கொண்டு, உணர்ச்சிகளை உள்ளே அடக்கி, தனது வயிற்றையும் அடக்கி வாழக் கற்றுக் கொண்டார்.


பிள்ளையின் மீது கோபம்! அவன் செய்த மாபெரும் குற்றம், அவன் ஒரு கிறிஸ்துவப் பெண்ணை மணந்து கொண்டான் என்பதுதான்.

இந்த அதிர்ச்சியைத் தாங்காமல், கூனிக் குறுகியே போனார். ஏமாற்றம் கோபமாக மாறி, வெறியாகி, பிறகு 'என் பிள்ளை செத்து விட்டான் போ' என்று சொல்லித் தர்ப்பணம் பண்ணி விட்டு வந்த பிறகுதான் அவருடைய தாபம் தணிந்தது.

''அடியே காமு! கால் அலம்பத் தண்ணி கொண்டு வா. அப்படியே நீயும் குளி. என் மகன் செத்து விட்டான்! உனக்கும் எனக்கும் இனி, முனிசிபாலிடிக்காரன்தான் கொள்ளி போட வேண்டும்....போ'' என்று இரைந்து சொல்லிவிட்டு, பூஜை அறையிலே போய்க் கதவைச் சாத்திக் கொண்டு, யாருக்கும் தெரியாமல் அழுத பிறகுதான் அவருக்கு நிம்மதி ஏற்பட்டது.

இது நடந்து பன்னிரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன.

காமு ஓர் அப்பாவி. கணவர் சொன்னாரே என்று குளித்தும் விட்டாள். ஆனால் வயிற்றில் தெரிந்த வடுக்கள்...



'அடிப் பாவி! சிவராமன் உன் மகனல்லவா? உனக்கு என்ன துணிச்சல், அவன் இறந்து விட்டான் என்று சொல்வதற்கு? நீ காய்ச்சலில்

படுத்துக் கொண்ட போது எல்லாம் தன் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டு, குறிப்பறிந்து பணிவிடை செய்வானே! அவனை எப்படி நீ புறக்கணித்தாய்?' என்று மனச்சாட்சி கேட்கும் போதெல்லாம், 'ஓ'வென்று இரைந்து, லலிதா சகஸ்ரநாமம் சொல்லித் துக்கத்ததையே மறைக்கப் பார்ப்பாள். கணவரின் வைராக்கியத்தை உடைக்க முடியாமல் தோல்வி கண்டு, துக்கத்தைத் தாங்கிக் கொள்ளத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டாலும், அவ்வப்போது சர்ப்பம் போன்று சீறிவரும் பாச உணர்ச்சிகள் சதா அவளைச் சங்கடப்படுத்திக் கொண்டே யிருந்தன.

'சிவராமனுக்கு ஏன் கடவுள் சிறந்த அறிவைக் கொடுத்தார்?' என்று குமுறுவார், அந்தத் தாய். மூளை இருந்ததனல் தானே உபகாரச் சம்பளத்தில் ஜெர்மனி சென்று அவன் படிக்க நேரிட்டது? அங்கு சென்றதால்தானே, அந்த வேற்று மதப் பெண்ணைக் கட்டிக் கொண்டான்?

'சே! அவளைச் சொல்லி என்ன பயன்? சிவராமனுக்கு எங்கே போயிற்று புத்தி? உடலைக் கண்டு மயங்கி விட்டான்' என்று தன் மகனைத் தப்புக் கணக்குப் போட்டாள் காமு.



சிவராமன் உடலின் பகட்டிற்காக எலிசபெத்தைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லை. அவளது அறிவின் மேல் ஏற்பட்ட மயக்கத்திற்கு அடிமையாகித் தான் கல்யாணம் செய்து கொண்டான். மேலும் இருவரும் மதம் மாறத் தயாராக இல்லை. ஆதலால் மதச் சடங்குகளை அனுசரித்து அவர்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை. 'ரிஜிஸ்தர்' கல்யாணமும் பண்ணிக் கொள்ளவில்லை. ஆனல், சம்பிரதாயங்களும், சடங்குகளும் சாதிக்காத உன்னத தாம்பத்திய உறவை அவர்கள் உள்ளச் சேர்க்கையும், ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட சக்தியும், பிறர் பொறுமைப் படக்கூடிய தம்பதியாக இருந்து வாழச் செய்தன. சிவராமன்மேல் ஏற்பட்ட காதல் உணர்ச்சியில் குறுகிய மதக் கட்டுப்பாடுகள் தலையிட அவள் சம்மதிக்காததால், அவள் பெற்ருேர் அவளை ஒதுக்கி வைத்து விட்டனர். 'கிராமத்துக்குச் சென்று தன் கணவனின் தந்தை, தாயைப் பார்க்க வேண்டும்; அவர்களின் கோபத்தைத் தணிக்க வேண்டும்; சாகும் முன்பாக எப்படியாவது, தனது கணவனை அவன் பெற்ருேருடன் சேர்த்து வைத்துவிட வேண்டும்' என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்தாள் எலிசபெத்.

''ராம்! என்னல் உங்களுக்கு எவ்வளவு துன்பம்? உங்கள் பெற்ருேர் உங்களுக்கு ஒரு கடிதம்கூடப் போடுவதில்லை. நீங்கள் போடும் கடிதங்களையும் திருப்பி விடுகிருர்கள். எனக்காகத்தானே இவ்வளவு துக்கங்களையும் நீங்களே தாங்கிக் கொள்கிறீர்கள்?'' என்று அவள் கேட்கும் போதெல்லாம் சிவராமன் சிலிர்த்துப் போய் விடுவான்.

''நீ காட்டும் அன்பின் அணைப்பிலேதான் என் துக்கங்களை மறந்துள்ளேன். ஆனல், என் பெற்ருேரை மறக்கவில்லை. ஆனல் என் துக்கம், நம்மிடையே நிலவும் அமைதியான வாழ்வையோ, உன் இன்பத்தையோ கெடுக்க நான் இடம் தரமாட்டேன். நான் துக்கப்பட்டுக் கொண்டே இருந்தால், அது என் குற்ற உணர்வைத்தான் தமுக்கு அடிக்கும்.

''காலம் மாறும் என்று நான் நம்புகிறேன். அப்படி நம்புவதுதான் நாகரிகமும் கூட. அதுவரை தாயின் அன்பு, தந்தையின் பாசம், மனைவியின் காதல் அனைத்தும் உன் ஒருத்தியின் துணையிலேயே நான் அனுபவிக்கிறேன்..'' என்று சொல்லி, அவளை இழுத்து அணைத்துக் கொள்வான். சிவராமனின் அந்தச் சுகமும் நீடிக்கவில்லை. காரை எடுத்துக் கொண்டு, சாமான்கள் வாங்கி வரச் சென்ற எலிசபெத், திரும்பிவரவேயில்லை. காலன், லாரி உருவத்தில் வந்து, அவளை வாரிக் கொண்டு போனான். அவள் நினைவாக அவள் விட்டுச் சென்ற 'சங்கர்' ஒருவன்தான், அவர்கள் தம்பதியாக வாழ்ந்தனர் என்பதற்கு அத்தாட்சி. வாழ்க்கையே இருண்டு போய்விட்டது சிவராமனுக்கு. நாட்கள், வாரங்கள், மாதங்கள், வருடங்கள் எல்லாம் அவனைச் சித்திரவதை செய்துகொண்டு நகர்ந்தன.

இந்தப் பத்து வருடமாக எப்படியோ சங்கரை வளர்த்து விட்டான். இனி எப்படியோ? வர வர உடம்பு சரியாகவே இல்லை. டாக்டரை அணுகிய போது, அவனுக்கு ரத்தத்தில் புற்று நோய் ஏற்பட்டிருப்பது தெரிய வந்தது.

தன்னைவிட தன் மகனின் எதிர்காலத்தையே நினைத்து நடுநடுங்கிப் போனான் சிவராமன்.

ஒரு நாள் தன் மகனிடமே மனம்விட்டுப் பேசினான்: ''சங்கர், எனக்கு உடம்பு சரியில்லை. நான் ஒருவேளை இறக்கவும் நேரிடலாம். நீ என்ன செய்யப் போகிறாய்?''

''எனக்குப் பயமாக இருக்கிறது'' என்று அவனைக் கட்டிக் கொண்டான் சங்கர்.

''உனது பாட்டியும் தாத்தாவும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் என்னையே ஏற்றுக் கொள்ளவில்லை. உன்னை ஏற்றுக் கொள்வார்கள் என்று எனக்கு நம்பிக்கையில்லை'' என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டான்.

''ஏம்ப்பா?'' என்றான் சங்கர்.

நடந்த கதைகளைச் சொன்னான்: ''சங்கரா, நான் ஒரு அநாதையடா. உனது அத்தை தில்லியில் இருக்கிறாள். அவளை உனக்கு கார்டியனாக நியமித்திருக்கிறேன். இருந்தாலும் கிராமத்தில் உள்ள என் பெற்றோர் உன்னை அழைக்க வந்தால், போவாயா? அப்படி அவர்கள் அழைத்து, நீ போய், உன் தாத்தா, பாட்டி இரண்டு பேர் அன்பையும் பெற்றால்தான் எனக்கு நிம்மதி'' என்று கண் கலங்கக் கேட்டான். சங்கர் விசித்து விசித்து அழுதானே தவிர, பதில் ஏதும் சொல்லவில்லை

அவன் சுயமரியாதையை விட்டுக் கொடுத்து, பத்து வருடங்களுக்குப் பிறகு அவன் தாய்க்குக் கடிதம் போட்டான்:

'அம்மாவுக்கு,

சிவராமன் அநேக நமஸ்காரம். உங்களைத் தவிக்க விட்டதற்குத் தண்டனையாகக் கடவுள் என் ரத்தத்தில் கான்ஸரைக் கலந்துள்ளார். டாக்டர்கள் கைவிட்டு விட்டனர். என்னைப் போன்று சங்கரும் அநாதையாக ஆகிவிடுவான். நான் போன பிறகு நீ அவனை எடுத்து வளர்க்க வேண்டும் என்பதற்காக நான் இதை எழுதவில்லை. அந்தப் பாக்கியம் எனக்கே இல்லை.

சாகும் முன் உன்னைப் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன். அப்பாவை என்னை மன்னிக்கச் சொல்லவும். நீ வருவாயா?

இப்படிக்கு,

உனது சிவராமன்.'



''உன் டிரஸ் உனக்கு ரொம்பப் பொருத்தமாக இருக்கிறது!'' என்றாள் என் தோழி. எனக்குப் பெருமையாக இருந்தது: ''ஆமாம், நீ எங்கே போகிறாய்?'' என்றேன் நான். ''கண் பார்வை சரியாக இல்லை. கண் டாக்டரிடம் போய்க் கொண்டிருக்கிறேன்'' என்றாள் அவள். இப்பொழுதெல்லாம் அந்த டிரஸ்ஸைப் பார்க்கவே பிடிக்கவில்லை எனக்கு.

கடிதத்தைப் படித்தவுடன் 'ஓ'வென்று அலறி விட்டாள் காமு. கணவனிடம் போய் உடனே சென்னைக்குச் சென்று பார்க்க வேண்டும் என்று அழுதாள்.

தீட்சிதர் மனக்கலக்கத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் நிதானமாக, "யாரைப் பற்றிச் சொல்கிறாய்? பைத்தியமே, என் மகன்தான் என்றோ செத்துவிட்டானே! நான் தர்ப்பணமும் பண்ணி விட்டேன். உனக்கு மறந்து விட்டதா?" என்றார்.

"நீங்களுமாச்சு, உங்கள் தர்ப்பணமுமாச்சு" என்று சொல்லிவிட்டு, ஓடிப் பக்கத்துத் தெருவில் குடியிருந்த அவள் தம்பியை அழைத்துக் கொண்டு, சென்னை நோக்கிச் சென்றாள் காமு.

காமுவின் வருகைக்காகக் காலன் காத்திருக்கவில்லை. சிவராமன் இறந்ததோடு அல்லாமல் எரிந்தும் விட்டான். திறந்து கிடந்த வீடுதான் வரவேற்பளித்தது. மூலையில் சுருண்டு விசித்து விசித்து அழுது கொண்டிருந்த சிறுவன்தான் சங்கரோ! அப்படியே சிவராமனை உரித்து வைத்துள்ளான். சிறுவனைப் பார்த்த மாத்திரத்தில் காமுவிற்குச் சிவராமன் இல்லாமை மறந்து விட்டது.

வலுக் கட்டாயமாகச் சங்கரை அழைத்துக் கொண்டு ஊர் வந்து சேர்ந்தாள் காமு.

வீட்டின் படியேறும் முன் "பாட்டி" என்று சங்கர் கூப்பிட்டான்.

"என்னடா குழந்தை?"

"இதுதான் உங்கள் வீடா பாட்டி?"

"ஆமாண்டா. இனிமேல் இது உன்னுடையது."

"இல்லை, பாட்டி! தாத்தா சம்மதித்தாரா? அப்பா எனக்கு எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறார்.

"பாட்டி, தாத்தாவுக்கு என்னைப் பிடிக்காது. நான் உள்ளே வரவில்லை. எனக்குப் பயமாக இருக்கிறது. முதலில் நீங்கள் உள்ளே போய், தாத்தாவின் சம்மதம் பெற்று வாருங்கள்" என்றான் குழந்தை.

காமுவிற்குப் 'பக்'கென்றது. 'சிவராமனுக்கு உள்ள பிடிவாதம் அப்படியே உள்ளதே என்று நினைத்துக் கொண்டு வீட்டினுள்ளே போய்க் கணவரிடம் மன்றாடினாள். தீட்சிதர் அசையவில்லை.

"காமு, என் மகன் போய்ப் பன்னிரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. யாரையோ கட்டிக்கொண்டு, யாரையோ பெற்று, அந்தச் சதைப் பிண்டத்துக்குத் தாத்தாவாக நான் இருக்க முடியாது. நீ வேண்டுமானால் பாட்டியாக இரு" என்று சொல்லிவிட்டுக் கொல்லை வழியே காவிரிக்குக் குளிக்கப் போய் விட்டார்.

வாசலில் சங்கர் படுத்துக் கொண்டிருக்கிறான் என்பதற்காகத் தீட்சிதர் வாசல் பக்கமாகப் போகாமல் கொல்லை வழியாகவே போய் வந்தார்.

பாட்டி கொண்டு வந்த பாலைக் குடிக்க மறுத்து, குழந்தை வாசலிலேயே பட்டினி கிடக்கிறான் என்பதைக் காமு சொல்லக் கேட்டார். வெளியே ஒன்றும் சொல்லாவிட்டாலும், குழந்தையின் பிடிவாதத்தில் தன்னையே கண்டார். அதில் ஓர் அற்ப மகிழ்ச்சி. அவனைப் பார்க்க வேண்டும் போல் உள்ளது. ஆனால், அதை வெளியில் சொல்லக் கூச்சம்.

விடியற்காலையில் சங்கர் இருப்பதையும் மறந்து, வாசற் கதவைத் திறந்து கொண்டு, 'ஜெய ஜெய சங்கர' என்று சொல்லிக் கொண்டு வெளியே போனார்.

பட்டினி மயக்கத்தில் திண்ணையில் படுத்துக் கொண்டிருந்த சங்கர் விழித்து, "தாத்தா, என்னைக் கூப்பிட்டீர்களா?" என்றான்.

தீட்சிதர் முகத்தைத் திருப்பிக் கொண்டார். "உன்னை இல்லை. நான் ஆதிசங்கரரைக் கூப்பிட்டேன்" என்றார்.



கணவன்: எனக்கும் என் மனைவிக்கும் எவ்வளவு வித்தியாசம் இருந்தாலும் கடைசியிலே அவள், நான் சொல்லுகிற மாதிரிதான் செய்கிற வழக்கம்!

நண்பன்: அப்படியா! அது என்ன சாமர்த்தியம்?

கண: 'சரி'ன்னு சொல்லி விடுவேன்!



என்றும் போலவே ஒரு நாள்... இருப்பினும். வலியையும், அசௌகரியத்தையும், நிம்மதியின்மையையும் போக்கும் வழி சொல்லக்கூடிய தோழி ஒருத்தி கிடைக்கமாட்டாளா, அது எந்த நாள் என்பதை மறக்க உதவ மாட்டாளா, என்று நீங்கள் ஏங்கும் நாள் அது—அப்படிப் பட்ட நாட்களில் மைக்ரோஃபைன்ட் ஆஸ்ப்ரோ வை நாடுங்கள்—சில வினடிகளில் நிம்மதி பெற!

மைக்ரோஃபைன் செய்யப்பட்டிருப்பதால், ஆஸ்ப்ரோ அதி விரைவாகச் செயல்புரிகிறது. விரைவில் கிரகிக்கப்பட்டு. நீடித்த நிவாரணத்தை அதிவேகமாக அளிப்பதற்கென, ஆஸ்ப்ரோ·விலுள்ள வலிநிவாரணச் சேர்க்கைப் பொருள்கள் 30 மடங்கு நுணுக்கமாக்கப் பட்டுள்ளன. மைக்ரோஃபைன்ட் ஆஸ்ப்ரோ , இப்பொழுது கிடைக்கும் அதிநவீனமான வலி நிவாரணியாகும். கையடக்கமான ரேக்குகளில் கிடைக்கிறது.



மைக்ரோஃபைன்ட் ஆஸ்ப்ரோ
அதிவேகமாக வலியை வெளியே இழுத்து
அசௌகரியத்தைப் போக்குகிறது.

ஆஸ்ப்ரோ இருந்தாலே—
ஆனந்தப்புன்னகைதான்!

நிகோலஸ் தயாரிப்பு

A.G.41 TM (R)

தீட்சிதர் வேகமாகக் காவிரிக்குச் சென்று விட்டார். குளிக்கும் போதெல்லாம் 'ஆதிசங்கரனுக்கும், இந்த வீதி சங்கரனுக்கும் என்ன வித்தியாசம்?...... என்ன வித்தியாசம்?' என்று அவர் நெஞ்சம் கேட்டுக் கொண்டேயிருந்தது.

அப்பொழுதுதான் அவருக்குப் புரிந்தது. பரமன் படைத்த பொருள்கள் எல்லாம் அவனது உருவே. அதை வெறுப்பது விவேகமாகாது என்றும் எண்ணினுர்.

மயங்கிக் கிடந்த குழந்தையை உள்ளே கூட்டிக் கொண்டு போய், என் பாவங்களுக்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்து வீட்டிற்கு ஓடோடி வந்தார்.

வீடு வந்த போது காமு, அழுதுகொண்டிருந்தாள். ''நீங்கள் விடிகாலையில் குளிக்கப் போனவுடன், இந்தத் தெருவிலே எப்போதும் சுற்றிக் கொண்டிருக்கும் 'வெறி நாய்' சங்கரனைக் கடித்துக் குதறியெறிந்து விட்டது. டாக்டர் வந்து, 'பிழைக்க மாட்டான்' என்று சொல்லிவிட்டார்'' என்று 'ஓ'வென்று அழுதாள்.

தீட்சிதர் பதறினுர். ''நான்தான் அந்த வெறி நாய், நான்தான் அந்த வெறி நாய்'' என்று தலையில் 'மடார் மடார்' என்று அடித்துக் கொண்டார்.

இரத்தத்தில் கிடந்த சிவராமனின் மகனை, தன் பேரனை, மடியில் போட்டுக் கொண்டார்.

''டேய், குழந்தே சங்கரா! என் ஆதிசங்கரா, என்னை மன்னித்து விடு. டேய் சிவராமா, உன் குழந்தையை நான் கொன்று விட்டேண்டா: நான் மகா பாவி'' என்று புலம்பினுர்.

'தாத்தா, தண்ணீர்' என்று கேட்டது போல் தோன்றியது. அருகே உள்ள பஞ்சாத்திர உத்தரணியிலிருந்து காவிரித் தண்ணீரை ஒரு சொட்டு அவன் வாயில் விட்டார். தண்ணீர் உள்ளே போகவில்லை. ஜீவன் போய் விட்டது.

சாகும் முன் அந்த வீட்டில் சாப்பிடக் கூடாது என்ற வைராக்கியத்தை வைத்துக் கொண்டு அந்தக் குழந்தை அதில் ஜெயித்தும் விட்டான்.

காமு அழுவதை நிறுத்தினுள்: ''தீட்சிதர் சுவாமிகளே, திருப்தியாகி விட்டதா? உங்கள் வேதங்களைக் கூப்பிடுங்கள். சாந்தியைத் தருமா?

''உங்கள் பேரனின் தாய் ஒரு கிறிஸ்துவப் பெண். பேரனுக்கு எந்த முறையில் சடங்கு செய்யப் போகிறீர்கள்?'' என்று காமு நிதானமாகக் கேட்டாள்.

அவளுடைய கேள்விகள் அவரைத் துளைத்தெடுத்தன.

''காமு! என்னைக் கொல்லாதே. என் கையாலேயே நான் எல்லாம் செய்யப் போகிறேன்.''

பேரனை வாரித் தூக்கிக் கொண்டு போய் சிதை மூட்டி, நெருப்பும் வைத்தார்: ''காமு, நீயும் வந்து பார். அதோ எரிகிறதே, அதுதான் எனது பேரன்.''

'என் தெய்வமே! சிவமே!' என்று கத்தித் தன் உடலிலிருந்த பூணூலை கழற்றிக் காவிரியில் எறிந்தார் தீட்சிதர்.

உங்களுக்குத் தெரியுமா, அதோ, அங்கே எரியும் பிணம்தான் தீட்சிதரின் பேரனுக்கும்!

ஆயிரத்தைத் தாண்டியவர்கள்!



ஆயிரம் முறை கதா காலட்சேபம் நடத்திய சகோதரிகள், தஞ்சாவூர் சகோதரிகள் அல்லாமல் வேறு யாராக இருக்க முடியும்? மியூஸிக் அகாடமி ஹாலில் இவர்கள், அண்மையில் நடத்திய கதை 'சனைச்சர கர்வ பங்கம்.' கதையை அன்று திருமதி சாவித்திரி ரங்கநாதன் செய்தார். குமாரி ராஜேஸ்வரி பாடிக்கொண்டே மிருதங்கம் வாசித்தார். குமாரி லட்சுமி இனிமையாகப் பாடினுர்.

1960-ல் கதா காலட்சேபத்துக்கு ஆரம்பித்து, சுமார் இருபத்தைந்து கதைகளைக் கூறிவரும் இச் சகோதரிகளுக்கு, மியூஸிக் அகாடமி நிகழ்ச்சி ஆயிரமாவதாக அமைந்தது.

—குயிலி ராஜேஸ்வரி.

மோதி
இன்பக் குளியலுக்கு இந்தியாவின் இணையற்ற சோப்



இப்போது இரண்டு சைஸ்களில் உங்களை நாடி வருகிறது. இந்த சோப் தரும் வளம் பொருந்திய பட்டுப்போன்ற நுரை உங்கள் மேனியில் பட்டுக் கொஞ்சும் போது உடல் புல்லரிக்கும். அந்த இன்பத்தில் குளித்து எழுகையில் உலகமே இன்பமயமாகத் தோன்றும். மோதி உங்களுக்கெனவே உருவாக்கப் பட்டது. மல்லிகை, ரோஜா, வெட்டிவேர் ஆகிய மூன்று நறுமணங்கள். இன்றே ஒன்றைத் தேர்ந்தெடுப்பீர். நாளை முதலே இன்பவாரிதியில் குளிப்பீர்!

மோதி

இன்பக் குளியலுக்கான
இணையற்ற சோப்
இப்போது இரண்டு சைஸ்
களில் கிடைக்கிறது.



டாடா தயாரிப்பு.

OBM-2384 TM

டேவிட் நைவன் திரும்பிப் பார்க்கிறார்...



மனைவியுடன் டேவிட்...

ஆஸ்கர் பரிசு பெற்ற பிரிட்டிஷ் நடிகர் டேவிட் நைவன் (David Niven) தன் சுயசரிதத்தை நகைச்சுவை மிளிர எழுதியிருக்கிறார். பதினேழு மாதங்களுக்கு மேல் 'பெஸ்ட்-ஸெல்லர்' லிஸ்டில் இருந்த இந்தப் புத்தகத்தின் பெயர் 'தி மூன் ஈஸ் எ பலூன்' (The moon is a baloon). அதிலிருந்து சில சுவையான தகவல்கள்......

சே! இது என்ன வாழ்க்கை! ஒவ்வொரு தடவையும் நான் விமானப் பயணம் செய்யும் போது என் பக்கத்து ஸீட்டில் ஓர் அழகான இளம்பெண் வந்து உட்காரமாட்டாளா என்ற நப்பாசையுடன் காத்திருப்பேன்! ஆனால் ஒவ்வொரு தடவையும் தொந்தியும் தொப்பையுமாக ஓர் ஐரோப்பிய பிஸினஸ்மேன் நாற்றமடிக்கும் சுருட்டு ஒன்றைப் பிடித்துக் கொண்டு பக்கத்தில் வந்து அமர்ந்து தொலைக்கிறார்!

★

என்னுடைய முதல் 'செக்ஸ்'(?) அனுபவம், நான் சிறுவனாக இருக்கும் போது என்னுடைய உறவுக்காரப் பெண் ஒருத்தியுடன் 'டாக்டர் விளையாட்டு' விளையாடியதுதான்! முதலில் அவள் 'டாக்டர்' —நான் 'பேஷண்ட்!' பிறகு நான் 'டாக்டரா'க இருக்கிறேன் என்று சொன்னபோது 'விளையாட்டுப் போதும்' என்று சொல்லி விட்டு மெள்ள நழுவி விட்டாள்!

★

நான் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது நெஸ்ஸி என்ற பெண்ணின் நட்பு எனக்குக் கிட்டியது. விலைமாதாக இருந்தாலும் உண்மையான நட்பிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தாள் அவள். முதன்முதலாக என்னை அவள் வசித்து வந்த இடத்திற்கு அழைத்துச் சென்று, படுக்கையில் அமர்த்தி, சிறிது நேரம் ஜாலியாகப் பேசிக் கொண்டிருந்த போது, 'உனக்கு என்ன வயசு?' என்று கேட்டாள். 'பதினாலு!' என்று நான் பதில் சொன்னவுடன், படுக்கையை விட்டுக் கீழே குதித்து ஒரு பெரிய நடிகையைப் போலக் கைகளை மேலே தூக்கி, 'ஜீஸஸ் க்ரைஸ்ட்! பதினாலு வயசுப் பாப்பாக்களையெல்லாமா நான் கெடுக்க வேண்டும்!' என்று அவள் தமாஷாகக் கேட்டது என் நினைவுக்கு வருகிறது. புதுமையான - இனிமையான அந்த இரவு பூராவும் நெஸ்ஸி எனக்குக் குருவாக இருந்தாள்!

★

"திரையில் நீயே வசனங்களைப் பேசிக் கொண்டிருப்பதை மட்டும் நடிப்பு என்று

நினைத்துக் கொண்டு விடாதே. மற்றவர்கள் பேசும் போது கேட்டுக் கொண்டிருக்கிறாயே—அதுதான் உண்மையான நடிப்பு!''—சொன்னவர் சார்லி சாப்ளின். என்னால் மறக்க முடியாத அறிவுரை இது.

★

எர்ரால் ஃப்ளின் புதுமுகமாக இருந்த போதே நானும் அவரும் நெருங்கிய நண்பர்களாக இருந்தோம். ஒரு தடவை போர்க் காட்சி ஒன்றை எடுப்பதற்குமுன் ஃப்ளினின் குதிரைக்குப் பின்னால் அணி வகுத்து நின்ற அறுநூறு குதிரை வீரர்களில் ஒருவனுக்கு ஃப்ளினை 'ராகிங்' செய்யவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டு, ஃப்ளினின் குதிரை வாலைத் திருகி விட்டான். அவ்வளவுதான்! குதிரை ஒரு எகிறு எகிறிக் குதிக்க, ஃப்ளின் கீழே விழுந்து உருண்டார். எல்லோரும் 'கொல்' என்று சிரித்தார்கள். மெள்ளத் தூசியைத் தட்டிக் கொண்டு எழுந்த எரால் ஃப்ளின், ''இந்த வேலையை யார் செய்தது?'' என்று கேட்டார். ப்ரொபஷனல் எக்ஸ்ட்ரா ஒருவன், ''நான்தான் மிஸ்டர்! என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டவாறே குதிரையைவிட்டுக் கீழே இறங்கினான். அவ்வளவுதான்! ஒரு பத்து நிமிடம் ஃப்ளினுக்கும் அவனுக்கும் பயங்கரச் சண்டை! ஃப்ளின் அவனைப் புரட்டிப் புரட்டி எடுத்துப் பந்தாடி விட்டார்!

★

ஒரு தரம் 'பிக்னிக்' போக வேண்டும் என்று ஏதேதோ பிளான் எல்லாம் பண்ணி வைத்த சமயத்தில்,

எலிசபெத் டெய்லருடன்...



முக்கியமான கால்ஷீட் வந்து தொலைத்தது. 'மேக்கப்' முடித்துக் கொண்டு பற்களை 'நற நற'வென்று கடித்த வண்ணம் மேக்கப் ரூமிலிருந்து வெளி வந்து, 'எங்கே என் நாற்காலி?' என்று கத்தினேன். அதற்குள் என் அஸிஸ்டெண்ட் என் தோளில் தட்டி, 'டேவி உன் நாற்காலியில் யாரோ ஒரு பெண் உட்கார்ந்திருக்கிறாள் போலிருக்கிறது' என்றான். 'அவளை முதலில் அந்த இடத்தைவிட்டு வெளியே தள்ளு' என்று கூச்சல் போட்டுக் கொண்டே 'செட்டு'க்குள் நுழைந்தவன், அப்படியே நின்று விட்டேன். நாற்காலியில் அமர்ந்திருந்த அந்தப் பெண், தன் தலையைத் தூக்கி என்னைப் பார்த்தாள். அந்த அழகு......! என் இரண்டு முழங்கால்களும் ஒரு கோப்பை 'ஷாம்பெய்ன்' குடித்ததைப் போலத் தள்ளாடின!

பத்து நாட்களுக்குப் பிறகு நானும் அவளும் திருமணம் செய்து கொண்டு விட்டோம்!

★

நடிக நடிகைகளுக்கு எப்போதும் கொஞ்சம் 'கழுதைப் புத்தி' இருக்கும். அதைப் புரிந்து கொண்டு டைரக்டர் அவ்வப்போது ஒரு 'காரட்'டை அவர் முன்னால் மேலும் கீழும் ஆட்டினால் நன்றாக வேலை வாங்கலாம் என் கருத்து!

★

நியூயார்க்கில், அப்போது செனேட்டராக இருந்த ஜான் கென்னடியும், அவர் அழகிய மனைவி ஜாக்குலினும் என் நெருங்கிய நண்பர்களானார்கள். பார்ட்டியில் நானும் ஜாக்கியும் நடனமாடிக் கொண்டிருந்தோம். பேச்சுவாக்கில் ஜாக்கியிடம், ''ஏன் உங்கள் கணவர் பார்ட்டிக்கு வரவேயில்லை? அவருக்கு டான்ஸ் ஆட வேண்டும் என்ற ஆசை கிடையாதா?'' என்று கேட்டேன். ''வருவதற்கு நேரமே இல்லையாம். அவருக்கு அமெரிக்க ஜனாதிபதியாக வேண்டும் என்றுதான் ஆசையாம்'' என்று ஜாக்கி பதில் கூறினாள்.

★

கென்னடி ஜனாதிபதியான பிறகு ஒரு தடவை வெள்ளை மாளிகையில் அவரோடு பேசிக் கொண்டே ஓவல் அறைவரை சென்றேன். உள்ளே நுழைந்த உடன் அவருடைய 'ஜனாதிபதி நாற்காலி'யையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஒரு புன்னகை புரிந்த கென்னடி என்னை இழுத்து, அந்த நாற்காலியில் உட்கார வைத்துவிட்டு, ''இப்போ எப்படியிருக்கிறது?'' என்று கேட்டார்.

—ரூபி


கனவுலக எழிலுக்கு
பனி போன்ற
குளுமைக்கு
ஸிந்தெல்
வானிஷிங் கிரீம்
என் அழகு வனிதை அதிக வனப்புப்
பெற ஸிந்தெல் வானிஷிங் கிரீம்.
வதனமெங்கும் காலைப் பனியின்
குளுமை. அழகுக்கு அழகூட்ட
அதை நாளும் நாடும் பழக்கத்தை
மேற்கொள்வீர். உங்கள் ஒப்பனைத்
திறனால் நீங்கள் பெறும் கண்கூசா
மென்னழகுக்கு, மேனி புதுப்
பொலிவோடு விளங்க எந்நாளும்
எந்நேரமும் ஸிந்தெல
வானிஷிங் கிரீம்.
ஒரு கோத்ரெஜ் தயாரிப்பு
Cinthelle
Godrej
GSVC-8 TAM

என் மகள் தமயந்திக்கு விடிந்தால் கல்யாணம். இன்று நிச்சயதாம்பூலம்.

பெயர் பெற்ற வர்த்தக நிறுவனத்தின் ஏகபோக உரிமையாளன் நான். என் ஒரே வாரிசு தமயந்தி.

என் உயிரும், உலகமும் அவள்தான்.

அவளைக் கல்யாணம் செய்து கொடுக்கிறேன் என்றால், லேசாய் முடித்துவிடுவேனா? பணத்தைக் கணக்கே யில்லாமல் வாரிச் செலவழித்து ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன்.

பிள்ளையும் தகுந்தவன்தான். இளம் வயது. ஜெர்மனியில் மேல்படிப்பை முடித்துவிட்டு, ஒரு மாத லீவில் வந்திருக்கிறான். டிரெயினிங்குக்கு மறுபடி அங்கேயே போக வேண்டுமாம். அவன் அப்பாவுக்குப் பயம். பையன் நல்லபடியாய் வந்திருக்கும் போதே கால்கட்டை போட்டு அனுப்பிவிட வேண்டும். காலம் கிடக்கிற கிடப்பில் அடுத்த முறை வரும்போது—வருவதே நிச்சயம் சொல்ல முடியாது. எப்படி வருவானோ?

தமயந்தி இப்போதுதான் பி. ஏ. படித்துக் கொண்டிருக்கிறாள். என்ன அவசரம்? ஆனாலும் அவர் விடவில்லை. பையனும், பெண்ணும் பார்த்தார்கள். பரஸ்பரம் பிடித்துப் போய்விட்டது. அதிலும் தமயந்திக்கு அவனை ரொம்பவே பிடித்துப் போய்விட்டது.

எனக்குத்தான் நெஞ்சில் நெருடல். கல்யாணம் ஆனால் அப்பன் உரிமை எத்தனை நாளைக்கு? அதுவும் தமயந்தியைக் கையோடு அழைத்துக் கொண்டு போகப் போகிறானாம்.

மனசுக்குள் கொஞ்சம் யோசனைதான். ஆனால், தமயந்திக்கு அவனைப் பிடித்துவிட்டதே! அவள் கேட்டு இதுவரை நான் எதையும் மறுத்ததில்லை.

விடிந்தால் கல்யாணம். ஏற்பாடுகளெல்லாம் எனக்குத் திருப்திகரமாக ஆகியிருக்கின்றன. நிச்சயதாம்பூலத்திற்கே இவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள். பந்தல் நிரம்பியிருக்கிறது.

என் கண்கள் வந்திருப்பவர்களிடையே ஒருத்தியைத் தேடுகின்றன. குறிப்பாக அந்த முகத்தைக் காணோம்.

'கணக்காக வராதே, சாயங்காலம் நேரத்தோடேயே வந்துடு' என்று படித்துப் படித்துப் பத்து தரம் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். வந்தாளா, இல்லையா ... தெரியவில்லை.

''ஏற்பாடெல்லாம் ஜமாய்ச்சிட்டிருக்கீங்களே தம்பி. பொம்பளை இல்லாத வீடாச்சே, நம்பளையும் வரச் சொல்லலியே, ஒண்டிக்கட்டையா என்ன பண்ணப்போறீங்களோன்னு நெனச்சோம்... தடபுடல்தான். என்னமோ, அதன் அம்மா, ஞானம் இருந்து பாக்கலியேங்கிறதுதான் குறை...''

காலமாகி விட்ட என் மனைவி ஞானத்தின் அண்ணிதான் பக்கத்தில் வந்து பேசுகிறாள். நான் அவர்கள் ய' ூர யும் அதிகம் நெருங்க விடுவதில்லை ஞ, .று கொஞ்சம் மனத்தாங்கல். அதனால்தான் இந்த ஷொட்டு.

நான் அசுவாரசியமாகச் சூள் கொட்டி விட்டு, அந்தண்டை நகர்கிறேன்.

செங்கமலம் என்ன செய்தாள்?



அங்கே இருவர் பேசுவது லேசாய்க் காதில் விழுகிறது.

''மனுஷன் எப்படியிருக்கார் பார்த்தீரோ! ஆஜானுபாகுவா, உயரமும், பருமனுமா, காயகல்பம் சாப்பிட்டவராட்டம்!''

பேச்சு என்னைப் பற்றித்தான்.

கொஞ்சம் பெருமையாய்த்தான் இருக்கிறது. ஞானமும் என் தோற்றத்தில் இப்படி மயங்கினவள்தான். வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவளானாலும், வறுமை, அட்டை போல் ஒட்டிக் கொண்டிருந்த என்னைப் பார்த்து மயங்கி விட்டாளே!

பெண்ணைக் கொடுத்த தோஷத்திற்காக மாமனார் கொஞ்சம் பணமும் கொடுத்தார், வாங்கிக் கொண்டேன். கையில் பணத்தை வைத்துக் கொண்டு, அதை எதில் முதலீடு செய்வது என்று புரியாமல் நின்றிருந்த போதுதான், தருமுவைச் சந்தித்தேன்.

பால்ய சிநேகிதன். சென்னையில் வியாபாரம் துவங்கி நிலைத்து விட்டானும். விஸ்தரிப்பதில் முனைந்திருக்கிறான். அதுவும் என் அதிர்ஷ்டம்தான். ஊர் ஊராய்ச் சுற்றி அலைந்து வியாபாரத்தைப் பெருக்க ஒப்புக் கொண்டு விட்டேன். விண்ணப்பம் போடாமலேயே வேலை கிடைத்து விட்டது.

ஆரம்ப நாட்களில் வருமானம் ஒன்றும் அதிகமில்லை. ஞானத்தின் உறவுக்காரர்கள் இலை மறைவு காய் மறைவாய்ப் பேச ஆரம்பித்தார்கள், ''அழகு, அழகு' என்று இப்படியொரு அன்னக்காவடியையா கட்டிக் கொள்ள வேண்டும், என்ன தலையெழுத்தோ'வென்று.

'தான் விரும்பி மணந்தவனை இறக்கிப் பேசுவதாவது' என்று ஞானத்துக்கு ரோஷம். நான் வேலைமேல் நாள் கணக்கில், சில சமயம் வாரக் கணக்கில் வெளியூர் போனாலும், வீட்டில் தனியாகவே இருப்பாள். துணைக்குக் கூட யாரையும் அழைத்துக் கொள்ள மாட்டாள். அப்படி ஒரு சுபாவம். அவளைப் போல மனைவி எங்கே கிடைப்பாள்?

ஆனால், நான் என்ன செய்தேன்? ஒரு முறை தெற்கே போயிருந்த போது, அவளை, செங்கமலத்தைச் சந்தித்தேன், உறவு கொண்டேன். அதுதான், அந்தக் குலத்தில் பிறந்தவள். அதெல்லாம் சட்டம் வருவதற்கு முந்தின நாள்தானே! ரொம்ப சகஜம். ஆனாலும் எங்கள் சந்திப்பு வேறு மாதிரி. பார்த்ததுமே, எங்களையும் அறியாமல் ஒருவரிடம் ஒருவர் ஈடுபாடு ஏற்பட்டு விட்டது.

அந்தக் குலத்தில் பிறந்துவிட்டாளே தவிர, குணத்தில் எவ்வளவோ மாறுபாடு. மலர் போல் அவள் மடலவிழ்ந்த காலத்தில்தான், ஏதோ தற்செயலாக நிகழ்ந்தது போலன்றி, என்னவோ காலம் காலமாய் எதிர்பார்த்துக் காத்து நின்றது போல் நிகழ்ந்தது எங்கள் சந்திப்பு.

அவளுக்காகவே நான் அவ்வூருக்கு அடிக்கடி போனேன். வியாபார நிமித்தம் அவ்விடத்தில் இரண்டாம் பட்சமாய் போயிற்று. இதனால் நான் ஞானத்தை மறக்கவுமில்லை, புறக்கணிக்கவுமில்லை. என் மேல் அப்படியொரு பாசம் கொண்டிருந்த மனைவிக்கு, நான் இப்படி அடாத காரியம் செய்யக் கூடாது என்று அவ்வப்போது தோன்றும். ஆனாலும் இந்தப் புதிய உறவு என்னையும் மீறிய ஒரு விலக்க முடியாத பந்தமாயிற்று. ஏன் என்றே விளங்கவில்லை.

நான் நினைத்துக் கொண்டிருக்கும் போது, அவளே எதிரே நுழைகிறாள். அவளைத்தான் தேடிக் கொண்டிருந்தேன். அத்தனை பேரையும் தாண்டிக் கொண்டு, அவளை நோக்கி விரைகிறேன்.

அரக்கு நிறப் புடவையை அவள் நீவி உடுத்தியிருப்பதே வெகு நேர்த்தியாக இருக்கிறது. அத்தனை கும்பலிலும், அவள் 'பளிச்'சென்று ஒரு தனித் தன்மையோடு தென்படுகிறாள்.



''இப்போதானு வரது, யார் கல்யாணம்னு உன் மனசிலே நினைப்பு?''

''ரொம்பத்தான் கேக்கறீங்களே, முன்னடியே வந்து நான் சாதிக்கப் போறது என்னத்தை? என்னைப் பொறுத்தவரை, யார் வீட்டுக் கல்யாணமோதானே!''

''இந்தா, இந்த இடக்குதானே வேணுங்கறது. நான் வந்து எவ்வளவு தூரம் சொல்லிட்டு வந்தேன். ...உம்!''

உதட்டை ஓர் அரைச் சுழிப்புச் சுழித்துவிட்டு, அவள் பதில் சொல்லாமலே உள்ளே நகர்கிறாள்.

பக்கத்து நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தவர்கள் முகங்களிலெல்லாம் ஒரு லேசான கேள்விக்குறி தொக்கி நிற்பதை என்னால் உணர முடிகிறது.

அவள் அதற்குள் நாற்காலிகளைத் தாண்டி, பெண்கள் உட்காருவதற்காக ஜமக்காளம் விரித்திருந்த இடத்தில் சற்று ஒதுங்கியே அமர்ந்து கொள்கிறாள். ஐந்து நிமிடத்துக்குப் பின், கொஞ்சம் நகர்ந்து பந்தற்காலின் மேல் சாய்ந்து கொள்கிறாள்.

அப்படி அவள் இருப்பதை இந்தக் கோணத்தில் பார்க்கும் போது, ஏதோ சிற்பம் ஒன்று சிந்தனை வயப்பட்டிருப்பதைப் போல் தோன்றுகிறது. லட்சண சாஸ்திரப்படி அளவெடுத்துச் செய்தாற் போன்ற அங்க அமைப்புக்கள்.

திரும்பிக் கூடப் பார்க்காமல் அப்படியென்ன யோசனை யென்று ஊகிக்க முயலுகிறேன்.

இருக்காதா பின்னே? இந்த மாதிரி ஒரு கோலாகலத்தில்தான் என்னோடு பகிரங்கமாய்த் தோளுக்குத் தோள் இணைந்து, சரி சமமாய் நின்று பங்கு கொள்ளவில்லையே, அதற்கு உண்டான பாத்தியதையை நான் அவளுக்குத் தரவில்லையே என்றிருக்கலாம்.

ஒருவேளை, தானும் பெண்தானே. எந்தக் குலத்தில் பிறந்திருந்தாலும், மனதார ஒருவனை, அதாவது என்னை வரித்தவள்தானே, அப்படியிருக்கும் போது, இந்த மாதிரியான கொண்டாட்டமோ, களிப்போ, திருநாளோ தன் வாழ்வில் இடம் பெற்று, தான் அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று அந்த இழப்புக்கான வருத்தமாகவும் இருக்கலாம் என்றும் தோன்றுகிறது. என்னுள் பச்சாதாபம் சுரக்கிறது.

முதன் முதலில் நான் அவளைச் சந்தி[illegible] போது, அவளுக்குப் பதினாறு, பதினேழு வயதிருக்கலாம. கைப் பிடிக்கவில்லையே தவிர, நாங்கள் கணவன் மனைவியேதான்.

அப்போது எனக்கு வசதி அதிகமில்லை. அப்புறம் வர்த்தகம் பெருகப் பெருக, வாழ்க்கையில் வசதிகள் ஏற ஏற, நான் அவளுக்கு எதெதையோ கொடுத்தேன். அவள் திருப்தி அடையவில்லை.

ஒரு கௌரவமான மனைவியாக வாழ ஆசைப்பட்டாள். அந்தச் சூழ்நிலையை விட்டு வெளியேறி என் சுக துக்கத்தில் சம பங்கு கொண்டு, என் நிழல் போல் வாழ விரும்பினாள். 'ஏற்கெனவே கல்யாணம் ஆனவன்' என்று நான் சொன்னாலும் 'அக்காவுக்கு தங்கச்சியாட்டம் இருக்கேனே, என்னாலே ஒரு தொந்தரவும் வராது' என்று பிடிவாதம் பிடித்தாள். இன்றுவரை அதுமட்டும் நான் அவளுக்கு அருளாத வரம்.

கொஞ்ச நாளில் தருமு அகால மரணம் அடைந்தான். வியாபாரத்தை நானே வாங்கிக் கொண்டேன். தொழில் வளர்ந்தது.

தமயந்தியைப் பார்க்க உள்ளே போகிறேன்.

அலங்காரம் முழுவதும் முடிந்து, கண் கொள்ளா அழகுடன் அமர்ந்திருக்கிறாள் அவள். சந்தனந்தைக் குழைத்துப் பூசினாற் போன்ற உடல். கண்களில் கனவுகள் இதழ் விரிக்கின்றன.

என்னை ஏறிட்டுப் பார்த்து வெட்கத்தோடு தலையைக் குனிந்து கொள்கிறாள் தமயந்தி. அப்படியே கவிதை நயம் மிளிர்கிறது.

''என்னம்மா, ரெடியா?'' என்று கேட்டு அவளை இழுத்து அணைத்துக்



அமெரிக்காவுக்கான நமது புதிய தூதர் கௌல், பதவிப் பிரமாணக் கடிதத்தை நிக்ஸனிடம் கொடுத்த போது நிக்ஸன், போட்டோகிராபரிடம் சொன்னது: ''இவர் பெரிய நாட்டிலிருந்து வருகிறார். பெரிய படமாக எடுங்கள்.''







1974-ம் ஆண்டு 'நட்சத்திரக் குழந்தை'களின் வருஷமாக இருக்கப் போகிறது. டிம்பிள், ராக்கி, ஜெயபாதுரி, மௌஷுமி சட்டர்ஜி, ஸயிராபானு — அவ்வளவு பேரும் தாயாராகப் போகிறார்கள்!

கொள்கிறேன். கூட இருந்த பெண்கள் சிரிக்கின்றனர்.

''என்னைப் பார்த்துதானே சிரிக்கிறீங்க? கொஞ்சறத்துக்கு இன்னொருத்தன் அங்கே மாலையும் கழுத்துமாய் காத்துண்டிருக்கான், இந்த அசட்டு அப்பனுக்குத் தெரியல்லியேன்னுதானே சிரிக்கிறீங்க'' என்கிறேன்.

''போங்கப்பா...'' — செல்லமாய்ச் சிணுங்குகிறாள் தமயந்தி. சிரித்துக் கொண்டே நகர்கிறேன். பந்தலில் வந்து புதிதாய் வந்திருப்பவர்களைக் குசலம் விசாரிக்கிறேன். பெண்கள் பக்கம் பார்க்கும் போது, செங்கமலத்தின் முகம் வாடியிருப்பது போல் படுகிறது.

ஒரு பெருமூச்சுடன் மாடியில் என் அறைக்குப் போகிறேன். என்னவோ அவள் நினைவே வருகிறது.

திடீரென்று ஒரு நாள் நாங்கள் பங்களா வாங்கிக் குடிபோன புதிதில் செங்கமலம், வீட்டில் வந்து நின்றாள். வழக்கமான சிரிப்பு.

அந்த அதிர்ச்சியிலிருந்து நான் மீண்டு, 'அவள் ஏன் வந்தாள், எப்படி வந்தாள்' என்று விசாரிப்பதற்குள் உள்ளிருந்து ஞானம் வந்து விட்டாள்.

அவளைக் கண்டதும், 'அக்கா' என்று ரொம்ப சுவாதீனமாக உறவு கொண்டாடிக் கொண்டு அழைத்ததே ஞானத்துக்கு அடிவயிற்றில் பகீரென்றிருக்க வேண்டும்.

சரி, நடந்தது நடந்துவிட்டதென்று நான் விஷயத்தை முழுவதும் விளக்கினேன்.

நான் எதிர்பார்த்தது போல் ஞானம் இந்த விஷயத்தை மட்டும் அத்தனை சுலபமாக எடுத்துக் கொள்ளவில்லை. இடிந்து போனாள்.

''உங்களையே மனதார நம்பியிருக்கிறதென்ன, பாக்கிப் பேர் ஒரு சொல் சொல்ல இடம் கொடுக்காமல் உங்கள் கௌரவத்தை நான் கட்டிக் காப்பதென்ன, எப்படி என்னை மறந்து, அவளிடம் மனம் போயிற்று உங்களுக்கு?'' என்று குமுறினாள்.

''உன்னை மறக்கவில்லையே ஞானம்! எனக்கும் அவளுக்கும் விட்டகுறை, தொட்டகுறை இருந்திருக்க வேண்டும். இல்லாமல் இப்படி ஒரு பந்தம், பிணைப்பு உண்டாக முடியாது. நான் சபல புத்திக்காரனா, வேறு யாராவது பெண்களை எப்போதாவது ஏறெடுத்தாவது பார்த்திருக்கிறேனா? இது மட்டும் எப்படி நேர்ந்தது என்று எனக்கே தெரியாது. என்னை நம்பு'' என்று வாதாடினேன். அவள் ஒப்பவில்லை. செங்கமலத்தை வெறுக்கவுமில்லை; வெளியில் கூறி கலாட்டா செய்யவுமில்லை; உள்ளுக்குள்ளேயே நைந்து போனாள். நான் சொன்ன சமாதானம் எதுவும் எடுபடவுமில்லை. மனம், உடலையும் பாதித்து, படுக்கையாகி விட்டாள்.

ஒரு சூழ்நிலை மாற்றத்துக்காக வடக்கே மாற்றிக் கொண்டு போனேம். ஞானத்துக்கு உதவியாக செங்கமலமும் வந்தாள். ஞானமே பிடிவாதமாய்த் தன் தோழி என்று சொல்லிக் கொண்டு அவளையும் அழைத்து வந்தாள். வியாபாரியால் சும்மா இருக்க முடியுமா? அங்கே மார்க்கெட் நிலவரங்களை ஆராய ஆரம்பித்தேன். எல்லாம் கைகூடி வந்த அந்த வேளையில்தான் தமயந்தி பிறந்தாள். கல்யாணமாகிக் கிட்டத்தட்ட பதினைந்து வருடங்களுக்குப் பின் பிறந்த மகள். அதனுல்தானே என்னவோ அவளிடம் அப்படியொரு வாஞ்சை.

ஆனுல் ஞானம் தாக்குப் பிடிக்கவில்லை. தமயந்தி பிறந்த கையோடு அவள் போய் விட்டாள். மனம் ஒடிந்து போய் நான் மறுபடி சென்னைக்கே மாற்றிக்கொண்டு வந்துவிட்டேன்.

அவள் போய்விடுவாள் என்று நினைக்கும் போதே நெஞ்சைப் பிழிகிறது.

இந்த மகிழ்ச்சியை எனக்குரிய இருவருக்கும் அளித்தேனு என்று கேட்கிறீர்களா? ஒரு குற்றவாளியின் உணர்வோடு இல்லை என்று ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

செங்கமலத்தின் குறுக்கீட்டால்ஞானம் தானுகவே என்னைவிட்டு விலகிவிட்டாள். அப்புறம் அதிக நாள் வாழவும் இல்லை. நான் இனிமேல் ஈடுசெய்யவே முடியாத விஷயம் இது.

சரி, அந்தச் செங்கமலத்துக்காவது முழுச் சந்தோஷம் அளித்தேனு என்ருல், அதுவுமில்லை. அவள் என்னிடம் ஒன்றே ஒன்றைத்தான் கேட்டாள், தன்னை வெளிப்படையாக ஏற்று, மனைவி என்ற பதவியைத் தரும்படி. இதைத்



கைக் குழந்தையைப் பார்த்துக் கொள்ள உறவினர், மற்றோர் முன் வந்தனர். செங்கமலம் எவ்வளவு கெஞ்சினுள், கதறினுள், ஊஹூம், நான் ஒப்பவில்லை. என் வாழ்க்கையின் சிக்கல்கள் வெளியே யாருக்கும் தெரிவதை நான் விரும்பவில்லை.

சமூகத்தின் மேல்மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு, வர்த்தகத்துறையில் ஒரு முக்கிய புள்ளியாக நான் மாறும் தருணம். என்னுடைய மதிப்பை எதுவும் பாதித்துவிடக் கூடாது என்ற ஒரே குறிதான். தமயந்தி என்னிடமே வளர்ந்தாள். செங்கமலம் பழைய படியே இருந்தாள்.

அந்தத் தமயந்திக்குத்தான் இன்று திருமணம். இனி அவளைப் பிரிந்துவிட வேண்டியிருக்கும். வெளி நாட்டுக்கு

தரவில்லை. ஞானம் போன பின்பு கூட அவளை மணந்திருக்கலாம். துணியவில்லை. என்னவென்று சொல்லட்டும்?

காலம் கடந்து விட்டது.

தமயந்தியின் அறை வாயிலில் தலை நீட்டும்போது, அவள் முன்னே வந்து என் கையைப் பற்றிக் கொள்கிருள்.

''ஏம்பா நீங்க இப்படிப் பண்ணிட்டீங்க?''

'எப்படி?' என்று விழிக்கிறேன்.

''பாருங்கப்பா, எல்லாரும் 'ம்......! அம்மா இல்லியேடி, அவ இருந்து பாக்கலியே'ன்னு என்னைப் பார்த்தவுடனே முதல்லே இதைத்தாம்பா சொல்ருங்க. நல்லவளோ, பொல்லாதவளோ, நீங்க இரண்டாம் கல்யாணம்

பண்ணிண்டிருந்தா, எனக்கு அம்மான்னு பேருக்கான ஒருத்தி இருந்திருப்பா ளேப்பா...!''

தூக்கி வாரிப் போட நான் அறையில் இருந்த மற்றவர்களைப் பார்க்கிறேன். தமயந்தியின் பாட்டி, ஞானத்தின் அம்மா முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொள்கிறாள்:

பிறந்ததிலிருந்து அம்மா என்ற தத்துவத்தையே உணராத குழந்தை தமயந்தி. தாய்க்கும் சேர்த்து ஆதுரத்துடன் நானே வளர்த்து விட்டேன். சிரிப்பும், குதிப்பும், அட்டகாசமும் தவிர, 'உரக்கப் பேசாதே, அதிர நடக்காதே' போன்ற அம்மாவின் அறிவுரைகள் அவள் அறியா தவை. சின்ன வயதில் அவளைக் கல்யாணம் செய்துகொடுக்க நான் ஒப்பினதற்கு இதுவும் ஒரு காரணம்தான்.

எதிரே நிழலாடுகிறது. செங்கமலம் தான். ஏதோ கேட்க வாயெடுக்கிறாள்.

அதற்குள் உள்ளே யிருந்து தமயந்தியின் குரல் தெளிவாகக் கேட்கிறது. கோபத்துடன் யாரிடமோ கேட்கிறாள் அவள்:

''அவதான் புண்ணியவதி போயிட்டாளே! எனக்கு அம்மா இல்லேதான்... ஒத்துக்கறேன். ஆனா நான் அனாதையில்லேயே! சும்மா ஏன், இப்படி கண்ணிலே தண்ணி விடுறீங்க? செத்துப் போயிட்ட அம்மாவைச் சந்தியிலே இழுக்கணுமா?''-தமயந்தியின் குரல் தேய்ந்து விடுகிறது.

பொட்டில் அடித்தது போல் பொறி கலங்கி 'பட்'டென்று நிற்கிறாள் செங்கமலம்.

எனக்கு அவளை ஏறெடுத்துப் பார்க்கத் தைரியமில்லை. உயிரும் சதையும் துடிப்புமாக எதிரே இருப்பவளுக்குச் சமாதி கட்டி விட்டேனே!

வடக்கே தமயந்தி பிறந்தாளே, ஞானத்துக்கல்ல, இவளுக்குத்தான். நிஜம்தான். அந்த அதிர்ச்சிதான் ஞானத்துக்குக் காலனாய் வந்திருக்க வேண்டும். என் வறட்டு கௌரவத்துக்குத் தாய்ப்பாசம் கூடப் பலியாகி விட்டது. சென்னைக்கு வந்தபின் இவள் ஒரு நாள் கூடக் குழந்தையைத் தொட்டுத் தூக்கி விளையாடினதில்லே, உறவு கொண்டாடினதில்லே. எட்ட நின்று பார்த்ததோடு சரி.

என் மனம் ஒரு கணத்தில் உருகிப் போய்விடுகிறது. ஆணவம் நிரம்பிய ஆணினத்தின் பிரதிநிதி நான்தான் போலவும், ஆயுளெல்லாம் அநியாயத்திற்குட்பட்டாலும், பூமி தேவியைப் போல் பொறுமையோடு இருக்கும் பெண்ணினத்தின் பிரதிநிதி அவளே போலவும் தோன்றுகிறது எனக்கு.

'பாவம், அவளென்ன தப்பு செய்தாள், எதற்காக அவளுக்கு இந்தத் தண்டனை? அவள் என்னைத்தானே மனப்பூர்வமாக நேசித்து தன்னை ஒப்படைத்தாள். இனி மேல் ஞானத்துக்காக நீ ஒன்றும் செய்ய முடியாது. உனக்குள்ள ஒரே சந்தர்ப்பம் இதோ, இவளுக்கிழைத்த அநியாயத்திற்காவது பரிகாரம் தேடியதாய் இருக்கும்.'—எனக்குள் நானே போராடிக் கொள்கிறேன்.

தமயந்தி, நாளைய மணப் பெண். அவள் கல்யாணத்துக்கு நான் கொடுக்கக் கூடிய எல்லாப் பரிசுகளையும் விட இதுதானே சிறந்ததாய் இருக்கும். இட்டு நிரப்ப முடியாத அம்மா ஸ்தானம் பூர்த்தியாகும்.

'தமயந்தி' என்று அழைக்கிறேன். அறைக்கு வெளியே அவள் வருகிறாள்.

வார்த்தைகள் நாக்கு நுனி வரையில் வந்துவிடுகின்றன. எப்படிச் சொல்வது, சொல்ல ஆரம்பிப்பது என்று தயங்கி இந்தப் பக்கம் திரும்புகிறேன்.

எதிரே பந்தலில் எத்தனை எத்தனை பேர்! இவ்வளவு பேரும் எனக்கு, என் சொல்லுக்குக் கொடுக்கும் மதிப்புஎன்ன? இனி, என்னைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள்? அதோ, அந்தக் கோடியில் இருக்கிறாரே சம்பந்தி, அவர் என்ன நினைப்பார்? தமயந்தியின் எதிர்காலம் என்னாகும்?

நான் சிலிர்த்துக் கொள்கிறேன். தமயந்தியை முதுகில் தட்டிக் கொடுக்கிறேன்.

''நீ எவ்வளவோ புத்திசாலின்னு நினைச்சேனே! மணையிலே உக்கார வரப் போற பொண்ணு, இப்படியா உரக்கப் பேசறது? டைம் ஆயிடுச்சு, ஐயரு கூப்பிடறார் பார். இதோ, இவங்க உன்னைக் கூட்டிட்டு வருவாங்க. நான் போய் மாப்பிள்ளையைக் கவனிக்கிறேன்.''

செங்கமலத்தை, அவள் என்ன நினைத்திருந்தாலும் சரி, ஏறெடுத்துப் பார்க்காமலேயே அவள் பக்கம் கையைக் காட்டிவிட்டு 'விடுவிடு'வென்று பந்தலில் இறங்கிச் சம்பந்தியை நோக்கி நடக்கிறேன்.

பெண்ணை மேடைக்கு அழைத்து வரும் பாக்கியத்தையாவது செங்கமலத்துக்குக் கொடுத்திருக்கிறேனே! இந்த உலகம், இன்னமும் ஆண்கள் உலகம் தானே!

'குழந்தையும் தெய்வமும்' என்று ஒரு படம் வந்ததே, ஞாபகமிருக்கிறதா?

அதில் நடித்த குழந்தை நட்சத்திரம் குட்டி பத்மினி நினைவில் வருகிறாரா?

சிறப்பாக நடித்ததற்காக ஜனாதிபதி பரிசையும் குட்டி பத்மினி பெற்றாரே, அதுகூட மறந்து விட்டதா?

பரவாயில்லை, என்ன செய்வது? அந்தப் படம் வந்து பல வருடங்கள் ஓடி விட்டன. அன்று குட்டி பத்மினியாக இருந்தவர், இன்று வேகமாக வளர்ந்து, குமாரி பத்மினியாக இருக்கிறார்.

''ஒரு கலைவிழாவுக்கு சிங்கப்பூருக்கு நான் போயிருந்தேன். நான் ஸ்ட்ரிக்ட் வெஜிடேரியன். அங்கேயோ 'நான்-வெஜிடேரியன் ஃபுட்' தான் கிடைச்சுது. ஒரு மாசம் வெறும் ஐஸ்கிரீமும், சாக்லேட்டும்தான் எனக்கு ஆகாரம். அதனாலே கொஞ்சம் உடம்பு பெருத்துப் போச்சு...'' இந்த இடத்தில் குமாரி பத்மினி பேசவில்லை— குழந்தை பத்மினி, மழலை பேசியது.



''இப்போ ஒரு வாரமா அவ டயட்லே இருக்கா. அவ வெயிட்டைக் குறைக்கறதுக்கு நான் பாடுபட்டிண்டிருக்கேன்.'' — இது குட்டி பத்மினியின் அம்மா ராதாபாய்.

ராதாபாயும் பிரபல 'அம்மா' நடிகை. படவுலகின் நுணுக்கங்களைத் தெரிந்து வைத்திருக்கும் இவர், பேசும் போது பக்குவமாகப் பேசுகிறார்:

''இவ்வளவு நா[illegible] சின்னப் பிள்ளை, சின்[illegible] பிள்ளைன்னு இவளை குறை சொல்லிக் கிட்டிருந்தாங்க. 'இவளுடைய குழந்தை மூஞ்சி மாறணும், ரசிகர்கள் அந்த முகத்தை மறக்கணும்; அதனாலே ஒரு 'லாங் கேப்' இருக்கணும்' அப்படி, இப்படின்னு சாக்கு போக்கு சொல்லிக்கிட்டிருந்தாங்க. இப்போதான் இவளுக்கு பதினாறு வயசாயிடுச்சே ... படங்களில் நடிக்கக் கூப்பிடறதுதானே? டீன் ஏஜ், டீன் ஏஜ்னு வாய் கிழியப் பேசறதோடு சரி.., இருக்கிற ஆர்ட்டிஸ்டைப் பயன்படுத்தாம, ஏதோ புதுசு புதுசுன்னு பறக்கறாங்களே...''— பொரிந்து கொட்டினார் ராதாபாய்.

குட்டி பத்மினி இப்போது நாடகங்களில் நடித்து வருகிறார். 'பத்மினி கிரியேஷன்ஸ்' என்று ஒரு நாடகக் குழுவையும் வைத்திருக்கிறார். பெரும்பாலும் வெளியூர்களில் தான் நாடகங்களை நடத்துகிறார். மாசத்துக்கு இருபது நாட்கள் வெளியூர் தான்.

"...மழமழவென்று
அழகாகவும்
நாகரீகமாகவும்
இருக்கவேண்டும்"



":.ப்ளீட்
:.பவுண்டன் பேனக்கள்
உங்கள் தேவையறிந்து எழுதுபவை"

* 15 மாடல்களுக்கு மேல் உள்ளன
* 1 ஆண்டுக்குமேல் உழைக்கும் இரிடியம் முனை நிப்புகள்.
* எய்ரோமேட்டிக், வேக்வம், ரெகுலர் நிரப்பல் முறைகள்.
* உறபத்திப் பழுதுகள் இல்லாமைக்கு உத்தரவாதம்
* எவர் சக்திக்கும் ஏற்ற விலைகள்.

:.ப்ளீட் எழுதும் எழுத்து வெற்றநடை போடும்

Fleet

வட்டுமுல் இண்டஸ்ட்ரீஸ் பி. லிட்,
டெல்ஸ்டார், 9-9ஏ, எஸ் பாட்கர் மார்க்,
பம்பாய் 400 036,
போன்கள்: 355238/9, 354425


Creative Unit-A 1095



ஐடெக்ஸ்
டீலக்ஸ்
குங்குமம் பவுடர்

மெழுகு தேவையில்லை-நேரடியாக இட்டுக்கொள்ளலாம். பிளாஸ்டிக் டப்பிகளில் பன்னிரண்டு கலர்களில் எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

பெண்மையின் அழகு பொலிய ஐடெக்ஸ் அழகு சாதனங்கள்



Aravind Laboratories
MADRAS-33

கல்லூரி வாசலின் முன் குலுங்கி நின்ற காரிலிருந்து ஒயிலாக இறங்கிய அவள், நல்ல உயரம்; சிவப்பு நிறத்திற்கு எடுப்பாக ரோஜா கலரில் சேலை. அதே நிறத்தில் குட்டையான 'ப்ளவுஸ்'.

அவள்...? வினுத்தா!

திருமதி வினுத்தா ராகவன் ஒரு மாணவி.

படிப்பு - எம்.எஸ்ஸி. இறுதியாண்டு.

நேராக விசிட்டர்ஸ் ஹால் பக்கமாக நடந்தாள். தன்னை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த அட்டெண்டர் மரகதத்தைக் கண்டு—

''மரகதம், இன்னிக்கு எல்லோரையும் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறயல்லவா? வெரி நைஸ்! ஒரு நிமிஷம்... இதோ, 'புரொபசரை'ப் பார்த்து விட்டு வந்து விடுகிறேன்.''

''குட் மார்னிங் மிஸ்.''

''ஹலோ ... வெரி குட் மார்னிங். ஹவ் ஆர் யூ? ஃபைன்?''

''எஸ் மிஸ். மிஸ்... இன்னியிலிருந்து என்னுடைய 'தீஸிஸ்'க்குப் 'பிரிபரேஷன்' ஆரம்பிக்கிறேன் மிஸ்... வித்யுவர் பிளெஸ்ஸிங்ஸ்!''

''ஓ... ஷ்யூர்...! மிஸஸ் வினுத்தா. உன்னை மாதிரி 'மெச்சுரிடியான' ஸ்டூடெண்ட்ஸுக்கு கைடாக இருப்பது ஒரு பிளஷர். ஒரு மெச்சுரிடியுள்ள ஸ்டூடெண்டினல் என் சிரமம் குறையும் என்றே நினைக்கிறேன். நீ எடுத்திருக்கிற 'ஹேபிட் ஃபார்மேஷன்' இன்ட்டரெஸ்டிங் சப்ஜெக்ட். நீ அந்தக் குழந்தைகளோட பழகறது ஒரு தனி அனுபவமாக இருக்கும். பெஸ்ட் ஆஃப் லக்!''

வினுத்தாவின் புரொபசர் டாக்டர் பர்வதவர்த்தினி எவ்வளவோ பட்டதாரிகளுக்கு 'கைடாக' இருந்து நல்ல விளைவுகளை ஏற்படுத்தியவள்.

வினுத்தா எடுத்திருந்த 'சைல்ட் டெவலப்மெண்ட்' பாடத்தின் கீழ் 'ஹேபிட் ஃபார்மேஷன்' திறனய்வுக்கு கைடாக இருந்தாள், டாக்டர் பர்வதவர்த்தினி.



விநுத்தாவின் பாடம்— நான்கு, ஐந்து வயதுள்ள ஐந்து பெண் குழந்தைகள், ஐந்து ஆண் குழந்தைகளை மிகப் பின்தங்கிய குடும்பங்களிலிருந்து வரவழைத்து, அவர்களின் மன இயல்புக்கு ஏற்றவாறு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட நாட்களுக்குள் அவர்களிடம் ஏற்படும் வளர்ச்சியினைப் பற்றிய காரண காரியங்களைச் சான்றுகளுடன் திறனாய்வு செய்ய வேண்டும்.

விசிடர்ஸ் ஹாலுக்கு வந்து நின்று, தன் பாடங்களை ஒரு நோட்டம் விட்டாள்.

சம்மணம் போட்டு, வெகு கஷ்டப் பட்டு அமைதியாகப் பத்து சிறுசுகள்— மலங்க மலங்க விழித்துக் கொண் டிருந்தன.

வினுத்தா ஒரு மம்மி

தன்னைக் கண்டு பயந்து உட்கார்ந்து கொண்டிருக்கும் அந்தச் சிறுசுகளிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தாள்:

''உம் பேரு என்னம்மா?''

''ஊ...சா...!''

''ஊசா...வா. ஊசா இல்லேம்மா. உஷா! நல்ல பேரு. சரி... உம் பேரு என்ன குட்டி?''

''மயகதம்...!''

''மரகதமா... உம் பேரு?''

''சனியன்!''

''ஐயையோ... சனியனா? உம் பேரு என்னம்மா...?''

''அது எனக்குத் தெதியாது. எங்கம்மா எப்பவுமே என்னெ 'சனியன்'னுதான் கூப்பிடும்.''

'களுக்' கென்று சிரித்து விட்டாள்!

''சரி, நாளைக்கு வரும்போது உங்கம்மாகிட்டே உனக்கு என்ன பேருன்னு கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டு வருவியாம்... என்ன?''

ஒரு 'சிறுசு', வினுத்தாவின் மென்மையான சேலையைத் தன் இரு பிஞ்சு விரல்களால் 'நசுக்கி நசுக்கி' வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. 'அதற்கு' அந்த மென்மையான சேலையே ஒரு 'காட்சி'யாக இருந்தது. அதைக் கவனித்தாள் வினுத்தா.

''என்னம்மா... உனக்கு இந்த மாதிரி சேலை வேணுமா...?''

''ஊக்கும்... வாந்தாம்!''

''வேண்டாமா... சரி, உம் பேரு சொல்லு பார்க்கலாம்...!''

''எம் பேரு, அன்னம்மா!''

''அன்னம்மாவா? நல்லா யிருக்கே!'' என்று சொல்லிக் கொண்டே பையன்கள் பக்கம் பார்வையைச் செலுத்தினாள். அதில் ஒரு 'பொடியன்' வினுத்தாவை வெகு அழகாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் 'பிஞ்சு'ப் பார்வையில் உள்ள கூர்மையால்— அது ஓர் ஆணின் பார்வை என்பதால்-அவள் உள்ளத்தில் ஓர் எலக்டிரிக் ஷாக்! சேலையை இழுத்துச் சற்று மறைத்தாள் வினுத்தா. அப்பப்பா!...

''உம் பேரு என்னப்பா?''

வெடுக்கென்றுசொன்னான்:''ராமெ.''

''அடுத்து... நீ...?''

''வயதராஜன்.''

''வரதராஜன்... வெரி குட்! அப்புறம் நீ...?''

''துப்பையன்.''

''சுப்பையன்... சரி...''

''இதெப் பாருங்கடா... பசங்களா... நாளைக்கு வரும்போது அவங்கவங்களுக்கு என்ன பேருன்னு சரியா தெரிஞ்சுட்டு வரணும். நாளைக்கு எல்லோரும் குளிச்சுட்டு, சுத்தமா வரணும், தெரியுமா?''

அட்டெண்டர் மரகதத்திடம் அவர்களை யெல்லாம் அவரவர் வீட்டில் கொண்டு பத்திரமாக விட்டுவிடச் சொல்லிவிட்டு, தன் டிபார்ட்மெண்டில்

மருதம்


மோதி
இன்பக் குளியலுக்கு
இந்தியாவின் இணையற்ற
சோப்
இப்போது இரண்டு சைஸ்களில் உங்களை
நாடி வருகிறது. இந்த சோப் தரும்
வளம் பொருந்திய பட்டுப்போன்ற நுரை
உங்கள் மேனியில் பட்டுக் கொஞ்சும்
போது உடல் புல்லரிக்கும். அந்த
இன்பத்தில் குளித்து எழுகையில்
உலகமே இன்பமயமாகத் தோன்றும்.
மோதி உங்களுக்கெனவே
உருவாக்கப் பட்டது. மல்லிகை,
ரோஜா, வெட்டிவேர் ஆகிய மூன்று
நறுமணங்கள். இன்றே ஒன்றைத்
தேர்ந்தெடுப்பீர். நாளை முதலே
இன்பவாரிதியில் குளிப்பீர்!
மோதி
இன்பக் குளியலுக்கான
இணையற்ற சோப்
இப்போது இரண்டு சைஸ்
களில் கிடைக்கிறது.
Moti
LUXURY BATH SOAP
GULAB
டாடா தயாரிப்பு.
OSM-2364 TM

டேவிட்நைவன் திரும்பிப் பார்க்கிருர்...



மனைவியுடன் டேவிட்...

ஆஸ்கர் பரிசு பெற்ற பிரிட்டிஷ் நடிகர் டேவிட்நைவன் (David Niven) தன் சுயசரிதத்தை நகைச்சுவை மிளிர எழுதியிருக்கிருர். பதினேழு மாதங்களுக்கு மேல் 'பெஸ்ட்-ஸெல்லர்' லிஸ்டில் இருந்த இந்தப் புத்தகத்தின் பெயர் 'தி மூன் ஈஸ் எ பலூன்' (The moon is a baloon). அதிலிருந்து சில சுவையான தகவல்கள்......

சே! இது என்ன வாழ்க்கை! ஒவ்வொரு தடவையும் நான் விமானப் பயணம் செய்யும் போது என் பக்கத்து ஸீட்டில் ஓர் அழகான இளம்பெண் வந்து உட்காரமாட்டாளா என்ற நப்பாசையுடன் காத்திருப்பேன்! ஆனல் ஒவ்வொரு தடவையும் தொந்தியும் தொப்பையுமாக ஓர் ஐரோப்பிய பிஸினஸ்மேன் நாற்றமடிக்கும் சுருட்டு ஒன்றைப் பிடித்துக் கொண்டு பக்கத்தில் வந்து அமர்ந்து தொலைக்கிருர்!

★

என்னுடைய முதல் 'செக்ஸ்'(?) அனுபவம், நான் சிறுவனாக இருக்கும் போது என்னுடைய உறவுக்காரப் பெண் ஒருத்தியுடன் 'டாக்டர் விளையாட்டு' விளையாடியதுதான்! முதலில் அவள் 'டாக்டர்' —நான் 'பேஷண்ட்!' பிறகு நான் 'டாக்டரா'க இருக்கிறேன் என்று சொன்னபோது 'விளையாட்டுப் போதும்' என்று சொல்லி விட்டு மெள்ள நழுவி விட்டாள்!

★

நான் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது நெஸ்ஸி என்ற பெண்ணின் நட்பு எனக்குக் கிட்டியது. விலைமாதாக இருந்தாலும் உண்மையான நட்பிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தாள் அவள். முதன்முதலாக என்னை அவள் வசித்து வந்த இடத்திற்கு அழைத்துச் சென்று, படுக்கையில் அமர்த்தி, சிறிது நேரம் ஜாலியாகப் பேசிக் கொண்டிருந்த போது, 'உனக்கு என்ன வயசு?' என்று கேட்டாள். 'பதினலு!' என்று நான் பதில் சொன்னவுடன், படுக்கையை விட்டுக் கீழே குதித்து ஒரு பெரிய நடிகையைப் போலக் கைகளை மேலே தூக்கி, 'ஜீஸஸ் க்ரைஸ்ட்! பதினலு வயசுப் பாப்பாக்களை யெல்லாமா நான் கெடுக்க வேண்டும்!' என்று அவள் தமாஷாகக் கேட்டது என் நினைவுக்கு வருகிறது. புதுமையான - இனிமையான அந்த இரவு பூராவும் நெஸ்ஸி எனக்குக் குருவாக இருந்தாள்!

★

"திரையில் நீயே வசனங்களைப் பேசிக் கொண்டிருப்பதை மட்டும் நடிப்பு என்று

நினைத்துக் கொண்டு விடாதே. மற்றவர்கள் பேசும் போது கேட்டுக் கொண்டிருக்கிறாயே—அதுதான் உண்மையான நடிப்பு!''—சொன்னவர் சார்லி சாப்ளின். என்னால் மறக்க முடியாத அறிவுரை இது.

✶

எர்ரால் ஃப்ளின் புதுமுகமாக இருந்த போதே நானும் அவரும் நெருங்கிய நண்பர்களாக இருந்தோம். ஒரு தடவை போர்க் காட்சி ஒன்றை எடுப்பதற்குமுன் ஃப்ளினின் குதிரைக்குப் பின்னால் அணி வகுத்து நின்ற அறுநூறு குதிரை வீரர்களில் ஒருவனுக்கு ஃப்ளினை 'ராகிங்' செய்யவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டு, ஃப்ளினின் குதிரை வாலைத் திருகி விட்டான். அவ்வளவுதான்! குதிரை ஒரு எகிறு எகிறிக் குதிக்க, ஃப்ளின் கீழே விழுந்து உருண்டார். எல்லோரும் 'கொல்' என்று சிரித்தார்கள். மெள்ளத் தூசியைத் தட்டிக் கொண்டு எழுந்த எரால் ஃப்ளின், ''இந்த வேலையை யார் செய்தது?'' என்று கேட்டார். ப்ரொபஷனல் எக்ஸ்ட்ரா ஒருவன், ''நான்தான் மிஸ்டர்! என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டவாறே குதிரையைவிட்டுக் கீழே இறங்கினான். அவ்வளவுதான்! ஒரு பத்து நிமிடம் ஃப்ளினுக்கும் அவனுக்கும் பயங்கரச் சண்டை! ஃப்ளின் அவனைப் புரட்டிப் புரட்டி எடுத்துப் பந்தாடி விட்டார்!

✶

ஒரு தரம் 'பிக்னிக்' போக வேண்டும் என்று ஏதேதோ பிளான் எல்லாம் பண்ணி வைத்த சமயத்தில்,

எலிசபெத் டெய்லருடன்...



முக்கியமான கால்ஷீட் வந்து தொலைத்தது. 'மேக்கப்' முடித்துக் கொண் பற்களை 'நற நற'வென்று கடித் வண்ணம் மேக்கப் ரூமிலிருந்து வெளிே வந்து, 'எங்கே என் நாற்காலி?' என் கத்தினேன். அதற்குள் என் அஸி டெண்ட் என் தோளில் தட்டி, 'டேவிட் உன் நாற்காலியில் யாரோ ஒரு பெ உட்கார்ந்திருக்கிறாள் போலிருக்கிறது என்றான். 'அவளை முதலில் அந் இடத்தைவிட்டு வெளியே தள்ளு என்று கூச்சல் போட்டுக் கொண் 'செட்டு'க்குள் நுழைந்தவன், அப்படிே நின்று விட்டேன். நாற்காலியில் அமர் திருந்த அந்தப் பெண், தன் தலையை தூக்கி என்னைப் பார்த்தாள். அந் அழகு......! என் இரண்டு முழ கால்களும் ஒரு கோப்பை 'ஷாம்பெ குடித்ததைப் போலத் தள்ளாடின!

பத்து நாட்களுக்குப் பிறகு நானு அவளும் திருமணம் செய்து கொண் விட்டோம்!

✶

நடிக நடிகைகளுக்கு எப்போதுே கொஞ்சம் 'கழுதைப் புத்தி' இருக்கு அதைப் புரிந்து கொண்டு டைரக்டர்க அவ்வப்போது ஒரு 'காரட்'டை அவர்க முன்னால் மேலும் கீழும் ஆட்டினா நன்றாக வேலை வாங்கலாம் என்ப என் கருத்து!

✶

நியூயார்க்கில், அப்போது செனேட் ராக இருந்த ஜான் கென்னடியும், அவர அழகிய மனைவி ஜாக்குலீனும் எனக் நெருங்கிய நண்பர்களானார்கள். ஒ பார்ட்டியில் நானும் ஜாக்கியும் நட மாடிக் கொண்டிருந்தோம். பேச்சுவா கில் ஜாக்கியிடம், ''ஏன் உங்கள் கணவ பார்ட்டிக்கு வரவேயில்லை? அவருக் டான்ஸ் ஆட வேண்டும் என்ற ஆசைே கிடையாதா?'' என்று கேட்டேன் ''வருவதற்கு நேரமே இல்லையாம் அவருக்கு அமெரிக்க ஜனாதிபதி வேண்டும் என்றுதான் ஆசையாம்! என்று ஜாக்கி பதில் கூறினாள்.

✶


கென்னடி ஜனாதிபதியான பிறகு ஒ தடவை வெள்ளை மாளிகையில் அவரோடு பேசிக் கொண்டே ஓவல் அறைவ சென்றேன். உள்ளே நுழைந்த உட அவருடைய 'ஜனாதிபதி நாற்கால யையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஒரு புன்னகை புரிந்த கென்னடி என்னை இழுத்து, அந்த நாற்காலியி உட்கார வைத்துவிட்டு, ''இப்போ எப்படியிருக்கிறது?'' என்று கேட்டார்

—ரூபி.



என் அழகு வனிதை அதிக வனப்புப்
பெற ஸிந்தெல் வானிஷிங் கிரீம்.
வதனமெங்கும் காலைப் பனியின்
குளுமை. அழகுக்கு அழகூட்ட
அதை நாளும் நாடும் பழக்கத்தை
மேற்கொள்வீர். உங்கள் ஒப்பனைத்
திறனால் நீங்கள் பெறும் கண்கூசா
மென்னழகுக்கு, மேனி புதுப்
பொலிவோடு விளங்க எந்நாளும்
எந்நேரமும் ஸிந்தெல
வானிஷிங் கிரீம்.



ஒரு கோத்ரெஜ் தயாரிப்பு

GSVC-5 TAM

என் மகள் தமயந்திக்கு விடிந்தால் கல்யாணம். இன்று நிச்சயதாம்பூலம்.

பெயர் பெற்ற வர்த்தக நிறுவனத்தின் ஏகபோக உரிமையாளன் நான். என் ஒரே வாரிசு தமயந்தி.

என் உயிரும், உலகமும் அவள்தான்.

அவளைக் கல்யாணம் செய்து கொடுக்கிறேன் என்றால், லேசாய் முடித்து விடுவேனா? பணத்தைக் கணக்கே யில்லாமல் வாரிச் செலவழித்து ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன்.

பிள்ளையும் தகுந்தவன்தான். இளம் வயது. ஜெர்மனியில் மேல்படிப்பை முடித்துவிட்டு, ஒரு மாத லீவில் வந்திருக்கிறான். டிரெயினிங்குக்கு மறுபடி அங்கேயே போக வேண்டுமாம். அவன் அப்பாவுக்குப் பயம். பையன் நல்லபடியாய் வந்திருக்கும் போதே கால்கட்டை போட்டு அனுப்பிவிட வேண்டும். காலம் கிடக்கிற கிடப்பில் அடுத்த முறை வரும்போது—வருவதே நிச்சயம் சொல்ல முடியாது. எப்படி வருவானோ?

தமயந்தி இப்போதுதான் பி. ஏ. படித்துக் கொண்டிருக்கிறாள். என்ன அவசரம்? ஆனாலும் அவர் விடவில்லை. பையனும், பெண்ணும் பார்த்தார்கள். பரஸ்பரம் பிடித்துப் போய்விட்டது. அதிலும் தமயந்திக்கு அவனை ரொம்பவே பிடித்துப் போய்விட்டது.

எனக்குத்தான் நெஞ்சில் நெருடல். கல்யாணம் ஆனால் அப்பன் உரிமை எத்தனை நாளைக்கு? அதுவும் தமயந்தியைக் கையோடு அழைத்துக் கொண்டு போகப் போகிறானாம்.

மனசுக்குள் கொஞ்சம் யோசனைதான். ஆனால், தமயந்திக்கு அவனைப் பிடித்துவிட்டதே! அவள் கேட்டு இதுவரை நான் எதையும் மறுத்ததில்லை.

விடிந்தால் கல்யாணம். ஏற்பாடுகளெல்லாம் எனக்குத் திருப்திகரமாக ஆகியிருக்கின்றன. நிச்சயதாம்பூலத்திற்கே இவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள். பந்தல் நிரம்பியிருக்கிறது.

என் கண்கள் வந்திருப்பவர்களிடையே ஒருத்தியைத் தேடுகின்றன. குறிப்பாக அந்த முகத்தைக் காணோம்.

'கணக்காக வராதே, சாயங்காலம் நேரத்தோடேயே வந்துடு' என்று படித்துப் படித்துப் பத்து தரம் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். வந்தாளா, இல்லையா ... தெரியவில்லை.

''ஏற்பாடெல்லாம் ஜமாய்ச்சிட்டிருக்கீங்களே தம்பி. பொம்பளை இல்லாத வீடாச்சே, நம்பளையும் வரச் சொல்லலியே, ஒண்டிக்கட்டையா என்ன பண்ணப்போறீங்களோன்னு நெனச்சோம்... தடபுடல்தான். என்னமோ, அதன் அம்மா, ஞானம் இருந்து பாக்கலியேங்கிறதுதான் குறை...''

காலமாகி விட்ட என் மனைவி ஞானத்தின் அண்ணிதான் பக்கத்தில் வந்து பேசுகிறாள். நான் அவர்கள் யாரையும் அதிகம் நெருங்க விடுவதில்லை [illegible]று கொஞ்சம் மனத்தாங்கல். அதனால்தான் இந்த ஷொட்டு.

நான் அசுவாரசியமாகச் சூள் கொட்டிவிட்டு, அந்தண்டை நகர்கிறேன்.



செங்கமலம் என்ன செய்தாள்?

ஜெ*மனோகரன்

அங்கே இருவர் பேசுவது லேசாய்க் காதில் விழுகிறது.

''மனுஷன் எப்படியிருக்கார் பார்த்திரோ! ஆஜானுபாகுவா, உயரமும், பருமனுமா, காயகல்பம் சாப்பிட்டவராட்டம்!''

பேச்சு என்னைப் பற்றித்தான்.

கொஞ்சம் பெருமையாய்த்தான் இருக்கிறது. ஞானமும் என் தோற்றத்தில் இப்படி மயங்கினவள்தான். வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவளானாலும், வறுமை, அட்டை போல் ஒட்டிக் கொண்டிருந்த என்னைப் பார்த்து மயங்கி விட்டாளே!

பெண்ணைக் கொடுத்த தோஷத்திற்காக மாமனார் கொஞ்சம் பணமும் கொடுத்தார், வாங்கிக் கொண்டேன். கையில் பணத்தை வைத்துக் கொண்டு, அதை எதில் முதலீடு செய்வது என்று புரியாமல் நின்றிருந்த போதுதான், தருமுவைச் சந்தித்தேன்.

பால்ய சிநேகிதன். சென்னையில் வியாபாரம் துவங்கி நிலைத்து விட்டானும். விஸ்தரிப்பதில் முனைந்திருக்கிறான். அதுவும் என் அதிர்ஷ்டம்தான். ஊர் ஊராய்ச் சுற்றி அலைந்து வியாபாரத்தைப் பெருக்க ஒப்புக் கொண்டு விட்டேன். விண்ணப்பம் போடாமலேயே வேலை கிடைத்து விட்டது.

ஆரம்ப நாட்களில் வருமானம் ஒன்றும் அதிகமில்லை. ஞானத்தின் உறவுக்காரர்கள் இலை மறைவு காய் மறைவாய்ப் பேச ஆரம்பித்தார்கள், ''அழகு, அழகு' என்று இப்படியொரு அன்னக்காவடியையா கட்டிக் கொள்ள வேண்டும், என்ன தலையெழுத்தோ' வென்று.



'தான் விரும்பி மணந்தவனை இறக்கிப் பேசுவதாவது' என்று ஞானத்துக்கு ரோஷம். நான் வேலைமேல் நாள் கணக்கில், சில சமயம் வாரக் கணக்கில் வெளியூர் போனாலும், வீட்டில் தனியாகவே இருப்பாள். துணைக்குக் கூட யாரையும் அழைத்துக் கொள்ள மாட்டாள். அப்படி ஒரு சுபாவம். அவளைப் போல மனைவி எங்கே கிடைப்பாள்?

ஆனால், நான் என்ன செய்தேன்? ஒரு முறை தெற்கே போயிருந்த போது, அவளை, செங்கமலத்தைச் சந்தித்தேன், உறவு கொண்டேன். அதுதான், அந்தக் குலத்தில் பிறந்தவள். அதெல்லாம் சட்டம் வருவதற்கு முந்தின நாள்தானே! ரொம்ப சகஜம். ஆனாலும் எங்கள் சந்திப்பு வேறு மாதிரி. பார்த்ததுமே, எங்களையும் அறியாமல் ஒருவரிடம் ஒருவர் ஈடுபாடு ஏற்பட்டு விட்டது.

அந்தக் குலத்தில் பிறந்து விட்டாளே தவிர, குணத்தில் எவ்வளவோ மாறுபாடு. மலர் போல் அவள் மடலவிழ்ந்த காலத்தில்தான், ஏதோ தற்செயலாக நிகழ்ந்தது போலன்றி, என்னவோ காலம் காலமாய் எதிர்பார்த்துக் காத்து நின்றது போல் நிகழ்ந்தது எங்கள் சந்திப்பு.

அவளுக்காகவே நான் அவ்வூருக்கு அடிக்கடி போனேன். வியாபார நிமித்தம் அவ்விடத்தில் இரண்டாம் பட்சமாய் போயிற்று. இதனால் நான் ஞானத்தை மறக்கவுமில்லை, புறக்கணிக்கவுமில்லை. என் மேல் அப்படியொரு பாசம் கொண்டிருந்த மனைவிக்கு, நான் இப்படி அடாத காரியம் செய்யக் கூடாது என்று அவ்வப்போது தோன்றும். ஆனாலும் இந்தப் புதிய உறவு என்னையும் மீறிய ஒரு விலக்க முடியாத பந்தமாயிற்று. ஏன் என்றே விளங்கவில்லை.

நான் நினைத்துக் கொண்டிருக்கும் போது, அவளே எதிரே நுழைகிறாள். அவளைத்தான் தேடிக் கொண்டிருந்தேன். அத்தனை பேரையும் தாண்டிக் கொண்டு, அவளை நோக்கி விரைகிறேன்.

அரக்கு நிறப் புடவையை அவள் நீவி உடுத்தியிருப்பதே வெகு நேர்த்தியாக இருக்கிறது. அத்தனை கும்பலிலும், அவள் 'பளிச்'சென்று ஒரு தனித் தன்மையோடு தென்படுகிறாள்.

''இப்போதானு வரது, யார் கல்யாணம்னு உன் மனசிலே நினைப்பு?''

''ரொம்பத்தான் கேக்கறீங்களே, முன்னடியே வந்து நான் சாதிக்கப் போறது என்னத்தை? என்னைப் பொறுத்தவரை, யார் வீட்டுக் கல்யாணமோதானே!''

''இந்தா, இந்த இடக்குதானே வேணுங்கறது. நான் வந்து எவ்வளவு தூரம் சொல்லிட்டு வந்தேன். ...உம்!''

உதட்டை ஓர் அரைச் சுழிப்புச் சுழித்துவிட்டு, அவள் பதில் சொல்லாமலே உள்ளே நகர்கிருள்.

பக்கத்து நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தவர்கள் முகங்களிலெல்லாம் ஒரு லேசான கேள்விக்குறி தொக்கி நிற்பதை என்னுல் உணர முடிகிறது.

அவள் அதற்குள் நாற்காலிகளைத் தாண்டி, பெண்கள் உட்காருவதற்காக ஜமக்காளம் விரித்திருந்த இடத்தில் சற்று ஒதுங்கியே அமர்ந்து கொள்கிருள். ஐந்து நிமிடத்துக்குப் பின், கொஞ்சம் நகர்ந்து பந்தற்காலின் மேல் சாய்ந்து கொள்கிருள்.

அப்படி அவள் இருப்பதை இந்தக் கோணத்தில் பார்க்கும் போது, ஏதோ சிற்பம் ஒன்று சிந்தனை வயப்பட்டிருப்பதைப் போல் தோன்றுகிறது. லட்சண சாஸ்திரப்படி அளவெடுத்துச் செய்தாற் போன்ற அங்க அமைப்புக்கள்.

திரும்பிக் கூடப் பார்க்காமல் அப்படியென்ன யோசனை யென்று ஊகிக்க முயலுகிறேன்.

இருக்காதா பின்னே? இந்த மாதிரி ஒரு கோலாகலத்தில்தான் என்னேடு பகிரங்கமாய்த் தோளுக்குத் தோள் இணைந்து, சரி சமமாய் நின்று பங்கு கொள்ளவில்லையே, அதற்கு உண்டான பாத்தியதையை நான் அவளுக்குத் தரவில்லையே என்றிருக்கலாம்.

ஒருவேளை, தானும் பெண்தானே. எந்தக் குலத்தில் பிறந்திருந்தாலும், மனதார ஒருவனை, அதாவது என்னை வரித்தவள்தானே, அப்படியிருக்கும் போது, இந்த மாதிரியான கொண்டாட்டமோ, களிப்போ, திருநாளோ தன் வாழ்வில் இடம் பெற்று, தான் அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று அந்த இழப்புக்கான வருத்தமாகவும் இருக்கலாம் என்றும் தோன்றுகிறது. என்னுள் பச்சாதாபம் சுரக்கிறது.

முதன் முதலில் நான் அவளைச் சந்தி... போது, அவளுக்குப் பதினறு, பதினேழு வயதிருக்கலாம். கைப் பிடிக்கவில்லையே தவிர, நாங்கள் கணவன் மனைவியேதான்.

அப்போது எனக்கு வசதி அதிகமில்லை. அப்புறம் வர்த்தகம் பெருகப் பெருக, வாழ்க்கையில் வசதிகள் ஏற ஏற, நான் அவளுக்கு எதெதையோ கொடுத்தேன். அவள் திருப்தி அடையவில்லை.

ஒரு கௌரவமான மனைவியாக வாழ ஆசைப்பட்டாள். அந்தச் சூழ்நிலையை விட்டு வெளியேறி என் சுக துக்கத்தில் சம பங்கு கொண்டு, என் நிழல் போல் வாழ விரும்பினுள். 'ஏற்கெனவே கல்யாணம் ஆனவன்' என்று நான் சொன்னுலும் 'அக்காவுக்கு தங்கச்சியாட்டம்' இருக்கேனே, என்னுலே ஒரு தொந்தரவும் வராது' என்று பிடிவாதம் பிடித்தாள். இன்றுவரை அதுமட்டும் நான் அவளுக்கு அருளாத வரம்.

கொஞ்ச நாளில் தருமு அகால மரணம் அடைந்தாள். வியாபாரத்தை நானே வாங்கிக் கொண்டேன். தொழில் வளர்ந்தது.

தமயந்தியைப் பார்க்க உள்ளே போகிறேன்.

அலங்காரம் முழுவதும் முடிந்து, கண் கொள்ளா அழகுடன் அமர்ந்திருக்கிருள் அவள். சந்தனத்தைக் குழைத்துப் பூசினுற் போன்ற உடல். கண்களில் கனவுகள் இதழ் விரிக்கின்றன.

என்னை ஏறிட்டுப் பார்த்து வெட்கத்தோடு தலையைக் குனிந்து கொள்கிருள் தமயந்தி. அப்படியே கவிதை நயம் மிளிர்கிறது.

''என்னம்மா, ரெடியா?'' என்று கேட்டு அவளை இழுத்து அணைத்துக்



அமெரிக்காவுக்கான நமது புதிய தூதர் கௌல், பதவிப் பிரமாணக் கடிதத்தை நிக்ஸனிடம் கொடுத்த போது நிக்ஸன், போட்டோகிராபரிடம் சொன்னது: ''இவர் பெரிய நாட்டிலிருந்து வருகிருர். பெரிய படமாக எடுங்கள்.''







1974-ம் ஆண்டு 'நட்சத்திரக் குழந்தை'களின் வருஷமாக இருக்கப் போகிறது. டிம்பிள், ராக்கி, ஜெயபாதுரி, மௌஷுமி சட்டர்ஜி, ஸயிராபானு — அவ்வளவு பேரும் தாயாராகப் போகிறுர்கள்!

கொள்கிறேன். கூட இருந்த பெண்கள் சிரிக்கின்றனர்.

''என்னைப் பார்த்துதானே சிரிக்கிறீங்க? கொஞ்சறத்துக்கு இன்னெருத்தன் அங்கே மாலையும் கழுத்துமாய் காத்துண்டிருக்கான், இந்த அசட்டு அப்பனுக்குத் தெரியல்லியேன்னுதானே சிரிக்கிறீங்க'' என்கிறேன்.

''போங்கப்பா...'' — செல்லமாய்ச் சிணுங்குகிருள் தமயந்தி. சிரித்துக் கொண்டே நகர்கிறேன். பந்தலில் வந்து புதிதாய் வந்திருப்பவர்களைக் குசலம் விசாரிக்கிறேன். பெண்கள் பக்கம் பார்க்கும் போது, செங்கமலத்தின் முகம் வாடியிருப்பது போல் படுகிறது.

ஒரு பெருமூச்சுடன் மாடியில் என் அறைக்குப் போகிறேன். என்னவோ அவள் நினைவே வருகிறது.

திடீரென்று ஒரு நாள் நாங்கள் பங்களா வாங்கிக் குடிபோன புதிதில் செங்கமலம், வீட்டில் வந்து நின்ருள். வழக்கமான சிரிப்பு.

அந்த அதிர்ச்சியிலிருந்து நான் மீண்டு, 'அவள் ஏன் வந்தாள், எப்படி வந்தாள்' என்று விசாரிப்பதற்குள் உள்ளிருந்து ஞானம் வந்து விட்டாள்.

அவளைக் கண்டதும், 'அக்கா' என்று ரொம்ப சுவாதீனமாக உறவு கொண்டாடிக் கொண்டு அழைத்ததே ஞானத்துக்கு அடிவயிற்றில் பகீரென்றிருக்க வேண்டும்.

சரி, நடந்தது நடந்துவிட்டதென்று நான் விஷயத்தை முழுவதும் விளக்கினேன்.


நான் எதிர்பார்த்தது போல் ஞானம் இந்த விஷயத்தை மட்டும் அத்தனை சுலபமாக எடுத்துக் கொள்ளவில்லை. இடிந்து போனுள்.

''உங்களையே மனதார நம்பியிருக்கிறதென்ன, பாக்கிப் பேர் ஒரு சொல் சொல்ல இடம் கொடுக்காமல் உங்கள் கௌரவத்தை நான் கட்டிக் காப்பதென்ன, எப்படி என்னை மறந்து, அவளிடம் மனம் போயிற்று உங்களுக்கு?'' என்று குமுறினுள்.

''உன்னை மறக்கவில்லையே ஞானம்! எனக்கும் அவளுக்கும் விட்டகுறை, தொட்டகுறை இருந்திருக்க வேண்டும். இல்லாமல் இப்படி ஒரு பந்தம், பிணைப்பு உண்டாக முடியாது. நான் சபல புத்திக்காரனு, வேறு யாராவது பெண்களை எப்போதாவது ஏறெடுத்தாவது பார்த்திருக்கிறேனு? இது மட்டும் எப்படி நேர்ந்தது என்று எனக்கே தெரியாது. என்னை நம்பு'' என்று வாதாடினேன். அவள் ஒப்பவில்லை. செங்கமலத்தை வெறுக்கவுமில்லை; வெளியில் கூறி கலாட்டா செய்யவுமில்லை; உள்ளுக்குள்ளேயே நைந்து போனுள். நான் சொன்ன சமாதானம் எதுவும் எடுபடவுமில்லை. மனம், உடலையும் பாதித்து, படுக்கையாகி விட்டாள்.

ஒரு சூழ்நிலை மாற்றத்துக்காக வடக்கே மாற்றிக் கொண்டு போனோம். ஞானத்துக்கு உதவியாக செங்கமலமும் வந்தாள். ஞானமே பிடிவாதமாய்த் தன் தோழி என்று சொல்லிக் கொண்டு அவளையும் அழைத்து வந்தாள். வியாபாரியால் சும்மா இருக்க முடியுமா? அங்கே மார்க்கெட் நிலவரங்களை ஆராய ஆரம்பித்தேன். எல்லாம் கைகூடி வந்த அந்த வேளையில்தான் தமயந்தி பிறந்தாள். கல்யாணமாகிக் கிட்டத்தட்ட பதினைந்து வருடங்களுக்குப் பின் பிறந்த மகள். அதனால்தானோ என்னவோ அவளிடம் அப்படியொரு வாஞ்சை.

ஆனால் ஞானம் தாக்குப் பிடிக்கவில்லை. தமயந்தி பிறந்த கையோடு அவள் போய் விட்டாள். மனம் ஒடிந்து போய் நான் மறுபடி சென்னைக்கே மாற்றிக்கொண்டு வந்துவிட்டேன்.



கைக் குழந்தையைப் பார்த்துக் கொள்ள உறவினர், மற்றோர் முன் வந்தனர். செங்கமலம் எவ்வளவு கெஞ்சினாள், கதறினாள், ஊஹூம், நான் ஒப்பவில்லை. என் வாழ்க்கையின் சிக்கல்கள் வெளியே யாருக்கும் தெரிவதை நான் விரும்பவில்லை.

சமூகத்தின் மேல்மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு, வர்த்தகத்துறையில் ஒரு முக்கிய புள்ளியாக நான் மாறும் தருணம். என்னுடைய மதிப்பை எதுவும் பாதித்துவிடக் கூடாது என்ற ஒரே குறிதான். தமயந்தி என்னிடமே வளர்ந்தாள். செங்கமலம் பழைய படியே இருந்தாள்.

அந்தத் தமயந்திக்குத்தான் இன்று திருமணம். இனி அவளைப் பிரிந்துவிட வேண்டியிருக்கும். வெளி நாட்டுக்கு அவள் போய்விடுவாள் என்று நினைக்கும் போதே நெஞ்சைப் பிழிகிறது.

இந்த மகிழ்ச்சியை எனக்குரிய இருவருக்கும் அளித்தேனா என்று கேட்கிறீர்களா? ஒரு குற்றவாளியின் உணர்வோடு இல்லை என்று ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

செங்கமலத்தின் குறுக்கீட்டால்ஞானம் தானாகவே என்னைவிட்டு விலகிவிட்டாள். அப்புறம் அதிக நாள் வாழவும் இல்லை. நான் இனிமேல் ஈடுசெய்யவே முடியாத விஷயம் இது.

சரி, அந்தச் செங்கமலத்துக்காவது முழுச் சந்தோஷம் அளித்தேனா என்றால், அதுவுமில்லை. அவள் என்னிடம் ஒன்றே ஒன்றைத்தான் கேட்டாள், தன்னை வெளிப்படையாக ஏற்று, மனைவி என்ற பதவியைத் தரும்படி. இதைத் தரவில்லை. ஞானம் போன பின்பு கூட அவளை மணந்திருக்கலாம். துணியவில்லை. என்னவென்று சொல்லட்டும்?

காலம் கடந்து விட்டது.

தமயந்தியின் அறை வாயிலில் தலை நீட்டும்போது, அவள் முன்னே வந்து என் கையைப் பற்றிக் கொள்கிறாள்.

''ஏம்பா நீங்க இப்படிப் பண்ணிட்டீங்க?''

'எப்படி?' என்று விழிக்கிறேன்.

''பாருங்கப்பா, எல்லாரும் 'ம்......! அம்மா இல்லியேடி, அவ இருந்து பாக்கலியே'ன்னு என்னைப் பார்த்தவுடனே முதல்லே இதைத்தாம்பா சொல்றாங்க. நல்லவளோ, பொல்லாதவளோ, நீங்க இரண்டாம் கல்யாணம்

பண்ணிண்டிருந்தா, எனக்கு அம்மான்னு பேருக்காஞ ஒருத்தி இருந்திருப்பாளேப்பா...!''

தூக்கி வாரிப் போட நான் அறையில் இருந்த மற்றவர்களைப் பார்க்கிறேன். தமயந்தியின் பாட்டி, ஞானத்தின் அம்மா முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொள்கிருள்:

பிறந்ததிலிருந்து அம்மா என்ற தத்துவத்தையே உணராத குழந்தை தமயந்தி. தாய்க்கும் சேர்த்து ஆதுரத்துடன் நானே வளர்த்து விட்டேன். சிரிப்பும், குதிப்பும், அட்டகாசமும் தவிர, 'உரக்கப் பேசாதே, அதிர நடக்காதே' போன்ற அம்மாவின் அறிவுரைகள் அவள் அறியாதவை. சின்ன வயதில் அவளைக் கல்யாணம் செய்துகொடுக்க நான் ஒப்பினதற்கு இதுவும் ஒரு காரணம்தான்.

எதிரே நிழலாடுகிறது. செங்கமலம் தான். ஏதோ கேட்க வாயெடுக்கிருள்.

அதற்குள் உள்ளே யிருந்து தமயந்தியின் குரல் தெளிவாகக் கேட்கிறது. கோபத்துடன் யாரிடமோ கேட்கிருள் அவள்:

''அவதான் புண்ணியவதி போயிட்டாளே! எனக்கு அம்மா இல்லேதான்... ஒத்துக்கறேன். ஆஞ நான் அனுதையில்லேயே! சும்மா ஏன், இப்படி கண்ணிலே தண்ணி விடுறீங்க? செத்துப் போயிட்ட அம்மாவைச் சந்தியிலே இழுக்கணுமா?''-தமயந்தியின் குரல் தேய்ந்து விடுகிறது.

பொட்டில் அடித்தது போல் பொறி கலங்கி 'பட்'டென்று நிற்கிருள் செங்கமலம்.

எனக்கு அவளை ஏறெடுத்துப் பார்க்கத் தைரியமில்லை. உயிரும் சதையும் துடிப்புமாக எதிரே இருப்பவளுக்குச் சமாதி கட்டி விட்டேனே!

வடக்கே தமயந்தி பிறந்தாளே, ஞானத்துக்கல்ல, இவளுக்குத்தான். நிஜம்தான். அந்த அதிர்ச்சிதான் ஞானத்துக்குக் காலஞய் வந்திருக்க வேண்டும். என் வறட்டு கௌரவத்துக்குத் தாய்ப்பாசம் கூடப் பலியாகி விட்டது. சென்னைக்கு வந்தபின் இவள் ஒரு நாள் கூடக் குழந்தையைத் தொட்டுத் தூக்கி விளையாடினதில்லே, உறவு கொண்டாடினதில்லே. எட்ட நின்று பார்த்ததோடு சரி.

என் மனம் ஒரு கணத்தில் உருகிப் போய்விடுகிறது. ஆணவம் நிரம்பிய ஆணினத்தின் பிரதிநிதி நான்தான் போலவும், ஆயுளெல்லாம் அநியாயத்திற்குட்பட்டாலும், பூமி தேவியைப் போல் பொறுமையோடு இருக்கும் பெண்ணினத்தின் பிரதிநிதி அவளே போலவும் தோன்றுகிறது எனக்கு.

'பாவம், அவளென்ன தப்பு செய்தாள், எதற்காக அவளுக்கு இந்தத் தண்டனை? அவள் என்னைத்தானே மனப்பூர்வமாக நேசித்து தன்னை ஒப்படைத்தாள். இனிமேல் ஞானத்துக்காக நீ ஒன்றும் செய்ய முடியாது. உனக்குள்ள ஒரே சந்தர்ப்பம் இதோ, இவளுக்கிழைத்த அநியாயத்திற்காவது பரிகாரம் தேடியதாய் இருக்கும்.'—எனக்குள் நானே போராடிக் கொள்கிறேன்.

தமயந்தி, நாளைய மணப் பெண். அவள் கல்யாணத்துக்கு நான் கொடுக்கக் கூடிய எல்லாப் பரிசுகளையும் விட இதுதானே சிறந்ததாய் இருக்கும். இட்டு நிரப்ப முடியாத அம்மா ஸ்தானம் பூர்த்தியாகும்.

'தமயந்தி' என்று அழைக்கிறேன். அறைக்கு வெளியே அவள் வருகிருள்.

வார்த்தைகள் நாக்கு நுனி வரையில் வந்துவிடுகின்றன. எப்படிச் சொல்வது, சொல்ல ஆரம்பிப்பது என்று தயங்கி இந்தப் பக்கம் திரும்புகிறேன்.

எதிரே பந்தலில் எத்தனை எத்தனை பேர்! இவ்வளவு பேரும் எனக்கு, என் சொல்லுக்குக் கொடுக்கும் மதிப்புஎன்ன? இனி, என்னைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள்? அதோ, அந்தக் கோடியில் இருக்கிருரே சம்பந்தி, அவர் என்ன நினைப்பார்? தமயந்தியின் எதிர்காலம் என்ஞகும்?

நான் சிலிர்த்துக் கொள்கிறேன். தமயந்தியை முதுகில் தட்டிக் கொடுக்கிறேன்.

''நீ எவ்வளவோ புத்திசாலின்னு நினைச்சேனே! மணையிலே உக்கார வரப் போற பொண்ணு, இப்படியா உரக்கப் பேசறது? டைம் ஆயிடுச்சு, ஐயரு கூப்பிடுருர் பார். இதோ, இவங்க உன்னைக் கூட்டிட்டு வருவாங்க. நான் போய் மாப்பிள்ளையைக் கவனிக்கிறேன்.''

செங்கமலத்தை, அவள் என்ன நினைத்திருந்தாலும் சரி, ஏறெடுத்துப் பார்க்காமலேயே அவள் பக்கம் கையைக் காட்டிவிட்டு 'விடுவிடு'வென்று பந்தலில் இறங்கிச் சம்பந்தியை நோக்கி நடக்கிறேன்.

பெண்ணை மேடைக்கு அழைத்து வரும் பாக்கியத்தையாவது செங்கமலத்துக்குக் கொடுத்திருக்கிறேனே! இந்த உலகம், இன்னமும் ஆண்கள் உலகம் தானே!

'குழந்தையும் தெய்வமும்' என்று ஒரு படம் வந்ததே, ஞாபகமிருக்கிறதா?

அதில் நடித்த குழந்தை நட்சத்திரம் குட்டி பத்மினி நினைவில் வருகிறாரா?

சிறப்பாக நடித்ததற்காக ஜனாதிபதி பரிசையும் குட்டி பத்மினி பெற்றாரே, அதுகூட மறந்து விட்டதா?

பரவாயில்லை, என்ன செய்வது? அந்தப் படம் வந்து பல வருடங்கள் ஓடி விட்டன. அன்று குட்டி பத்மினியாக இருந்தவர், இன்று வேகமாக வளர்ந்து, குமாரி பத்மினியாக இருக்கிறார்.

''ஒரு கலைவிழாவுக்கு சிங்கப்பூருக்கு நான் போயிருந்தேன். நான் ஸ்ட்ரிக்ட் வெஜிடேரியன். அங்கேயோ 'நான்-வெஜிடேரியன் ஃபுட்' தான் கிடைச்சுது. ஒரு மாசம் வெறும் ஐஸ்கிரீமும், சாக்லேட்டும்தான் எனக்கு ஆகாரம். அதனாலே கொஞ்சம் உடம்பு பெருத்துப் போச்சு...'' இந்த இடத்தில் குமாரி பத்மினி பேசவில்லை— குழந்தை பத்மினி, மழலை பேசியது.



''இப்போ ஒரு வாரமா அவ டயட்லே இருக்கா. அவ வெயிட்டைக் குறைக்கறதுக்கு நான் பாடுபட்டிண்டிருக்கேன்.'' — இது குட்டி பத்மினியின் அம்மா ராதாபாய்.

ராதாபாயும் பிரபல 'அம்மா' நடிகை. படவுலகின் நுணுக்கங்களைத் தெரிந்து வைத்திருக்கும் இவர், பேசும் போது பக்குவமாகப் பேசுகிறார்:

''இவ்வளவு நாள் சின்னப் பிள்ளை, சின்னப் பிள்ளைன்னு இவளை குறை சொல்லிக் கிட்டிருந்தாங்க. 'இவளுடைய குழந்தை மூஞ்சி மாறணும், ரசிகர்கள் அந்த முகத்தை மறக்கணும்; அதனாலே ஒரு 'லாங் கேப்' இருக்கணும்' அப்படி, இப்படின்னு சாக்கு போக்கு சொல்லிக்கிட்டிருந்தாங்க. இப்போதான் இவளுக்கு பதினாறு வயசாயிடுச்சே ... படங்களில் நடிக்கக் கூப்பிடறதுதானே? டீன் ஏஜ், டீன் ஏஜ்னு வாய் கிழியப் பேசறதோடு சரி..., இருக்கிற ஆர்ட்டிஸ்டைப் பயன்படுத்தாம, ஏதோ புதுசு புதுசுன்னு பறக்கறாங்களே...''— பொரிந்து கொட்டினார் ராதாபாய்.

குட்டி பத்மினி இப்போது நாடகங்களில் நடித்து வருகிறார். 'பத்மினி கிரியேஷன்ஸ்' என்று ஒரு நாடகக் குழுவையும் வைத்திருக்கிறார். பெரும்பாலும் வெளியூர்களில் தான் நாடகங்களை நடத்துகிறார். மாசத்துக்கு இருபது நாட்கள் வெளியூர் தான்.


"...மழமழவென்று
அழகாகவும்
நாகரீகமாகவும்
இருக்கவேண்டும்"
":ப்ளீட்
:பவுண்டன் பேனக்கள்
உங்கள் தேவையறிந்து எழுதுபவை"
* 15 மாடல்களுககு மேல் உள்ளன
* 1 ஆண்டுக்குமேல் உழைக்கும் இரிடியம் முனை நிப்புகள்.
எய்ரோமேட்டிக், வேக்வம், ரெகுலர் நிரப்பல் முறைகள்.
* உறபத்திப் பழுதுகள் இல்லாமைக்கு உத்தரவாதம்
* எவர் சக்திக்கும் ஏற்ற விலைகள்.
:ப்ளீட் எழுதும் எழுத்து வெற்றநடை போடும்
Fleet
வட்டுமுல் இண்டஸ்ட்ரீஸ் பி. லிட்,
டெல்ஸ்ட்டார், 9-9ர, எஸ் பாட்கர் மார்க்,
பம்பாய் 400 036,
போன்கள்: 355238/9, 354425
Creative Unit-A 1095


ஐடெக்ஸ்
டீலக்ஸ்
குங்குமம் பவுடர்
மெழுகு தேவையில்லை-நேரடியாக இட்டுக்கெ · ளலாம். பிளாஸ்டிக் டப்பிகளில் பன்னிரண்டு கலர் களில் எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.
பெண்மையின் அழகு பொலிய
ஐடெக்ஸ் அழகு சாதனங்கள்
EYETEX
DELUXE
KUMKUM
Aravind Laboratories
MADRAS-33

கல்லூரி வாசலின் முன் குலுங்கி நின்ற காரிலிருந்து ஒயிலாக இறங்கிய அவள், நல்ல உயரம்; சிவப்பு நிறத்திற்கு எடுப்பாக ரோஜா கலரில் சேலை. அதே நிறத்தில் குட்டையான 'ப்ளவுஸ்'.

அவள்...? வினுத்தா!

திருமதி வினுத்தா ராகவன் ஒரு மாணவி.

படிப்பு - எம்.எஸ்ஸி. இறுதியாண்டு.

நேராக விசிட்டர்ஸ் ஹால் பக்கமாக நடந்தாள். தன்னை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த அட்டெண்டர் மரகதத்தைக் கண்டு—

''மரகதம், இன்னிக்கு எல்லோரையும் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறாயல்லவா? வெரி நைஸ்! ஒரு நிமிஷம்... இதோ, 'புரொபசரை'ப் பார்த்து விட்டு வந்து விடுகிறேன்.''

''குட் மார்னிங் மிஸ்.''

''ஹலோ ... வெரி குட் மார்னிங். ஹவ் ஆர் யூ? ஃபைன்?''

''எஸ் மிஸ். மிஸ்... இன்னியிலிருந்து என்னுடைய 'தீஸிஸ்'க்குப் 'பிரிபரேஷன்' ஆரம்பிக்கிறேன் மிஸ்... வித்யுவர் பிளெஸ்ஸிங்ஸ்!''

''ஓ... ஷ்யூர்...! மிஸஸ் வினுத்தா. உன்னை மாதிரி 'மெச்சுரிடியான' ஸ்டூடெண்ட்ஸுக்கு கைடாக இருப்பது ஒரு பிளஷர். ஒரு மெச்சுரிடியுள்ள ஸ்டூடெண்டினால் என் சிரமம் குறையும் என்றே நினைக்கிறேன். நீ எடுத்திருக்கிற 'ஹேபிட் ஃபார்மேஷன்' இன்ட்டரெஸ்டிங் சப்ஜெக்ட். நீ அந்தக் குழந்தைகளோட பழகறது ஒரு தனி அனுபவமாக இருக்கும். பெஸ்ட் ஆஃப் லக்!''

வினுத்தாவின் புரொபசர் டாக்டர் பர்வதவர்த்தினி எவ்வளவோ பட்டதாரிகளுக்கு 'கைடாக' இருந்து நல்ல விளைவுகளை ஏற்படுத்தியவள்.

வினுத்தா எடுத்திருந்த 'சைல்ட் டெவலப்மெண்ட்' பாடத்தின் கீழ் 'ஹேபிட் ஃபார்மேஷன்' திறனாய்வுக்கு கைடாக இருந்தாள், டாக்டர் பர்வத வர்த்தினி.



வினுத்தாவின் பாடம்— நான்கு, ஐந்து வயதுள்ள ஐந்து பெண் குழந்தைகள், ஐந்து ஆண் குழந்தைகளை மிகப் பின்தங்கிய குடும்பங்களிலிருந்து வரவழைத்து, அவர்களின் மன இயல்புக்கு ஏற்றவாறு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட நாட்களுக்குள் அவர்களிடம் ஏற்படும் வளர்ச்சியினைப் பற்றிய காரண காரியங்களைச் சான்றுகளுடன் திறனாய்வு செய்ய வேண்டும்.

விசிடர்ஸ் ஹாலுக்கு வந்து நின்று, தன் பாடங்களை ஒரு நோட்டம் விட்டாள்.

சம்மணம் போட்டு, வெகு கஷ்டப்பட்டு அமைதியாகப் பத்து சிறுசுகள்— மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்தன.

வினுத்தா ஒரு 'மம்மி'

தன்னைக் கண்டு பயந்து உட்கார்ந்து கொண்டிருக்கும் அந்தச் சிறுசுகளிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தாள்:

''உம் பேரு என்னம்மா?''

''ஊ...சா...!''

''ஊசா...வா. ஊசா இல்லேம்மா. உஷா! நல்ல பேரு. சரி... உம் பேரு என்ன குட்டி?''

''மயகதம்...!''

''மரகதமா... உம் பேரு?''

''சனியன்!''

''ஐயையோ... சனியனா? உம் பேரு என்னம்மா...?''

''அது எனக்குத் தெதியாது. எங்கம்மா எப்பவுமே என்னெ 'சனியன்'னுதான் கூப்பிடும்.''

'களுக்' கென்று சிரித்து விட்டாள்!

''சரி, நாளைக்கு வரும்போது உங்கம்மாகிட்டே உனக்கு என்ன பேருன்னு கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டு வருவியாம்... என்ன?''

ஒரு 'சிறுசு', வினுத்தாவின் மென்மையான சேலையைத் தன் இரு பிஞ்சு விரல்களால் 'நசுக்கி நசுக்கி' வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. 'அதற்கு' அந்த மென்மையான சேலையே ஒரு 'காட்சி'யாக இருந்தது. அதைக் கவனித்தாள் வினுத்தா.

''என்னம்மா... உனக்கு இந்த மாதிரி சேலை வேணுமா...?''

''ஊக்கும்... வாந்தாம்!''

''வேண்டாமா... சரி, உம் பேரு சொல்லு பார்க்கலாம்...!''

''எம் பேரு, அன்னம்மா!''

''அன்னம்மாவா? நல்லா யிருக்கே!'' என்று சொல்லிக் கொண்டே பையன்கள் பக்கம் பார்வையைச் செலுத்தினாள். அதில் ஒரு 'பொடியன்' வினுத்தாவை வெகு அழகாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் 'பிஞ்சு'ப் பார்வையில் உள்ள கூர்மையால்— அது ஓர் ஆணின் பார்வை என்பதால்-அவள் உள்ளத்தில் ஓர் எலக்ட்ரிக் ஷாக்! சேலையை இழுத்துச் சற்று மறைத்தாள் வினுத்தா. அப்பப்பா!...

''உம் பேரு என்னப்பா?''

வெடுக்கென்றுசொன்னான்:''ராமெ.''

''அடுத்து... நீ...?''

''வயதராஜன்.''

''வரதராஜன்... வெரி குட்! அப்புறம் நீ...?''

''துப்பையன்.''

''சுப்பையன்... சரி...''

''இதெப் பாருங்கடா... பசங்களா... நாளைக்கு வரும்போது அவங்கவங்களுக்கு என்ன பேருன்னு சரியா தெரிஞ்சுட்டு வரணும். நாளைக்கு எல்லோரும் குளிச்சுட்டு, சுத்தமா வரணும், தெரியுமா?''


அட்டெண்டர் மரகதத்திடம் அவர்களை யெல்லாம் அவரவர் வீட்டில் கொண்டு பத்திரமாக விட்டுவிடச் சொல்லிவிட்டு, தன் டிபார்ட்மெண்டில்

மருதம்

[illegible]

"விழி... விழி...!"

[illegible]



குட்டிக் கதைகள்

[illegible]

ஒரு நாள் அரசன் [illegible] கொண்டிருந்த போது, "அரசே! ஆண்டவன் திருக்கோவிலில் இல்லை என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று கவி உரக்கக் கூறினான்.

"அப்படிச் சொன்னீர்கள்?" என்று ஆத்திரத்துடன் கேட்டான் அரசன்.

"அரசே! ஆண்டவன் தன் உடலில் [illegible] பாதியை [illegible] கொடுத்து விட்டான். தெரியாதா?"

"அவர் தலையில் தரித்த கங்கை?"

"அவள் கழுத்தில் விழுந்துவிட்டாள்."

"ஆண்டவன் சிரத்தில் தரித்த சந்திரன் என்ன ஆனான்?"

"ஆகாயத்தில் பறந்து சென்று இன்றும் அங்கேயே பிரகாசிக்கிறான்."

"ஆண்டவனுடைய பிரபாவம் எங்கும் போகாதே!"

"அதைத்தான் தங்களிடம் கொடுத்து விட்டாரே!" என்றான் கவிஞன்.

அரசன் சிரித்துக் கொண்டே "அவருடைய [illegible]" என்றான்.

"அதை என்னிடம் கொடுத்து விட்டார், அரசே!"

[illegible]

— [illegible]

[illegible]

'செட்' செய்து கொடுத்திருந்தாள். கலிஃபோர்னியா பல்கலை கழகத்தில் ஐந்து ஆண்டுகள் மேற்படிப்புக்காகச் சென்றிருக்கும் கணவர் டாக்டர் ராகவன் திரும்புவதற்குள், தான் ஒரு 'எம். எஸ்ஸி' ஆகிவிட வேண்டும் என்று விஜித்ரா நினைத்துக் கொண்டிருக்கிறாள். இது அவளுக்கு இறுதி ஆண்டு.

கல்லூரியில் விஜித்ரா தன் 'பாடங்களை'க் கவனித்துக் கொண்டிருந்தாள். இது பத்தாவது நாள்.

முதலில் தன்னைப் பார்த்து, 'மலங்க மலங்க' விழித்துக் கொண்டிருந்த 'பாடங்கள்' இப்போது அவளிடம் ஏகப்பட்ட உரிமை பாராட்டிக் கொண்டிருந்தன. இந்த நிலை அவளது இயல்புக்கு நேர்மாறானது.

பத்து நாட்கள் ஆகியும்கூட, 'பாடங்களிலிருந்து' அவளுக்கு ஒரு 'திரில்' கிடைக்கவில்லை. 'சிறுக'கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாணியில் 'அழகு' காட்டிக் கொண்டிருந்தன. 'லாணி'யைக்

அலாவுதீன், ''நான் கேட்கவில்லை; அதனால் ஆண்டவன் தரவில்லை, தெரியுமோ?'' என்றான் பதிலுக்கு.

''இப்போது கேளும் பார்ப்போம்... எத்தனை நாட்கள்தான் இப்படியே இருப்பதோ தெரியவில்லை!''-மனைவி குடைந்தாள்.

அலாவுதீன் தோட்டத்திற்குச் சென்று மண்டியிட்டு, ''அல்லா! எனக்கு நூறு பொற்காசுகள் அளிப்பாயாக, முன்பு உன்னிடம் சேவகம்செய்தமைக்கு!'' என்று வாய்விட்டு இறைஞ்சினான்.

பக்கத்து விட்டு லேவாதேவிக்காரர் காதில் இந்த வசனம் கேட்டது. வேடிக்கை செய்ய நினைத்து உடனே நூறு பொற்காசுகளை ஒரு மூட்டையாக முடித்து அலாவுதீன் முன்பு எறிந்தார்.

அலாவுதீன் அதை எடுத்துக் தன் மனைவியிடம், ''பார்த்தாயா, இதோ என் சம்பளப் பணம்'' என்றான்.

மனைவியோ மகிழ்ந்து போனாள்.

இதைக் கண்ட லேவாதேவிக்காரருக்கு சங்கடம் முளைத்தது. அலாவுதீனிடம் வந்து நூறு பொற்காசுகளைக் கேட்டார்.

''அது அல்லா தந்த பணம்'' என்று வாதிட்டான் அலாவுதீன்.

கோர்ட்டுக்கு அழைத்தார் அவர்.

''இப்படி வந்தால் உன் பேச்சை பஞ்சாயத்தார் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஒரு காரியம் பண்ணு. உன் உடையும் குதிரையும் கொடு!'' என்றான்; அவரும் இசைந்தார்.

பஞ்சாயத்தார், விவகாரத்தைக் கேட்டனர்.

''அலாவுதீன்! உனது கட்சி என்ன?''

''எனது பக்கத்து விட்டுக்காரர் ஒரு பைத்தியம்.''

''அதற்கு நிருபணம்?''

''அவரது நாக்கே சாட்சி!''

''என்ன! நாக்கா சாட்சி?''

''ஆமாங்க... எல்லாமே தன்னுடையது என்பார். நூறு பொற்காசு விஷயம் இருக்கட்டும். எனது குதிரை, எனது உடை எல்லாமே தன்னுடையது என்பார், பிதற்றுவார். கேட்டுப் பாருங்களேன்!''

''ஐயோ, அந்தக் குதிரை, அந்த உடை எல்லாம் என்னுடையது!'' என்று அலறத் தொடங்கினார் லேவாதேவிக்காரர்!

அப்புறம் என்ன? வழக்கு தள்ளப்பட்டது!

—தாராமணாளன்.

எப்பொழுதும் தனக்குத்தானே பேசிக்கொண்டிருக்கும் பழக்கமுள்ள ஒரு மனிதன் இருந்தான். சிலவேளைகளில் தன்குரலை இருவிதமாக மாற்றிக் கொண்டு பேசுவான். அந்த ஊருக்கு வந்த ராஜா அவனைப் பற்றிக் கேள்விப்பட்டு, அழைத்து வரச் சொன்னார். ''ஏன் இப்படிப் பேசிக் கொள்கிறாய்?'' என்று கேட்டார் ராஜா. ''அரசே! அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஓர் அறிவாளியுடன் தான் நான் பேச விரும்புகிறேன் என்பது ஒன்று; ஓர் அறிவாளி பேசுவதையே நான் கேட்க விரும்புகிறேன் என்பது மற்றொன்று'' என்றான் அவன்.

-ஃப்ளாரன்ஸ் கேப்ரியல்.

கவனித்தவளுக்கு வயிற்றைக் குமட்டியது. மூக்கிலிருக்கும் இரண்டு துவாரங்கள் 'கொள்ளாமல்' வழிந்து கொண்டிருந்தது, 'கங்கா-ஜமுனு!'

''ஏய்...ராணி! என்னிது...மூக்கிலே? நா... சொல்லல்லே... சுத்தமா இருக்கணும்னு? எங்கே நா கொடுத்த 'ஹேங்கீ?'''

'ஹேங்கி' என்ருல் கைக்குட்டை என்பதைப் பழக்கி வைத்திருந்தாள். சாப்பிடும் போது எப்படி உட்கார்ந்து சாப்பிட வேண்டும், எத்தகைய உணவை அவர்கள் விரும்பிச் சாப்பிடுகிருர்கள்? எந்த முறையில் 'பக்குவம்' அவர்களுக்குக் கை வருகிறது—என்பது போன்ற பல சோதனைகள்—இந்தப் பத்து நாட்கள் அவள் போராடிச் செய்திருந்தாள். இந்த 'பத்து தினுசு'களிடம் அவள் கொண்ட அக்கறையில் நூறில் ஒரு பங்கு கூட, தன் செல்ல மகள் 'டிம்பிள்' இடம் காட்டியிருக்க மாட்டாள் வினுத்தா.

'டிம்பிள்' தான் 'விஜி'யிடம் வளர்பவளாயிற்றே! தன் குழந்தைக்குக்கூட, தன் கவனிப்பை எடுத்துக் கொள்வது நாகரிகக் குறைவாக நினைத்துக் கொண்டிருந்தாள் வினுத்தா.

''தோ... இருக்கே!'' என்று ஒரு கசங்கிய 'துணிச் சுருணை'யை— அது வினுத்தாவின் 'மொழி'யில் ஹேங்கீ. 'லாணி'க்கு அது கைக்குட்டை. எடுத்து மூக்கின் வலக்கோடியிலிருந்து இடக்கோடி வரை சாவதானமாக ஓர் இழுப்பு இழுத்து, முகத்தின் அகலத்திற்குப் 'பூசி மெழுகி' விட்டாள்!

''ஒய்...'' என்ற சத்தமே வினுத்தாவின் வாயிலிருந்து வந்து விட்டது.

''ஏக்கா... வாந்தி வருதா?''

'கர்மம் கர்மம்.'-மனத்தின் மௌனமான அர்ச்சனை.

வினுத்தா—கற்பனையில்கூட இப்படியொரு காட்சியை 'செட்' செய்து பார்த்திருக்க மாட்டாள்.

டிம்பிளை நினைத்துக் கொண்டாள்.

எவ்வளவு அழகான, எடுப்பான மூக்கு! 'வழுவழு' என்ற கன்னங்கள். அதைக் கூட அவள் அடிக்கடி சீர்திருத்த முயன்றதில்லை. அதற்குத்தான் விஜி இருக்கிருளே! டிம்பிளைக் குளிப்பாட்ட, அவளுக்கு 'டிரஸ்' செய்ய, சாதம் ஊட்டி விட!

'மம்மி' என்று கூப்பிட மட்டுமே வினுத்தா. 'மம்மி'யின் பணிகளுக்காக-விஜி!

''பாருங்க... எல்லாரும் கவனிங்க... இன்னிக்கு உங்களுக்கு ஒரு சின்னப் பாப்பாவைக் காட்டப் போகிறேன். அந்த சின்னப் பாப்பா எப்படி யிருக்கா, அவ எவ்வளவு சுத்தமா இருக்கான்னு பாக்கணும்... தெரியுதா?''

''ஓ... பாக்கருேம்...''

சற்று எட்டிப் பார்த்துக் கைகொட்டினுள்.

''டிரைவர்!''

''அம்மா.''

''இவங்களை யெல்லாம் காரிலே உக்கார வையுங்க... நா... வர்றே...''

காரின் பின்சீட்டில் 'அத்தனையையும்' அடக்கி விட்டார் டிரைவர். வினுத்தா முன்சீட்டில் உட்கார, கார் வினுத்தாவின் பங்களாவுக்கு விரைந்தது.

முன் 'போர்ட்டிகோ'வில் ஒரு சிறிய 'கொழுகொழு' பொம்மை பளிச்சென்று தெரிந்தது.

அது—டிம்பிள்!

வினுத்தாவின் 'பாடங்களின்' நேர்முக வர்ணனைக்குப் பயன்படப் போகும் பொருள்!

''டிம்பிள்...''

—இனிமையான குரல் கொடுத்துக் கொண்டே கதவைத் திறந்து, இறங்கித் தன் 'பாடங்களுக்கு'க் கதவைத் திறந்து விட்டாள்.

ஒவ்வொன்ருக இறங்கி நின்றது.

''எல்லோரும் பாருங்க... நா...அந்த 'பாப்பாவை'க் கூட்டிக் கொண்டு வருகிறேன்''—என்று சொல்லி, வினுத்தா, டிம்பிளின் அருகில் சென்று பார்த்தவள், ஓர் அடி பின்வாங்கினுள். காரணம்—

டிம்பிளின் அழகு!

'எடுப்பான' மூக்கில்—

நிலை கொள்ளாமல் வழிந்து கொண்டு இருந்தது, 'கங்கா-ஜமுனு!' இந்த மூன்றரை வருடங்களில் இல்லாத ஒரு காட்சி. வினுத்தாவுக்கு உடம்பெல்லாம் வியர்த்து விட்டது.

டிம்பிள்—சோம்பி, கண்களை இடுக்கிக் கொண்டு 'பாப்' தலை காற்றில் பறக்க, 'நாகரிகமாக' — 'சுத்தமாக' நின்று கொண்டிருந்தாள்.

''டிம்பிள்... என்ன ஆச்சு? விஜி எங்கே...?''

''விஜி..மம்மி? உள்ளே படுத்திருக்கா, அவளுக்கு ஃபீவர் மம்மி. பாவம், விஜி. எனக்கும் ஜுரம்...மம்மி...''

''அச்சச்சோ...என்ன அலங்கோலம்? கிளீன் பண்ணிக்கோ...'' என்று வினுத்தா முடிக்கும் முன்— டிம்பிள்.

வெகு வேகமாகத் தன் வலது கையால் ஓர் இழுப்பு—இடது கையால் ஓர் இழுப்பு! முகத்தின் அகலத்திற்கு ஒரு பூச்சு!

'கொல்' என்று அத்தனை 'பாடங் களும்' ஏக காலத்தில் சிரித்து விட்டன.

''ஐயையோ... அக்கா... இந்தப் பாப்பாவுக்கு 'ஹேங்கி'யே இல்லையா அக்கா? பாவம்!... எங்கிட்டே 'ஹேங்கி' இருக்கே. நா... தரட்டுமா?''

''ஏய் ராணி... போ... அந்தப் பக்கம்.''

''ஏ... அக்கா... அந்தப் பாப்பா... உன்னை 'மம்மி'ன்னு கூப்பிடறு?''

''மம்மின்னு, 'அம்மா'ன்னு அர்த் தம்.''

''ஐயையோ... அம்மா... மூக்கை சேலையாலேத்தான் தொட்ச்சுடுவா... எங்கம்மா எனக்கு அப்படித்தா தொடச் சுடுவா...! அவளுக்கு அம்மா இல்லியா நீ...?''

''ஏய், சனியனே... சும்மா இருக்க மாட்டே?''

''நா... தாக்கா... சனியனே! அவ லாணி!''

''ஓ...'' என்ற எக்காளச் சிரிப்பு.

'வினுத்தா...! திறனய்வில் 'திரில்' வேணும்னு தவிச்சியே, எப்படிப் பாத் தியா? 'ஹேபிட் ஃபார்மேஷ'னுக்கு உன் டிம்பிளைப் போல் எத்தனை 'பங்களாக் குழந்தைகள்' இருக்கோ... தெரியாமே போய் நீ குடிசைகளில் நுழைந்து நுழைந்து சேர்த்துக் கொண்டு வந்தயே வினுத்தா...!'

வினுத்தா டிரைவரைக் கூப்பிட் டாள்:

''இவங்களைக் கொண்டு போய் காலேஜிலே விட்டு, மரகதத்திடம் சொல்லிஅவங்கவங்க வீட்டிலேபத்திரமா சேத்துடச் சொல்லிடுங்க.''

''அக்கா... டா...டா...!''

''டா...டா... நாளைக்கு வேண்டாம். பிறகு சொல்றேன்... போங்கோ...''

"**வா**ட் யூ மீன் வினுத்தா...? படிப்பை உன்னல் முடிக்க முடியாதா? என்ன டிரபிள்...சொல்லும்மா...''

''ஒண்ணுமில்லே... மிஸ்... என்னலே கேரியவுட் பண்ண முடியலே. இட் ஈஸ் ரியலி ஏ சேலஞ்ச் டு மீ...! என்னலே டிகிரியை முடிக்க முடியாது மிஸ். தயவு செய்து கட்டாயப் படுத்தாதீங்க. நான் இந்த 'தீஸிஸை' பிராக்டிகலா...''

— வெடித்துக் கொண்டு வந்தது. அழுதாள். தன் வாழ்க்கையில் அவள் 'திறனய்வு' செய்ய ஒரு 'சப்ஜெக்ட் ஆக' டிம்பிள் இருப்பதையே மறந்து விட்ட வினுத்தா — காலங் கடந்து உணர்ந்த வினுத்தா— அழுகிருள்!

''மிஸ்... நான் எம். எஸ்ஸி-ஆக விரும்பவில்லை. நான் ஒரு 'அம்மா'வாக இருக்க விரும்புகிறேன்.''

''நீ சம்பந்தமில்லாமெ பேசறே...''

''உங்களுக்கு அதை விளக்க என்னலே முடியலே...''

மிஸஸ் வினுத்தா ராகவன், டிம்பிளின் அம்மாவாக காரில் போய்க் கொண்டிருந்தாள்!



ஓடிக் கொண்டிருந்த பஸ்ஸில் டிக்கெட் 'என்ட்ரி' போட்டுக் கொண்டிருந்தார் கண்டக்டர். வயதான ஓர் அம்மாள் கேட்டாள்: ''ஏன் கண்டக்டர், ஓடுகிற பஸ்ஸில் எழுதுவது கஷ்டமாக இல்லை?''

கண்டக்டர் சொன்னர்: ''பழக்கம்தானம்மா காரணம். ஆடாத மேஜை மேலே பேப்பரை வைத்துக் கொண்டு ஒரு கடிதம் எழுத முடியாது என்னல். என் சின்னப் பையனை விட்டு மேஜையை லேசாக ஆட்டச் சொல்வேன். அப்போதான் என்னல் நிம்மதியாகக் கடிதம் எழுத முடியும்.''

"ராஜேஷ் கன்னாவுக்கு என்னோடு

சர்மிளா தாகூரைப் பேட்டி காணச் சென்றோம். 'டான்ஸில்ஸ்' தொல்லையால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தவர், முதலில் பேட்டியை ஒத்திப் போட்டார். சமீபத்தில் சென்னை வந்திருந்த அவரைச் சந்திக்க, அவருடைய காரியதரிசியே மீண்டும் ஏற்பாடு செய்திருந்தார்.

சர்மிளா தங்கியிருந்த ஓட்டலுக்குச் சென்ற போது, 'ப்ளூமாக்சி' அணிந்து கட்டிலில் ஒய்யாரமாகச் சாய்ந்திருந்தார் சர்மிளா.

''எப்படி இருக்கிறீர்கள், சௌக்கியமா?'' என்று பொதுவாக விசாரித்து விட்டு, ''தமிழ்ப் படத் துறையைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று ஆரம்பித்து வைத்தோம்.

சர்மிளா இந்தக் கேள்வியைக் கேட்டவுடன், 'கட கட'வென நகைத்தார். அவருடைய கன்னங்களில் இருந்த குழி மேலும் ஆழமாகி, அவரை மேலும் அழகாக்கியது.

''எனக்குத் தெரியாத விஷயத்தைக் கேட்பதென்று நீங்கள் முடிவு செய்து விட்டதால்தான் நான் சிரித்தேன். அழகிய, பெரிய, சுத்தமான ஸ்டுடியோக்களையும், சில நல்ல இயக்குநர்களையும் இப் படவுலகம் கொண்டிருப்பதைத் தவிர, எனக்கு வேறொன்றும் தமிழ்ப் படவுலகத்தைப் பற்றித் தெரியாது. உங்களைப் போன்று விடாப்பிடியாகப் பேட்டி வாங்குபவர்களும் இங்கே இருப்பது இப்போதுதான் எனக்குத் தெரிந்தது'' என்று கூறியதும், எல்லோரும் நகைத்தோம்.

''தமிழ்ப் படவுலகில் உங்களுக்கு மிகவும் பிடித்த நடிகர், நடிகை, நீங்கள் நட்புடன் பழகும் தமிழ் நடிகர், நடிகை யாரென்றும் கூற முடியுமா?'' என்று கேட்டதற்கு, ''சிவாஜி கணேசன் ஒரு தலைசிறந்த நடிகர். நடிகை...'' என்று சற்று நேரம் யோசித்தவர், ''யாரையும் நினைவுக்குக் கொண்டு வர முடியவில்லை!'' என்று கூறிவிட்டார்.

''தமிழ்ப் படவுலகில் எனக்கு யாரும் நண்பர்களே இல்லை. பல தமிழ் நடிகைகள் என்னை, என் நடிப்பை மிகவும் பிடிக்கும் என்று பல பேட்டிகளில் கூறியதை நான் படித்ததுண்டு. ஆனால், நான் சென்னையில் இருப்பது தெரிந்தும், என்னைக் காண வருவதில்லை. அடுத்த 'செட்'டில் இருந்தால் கூட, 'ஹலோ!' என்று சொல்ல மாட்டார்கள். இதுவரைக்கும், இது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. தமிழ் நடிக, நடிகையர் நட்புடன் பழகவே மாட்டார்களா?'' என்று நம்மிடமே கேள்வி[?]யைக் கேட்கிறார் சர்மிளா.

''உங்களையும் ராஜேஷ் கன்னாவையும் சேர்த்துப் பேசப்படும் வதந்திகளைப் பற்றி நீங்கள் ஏதாவது சொல்ல முடியுமா?''

சர்மிளா சிரித்துக் கொண்டே, ''இப்போது கூடவா அப்படிப் பேசுகிறார்கள்? இருக்க முடியாதே! நானும் அவரும் பிரிந்து விட்டோம். ஆச்சரியப்படாதீர்கள்! வளர்ந்த சில படங்களைத் தவிர, புதிய படங்களில் நாங்கள் 'ஜோடி'யாகக் கூட நடிக்கவில்லை. காரணம், ராஜேஷுக்கு என்னுடன் நடித்து 'போர்' அடித்து விட்டதுதான். ஆனால் தனிப்பட்ட முறையில் இன்றும் நாங்கள் நண்பர்கள்தான். நானும் ராஜேஷும் சேர்ந்து நடிக்க ஒப்புக் கொண்டு, ஆரம்பிக்கப் படாமல் இருக்கும் படங்களிலிருந்தும் அவர் என்னை விலக்கிக் கொண்டிருக்கிறா[ர்] என்பது புதிய செய்தி.''

இதைக் கேட்டதும் வியக்கிறோ[ம்]. சர்மிளா ஓர் அழகிய புன்னகை[யை] உதிர்க்கிறார்.

ராஜேஷ் கன்னாவைப் பற்றி பேச்சு தொடர்கிறது:

''ராஜேஷ் ஒரு சூப்பர் - மே[ன்] (Superman). நாங்கள் இருவரு[ம்] சேர்ந்து நடித்த பல படங்கள் புக[ழ்] பெற்றிருக்கின்றன. அவருட[ன்]

சர்மிளா தாகூருடன் ஒரு பேட்டி

நடிக்க 'போர்' அடிக்கிறது!''

சேர்ந்து நடிப்பதென்ருல், எனக்கு எப்போதும் பிடிக்கும். ராஜேஷு டைய அசைக்க முடியாத தன்னம்பிக்கையும், வெற்றிகள் வந்த சமயத்தில் தலைக்கனம் பிடித்து அலையாமல் இருந்ததும்தான் அவரிடம் எனக்கு ஒரு பெருமதிப்பை உண்டாக்கின. சமீபத்தில், அவருடைய ஜோடியாக நான் நடிப்பதை ராஜேஷ் விரும்பவில்லை. நான் இதைப் பற்றி அவரிடம் கேட்க விரும்பவில்லை, கேட்கவும் மாட்டேன். ராஜேஷ்—வெரி நைஸ் பர்ஸன்.''

''நீங்கள் ஒரு பெரிய பணக்காரர். உங்கள் கணவரும் பெரிய பணக்காரர். இருந்தும் நீங்கள் படங்களில் நடிக்கிறீர்களே, ஏன்?''

''படங்களில் நடிப்பது என் தொழில். தொழில் செய்வது, ஆத்ம திருப்திக்காகவும் இருக்கலாம் இல்லையா? பெரிய செல்வந்தர்கள் எந்த வேலையும் செய்யாமல் இருக்க வேண்டும் என்பதுதான் உங்கள் எண்ணமா, என்ன? எனக்கு எப்போதும் ஏதாவது வேலை செய்து கொண்டே இருக்க வேண்டும். படத் தொழில் இல்லாவிட்டால் 'மாடலாக' இருப்பேன். நான் செய்யும் தொழிலில், சிறந்தவளாகிப் புகழ் பெற வேண்டும் என்பதே என் குறிக்கோள்.

''பட்டோடி செல்வந்தர். இருந்தும், அவர் கிரிக்கெட் விளையாடி, அதிலும் சம்பாதிக்கிருர். கிரிக்கெட் விளையாடுவதை ஒரு தொழிலாகவும்



கொண்டிருக்கிறார். தொழில் செய்யாத வனை நரகத்தில் தள்ளி...சாரி, நீங்களே புரிந்து கொள்ளுங்கள், என்ன செய்ய வேண்டுமென்று...''

பட்டோடியைப் பற்றி சர்மிளா கூறியவுடன், மேலும் பட்டோடியைப் பற்றிக் கூறுமாறு கேட்கிறோம்.

''என் கணவர் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர். என் கணவராக இருப்பினும், பல நடிகைகள், பல பெண்கள் அவரை விரும்புகின்றனர். பல விஷயங்களில் நானும், அவரும் ஒத்துப் போகிறோம். 'பல காரணங்களால்' அவர் இந்திய கிரிக்கெட் குழுவில் இல்லாமல் இருந்த போது நான் மிகவும் வருத்தமுற்றேன். மீண்டும் அவர், இந்தியக் குழுவில் இருப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.''

''நீங்கள் பட்டோடியை விவாகரத்து செய்யப் போவதாகக் கேள்விப் பட்டோம்'' என்று கூறியவுடன், அவர் பலமாகச் சிரித்தார்.

''இது தவறான செய்தி. என் குடும்பத்திற்காக எந்தவித தியாகத்தையும் செய்ய நான் தயாராக இருக்கிறேன். ஒரு முறை செய்தும் இருக்கிறேன். நான் எப்போதாவது 'சிகரெட்' பிடிப்பேன். ஒரு முறை அப்படிப் பிடிக்கும்போது, என் மகன் செய்ஃப் (Saif) சிகரெட்டை வாயில் வைத்துக் கொள்ள விரும்பி அடம் பிடித்தான். உடனே நான், எப்போதாவது சிகரெட் பிடிக்கும் பழக்கத்தையும் விட்டு விட்டேன். குடும்பத் தலைவி வேறு; திரைப்பட நடிகை வேறு. இந்தத் தத்துவத்தை இந்தியாவில் பலர் ஏன் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறார்களோ?''

சர்மிளாவின் வேதனை எங்களுக்குப் புரிந்தது.

சர்மிளாவின் முன்கோபம் பிரசித்தி பெற்றது.

''நான் முன்கோபக்காரிதான். மடத்தனமாக யாராவது நடந்து கொண்டால் உடனே கோபம் வரும். நான் செய்யும் காரியங்களில் மற்றவர்கள் குறை காண முடியாது. அதே போல மற்றவர்களும் இருக்க வேண்டும் என்று நினைப்பவள். அவர்களால் 'என் அளவிற்கு' வர முடியாமையால் எனக்குக் கோபம் வருகிறது. என்னிடம் இருக்கும் கெட்ட குணம் இது. முன்கோபத்தை அடக்க முயற்சி செய்து வருகிறேன்.

''நான் கர்வம் பிடித்தவள் அல்ல. என்னிடம் வெளிப்பகட்டு கிடையாது. அதனால் நான் கர்வம் பிடித்தவள் போலத் தோற்றம் அளிக்கிறேனோ, என்னவோ! நானா சகிப்புத் தன்மையற்றவள்? ஒருவேளை இருக்கலாம். ஏனென்றால், என் முன்கோபம் என்னுடைய சகிப்புத் தன்மையை மறைக்கிறது போலும்!''

பேட்டி:— 'சியாமளன்.'

படம்:— ஏ சுந்தரம்.

லதா பாடியிருக்க மாட்டார்..

லதா மங்கேஷ்கர் அந்த நாளில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டாராம். ஆனால் குடும்பத்தின் நிலைமையைக் கருதி அவர் சம்பாதிக்க வேண்டி இருந்தது. ''என் கணவர் என்னை வேலை செய்யக்கூடாது என்று சொல்லி இருந்தால் நான் பாடுவதை நிறுத்தி இருப்பேன்'' என்கிறார் அவர்.



சுமார் 20,000 பாடல்களை அநேகமாக எல்லா இந்திய மொழிகளிலும் பாடியுள்ள லதா, ஒரே ஒரு படத்தில் குழந்தையாக நடித்திருக்கிறார். அப்புறம் அவரை நடிக்க வைக்கப் பலரும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலிக்கவில்லை.

கிரிக்கெட் என்றால் அவருக்கு மிகவும் பிரியம். டெஸ்ட் மாட்சுகளுக்குத் தவறாமல் போவார். ஆனால், திரை உலக பார்ட்டிகளுக்கும் விழாக்களுக்கும் அநேகமாக அவர் போவதில்லை.



கட்டுக்கடங்கா நுரைப்பெருக்கு
களிபபுடனே தினம் குளிபபதற்கு

சந்திரிகா சோப்

சந்திரிகா பிராடக்ட்ஸ் கோயமபத்தூர் — சென்னை

ARIES CS 187

வெளியே நல்ல இருட்டு. விட்டு விட்டு மின்னல் வெட்டிக் கொண்டிருந்தது. சன்னல் வழியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த சண்முகம், உள்ளே திரும்பினார். புஷ்பாவின் அறையில் இன்னமும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

‘பத்து மணியாகப் போகிறது. இன்னும் என்ன செய்து கொண்டிருக்கிறாள்?’ —உள்ளுக்குள் அவருக்கு எரிச்சல்.

‘‘புஷ்பா, ஏம்மா ராத்திரியிலே இவ்வளவு நேரம் கண் முழிச்சிக்கிட்டிருக்கே? காலையிலே எழுந்திரிச்சி பார்த்துக் கொள்ளப்படாதா?’’ என்று எத்தனையோமுறை சண்முகம் கேட்டதுண்டு. அப்பா சொன்னால் சொன்னதுதான். புஷ்பாவின் மனம் அவருக்குப் புரியும். போர்ட் பிளேயர் பள்ளிக்கூடத்தில் அவள் டீச்சர். ரொம்ப நல்ல பெயர் எடுத்திருந்தாள். சண்முகத்திற்குப் பெருமைதான்.

‘புஷ்பா விளக்கை அணைத்து விட்டுப் படுக்கப் போகிறாளா, இல்லையா?’—சண்முகத்திற்குப் பொருமல்...உட்காரவும் முடியாமல், நிற்கவும் மாட்டாமல் அறையை அளந்து கொண்டிருந்தார்.



வெள்ளரிப் பழம் வெடித்த மாதிரி மனசில் விரிசல் கண்டிருந்தது. அதைச் சரிப்படுத்த முடியுமா? நெஞ்சில் மூண்டிருப்பது வெறியா, விசனமா, விரக்தியா? சண்முகத்திற்கு விடை தேவைப்பட்டது. இரண்டில் ஒன்று பார்த்து விட வேண்டும் என்ற வேகம். உடனே வெளியே புறப்பட்டுப் போக வேண்டும் என்ற துடிப்பு!

எங்கே போக வேண்டும்?

சாட்டம் வார்ஃபிலிருந்து ‘பூம்பூம்’ என்ற ஒலி. ஒரு கப்பலோ அல்லது லாஞ்சோ புறப்படப் போகிறது. சண்முகமும் புறப்படத்தான் தயாராகிக் கொண்டிருக்கிறார், புஷ்பாவுக்கு தெரியாமல்.

புஷ்பா விளக்கை அணைத்து விட்டாள். சண்முகம்பெருமூச்சுவிட்டார். ‘தொல்லை விட்டது. இனி, அறையை விட்டு அவள் வெளியே வர மாட்டாள். அப்பா தூங்கியிருப்பார் என்று நிச்சயப்படுத்திக் கொண்டிருப்பாள்!’

ஓசைப்படாமல் வாசல் கதவைச் சாத்திவிட்டு சண்முகம் வெளியே வந்தார். தெருக் கோடியில் மூசா குட்டியின் வீட்டில் மட்டும் வெளிச்சம் தெரிந்தது.

ஹாஜி மூசா குட்டி, தொழுகையை முடித்துவிட்டு இந்நேரம் குர்ஆன் ஓதிக் கொண்டிருப்பார். சண்முகம் இதோ எங்கேயோ போகத் துடித்துக் கொண்டிருக்கிறாரே, இதற்கு மூசா குட்டியும் ஒரு காரணம்...

ஒரு வாரத்திற்கு முன்பு மூசா குட்டி தான் விஷயத்தைக் காதில் போட்டார். வீட்டில் புஷ்பா இல்லாத சமயம் பார்த்து சண்முகத்தைப் பார்க்க அவர் வந்திருந்தார்.

''புஷ்பாவுக்குக் கல்யாணம் எப்போ வைக்கப் போறீங்க?'' என்று மூசா குட்டி பேச்சை ஆரம்பித்தார். அவர் ஒப்புக்காக எதையும் கேட்கக் கூடியவர் அல்ல என்பது சண்முகத்திற்குத் தெரியும். இருவரும் முப்பத்தைந்து வருடத்திற்கு மேலாக சகாக்கள். ஜெயிலில் ஆரம்பித்த நட்பு. விடுதலையாகி வெளியே வந்த பிறகும் விலகிப் போய் விடவில்லை. அந்தக் காலத்திலிருந்து போர்ட் பிளேயரிலேயே இருவரும் நிலைத்து விட்டார்கள்.

''கல்யாணமா, புஷ்பாவைத்தான் கேட்கணும்!'' என்றார் சண்முகம்.

''அப்போ, புஷ்பாவைப் பத்தி ஒரு யோசனையும் இல்லேன்னு சொல்லுங்க!''

''அப்படியில்லீங்க, காக்கா. அததுக்கு நேரம், காலம் வரணும் இல்லையா?'' —சண்முகம் சொன்னார்.

''வாஸ்தவம். ஆனால், மத்தவங்க ஒரு வார்த்தை சொல்றதுக்கு இடம் கொடுக்கக் கூடாது இல்லையா?'' என்று மூசா குட்டி சொன்னது சண்முகத்திற்கு என்னவோபோல் இருந்தது. 'இப்பொழுது என்ன நடந்து விட்டது? இவர் இப்படிப் பேசுகிறார்' என்று தனக்குள் யோசித்தார். காரண காரியத் தொடர்பில்லாமல் அவர் பேசமாட்டார் என்பது சண்முகத்திற்குத் தெரிந்ததுதான்.

''புஷ்பாவுக்கு ஒரு நல்ல பையனை பார்த்துச் சீக்கிரமே கல்யாணத்தை முடிச்சிடுங்க... உங்களுக்கு சேதி எட்டலை போல இருக்கு'' என்றார் மூசா குட்டி.

''எந்தச் சேதி?'' - சண்முகத்திற்குப் படபடப்பு.

மூசா குட்டி தயங்கியபடி சொன்னார்:

''அபர்டீன் பஜாருக்குப் போயிருந்தேன். கண்டாகர் பக்கமா நடந்தப்போ 'குசுமுசா'ன்னு என்னமோ பேச்சு. சேதி காதிலே விழுந்தப்போ பதறிப் போயிட்டேன். சண்முகத்தின் மகளும் ஒரு டாக்சி டிரைவரும் பழகறாங்கன்னு தாறுமாறு பேச்சுக் கிளம்பியிருக்கு. நான் நம்பலே. ஆனா, ஜாடைமாடையா கவனிச்சிப் பார்த்தப்புறம் அந்த விஷயத்தை ஒதுக்கித் தள்ள முடியலை. இப்ப சொல்லுங்க சண்முகம், நாம சும்மா யிருக்க முடியுமா?''

சண்முகத்திற்கு அந்த நேரம் தலை சுற்றியது. நம்ப முடியாத அதிர்ச்சியாக இருந்தது. இருவரும் வெகு நேரம் சந்தடியில்லாமல் பேசிக் கொண்டார்கள்.

இந்த ஒரு வாரத்தில் கொஞ்சம் கொஞ்சமாக சண்முகம் ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு விட்டார். உண்மைதான். யாரோ ஒருவன், போர்ட் பிளேயருக்குப் புதியவன்; அவனும் புஷ்பாவும் சந்திக்கிறார்களாம்; பேசிக் கொள்கிறார்களாம். அதற்கு மேல் என்னென்னவோ...! சண்முகத்திற்குப் பொறுக்க




வில்லை. எந்த நேரமும் மனம் பொங்கிக் கொண்டிருந்தது.

மூசா குட்டியின் வீட்டிலும் விளக்கு நின்று விட்டது. அநேகமாக அந்தத் தெருவில் நடமாட்டம் இனி இருக்காது. ஆனால்இன்னொரு மூலையிலிருந்து பாட்டுச் சத்தம். கொண்டையாவின் குரல் எடுப்பாகக் கேட்டது. அவனுக்கு நேரம் காலம் என்று கிடையாது. இரவு ஒன்பது மணிக்கு தன் சகாக்களுடன் பாட ஆரம்பித்தால், எவ்வளவு நேரம் ஆட்டமும் பாட்டும் நீடிக்கும் என்று சொல்ல முடியாது. எல்லோரும் தெலுங்கர்கள். கிருஷ்ண லீலா கூத்து நடத்துவார்கள். ஜால்ரா அடித்துக் கொண்டு அவர்கள் ஆடிப் பாடுவதை சண்முகம் எத்தனையோ முறை பார்த்து ரசித்திருக்கிறார். இப்பொழுதும் கூத்து நடந்து கொண்டிருக்கிறது.

மின்னல் முறிந்தது.

சண்முகம் இன்னும் வாசலில்தான் நின்றார். மின்னல் ஒளியில் தொலைவில் அந்தமான் சிறையும், ஆஸ்பத்திரிக் கட்டடங்களும் தெரிந்தன. இன்னும் அப்பால் இரை விழுங்கிய முதலை போல் ராஸ் தீவு நீண்டு கிடந்தது.

அந்த சிறைச்சாலையை எத்தனை கால மாக சண்முகம் பார்த்துக் கொண்டிருக்கிறார். அதன் உள்ளே கழித்த ஆண்டுகளை நினைத்துப் பார்த்தால்...மூசா குட்டி, குஞ்சு முகம்மது, ஆரோக்கியசாமி, கைலாசம் இன்னும் எத்தனையோ பேர் சண்முகத்திற்கு நண்பர்கள் ஆனது அங்கேதான்.



டாக்டர் (ஞாபக மறதியாக): பிரிஸ்கிருப்ஷன் எழுத வேண்டும்; பேனாவை எங்கே வைத்து விட்டேன்?

இப்பொழுது பலர் உயிரோடு இல்லை. சிலர் இடம் மாறி விட்டார்கள். மூசா குட்டியும் சண்முகமும்தான் ஒரே தெருவில் இருக்கிறார்கள். ஒரு காலத்தில் சண்முகம் கைதியாக இருந்தவர் என்றாலும் இன்று போர்ட் பிளேயரில்அவருக்கு ஒரு மதிப்பும் மரியாதையும் இருக்கிறது. இன்னும் கொஞ்ச காலம், மண்டையைப் போடும் வரை, அதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை அவருக்கு நிரம்ப இருக்கிறது. அது குலைந்து குப்பையாகி விடுவது போல் விவகாரம் பஜாருக்கு வந்திருக்கிறது.படித்து விட்டு பொறுப்புள்ள வேலையில் இருக்கும் மகள் புஷ்பா, ஓர் அநாமதேயத்தைக் காதலிக்கிறாளே என்ற குமுறல் அவருக்கு அடங்கவேயில்லை.

அந்த வேகம், வெறி எல்லாமாக சேர்ந்து அவரைப் பிடர் பிடித்துத் தள்ளுகின்றன.

சண்முகம் தெருவில் இறங்கினார். யார் கண்ணிலும் பட்டுவிடக் கூடாதே என்ற பதற்றம்.மடியில் கனம் இருப்பது போல் மனத்தில் சுமை.ஆனால்,பயமில்லை. அவர் யாருக்கும் பயப்பட்டவர் அல்ல. மானம், மரியாதைக்கு மட்டும் அஞ்சுகிற சுபாவம் ஆரம்பத்திலிருந்தே!

பிள்ளையார் கோயில், பள்ளிக்கூடம், பஜார்...யாரும் கண்ணில் படவில்லை.

திலானிபூர் வந்ததும் நடை சற்று தடைப்பட்டது. அந்த இடம் ஒரு ஜங்ஷனைப் போல. இரவிலும் சுறுசுறுப்பு இருக்கும். கபாப் கடையில் கண்ணைப் பறிக்கும் விளக்கொளி. இரண்டு மூன்று டாக்சிகள் நின்றிருந்தன. டாக்சிகளைப் பார்த்தாலே அவருக்குப் புகைச்சல். போர்ட் பிளேயர் டாக்சி டிரைவர்கள் மீது எப்பொழுதோ ஏற்பட்டுவிட்ட வெறுப்பு, நெருப்பாகக் கொழுந்து விட்டுக் கொண்டிருந்தது. 'இவர்கள் சாராயம் கடத்துகிறார்கள், 'ஆள்' பிடித்துக் கொடுக்கிறார்கள், இல்லாத அட்டகாசங்களெல்லாம் செய்கிறார்கள்' என்று மனத்தில்கறுவிக்கொண்டிருக்கிறார். அந்த எண்ணத்தை அவர் மாற்றிக் கொள்ளவே யில்லை. 'அந்தக் கும்பலைச் சேர்ந்த ஒருவனையா புஷ்பா தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறாள்? அவனைச் சும்மா விடலாமா? என்ன செய்கிறேன் பார்' என்பது போல் இருளில் புறப்பட்டிருக்கிறார்.

லேபர் பாரக்கிலிருந்து ஒரு லாரி வந்து கொண்டிருந்தது. சண்முகம், சாலை ஓரமாக ஒதுங்கி நின்றார்.இரவு ஷிப்ட் கப்பல்

வேலைக்குப் போகும் தொழிலாளிகள், லாரியில் கும்மாளமடித்துக் கொண்டு போனார்கள். கப்பல் அதிகாரிகள் போல் தெரிகிறது; இந்தியில் பேசிச் சிரித்தபடி கபாப் கடைக்குப் போய்க் கொண்டிருந் தார்கள். அந்த நேரத்திலும் கபாபும், பராட்டாவும், டீயும் அங்கே சூடாகக் கிடைக்கும்.

கபாப் கடையிலிருந்து தன்னை யாரும் பார்த்து விடக் கூடாதே என்ற அச்சத் துடன் சண்முகம் மெதுவாக நடை போட்டார். அவர் கடையைத் தாண்ட வில்லை; அதற்குள்—

''சண்முகம்!'' என்ற குரல் அவரைத் திடுக்கிட வைத்தது. திரும்பிப் பார்த் தார். டீ கிளாஸைக் கையில் பிடித்தபடி கணேஷ்ராம் வந்தார். அவர் வட இந்தியர். கண்டிராக்டர். சண்முகத்தின் வயது இருக்கும். இருவருக்கும் பழக்கம் உண்டு.

''கியா சண்முகம்? ஏ டைம்மே ஆப் கஹாம் ஜாதா ஹை? கியா ஜரூரத்?'' என்று கணேஷ்ராம் விசாரிக்க ஆரம்பித்த போது வெடவெடத்துப் போனார் சண்முகம். அவர் கேட்பது சரிதானே? இரவில் அவசரமாக அவர் எங்கே போய்க் கொண்டிருக்கிறார்.

''குச் நை...குச் நை. ஐஸி தோடா!'' —ஒன்றுமில்லை என்று சண்முகம் சமா ளிக்க முயன்றாலும் ஏதோ மர்மம் இருக் கிறது என்பது போல் அவருடைய குரல் நடுங்கியது.

''ஆவ்...சாய் பிகே ஜாவ்...!''— கணேஷ்ராம் 'டீ' குடிக்க அழைத்தார். 'பர்வா நை'' என்று சொல்லிவிட்டு ஒரு வழியாக நழுவினார் சண்முகம்.

கொஞ்ச தூரம் நடந்து விட்டு வருவ தாக கணேஷ்ராமிடம் சொன்னாரே, எது வரை? அவருக்குத்தான் தெரியும். வழி யில் வேறு யாரும் குறுக்கிடாமல் இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

மழை பிசுபிசுத்தது. சண்முகத் திற்குக் குளிர் எடுத்தது. சாலை ஓரமாக மரத்தடியில் ஒதுங்கி நின்றவர், மடியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார். ஒரு சுருட்டைப் பற்ற வைத்தார். அந்த நேரத்துக்கு அது இதமாக இருந்தது.

மறுபடியும் மின்னல் வெட்டிய போது இருட்கோட்டையாக உயர்ந்து நிற்கும் ஜெயில், மனத்தில் வந்தது. முதன்



''சேகரா?... சந்தரா?... ரமேஷ்!... அதுவும் இல் லியா?... அப்போ நிச்சயம் சுரேஷ்தான்!...''

முதலில் அவர் கைதியாக வந்ததும், வெள்ளைக்கார அதிகாரிகளைப் பார்த்து நடுக்கமும் திடுக்கமும் கொண்டதும் அப்படியே நெஞ்சில் நிற்கிறது. அதை நினைத்துக் கொண்டவர், ஒரு நிமிஷம் அப்படியே கண்ணை மூடிக் கொண்டார்.

சுருட்டு முனையில் தீக் கனிந்து சிவந் திருந்தது. சுருள்சுருளாகப் புகைவட்டம். தூரத்திலிருந்து பார்க்கிறவர்கள் பயந்து போவார்கள், கொள்ளிவாய்ப் பிசாசு என்று! புகையை உள்ளுக்கு இழுத்த மாதிரி முப்பத்தைந்து வருஷத் துக்கு முந்திய வாழ்க்கை நினைவுகளை நெஞ்சம் உறுஞ்சி இழுத்தது. வைரம் பாய்ந்த கொய்யாப் போத்து மாதிரி கையும் மெய்யும் உருண்டு திரண்டு வலுவேறி 'வஸ்தாது' என்று சண்முகம் பெயர் எடுத்திருந்த காலம் அது. அந்த வட்டாரம் முழுவதிலும் சண்முகத்தின் பெயர் விளங்கிக் கொண்டிருந்தது.

ஒரு ராவுத்தர்தான் சண்முகத்தின் குரு. அவரிடம் சிலம்பம், குஸ்தி கற்றுக் கொண்டு வட்டாரத்தையே கிடுகிடுக்க வைத்துக் கொண்டிருந்தான் இளைஞன் சண்முகம். ஆனால் வம்பு, வழக்கு என்று ஒரு ரிமார்க் கிடையாது. கந்தூரி திருவிழா, கொடியேற்றம், சந்தனக்கூடு, நல்ல நாள், பெருநாள் என்று வந்து விட் டால் போதும், ராவுத்தரின் சிஷ்யர்கள் களத்தில் இறங்குவார்கள். சண்முகம் பிரதான சிஷ்யனாயிற்றே! கைவரிசையைக் காட்டி, கூட்டத்தை வாய் பிளக்க வைத்து விடுவான்.

சுதந்திரமாக சண்முகம் வளைய வந்து கொண்டிருந்த போதுதான் சோதனை குறுக்கிட்டது.

சொர்ணம், சண்முகத்திற்கு ஒரே தங்கை. ஐந்தாறு வயது இளையவள். வயசுக்கு வந்த சொர்ணத்திற்குச் சரியான மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருந்தான் சண்முகம். அந்த சமயத்தில் தான் கொய்யாத் தோப்பு சங்கதி அவனுக்கு எட்டியது.

பெற்றிருந்ததால் இருட்டில் அங்கே போவதற்கு எல்லோருக்குமே குலை நடுக்கம்.

சொர்ணம் அடிக்கடி அங்கு போகிறாள் என்ற செய்தி கிடைத்ததுதான் தாமதம் சண்முகம் உஷாராகி விட்டான். சொர்ணம் மட்டுமா போகிறாள்? சோமுவும் அவளுமாக கொய்யாத் தோப்பில் சந்திக்கிறார்கள் என்று தெரிந்த பிறகு சண்முகமா சும்மா இருப்பான்? ஒரு

ஒரு சுவையான நாவலாக ஆரம்பித்து, சுயசரிதமாக மாறி, முடிவில் இந்திய விடுதலைப் போராட்ட வரலாறாகப் பரிணமிக்கிறது திருமதி எஸ். அம்புஜம்மாள் எழுதியுள்ள 'நான் கண்ட பாரதம்' என்னும் புத்தகம்.

திருமதி அம்புஜம்மாளுக்கு எழுபத்து நான்கு வயதாகிறது. 'இளைய தலைமுறைக்கு நான் சொல்வது எதுவும் அப்பீல் ஆகாது. அந்தக் காலத்தில் பெண்கள் விடுதலைக்குப் பாடுபட்டதற்கும், இப்பொழுது 'விமன்ஸ் லிப்' (Women's Lib) என்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது' என்கிறார் இவர்.

காந்தியடிகளின் அன்புக்குப் பாத்திரமாகி தேச சேவைக்காகத் தன் பொழுது முழுவதையும் அர்ப்பணித்த இந்த வீர வனிதை இன்றும் ஸ்ரீனிவாச காந்தி நிலயத்தின் மூலம் சத்தமில்லாத தொண்டாற்றிக் கொண்டுதான் வருகிறார்.

'உயர்தரக் கல்வி எல்லாப் பெண்களுக்கும் அவசியம்தானா' என்று கேட்கிறார் திருமதி அம்புஜம்மாள்: 'அடுத்த வருஷம் கல்யாணம் செய்து கொள்கிற பெண்ணுக்கு இந்த வருஷம் எதற்குக் கல்லூரி அட்மிஷன்?' என்கிறார்.

ஆண்களுக்குப் போட்டியாகப் பெண்கள் வேலைக்குப் போவதை இவர் சற்றும் விரும்பவில்லை. 'பெண்களுக்கு இப்பொழுது ஏராளமான சுதந்திரம் கிடைத்திருக்கிறது. இனியும் சுதந்திரம் வேண்டும் என்று கேட்பது அர்த்தமில்லாதது' என்பது இவர் கருத்து. அவசியம் வேலைக்குப் போய்த்தான் ஆக வேண்டும் என்று இருந்தாலொழிய பெண்கள் வேலை பார்க்கப் போவது சரியாகப்படவில்லை அம்புஜம்மாளுக்கு.

வரதட்சிணை கொடுப்பதை நிறுத்துவது பெண்கள் கையில்தான் இருக்கிறது என்கிறார். ''வரதட்சிணை கொடுக்காவிட்டால் கல்யாணம் ஆகுமா?'' என்று கேட்டால், 'கல்யாணம் அத்தனை அவசியமா? ஒரு பெண் ஏன் கல்யாணம் செய்துகொள்ளாமல் இருக்கக்கூடாது!' என்று கேட்கிறார். 'கௌரவமான ஒரு வேலையில் இருந்து கொண்டு ஆண் துணையின்றி ஒரு பெண் வாழ முடியாதா?' இது அவர் கேள்வி.

ஆசைகள், பலவீனங்கள் இவற்றிலிருந்து எப்படித் தப்புவது? இதற்கு அவருடைய ஒரே பதில்: 'வாழ்க்கையில் எல்லாவற்றையும் அடைவது என்பது இயலாது. சிலவற்றை அடைய முடியாதுதான். என்ன செய்வது?'

" பெண்களுக்கு வேலை தேடித் த… நிறுவனம் (Women's employment agen…

கிராமத்திற்குத் தெற்கே ஆற்றங்கரையை யொட்டி நெடுந்தூரத்திற்கு கொய்யாத் தோப்பு. உச்சிக்குப் பிறகு அந்தப் பக்கம் ஆள் நடமாட்டம் இருக்காது. இடத்தின் அமைப்பு அப்படி. மாலை நேரத்திலேயே அங்கே நிழல் இருட்டு கட்டிவிடும். பேய், பிசாசு, ஆவி நடமாட்டம் அதிகமாக உள்ள இடம் என்ற பெயரையும் கொய்யாத் தோப்பு

நாள் மத்தியானத்திற்குப் பிறகு வெளியூருக்குப் போவதாக 'பாவ்லா' பண்ணி விட்டு வீட்டை விட்டுக் கிளம்பி போனான். அவன் புறப்பட்ட அரை நாழிகைக் கெல்லாம் சொர்ணமும் கிளம்பிப் போனாள்; கொய்யாத் தோப்புக்குத்தான்!

புலியாக உறுமிக் கொண்டு அங்கே சண்முகம் வந்து நிற்பான் என்றுசொர்ணமு…

சோமுவும் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்? கையில் சிலம்பக்கழி துள்ளிக் கொண்டிருந்தது. எக்காளச் சிரிப்புடன் சோமுவை நோக்கிப் பாய்ந்த சண்முகம், கழியை ஓங்கிய போது, ''அண்ணே நிறுத்துங்க...'' என்று அலறிப் புடைத்துக் கொண்டு ஓடிவந்தாள் சொர்ணம்.

''அந்தண்டை போ, சொர்ணம். இந்தப் பயலுக்கு சமாதி வைக்கத்தான் வந்திருக்கேன். கொய்யாத் தோப்பிலே

அசுர வெறி சண்முகத்தின் கண்ணை மறைத்தது. தங்கை பரிதாபமாகத் துடித்துக் கொண்டிருந்தது அந்த நேரம் அவனுக்குத் தெரியவில்லை. சோமுவைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டும் என்ற ரத்த வெறியில் அவனைத் துரத்தித் துரத்தி அடித்தான். நாலே அடிதான். நசுக்கிப் போட்ட சப்பாத்திப் பழம் மாதிரி தலையெல்லாம் ரத்தம் வடிய, விழி பிதுங்கி விழுந்து கிடந்தான் சோமு. அவன்



பெண்ணுக்குக் கல்யாணம் அவசியம்தானா?''

ஒன்று தொடங்க வேண்டும் என்பது இவர் அவா.

ஆசிரமங்கள், அநாதை விடுதிகள்—இவற்றைப் பற்றிய இவருடைய கருத்து: 'இவற்றால் ஜனங்களுக்குப் பொறுப்பற்ற தன்மை மிகுந்து கொண்டு வருகிறது. பிள்ளையைப் பெற்று அநாதை விடுதியிலே விட்டு விட்டு மீண்டும் பொறுப்பில்லாத வாழ்க்கையே வாழ்வார்கள்.'

சமூக சேவை செய்ய விரும்பும் யுவதிகளுக்கு இவருடைய யோசனை என்ன? 'ஒரு பெண்ணுக்கு அவளுடைய கணவனையும் குழந்தைகளையும் பராமரிப்பது தான் முதல் கடமை. சமூக சேவைக்கு வர வேண்டுமானால் குடும்பத்தைத் துறக்க வேண்டியிருக்கும்' என்கிறார். தொடர்ந்து, 'நாங்கள் சமூக சேவை செய்த அந்தக் காலம் வேறு, இன்றைய சூழ்நிலை வேறு' என்கிறார்.

இவர் எழுதிய புத்தகத்தைப் போலவே வெளிப்படையாக, சுவையாக இருக்கிறது இவர் பேச்சும். 'நான் ரிடையர் ஆகி விட்டேன்' என்று இவர் சொன்னாலும் பழுத்த அனுபவசாலியும் பக்குவப் பட்டவருமான இவருடைய சுயசரிதை, சமூகப் பிரக்ஞை உள்ள எல்லாப் பெண்களும் படிக்க வேண்டிய ஒன்றாகும்.

— பாரதி

இவன் உயிரைக் காவு கொள்ளாமெ நான் நகரப் போறதில்லே...!''

சிலம்பக் கழியைச் சுழற்றினான். சோமு பிரமை பிடித்து நின்றான். மறுபடியும் சோமுவைக் குறி வைத்து, கழியை ஓங்கியபோது சொர்ணம், சோமுவின் முன்னால் பாய்ந்தாள். அவ்வளவுதான். தலையில் பலத்த அடி. சாய்ந்து விழுந்தாள் சொர்ணம்.

எழுப்பிய பயங்கர ஓலத்தைக் கேட்டு ஒன்றிரண்டு பேர் ஓடி வந்தார்கள். அப்புறம் என்ன?

சோமுவின் பிரேதத்தை அப்புறப் படுத்த போலீஸ் வந்தது. சொர்ணத்தை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். சண்முகம் கலங்கியதாகத் தெரியவில்லை. கை விலங்கை மாட்டி போலீஸ்காரர்கள் இழுத்துச் சென்ற போது கூட


குன்றாப் புதுமைக்கும்
குறையா வனப்புக்கும்
லக்ஷ்மியின்
ஸெமி ஃபுல்
வாயில் புடவைகள்
100% சுத்தமான எகிப்து
பஞ்சு கொண்டு நெய்யப்பட்டது
தி
லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்
உயர்ந்த துணிகளின்
உன்னத சின்னம்

கல்லாகத்தான் இருந்தான். பழி தீர்த்து விட்ட நிறைவோ?

ஒரு கொலைதான் நடந்திருக்கிறது என்று சண்முகம் நினைத்திருந்தான். இல்லை. இரட்டைக் கொலை! இரண்டு மூன்று நாள் உயிருக்குப் போராடி விட்டு சொர்ணம் ஆஸ்பத்திரியிலேயே தலையைச் சாய்த்து விட்டாள். அப்பொழுது தான் சண்முகத்தின் இதயம் இளகியது. கொலைக் குற்றத்தை ஒப்புக் கொண்ட சண்முகத்தை, சென்ட்ரல் ஜெயிலுக்கு அனுப்பினார்கள். அப்புறம்அந்தமானுக்கு அனுப்பி வைக்கப்பட்டான்.

சுருட்டைப் புகைத்து எறிந்து விட்டு பெருமூச்சு விட்டார் சண்முகம். இ... ளவு காலத்திற்குப் பிறகு ஒரு பா... அவரை அழுத்துகிறது. கொதித்துக் கொண்டிருக்கிறார்.

திலானிபூரைக் கடந்தாகி விட்டது. 'போனிக்ஸ் பே'யை நெருங்க நெருங்க நெஞ்சில் துடிப்பு அதிகரித்தது. இன்னும் ஐந்து நிமிடம் நடந்தால் போதும். வேகம் சற்றே தளர்ந்த மாதிரி தோன்று கிறது. அடி வயிற்றில் ஒரு கலக்கம். அப் படியே மடியையும் தடவிக் கொள்கிறார் சண்முகம். புரியாத ஒரு மையல் திரை ...ண்ணை மறைக்கிறது.

''யாரு, சண்முகம் அண்ணாச்சியா?''- பழக்கமான குரல் கேட்கிறது. சண்முகம் திரும்பினார். எதிரே விஜிலன்ஸ் போலீஸ் இன்ஸ்பெக்டர் கோவிந்தன். சாராய ...வட்டையில் ஆள் பெரிய புலி. ...ராந்துக்காகக் கிளம்பினால், கோவிந்தன் ...கஸ் பிடிக்காமல் ஸ்டேஷனுக்குத் திரும்புவதில்லை.

''ஆமா...... ஆமா...''—சண்முகத் ...ற்குத் தடுமாற்றம்.

''இந்த நேரத்திலே எங்கே கிளம்பி ...ங்க?'' என்றார் கோவிந்தன்.

...ம்மா இப்பிடி...இப்பிடி....'' ... சமாளித்தார் அவர்.

''மழை வரும் போல இருக்கு. குடை ...ல்லாமெ வந்திருக்கிறீங்களே?''

''பரவாயில்லை...பரவாயில்லை!''

சண்முகத்தை ஒரு நிமிடம் வெறித் ...ப் பார்த்துவிட்டு நகர்ந்தார் கோவிந் ...ன். போலீஸ் இலாகாவில் அநேகமாக ...ல்லோரையும் சண்முகத்திற்குத் தெரி ...ம். ஆனாலும் என்ன, கோவிந்தனின் ...ள்விக்கு அவரால் நேராக ஒரு பதிலைச் ...சால்ல முடியவில்லையே!

அவர் எங்கே போகிறார்?



எலியின் காதல்

தன் காதல் நிறைவேறி யதும் எலி என்ன செய்கிற தாம் தெரியுமா? 'உய்' என்று விசிலடிக்கிறது என்று கண்டு பிடித்துள்ளார்கள் அமெரிக்க பிராணி நூல் வல்லுநர்கள். இந்த விசிலின் வேகம் 22கிலோ ஹெர்ட்ஸ். நம் செவிகளுக்கு அதைக் கேட்கும் சக்தி இல்லை. இந்த விசில் சத்தம் இரண்டு அல்லது மூன்று விநாடிகளுக் குத்தான் கேட்குமாம். விசிலடிப்பது வாயாலா? மூக்கினாலா? திருமதி எலியைக் கேட்டால்தான் தெரியும்.

கணப்பில் சூடேற்றிக் கொண்டது போல் ஒரு புது வேகம் சண்முகத்தின் உடலில் ஊடுருவுகிறது. வயது அறுபது ஆனாலும் வாட்டம் கிடையாது. அன் றைக்கு எப்படி கடைந்தெடுத்த கொய் யாப் போத்து மாதிரி உடல் இருந்ததோ, இப்பொழுதும் அந்த வலு குறைந்து போனதாகத் தெரியவில்லை. பல பேர் எதிர்த்து வந்தால்கூட லாகவமாக மடக்கி விரட்டியடிக்கும் அளவுக்கு ராவுத்தரிடம் கற்றுக் கொண்ட வித்தைக்கு இவ்வளவு காலமாக வேலை யிருக்கவில்லை. ஆனாலும் அந்த வேகம் புற்றுக்குள் அடங்கிய சர்ப்பமாக அங்கத் தில் ஒளிந்து கிடக்கிறது. மறுபடியும் சர்ப்பம் சீறுமோ?

குருதி கொட்டக் கொட்ட கொய்யாத் தோப்பில் சிதைந்து சீரழிந்து கிடந் தானே சோமு...வெட்டுப்பட்ட வள்ளிக் கிழங்கு மாதிரி தரையில் சரிந்து கிடந் தாளே சொர்ணம்! எத்தனை வருடம் ஆனால் என்ன? நெருப்புத் தழலாக நெஞ் சில் நாக்கை நீட்டிக் கொண்டு நிற்கிறது அந்தக் கோலம். இந்தக் கோலத்திற்கு சண்முகத்தை ஆளாக்கி விட்டது அதுதான்!

பார்வை எங்கோ படர்ந்திருக்கிறது. கால்கள் மட்டும் முன்னேறுகின்றன. சாலைக்குக் கீழே இறக்கத்தில் வரிசையாக வீடுகள். முதலில் டாக்சிதான் கண்ணில் படுகிறது. சந்தேகமில்லை. இரவு பதினோரு மணி. டாக்சி, வாசலில் கிடக்கிறது என்றால் என்ன அர்த்தம்?

புஷ்பா அவருள்ளே பூவாக அசைந்து குலுங்கிச் சிரிக்கிறாள். புஷ்பா...புஷ்பா.. அவள் விஷயம் தெரிந்த பெண் என்றுதான் சண்முகம் கணித்திருந்தார். பொறுப்புள்ள பணியில் இருப்பவள், ஒரு டாக்சி டிரைவரை, அதாவது போர்ட் பிளேயர் டாக்சி டிரைவரை (அவருக்கு இவர்கள் பிடிக்காதவர்கள்!) நாடுவதை அவர் சகித்துக் கொண்டிருப்பாரா? புஷ்பா இன்னும் பேதைதானா? அவளைத் தடம் மாற்றியிருக்கிறான் அவன்... ஒரு வாரமாக மனம் உறங்கவில்லை. சிந்தனையெல்லாம் அவனைப் பற்றித்தான்!

அவன் பெயர் வரதன். படித்திருக்கிறானாம். பார்ப்பதற்குப் பெரிய இடத்துப் பிள்ளை மாதிரி களையாக இருக்கிறானாம். போர்ட் பிளேயருக்கு வந்து ஆறு மாதம் ஆகிறது. வரதனின் சரித்திரம் இதுதான்.

தெரு இருண்டு கிடந்தது. மனம் விழித்துக் கொண்டது. உடலில் முறுக்கேறியது. கொய்யாச் சிம்புகளாக விரல்கள் விறைத்துக் கொண்டன. விழிகள் தீக் கோளங்களாகக் கனன்றன. சண்முகம் நெருங்கி வந்தார்.

வரதனின் அறையில் மங்கலான வெளிச்சம். அவன் இன்னும் உறங்கவில்லை. டாக்சியை சற்று முன்புதான் கொண்டு வந்து போட்டிருக்க வேண்டும்.

மேசையடியில் உட்கார்ந்து எதையோ படித்துக் கொண்டிருந்தான். சன்னலுக்கு வெளியே சந்தடியில்லாமல் நின்றபடி பார்த்தார் சண்முகம்.



பிரதமர் இந்திரா காந்தி பிரயாண அலவன்ஸ் வாங்குவது கிடையாது.

வரதனின் முகம் நன்றாகத் தெரிந்தது ஒரு நிமிடம்...இரண்டு நிமிடம்...

சண்முகம் எதற்கோ தயாராகிக் கொண்டிருப்பது போல் நின்றார். வலது கை, மடியைத் தொட்டது.

ஒரு மின்னல் நெளிந்தது.

தொடர்ந்து வெளியே ஒரு நாயின் குரைப்பு. அது அவரை நோக்கி ஓடி வந்தது. குரைப்பு நிற்கவில்லை.

திடீரென்று திரும்பிய வரதன், சன்ன லுக்கு அப்பால் நின்ற உருவத்தை பார்த்து விட்டு, கததவைத் திறந்து கொண்டு வந்தான்.

ஓரடி பின்வாங்குவது போல் நின் ரிடம் வந்து, ''யார்?'' என்று முணுத்தான்.

மீண்டும் வானில் மின்னல்க முறிகின்றன.

சண்முகத்தைப் பார்த்ததும் வரதனி முகத்தில் மின்னல் பூக்கிறது.

''நீங்களா?''—வரதனுக்கு வியப்ப

ஏனோ விதிர் விதிர்த்துப் போகிறா சண்முகம். இரும்பாக வலுவேறி கரங்கள் இற்று விழுந்த மாதி தொங்கிப் போகின்றன. இயக்க ஒழிந்து நின்று விடுகிறார்.

''உள்ளே வாங்க. இருட்டிலே நிக்கிறீங்களே!''— வரதன்.

ஆமாம், இருட்டில்தான் அவ நிற்கிறார்.

''நானே உங்களை வந்து பார்க் ணும்னு நினைச்சிருந்தேன்...'' என் சொல்லும் போதே வரதனுக்கு கூச்சம்.

''உள்ளே வாங்க!''

சண்முகம் பேசவில்லை. விழியிமை காமல் அவனை அளக்கிறார்.

''நான் பார்த்தாச்சு,பார்த்தாச்சு'' என்ற முனகலுடன் தலையை அசைத் விட்டுத் திரும்புகிறார்.

சண்முகம் அங்கே எதற்காக வந்தா

கொய்யாத் தோப்பில் ரத்த வெள்ள தில் கிடந்த சோமுவும், சொர்ணமு இப்பொழுது அவர் மனத்தில் இல்லை.

வேறொரு காட்சி அங்கே நி லாடியது.

'புஷ்பா புஷ்பாதான்' என்று மன முணுமுணுக்க, வந்த வேகத்தி சண்முகம் திரும்பிக் கொண்டிருந்தார்



பச்சிள மேனியைக் காப்பதற்கே
பாப்பா காட்டும் வழி உமக்கே

-ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர்-



உங்கள் முகத்தின் சருமம்: பச்சிளம் தளிர் போன்ற அதனைப் பாதுகாக்கத்தக்க பவுடர் எது? பாப்பாவின் மேனியைக் காப்பாற்றும் பூப்போன்ற மென்மையான பவுடரே தேவை. மழமழ மென்மையோடு குளுமை-யாக வைத்திருப்பதற்கு— ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்.

பிறந்த நாளைப் பிஞ்சு மென்மையோடு உங்கள் மேனி மிளிரப் பேருதவி

Johnson & Johnson*

* Trade Mark

© Johnson & Johnson

லின்டாஸ்-J&J-2-77 TM

கீதாவிற்கு அது ஒரு விசித்திரமாகப் பட்டது.

இரவு அவளும் அவள் மாமியாரும் சாப்பிடும் சமயம் ராகவன் ஒரு தரமாவது சமையல் அறைக்குள் எட்டிப் பார்க்காமல் இருக்கமாட்டான்.

''மாமியாரும் மருமகளுமாகப் பகல் முழுவதும் பேசியதெல்லாம் போத வில்லையா? சாப்பிடும்போது கூட என்ன பேச்சு வேண்டிக் கிடக்கிறது?'' என்று அதட்டுவான்.

அவர்கள் தங்கள் உணவை முடித்துக் கொண்டு வரச் சற்று தாமதமானால், மீண்டும் சமையல் அறைக்குள் நுழைந்து விடுவான்:

''என்ன காரியம் செய்கிறீர்கள்? வீட்டில் இருப்பவர்கள் நான்கு பேர் மட்டும் தானே? இதற்கு இத்தனை பாத்திரங்களா? அப்பப்பா! எப்பொழுதுதான் நீங்கள் காலத்திற்குத் தகுந்தபடி மாறப் போகிறீர்களோ?'' என்று அலுத்துக் கொள்வான்.

ராகவனால் இரவு பத்து பத்தரை மணிக்கு மேல் விழித்துக் கொண்டிருக்க முடியாது. கீதா தாமதமாக வரும் நாட்கள் எல்லாம் வாழ்வு எனும் புத்தகத்தில் வீணடிக்கப்பட்ட பக்கங்கள் என்பது அவன் எண்ணம்.

எட்டு மணிக்கெல்லாம் அவன் அப்பா, வாசல் அறையில் படுக்கப் போய் விடுவார். மாமியார், கூடத்தில் ஒரு மூலையில் ஒடுங்கிக் கொள்வாள். அவர்கள் தனி அறையில் ஒரே சிரிப்பும் கும்மாளமும்தான்.

ங்ககளைக் கழுவிக் கொண்டு கூடத்திற்கு வந்த கீதா, ராகவன் ஏதோ ஆபீஸ் ரிகார்டுகளைப் புரட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். தூக்கத்தில் முனகிய அவர்கள் ஒரு வயதுக் குழந்தையைத் தூளியை ஆட்டிச் சமாதானப் படுத்தியபின் திரும்பினாள். அன்றைய வேலைகள் அத்தனையையும் முடித்துக் கொண்டு அவள் திரும்பியபோது கூட, அவன் தன் வேலையில் மூழ்கியிருந்தான்.


''கீதா! இவையெல்லாம் ரொம்ப முக்கியமானவை. நான் படுத்துக் கொள்ளச் சற்று நேரமாகும். நீ போய்ப் படுத்துக் கொள்!'' என்றான்.

அவன் எப்போது வந்து படுத்தான் என்று கீதாவுக்குத் தெரியாது. காலையில் பால்காரன் வந்து குரல் எழுப்பியபோது தான் கீதா எழுந்தாள். அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த ராகவனை அவள் எழுப்பவில்லை.

இரண்டாம் நாளும் அப்படியே.

மூன்றும் நாளும் ஆபீஸ் வேலை தொடர்ந்தது.

நான்காம் நாள் அவன் வீடு வரும் போதே மணி பத்து. சோர்வுடன் வந்தவன் பேசாமல் படுத்து விட்டா



ஒரு வருஷம் மட்டும்..

அன்

அதற்கும் மறுநாள்... நண்பர்கள் கூப்பிடுகிறார்கள் என்று கடைசி ஆட்டம் சினிமாவிற்குப் போய் வீடு திரும்பும் போது இரவு இரண்டு மணி.

மறுநாள் ஏதோ ஆங்கிலப் புத்த கத்தைப் பரீட்சைக்குப் படிக்கும் மாணவ னைப் போல் ஊன்றிப் படித்துக் கொண்டு இருந்த போது கீதா, பால் எடுத்துக் கொண்டு வந்தாள். அவளை ஏறிட்டுப் பார்க்காமலேயே பாலை 'மடக் மடக்' என்று குடித்துவிட்டுத் திரும்பி வைத் தான்.

மறுநாள் காலை அவன் அலுவலகம் புறப்படும் போது, கீதா அவனை மடக் கினாள். மாமனார் முதலில் புறப்பட்டுப் போயிருந்தார். மாமியார், குருவிற்கு எண்ணெய் போடக் கோவிலுக்குப் போயிருந்தாள்.



''இது உங்களுக்கே நன்றாக இருக் கிறதா?'' என்று கேட்டாள் கீதா.

அவள் கையிலிருந்த தன் சட்டையைப் பார்த்த ராகவன், ''உன் செலக்ஷன் தானே! நன்றாக இல்லாமல் போகுமா?'' என்று கேட்டான்.

''பேச்சை மாற்றுகிறீர்கள்! நீங்கள் இப்போது எப்படி நடக்கிறீர்கள்?''

''வழக்கம் போல்தான்.'' — நடை மாறினாற்போல் தெரியக் காலில் என்ன, முள்ளா குத்தியிருக்கிறது?''

''இந்த இடக்கெல்லாம் வேண்டாம். நீங்கள் எப்போதும் போல்தான் இருக் கிறீர்களா?''

''இல்லை..மாறித்தான் இருக்கிறேன்'' என்று ஒப்புக் கொண்டான் ராகவன்.

''என்ன காரணம்? ஏன் இந்தத் திடீர் மாற்றம்?''

''வயது ஆகவில்லையா? காதோரம் கொஞ்சம் நரைத்து இருக்கிறது...... இதற்குப் போய்ப் பெரிதாக...''

கீதாவின் கண்களில் நீர் துளித்தது.

''என் மேல் உங்களுக்கு ஏன் இத்தனை கோபம்? என்னை ஏன் சித்திரவதை செய்கிறீர்கள்?''

''போடி, பயித்தியம்!... உன் மேல் கோபமா? எதையாவது நீயாகக் கற்பனை செய்து கொண்டு......''

''ஒரு நாளைக்கு எத்தனை முறை 'கீதா கீதா' என்று கூப்பிடுவீர்கள்? இப்போதெல்லாம் ஓசைப்படாமல் வந்து, உங்களுக்கு வேண்டிய வற்றை நீங்களே செய்து கொண்டு...... எனக்குத் தெரி யாதா?''

''நீயாக எதையாவது கற்பனை செய்து கொள்ளாதே! நான் எப்போதும் போலத்தான் இருக் கிறேன்!'' என்று நகர்ந்தான் ராகவன்.

கீதா சமாதானம் அடைய வில்லை.

''இல்லை... நிச்சயம் இல்லை... என்னை நீங்கள் ஒதுக்குகிறீர்கள். என்னைக் கண்டால் உங்களுக்குப் பிடிக்கவில்லை. என்னோடு பேசப் பிரியம் இல்லை. பழகக்கூட இஷ்டம்



அவள் மென்மையானவள்... அவள் ஒரு புதிர்...
அவள் மிருதுவானவள், உறுதியானவள்...
தீப்போன்றவள்... அவள் பெண்மையே உருவானவள்...
பட்டுப் போன்ற டால்க்... அன்பைப்போல் மிருதுவானது. உங்கள் மேனியைத் தழுவி அரவணைப்பது. உங்களை மோகன லாகிரியில் ஆழ்த்தும் அருமையான புது நறுமணம் கொண்டது. அதுவே வில் ஆ:ப் லவ். ஹேலோ மட்டுமே அளிப்பது. அதைத் தாராளமாக மேனியெங்கும் தூவிக் கொள்ளுங்கள். ஹேலோவிற்கெனவே பிரத்யேகமாக உருவான அதன் நறுமணம் நீண்ட நேரம் உங்களைத் தழுவி, உங்களைச் சுற்றிலும் கமகமவென வீசிக் கொண்டிருக்கும். வில் ஆ:ப் லவ் உங்களை அலங்கரிக்கட்டும். ஹேலோ மட்டுமே அளிக்கும் வாசமுள்ள அன்புத் திரை அது.
ஹேலோ வில் ஆ:ப் லவ் டால்க்
வாசமுள்ள அன்புத்திரை...
அன்பைப் போல மிருதுவானது.
அவளுக்கு உகந்தது
ஹேலோ
வில் ஆ:ப் லவ்
டால்க்
NEW
Halo
TALC

HT.G I.TM

இல்லை. என்னைத் தொடக்கூட இல்லை'' என விசும்பினுள் அவள்.

''ஆமாம். அப்படித்தான்...விருப்பம் இல்லை. என் ஆபீசில் புதிதாக ஒரு ஸ்டெனோ வந்திருக்கிறுள். பெயர் மோகனு. அழகு... அப்பப்பா!...பேச்சு? கிளி கொஞ்சும்... நடையை இன்று முழுதும் பார்த்துக் கொண்டிருக்கலாம். அவளுக்கும் எனக்கும் சிநேகம்... போதுமா?... இப்போது திருப்தியா?'' என்று 'படபட'வென்று சொன்னுன் ராகவன்.

''நிஜமாக அப்படியா?'' என்று அதிர்ந்து போய் உட்கார்ந்தாள் கீதா.

''ஏன் இப்படி வாயைத் திறக்கிறுய்? எப்படியோ உன் அப்பா ஏமாந்து போய் உன்னை எனக்குக் கட்டி வைத்தார். வேறு எந்தப் பெண் இந்த முகரக்கட்டையைத் திரும்பிப் பார்ப்பாள்? நான் சொன்ன மாதிரி யெல்லாம் நாடகத்திலும் சினிமாவிலும்தான் வரும். என் ஆபீஸ் ஸ்டெனோவுக்கு வயது நாற்பது. கல்யாணத்திற்கு ஒரு பெண் இருக்கிறுள்.''

''அப்படியானுல் நீங்கள் இப்படிப் பற்றில்லாமல் இருப்பதற்குக் காரணம்...?'' என இழுத்தாள் கீதா.

''காரணம், ரொம்ப 'ஸிம்பிள்'!'' என்ற ராகவன், தன் டயரியை எடுத்தான். ஒரு பக்கத்தில் சிவப்புப் பென்ஸிலால் ஒரு சிறிய முக்கோணத்தைத் தலைகீழாக வரைந்து காட்டினுன்.

''இதற்கு என்ன அவசரம் இப்போது? நமக்கு இருப்பது ஒரு குழந்தைதானே?'' என்று கேட்டாள் கீதா.

''அடுத்தது இப்போது வேண்டாம்!'' என்றுன் ராகவன்.

''ஏன்! உங்களிடம் பண வசதி இல்லையா? இரண்டு குழந்தைகளை நம்மால் காப்பாற்ற முடியாதா?'' என்று கேட்டாள் கீதா.

''பண வசதியும் இருக்கிறது...கடன் தொல்லையும் உண்டு. உன் நாத்தனுர் கல்யாணத்திற்கு நான் வாங்கிய கடனில் பாதிக்கு மேலே அப்படியே நிற்கிறது. அது கிடக்கட்டும், உன் உடம்பைக் கண்ணுடியில் பார்த்தாயா?''

''ஏன், எனக்கு என்ன? ஒரு சுற்றுப் பருத்துதானே இருக்கிறேன்!''

''அப்படி நீ நினைத்துக் கொண்டிருக்கலாம். நம் கல்யாண போட்டோவைப் பார். மலர்ந்த புஷ்பம் போல் எப்படி நீ சிரிக்கிறுய்! இந்த ஒரு குழந்தை பிறந்த



''நாசிக் போகலாம்னு சொல்றீங்களே?...அங்கே என்ன ...தேர், திருவிழாவா?...''

நீங்க ஒண்ணு!... அங்கே தான் காசு அச்சடிக்கறுங்களாம்...!''

வுடன், தோள் சரிந்து, முகம் ஒட்டி, நடை தளர்ந்து... கீதா... எனக்கு நீ வேண்டும்... வேறு எதுவும் முக்கியம் இல்லை...'' என்றுன் ராகவன் உணர்ச்சி வசப்பட்டு.

கீதா மௌனமாக இருந்தாள்.

''டாக்டர் என்னிடம் என்ன சொல்லியிருக்கிறுர், தெரியுமா? நான் ரொம்பக் கவனமாக இருக்க வேண்டுமாம்....... அதனுல்தான்...''

''இப்படிக் கல்யாணமாகியும் பிரம்மசாரியாக இருக்கப் போகிறீர்களா?'' என்று கேட்டாள் கீதா சோகத்துடன்.

ராகவன், கீதாவின் கைகளைப் பிடித்துக் கொண்டான்:

''கீதா, இது நமக்கு ஒரு சவால். காந்திஜியும் கஸ்தூரியும் போல் நாம் இருப்போம். நமக்குக் காவல் நம் மனம் மட்டும்தான். இன்னும் ஒரு வருஷத்திற்கு நீ என்னுடன் ஒத்துழைக்க முடியுமா?''

''ஒரு வருஷமா?'' என்று மலைத்துப் போனுள் கீதா.

''என்னுல் உறுதியாக இருக்க முடியும் ...நீ கை கொடுத்தால்...!''

''நீங்கள் உண்மையில் அப்படி விரும்பினுல் நான் தடை சொல்ல மாட்டேன்!'' என்றுள் கீதா.

''என் கீதா என்றுல் கீதாதான்!...'' என்று அவளைக் கட்டி அணைக்க விழைந்த தன் கைகளைச் 'சட்'டென்று பின்னுக்கு இழுத்துக் கொண்டான் ராகவன்.

கீதா சிரித்தாள்.

அவர்கள் போட்ட திட்டம் வெற்றிகரமாக முடிந்தது. கீதா ஒன்பது மணிக்குப் படுக்கப் போய் விடுவாள்.

இரவு பத்து மணிக்கு மேல் தூக்கம் கண்களை அழுத்த, தனியாகப் போடப் பட்டிருந்த கட்டில் ஒன்றின் மேல் விழுவான் ராகவன்.

இந்தச் சில மாதங்களாக அவன் சினிமா, நாடகங்களைத் தவிர்த்தான். தத்துவப் புத்தகங்கள் நிறையப் படித்தான். சுவாமி சிவானந்தா என்ன சொல்லியிருக்கிறார் என்பது அவனுக்குத் தலைகீழ்ப் பாடம். பகவான் ராமகிருஷ்ணரைப் பற்றிப் பத்து சொற்பொழிவுகள் நிகழ்த்த அவனுக்குச் சரக்கு சேர்ந்தது.

கீதாவின் உடலிலும் ஒரு பொலிவு தெரிந்தது. வற்றிக் கிடந்த கன்னங்களில் ஒரு சோபை படர்ந்தது. அவன் முயற்சி வீண் போகவில்லை. டாக்டர் கொடுத்த மருந்துகளும் இயற்கையும் அவளைப் புதுமணப் பெண்ணாக்கிக் காட்டின.

ராகவனும் மனிதன்தானே! சில சமயம் எல்லாவற்றையும் மறந்து ஆவேசமாகக் கீதாவைப் பார்க்க அவன் ஓடுவான். அவள் தலைமாட்டில் மாட்டப் பட்டிருந்த காந்திஜியின் படம் அவனை நிறுத்தும்.

பால் டம்ளருடன் வரும் கீதாவிற்கு நாற்காலியில் உட்கார்ந்து இருக்கும் ராகவனை அப்படியே பின்புறமாகக் கட்டி அணைத்தால் என்ன என்று தோன்றும். ஆனால் அவன் மேஜையின் மேல் வைக்கப் பட்டிருந்த ராமகிருஷ்ணரும் சாரதா தேவியும் அவளைச் சாந்தப்படுத்துவார்கள்.

நான்கு மாதங்கள் முடிந்தன.

ஒரு நாள் மாலை ராகவன், ஆபீசிலிருந்து வந்ததும், கீதா அவனைத் தன் தனி அறைக்கு அழைத்தாள்.

''பிடியுங்கள் சர்க்கரையை!'' என்று நீட்டினாள்.

''என்ன விசேஷம்?'' என்று கேட்டான் ராகவன்.

''நல்ல சமாசாரம்தான்! நம் வீட்டு ஜனத்தொகை ஒன்று கூடப் போகிறது!'' என்றாள் அவள்.

''என்ன உளறுகிறாய்?'' என அதட்டினான்.

''என்ன விழிக்கிறீர்கள்? விளக்கைப் பெரிதாகப் போட்டுக் கொண்டு நீங்கள் படித்துக் கொண்டிருந்தால் அம்மாவிற்குத் தூக்கம் வருமா? வாயிற்புறம் உள்ள அறைக்குப் போய்ப் படுத்திருக்கிறார்கள். ரிசல்ட்... உங்களுக்குத் தம்பி பிறக்கப் போகிறான்!'' என்றாள்.




வியக்கவைக்கும் உங்கள் அழகை
வெளிப்படுத்திக் காட்டும் ஜரிகைப் புடவைகள். இப்பொழுது
ஹேண்ட்லூம் ஹவுஸில் வந்து குவிந்துள்ளன.
உங்கள் அழகை
சிறப்பாக எடுத்துக்காட்ட
காஞ்சிபுரம், பெனாரஸ், ராஜஸ்தான்
புடவைகள்.
ஹேண்ட்லூம் ஹவுஸ்
9, ரத்தன் பஜார், சென்னை-600003

நர்ஸ், தனியறையில் சியாமளாவைப் பரிசோதித்து விட்டு வந்து அந்தச் செய்தியை ஊர்ஜிதப்படுத்தியவுடனே டாக்டர் சிவபாதத்துக்கு மனம் விழுந்து போயிற்று. நடைப் பிணம் போல் முகம் வெளுத்துப் போய் ஒல்லியாக, எதிரில் போட்டிருந்த நாற்காலியைப் பிடித்துக் கொண்டு நின்ற சியாமளாவைப் பார்த்தார்.

பேதை முகம். சோகச் சித்திரம் போல் நிற்கும் அந்தப் பெண்ணிடம் என்ன பேசுவதென்று அவருக்கு விளங்கவில்லை. வாழ்க்கை தலைகீழாக மாறிப் போய் விட்டதை அவர் நிறையப் பார்த்துச் சலித்து விட்டார். இன்பங்களை லயம் தவறி, நிதானம் கெட்டு, முறை பிசகி எல்லாம் ஓடி ஓடி அனுபவித்து விட்டு அவஸ்தைப் படுபவர்களை அவர் தொழிலில் சந்தித்திருக்கிறார் ஏராளமாக.

தொட்டால் நொறுங்கி விடும் கண்ணாடிச் சிற்பம் போல் நிற்கும் சியாமளாவின் அழகில் மாசுமறுவற்று இதயத்தைத் தொடும் ஏதோ ஒரு மின்சாரம் தெரிந்தது. இவள் கூடவா? யாரை நொந்து கொள்வது?

'வெளியே, வாயில் துண்டைப் புதைத்துக் கொண்டு கண்கள் சிவந்து கண்ணீர்க் குளமாக சாம்பமூர்த்தி உட்கார்ந்திருப்பான்! மூன்றையும் பெண்ணாகப் பெற்று மடியில் நெருப்பைக் கட்டியவன் போல் தவிக்கும் அவனிடம் என்ன சொல்வது?


'ஹைபர்க்ரோமிக் அனீமியா இருப்பதால் டி அண்ட் ஸி செய்ய முடியாது' என்று சொல்லி விடுவது சுலபம். அதன் பொருள் சியாமளா நிர்ப்பந்தமாகத் தாயாக வேண்டும் என்று கட்டாயப் படுத்துவதுதான். அதை வாய் விட்டுச் சொல்வதா? நானா... சாம்பமூர்த்தியிடமா?

சாம்பமூர்த்தி எவ்வளவு மானஸ்தன்! பந்தர் தெரு ஸ்டேஷனரி ஒன்றில் நூற்றைம்பது ரூபாய்ச் சம்பளத்தில் தையப்ப முதலித் தெருவில் அறையென்ற பொந்துச் சிறையில் குடும்பம் நடத்தி வருகிறான் பத்து வருஷங்களாக. பச்சையப்பாவில் ஒன்றாகப் படித்தோம் என்ற உரிமையைக் கொண்டாடிக் கொண்டு ஒரு நாள்கூடத் தலைவலி என்று அவன் மருந்துக்கு வரவில்லை; கைமாற்றுக்கு வரவில்லை. கிரகப் பிரவேசத்துக்கு வந்தவன், சாப்பாட்டுக்குக் கூட நிற்கவே யில்லை.

காரில் சிவபாதம் போகும் போது பார்த்தால் கூட ஒதுங்கி நின்றுவிடுவான். அவராக நிறுத்திக் குசலம் விசாரித்தால் கூட, புன்னகையோடு நாலு வார்த்தை பேசிவிட்டுக் கைகூப்பி விடுவான்.

வறுமை. அது வெட்டிய அதலபாதாளத்தில் சாம்பமூர்த்தியின் டிபன் கேரியரில் ஒன்றாகத் தான் சாப்பிட்டதையும், கிரவுண்டில் ஆறு மணி வரை 'புல்அப்ஸ்' எடுத்துவிட்டு, எம்.ஜி... ணமதானத்தில் ஏழரையாகும் வரை கதை பேசியதையும், ஒருவனுக்காக உயிரைக் கொடுக்கும் தோழமையையும் சாம்பமூர்த்தி தன்மானத்தோடு மறந்து போனது அவருக்கு அடிக்கடி நினைவு வரும். மனம் ஓர் இழப்பை உறுத்தலோடு உணர்த்தும்.

செல்வம் வந்தது. புதிய உறவுகள் வந்தன. ஆனால் சாம்பமூர்த்தி போன்ற



ஒரு நண்பன் இல்லே. மனேவியும் போய் விட்டதால் டாக்டர் சிவபாதம் அனுபவித்த தனிமைக்கு மாற்ருக மனமொத்த நேசம் கிட்டவில்லே. அப்போதெல்லாம் சாம்பமூர்த்தியின் எட்ட நின்று பேசும் தன்மானத்தைக் கண்டு மனம் பொருமும்.

'அடேய் சாம்பு!' என்று அடிமனத்தில் ஒரு மெல்லிய அலறல் கிளம்பும். ஆனல் அவனது ஒதுக்கத்திற்கு ஒரு மரியாதை கொடுத்து விலகியே நின்று விடுவார் சிவபாதம்.

இன்றுதான் சாம்பமூர்த்தி, டாக்டர் சிவபாதத்தை நாடி வந்திருக்கிருர்.... ஆனல், இருபத்தைந்து வருஷம் இடைவெளி விட்டு தான் அவனுக்கு அளிக்கப்போகும் தலேக் குனிவு எப்பேர்ப் பட்டது என்று நினேக்கும்போது அவருக்கு நெஞ்சை அடைத்தது.

''உட்காரம்மா!'' என்று சியாமளாவிடம் சொன்னுர். கண் இரப்பைகளே நீக்கி, மீண்டும் பரிசோதித்தார். பி.பி. எடுத்துப் பார்த்தார். அந்த முகத்தில் செல்வக் களே படிந்தால்,அது எவ்வளவு ஜீவனேடு சுடர் விடும் என்று நினேக்கும் போது, தனக்கு ஒரு பெண்ணில்லே என்ற குறை உறுத்திற்று.

ஒரு வேளே பெண் இருந்திருந்தால், அவளும் இப்படித்தான் இன்னெரு டாக்டரிடம் ஓடி யிருப்பாளோ!

''நீ வருத்தப் படாமெ, மனசைத் தைரியமா வச்சுட்டு எங்கிட்டே சில உண் மைகளேச் சொல்ல ணும்'' என்று ஆதர வாக ஆரம்பித்தார்.

அவள் கண்களி லிருந்து மாலே மாலே யாக இடைவிடாது நீர் உருண்டு கொண் டிருந்தது.



பரிகாரம்

விவேகி

''அவன் யாராயிருந்தாலும் எனக்குச் சொல்லம்மா! நான் உங்கள் கல்யாணத்தை, அவன் கழுத்திலே துண்டைப் போட்டு முறுக்கி இழுத்துட்டு வந்து நடத்தி வைக்கிறேன்.''

அவள் மெதுவாக விம்மினுள்.

''டி அண்ட் ஸி செய்ய முடியாது. நீ ரொம்ப அனிமிக்கா இருக்கிறே! யூ ஹேவ் டு அண்ட் மஸ்ட் டு கேரி தி சைல்ட்...''

சியாமளா அவரை நிமிர்ந்து பார்க்கவே கூசிக் கொண்டு மேஜை விளிம்பை விரலால் தடவிக்கொண்டே சொன்னுள்:

''அவர் பெயர் பாஸ்கர். அவர் பிரண்ட்சுகள்ளாம் அவரைப் பாலுன்னு கூப்பிடுவாங்க.''

டாக்டர் சிவபாதத்தின் புருவம் லேசாக நெரிந்தது.

''ஸ்டான்லி ஸ்டாப்பிங்கிலே நான் வேலைக்குப் போக பஸ்ஸிற்கு நிக்கறப்ப முதல்லே பார்த்தேன். ஒரு செவப்பு ஹெரால்ட் வச்சிருக்கார், டாக்டர்! எந்தக் கெட்ட எண்ணத்தோடும் அவரோட நான் பழக ஆரம்பிக்கலே. ஒரு நாள் மத்தியானம் எனக்குத் தெரிந்த சாப்பாட்டுக்கார ஆயா மேலே சைக்கிள் ரிக்ஷா ஏறிட்டுது. அப்போ, அவர் கார்லே வந்தார். அதை நிறுத்தி ஆயாவை ஆஸ்பத்திரிக்கு ஏத்திக்கிட்டுப் போனேன். அவர் என்னை ரொம்ப 'அட்மயர்' பண்ணினுர். ரெண்டு வாரம் அடிக்கடி என்னைப் பார்த்துச் சிரிச்சிட்டுப் போவார். நல்லவர்னு நெனச்சேன். பழக்கம் வளர்ந்தது. நாலைந்து தடவை லிப்ட் கொடுத்திருக்கார். அப்புறமா... அப்புறமா ஒரு நாள் சாந்தோமுக்குப் போவோமான்னு கூப்பிட்டார். நான் மறுத்திட்டேன். ரொம்ப கட்டுப்பெட்டியா இருக்கியே என்றுர். கல்யாணம் பண்ணிக்கறேன்னுர். என்னென்னவோ சொன்னுர். பத்து நாள் கழிச்சு அவர் மறுபடியும் கூப்பிட்டப்போ நம்மை மீறி என்ன நடந்துடும்னு நான் போனேன். டாக்டர்... அது... அது... என்னை மீறி, வலுக்கட்டாயமா நடந்தது டாக்டர்... அப்புறமா அவரை நான் பார்க்கவே இல்லை.''



''அன்பே! நான் உன்னைக் காதலிக்கிறேன்! காதலிக்கிறேன்! காதலிக்கிறேன்!''

''ஏலக் கடையிலே நீங்க வேலை பார்த்தா அதுக்காக இப்படித்தான் எதையும் மூனு தரம் சொல்லணுமா?''

டாக்டர் சிவபாதம் ஆழ்ந்த பெருமூச் செறிந்தார். அவர் முகம் சிந்தனை வசப்பட்டிருந்தது.

''சிவப்பு ஹெரால்டா? நம்பர் தெரியுமா?''

''டி.ஓ.டி. 7373 டாக்டர்.''

''சுருட்டைத் தலை. சிரிச்ச முகம். செவப்பா, அகலமான நெற்றியோட இருப்பானே, அந்தப் பையனு?''

சியாமளாவின் முகம் பிரகாசம் அடைந்தது:

''ஆமாம், டாக்டர்! உங்களுக்கு அவரைத் தெரியுமா?''

''தெரியும்மா... அவன் முரடனுச்சே! நெறய விஸ்கி குடிப்பான். வாராவாரம் ரேசுக்குப் போவான். மனுஷன்னு பெண்கள்னு மரியாதை இல்லாதவன்.''

''டாக்டர்!'' என்று அவள், சேலைத் தலைப்பை வாயில் புதைத்துக் கொண்டு விம்மினுள். சியாமளாவின் தலைவிதியை நினைத்து டாக்டர் சிவபாதம் உள்ளுக்குள் மறுகினுர். சாம்பமூர்த்தியின் குடும்பம் சிதைந்து சீரழிவிற்குச் சமீபமாகப் போய் விடுமோ என்று அவரது நெஞ்சு நடுங்கிற்று.

ஒரு பெருமூச்சு விட்டு விட்டு டெலிபோனை எடுத்து ஒரு நம்பரை டயல் செய்தார்.

யாரோ பேசினுர்கள்.

''பாஸ்கர்?'' என்றுர்.

சியாமளாவின் மனம் துடித்தது. அவரா பேசுகிறுர்? ஆவல் அலை பாய்ந்தது.

டெலிபோனின் வாயை மூடிவிட்டு, ''நீ உள்ளே போய் உட்காரும்மா! அந்தப் பயல் வரும்போது இங்கே இருக்கவேண்டாம்'' என்று சொன்னுர். சியாமளா எழுந்து உள்ளே போனுள்.

சரியாகக் கால் மணி நேரம் கழித்து வெளியே மேல்துண்டால் வாயைப் பொத்திக் கொண்டு உட்கார்ந்திருக்கும் சாம்பமூர்த்தியின் உருவம் ஒரு கணம் தெரிந்து மறைய, சுழல் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தான் பாலபாஸ்கர்.

''ரொம்ப ஸல்டிரியா இருக்கே இன்னிக்கு!''என்று எதிரில் உட்கார்ந்தான்.

''எஸ், பாஸ்கர்... இன்னிக்கு ரொம்ப புழுக்க மான நாள்தான்'' என்று புழுக்கத்திற்கு ஒரு விசேஷ மான கசந்த அழுத்தத்தைக் கொடுத்தார்.

அவன், அவரைக் கேள்விக் குறியோடு நிமிர்ந்து பார்த் தான்.

''இன்னிக்கு ஒரு விசித்திர மான கேஸ்! வெளியே உட்கார்ந்திருக்காரே அவரு டைய பெண்ணை யாரோ ஒரு உல்லாசப் பேர்வழி பாழாக்கிட்டான். அவள் தான் மூத்த பெண். அவ ளுக்கே தெரியாமெ அவள் நான்கு மாதம் தாயாகி விட்டாள். ஷி ஈஸ் அனீமிக். வேற எந்த விபரீதம் நடந்தாலும் அவள் சாக வேண்டியதுதான். விட்டுட் டாலும் அவமானத்தி னுலே அவள் தற்கொலை பண்ணிட்டுச் சாவாள். பையன் யாருன்னு அடையா ளம் காட்ட முடியும்னு சொல்ரு. போலீஸ், கோர்ட் இதெல்லாம் பெண் ணின் மானத்தையும் வாழ்க்கையையும் மீட்டுத் தர்றதுக்கு நாளாகலாம். இல்லாட்டி, முடியாமெ கூடப் போயிட லாம்.''

அவர்,பாஸ்கரைக் கண்களால் அளந்து கொண்டே நிறுத்தினுர். அவன் முகம் படிப்படியாக மாறிக்கொண்டே வந்து, தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான அடையாளம் போல் சிவந்தது.

''அதனுலே நான் ஒரு முடிவு பண்ணி யிருக்கேன். சியாமளா...'' என்று உள்ளே திரும்பிக் கூப்பிட்டார் டாக்டர் சிவபாதம்.

சியாமளா நிதானமாக நடந்து வந்தாள்.

''இவள்தான் அந்தப் பெண். ஸீ, ஹௌ இன்னொஸன்ட் ஷி ஈஸ்... ஹௌ டிவைன்லி இன்னொஸன்ட்... இந்த மாதிரி ஒரு பெண்ணை வாழ விடணுமா, இல்லையா? நீயே சொல்லு.''

''ஊம்...ஊம்''என்று மென்று விழுங் கியவாறு பரபரப்போடு தலையை வேண்டா வெறுப்பாக அசைத்தான் பாஸ்கர்.



''நம்ம பசங்க சுத்த சோம்பேறியா இருந் தாங்க... 'எறும்புகளைப் பாருங்கடா, எத்தனை சுறுசுறுப்பா இருக் கு'ன்னு சொல்லி வச்சேன்.''

''இப்போ சுறுசுறுப்பா ஆயிட்டாங்களா?'''

''அதானே இல்லை!... நாள் பூரா எறும்புகளைப் பார்த்துக் கிட்டே சோம் பேறித்தனமா உக்காந் திருக்காங்க!''

''நானே இவளை ரெண் டாவது கல்யாணம் பண்ணிக்கலாம்னு பார்க்க றேன். யாரோ செஞ்ச கொடுமைக்கு யாருமே பரிகாரம் பண்ணலேன்னு உயிர்கள் புளியம்பூக்கள் மாதிரி உதிர்ந்து வீணு யிடும்...''

''டாக்டர்'' என்று திக் பிரமையோடு சியாமளா கூவிய அதே நேரத்தில் பாஸ்கரும் அதிர்ச்சியோடு ''அப்பா'' என்று கூவினுன்.

சியாமளா அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி அடைந்து இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''என்ன சொல்றே பாஸ் கர்...ஆம் ஐ நாட் கரெக்ட்? நான் தீர்மானமா முடிவு பண்ணிட்டேன்.''

''அப்பா... அப்பா'' என்று சற்று நேரத்துக்கு முன்னிருந்த உதாசீனமும் அலட்சியமும் போன இடம் தெரியாமல் கதறிக் கொண்டே அவரது கைகளைப் பிடித்துக் கொண்டு அழுதான், டாக்டர் சிவபாதத்தின் மகன் பாஸ்கர்.

''என் தவறை ஒத்துக்கறேம்பா...... சியாமளாவை நானே கல்யாணம் பண்ணிக்கறேம்பா'' என்று அவன் மனம் கரைந்து சொல்லும்போது, டாக்டரின் முகம் நிம்மதியினுல் பிரகாசித்தது.

'சாம்பசிவம்...இருபத்தைந்து வருஷம் கழித்து என்னிடம் ஓர் உதவி கோரி வந்திருக்கிருயே, உன்னை ஏமாற்ற மாட் டேன்! உன் வீட்டு விளக்கை என் வீட்டில் ஏற்றி வைக்கிறேன்' என்று அவர் மனம் முனகிற்று.


''நான், உன்னைக் கட்டாயப்படுத் தலே பாஸ்கர்! தலைக்கு வந்த சொமை என நெனச்சு நீ இவளை இப்போ ஏத்துக் கிட்டு, அப்புறமா ஒதறித் தள்ளிடறதா இருந்தால் நீ கல்யாணம் பண்ணிக்க வேண்டாம்!''—'நீ' என்ற வார்த் தையை அவர் விசேஷமாக உச்சரித்தார்.

''அப்பா...''என்று அவன் உதட்டைக் கடித்துக் கொண்டு கண்ணீர் விட்டான். சியாமளா முகம் மலர்ந்து விகசிக்க, தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.



நின்னைச் சரணடைந்தேன்!
பேருக்கும் புகழுக்கும் பேராசைப் படவில்லை.. ஐயா!
தமிழக அரசின் சாதனைகள்.
• கூவம் சீரமைப்பு திட்டம்.
• பிச்சைக்காரர் மறுவாழ்வு திட் ம்
• சைக்கிள் திட்டம்.
• குடியிருப்பு தி ம்
• நில வழங்
காணக் கண் கோடி வேண்டும்...!

சியல் மேடையில்
சைக்
ச்சேரி!








தீட்சிதர் சுப்ரமணியத்தைப் பற்றிக் கிராமத்தில் எத்தனையோ விமரிசனங்கள். அந்த ஒழுக்க சீலர், தன் மனைவியால் 'கல்லுளி மாங்காய்' என்றும், 'பரப் பிரும்மம்' என்றும்தான் கோபக் கொந்தளிப்புகளில் விமரிசிக்கப்பட்டார். கடும் ஆசார அனுஷ்டானங்களில் ஈடுபட்டு, தன்னைத் தனது பூஜை அறையிலேயே சிறைப்படுத்திக் கொண்டவர்.

இரண்டு குழந்தைகளுக்குப் பிறகு, கடும் பிரம்மசரியத்தை அனுசரித்ததால், அவர் முகத்தில் தனிக் களையொன்று குடிகொண்டிருந்தது. ஊரிலுள்ள கோயிலுக்குப் போவதை அவர் என்றோ நிறுத்திவிட்டிருந்தார். 'அங்குள்ள குருக்கள் சரியாக சமஸ்கிருத மொழியைப் பாடம் செய்யவில்லை' என்ற கோபம். தனது வீட்டையே கோயிலாக மாற்றிக் கொண்டு, வெளியே வந்து மாறிக் கொண்டு வரும் சமூகத்தைப் பார்க்க மாட்டேன் என்ற வைராக்கியம். ஏனெனில் சமூகத்தின் மீதும் அவருக்குக் கோபம்.



பிழைப்புக்காக வைதிகம் நடத்த அவர் விரும்பவில்லை. ஆத்ம திருப்திக்காகத்தான் அதைச் செய்து கொண்டிருந்தார். ஆனால் அதையும் நிறுத்தி விட்டார். சடங்குகளின் மீதும் அவருக்குக் கோபம்.

'உயிருடன் இருக்கும் மகனை, இறந்தவனைக் கருதி, காவிரியில் தர்ப்பணம் பண்ணி, எள்ளையும் தண்ணீரையும் இறைத்து விட்டுக் கடமை தீர்ந்து விட்டது' என்று தீர்மானம் பண்ணிக் கொண்டு, உணர்ச்சிகளை உள்ளே அடக்கி, தனது வயிற்றையும் அடக்கி வாழக் கற்றுக் கொண்டார்.

பிள்ளையின் மீது கோபம்! அவன் செய்த மாபெரும் குற்றம், அவன் ஒரு கிறிஸ்துவப் பெண்ணை மணந்து கொண்டான் என்பதுதான்.

இந்த அதிர்ச்சியைத் தாங்காமல், கூனிக் குறுகியே போனார். ஏமாற்றம் கோபமாக மாறி, வெறியாகி, பிறகு 'என் பிள்ளை செத்து விட்டான் போ' என்று சொல்லித் தர்ப்பணம் பண்ணி விட்டு வந்த பிறகுதான் அவருடைய தாபம் தணிந்தது.

''அடியே காமு! கால் அலம்பத் தண்ணி கொண்டு வா. அப்படியே நீயும் குளி. என் மகன் செத்து விட்டான். உனக்கும் எனக்கும் இனி, முனிசிபாலிடிக்காரன்தான் கொள்ளி போட வேண்டும்....போ'' என்று இரைந்து சொல்லிவிட்டு, பூஜை அறையிலே போய்க் கதவைச் சாத்திக் கொண்டு, யாருக்கும் தெரியாமல் அழுத பிறகுதான் அவருக்கு நிம்மதி ஏற்பட்டது.

இது நடந்து பன்னிரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன.

காமு ஓர் அப்பாவி. கணவன் சொன்னாரே என்று குளித்தும் விட்டாள். ஆனால் வயிற்றில் தெரிந்த வடுக்கள்...


'அடிப் பாவி! சிவராமன் உன் மகனல்லவா? உனக்கு என்ன துணிச்சல், அவன் இறந்து விட்டான் என்று சொல்வதற்கு? நீ காய்ச்சலில்

மாயா.

படுத்துக் கொண்ட போது எல்லாம் உன் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டு, குறிப்பறிந்து பணிவிடை செய்வானே! அவனை எப்படி நீ புறக் கணித்தாய்?' என்று மனச்சாட்சி கேட்கும் போதெல்லாம், 'ஓ'வென்று இரைந்து, லலிதா சகஸ்ரநாமம் சொல்லித் துக்கத் தையே மறைக்கப் பார்ப்பாள். கணவ னின் வைராக்கியத்தை உடைக்க முடியா மல் தோல்வி கண்டு, துக்கத்தைத் தாங்கிக் கொள்ளத் தன்னைப் பழக்கப் படுத்திக் கொண்டாலும், அவ்வப்போது சர்ப்பம் போன்று சீறிவரும் பாச உணர்ச்சிகள் சதா அவளைச் சங்கடப் படுத்திக் கொண்டேயிருந்தன.

'சிவராமனுக்கு ஏன் கடவுள் சிறந்த அறிவைக் கொடுத்தார்?' என்று குமுறு வாள், அந்தத் தாய். மூளை இருந்ததனால் தானே உபகாரச் சம்பளத்தில் ஜெர்மனி சென்று அவன் படிக்க நேரிட்டது? அங்கு சென்றதால்தானே, அந்த வேற்று மதப் பெண்ணைக் கட்டிக் கொண்டான்?

'சே! அவளைச் சொல்லி என்ன பயன்? சிவராமனுக்கு எங்கே போயிற்று புத்தி? உடலைக் கண்டு மயங்கி விட்டான்' என்று



தன் மகனைத் தப்புக் கணக்குப் போட்டாள் காமு.

சிவராமன் உடலின் பகட்டிற்காக எலிசபெத்தைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லை. அவளது அறிவின் மேல் ஏற்பட்ட மயக்கத்திற்கு அடிமையாகித் தான் கல்யாணம் செய்து கொண்டான். மேலும் இருவரும் மதம் மாறத் தயாராக இல்லை. ஆதலால் மதச் சடங்குகளை அனுசரித்து அவர்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை. 'ரிஜிஸ்தர்' கல்யாண மும் பண்ணிக் கொள்ளவில்லை. ஆனால், சம்பிரதாயங்களும், சடங்குகளும் சாதிக்காத உன்னத தாம்பத்திய உறவை அவர்கள் உள்ளச் சேர்க் கையும், ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட சக்தியும், பிறர் பொறுமைப் படக்கூடிய தம்பதியாக இருந்து வாழச் செய்தன. சிவராமன்மேல் ஏற்பட்ட காதல் உணர்ச்சியில் குறுகிய மதக் கட்டுப்பாடுகள் தலையிட அவள் சம்மதிக்காததால், அவள் பெற்றோர் அவளை ஒதுக்கி வைத்து விட்டனர். 'கிராமத்துக்குச் சென்று தன் கணவனின் தந்தை, தாயைப் பார்க்க வேண்டும்; அவர்களின் கோபத்தைத் தணிக்க வேண்டும்; சாகும் முன்பாக எப்படியாவது, தனது கணவனை அவன் பெற்றோருடன் சேர்த்து வைத்துவிட வேண்டும்' என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்தாள் எலிசபெத்.

''ராம்! என்னால் உங்களுக்கு எவ்வளவு துன்பம்? உங்கள் பெற்றோர் உங்க ளுக்கு ஒரு கடிதம்கூடப் போடுவதில்லை. நீங்கள் போடும் கடிதங்களையும் திருப்பி விடுகிறார்கள். எனக்காகத்தானே இவ்வளவு துக்கங் களையும் நீங்களே தாங்கிக் கொள்கி றீர்கள்?'' என்று அவள் கேட்கும் போதெல்லாம் சிவராமன் சிலிர்த்துப் போய் விடு வான்.

''நீ காட்டும் அன்பின் அணைப் பிலேதான் என் துக்கங்களை மறந் துள்ளேன். ஆனால், என் பெற்றோரை மறக்கவில்லை. ஆனால் என் துக்கம், நம்மிடையே நிலவும் அமைதியான வாழ்வையோ, உன் இன்பத்தையோ கெடுக்க நான் இடம் தரமாட்டேன். நான் துக்கப்பட்டுக் கொண்டே இருந்தால், அது என் குற்ற உணர்வைத்தான் தமுக்கு அடிக்கும்.

''காலம் மாறும் என்று நான் நம்புகிறேன். அப்படி நம்புவதுதான் நாகரிகமும் கூட. அதுவரை தாயின் அன்பு, தந்தையின் பாசம், மனைவியின் காதல் அனைத்தும் உன் ஒருத்தியின் துணையிலேயே நான் அனுபவிக்கிறேன்..'' என்று சொல்லி, அவளை இழுத்து அணைத்துக் கொள்வான். சிவராமனின் அந்தச் சுகமும் நீடிக்கவில்லை. காரை எடுத்துக் கொண்டு, சாமான்கள் வாங்கி வரச் சென்ற எலிசபெத், திரும்பிவரவேயில்லை. காலன், லாரி உருவத்தில் வந்து, அவளை வாரிக் கொண்டு போனான். அவள் நினைவாக அவள் விட்டுச் சென்ற 'சங்கர்' ஒருவன்தான், அவர்கள் தம்பதியாக வாழ்ந்தனர் என்பதற்கு அத்தாட்சி. வாழ்க்கையே இருண்டு போய்விட்டது சிவராமனுக்கு. நாட்கள், வாரங்கள், மாதங்கள், வருடங்கள் எல்லாம் அவனைச் சித்திரவதை செய்துகொண்டு நகர்ந்தன.

இந்தப் பத்து வருடமாக எப்படியோ சங்கரை வளர்த்து விட்டான். இனி எப்படியோ? வர வர உடம்பு சரியாகவே இல்லை. டாக்டரை அணுகிய போது, அவனுக்கு ரத்தத்தில் புற்று நோய் ஏற்பட்டிருப்பது தெரிய வந்தது.

தன்னைவிட தன் மகனின் எதிர்காலத்தையே நினைத்து நடுநடுங்கிப் போனான் சிவராமன்.

ஒரு நாள் தன் மகனிடமே மனம்விட்டுப் பேசினான்: ''சங்கர், எனக்கு உடம்பு சரியில்லை. நான் ஒருவேளை இறக்கவும் நேரிடலாம். நீ என்ன செய்யப் போகிறாய்?''

''எனக்குப் பயமாக இருக்கிறது'' என்று அவனைக் கட்டிக் கொண்டான் சங்கர்.

''உனது பாட்டியும் தாத்தாவும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் என்னையே ஏற்றுக் கொள்ளவில்லை உன்னை ஏற்றுக் கொள்வார்கள் எ[illegible] எனக்கு நம்பிக்கையில்லை'' என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டான்.

''ஏம்ப்பா?'' என்றான் சங்கர்.

நடந்த கதைகளைச் சொன்னான். ''சங்கரா, நான் ஒரு அநாதையடா உனது அத்தை தில்லியில் இருக்கிறாள் அவளை உனக்கு கார்டியனாக நியமி திருக்கிறேன். இருந்தாலும் கிராமத்தி உள்ள என் பெற்றோர் உன்னை அழைக் வந்தால், போவாயா? அப்படி அவர்க அழைத்து, நீ போய், உன் தாத்தா பாட்டி இரண்டு பேர் அன்பையும் பெ றால்தான் எனக்கு நிம்மதி'' என்று கல கலங்கக் கேட்டான். சங்கர் விசித் விசித்து அழுதானே தவிர, பதில் ஏது சொல்லவில்லை

அவன் சுயமரியாதையை விட்டு கொடுத்து, பத்து வருடங்களுக்குப் பிற அவன் தாய்க்குக் கடிதம் போட்டான்:


'அம்மாவுக்கு,

சிவராமன் அநேக நமஸ்காரம் உங்களைத் தவிக்க விட்டதற்கு தண்டனையாகக் கடவுள் என் ரத்த தில் கான்ஸரைக் கலந்துள்ள டாக்டர்கள் கைவிட்டு விட்ட என்னைப் போன்று சங்கரும் அநாதை யாக ஆகிவிடுவான். நான் போ பிறகு நீ அவனை எடுத்து வளர்க் வேண்டும் என்பதற்காக நான் இத எழுதவில்லை. அந்தப் பாக்கிய எனக்கே இல்லை.

சாகும் முன் உன்னைப் பார் வேண்டும் என்று நினைக்கிறே அப்பாவை என்னை மன்னிக் சொல்லவும். நீ வருவாயா?

இப்படிக்கு,

உனது சிவராமன்.'



''உன் டிரஸ் உனக்கு ரொம்பப் பொருத்தமாக இருக்கிறது!'' என்றாள் என் தோழி. எனக்குப் பெருமையாக இருந்தது: ''ஆமாம், நீ எங்கே போகிறாய்?'' என்றேன் நான். ''கண் பார்வை சரியாக இல்லை. கண் டாக்டரிடம் போய்க் கொண்டிருக்கிறேன்'' என்றாள் அவள். இப்பொழுதெல்லாம் அந்த டிரஸ்ஸைப் பார்க்கவே பிடிக்கவில்லை எனக்கு.

கடிதத்தைப் படித்தவுடன் 'ஓ'வென்று அலறி விட்டாள் காமு. கணவனிடம் போய் உடனே சென்னைக்குச் சென்று பார்க்க வேண்டும் என்று அழுதாள்.

தீட்சிதர் மனக் கலக்கத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் நிதானமாக, ''யாரைப் பற்றிச் சொல்கிறாய்? பைத்தியமே, என் மகன்தான் என்றோ செத்துவிட்டானே! நான் தர்ப்பணமும் பண்ணி விட்டேன். உனக்கு மறந்து விட்டதா?'' என்றார்.

''நீங்களுமாச்சு, உங்கள் தர்ப்பணமுமாச்சு'' என்று சொல்லிவிட்டு, ஓடிப் பக்கத்துத் தெருவில் குடியிருந்த அவள் தம்பியை அழைத்துக் கொண்டு, சென்னை நோக்கிச் சென்றாள் காமு.

காமுவின் வருகைக்காகக் காலன் காத்திருக்கவில்லை. சிவராமன் இறந்ததோடு அல்லாமல் எரிந்தும் விட்டான். திறந்து கிடந்த வீடுதான் வரவேற்பளித்தது. மூலையில் சுருண்டு விசித்து விசித்து அழுது கொண்டிருந்த சிறுவன்தான் சங்கரோ! அப்படியே சிவராமனை உரித்து வைத்துள்ளான். சிறுவனைப் பார்த்த மாத்திரத்தில் காமுவிற்குச் சிவராமன் இல்லாமை மறந்து விட்டது.

வலுக் கட்டாயமாகச் சங்கரை அழைத்துக் கொண்டு ஊர் வந்து சேர்ந்தாள் காமு.

வீட்டின் படியேறும் போது ''பாட்டி'' என்று சங்கர் கூப்பிட்டான்.

''என்னடா குழந்தை?''

''இதுதான் உங்கள் வீடா பாட்டி?''

''ஆமாண்டா. இனிமேல் இது உன்னுடையது.''

''இல்லை, பாட்டி! தாத்தா சம்மதித்தாரா? அப்பா எனக்கு எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறார்.

''பாட்டி, தாத்தாவுக்கு என்னைப் பிடிக்காது. நான் உள்ளே வரவில்லை. எனக்குப் பயமாக இருக்கிறது. முதலில் நீங்கள் உள்ளே போய், தாத்தாவின் சம்மதம் பெற்று வாருங்கள்'' என்றான் குழந்தை.

காமுவிற்குப் 'பக்'கென்றது. 'சிவராமனுக்கு உள்ள பிடிவாதம் அப்படியே உள்ளதே என்று நினைத்துக் கொண்டு வீட்டினுள்ளே போய்க் கணவரிடம் மன்றாடினாள். தீட்சிதர் அசையவில்லை.

''காமு, என் மகன் போய்ப் பன்னிரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. யாரையோ கட்டிக்கொண்டு, யாரையோ பெற்று, அந்தச் சதைப் பிண்டத்துக்குத் தாத்தாவாக நான் இருக்க முடியாது. நீ வேண்டுமானால் பாட்டியாக இரு'' என்று சொல்லிவிட்டுக் கொல்லை வழியே காவிரிக்குக் குளிக்கப் போய் விட்டார்.

வாசலில் சங்கர் படுத்துக் கொண்டிருக்கிறான் என்பதற்காகத் தீட்சிதர் வாசல் பக்கமாகப் போகாமல் கொல்லை வழியாகவே போய் வந்தார்.

பாட்டி கொண்டு வந்த பாலைக் குடிக்க மறுத்து, குழந்தை வாசலிலேயே பட்டினி கிடக்கிறான் என்பதைக் காமு சொல்லக் கேட்டார். வெளியே ஒன்றும் சொல்லாவிட்டாலும், குழந்தையின் பிடிவாதத்தில் தன்னையே கண்டார். அதில் ஓர் அற்ப மகிழ்ச்சி. அவனைப் பார்க்க வேண்டும் போல் உள்ளது. ஆனால், அதை வெளியில் சொல்லக் கூச்சம்.

விடியற்காலையில் சங்கர் இருப்பதையும் மறந்து, வாசற் கதவைத் திறந்து கொண்டு, 'ஜெய ஜெய சங்கர' என்று சொல்லிக் கொண்டு வெளியே போனார்.

பட்டினி மயக்கத்தில் திண்ணையில் படுத்துக் கொண்டிருந்த சங்கர் விழித்து, ''தாத்தா, என்னைக் கூப்பிட்டீர்களா?'' என்றான்.

தீட்சிதர் முகத்தைத் திருப்பிக் கொண்டார். ''உன்னை இல்லை. நான் ஆதிசங்கரரைக் கூப்பிட்டேன்'' என்றார்.



கணவன்: எனக்கும் என் மனைவிக்கும் எவ்வளவு வித்தியாசம் இருந்தாலும் கடைசியிலே அவள், நான் சொல்லுகிற மாதிரிதான் செய்கிற வழக்கம்!

நண்பன்: அப்படியா! அது என்ன சாமர்த்தியம்?

கண: 'சரி'ன்னு சொல்லி விடுவேன்!



என்றும் போலவே ஒரு நாள்... இருப்பினும், வலியையும், அசௌகரியத்தையும், நிம்மதியின்மையையும் போக்கும் வழி சொல்லக்கூடிய தோழி ஒருத்தி கிடைக்கமாட்டாளா, அது எந்த நாள் என்பதை மறக்க உதவ மாட்டாளா, என்று நீங்கள் ஏங்கும் நாள் அது—அப்படிப் பட்ட நாட்களில் மைக்ரோ:ஃபைன்ட் ஆஸ்ப்ரோ வை நாடுங்கள்—சில விநாடிகளில் நிம்மதி பெற!

மைக்ரோ:ஃபைன் செய்யப்பட்டிருப்பதால், ஆஸ்ப்ரோ அதி விரைவாகச் செயல்புரிகிறது. விரைவில் கிரகிக்கப்பட்டு, நீடித்த நிவாரணத்தை அதிவேகமாக அளிப்பதற்கென, ஆஸ்ப்ரோ விலுள்ள வலிநிவாரணச் சேர்க்கைப் பொருள்கள் 30 மடங்கு நுணுக்கமாக்கப் பட்டுள்ளன. மைக்ரோ:ஃபைன்ட் ஆஸ்ப்ரோ, இப்பொழுது கிடைக்கும் அதிநவீனமான வலி நிவாரணியாகும். கையடக்கமான ரேக்குகளில் கிடைக்கிறது.



மைக்ரோ:ஃபைன்ட் ஆஸ்ப்ரோ
அதிவேகமாக வலியை வெளியே இழுத்து
அசௌகரியத்தைப் போக்குகிறது.

ஆஸ்ப்ரோ இருந்தாலே—
ஆனந்தப்புன்னகைதான்!

நிகோலஸ் (N) தயாரிப்பு

தீட்சிதர் வேகமாகக் காவிரிக்குச் சென்று விட்டார். குளிக்கும் போதெல்லாம் 'ஆதிசங்கரனுக்கும், இந்த வீதி சங்கரனுக்கும் என்ன வித்தியாசம்?...... என்ன வித்தியாசம்?' என்று அவர் நெஞ்சம் கேட்டுக் கொண்டே யிருந்தது.

அப்பொழுதுதான் அவருக்குப் புரிந்தது. பரமன் படைத்த பொருள்கள் எல்லாம் அவனது உருவே. அதை வெறுப்பது விவேகமாகாது என்றும் எண்ணினர்.

மயங்கிக் கிடந்த குழந்தையை உள்ளே கூட்டிக் கொண்டு போய், என் பாவங்களுக்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்து வீட்டிற்கு ஓடோடி வந்தார்.

வீடு வந்த போது காமு, அழுதுகொண்டிருந்தாள். "நீங்கள் விடிகாலையில் 'தாத்தா, தண்ணீர்' என்று கேட்டது போல் தோன்றியது. அருகே உள்ள பஞ்சாத்திர உத்தரணியிலிருந்து காவிரித் தண்ணீரை ஒரு சொட்டு அவன் வாயில் விட்டார். தண்ணீர் உள்ளே போகவில்லை. ஜீவன் போய் விட்டது.

சாகும் முன் அந்த வீட்டில் சாப்பிடக் கூடாது என்ற வைராக்கியத்தை வைத்துக் கொண்டு அந்தக் குழந்தை அதில் ஜெயித்தும் விட்டான்.

காமு அழுவதை நிறுத்தினள்: "தீட்சிதர் சுவாமிகளே, திருப்தியாகி விட்டதா? உங்கள் வேதங்களைக் கூப்பிடுங்கள். சாந்தியைத் தருமா?

"உங்கள் பேரனின் தாய் ஒரு கிறிஸ்துவப் பெண். பேரனுக்கு எந்த முறையில் சடங்கு செய்யப் போகிறீர்கள்?" என்று காமு நிதானமாகக் கேட்டாள்.

ஆயிரத்தைத் தாண்டியவர்கள்!



ஆயிரம் முறை கதா காலட்சேபம் நடத்திய சகோதரிகள், தஞ்சாவூர் சகோதரிகள் அல்லாமல் வேறு யாராக இருக்க முடியும்? மியூஸிக் அகாடமி ஹாலில் இவர்கள், அண்மையில் நடத்திய கதை 'சனைச்சர கர்வ பங்கம்.' கதையை அன்று திருமதி சாவித்திரி ரங்கநாதன் செய்தார். குமாரி ராஜேஸ்வரி பாடிக்கொண்டே மிருதங்கம் வாசித்தார். குமாரி லட்சுமி இனிமையாகப் பாடினர்.

1960-ல் கதா காலட்சேபத்துக்கு ஆரம்பித்து, சுமார் இருபத்தைந்து கதைகளைக் கூறிவரும் இச் சகோதரிகளுக்கு, மியூஸிக் அகாடமி நிகழ்ச்சி ஆயிரமாவதாக அமைந்தது.

—குயிலி ராஜேஸ்வரி.

குளிக்கப் போனவுடன், இந்தத் தெருவிலே எப்போதும் சுற்றிக் கொண்டிருக்கும் 'வெறி நாய்' சங்கரனைக் கடித்துக் குதறியெறிந்து விட்டது. டாக்டர் வந்து, 'பிழைக்க மாட்டான்' என்று சொல்லிவிட்டார்" என்று 'ஓ'வென்று அழுதாள்.

தீட்சிதர் பதறினர். "நான்தான் அந்த வெறி நாய், நான்தான் அந்த வெறி நாய்" என்று தலையில் 'மடார் மடார்' என்று அடித்துக் கொண்டார்.

இரத்தத்தில் கிடந்த சிவராமனின் மகனை, தன் பேரனை, மடியில் போட்டுக் கொண்டார்.

"டேய், குழந்தே சங்கரா! என் ஆதிசங்கரா, என்னை மன்னித்து விடு. டேய் சிவராமா, உன் குழந்தையை நான் கொன்று விட்டேண்டா: நான் மகா பாவி" என்று புலம்பினர்.

அவளுடைய கேள்விகள் அவரைத் துளைத்தெடுத்தன.

"காமு! என்னைக் கொல்லாதே. என் கையாலேயே நான் எல்லாம் செய்யப் போகிறேன்."

பேரனை வாரித் தூக்கிக் கொண்டு போய் சிதை மூட்டி, நெருப்பும் வைத்தார்: "காமு, நீயும் வந்து பார். அதோ எரிகிறதே, அதுதான் எனது பேரன்."

'என் தெய்வமே! சிவமே!' என்று கத்தித் தன் உடலிலிருந்த பூணூலை கழற்றிக் காவிரியில் எறிந்தார் தீட்சிதர்.

உங்களுக்குத் தெரியுமா, அதோ, அங்கே எரியும் பிணம்தான் தீட்சிதரின் பேரனுக்கும்!

மோதி

இன்பக் குளியலுக்கு இந்தியாவின் இணையற்ற சோப்



மோதி

இன்பக் குளியலுக்கான
இணையற்ற சோப்
இப்போது இரண்டு வகை
களில் கிடைக்கிறது.



டேவிட் நைவன் திரும்பிப் பார்க்கிறுர்...



மனைவியுடன் டேவிட்...

ஆஸ்கர் பரிசு பெற்ற பிரிட்டிஷ் நடிகர் டேவிட்நைவன் (David Niven) தன் சுயசரிதத்தை நகைச்சுவை மிளிர எழுதியிருக்கிறுர். பதினேழு மாதங்களுக்கு மேல் 'பெஸ்ட்-ஸெல்லர்' லிஸ்டில் இருந்த இந்தப் புத்தகத்தின் பெயர் 'தி மூன் ஈஸ் எ பலூன்' (The moon is a baloon). அதிலிருந்து சில சுவையான தகவல்கள்......

சே! இது என்ன வாழ்க்கை! ஒவ்வொரு தடவையும் நான் விமானப் பணம் செய்யும் போது என் பக்கத்து ீட்டில் ஓர் அழகான இளம்பெண் வந்து ட்காரமாட்டாளா என்ற நப்பாசை ன் காத்திருப்பேன்! ஆனுல் வ்வொரு தடவையும் தொந்தியும் நாப்பையுமாக ஓர் ஐரோப்பிய பிஸினஸ்மேன் நாற்றமடிக்கும் சுருட்டு ஒன்றைப் பிடித்துக் கொண்டு பக்கத்தில் ந்து அமர்ந்து தொலேக்கிறுர்!

★

என்னுடைய முதல் 'செக்ஸ்'(?) அனுபவம், நான் சிறுவனுக இருக்கும் போது என்னுடைய உறவுக்காரப் பெண் ஒருத்தி டன் 'டாக்டர் விளையாட்டு' விளையாடியதுதான்! முதலில் அவள் 'டாக்டர்' நான் 'பேஷண்ட்!' பிறகு நான் டாக்டரா'க இருக்கிறேன் என்று சொன்னபோது 'விளையாட்டுப் போதும்' என்று சொல்லி விட்டு மெள்ள நழுவி விட்டாள்!

★

நான் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது நெஸ்ஸி என்ற பெண்ணின் நட்பு எனக்குக் கிட்டியது. விலேமாதாக இருந்தாலும் உண்மையான நட்பிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தாள் அவள். முதன்முதலாக என்னே அவள் வசித்து வந்த இடத்திற்கு அழைத்துச் சென்று, படுக்கையில் அமர்த்தி, சிறிது நேரம் ஜாலியாகப் பேசிக் கொண்டிருந்த போது, 'உனக்கு என்ன வயசு?' என்று கேட்டாள். 'பதினைலு!' என்று நான் பதில் சொன்னவுடன், படுக்கையை விட்டுக் கீழே குதித்து ஒரு பெரிய நடிகையைப் போலக் கைகளே மேலே தூக்கி, 'ஜீஸஸ் க்ரைஸ்ட்! பதினைலு வயசுப் பாப்பாக்களை யெல்லாமா நான் கெடுக்க வேண்டும்!' என்று அவள் தமாஷாகக் கேட்டது என் நினைவுக்கு வருகிறது. புதுமையான - இனிமையான அந்த இரவு பூராவும் நெஸ்ஸி எனக்குக் குருவாக இருந்தாள்!

★

"திரையில் நீயே வசனங்களைப் பேசிக் கொண்டிருப்பதை மட்டும் நடிப்பு என்று

நினைத்துக் கொண்டு விடாதே. மற்றவர்கள் பேசும் போது கேட்டுக் கொண்டிருக்கிறாயே—அதுதான் உண்மையான நடிப்பு!''—சொன்னவர் சார்லி சாப்ளின். என்னால் மறக்க முடியாத அறிவுரை இது.

✱

எர்ரால் ஃப்ளின் புதுமுகமாக இருந்த போதே நானும் அவரும் நெருங்கிய நண்பர்களாக இருந்தோம். ஒரு தடவை போர்க் காட்சி ஒன்றை எடுப்பதற்குமுன் ஃப்ளினின் குதிரைக்குப் பின்னால் அணி வகுத்து நின்ற அறுநூறு குதிரை வீரர்களில் ஒருவனுக்கு ஃப்ளினை 'ராகிங்' செய்யவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டு, ஃப்ளினின் குதிரை வாலைத் திருகி விட்டான். அவ்வளவுதான்! குதிரை ஒரு எகிறு எகிறிக் குதிக்க, ஃப்ளின் கீழே விழுந்து உருண்டார். எல்லோரும் 'கொல்' என்று சிரித்தார்கள். மெள்ளத் தூசியைத் தட்டிக் கொண்டு எழுந்த எரால் ஃப்ளின், ''இந்த வேலையை யார் செய்தது?'' என்று கேட்டார். ப்ரொபஷனல் எக்ஸ்ட்ரா ஒருவன், ''நான்தான் மிஸ்டர்! என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டவாறே குதிரையைவிட்டுக் கீழே இறங்கினான். அவ்வளவுதான்! ஒரு பத்து நிமிடம் ஃப்ளினுக்கும் அவனுக்கும் பயங்கரச் சண்டை! ஃப்ளின் அவனைப் புரட்டிப் புரட்டி எடுத்துப் பந்தாடி விட்டார்!

✱

ஒரு தரம் 'பிக்னிக்' போக வேண்டும் என்று ஏதேதோ பிளான் எல்லாம் பண்ணி வைத்த சமயத்தில்,

எலிசபெத் டெய்லருடன்...



முக்கியமான கால்ஷீட் வந்து தொலைந்தது. 'மேக்கப்' முடித்துக் கொண்டு பற்களை 'நற நற'வென்று கடித்த வண்ணம் மேக்கப் ரூமிலிருந்து வெளியே வந்து, 'எங்கே என் நாற்காலி?' என்று கத்தினேன். அதற்குள் என் அஸிஸ்டெண்ட் என் தோளில் தட்டி, 'டேவிட், உன் நாற்காலியில் யாரோ ஒரு பெண் உட்கார்ந்திருக்கிறாள் போலிருக்கிறது' என்றான். 'அவளை முதலில் அந்த இடத்தைவிட்டு வெளியே தள்ளு' என்று கூச்சல் போட்டுக் கொண்டு 'செட்டு'க்குள் நுழைந்தவன், அப்படியே நின்று விட்டேன். நாற்காலியில் அமர்ந்திருந்த அந்தப் பெண், தன் தலையைத் தூக்கி என்னைப் பார்த்தாள். அந்த அழகு......! என் இரண்டு முழங்கால்களும் ஒரு கோப்பை 'ஷாம்பெயின்' குடித்ததைப் போலத் தள்ளாடின!

பத்து நாட்களுக்குப் பிறகு நானும் அவளும் திருமணம் செய்து கொண்டு விட்டோம்!

✱

நடிக நடிகைகளுக்கு எப்போதுமே கொஞ்சம் 'கழுதைப் புத்தி' இருக்கும். அதைப் புரிந்து கொண்டு டைரக்டர்கள் அவ்வப்போது ஒரு 'காரட்'டை அவர்கள் முன்னால் மேலும் கீழும் ஆட்டினால் நன்றாக வேலை வாங்கலாம் என்பது என் கருத்து!

✱

நியூயார்க்கில், அப்போது செனேட்டராக இருந்த ஜான் கென்னடியும், அவரது அழகிய மனைவி ஜாக்குலீனும் எனக்கு நெருங்கிய நண்பர்களானார்கள். ஒரு பார்ட்டியில் நானும் ஜாக்கியும் நடனமாடிக் கொண்டிருந்தோம். பேச்சுவாக்கில் ஜாக்கியிடம், ''ஏன் உங்கள் கணவர் பார்ட்டிக்கு வரவேயில்லை? அவருக்கு டான்ஸ் ஆட வேண்டும் என்ற ஆசையே கிடையாதா?'' என்று கேட்டேன். ''வருவதற்கு நேரமே இல்லையாம். அவருக்கு அமெரிக்க ஜனாதிபதியாக வேண்டும் என்றுதான் ஆசையாம்!'' என்று ஜாக்கி பதில் கூறினாள்.

✱

கென்னடி ஜனாதிபதியான பிறகு ஒரு தடவை வெள்ளை மாளிகையில் அவரோடு பேசிக் கொண்டே ஓவல் அறைவரை சென்றேன். உள்ளே நுழைந்த உடன் அவருடைய 'ஜனாதிபதி நாற்காலி'யையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஒரு புன்னகை புரிந்த கென்னடி என்னை இழுத்து, அந்த நாற்காலியில் உட்கார வைத்துவிட்டு, ''இப்போது எப்படியிருக்கிறது?'' என்று கேட்டார்.

—ரூபி.

தலைவலி அல்லது ஃப்ளுவிலிருந்து
விரைவில் நிவாரணம்!



ஸலோஃபென்


வலி நிவாரண மாத்திரை

அமிர்தாஞ்சன் லிமிடெட் தயாரிப்பு

தலைவலி, ஃப்ளு, பல்வலி, உடல்வலி ஆகியவற்றிலிருந்து ஸலோஃபென் உடனடியாக நிவாரணம் அளிக்கிறது. அது நம்பகமானது. டாக்டர்கள் கையாளும் மருத்துவ முறைப்படி ஸலோஃபென் தயாரிக்கப்படுகிறது.



மாவு அரைக்கும் இயந்திரம்



இட்லி, தோசைக்கு மாவு அரைத்துக் கொடுத்து குறைந்த மூலதனத்தில் நிறைய லாபம் சம்பாதிக்க தேவைக்கேற்றபடி பல சைஸ்களில் கிடைக்கும். வீட்டு உபயோகத்திற்கு பாக்ஸ் டைப்பில் குறைந்த விலையில் கிடைக்கும். எல்லா மிஷின்களுக்கும் பவுன்டேஷன் அவசியமில்லை. வீட்டு உபயோகத்திற்கு மாதம் முழுவதும் ஆகும் மின்சார செலவு 75 பைசாதான். மற்றும் ஓட்டல்களுக்கு, ஹாஸ்டல்களுக்கு, கேன்டின்களுக்கு தக்கவாறு கிடைக்கும்.

✱ கவர்ச்சியான தோற்றம் ✱ குறைந்த இட வசதி ✱ நிசப்தமான ஓட்டம் ✱ சிக்கனமான பராமரிப்பு ✱ நீடித்த உழைப்பு.

விவரங்களுக்கு: **மஹாலக்ஷ்மி கம்பெனி**
102, புரசவாக்கம் ஹைரோடு, (சட்டக் கல்லூரி விடுதி எதிரில்)
சென்னை-10. போன்:- 664806

தயாரிப்பாளர்கள்:

மஹாலக்ஷ்மி இன்ஜினீயரிங் ஒர்க்ஸ்
10/5 ரத்னபுரி, கோயமுத்தூர்-27.

Bhalajee

சீனுவாச சாஸ்திரிகள், வீட்டு வாச லுக்கு வந்து [illegible] கொடுத்தவிட்டு நின்றார். அப்போதே அவருக்குத் தெரி யும்—[illegible] வந்து கதவைத் திறப்பான் என்று! [illegible] கதவைத் திறந்து. [illegible] உள்ளே [illegible] கொண்டாள்.

அவர் கை, கால்களைச் சுத்தம் செய்து விட்டு உள்ளே செல்லும் போது அவர் எதிர்பார்த்தபடியே ஹாலின் ஓரத்தில் ஒரு மேஜைமுன் புத்தகம் ஒன்றைத் திறந்து வைத்துக் கொண்டு உட்கார்ந் திருந்த சுப்புவின் அருகே [illegible] உட்கார்ந்திருந்தாள் விசாலம்.

"சுவாரஸ்யமான இடத்திலே வந்து கதவைக் கெடுத்திட்டார். [illegible] சொல்லு [illegible]" என்று சொல்லிய படி, சாஸ்திரிகள் உள்ளே வருவதையும் இலட்சியம் செய்யாமல் சுப்புவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந் தாள் விசாலம்.

"மாமா வந்துட்டார். கதையை அப்புறம் சொல்றேன் மாமி. அவர் சாப்பிட வேண்டாமா?"

"க்கும்..." என்று முனகிக்கொண்டே எழுந்தாள் விசாலம்.

சாப்பிட்டதாகப் பெயர் பண்ணிக் கொண்டு எழுந்த சாஸ்திரிகள், வழக்க மாகத் தாம் அமரும் அந்த ஹாலின் ஜன்னலோரப் [illegible] பாயை விரித்துப் போட்டு அமர்ந்தார். ஆனால், வழக்க மாக அவர் அருகே வந்து அமர்ந்து அவ ருக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கும் விசாலம், அங்கே சுப்பு என்ற இளைஞ னின் அருகில் அமர்ந்து கொண்டு கதை கேட்டுக் கொண்டிருந்த காட்சியைக் காண மனமில்லாதவராய்க் கண்களை மூடித் தூக்கத்தை வரவழைக்க முயன்று கொண்டிருந்தார்.


இந்த அமைப் போராட்டம் இன்று நேற்றல்ல; [illegible] நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சுப்பு, விசாலத்தின் தூரத்து உறவி னன். [illegible] படித்துக் கொண்டிருக்கிறான். [illegible] இடம் கிடைக்காமல் [illegible] வீட்டிலேயே தங்கிப் படித்துக் கொள்ள அவர் அனுமதி அளித்த போது அவரு [illegible] இருந்தவளையும் சுப்புவின் [illegible]

ஆறு மாத காலம் [illegible]

காரணம், சீனுவாச சாஸ்திரிகளை [illegible]

"[illegible] ஆனா, 'நீங்க அவளை [illegible] போலிருக்கு [illegible]'னு [illegible] வர்றது; அதை மட்டும் என் பொறுத்துக்க முடியாது! இனிமே அவளைச் சந்திச்சேன், நான் [illegible] மாய்ஞ்சுடுவேன்!" என்று ஒரு அவள் முழங்கியதற்குப் பிறகு விஜயாவைச் சந்திக்கக் [illegible] என்றுதான் அவர் [illegible] பிருந்தார். ஆனால் அவர் [illegible] போதும் போதும், மாலையில் வீட்டி [illegible] திரும்பும் போதும் அந்த விஜயா வீட்டு வழியாகத்தான் போக வேண்டி வந்தது.



இ[illegible]

ப. ஜெயலட்சுமி



...ளவின் 'கேட்'டைப் பிடித்துக்
...ளாறு வீதியில் அவர் வருவதைப்
...த்துக் கொண்டிருக்கும் அந்த விருமா
...பார்க்காமல், பேசாமல், தாண்டிச்
... அவர் மனத்துக்கு வருவிருந்தால்
...? சும்மா நின்று இரண்டொரு
...தை ஆறுதலாகப் பேசிவிட்டுச்
...ார். தினசரி காலையும் மாலையும்
... இந்தத் தவிர்க்க முடியாத
...யைத் தவிர்க்க வழி தெரியாதவ
... தவித்துக் கொண்டிருந்த போது
... விசாலம் அவரை விரட்டிவிடுவாள்.
... ஏதோ அன்றைக்கு ஆத்திரத்தில்
...க் கூறி விட்டாள்!

...படி செய்வே? நான் அவனோடு
...பேசுவேன்; பேசுவேன்! நீ என்னடி
...வ?''

..., தங்களது அந்தச் சந்திப்பின்
...தி தனிமை—கனவுகளும்—இன்றே
... உறுதியின் நின்றதால் மனைவியின்
...சாடைக் கேட்டு ஆத்திரப்பட்
... ஆனால், அந்த ஆத்திரத்தின்
...ம் விசாலம் இப்படி மாறுவாள்
... அவர் எதிர்பார்க்கவில்லை.

விட்டோடு இருக்க கட்டுவிட்டும், அவனை வேண்டுமென்றே அதிகமாக உறவாடுவதை அவரால் தடுக்கவோ, எதிர்த்துக் கேட்கவோ சக்தியில்லாதவராக முடங்கி யிருந்தார். அவர் ஏதாவது கேட்டால் அவள் என்ன பதில் சொல்வாள் என்று அவருக்குத் தெரியும்!

'என்ன செய்வேன்? நான் அவனோடு அப்படித்தான் பேசுவேன், பழகுவேன்! நீங்க என்ன செய்வேள்?'

இதுதான் அவளது பதிலாக இருக்கும்.

அவர் மனத்துக்குள் சிரித்துக் கொண்டார்: 'இந்தப் போராட்டம் எத்தனை நாளைக்குத்தான் என்று பார்ப்போமே!'

அவள் கதை சொல்லி முடித்தவுடன், அவன் ஆயாசத்துடன் எழுந்துசென்றான். சிறிது நேரத்தில் அவன் 'பாத் ரூமி'ல் குளிக்கும் ஓசை கேட்டது. இடையே அவன் கதவைத் திறந்து ''அடே சப்பு, அந்த சோப்பை கொடு அங்கே இருக்கும் ... கொஞ்சம் எடுத்து வாயேன்!'' என்று குரல் கொடுத்தான்.

சுப்புடு புத்தகத்தை மூடிவிட்டு சோப்புப் பெட்டியை எடுத்துக் கொண்டு பாத்ரூமை நோக்கி நடக்கும் ஓசை கேட்டது.

''கொடியிலே கிடக்கற புடவையை எடுத்து வர மறந்திட்டேண்டா! சித்தே அதையும் எடுத்துக் கொடுத்திட்டுப் போயிடு!''

அவன் மீண்டும் திரும்பி, புடவையை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டுத் திரும்பினான்.

சாஸ்திரிகளுக்குத் தெரியும்—சுப்புடு நல்லவன். ஆனால் விசாலத்தின் இந்தத் திடீர்த் திருப்பம் எங்கே கொண்டு போய் விடுமோ?

சாதாரணநாட்களில் சாதாரணமாகத் தெரியும் சம்பவம் கூட அந்த ஒரு வார காலத்தில் பெரும் மனப் போராட்டத்தையே உண்டு பண்ணக் கூடியதாக அமைந்ததுண்டு.

சுப்புடுவுக்கு ஒரு நாள் 'நககசுத்தி' வந்துவிட்டதென்று துடித்துக் கொண்டிருந்தான். எப்போதுமுள்ள அனுதாபம் சிறிதளவு கூடக் குறையாமல் அவர் அவனுக்கு ஏதேதோ வைத்தியங்கள் செய்தார். அவன் அந்தக் கையோடு சாப்பிட முடியாமல் தவித்த போது விசாலம், அவனை உட்கார வைத்து, அவனுக்கு வாயில் சோறு ஊட்டியபோது கூட அவர் எந்தவித மனக்கிலேசமும் அடையவில்லை. ஆனால், அவள் அப்படி அவனுக்குச் சோறு ஊட்டிக் கொண்டே அவரை ஏளனமான ஒரு பார்வை பார்த்ததைத்தான் அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை:

'அவன் குழந்தை;சிறுவன்! அவனுக்கு அவள் சோறு ஊட்டுவது ஒரு தாயின் இடத்தில் இருந்து செய்ய வேண்டிய சேவை. ஆனால் அதையே அவள் தன்னுடைய போராட்டத்துக்கு ஒரு கருவியாக எடுத்துக் கொண்டுவிட்டாளே!'

அது மட்டுமல்ல.

ஒரு நாள்!

''டேய் சுப்புடு! எனக்கு ராத்திரியிலே கெட்ட கெட்ட கனவா வருதுடா!—சாஸ்திரிகள் அசந்து தூங்கிடறார்; நீயும் இங்கே வந்து படுத்துக்கோடா—எனக்கு கொஞ்சம் பயமில்லாமல் இருக்கும்'' என்று சொல்லி, வழக்கமாகத் திண்ணையில் படுக்கும் அவனை, ஹாலில் படுக்கச் சொன்னபோது கூட அவர் ஆத்திரம் கொள்ளவில்லை. அப்படிச் சொல்லிவிட்டு அவள், அவரைப் பார்த்து ஒரு கேலிப் புன்னகையை வீசியபோது...அந்த இடத்திலேயே உயிரை விட்டு விட்டால் கூடத் தேவலை என்றிருந்தது.

'ம்... எல்லாவற்றுக்கும் கடவு[ள்] இருக்கிறார்!' என்று அவர் மே[ல்] பாரத்தைப் போட்டுவிட்டு உறங்[க] முயன்றார் சீனுவாச சாஸ்திரிகள்.

மறுநாள் மாலை, அவர் வீட்டுக்கு திரும்பி வரும்போது வழக்கம் போல் வாசல் கேட்டில் நின்றிருந்த விஜயாவை பார்த்ததும் நின்றார். இப்போது வழக்[க] மான முறையில் அல்லாமல் ஒருதிடமா[ன] முடிவுடன் அவளருகே நெருங்கினார்.

''விஜயா, நாம ரெண்டு பேரு[ம்] எவ்வளவு அன்யோன்னியமாகவு[ம்] அந்தரங்கமாயும், இருதய சுத்தியோடு பழகினோம்னு நம்ம மனசுக்குத்தா[ன்] தெரியும்! நீ உன் புருஷன் கூட வாழ[க்] கொடுத்து வைக்காம மறுபடியும் இ[ந்த] ஊருக்குத் திரும்பவும் வந்திட்டே! வாழ[்க்]கையிலே எதுவுமே நிரந்தரம் இல்லே[!] நாளைக்கே உன் புருஷன் மனம் மா[றி] உன்னைக் கூப்பிட வரலாம்! ஆனா, நா[ன்] சொல்லப்போற ஒரே ஒரு விஷயத்[தை] மட்டும் ஞாபகம் வெச்சுக்க!— நா[ன்] தினமும் காலையும் மாலையும் இந்த வ[ழி] வழியே போற நேரம் உனக்குத் தெரியு[ம்]. நீ அந்த நேரத்திலே மட்டும்தான் வா[ச]லுக்கு வந்து நிக்கறேங்கறதும் எனக்கு[த்] தெரியும்! தயவு செய்து இனிமே நீ அந்[த] நேரத்திலே மட்டும் வீட்டுக்குள்ளே[யே] இருந்திடு விஜயா! ஏன்னா—நீ நிற்கி[ற] இந்த இடத்தை, உன்னைப் பார்க்காம[ல்] தாண்டிப் போகணும்னு நான் ஒவ்வொ[ரு] நாளும் முயற்சி பண்றேன்; முடியலே[!] நான் இப்படிச் சொல்றதிலே காரண[ம்] இருக்கு! உன் புருஷன் மனசு மாறி உ[ன்]னைக் கூப்பிட வர்றச்சே—இங்கே அக்க[ம்] பக்கத்திலே உள்ளவா—சீனுவாச சா[ஸ்]திரிகளும் விஜயாவும் தினசரி சந்திச்[சு] பேசிண்டிருந்தாங்கன்னு சொல்லிட்ட[ா] என்ன ஆகும்? விஜயா, உன் மேலே உள்[ள] அக்கறையாலே மட்டும் நான் இதை[ச்] சொல்லல்லே! என் குடும்பத்தி[லே] நடக்கிற ஒரு போராட்டத்துக்கும் நா[ன்] ஒரு முடிவு கட்டியாகணும்! அந்[த] சுயநலத்தினாலும்தான் சொல்றேன்!''

சாஸ்திரிகளின் இந்தப் பேச்சைக் கே[ட்]டுத் திடுக்கிட்டவளாக அவரது மு[கத்]தையே பார்த்தாள் விஜயா. விழிகளி[ல்] பனித்தநீரைத் துடைத்துக்கொண்டா[ள்].

''சீனு, இத்தனை நாள் உங்க மேலே ஒரு பொறாமை இருந்துச்சு! நீங்க ம[னைவி]யோட சந்தோஷமா வாழ்க்கை நடத்[து]றீங்களேங்கிற அந்தப் பொறா[மை] இல்லே; உங்க கூட நான் வாழ முடி[ய]லேங்கிற பொறாமை! இப்ப உங்க பே[ச்]சிலேயிருந்து உங்களுடைய தூய்மையா[ன]

இருதயத்தை நான் உணர்றேன்!—உங்களைப் பார்த்ததும் மனசிலே அடிக்கடி ஒரு சபலம் எழுந்ததுண்டு. இனிமே எந்த சபலத்துக்கும் இடம் இருக்காது!—இந்த விஜயா இனிமே உங்க பார்வையிலே தென்படமாட்டா!'' என்று சொல்லிய விஜயா, மறுகணம் திரும்பி உள்ளே ஓடி விட்டாள்.

சிலையாகச் சிறிது நேரம் நின்றிருந்த சாஸ்திரிகள், வீட்டை நோக்கி நடந்தார்.

வீட்டுக்கு அருகே வந்தவர், கதவு பூட்டப்பட்டிருப்பதைப் பார்த்துத் தயங்கி நிற்பதற்கும், பக்கத்து வீட்டுச் சிறுவன் வீட்டுச் சாவியைக் கொண்டு வந்து கொடுப்பதற்கும் சரியாக இருந்தது.

''மாமா, மாமியும் சுப்புடுவும் சினிமாவுக்குப் போயிருக்கா! இந்த சாவியை நீங்க வந்ததும் மாமி கொடுக்கச் சொன்னா!''

கையில் சாவியுடன் சிறிது நேரம் நிலைத்து நின்ற சாஸ்திரிகள் மவுனமாக, வீட்டின் கதவைத் திறந்து உள்ளே சென்றார். பானைத் தண்ணீரை மொண்டு வயிறு நிறையக் குடித்தவர், பாயை எடுத்துப் போட்டு, அதில் உட்கார்ந்து கொண்டு பழம் புத்தகம் ஒன்றைப் புரட்ட ஆரம்பித்தார். மனம் புத்தகத்தில் பதியவில்லை.

இந் நேரம் விசாலமும் சுப்புடுவும் தியேட்டரில் அருகருகே உட்கார்ந்து, சினிமா பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

அவர்கள் வீட்டுக்கு வர எப்படியும் ஒன்பதரைக்கு மேல் ஆகும். பழம் புத்தகத்தை மூடி வைத்து விட்டு, 'பகவத் கீதை'யை எடுத்துக் கொண்டு உட்கார்ந்தார். பாராயணத்தில் மூழ்கிவிட்டதால் நேரம் ஓடியது தெரியவில்லை.

வாசல் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு உடனே எழ மனமில்லாதவராய்ச் சிறிது அமர்த்தலாகவே எழுந்து சென்று கதவைத் திறந்தார். அப்போது சுவர்க் கடிகாரத்தில் மணி எட்டுதான் ஆகியிருந்தது. அதற்குள் அவர்கள் திரும்பி விட்டார்களே!

கதவைத் திறந்த சாஸ்திரிகள் வெளியில் விசாலம் மட்டும் தனியே வந்து நிற்பதைப் பார்த்துத் துணுக்குற்றவராக உள்ளே திரும்பினர். அவர் பின்னே வந்த விசாலம் திடீரென்று அவர் கால்களைப் பற்றிக்கொண்டு கதறுவாள் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.



''என்னை மன்னிச்சேன்னு சொல்லுங்கோ'' என்று அவர் பாதங்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு மன்றாடும் விசாலத்தை ஏதும் புரியாதவராகப் பார்த்தார் சாஸ்திரிகள்.

''உங்களுக்குப் போட்டியா நடக்கிறதா நினைச்சுண்டு நான் இத்தனை நாள் என்னையே ஏமாத்திண்டேன்! அந்த விஜயாவை நீங்க சந்திச்சுப் பேசறதைப் பத்தி ஒரு விபரீதமான கற்பனையை என் மனசிலே வளர்த்துக்கிட்டதனலே ஏற்பட்ட பொறாமையின் விளைவுதான் இது! உங்களுக்குள்ளே ஒரு நெருக்கமான—அந்தரங்க—உறவு இருக்குன்னு நினைச்சு உங்களைத் திருத்தணும்கிறத்துக்காக, நான் நடத்தின நாடகம்—எவ்வளவு

விபரீதமானதுன்னு எனக்கு இன்னிக்குத் தான் புரியறது!''

''விசாலம்.... பைத்தியம் மாதிரி உளறுதே! என்ன நடந்தது?—சினிமாவுக்குப் போன நீ, ஏன் சீக்கிரம் திரும்பிட்டே?'' என்று சாஸ்திரிகள் குனிந்து அவளது தோள்களைப் பரிவுடன் பற்றி நிமிர்த்தினர்:

''விசாலம், அந்த சுப்புடு உன்கிட்ட ஏதாவது தவறுதலா நடந்திண்டானு? அவன் ஒரு குழந்தைடீ! எதையும் பெரிசா எடுத்துக்காதே!''

''சுப்புடு, ஆயிரத்திலே, லட்சத்திலே ஒருவன்னு எனக்கும் தெரியும்! ஆனு, தியேட்டர்லே எனக்குப் பின்னே உட்கார்ந்திருந்த ரெண்டு பேர் பேசிண்ட பேச்சு என் காதிலே விழுந்து, என் உயிரே போற மாதிரி ஆயிட்டுது! 'அந்த சாஸ்திரி பாவம்— அப்பாவி! அவரோட சம்சாரத்தைப் பார்! ஒரு சின்னப்பையனை இழுத்திண்டு சினிமாவுக்கு வந்திட்டா'ன்னு அவங்க பேசினதைக் கேட்டதும் என் பிராணன் அங்கேயே போயிருக்கப்படாதான்னு நினைச்சிண்டேன். நீங்க புருஷாள்! நீங்க வீட்டுக்கு வெளியே ஆயிரம் தப்பு பண்ணினுலும், வீட்டுக்கு வந்து கை கா கழுவும் போதே, அந்தத் தப்பு கரைஞ்சு போயிடறது! ஆ ஆத்துக்காரி—நெருப்பு மாதிரி இரு வேண்டியவ! கொஞ்சம் பிச நடந்திண்டாலும் அது புருஷாளுடை கவுரவத்தையே எரிச்சிடும்கிறதை நா இன்னிக்குத்தான் உணர்ந்திண்டே அதுக்கு மேலே எனக்கு அங்கே உட்கார பிடிக்காததாலே நான் எழுந்து வந்தி டேன். நான் இப்படி நடந்திண்டதுக் என்னை மன்னிச்சேன்னு நீங்க ஒ வார்த்தை சொன்னுத்தான் எ மனசுக்கு ஆறுதலா இருக்கும்!''

சாஸ்திரிகள் அவளது முகத்தை நிமி தினர். அந்த விழிகளில் துளித்த நீ துடைத்துவிட்டு ஒரு குழந்தை போல் அவளை அணைத்துக் கொண்டா

''எனக்குத் தெரியுண்டி—நீ நெ புன்னு! அதனுலேதான் நான் இத்த நாளும் அமைதியாயிருந்தேன்!—கு தையைத் தியேட்டரிலே விட்டுட வந்திட்டியேடி!''

''அவனுக்கு வழி தெரியும், வந் வான்'' என்று அவர் நெஞ்சில் மு புதைத்தபடி சொன்னுள் விசாலம்.



''ஏண்டா,... சரித்திர பாடத்திலே குறைச்சலா மார்க் வாங்கியிருக்கியாமே?... அந்தக் காலத்திலே நான் சரித்திரத்திலே நூற்றுக்கு எண்பது மார்க் வாங்குவேண்டா!...''

''நீங்க படிச்சதுக்கப்புறம் அம்பது வருஷ சரித்திரம் நடந்துடுத்தே தாத்தா... படிக்கிறது கஷ்டமில்லியா?!...''

பராமரிப்புப் பணிக்கு ஒரு புதிய அமைப்பு

அனல் மற்றும் நீர் மின் உற்பத்தி இயந்திரங்கள் ஆண்டு முழுதும் மிக உச்சத் திறனோடு செயல்பட, திறமையான பராமரிப்பு அவசியமாகும்.

பாரத் ஹெவி எலெக்டிரிகல்ஸ், ஹெவி எலெக்டிரிகல்ஸ் (இந்தியா) லிமிடெட் இரண்டும் இத்தகைய விசேஷ சேவையை அளிக்க, மாற்றுப் பகுதிகள்-பராமரிப்புப் பணி நிலையம் ஒன்றை டெல்லியில் நிறுவியுள்ளன. திறன்மிக்கப் பொறியாளர்கள் இங்கே பணியாற்றுகிறார்கள். விசேஷ கருவிகளும், தேவைப்படும் மாற்றுப் பகுதிகளும் நிறைந்த அளவில் இங்கே உள்ளன. மாநில மின்சார வாரியங்களுக்குச் சேவைபுரிய இந்நிலையம் காத்திருக்கிறது.

தொழில்துறை, விவசாயத்துறை ஆகியவற்றின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் கடந்த ஆண்டுகளில் மின் உற்பத்திப் பெருக்கம் இருந்து வந்துள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் — இயன்றால் அதற்குமேலும் — மின் உற்பத்தியைப் பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தை, மின் உற்பத்திப்பெருக்கத்துக்கான ஒரு ஆணையாக ஏற்று, பாரத் ஹெவி எலெக்டிரிகல்ஸ், ஹெவி எலெக்டிரிகல்ஸ் (இந்தியா) லிமிடெட் இரண்டும் பணிபுரிய காத்திருக்கின்றன.

மக்களுக்கு சக்தி

பாரத் ஹெவி எலெக்டிரிகல்ஸ் லிமிடெட்
ஹெவி எலெக்டிரிகல்ஸ் (இந்தியா) லிமிடெட்
(இந்திய அரசு நிறுவனங்கள்)



SAA/BHEL/1083

ஜிதேந்திரனை திகைக்கவை எம்.ஜி.ஆர்





[illegible]பனுகக் கொண்டிருக்கும் நான், [illegible]வ்வளவு பெரிய பாக்கியசாலி!'' என்று [illegible]ளப் பூரிப்புடன் கூறுகிறார், [illegible]தேந்திரா!

''ஸ்ரீதர் பற்றி நான் யாரிடமாவது [illegible] என்று [illegible]. [illegible]' என்ற ஸ்ரீதரின் [illegible] நான் நடித்தது, ரசிகர்களிடையே [illegible]ால்வியுற்றது. சிறந்த இயக்குநரான [illegible]தர் இயக்கிய படமாக இருந்தபோதி[illegible]ம், படம் தோல்வியடைந்தது. [illegible] என்னிடம் அப் படத்தின் கதை[illegible]க் கூறிய போது, அந்தக் கதையும், [illegible] ஏற்ற [illegible] எனக்கு [illegible] [illegible]த்திருந்தது. ஆனல், படம் கால்வாசி [illegible]ப்பதற்குள்ளேயே கதையும், 'ட்ரீட்[illegible]ண்டு'ம் மாறி விட்டன. படமும் [illegible]ால்வி அடைந்து விட்டது.

''ஸ்ரீதர் ஒரு நல்ல 'டெக்னிஷியன்.' [illegible]ஹல், அந்த அளவிற்குச் சிறந்த டைரக்[illegible]ாக இல்லை என்பது என் கருத்து. [illegible]பருக்குக் கீழே வேலை செய்பவர்கள் [illegible]ன்னும் திறமைசாலிகளாக இருக்க [illegible]ண்டும். மேலும், ஸ்ரீதர் எங்களுடைய [illegible], [illegible] [illegible]ந்து கொள்ள வேண்டும். ஒரு [illegible]தயை உருவாக்கிஹல், அதை [illegible]படியே படமாக எடுக்க வேண்டும். [illegible]. வி. பிரசாத் இந்த விஷயத்தில் [illegible]ட்டிக்காரரர். ஸ்ரீதர் என் நெருங்கி[illegible] [illegible]பர். அவர் படங்கள் [illegible] [illegible]வதைக் கண்டு நான் [illegible] [illegible]டந்தேன். என் மனத்[illegible] [illegible]ரிடமாவது கூறி, அது ஸ்ரீதரின் காது[illegible]க்கு எட்டிவிட்டால், நல்லதுதானே!''

''உங்கள் காதல் விவகாரங்களைப் [illegible] [illegible]றிக் கூற முடியுமா?''

''காதல் விவகாரங்களா? 'திருமணங்கள் [illegible] நிச்சயிக்கப்படுகின்றன' என்ற பழமொழியைக் கேள்விப்பட்டிருப்பீர்கள் [illegible] தான். யாருக்கும் தெரியாமல் இருக்க வேண்டிய என் காதல் விவகாரங்கள், எல்லோருக்கும் தெரிந்து விட்டன. அது தான் என் வருத்தம். இதைப் பற்றிப் பேச வேறு என்ன இருக்கிறது?'' என்று கூறி, முற்றுப்புள்ளி வைக்க எண்ணினார் ஜிதேந்திரா. ஆனால் நாங்கள் விடவில்லை.

''நான் இருவரைக் காதலித்தது உண்மை. 'அவர்கள்' காதல் என் [illegible] ஆழமாகப் பதிந்தது. [illegible] ஒருவரைத் திருமணம் செய்து கொண்டிருக்க வேண்டும். ஆனல், விதி எங்களைப் பிரித்து விட்டது. இருந்தாலும், 'அவர்கள்' என் நெருங்கிய நண்பர்கள். 'அவர்கள்' என் நெருங்கிய தோழிகள்.''

''யார் அவர்கள்?''

''முதலில் ஷோபா சிப்பி. இவர் விமானப் பணிப் பெண்ணுக இருந்தார். அடுத்தவர், சாந்தி கபூர். [illegible] [illegible]. என்னைத் திருமணம் செய்யும் முன்பு தன் பெயரை இந்துப் பெயராக மாற்றிக் கொண்டார். நாங்கள் இருவரும் காதலித்தது உண்மைதான். அதுதான் முன்பே கூறினேனே, விதி எங்களைப் பிரித்து விட்டது என்று.'' —மன வருத்தத்துடன் கூறினர் ஜிதேந்திரா.

ஜிதேந்திரா, [illegible], சர்மிளாவையும் [illegible] [illegible] கொண்டிருக்கி[illegible]. [illegible] பற்றிக் கேட்டதற்கு,

''சத்தம் அதிகமாக இருக்கிறது. இன்னும் 'ரியலிஸ்டிக்'காகப் படம் எடுக்க வேண்டும். 'ஓவர் ஆக்டிங்' அதிகமில்லாமல் இருந்தால் சிறப்பாக இருக்கும். தமிழ்ப் படங்களில் புதுமைகளை [illegible] இப்போதைய தமிழ்ப் படங்களின் தர[illegible] [illegible] கிறேன். எல்.வி. பிரசாத் இப்[illegible] லாம் தமிழ்ப் படங்களைத் தயா[illegible] தில்லையாமே, ஏன்?'' என்று எங்களிடம் கேள்வியைக் கேட்டவர், [illegible] முடித்துக் கொள்[illegible] [illegible] [illegible]டிப்பேச ஆரம்பித்த பிறகு, [illegible] [illegible] கவனம் எங்கள் [illegible] இல்லை.

பேட்டி: சியாமளா

படங்கள்: ஏ. சுந்தரம்

நாராயணனுக்கு நினைவு போய் மூன்று நாட்களாகிவிட்டன. உறவினர், தெரிந்தவர்கள் அவரைப் பார்த்து விட்டுப் போக வந்து போய்க் கொண்டிருந்தனர்.

''போன வாரம் கூட அவரை சென்ட்ரல் ஸ்டேஷனில் பார்த்தேனே!'' என்று அவர் படுக்கை பக்கத்தில் நின்று கொண்டு அத்யந்த சிநேகிதர் சொன்னர்.

''சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் போய் வழியனுப்பி விட்டு வந்தவர்தான். ஜுரம் என்று அன்றிரவு சொன்னர். ஓரிரண்டு நாட்கள் ரொம்பவும் கஷ்டப்பட்டார். என்ன ஜுரமோ? என்ன கோளாறே? டாக்டர்களுக்கு ஒன்றும் புரிபடவில்லை'' என்று நாராயணன் மனைவி கமலம், வருகிறவர் போகிறவர்களுக்கு, அவருக்கு திடீரென்று வந்த நோயைப் பற்றியும், அது எதில் கொண்டு போய் விடுமோ என்ற கவலையையும் கலந்து சொல்லிக் கொண்டிருந்தாள்.

ம்றுநாள் முகத்தில் சற்றுத் தெளிவு ஏற்படுவது போல் வீட்டிலிருந்தவர் களுக்குப் பட்டது.

''அப்பா தேறி விடுவார் என்று தோன்றுகிறதம்மா'' என்று கல்கத்தாவிலிருந்து வ[illegible] திருந்த பெண்.

''நேற்று முகத்தில் ஒருவித உணர்ச்சியும்



தெரியவில்லை. இன்று ஏதோ வாய் முணுமுணுப்பது போல் தெரிகிறது'' என்று ஒருவர் மாற்றி ஒருவர் அவர் வாயின் அருகில் காதைக் கொண்டு போய் வாயிலிருந்து ஏதாவது வார்த்தைகள் வெளிப்படுகிறதா என்று காதைத் நீட்டிக் கொண்டு கேட்டனர். ஒன்றும் காதில் விழவில்லை.

''என்ன சொல்ல வேண்டும் என்று ஆசைப்படுகிறாரோ?'' என்று எல்லோர் மனத்திலும் எழுந்தது கேள்வி.

''இப்ப சிரித்த மாதிரி இல்லை?'' என்று நாராயணன் தங்கை அவர் முகத்தைச் சுட்டிக் காட்டினாள்.

''நீ வந்திருக்கிறாய் என்று சொன்னது அவருக்கு எட்டி யிருக்க வேண்டும். அது தான் உன்னைப் புரிந்து கொண்டதற்கு அடையாளமாய்ச் சிரித்தார்'' என்று பக்கத்திலிருந்த மற்றொருவர் சொன்னார்.

''நேற்று வரையிலும் யார் வந்திருக்கிறார்கள் என்று உரக்கச் சொன்னால்கூட அவருக்கு ஒன்றுமே ஏறவில்லை. இன்று கொஞ்சம் பரவாயில்லை.''

வீட்டு வாசல் வராந்தாவில் நாராயணனின் குண விசேஷங்களைப் பற்றி விமரிசனம் நடந்து கொண்டிருந்தது:

''ரிடையர் ஆவதற்கு முன்னால் கூட எவ்வளவு கடுமையாய் உழைத்தார், சார். அவருடைய வேலையிலே ஒரு துரும்பு கூடப் பாக்கி கிடையாது'' என்று அவருடன் உழைத்த சகா, ஆபீஸில் அவர் நடந்து கொண்ட விதத்தைப் புகழ்ந்தார்.

''ஒரு கெட்ட பழக்கம் கிடையாது. காபி கூட இரண்டு தடவைக்கு மேல் சாப்பிடமாட்டார்'' என்று மற்றொருவர் இன்னுமொரு கோணத்தில் நாராயணனின் வைராக்கியத்தை எடுத்துரைத்தார்.

''அவர் ரிடையர் ஆகி என்ன, ஆறு மாதம் ஆகி இருக்குமா? அவர் ஸ்தானத்தில் இப்பொழுது வந்திருக்கிறாரே, அதற்குள் அவர் பேரில் என்னென்ன குபாரோ?'' என்றார் மற்றொரு சிப்பந்தி.

''அதென்னய்யா, கிளப்பி விடுகிறீர்?''


''தெரியாதா ... அவர் கூடவே, புதுசா ஒருத்தி வந்திருக்கிறாளே? அதானய்யா ஆங்கிலோ இந்தியன் மாது... அவளிடம் ஏதோ பல்லை இளித்திருக்கிறான் பேர்வழி. கன்னத்தில் வாங்கிக் கட்டிக் கொண்டான். திருடனுக்குத் தேள் கொட்டின மாதிரி இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமான்னு இப்ப இருக்கிறார் மனுஷன்.''

''சும்மா கதை விடாதய்யா?''

''அவளேதான் டெலிபோன் ஆபரேடரிடம் சொன்னாய்யா. நான் பக்கத்தில் இருந்து கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்... போதுமா?''

''நாராயணனும்தான் இருந்தார். பரஸ்திரீயை கண்ணெடுத்துப் பார்ப்பாரா? இவர் கீழேயும்தான் எவ்வளவோ அழகான பெண்களெல்லாம் வேலை செய்தார்கள். ஒரு மூச்சு பேச்சு உண்டா?''

முற்றுப்புள்ளி



எஸ்.வீ.கே.


வாசல் கேட்டைத் திறந்து கொண்டு நாற்பது வயது சொல்லும்படியான மாமி வந்தாள். நல்ல அடக்கம், [illegible] இந்த வயதிலேயே உடம்பு சிலை போல் இருந்தாள், இன்ன வயதில் எப்படி இருந்திருப்பாள் என்று பார்ப்பவர் மனத்தில் முதலில் எண்ணும்படித் தூண்டும் கவர்ச்சியான தேகக் கட்டு. நடையிலே ஒரு காம்பீர்யம்.

''என்ன கமலம்! திடீரென்று படுத்து விட்டாராமே?'' என்று கேட்டுக் கொண்டே அவள், நாராயணன் படுத்திருந்த அறையில் நுழைந்தாள்: ''நீர் போய்விட்டு நானும், அவரும் இன்று மத்தியானம்தான் வந்தோம். சங்கதி தெரிந்தவுடன் நான் கிளம்பினேன். அவருக்கு இன்று ஆபீஸில் [illegible] பார்த்துக் கொண்டு நேராக இங்கு வருகிறேன் என்று சொன்னார்'' என்று [illegible] கட்டிலின் அருகில் போய் நாராயணன் முகத்தை உற்றுக் கவனித்தாள்.

''மங்களம் வந்திருக்கா பாருங்கோ! மங்களம், மங்களம்'' என்று நாராயணன் காதில் இரைந்தாள் கமலம்.

''[illegible] மங்களம். இதோ [illegible]கள்... அவரும் சாயந்திரம் வரேன்னார்'' என்று மங்களமும் அவர் முகத்தின் [illegible]

''[illegible] மாதிரி இல்லே... என்ன, மங்களம்?'' என்று கமலம் கேட்டாள்.



''நேத்து ராத்திரி உங்களுக்கு ஷேவ் பண்ணிக்கிட்டிருக்கும் போது அப்படியே தூங்கிப் போயிட்டீங்க சார்! எதுக்கு தொந்தரவு செய்வானேன்னு அப்படியே கடையை மூடிக்கிட்டு போயிட்டேன்!...''

''[illegible] இ[illegible] என்றாள் [illegible].

''[illegible] வந்தி[illegible] இ[illegible] இ[illegible] என்றாள் [illegible].

''அப்படியில்லை தோணுகிற[illegible] என்றுதான் தோன்றுகிறது'' [illegible].

''[illegible] [illegible] என்றாள் [illegible].

''நீயே கூப்பிடு.''

''அப்பா! மங்களம் மாமி. அ[illegible] என்று இரண்டு மூன்று தரம் [illegible]டாள்.

வாசல் வராந்தாவில் [illegible] [illegible] [illegible]கள், [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

''[illegible] ஆபீஸ் [illegible] போய்[illegible]. எந்தக் [illegible] [illegible] [illegible] தேடா'' என்று முத்தாய்ப்பு வை[illegible]

மங்களத்தின் கணவரும் [illegible] மறுபடியும் நாராயணன் [illegible] மங்களம் பெயரும், அவர் [illegible] பெயரும் உரத்தி சொல்லப்பட்ட[illegible]

''நீங்க சொன்னது சரிதான். [illegible] தப்பிலைக் கூட ஒன்ணே வேலை செ[illegible] இல்லாதுபோனு உதடு [illegible] [illegible] [illegible] என்று [illegible] கணவரும் சொன்னார்.

''இல்லறக்குத்தான் சற்று அசைப்பு, சிரிப்பு எல்லாம். அ[illegible] மங்களம் வாத்துக்கு கொஞ்ச[illegible] முந்திதான்'' என்று சொல்லிக்கொ[illegible] கமலம், மங்களத்தையும், அவள் க[illegible]யும் உள்ளே அழைத்துக் [illegible] போனாள்.

''கொஞ்சம் காபி சாப்பி[illegible]'' என்று சமையலறைக்குச் சென்[illegible]

''இதெல்லாம் என்ன ஒன்னும் வேண்டாம்!'' கமலத்தின் கையைப் பிட[illegible] மங்களம்

ளர் ஆபீஸிலிருந்து நேராக வரார். [illegible] என்று காபி கலக்க [illegible]

[illegible] என்ன [illegible] ஆகாரம் [illegible] என்று [illegible]த்தின் கணவர் ஆறுதல் கூறினர்.

[illegible]ங்களும் உதட்டின் பக்கத்தில் வைத்துக் கொண்டுதான் [illegible]ராம். ஒன்றும் விழலேயே? என்ன [illegible] ஆசைப்படுறேரா?'' என்றுள்

[illegible]ாயணன் என்ன சொல்ல ஆசைப்[illegible]ர்? முகத்தில் அவ்வப்பொழுது [illegible] புன்முறுவல் எதைக் கண்டு; [illegible] கேட்டு? ஏன் இப்படிப் பிரக்ஞை [illegible], வெற்றிச் சிரிப்பு சிரிக்கிறர். அதன் நிழல்தான் பிரக்ஞை இழந்த போதும் பக்கத்திலிருந்தவர்கள் கவனித்து, உடம்பு தேறிவிடும் என்று கணக்குப் போட உதவியது.

''என்ன கேட்கிறேன், நீங்கள் சிரிக்கிறீர்கள்?'' என்று மங்களம் கவர்ச்சியைச் சிந்துகிறள்.

''கமலத்துக்குத் தெரிந்தால், என்ன? நான் பயந்து விடுவேனு?''-நாராயணன் ஆண்மையை வற்புறுத்துகிறர்.

''நீங்கள் பயப்பட வேண்டாம். நான் பயப்பட வேண்டும். நீங்கள் ஒவ்வொரு தரம் வந்து விட்டுப் போகிற போதும் எனக்கு ஒரே நடுக்கம்.''

---

0 நாள் விருந்து...

[illegible]நாட்களில் 19 விருந்துகள் அளிக்[illegible]ன. தமிழ் நாடு முழுவதிலு[illegible] அஞ்சல் துறை அதிகாரிகள் [illegible]க்கு வந்து விருந்தில் கலந்து [illegible]டார்கள்.

[illegible] பள்ளியைச் சேர்ந்த சாரணர் [illegible]விருந்து கொடுத்தார்கள்.

[illegible] மட்டுமா?

[illegible] ஆயிரம் அஞ்சல் துறை [illegible]கள், விடை பெற்றுச் சென்ற [illegible]ருக்கு மலர் தூவி, மாலை [illegible]த்து அனுப்பினர்.



தயானந்தன்

அந்த விருந்தினர்தான் திரு. சி. ஏ. தயானந்தன். தமிழ்நாடு போஸ்ட் மாஸ்டர் ஜெனரலாக மூன்றரை ஆண்டு பணியாற்றி விட்டு ஓய்வு பெற்றிருக்கிறர். —குயிலி ராஜேஸ்வரி.

[illegible] உதட்டை அசக்கி, சிரித்துப் [illegible]ல் இருப்பவர்களை குழப்படிக் [illegible] அவர் மனத்தில் அப்பொழுது [illegible] எண்ணங்கள்தான் அலைபாய்ந்து [illegible]டிருந்தன? மற்றவர்களுக்கு என்ன [illegible] வேண்டும் என்று துடிக்கிறர்?

[illegible]ாயணன் மனத்தில் இது எதுவும் [illegible]ள்ளவில்லை. கடந்த கால [illegible]கச் சுவடியில் ஒரு பக்கத்தை [illegible]தான் அவர், நினைவு உலகத்தில் [illegible] கொண்டிருந்தார். ரொம்பவும் [illegible]ாக்கிப் போகவில்லை. பதினைந்து [illegible]கள் முன் நடந்த ஓர் அழியா [illegible]தான்.

[illegible]மாம்! இப்ப இங்கு வந்திருக்[illegible]ா, கமலத்துக்குத் தெரியுமா?''-

''மங்களம், நீ மாட்டிக் கொள்ளக் கூடாது என்று எனக்கு மாத்திரம் கவலை இல்லையா? ஒரு ஜந்துவுக்கும் தெரியாது.''

''நான் சொல்றனேன்னு கோபித்துக் கொள்ளாதீர்கள். இந்த விஷயம் இன்றேடு முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள். வேண்டாம். நினைத்தால் கூட என் குடல் நடுங்குகிறது'' என்று மங்களம் பீதியடைகிறள்.

''மோகம் முப்பது நாள்...அதானே மங்களம். என்னை உனக்குப் பிடிக்க வில்லை'' என்று நாராயணன் அவளைப் பார்க்கிறர்.

''நீங்கள் எனக்குத் தெய்வம்'' என்று [illegible] நாரா[illegible] கண்ணில் ஒத்திக் கொள்கிறள். அவள்

உங்கள் மகளின் வயது என்ன?



அவளுடைய வயது என்னவாக இருந்தாலும் அவளது திருமணம் பற்றிய கவலை உங்களுக்கு இருக்கவே செய்யும்.

உங்களது மகளின் திருமணத்துக்கென சுலபமாகவும், லாபகரமாகவும் 5,7 அல்லது 10 ஆண்டுகளில் நீங்கள் சேமிக்கலாம். ஐஓபியின் அரியதொரு சேமிப்புத் திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு ஆண்டு உங்கள் மாதாந்தர சேமிப்புத் தொகை அதிகரித்துக் கொண்டு வரும்.

ஐஓபியின் திருமண சேமிப்புத் திட்டத்தில் சேருங்கள். சேமிப்பு தொடங்க ரூ. 5 இருந்தாலும் போதும்.

ஐஓபி கிளைக்கு வருகை தந்து விவரம் அறியுங்கள். விரைந்து வந்தால் நிறைந்த பலன் பெறலாம்

அல்லது விவரம் அடங்கிய இலவசப் பிரசுரத்துக்கு எழுதுங்கள்

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்

மத்திய அலுவலகம்.
151, மவுண்ட் ரோடு, சென்னை 600002

FDS IOB 1945 TMA

இடுப்பை அணைத்து நாராயணன் அவளைத் தூக்கி விடுகிருர். அவள் உடல் சிலுசிலிர்த்து, கண்களிலிருந்து இரண்டு கண்ணீர் சொட்டுகள் கன்னத்தில் விழுகின்றன.

''உங்களை என்னல் மறக்கவே முடியவில்லையே! தெரு வழியே யாராவது சுருண்ட தலைமுடியுடன், சிவப்பாய்ப் போனல் உங்கள் ஞாபகம் கவ்விக் கொள்கிறது.''

''பின்னே, இன்றோடு முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள் என்றியே?'' என்று நாராயணன் அவள் தலையை வருடிக் கொண்டு கேட்கிருர்.

''ஆசை, வெட்கம் கெட்டதுதான். அதை உலகம் ஏற்றுக் கொள்ளாதே! நான் தினம் தெய்வத்தைக் கேட்கிறது

''கோபமா? என் கையாலே ஒரு டம்ளர் காபி சாப்பிட மாட்டீர்களா? கேட்டுச் சாப்பிடுவீர்களே! இன்று கோபமா...?'' என்று மன்ருடுகிருள் மங்களம்.

''கொண்டு வா...''—நாராயணன் ஆழ்ந்த யோசனையில் இருக்கிருர். மங்களம் காபியுடன் வருகிருள். பக்கத்தில் அமருகிருள். தன் கையாலேயே காபி டம்ளரை நாராயணன் உதட்டில் வைக்கிருள். அதை ஓர் உறிஞ்சு உறிஞ்சுகிருர். டம்ளரைக் கையில் வாங்கி அவள் உதட்டில் வைக்கிருர். அவள் உறிஞ்ச, மாறி மாறி காபி அருந்தப்படுகிறது.

''அப்ப, உன்னைப் பார்க்கிறது இன்றைக்குத்தான் கடைசி நாள்''என்று மங்களத்தைக் கேட்கிருர்.

வெகு நாட்களுக்குப் பிறகு மீண்டும் இசை அமைப்பாளர் சங்கருக்காக (சங்கர் - ஜெய்கிஷன்) பாடத் தொடங்கி யிருக்கிருர் லதா மங்கேஷ்கர். அதற்காக சங்கர், லதாவின் தாயாரிடம் கெஞ்சிக் கேட்டு, சிபாரிசு செய்யச் சொன்ஞராம்!

'நியூவேவ்' படக் கதாநாயகிகளுக்குப் பாடுவதற்கு மறுத்திருக்கிருர் லதா. ''கண்ணியமான நடிகைகளுக்காகப் பாடியவள் நான். ஜயாபாதுரியைத் தவிர வேறு யாருக்கும் நான் பாட விரும்பவில்லை. கால்களையும் மார்பையும் காட்டும் நடிகைகளுக்காக நான் எப்படிப் பாட முடியும்?'' என்கிருர் லதா!



ஒன்றேதான். அடுத்த ஜன்மத்தில் நான் உங்களையே கல்யாணம் பண்ணிக் கொண்டு ஒருத்தருக்கும் பயப்படாமல் நீங்கள் எப்படி எப்படி எல்லாம் இப்ப என்னேடு கொஞ்சிக் குலாவி இருக்க ஆசைப்படுகிறீர்களோ, அந்த ஆசையையெல்லாம் நிறைவேற்றணும்னு ஒரே கோரிக்கையைத்தான் இறைவனைக் கேட்கிறேன்'' என்கிருள் மங்களம்.

''அப்ப, இன்னியோடு இந்தப் பக்கம் தலைகாட்டாதேன்னு சொல்றே'' என்கிருர் நாராயணன்.

''வேணும் கண்ணு! ஒரு நாள் இல்லேன்ஞ ஒரு நாள் அகப்பட்டுக் கொண்டு விடுவோம். உங்க பேரிலே எனக்கு ஆசை கடுகளவும் குன்ருது. எனக்காக நீங்கள்......''

''சரி, அப்ப கிளம்பட்டுமா?''

''நான் அப்படிச் சொல்லலயே...''

''இப்ப நீதானே சொன்னே, முற்றுப் புள்ளி வை என்று.''

''நீங்கள் தனியாக, நான் தனியாக இருக்கும் போது வருகிறதை முற்றுப் புள்ளி வையுங்கள் என்று சொன்னேன். உங்கள் முகத்தைப் பார்க்காமல் நான் எப்படி இருப்பேன்?''

''எனக்கு நீ சொல்றது புரியலையே. முகத்தையும் பார்க்கணும், நானும் வரக் கூடாது என்ருல் எப்படி?''

''கமலத்தோடு வாருங்கள். நான் உங்கள் முகத்தை ஆசை தீரப் பார்க்கிறேன்.'' அவள் புன்முறுவல் சிந்துகிருள்.

''மங்களம்! அப்படியே செய்யறேன். உன்னை [illegible] மாட்டேன். ஆனல், இந்த ஜன்மம்

முடிந்து அடுத்த ஜன்மம் வரையிலும் என்னுலே தாங்க முடியுமான்னுதான் சந்தேகம்'' என்று அவள் கை வளையலை உருட்டியபடி சொல்லுகிறுர்.

''எனக்கு மாத்திரம் அந்தக் கஷ்டம் இல்லையா, கண்ணு?''என்று நாராயணன் மார்பில் சாய்கிறுள். அவள் முதுகைத் தடவிக் கொடுக்கிறுர்.

''மங்களம்! இனிமேல் நாம் தனியா சந்திக்கப் போகிறதில்லை. என் ஒரே ஆசையை இந்த ஜன்மத்திலே ஒரு நிமிஷம் அனுமதியேன்'' என்று நாராயணன் கெஞ்சுகிறுர்.

''நீங்க கெஞ்சணுமா? வரம்புக் குள்ளே எது வேண்டுமானுலும் கேளுங்கள்.''

''மங்களம்! உன் மடியிலே என் தலையை வைத்து ஒரு ஐந்து நிமிஷம் படுத்துக் கொண்டிருக்கணும்; அவ்வளவு தான். மற்றவை அடுத்த ஜன்மத்தில்'' என்று கிண்டலாய்ச் சிரிக்கிறுர்.

பிரக்ஞை இழந்த நிலையில் உதடு நன்ருய் மலர்ந்து சிரித்தார். பக்கத்தில் உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டிருந்த நாராயணனின் பெண்,''அம்மா! அம்மா! அப்பா நன்ருகச் சிரிக்கிறுர்! வந்து பாரேன்'' என்று இரைகிறுள். காபியைக் குடித்து விட்டு கமலம், மங்களம், அவள் கணவர், நாராயணனின் வாழ்க்கைஸ்யைப் பற்றி ஏதேதோ பேசிக் கொண்டிருந்தவர்கள், பெண்ணின் குரலைக் கேட்டு நாராயணன் படுத்திருந்த அறைக்கு ஓடி வந்தனர்.

நாராயணனின் எண்ணச் சுழல்கள் வேகமாக வட்டமிடுகின்றன. ''என்ன மங்களம்! முற்றுப்புள்ளி வைப்பதற்கு முன் இந்த ஆசை, மாட்டாயா?'' என்கிறுர். மங்களம் தயங்குகிறுள்.

நாராயணன், ''என்ன, தயக்கமா? சரி, அந்த ஆசைக்கும் முற்றுப்புள்ளி வைத்து விடுகிறேன்'' என்று கிளம்புகிறுர். மங்களத்தின் மனத்தைக் கட்டுப் படுத்த முடியவில்லை.அவள் வார்த்தைக்கு அவ்வளவு மதிப்பா! அவர் கையைப் பிடித்து அழைத்துப் போகிறுள்.

''மங்களம்! நன்னுவே சிரிக்கிறுர்.'' —கமலம், மங்களத்திடம் சொல்லி, ''இதோ, கமலம் பாருங்கோ, தெரிகிறதா... மங்களம் வந்திருக்கா. பக்கத்திலே இருக்கா'' என்று சிரித்துக் கொண்டிருந்த நாராயணன் காதில் சொன்னுள்.

மறுபடியும் மங்களத்தின் வீட்டில் ''[illegible] நீங்களும் நன்னி [illegible]'' என்று மங்களம் சொல்லுகிறுள். தரையில் உட்கார்ந்து கொண்டு நாராயணனின் தலையை மடியின் மேல் வைத்துக் கொள்கிறுள். அப்படியே நாராயணன் முகத்தைத் தடவிக் கொடுக்கிறுள்:

''பத்து, பதினைந்திலாவது கமலத்துடன் நம்ம வீட்டுக்கு வருவீர்கள இந்த முகத்தை மறக்கவே முடியா கண்ணு! அதை நேரிலே பார்க்காமலு இருக்க முடியாது கண்ணு?'' என் முகத்தை ஆசை தீர, தடவிக் கொடு கிறுள்.

நாராயணன் ரசித்தபடி, கண் மூடிக் கொள்ளுகிறுர்:

''மங்களம்! எனக்கு ஒரே ஒரு ஆசை.

''இன்னும் ஒண்ணு?''

''நீ கோபிச்சுக்கலேன்னு சொ றேன்.''

''வரம்புக்குள்ளேன்னு ஒரு கோபமு கிடையாது.''

''வரம்புக்குள்ளேதான் மங்களம்.'

''என்ன ஆசை சொல்லுங்கோ?''

நாராயணன், மடியில் படுத்தபடியே அவள் கீழ்உதட்டை இரு விரல்களா தடவிக் கொடுக்கிறுர்.

''இதானு அந்த ஆசை?''

''இல்லை. வேண்டாம். சொல்லலை'' என்று நாராயணன் பின்வாங்குகிறுர்.

''இதான் எனக்குப் பிடிக்காது ஆசைன்னு சொல்லிட்டு, நான் அனுமதியும் கொடுத்துட்டு, சொல்லலேன்னுதான் எனக்குக் கோபம் வரும்'' என்று முகத்தில் பொய்க் கோபத்தை நடிக்கிறுள்.

''மங்களம்! என்ன ஆசைன்னு, இந்த மாதிரி உன் மடியிலே படுத்துக் கொண்டிருக்கச்சே, அடுத்த ஜன்மத்துக்குப் போயிடணும்.''

மங்களம், நாராயணன் வாயைப் பொத்துகிறுள்.

''அப்பா! போய்ட்டாயே!'' என்று நாராயணன் பெண் 'வீல்' என்று கதறுகிறுள்.

''சிரிக்கிற மாதிரி ஆசை காட்டி கைவிட்டுட்டீங்களே?'' என்று கமலம் கதறினுள். மங்களம் அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

நாராயணன் அடுத்த ஜன்மத்திற்குப் போய்விட்டார்.

பாய் ஃபிரண்டு

"உஷா, நிஜம்மா சொல்லுடி, நீ ...ட்டே ஃபிஸிகல் எக்ஸர்ஸைஸ் ...ண்றியா இல்லியா? பொய் சொல்லா ...தடி!''—பாமா கேட்டாள்.

''எக்ஸர்ஸைஸா? என்ன கண்றாவிடி? ...னக்கு ஃபிஸிக்ஸ் ப்ராக்டிகல் நோட்டுக் ...ழுதி முடிக்கிறதுக்கே நேரமில்லே— ...பிஸிகல் எக்ஸர்ஸைஸாமே?''

''உ! ஆனாலும் இப்படி டுப் அளக் ...ாதே. எக்ஸர்ஸைஸ் பண்ணாமலேயா, ...ப்படிக் கச்சிதமா இருக்கு உன் பாடி?''

இதற்குள் எஸ்தர் ஒரு பாட்டை முணு ...ணுக்கிறாள்: அடீ, பொண்ணுக்கு ...சை வரும் என்று.

உஷாவின் கன்னத்தில் திருஷ்டி கழித் ...க் கொண்டே சொன்னாள் பவானி: ''ஆனாலும் குடுத்துவச்சவடீ நீ!''

''குடுத்து வச்சவ அவளாடி? அவ ...க்கு வரப் போறவரு இல்லேடி?''— ...ஸ்தர் குறும்பு கொப்புளிக்கக் கேட் ...ாள்.

''உஸ்... டோண்ட் பி ஸில்லி!'' —உஷா அடக்கினாள். இருந்தாலும் அவளுக்குப் பெருமைதான், உள்ளூற. ...ன் சாலையில் நடந்து போகும் ...ாதும் சரி, பஸ்ஸில் ஏறும் போதும் ...ரி, சுற்றியிருக்கும் ஆண்பிள்ளைகளின் ...ண்கள் தன்னை எப்படித் தழுவுகிறது ...ன்பது அவளுக்குத் தெரியாமலில்லை. ...ண்களின் கண் பார்வை அவளுக் ...ப் பழக்கமாகிவிட்ட ஒன்று. ஆனால்—

அந்த ஆனலில்தான் உஷாவின் பெரு ...ச்சே இருந்தது. அவள் கறுப்பு. வெள் ...த் தோலில் மயங்குகிற உலகம் ...யிற்றே இது! சிநேகிதிகளோடு இவள் ...ாகும்போது தாண்டிச் செல்லுகின்ற ...ாலிபக் கண்கள் மற்ற சுந்தரிகளை வேட்டையாடும். கடைசியாகத்தான், இவளிடம் வரும். இவளுடைய உடல் வனப்பைக் கண்டு தேனில் விழுந்த ஈ மாதிரி அடித்துக் கொண்டிருக்கும்போது இவர்களைத் தாண்டிப் போயிருப்பார்கள். என்ன பிரயோசனம்? பார்த்த மாத்திரத்தில் சுண்டியிழுக்கிற நிறமும் முகமும் இல்லையே! பாமாவுக்கு பாய் ஃபிரண்டு உண்டு. ஏன், பவானிக்கும்தான்!

மத்தியானம் 'கட்' அடித்து விட்டு, ரகசியமாகத் தோழிகளிடம் சொல்லி விட்டு பாய் ஃபிரண்டோடு போகிற குஷியே அலாதி.

அன்றொரு நாள் பாமா துணிந்து, தன் ஃபிரண்டுடன் மகாபலிபுரம் போய் விட்டாள். அன்று முழுவதும் மட்டம். மறுநாள் கிளாஸில் தூங்கி வழிந்தாள். லஞ்ச் இண்டர்வெல்லில் அவளுடைய தோழிகள் அவளைப் பிடித்துக் கொண்டார்கள்.

''டீ, என்னடீ! நேத்து என்ன, ஜாம் ஸெஷனா?''

''அடச்சீ! அதெல்லாம் ஒண்ணுமில்லே.''

''என்னடீ செய்தீங்க ரெண்டு பேரும் நாள் பூரா?''

''பேசிட்டிருந்தோம்டீ.''

''அதெப்படி அம்மா பேசிக்கிட்டிருக்க முடியும்?''

''பின்னே பீச்சிலே உட்கார்ந்து...''

எல்லோரும் 'கொல்' என்று சிரித்தார்கள்.

உஷா ரகசியமாகப் பெருமூச்சு விட்டாள்.

இப்படி எத்தனை எத்தனையோ சம்பவங்கள். தன் தோழி ஒவ்வொருத்தருக்கும், அட்லீஸ்ட் ஒரு பாய் ஃபிரண்டு. தனக்கும் பாய் ஃபிரண்டு இருந்தால் தோழிகள் சொல்லும் கதைகளைக் கேட்டுக் கொண்டிருப்பதோடு நிற்காமல், தானும் கதை கதையாய்ச் சொல்லலாம். உஷா ஒரு முடிவுக்கு வந்தாள்.

மறுநாள் லஞ்ச் அவரில் உஷாவைக் காணவில்லை. 'உஷா எங்கேடீ?' என்று தோழிகள் ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டார்கள்.

நா. அனந்தகிருஷ்ணன்

அடுத்த நாள் காலையில் உஷா, கல்லூரிக்கு வந்ததும் தோழிகள் கும்பல் அவளைச் சூழ்ந்து கொண்டது.

''எங்கேடீ போயிட்டே?''

''கொஞ்சம் வெளியிலே போக வேண்டியிருந்தது. நேரமாயிட்டுது.''

''தனியாகவாடீ?''

கோமதி குறுக்கிட்டாள்: ''இராதுடீ. அவ பாட்டிதுவந்திருப்ப கூட்டிண்டு போக....!''

''பாட்டியா, பாய் ஃபிரண்டாடீ?''

''இவளுக்கு ஏதுடீ அதெல்லாம்?... பாவம், சாதுப் பெண்.''—சொன்னவள் எஸ்தர்.

''டீ, நீ சும்மா இருடீ எஸ்தர்...இவ முழிக்கிற முழியைப் பார்த்தா நல்லா இல்லே! டீ... உஷா, நிஜத்தைச் சொல்லிடு—நீ எங்கே போனே நேத்திக்கு?''

உஷா மென்று விழுங்கிக் கொண்டு சொன்னாள்: ''இப்ப ஒண்ணும் கேட்காதீங்கடீ.நான் ஒருத்தர் கூட சினிமாவுக்குப் போனேன்; அவ்வளவுதான்.''

''ஒருத்தர்னு?''-பவானி விடவில்

''ஒருத்தர்னு, என் கஸின்''— உ சொன்னாள்.

''ஹாய் கஸின்! இங்கிலீஷ்லே ரொ கன்வீனியண்ட் வோர்டுடீ அ ஆணுக்கும் பொண்ணுக்கும் அது தா கஸின்.''-எஸ்தர் தன் இங்கிலீஷ் ஞா னைக் காட்டினாள்.

''இது 'மாஸ்குலீன் ஜெண்டர்' '' உஷா கையால் முகத்தை மூ கொண்டாள்.

எஸ்தர் மெத்தென்றிருந்த அ விலாச் சதையைக் கிள்ளினாள். ''வெ மென்னடி வெட்கம். கஸின்கூட தே பட்டையை இடிச்சுக்கினு உட் தப்போ வெட்கமா இல்லையோ? ஏ படம் பாத்தியா, இல்லே...''

''உஸ்... சும்மா இருடீ.''—பவா அவளை அடக்கினாள்.

அது அப்படி ஆரம்பித்தது. உ அடிக்கடி கிளாஸை கட் செய்தா தோழிகளும் அவளை அடிக்கடி கிண் செய்தார்கள்.



ஆனால், தோழிப் பெண்களுக்கெல்லாம் உஷாவிடம் ஒரே ஒரு குறை. தங்கள் அந்தரங்கங்களை அவளிடம் பங்கிட்டுக் கொள்வது போல் அவள் ஏன் தன் ரகசியங்களைச் சொல்லவில்லை? அவள் எப்போது பாய் ஃபிரண்டைப் பார்க்கப் போகிறாள் என்பது யாருக்கும் தெரியாது. போய் விட்டு வந்த பிறகு தான் தெரியும். அவர், 'இப்படித் தொட்டார்', 'அப்படிக் கிள்ளினார்' என்றெல்லாம் விவரமாக வர்ணனை செய்வாள். இது அவள் தோழிகளுக்குப் பிடிக்கவில்லை.

ஒரு நாள். உஷா நேரம் சென்று வீட்டுக்கு வந்து கொண்டிருந்தாள். எதிரே அவள் தோழி பாமாவும் அவளுடன் கூட —அப்பப்பா! என்ன ஆண்மையான உருவம். ஏறிட்டுப் பார்க்கவும் உஷாவுக்குப் பயமாக இருந்தது. அது யாரோ பாமாவின்—? பாமாவே உஷாவைக் கூப்பிட்டாள்: ''ஹாய் உஷா!'' உஷா நின்றாள்.

''உஷா, இது என் அண்ணா சேகர். சேகர், இது என் காலேஜ்மேட் மிஸ் உஷா.''

''ஓ! க்ளாட் டு மீட் யூ.''

பாமா சொன்னாள்: ''சேகர், நீ மெதுவாப் போய்க் கொண்டிரு. நான் இதோ அஞ்சு நிமிஷத்திலே வந்துடறேன்.''

சேகர் மெல்ல நகர்ந்தான். ''ஏண்டீ கள்ளி, இன்னிக்கு மத்தியானம் கட், இப்ப லேட், என்னடீ, கஸினா?''

தலையை அசைத்தாள் உஷா.

''ஏண்டீ, உன் கஸினை எங்களுக்குக் காட்டக் கூடாதா? திருஷ்டி பட்டுடுமோன்னு பயப்படறியா?''

''சீ, சீ! அதெல்லாம் ஒண்ணுமில்லே. ..., பாமா நேரமாச்சுடி. வீட்டுக்குப் போகணும்.''

''ஓகே! டாடா... பைபை...!''

உஷா தலையைத் திரும்பிப் பார்த்தாள். அவனும்—அந்த சேகரும் அவளையே விழித்த கண் வாங்காமல் பார்ப்பது தெரிந்தது. உஷாவிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

மறுநாள் காலை பாமா, உஷாவைத் தனியாகக் கூப்பிட்டாள். ''என்னடீ, உன்னிடம் என்ன சொக்குப்பொடி வச்சிருக்கேடீ?'' என்று பாமா கேட்டபோது, உஷாவுக்கு ஒன்றும் புரியவில்லை.



''எனக்கு ஞாபக மறதி அதிகமா இருக்கு, டாக்டர்.. இதற்கு என்ன செய்வது?''

''வைத்தியம் செய்கிறேன்—ஆனால் நீங்கள் முதலில் 'பீஸை'க் கொடுத்து விடவேண்டும்!''

''நீ என்னடீ சொல்றே?'' என்று பாமாவைத் திருப்பிக் கேட்டாள்.

''சொல்றதா? என் அண்ணன் சேகருக்கு உன் மேலே கண்டதும் காதல். நேத்து கேள்விக்குமேலே கேள்வி கேட்டு, என்னைத் துளைச்செடுத்திட்டான். நீ ரொம்ப கொயட் கேர்லாம். அவனுக்கு ரொம்பப் பிடிச்சிருக்காம். உன்னைக் கல்யாணம் செய்துக்கணுமாம்.''

''என்னது?''

''டோண்ட் வொர்ரி. நான் சொல்லிட்டேன். 'பிரதர், உஷாவுக்கு ஏற்கெனவே அவளுடைய கஸின் இருக்கான். பாய் ஃபிரண்டு மட்டுமில்லே; அவளைக் கல்யாணமும் செய்துக்கப் போறான்' அப்படீன்னு சொல்லிட்டேன். சரிதானே?''— பாமா சொல்லிவிட்டு இன்னொரு சிநேகிதியைப் பார்த்து ''ஹாய்'' என்று கத்திக் கொண்டு போனாள்.

உஷா எதையோ தன் கைவிரல்களுக்கிடையே நழுவவிட்டது போல் பிரமை பிடித்து நின்றாள். பாமாவின் அண்ணன் எத்தனை அழகாகவும் கம்பீரமாகவும் இருந்தான்!

அப்படியானால் கஸின்? 'பாமா, எனக்குக் கஸினுமில்லே, மண்ணுமில்லே. உங்களோடு போட்டி போட்டுக் கொண்டு, நானாகக் கற்பித்துக் கொண்ட ஒரு கற்பனை உருவம் அது!' என்று கத்த வேண்டும் போலிருந்தது உஷாவுக்கு. ஆனால் வாய் அடைத்துவிட்டது.

அது அவளுடைய கௌரவப் பிரச்னை.



சென்னை நகர பூர்ண வினியோகஸ்தர்கள் : ஸ்ரீ ரகுநாத் ஏஜன்ஸி
10, அக்ரகாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2. போன்: 209

ஒரு கேள்வி?



எஸ். சுந்தரேசன்.
சென்னை-4.

இசை விழா என்று சென்னையில் எல்லோரும் சேர்ந்து ஒரே மாதத்தில் நடத்துவதைத் தவிர்த்து, டிசம்பர், பொங்கல், கோடை விடுமுறை, நவராத்திரி சீசன்கள் என்று பிரித்து நடத்த வேண்டும் என்று அமைச்சர் நெடுஞ்செழியன் வேண்டுகோள் விடுத்துள்ளாரே?

வீணை எஸ். பாலசந்தர்:

இந்தக் கருத்தைப் பல பேர், பல முறை முன்பே கூறியிருக்கிறார்கள். எனவே அமைச்சர் கூறியிருப்பது ஒன்றும் புதிதல்ல.

டிசம்பரில் இசை விழாக்கள் நடப்பது என்பது பல வருடங்களாக இருந்து வரும் ஒரு 'கன்வன்ஷன்.' இதை மாற்றுவது அவ்வளவு எளிதான காரியமல்ல. நாம் பின்பற்றும் இங்கிலீஷ் காலண்டரின்படி கிருஸ்துமஸ் விடுமுறை பத்து நாட்கள் கொண்டதாக இருக்கிறது. இந்தப் பத்து நாட்களுக்குப் பள்ளிகளும், கல்லூரிகளும் மூடியே இருக்கும். மாணவ மாணவிகள் இந்த விழாக்களுக்கு வருவதற்கு இந்த விடுமுறை பயன்படுகிறது. அதோடு விடுமுறையாக இருப்பதால் இசை உலகில் வளர்ந்து வரும் இளைய தலைமுறையினருக்கு நிகழ்ச்சிகளில் பங்கு பெற இந்தக் கலை விழாக்கள் பெரிதும் உதவுகின்றன.


மார்கழி மாத மாலை நேரங்களில் வசதியுள்ள பலர் ஸ்வட்டரையும், மஃப்ளரையும் போட்டுக் கொண்டு கச்சேரிகளுக்கு வருவதை ஒரு 'பந்தா' வாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சரின் யோசனையின்படி கோடை விடுமுறையில் இம்மாதிரி விழாக்களுக்கு ஏற்பாடு செய்தால், கச்சேரி கேட்க ஒருவருமே இருக்க மாட்டார்கள். அவரவர்கள் ஊட்டியிலும், கொடைக்கானலிலும்தான் இருப்பார்கள். அதோடு மார்கழியில் வெயிலின் கொடுமை இல்லாததால் ரசிகர்களுக்கு ஒரே நாளில் மூன்று நிகழ்ச்சிகளில் உட்கார்ந்தாலும் அலுப்புத் தட்டுவதில்லை. தொடர்ந்து கூட்டம், அரங்கில் இருப்பது வித்துவான்களுக்கு முக்கியம் அல்லவா? தவிர, டிசம்பர் விழாக்களுக்கென்றே சென்னை வர வேண்டும் என்று பல வெளிநாட்டு இசைப் பிரியர்கள் காத்திருக்கிறார்கள். இவர்கள் வருடத்திற்கு நான்கு முறை நம் ஊருக்கு வரவேண்டும் என்பது இயலாத காரியம். அமைச்சர் ஏனோ பொங்கல் போன்ற நாட்களில் வைக்கலாம் என்கிறார். மூன்று நாள், ஒரு நாள் விடுமுறைகளுக்கு எல்லாம் இசை விழா என்று வைத்துக் கொண்டிருந்தால் அதில் சுவாரசியம் இருக்காது.

எந்தக் கச்சேரிக்குப் போவது என்று ரசிகர்கள் திண்டாடுவார்கள் என்று அமைச்சர் கூறுவதும் ஒப்புக் கொள்ளக் கூடியதாக இல்லை. மாம்பலவாசிகள் வாணிமகாலுக்குத்தான் போவார்கள். மயிலாப்பூர் பக்கம் இருப்பவர்கள் அகாடமிக்குச் செல்வார்கள். டவுனில் இருப்பவர்கள் அண்ணாமலை மன்றத்துக்குப் போவார்கள். தங்கள் வீட்டிற்கு எது அருகில் இருக்கிறதோ அதற்குத்தானே சீசன் டிக்கெட்டுகள் வாங்குவார்கள்!

கோடையில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நிர்வாகத்தினர், இசை விழாவிற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லும் அமைச்சர், ஏன் அரசாங்கத்தின் சார்பிலேயே அந்த சமயத்தில் பத்துப் பதினைந்து நாட்களுக்கு இசை விழா நடத்த ஏற்பாடு செய்யக் கூடாது? அரசு நடத்தும் விழா என்றால் வித்துவான்களுக்கும் குஷியாகத்தான் இருக்கும்! தவிர அரசாங்கத்தைப் பின்பற்றி வேறு பல சபாக்காரர்களும் அந்த சமயத்தில் விழா நடத்த முன் வருவார்கள். பழைய ஆலோசனைகளையே சொல்லும் அமைச்சர், இந்தப் புதிய திட்டத்தை அமலபடுத்த ஆவன செய்வாரா?

எஸ். பாலசந்தர்





தந்தை பெரியார்

எந்த வகையில் பார்த்தாலும், எந்தக் கோணத்திலிருந்து ஆராய்ந்து பார்த்
ாலும் பெரியார், பெரியார்தான். அறுபது ஆண்டுகளுக்கு மேலாக, சமுதா
த்தின் நல்வாழ்வுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் இடையறாது பாடுபட்ட
னிப்பெரும் தமிழர் தலைவர் அவர். தமிழ் இனத்தின் தலை குனிவுக்கான
ாரணங்களைக் கண்டு பிடித்து, அதைப் போக்குவதற்கான பரிகாரங்களை உறுதி
டனும் உள்ளத் தெளிவுடனும் வாழ்நாளெல்லாம் வலியுறுத்தி வந்தார் அவர்.

இறைவனையே தம் பகைவனுக்கிக் கொண்டு, தோல்விகளைக் கண்டு துவளாமல்,
றுதி மூச்சுவரைப் போராடியவர் ஈ. வெ. ரா. சமுதாயத்தில் நிலவும் சாதி வேற்று
மைகளைக் கண்டு உள்ளம் குமுறி, எரிமலையாக அனல் கக்கியவர். மனிதன், மனிதனை
டிமைப் படுத்துவதற்கும் இழிவுபடுத்துவதற்கும் கடவுள் நம்பிக்கைதான் காரண
க இருக்கிறது என்று முடிவுசெய்து அதை வேரறுக்க, பிரசாரத்தைத் தம் போர்க்
வியாக ஆக்கிக் கொண்டவர். தம் பேச்சாலும் எழுத்தாலும், தாழ்த்தப்பட்ட
க்களுக்குத் தன்மான உணர்ச்சியை ஊட்டி, தலை நிமிர்ந்து நடக்கச் செய்த
ர்திருத்தச் சிங்கம் அவர். அமைதியான முறையில் அதிசயிக்கத்தக்க சமுதாயப்
ரட்சிக்கு வித்திட்ட ஜனநாயகவாதி. பேச்சில் அனல் தெறித்தாலும், வன்முறைக்
ரல் கேட்டாலும், அவர் என்றுமே அராஜகவாதியாக இருந்ததில்லை. 'இந்த தனி
னிதரின் முயற்சியால், தமிழ் இனம் விழிப்புற்று, எழுச்சியுற்று, பீடு நடை
பாட்டது!' என்று வரலாற்று ஆசிரியர்கள் பெரியாரைப் பற்றிப் பெருமையுடன்
ழுதத்தான் போகிறார்கள்.

உள்ளத்திலிருப்பதைக் கள்ளங்கபடற்ற குழந்தையைப் போல் பேசியதால்,
வர் பேச்சில் மழலை மிளிர்ந்தது. பிறர் பேசத் தயங்கியதை அவர் பச்சையாகக்
றியதால், அம் மொழி சற்றுக் கொச்சையாகவும் இருந்தது. பெரியாரின் மேடைப்
பசுக்கு இணையாக வேறொருவர் பேச்சைக் கூற முடியாது. அதிலும் தனிவழி
குத்தவர் அவர். அந்தப் பேச்சு, தாக்கப்பட்டவர்களைப் புண்படுத்தியதை விட,
திகமாகச் சிந்திக்கவே தூண்டியது.

எல்லாவற்றுக்கும் மேலாக ஈ. வெ. ரா. மனிதப் பண்புகள் நிறைந்த ஓர்
யர்ந்த மனிதர். நல்லிதயமும், நகைச்சுவையும், நல்லொழுக்கங்களும் நிறைந்த
ரு நிறை மனிதர்.

அரசியலோடு தொடர்பு கொண்டிருந்தாலும், உள்ளத்தில் ஒன்று வைத்து,
தட்டில் வேறொன்று பேசியறியாதவர். மனத் தூய்மையுடன் கை சுத்தமும்
க்கவர். பதவிகளுக்கு ஆசைப்படாதவர். அரசின் சட்ட திட்டங்களைத் துரும்பென
தித்தாலும், ஆட்சியிலுள்ளவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்க என்றுமே
வர் தவறியதில்லை.

பழமைவாதிகளுக்கும், பத்தாம்பசலிக் கொள்கைகளுக்கும், புரையோடிவிட்ட
க்க வழக்கங்களுக்கும், சாதி வெறியர்களுக்கும், அரசியல் கபட வேடதாரிகளுக்கும்
ிம்ம சொப்பன'மாக வாழ்ந்த பெரியார், தமது பேரியக்கத்தைப் பொறுப்பு
ணர்ச்சியோடும், நாட்டின் அமைதிக்கு ஊறுவிளைவிக்காத வகையிலும் நடத்தி
ந்ததை யாரும் மறுக்க முடியாது. சமுதாயத்தின் இழிவுகளைப் போக்க, அவர்
கையாண்ட வழிமுறைகள் எல்லோராலும் ஒப்புக் கொள்ள முடியாமல் இருப்பினும்,
வர் சுட்டிக் காட்டிய லட்சியமும், ஏற்றி வைத்த அறிவுச் சுடரும், படைத்துத்
ந்த மறுமலர்ச்சியும் தமிழகத்திற்கு மட்டுமின்றி பாரதத்திற்கே வழிகாட்டிகளாக
ருக்கும் என்பதில் ஐயமில்லை.


அருமை நண்பர் ராஜாஜி மறைந்து சரியாக ஓராண்டு கழித்து, பெரியார் தமது
ண்ட பயணத்தை முடித்துக் கொண்டு விட்டது இயற்கையின் அதிசயங்களில்
ன்றாகும். இந்த நூற்றாண்டில், தமிழகத்தின் அரசியல், சமுதாய வரலாற்றோடு
ரிக்க முடியாமல் பிணைக்கப்பட்டிருந்த இவ்விரு தலைவர்களும், வெவ்வேறு
கையில் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைந்திருந்தார்கள்.

இவ்விரு முதுபெரும் தலைவர்கள் இல்லாத தமிழ்நாடு, அனுபவமிக்க
யோதிகர் இல்லாத வீடாகக் காட்சியளிக்கிறது.

கதையாகவும் நாடகமாகவும் வந்து ஒருமுகமான பாராட்டைப் பெற்ற ஒரு கதையைப் படமாக்கும்போது பிரச்னைகள் உண்டு. பிரச்னைகளைக் கடந்து பாராட்டுக்குரிய படமாக அதைப் பரிமளிக்கச் செய்ய முடியுமா? பாலசந்தரால் அது முடியும் என்பதற்கு அருமையான உதாரணம்: 'சொல்லத்தான் நினைக்கிறேன்.'

மணியனின் கதையை மணி மணியான உத்திகளைக் கையாண்டு மனங் கவரும் குடும்பச் சித்திரமாகப் படைத்துத் தந்திருக்கிறார் பாலசந்தர்.

ஒரு சாதாரண, நடுத்தரக் குடும்பத்தில் நுழைந்து அன்றாட நிகழ்ச்சிகளைக் கண்கூடாகப் பார்ப்பது போன்ற உணர்ச்சி ஒவ்வோர் அடியிலும் இழைந்திருக்கிறது.



ஸ்ரீவித்யா — சிவகுமார் — சுபா

சொல்லத்தான் நினைக்கிறேன்.

மிடறு மிடறாகப் பாயசத்தைச் சுவைத்துப் பருகுவது போல், அனுபவித்து ரசிப்பதற்கு எத்தனையோ நிகழ்ச்சிகள்...

திருமணத்திற்குக் காத்திருக்கும் மூன்று பெண்களின் சுபாவமும் மூன்று விதம். மூத்தவள் வாத்தியாரம்மாவும் சரி, அடுப்படியை அடைக்கலமாகக் கொண்ட இரண்டாவது பெண்ணும் சரி, கடைக்குட்டியான கல்லூரி மாணவியும் சரி, ஆசையை வளர்த்துக் கொண்டிருப்பதில் ஒரே ரகம்தான். வீட்டில் தங்குவதற்கு இடம் கொடுத்த மானேஜரின் மனத்திலும் இடம் பிடிக்கத் துடிக்கிறார்கள். இவர்களில் யாராவது நடிக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா? இல்லை. அக்கம் பக்கத்தில் சந்தித்து உரையாடுகிறோமே, அப்படிப்பட்ட இயல்பான ஆத்மாக்களாகத்தான் இவர்களைப் பார்க்கிறோம். அத்தனை அந்நியோன்யமாக, தத்ரூபமாகத் தோன்றுகிறார்கள். அவ்வளவு ஜீவனுள்ள பாத்திர சிருஷ்டி.

விரல் விட்டு எண்ண முடியாதப கோவை கோவையாக ரசமா காட்சிகள். ஒரு சின்ன விளையாட்டு— கொட்டக் கொட்டக் கண்களைத் திறந் கொண்டு சிவகுமாரும், ஜெயசித்ராவு பார்வை விளையாட்டு ஆடி, பந்தய நடத்துகிறார்களே, எப்படி?

மானேஜரின் பார்வையைத் த பக்கம் திருப்புவதற்காக அலைமோது ஆவலுடன் பாத்திரத்தை 'ணங்'கென் வைத்து ஸ்ரீவித்யா ஒலி எழுப்புவதும் குச்சியால் தட்டித் தட்டி சத்தம் எழுப் சிவகுமாரை அழைப்பதும் புதுமையான உத்தியல்லவா? தான் சமையலில் 'எக் பர்ட்' என்பதைக் காட்டிக் கொள்வத காக மட்டுமின்றி, தன் மனக் கோல தையும் ஜாடையாகப் புலப்படுத்துவது போல் சிவகுமாருக்கு பிடித்தமான பாகற்காய்ப் பொரியலை ஸ்ரீவித்ய தங்கையின் மூலம் கொடுத்தனுப்ப அதைக் கொடுத்து விட்டு வந்

அக்காவை அவள் 'டீஸ்' பண்ணும் நளினம் இருக்கிறதே......

பேசும் போது திக்குகிற பெண்ணைப் பாடச் சொன்னால்...? பெண் பார்க்க வந்தவர்களின் முன்னால் சுபா பாடும் போது திக்கித் திணற, 'மீரா பாடிய பாடலைக் கேட்கக் கண்ணன் வரவில்லையோ?' என்று குரல் கொடுத்து ஸ்ரீவித்யா துணைக்குப் பாட வரும்போது கண்களில் நீர் மல்குகிறதே!

நூறு அடிக்கு மேல் இருட்டையே படமாகக் காட்டிய உத்தியையும், வாணி ஜெயராமின் 'ஸ்வீட் ஸிக்ஸ்டீன்' பாட்டையும், முதலில் மூணு வார்த்தை பேசி, பிறகு இரண்டு வார்த்தை பேசும் சுப்பையாவின் குண சித்திரத்தையும் ரசிக்காமல் இருக்க முடியுமா?

ஜெயசித்ரா



கமலஹாசன்



மூத்தவள் சுபாவின் ஆசை, பொங்கும் பால் என்றால், தன் வேட்கை காற்றில் மிதக்கும் புகை போல் என்று சொல்லாமல் சொல்கிறார் இரண்டாவது பெண் ஸ்ரீவித்யா. மானேஜர் 'தனக்குத்தான் கிடைக்கப் போகிறார்' என்று ஆசைக் கனவுகளில் மிதந்து கொண்டு, அவன் நடமாட்டத்தை தன் அறையிலுள்ள நிலைக் கண்ணாடியின் மூலம் பார்த்துப் பார்த்துப் பூரித்துக் கொண்டிருக்கிறாளே, எத்தனை பேதைத்தனம்! வெற்றியை எதிர் நோக்கி நின்றவள், தோல்வியைக் கண்ட பிறகு துவண்டு விடாமல் தன் பாணியில் சிவகுமாரைத் தட்டி அழைத்து, கற்பனைத் தோழிக்கு தான் எழுதிய கடிதங்களைத் தபாலில் சேர்க்கச் சொன்ன 'விளையாட்டு'க்கு வருந்தி கணக்கைத் தீர்க்கிறாளே, நெகிழ்ந்து போகிறோம்......நடிப்பில் ஸ்ரீவித்யா எங்கோ உயரப் போய் நிற்கிறார்!

படுசுட்டியான கடைக்குட்டிப் பெண் ஜெயசித்ரா, தமக்கைகளுடன் போட்டி போடுகிறார்; காதலில் மட்டுமல்ல, நடிப்பிலும்! அவள் தன் தோழியின் வாழ்வைக் காக்க, தன் கற்பைப் பணயம் வைப்பதைப் பார்த்து மலைத்துப் போகிறோம்.

மானேஜர் சிவகுமார் 'ஜெண்டில்மேன்' என்று ஸ்ரீவித்யாவிடம் மட்டுமல்ல; எல்லோரிடமும் பெயரெடுக்கும்படி கம்பீரமாக வருகிறார். கண்ணியமான பாத்திரத்தை நயம்படச் செய்திருக்கிறார்.

கவர்ச்சியான இன்னொரு பாத்திரம் கமல். இந்தத் தலைமுறையைச் சேர்ந்த இளைஞன், தட்டிக் கேட்க ஆள் இல்லாவிட்டால் என்னென்ன செய்வான் என்பதற்கு உதாரணம் அவன். 'லவ்' டாலர் போட்டுக் கொண்டு 'யூ டோண்ட் நோ' பாட்டுப் பாடிக் கொண்டு மது அருந்துவதும், இளம் பெண்களைக் குறி வைத்து வீழ்த்துவதும்... அருமையான பாத்திரத்தை லாகவமாக ஏற்று நடித்து 'சபாஷ்' பெறுகிறார் இளம் நடிகர் கமலஹாசன்.

ஒவ்வொரு சிறு அசைவுக்கும், உணர்ச்சிக்கும், பாவத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து, 'சினிமா பார்க்கிறோம்' என்ற உணர்வே நமக்கு ஏற்படாத வண்ணம், மிக இயற்கையாகப் படம் அமைய வேண்டும் என்று பாடுபட்டிருக்கும் டைரக்டர் பாலசந்தர், ஏன் சிலவற்றைக் கவனிக்காமல் விட்டு விட்டார் என்பதை எண்ணும் போது, கொஞ்சம் வியப்பாக இருக்கிறது!

உதாரணமாக, படத்தில் சர்ச்சைக்குரிய கட்டமான, மூன்றாவது பெண் புஷ்பா கற்பைப் பணயம் வைக்கும்

முக்கியமான காட்சியையே எடுத்துக் கொள்வோம். 'கமலஹாசனைத் திருத்துகிறேன்' என்று முதலில் சவால் விட்ட புஷ்பா, அந்த சவாலைக் காப்பாற்றவே ஒரு புதிய உறவை அவனிடம் ஏற்படுத்திக் கொண்டு, மேலும் அவன் தவறு செய்யாமல் தடுத்திருக்கலாம். அவனைத் திருத்தும் ஒரே காரணத்திற்காகத் தன்னை அவள் இழந்திருக்கலாம். அல்லது, ஜெயசுதாவின் திருமண வாழ்க்கை உடைந்து விடப் போகிறது என்று தெரிந்ததனால், இப்போது நடப்பது போலவே தன்னை அவனுக்கு அர்ப்பணித்து, அவனை மாற்ற முயற்சித்திருக்கலாம். இப்படியெல்லாம் நேரிடையாக இதைச் சொல்லியிருந்

ஜெயசுதா



எஸ். வி. சுப்பையா



தால், சர்ச்சைக்கே இடம் இருந்திருக்காது. அதை விட்டுவிட்டு, ஒரு மணி நேரத்தைக் கடத்துவதற்காகவென்றும் விமானம் போய்விட வேண்டும் என்பதற்காகவும் அவள் தன்னை இழக்கத் தீர்மானித்தாள் என்றெல்லாம் சம்பவங்களை ஜோடித்து, அதன் பிறகு 'நேரமும் போச்சு, என் பெண்மையும் போச்சு, விமானமும் போச்சு' என்று அவளை ஏன் அழவைக்க வேண்டும் எதற்காக, ஏன் இப்படிச் சொல்ல வேண்டியதைத் தைரியமாகச் சொல்லாமல் தயங்குகிறார் டைரக்டர்!

பூர்ணம் விசுவநாதன், கமலஹாசனின் திட்டத்தை அறிந்தவுடன், எங்கே தன் மணவாழ்க்கை சிதைந்து விடுமோ என்று அஞ்சி, அதைக் காப்பாற்ற தன் மனைவி சுதாவால் கல்யாணத்தன்றுதான், தன்னுடைய தோழி என்று அறிமுகப்படுத்தப்பட்ட மாணவி புஷ்பாவைத் தேடி ஓடுகிறாரே, அது இயற்கையாக இருக்கிறதா? அவருக்கு வேறு வழியே தெரியாமல் போய் விட்டதா?

கமலஹாசனின் வீட்டிலுள்ள அன்னைக்கும், தம்பிக்கும் தைரியத்தை ஊட்டிவிட்டு, தம்பியே அண்ணனை அடிக்கும் அளவுக்கு தெம்பைக் கொடுத்துவிட்டு, அவன் வெளியே போனவுடன் 'இந்த மாதிரி மைனர் பசங்களாவெல்லாம் கையில் காசில்லாமல் அரை மணி கூட வெளியே இருக்க முடியாது' என்று கூறுகிறாள் புஷ்பா. ஆனால் அதுவரையில் காரில் பார்க்காத அந்த கமலஹாசனை, அடுத்த காட்சியிலேயே 'மெர்ஸிடெஸ் பென்ஸ்' காரில் நாம் பார்க்கிறோம். என்னவோ போல் இருக்கிறதே!

''இதெல்லாம் பெரிய குறைகளா, சினிமாவில் வருவதில்லையா?'' என்று கேட்கலாம். பல தமிழ்ப் படங்களில் பல காட்சிகள் முன்னுக்குப் பின் முரணாக வருகின்றன; இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், சிறு சிறு விஷயங்களையெல்லாம் மிகமிக அழகாகச் சித்திரித்துக் காட்டும் ஆற்றல் பெற்று, காட்சிகளை நளினமாகக் கையாண்டிருக்கும் பாலசந்தரா இந்தக் குறைகளுக்கு இடம் கொடுப்பது? அந்த டைரக்டரின் ஒப்பற்ற கைவண்ணத்தை அனுபவித்துப் பழக்கப்பட்ட ரசிகர்களுக்கு இந்த சின்னக் குறைகள் கூடப் பெரிதாகத் தோன்றலாம். அதனால்தான் இவற்றைக் குறிப்பிடுகிறோம்.

இறுதியில் ஒன்றை மட்டும் கண்டிப்பாக சொல்லத்தான் நினைக்கிறோம்; இது பாலசந்தர் படைத்துள்ள மிக இனிய குடும்பச் சித்திரம்; முற்றிலும் புதுமையான திரை விருந்து.


வியக்கவைக்கும் உங்கள் அழகை
வெளிப்படுத்திக் காட்டும் ஜரிகைப் புடவைகள், இப்பொழுது
ஹேண்டலூம் ஹவுஸில் வந்து குவிந்துள்ளன.
உங்கள் அழகை
சிறப்பாக எடுத்துக்காட்ட
காஞ்சிபுரம், பெனாரஸ், ராஜஸ்தான்
புடவைகள்.
ஹேண்ட்லூம் ஹவுஸ்
9, ரத்தன் பஜார்,

விபத்து

சி. நடராஜன்

இரவு மணி பத்து. செவ்வகத்தின் மேல் சதுரம் வைத்தாற் போன்று தோற்றமளித்துக் கொண்டிருந்தது, டாக்டர் நளினியின் பங்களா. அதன்முன் சிவப்பு நிற கார் ஒன்று வந்து நின்றது. கதவைத் திறந்து ஓர் இளைஞன் இறங்கினன். சாத்தப்பட்டிருந்த 'கேட்'டைத் திறந்தான்.

''ளொள்! ளொள்!''

—அல்சேஷன் குரல்.

தயங்கி எட்டிப் பார்த்தான்.

போர்ட்டிகோ தூணில் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தது அந்நாய்.

பயமில்லை.

துணிவோடு உள்ளே நுழைந்தான்.

கொஞ்சம் தள்ளி நின்றே 'காலிங் பெல்'லை அழுத்தினன்.

கதவு திறந்தது.

வேலைக்காரன் தலையை நீட்டி, ''என்ன வேணும்?'' என்ருன்.

''டாக்டர் நளினியைப் பார்க்கணும்!''

''இப்பத்தான் படுக்கப் போனுங்க. காலையில் வாங்களேன்.''

அவனுக்கு முகம் மாறியது:

''அவசரமான கேஸ். டாக்டரை நான் கண்டிப்பா பார்க்கணும்'' என்ருன், பதட்டத்துடன்.

''பேஷண்ட்டைக் கொண்டு வந்திருக்கீங்களா?''

''இல்லை. பிரசவ கேஸ்!''

''வேறு யாரையாவது பாருங்க. 'எழுப்பக் கூடாது'ன்னு சொல்லிட்டுப் படுக்கப் போனுங்க.''

''கொஞ்சம் தயவு பண்ணுப்பா! அவுங்க வரலேன்ன என் மனைவி...''

வேலைக்காரனுக்கு மனம் இளகியது:

''போய்ப் பார்க்கிறேன். அவுங்க எழுந்து வந்தா உங்க அதிர்ஷ்டம்.''

ஐந்து நிமிடங்கள் சென்றன.

கதவு மறுபடியும் திறக்க டாக் நளினி, அழகுச் சிலையாய் வந்து கொ டிருந்தாள்.

அவளைப் பார்த்த இளைஞன், ''மேட என் ஒய்ஃபுக்கு டெலிவரி ட ரொம்ப வேதனைப்பட்ரு...'' என்ரு

''எக்ஸ்கியூஸ் மி! நான் இரவி வெளியே போறதில்லே. வேறு யா யாவது பார்த்துக் கொள்ளுங்களேன்

''அப்படிச் சொல்லாதீங்க டாக்ட நீங்க வரலேன்ன என் மனைவி செத் பூடுவா. ப்ளீஸ், பெரிய மனசு பண்ணு களேன்'' என்று அழத் தொடங்கின அவன். பரிதாபமாயிருந்தது நளினிக்

சிறிது சிந்தனை. கைக்கடிகாரத்தை பார்த்தாள். மணி பத்தே கால். நெ சுருங்கியது.

''ஒரு பதினஞ்சு நிமிடம்தா வந்துட்டு வந்துடலாம். இதுக்கு நீ தயங்கின அவளை நான் இழந்திடுவே மேடம்'' என்றுஉருக்கத்துடன்கூறியவ ''டாக்டர், இந்தப் பதின நிமிஷத்துக்கு என் வாழ்வை அழிக் சக்தியைக் கொடுக்கிறதும் கொ காததும் உங்களிடம்தான் இருக் என்ருன்.

அவன் கெஞ்சல் அவள் மனத் இளக்கவே, ''அம்மா!'' என்ருள் உரக்

''ஏம்மா?''

—பதில் குரல் உள்ளிருந்து வந்த

''போயிட்டுப் பதினஞ்சு நிமி திலே வந்துட்றேம்மா.''



உள்ளிருந்து, ''போயிட்டு சீக்கிரம் வந்துடும்மா!'' என்று கட்டளையிட்டது ஒரு குரல்.

வேலைக்காரன் கொண்டுவந்த மருந்துப் பெட்டியையும் ஸ்டெதாஸ்கோப்பையும் வாங்கிக் கொண்டு திரும்பிய அவள், இளைஞனிடம், ''எங்கேயிருக்கு வீடு?'' என்று கேட்டாள்.

விலாசத்தைக் கூறினன்.

''காரை நானே கொண்டு வந்திருக்கேன். அதோ, ரெடியா இருக்கு'' என்றான் இளைஞன்.

இளைஞன் முன்னே செல்ல, டாக்டர் அவனைப் பின்தொடர்ந்தாள்.

கார் பறந்தது.

கண்களை மூடினாள்:

'எத்தனை கேஸ்கள்? எத்தனை பொறுப்புகள்? - அத்தனையும் வெற்றி பெற வைத்த இறைவா, உனக்கு நான் என்ன செய்யப் போகின்றேன்?'

திடீரென்று விழிகளைத் திறந்த நளினி பதினைந்து நிமிடம் கடந்து விட்டதை உணர்ந்து, ''மிஸ்டர்!'' என்றாள்.

அவன் திரும்பவில்லை. கார் பயங்கர வேகத்துடன் போய்க் கொண்டிருந்தது.

திகைப்பு, அச்சம் ஒன்று சேர, ''மிஸ்டர், காரை நிறுத்து!'' என்று கத்தினாள்; பயனில்லை: 'எங்கோ போகிறோம்! என்ன பண்ணப் போகிறான் இவன்?'

ஆத்திரத்துடன், ''ஸ்டாப் திஸ் கார்!'' என்றாள். அச்சமயம் அது தார் ரோடிலிருந்து பிரிந்து இருண்ட வீடுகள், குடிசைகள் — இவற்றைக் கடந்து மைதானமாக இருந்த பெரிய வெளிக்கு வந்ததும் நின்றது. பதற்றத்துடன் நளினி காரின் கதவைத் திறக்க முயன்றாள்; முடியவில்லை. அவன் நிதானமாக



காரிலிருந்து இறங்கி, அவள் பக்கம் வந்து நின்று சிரிக்கத் தொடங்கினான்.

''ஏன் சிரிக்கறே?''

''டாக்டர் மிஸ் நளினியை இவ்வளவு சுலபமாக கடத்த முடிந்ததேன்னு நினைக்கும்போது சிரிப்பு வந்தது; சிரிச்சேன்.''

அவன் சிகரெட்டை வாயில் வைத்துக் கொண்டு கேட்டான்:

"உன் அழகு என்னை மயக்கிடுச்சு நளினி... அதற்காகக் கடத்தினது தப்பா?"

"ஃபூல், நீ யார் என்னைக் கடத்து வதற்கு?"

"கேட்க வேண்டிய கேள்விதான். அதற்குப் பதில் சொல்ல நானும் கடமைப்பட்டிருக்கிறேன்" என்றான் நிதானத்தோடு.

"ஷட் அப்! மரியாதையா என்னை விட்டுடு. இல்லே, கூச்சல் போட்டு ஊரைக் கூட்டுவேன்."

அவன் சிரிப்பு அதிகமாகியது.

நளினி சுற்றுமுற்றும் பார்த்தாள். ஒரே பொட்டல் காடு. மருந்துக்குக்கூட ஒரு கல் வீடோ, குடிசையோ இல்லை.

கார் மறுபடியும் பறக்க ஆரம்பித்தது. எந்த நிமிடத்திலும் நசுக்கப்படவிருக்கும் புழுவாக அவள் துடித்துக் கொண்டிருந்தாள்.

திடீரென்று வெளியே மின்னல், இடி, சூறாவளி!

காரின் வைப்பர் மக்கர் செய்ய ஆரம்பித்தது. அதைச் சரி செய்ய முயன்றான்; முடியவில்லை. அச்சமயம் எதிரே பயங்கர வேகத்துடன் மோதி விடுகிற மாதிரி லாரி ஒன்று கட்டுப்பாடின்ற வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

'இந்தக் கொடியவன் கரங்களிலிரு தும், உலகத்திலிருந்தும் ஒரேயடியா நம்மை விடுதலை செய்ய இந்த லா வருகிறதா?'—நளினிக்கு ஓர் ஆறுதல்

ஆனால்? தக்க சமயத்தில் காரை ஒடித்து மோதாமல் சமாளித்து விட்டானே பாவி! லாரி பெருத்த புகை படலத்தைக் கக்கிக் கொண்டே காரை கடந்து விட்டது!

எதிரே ஒரு பாலம் தெரிந்தது. அதை கடந்து இறங்கியதும் வலப் பக்கத்தி ஒரு ரோடு. கால் பர்லாங் தூரத்தி அந்த பங்களா. அதில்தான் அவளை...

பாலத்தின் மீது கார் போய் கொண்டிருக்கும் போது ஒரு யோசனை கீழே 'சல சல' என்ற நீரின் ஓட்டம் குதித்து விடலாமா?

சீட்டில் கை வைத்துத் திறக்கப்போன வளுக்கு அப்போதுதான் நினைவு வந்தது அதை ஏற்கெனவே அவன் திறக்க முடியாது பூட்டி விட்டான் என்று.

கார், பாலத்திலிருந்து இறங்கி வலப் பக்கம் திரும்பியது.

அதன் ஒளியில்— அதோ! அந்தக் கட்டடம்.

அப்போது— ஐயோ! திடீரென்று ஒரு சூறாவளி. மனத்திலா? வெளியிலா? நிதானிக்க முடியவில்லை நளினியால்.

*

'கிளிங்..... கிளிங்..... கிளிங்.....'


—வானொலிப் பெட்டியிலிருந்து மிதந்து வந்தது இனிய இசை.

அவன் கண் விழித்தான். தலை 'விண் விண்' என்று வலித்துக் கொண்டிருந்தது. அசைய முயன்றான்; முடியவில்லை. 'எப்படி இங்கே வந்தேன்? நளினி எங்கே? இது யார் வீடு?'- சுற்றுமுற்றும் நோக்கினான். நடந்ததை நினைவுக்குக் கொண்டு வர முயன்றான்:

ஏதோ ஓர் ஒளி. அதில் கண் கூசுகிறது. அந்த வேகத்தில் எதன் மீதோ மோதல்... அப்புறம்?

தலையில் பெரிய கட்டு இருப்பதை உணர்ந்தான். எப்படி ஏற்பட்டது? யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டது. திரும்பினான்; தூக்கி வாரிப் போட்டது.

டாக்டர் நளினி! அவள் உடம்பிலும் லேசான காயங்கள் பட்டதற்கு அடையாளமாகச் சிறு சிறு பிளாஸ்திரிகள். இருந்தாலும் அவள் முகத்திலிருந்த கம்பீரம் குறையவில்லை.



எங்கள் குவார்ட்டர்ஸில் உள்ள ஒரு என்ஜினீயர் தன் குழந்தைகள் அதிகாலையில் கண் விழித்துப் பழக வேண்டும் என்பதற்காகக் கீழ்க் கண்ட முறையைக் கையாளுகிறார்:

இதன்படி, காலையில் முதலாவதாக எழுந்திருக்கும் குழந்தை அன்றைய தேதி ஷீட்டைக் கிழித்து வைத்துக் கொள்கிறது. மாதக் கடைசியில் ஒவ்வொரு குழந்தையும் சேமித்து வைத்திருக்கும் தேதி - ஷீட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போனஸ் - 'பாக்கெட் மணி' தந்து விடுகிறார், என்ஜினீயர்.

— பிரேம் ஆனந்த்.

''எப்படி யிருக்கு மிஸ்டர் ராஜ்?''

அவன் திகைத்தான்.

தன் பெயர் இவளுக்கு எப்படித் தெரியும்? அவளைப் பரிசோதித்தாள். தன் பாக்கெட் டயரி மேஜை மேலிருப்பதைப் பார்த்தான் ராஜ். இப்போது அவளுக்குத் தன் பெயர் தெரிந்தது எப்படி என்பதைப் புரிந்து கொண்டான்.

''மிஸ்டர் ராஜ், உங்க டெம்பரேச்சர் நார்மலுக்கு வந்துட்டுது.''

அவனுக்கு ஏதோ கேட்க வேண்டும் போலிருந்தது. தயங்கியபடி கேட்டான்:

''நான் எப்படி இங்கே வந்தேன்...? நீங்க...''

''ராஜ், என்னை அழிக்க நீ அழைத்துப் போனுய். நம் இருவரையும் அழிக்கப் புயலும் மழையும் வந்தது. தெய்வம் தக்க சமயத்தில் காப்பாற்றி விட்டது'' என்ருள் அவள், புன்னகையுடன்.

''அம்மா!'' என்று அலறிய ராஜ், ''உங்கள் கௌரவத்துக்கு ஊறு செய்த என்னை மன்னித்து, மருத்துவமும் செய்த உங்களுக்கு எப்படி நன்றி சொல்வேன்?'' என்று கண்களில் நீர் கசிய அழுதான்.

''எனக்கு நன்றி சொல்ல வேண்டாம். ஆனுல் ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லு:

''விதி ஏற்படுத்திய ஒரு விபத்திலிருந்து நாம் பிழைத்து விட்டோம். உனக்கு மருத்துவமும் செய்ய என்னுல் முடிந்தது. ஒரு வேளை என் தூய்மைக்கு ஒரு விபத்து ஏற்பட்டிருந்தால், அதற்குப் பின் அதற்கு மருத்துவம் உண்டா? இந்தக் கேள்விக்கு மட்டும் நீ பதில் சொல்லி விடு! அதுவே நீ எனக்குச் செய்யும் நன்றிதான்!'' என்ருள்.

தலையில் பட்ட அடியை விடப் பெரிய அடியாக இருந்தது இக் கேள்வி. கண் கலங்கி அழுதான்:

''என்னுல் பதில் சொல்ல முடியவில்லை; என்னை மன்னித்து விடுங்கள்.''

''மன்னிக்கும் சக்தி எனக்கு இல்லை ராஜ். ஆனுல் நீ நன்றி சொன்னுல் அதை ஏற்கும் சக்திதான் எனக்கு உண்டு. உன்னுல் பதில் சொல்ல முடியாத இந்தக் கேள்வியை சதா உன் நெஞ்சில் வைத்திருந்து வாழ்க்கை முழுவதும் அதற்குப் பதில் தேடிக் கொண்டிரு. அதுவே உன்னைத் திருத்தும்.''

அவன் கண் கலங்க, உடல் கூச அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

















74 ஆசைகள்!



ஒவ்வொரு புத்தாண்டு பிறக்கும் போதும், சினிமா நட்சத்திரங்களைத் தேடிப் பிடித்து, 'உங்கள் புத்தாண்டு ஆசை என்ன?' என்று கேட்பது ஒரு வழக்கமாகி விட்டது! அந்த வழக்கத்தை மீறலாமா? இதோ நட்சத்திரங்களின் 74-ம் ஆண்டு ஆசைகள்!

ஜெய்சங்கர்: இந்த ஆண்டாவது ஒரு புராணப் படத்தில் சிவபெருமானாக நடிக்க வேண்டும் என்பது என் ஆசை.

கே. ஆர். விஜயா: உடல் பருமனைத் தடுக்க ஏதாவது மருந்து சாப்பிட வேண்டும்.

முத்துராமன்: என் பிறந்த நாளன்று ஒரு லட்சம் பேருக்கு இலவச சாப்பாடு போட வேண்டும்.

ஜெயலலிதா: என் தாயாரின் பெயரால் பெரிய பெண்கள் கல்லூரி ஒன்றை நிறுவ வேண்டும்.

சிவகுமார்: இந்த ஆண்டிற்குள்ளாவது திருமணம் செய்து கொள்ள வேண்டும்.

உஷா நந்தினி: திரு. எம். ஜி. ஆருடன் 'கிழக்காப்பிரிக்காவில் ராஜு' படத்தில் கதாநாயகியாக நடிக்க வேண்டும்.

ஸ்ரீகாந்த்: இந்தி நடி நூதனைக் கற்பழிக் காட்சி ஒன்றில், இந் படத்தில் நடிக்க வேண்டு

சுபா: இந்த ஆண்டி 'ஊர்வசி' பட்டம் பெ வேண்டும்.

ஏ. வி. எம். ராஜ அடுத்து நான் தயாரிக் என் சொந்தப் படத்திற் நானே இசை அமை வேண்டும்.

ஸ்ரீ வித்யா: 'பா யில் டிம்பிள் கபாடிய தோன்றியது போ

கவர்ச்சிக் கன்னியாக ஒரு படத்தில் நடிக்க வேண்டும்.

ஜெயசித்ரா: நானும் என் தாயாரும் ஒரு படத்தில் மாமியாராகவும் மருமகளாகவும் நடிக்க வேண்டும்.

ஜெயசுதா: 'புன்னகை அரசி' என்று கே. ஆர். விஜயா போல் பட்டம் பெற வேண்டும்.

வெ. ஆ. நிர்மலா: 'நவராத்திரி'யில் சிவாஜி கணேசன் ஒன்பது பாத்திரங்களை ஏற்று நடித்தது போல் ஒரு படத்தில் நடிக்க வேண்டும்.

பிரமீளா: தயாரிப்பாளர்களிடம் தொந்தரவு இல்லாத நடிகை என்ற பெயரை இந்த ஆண்டிலாவது பெற வேண்டும்.

இந்த 'ஆசை'களை யெல்லாம் நட்சத்திரங்கள் கூறினார்கள் என்று நினைத்தீர்களா? ஊஹூம்... அதுதான் இல்லை...!

இப்படியெல்லாம் இந்த நட்சத்திரங்கள் சொன்னால் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பார்த்ததன் விளைவுதான் இது!

—சியாமளன்.

73 திருமணங்கள்..

இந்திப் பட உலகில் 1973-ம் ஆண்டுக்குத் தரக்கூடிய பொருத்தமான பெயர், 'கல்யாண வருடம்' என்பதுதான்!

மார்ச் மாதம் நடந்த ராஜேஷ்—டிம்பிள் திருமணம்தான் பட உலகில் அதிகச் சலசலப்பை உண்டாக்கியது. ஆனால் இது திடீரென்று கடற்கரையில் நிலாவொளியில் நிச்சயமான திருமணம்! அதற்குமுன் அவர்கள் ஜோடியாக அதிகம் வெளியே காணப்பட்டது கூட இல்லை!

ஏப்ரலில் நடந்தது ராக்கி—குல்ஸார் திருமணம். ஒரு நடிகை ஒரு கவிஞரை மணந்து கொள்வது பொருத்தம்தானே? இதில் இன்னொரு சுவாரசியம், ராக்கியின் இரண்டாவது கல்யாணம் இது என்பதுதான். கல்யாணத்தை நடத்தி வைக்கக் கடைசி வரை புரோகிதர் வராமல் இருந்தது ஒரு சினிமா 'கிளைமாக்ஸ்'!

ஜூன் மாதம் திரைப்பட நண்பர்கள் யாருக்குமே சொல்லாமல் மணம் செய்து கொண்டார்கள், ஜெயபாதுரியும் அமிதாப்பச்சனும். கல்யாண வைபவம் முதலில் பஞ்சாபி பாணியிலும் பிறகு வங்காளி பாணியிலும் நடந்தது ஒரு புதுமை. அபூர்வமாக வந்த விருந்தினர், பிரதமரின் மகன் சஞ்சய் காந்தி.

அந்த மாதமே திருமணம் செய்து கொண்டவர் **தனுஜா**. அவருடைய பெயர் பல ஜோடிப் பொருத்தங்களில் அடிபட்டது. கடைசியில் நேர்ந்தது ஒரு மகாராஷ்டிர—வங்காளி இணைப்பு. அதிர்ஷ்டக்கார மாப்பிள்ளை ஷோமு முகர்ஜி.


வஹீதா ரஹ்மானை மணம் செய்து கொள்ள நிச்சயம் செய்து கொண்டவர் பஃரீத் ஸித்திக் என்ற டில்லி 'பிஸினஸ்மேன்'.


கல்யாணப் பந்தல் வரை வருவது நிச்சயமாகித் தள்ளிப் போடப்பட்டது, **ஜிதேந்திரா—ஷோபா** (ஏர்ஹோஸ்டஸ்) திருமணம். ''காதலிக்கிறோம்'' என்று அறிவித்து, ''ஆனால் கல்யாணம் இப்போது இல்லை'' என்று சொன்னது **பானுரேகா—வினோத்மெஹ்ரா** ஜோடி.

திருமணம் செய்து கொள்ளப் போவதாக அறிவித்துப் படங்களில் ஒப்பந்தம் ஆவதையும் நிறுத்திக் கொண்டுவிட்டார் **மும்தாஜ்**. கல்யாணம் 74-ல் ஜூன் மாதம் நடக்குமாம். அப்புறம் லண்டனில் கணவர் மயூர் செய்துவரும் 'பிஸினஸில்' சேர்ந்து கொள்ளப் போகிறார், மும்தாஜ்.

73-ல் கல்யாண வதந்திக்கு ஆளானவர்கள்—யோகிதாபாலி, ஜீனத் அமன்.

—ஜெயஸ்ரீ விசுவநாத்.





"லைப்ரேரியன் உடனே உங்களை கான்பரன்ஸ் ரூமுக்கு வரச் சொல்கிறார்" என்று சொல்லிவிட்டு ஓடினான் மெசஞ்சர் டெம்போ. லீலாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'இரண்டு நிமிடத்திற்கு முன்புதானே லைப்ரேரியனிடம் பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒன்றும் சொல்லவில்லையே!' என்று நினைத்துக் கொண்டே எழுந்து போனாள்.

கான்ஃபரன்ஸ் அறையில் ஏற்கெனவே டோனி, லூஸி, சே, நியார்கோ முதலானோர் உட்கார்ந்திருந்தனர்.

லீலாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. மனத்தில் பல்வேறு கேள்விகள்.

"லீலா உட்கார்."- அந்த ஆப்பிரிக்க லைப்ரேரியன் நியார்கோவின் குரல் கடுமையாக இருந்தது.

டோனி, லூஸி, லீலா மூவரையும் சுட்டிக் காட்டிக் கொண்டே "இவர்கள் மூவரும் என்னைக் கவிழ்க்கப் பார்க்கிறார்கள். என் ஸ்தானத்தில் இருக்க வேண்டும் என்று இவர்கள் மூவருக்கும் பேராசை. என்னைப் பற்றி என்னென்ன பேசுவது என்றில்லாமல், கன்னாப்பின்னாவென்று மற்றவர்களைப் பார்த்து உளறியிருக்கிறார்கள்...." என்றான். அத்துடன் நிற்கவில்லை:

"எந்தப் பெண்ணை நான் காதலித்தால் இவர்களுக்கு என்ன? நான் ஆண். எந்தப் பெண்ணை வேண்டுமானாலும் பொறுக்கி எடுத்துக் கொள்வேன். எனக்குச் சுதந்திரம் இருக்கிறது. இதைப் பற்றி வம்பு பேச இவர்கள் யார்? என் மாதச் சம்பளத்தில், பாதியை நான் விரும்பும் பெண்களுக்குக் கொடுக்கிறேனாம்—என் மனைவியும் மக்களும் பட்டினி கிடக்கிறார்களாம். வாய் கிழிய இம் மூவரும் பேசுகிறார்கள். பாருங்கள் இவர்கள் முகத்தை! நான் லேசுப்பட்ட ஆசாமியில்லை. என்னைப் பற்றியும் என் சொந்த விவகாரங்களைப் பற்றியும், தனிமையில் அலச என்ன தைரியம் இவர்களுக்கு! படித்தவர்களா இவர்கள்? என் சக ஊழியர்கள் இவர்கள் என்று சொல்லிக் கொள்ள எத்தனை வெட்கமாக இருக்கிறது எனக்கு!"—பொரிந்து தள்ளினான். நெற்றிக்கண் ஒன்று இருந்திருந்தால், கட்டாயம் திறந்திருக்கும்!

அவன் சொன்னது நிஜந்தான். டோனி, லூஸி, லீலா மூவர் முகத்திலும் ஈயாடவில்லை; அசடு வழிந்தது. ஒரேயடியாக அதிர்ச்சிக்கு உள்ளாகி உட்கார்ந்திருந்தார்கள்.

லீலாவின் மனம் 'இருதலைக் கொள்ளி எறும்பு போல்' தவித்தது. ஒரு பக்கம் 'அட, நம்பிக்கைத் துரோகி! இவ்வளவு தானா உன் நட்பு? பிரத்யேகமாய் எனக்காகத் தனி மரியாதை கொடுத்து நடத்துவது போல் எப்போதும் நடந்து கொள்வாயே' என்று வெறுப்பு மிகுந்து ஓ மிட்டது. மறுபக்கம் 'ஐயோ, லூஸியை இப்படிக் காட்டிக் கொடுத்துவிட்டோமே! டோனியும் லூஸியும் தன்னை பற்றி என்ன நினைப்பார்கள்?' என் தவித்தது.

மற்றவர்களுக்கு ஒன்றுமே புரிந் தாகத் தெரியவில்லை.

நியார்கோ தொடர்ந்தான்: "எல்லோரையும்விட லூஸிதான் அதிகமாகப் பே யிருக்கிறாள். பெண்டாட்டி இவனை விட்

அதிகாரி



ஓடிப் போனால்தான் சௌக்கியமாக இருப்பாள் என்றாளாம். என்ன கரிசனம் இவர்களுக்கு? 'மேற்கு ஆப்பிரிக்கர்களே இப்படித்தான். ஒழுக்கமே இல்லாதவர்கள்; நல்லது பொல்லாது என்று ஒன்றுமே கிடையாது' என்றானும் டோனி. 'சந்தியில் சிரிக்க வைக்கிறேன்' என்றாளாம் லூஸி. இதோ, இப்போதே போகிறேன் வக்கீலிடம். என் மதிப்பைக் குறைத்து என் பெயரைக் கெடுத்தார்களே இவர்கள்? மான நஷ்ட வழக்கு, கட்டாயம் இவர்கள் மேல் தொடுப்பேன்.''

அங்கு உட்கார்ந்திருந்த மற்றவர்களுக்கு அவ்வளவாக ஒன்றும் புரியவில்லை.



''இந்த மாதிரி இவர்கள் பேசினார்கள் என்று உனக்கு யார் சொன்னது? வேலைக்கு வந்த இடத்தில் வேலை பார்க்காமல் இப்படி அரட்டை அடிக்க இவர்களுக்கு நேரம் ஏது? எங்கே கூடிப் பேசினார்களாம்?'' என்று கேள்வி மேல்கேள்வி அடுக்கினார்கள்மற்றவர்கள்.

''இந்த லீலாதான் லூஸி சொன்னவற்றை யெல்லாம் சொன்னாள். அவள் மாத்திரம் பேசிக் கொண்டே இருந்திருப்பாள்; இவள் கேட்டுக் கொண்டே இருந்திருப்பாளோ! இவளும்தான் இரண்டு வார்த்தை சொல்லியிருப்பாள். என்னை வேலையை விட்டுத் துரத்த வழி செய்ய வேண்டும் என்று பேசிக் கொண்டார்களாம். இந்த சதியாலோசனைக் கூட்டம் லீலாவின் வீட்டில்! ஆனால், லைப்ரரியில் டீ ரூமில் பேசிக் கொண்டார்கள் என்று என்னிடம் சொன்னாள்'' என்று உறுமினான் நியார்கோ.

லீலா என்ன சொல்வது என்று தெரியாமல் விழித்தாள். ஒரு பக்கம் இப்படி நம்பிக்கைத் துரோகம் செய்திருக்கிறானே இவன் என்று அடித்துக் கொண்டது. மறுபக்கம் டோனியும் லூஸியும் தன்னைப் பற்றி எவ்வளவு கேவலமாக எண்ணுவார்கள், இந்த இந்தியர்களுக்கே கலக புத்தி, எத்தனைக் கீழ்த்தரமான மனம் என்றல்லவா நினைப்பார்கள். ரகசியமாக மூவர் பேசியதையும் புகார் மாதிரி, போய்ச் சொல்லிக் கொடுப்பது கேவலந்தானே?

லூஸியிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றுதான் லீலாவின் மனம் துடித்தது. நியார்கோவைப் பற்றி 'அவன் கிடக்கிறான் கழுதை' என்றுதான் நினைக்கத் தோன்றியது. லூஸியையும் டோனியையும் தனியே சந்தித்தாள் லீலா.

''லூஸி, நான் சொல்கிறேன் கேள். இவன் சொன்னதெல்லாம் வாஸ்தவம்தான். ஆனால், இந்தப் பாணியில் நான் பேசவில்லை. நான் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் வேறு மாதிரித் திருப்பி விட்டான். உன்னைப் பற்றிப் புகார் சொல்ல வேண்டுமென்ற எண்ணமே எனக்கு இல்லை. நானும் நியார்கோவும் நெருங்கிய நண்பர்கள் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். அந்த நட்பின் நெருக்கத்தை உரிமையாக எடுத்துக் கொண்டு அவனுக்கு நல்லுரை அளித்தேன்.


ஜெயாசுப்பிரமணியம்

''போயும் போயும் அந்த டைப்பிஸ்ட் ஜாலிதான் உனக்குக் கிடைத்தாளா?... அத்தனை கேவலமான ஒரு பெண்ணுக் காக உன் மனைவி மக்களை உதாசீனமாக நடத்துகிருய் என்று கேள்விப்பட்டேன். இது நியாயமா? உன் மனைவியின் அழகுக் கும், படிப்புக்கும், சாமர்த்தியத்திற்கும் இந்தப் பெண் எம்மாத்திரம்? தவிர, அவள் நடவடிக்கைகளைப் பற்றி உனக்குத் தெரியாதா? அவளிடமிருந்து என் னென்ன வியாதிகள் உன்னைத் தொத்திக் கொள்ளும்? அது உன்னுடன் நிற்குமா? இனிமேல் உனக்குப் பிறக்கப் போகும் குழந்தைகளையும் பாதிக்குமே? ஏன் உனக்கு அறிவு மங்கியது? தவிர, கூடவே வேலை பார்க்கும் பெண்களிடம் ஒரு விவகாரமும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று உனக்குத் தெரியாமலா இத்தனை பெரிய பதவிக்கு வந்தாய்? எழுபத்தைந்து சிப்பந்திகளுக்கு எஜமான ராக இருக்கும் நீ, இப்படிப் பெயரைக் கெடுத்துக் கொள்ளலாமா? உன்னைப் பற்றி, பலர் பல மாதிரிப் பேசுகிருர்கள். 'ஜாலியை விட்டுத் தொலை' என்று சொன்னேன்.

''உன் பெயரை நான் பிரஸ்தா பிக்கவே இல்லை. இப்போது சொல்வதில் எனக்குப் பயமே இல்லை. கேளுங்கள்... சொல்லுகிறேன், நடந்ததை'' என்று லீலா கோபத்துடன் தொடர்ந்தாள்:

''லூஸி, உன் பேரில் ஏற்கெனவே நியார்கோவுக்கு வன்மம் இருந்ததாக எனக்குத் தோன்றுகிறது. உன்னைக் கவிழ்க்க வேண்டும் என்ற எண்ணம் இவனுக்குத்தான் இருந்தது, எனக்கு இப்போதுதான் புரிகிறது.''

''யார் சொன்னது? எங்கே கேள்விப் பட்டாய்?'' என்று நச்சரித்தான்.



''இந்த வருஷம் ஒரு சௌகரியம்... பொங்கல் இனும்கேட்டுகார்ப்பரேஷன் லேருந்து யாரும் வர மாட்டாங்க!''

நீ என்னைப் பற்றிக் கேவலமாகப் பே தாகப் பல கட்டுக் கதைகளை என்ன சொல்லி, ''சொல்லு லீலா, யார் சொ னது? நான் நிச்சயமாக உன்னைக் காட கொடுக்க மாட்டேன். என்னைப் ட வம்பளப்பவர்கள் யார் என்று இ தால் அவர்களுடன் அதிகம் பழகா இருப்பேன். சொல்லு, லூஸிதா பேசினுள்? ஆமாம்தானே?'' எ தொண தொணத்தான்.

''ஒரு விநாடி ஏமாற்றத்தில் தலை 'ஆமாம்' என்று ஆட்டினேன். இ மாதிரி கூட்டம் கூட்டி நம் அவமானப்படுத்துவான் எ நினைக்கவேயில்லை. நம்பிக்கைத் துரே அவன்! என்னை மன்னித்து விடு லூ டோனி, நீயும் என்னை மன்னித்து இந்தச் சம்பவத்தை அப்படியே மற விடு!'' என்று சொல்லிப் புட தலைப்பில் முகத்தைப் புதைத் கொண்டாள் லீலா.

டோனி, பாவம்! இயற்கையா நல்ல மனிதன். ''அழாதே லீலா, ம இயல்புகளை ஓரளவு புரிந்து கொண்ட நான். யார்மேலும் தப்பில்லை'' என்று

ஒரே இடத்தில் வேலை பார்க்கும் கூடினல், மற்றவர்களைப் பற்றி எஜமானரைப் பற்றியும் ஓரளவு பேசு சகஜம்தானே? அப்படித்தான் அன்றை நியார்கோவைப் பற்றிப் பேசி களே ஒழிய, எங்களுக்கு வேறெ எண்ணமும் இருக்கவில்லை. புது அ தத்தை நியார்கோ கற்பித்துக் கொள மான நஷ்ட வழக்கு தொடரப் பே தாகக் குமுறுகிருன்.

லீலாவுக்கு உள்ளூர உதைப்புத்தா வக்கீல் நோட்டீஸ், கோர்ட்டு, வழ 'இன்று ஹைகோர்ட்டில்' எ பக்கத்தில் பிரசுரமாகும் விஷயங் எல்லாவற்றையும் நினைத்து நினை மிகவும் மனம் நொந்திருந்தாள்.

லீலா, லூஸி, டோனி யாரும் ஒ ருக்கொருவர் பேசிக் கொள்ளவில் வெறுப்பினலோ, விரோதத்தின அல்ல—அதிர்ச்சியுற்றிருந்தனர்.

இரண்டு மூன்று வாரங்கள் ஆயி ஒரே கப் சிப். எந்த லெட்டர் வந்தா எப்போது டெலிபோன் மணி அடித் லும் லீலா, வக்கீல் நோட்டீஸ் வ விட்டதோ என்று பயந்தாள். நியார் வுடன் ஒரு வார்த்தை கூடப் பேச

இல்லை. கூடிய மட்டும் நேருக்கு நேர் அவனைச் சந்திப்பதைத் தவிர்த்தாள்.

டோனியையும், ஜூலியையும் தற்செயலாக டீ ரூமில் சந்தித்தாள். ஒருவரும் ஒன்றும் சொல்லவில்லை. லீலாதான் ஆரம்பித்தாள்: "பயமுறுத்தல் புஸ்வாணமாகி விட்டதே! ஜூலி, எனக்குத் தெரிந்த வக்கீலிடம் நான் கேட்டேன். இதில் ருசுப்படுத்த விஷயமே இல்லை, பயப்படாதே! என்றார்" என்று சொன்னாள். அதிக நேரம் பேச மூவருக்குமே பயம்.

மாடிப்படி ஏறும் போது "லீலா" என்ற குரல் கேட்டுத் திரும்பினாள். நியார்கோதான் கூப்பிட்டான்.

'என்ன?' என்று கேட்கும் பாவனையில் புருவத்தை உயர்த்தினாள்.

"என் அறைக்கு வருகிறாயா?"

லீலா ஒருகணம் திகைத்தாள். சண்டை கோபதாபங்கள் இருந்தாலும், வேலை நேரத்தில் அவன்தானே பாஸ்? 'ஆக்டிங் பாஸ்'தான். இருந்தாலும் அவமதித்ததாகக் காட்டிக் கொள்ளலாமா?

அவனைத் தொடர்ந்து அவள், அறைக்குப் போனாள்.


"உட்கார் லீலா" என்று பெரிய சோபாவைக் காட்டினான்.

"இருக்கட்டும்; எனக்கு நிறைய வேலை இருக்கிறது. எதற்காகக் கூப்பிட்டாய்?" என்றாள் நின்று கொண்டே.

அவனும் உட்காரவில்லை. 'இந்தச் சில்லறை மரியாதை கொடுக்க உனக்கு தெரியும் என்பது எனக்குத் தெரியாதா?' என்று நினைத்துக் கொண்டாள்.

"ஏன் லீலா, என்னிடம் முகம் கொடுத்து பேசுவதேயில்லை நீ? மனத்தில் தோன்றுவதைப் 'பட பட'வென்று பேசி விடுவேன் நான். மனத்தில் வைத்துக் கொண்டு குமுறுவது மோசம் அல்லவா?" என்று ஆரம்பித்தவனை மடக்கி, 'ஆமாம், மான நஷ்ட வழக்கு எத்தனை தூரத்தில் இருக்கிறது? ஒன்றையும் காணோமே?... வக்கீல், ஃபீஸ் அதிகமாகக் கேட்டாரா?" —கிண்டலாகக் கேட்டாள் லீலா.

"லீலா, அந்த விஷயத்தை நான் அன்றே மறந்து விட்டேன். என்னுடன் இவ்வளவு நெருங்கிப் பழகியும் இம்மி அளவு கூட என்னைப் பற்றித் தெரிந்து கொள்ளவில்லையே நீ? முதன் முதலாக



கணவன்: உங்க அம்மா கூட புதுசா ஏதோ சினிமாவுக்குப் போயிட்டு வந்தியே? கதை என்ன?

மனைவி: ஒரு மாசம் ஆபீசுக்கு லீவு போட்டுட்டு வாங்க. கதையை ஆரம்பத்திலேருந்து சொல்றேன்.

உன்னைப் பார்த்தவுடன் எனக்கு உன்னிடம் அளவுகடந்த மதிப்பு உண்டாயிற்று. உன்னிடம் சிறிது காலம் பழகியதில் அம் மதிப்பு, காதலாகப் பரிணமித்தது. என் பரிபூரணக் காதலை நீ புரிந்து கொள்ளக்கூட முயலவில்லை. நீ கல்யாணமானவள். இந்து கலாசாரம் வேறு, ஆப்பிரிக்க நடவடிக்கைகள் வேறு என்று உணர்ந்த நான், உன்னை வற்புறுத்தவில்லை. நீ என்னை அசட்டை செய்தாலும் நான் காதலைத் தெரிவித்தது உன் மனத்திற்கு சந்தோஷத்தை அளித்திருக்கும். நான் ஜாலியைக் காதலிக்கிறேன் என்று கேள்விப்பட்டதும் உன் மிருதுவான இதயத்தில் சிறிதளவு பொறாமை புகைந்திருக்கிறது. என்னைப் பற்றிய அக்கப்போரில் ஈடுபட்டிருக்கிறாய். உன் மனத்தை நோக அடித்ததற்கு மிகவும் வருந்துகிறேன் லீலா. என்னை மன்னிக்க மாட்டாயா?" என்றான்.

திகைத்துப் போய்விட்டாள் லீலா. எவ்வளவு நுட்பமாகச் சிந்தித்திருக்கிறான்! வாஸ்தவமாக அவள் மனத்தில் பொறாமை உணர்ச்சி தோன்றவேயில்லை. அவனிடம் சென்று, முதன் முறையாக இதைப் பற்றிப் பேசிய போதுகூட நட்பு உணர்ச்சி தான் தலைதூக்கி நின்றது. இப்போது தான் அவளுக்குப் பொறாமை. சட்டென்று பொறாமை பொத்துக் கொண்டு வந்தது. பொறாமை மட்டும் அல்ல; நியார்கோ தன்னை அவமதித்ததாகவே நினைத்தாள்: 'தான் எங்கே, விலைமாது ஜாலி எங்கே?'

இந்த அழகிய லெமன் ஸெட் பார்வையில் விலையுயர்ந்தது ஆனால் உண்மையில் விலை மலிவானது!

எழில்மிகு டம்ளர்கள் 6—கண்கவர் ஜாடி ஒன்று. இவையே யோரா லெமன் ஸெட்— பார்த்தால் வாங்கியே தீருவீர்கள். பரிபூரண சுகாதாரமானது (ஜாடியில் உள்ள பிளாஸ்டிக் அடை கதவு ஒன்று இதற்கு உத்தரவாதமளிக்கிறது). பார்க்க அழகானது, விலையோ நயமானது. உங்கள் இல்லத்திலும் ஒரு யோரா லெமன் ஸெட் வேண்டாமா!

Yera
LEMON SET

யோரா லெமன் ஸெட்-
உங்கள் இல்லத்திற்கென உருவானது



JAISONS-3189 Tam.

தயாரிப்போர்:
அலெம்பிக் கிளாஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், பரோடா.